NAVA LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate · Commercial · Business · Will & Estates
10 Milner Business Court, Unit 210
Scarborough, ON, M1B 3C6
416.321.1100 www.nava.law

தாய்வீடு

THAIVEEDU NOVEMBER 2016 நவம்பர் HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
INCOME TAX
- Personal
- Small Business
- Corporate Returns
- Business Registration
- Corporation Registrations
- New house HST Rebate
- GST/HST Filling

Successful Real Estate Office With Over 300 Salespeople
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301 Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently Owned and Operated, REALTOR®

ISSN 2369-3657

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
BonaFide Mortgage Solutions Inc.
Brokerage Lic# 10216

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

Bala Murari CPA, CMA
Mortgage Agent
Direct: 416 317 4774
Toll free: 1 877 562 0158
Bala.murali@pegasusmortgages.com
PEGASUS
Pegasus Mortgage & Financial Solutions
1457 McCowan Rd, Suite: 202, Scarborough, ON M1S 5K7
Office: 416 281-9628
Fax: 416 644 0663

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
Uthayan Sivarajah
Broker
Dir: 416-301-5555
Sugan Sivarajah
Sales Representative
Dir: 416-890-9999
Raj Sivarajah
Sales Representative
Dir: 416-843-3333
Sivakumar Sivarajah
Sales Representative
Dir: 416-453-7777
HomeLife/ Future Realty Inc., Brokerage
#205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

Raj Ariyanayagam

Real Estate Broker

416.930.4663

rajhomes@hotmail.com

www.rajhomes.ca

PLATINIUM AWARD WINNER 2012
GOLD AWARD WINNER 2009 TO 2014

Homelife Today Realty Ltd.
Brokerage*

31 Progress Ave, Unit 210
Toronto, ON. M1P 4S6

416.298.3200

SERVING YOU IS MY PRIORITY, BECAUSE I CARE

MARKHAM — **$799,900**

Markham / Steeles, Well maintained 3+1 bedrooms & 4 baths house in prime location. Lot of upgrades with fin bsmt.

TORONTO

$425,000
Bathurst / Lakrshore
1+1 bdrms, 2 wshrm.

TORONTO

$339,900
Mccowan / Hwy 401
1 bdrms, 1 wshrms.

TORONTO

$749,900
Lawrence Ave E/ Morning Dew
4+2 bdrms, 4 wshrms, bsmt apt.

TORONTO

$899,000
Sheppard/Rouge River
4 bdrms, 3 wshrms.

TORONTO

$900,000
Morningside / Morningview Tr
4 bdrms, 3 wshrms.

TORONTO

$1,029,000
Stains / Morningside
5+2 bdrms, 4 wshrms, bsmt apt.

TORONTO

$1,450/Mth
Kennedy / 401
1 bdrms, 1 wshrms.

MISSISSAUGA

$3,200/Mth
Winston Churchill / Tacc Dr
5 bdrms, 4 wshrms.

TORONTO

$1,750/Mth
Kennedy / Sheppard
2 +1 bdrms, 2 wshrms.

VAUGHAN

$1,300/Mth
Dufferin / Major Mackenzie
2 bdrms, 1 wshrms.

*INDEPENDENTLY OWNED & OPERATED. NOT INTENDED TO SOLICIT PROPERTIES CURRENTLY LISTED FOR SALE OR INDIVIDUALS CURRENTLY UNDER CONTRACT WITH BROKERAGE

இரட்டை நகர உடன்படிக்கை:

கடந்த ஒக்ரோபர் 18ம் நாள் இங்கிலாந்தில் உள்ள Kingston upon Thames என்ற நகரத்துடன் யாழ்ப்பாண நகர் சார்பில் வட மாகாண முதலமைச்சர் திரு. சி. விக்னேஸ்வரன் கைச்சாத்திட்ட இரட்டை நகர உடன்படிக்கை, இன்றைய காலகட்டத்தில் வரலாற்று முக்கியம் பெற்ற நிகழ்வாகக் கருதப்படுகின்றது.

இந்த உடன்படிக்கையின் நோக்கமானது, இரண்டு நகரங்களுக்குமிடையிலான அனுபவங்கள், வளங்கள், அறிவுத்திறன்கள் போன்றவற்றை நகர வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவதாகும்.

பெருவளர்ச்சியுற்ற நகரத்தின் பல்வேறு வளங்களைச் சட்டவாயிலாகப் பயன்படுத்தக் கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பு இதுவாகும். இங்கிலாந்து வாழ் தமிழர்களுடைய பல்வேறு வளங்களும் கணிசமானவளவு இந்த உடன்படிக்கை வாயிலாகத் தங்குதடையின்றித் தாயக மக்களின் மேம்பாட்டுக்குப் பயன்படும் என்பதும் உண்மையே.

'தற்போது நிலவிவருகின்ற நல்லிணக்க ஆட்சியில் ஜனநாயக முறையில் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும்' எனச் சிலர் பேசி வருகின்ற நிலையில், அங்கு வன்முறைகளும் அதிகார அடக்குமுறைகளும் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. அவற்றை மூடிமறைத்து 'பயங்கரவாத மீளெழுச்சி' என அரசு முத்திரையிட முயல்வதை யாரும் மறுக்கமுடியாது.

இந்நிலையில் இவ்வாறான உடன்படிக்கையானது, தாயகத்தில் நடைபெறுகின்ற அடக்குமுறைகளையும் இனவழிப்பு முயற்சிகளையும் வலுவான நிலையில் வெளிக்கொண்டுவர உதவும். தாயகத் தமிழரின் உண்மை நிலையை வலிமையான நிர்வாக அலகு வாயிலாக உலகநாடுகளுக்கு எடுத்துரைக்க முடியும்.

இங்கிலாந்தில் மாநகர, நகரசபை உறுப்பினர்களாக தமிழ் உறுப்பினர்கள் உள்ளனர். இந்த உடன்படிக்கையைத் தொடர்ந்து இந்த உறுப்பினர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை நகரங்களை மையப்படுத்தி மேலும் இரட்டை நகர உடன்படிக்கைகளை எதிர்காலத்தில் உருவாக்க முயற்சி எடுத்துள்ளனர்.

முதன்முதலாகவும் முன்மாதிரியாகவும் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த உடன்படிக்கை அரசியல் தலையீடுகள் இல்லாவிடில் தாயக மேம்பாட்டுக்குத் தொடர்ச்சியாகப் பெரும்பயன் தரவல்லதாக அமையும். இவ்வகையில் வடக்கு, கிழக்கில் வேறு நகரங்களும் மலையகத்தின் தமிழர் வாழும் நகரங்களும் உள்ளடக்கப்படவேண்டும் என்பதும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவே இருக்கும்.

மார்க்கம் மாநகரசபை சீனாவின் ஒரு நகரத்தோடு இதுபோன்ற உடன்படிக்கை வாயிலாக வளங்களைப் பரிமாறி வருகின்றது. அதே போன்று தாயகத்தில் மற்றுமொரு நகர மேம்பாட்டுக்கான உடன்படிக்கையை எதிர்வரும் ஜனவரியில் மார்க்கம் மாநகர சபை மேற்கொள்ளக்கூடும் எனத் தெரியவருகின்றது.

இந்த உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகள் நிறைவுறும் நிலையில், வடமாகாண முதலமைச்சர் சி. விக்னேஸ்வரன் அவர்கள் ஜனவரியில் கனடா வரக்கூடும். இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் கனடாத் தமிழர் தமது வளங்களைத் தாயகத்துடன் பகிர்ந்து கொள்வதற்கான சட்டப்படியான வாசல்கள் திறக்கப்படலாம்.

இதுவும் அடக்குமுறைகளை மீறி எழுகின்ற துணிச்சலான முயற்சியே.

பாராட்டுவது மட்டுமின்றி பங்காளிகளாவும் இருப்போம்.

III

முகப்பில்: பாவனி சிவகுமரன், ரெஜி மனுவேல்பிள்ளை - அரங்கியல் விழா 2016
படம்: **சர்வேசன்**

Publisher & Editor : **P.J. Dilipkumar**
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரவிச்சந்திரிகா

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை) ட்ராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா) கருணா (கனடா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து) ரமணி (இலங்கை), செந்தில் (இந்தியா).

புகைப்படங்கள் : கருணா, K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : கௌரி, ஜீவா, சாம் டானியல்

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்).

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி.

மொன்றியால் தொடர்புகள் : சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்புகள் : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : **Editor**
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel : **416-646-3422, 416-857-6406**
Fax : **416-849-0594**
Web : **www.thaiveedu.com**
E-mail : **info@thaiveedu.com**

Printed on recycled paper

அரங்கியல் சிறப்பிதழ் 80-93

82

நாடகங்களுக்கு வருகின்ற பார்வையாளர்களின் தொகை வீழ்ச்சியைக் கண்டிருந்தது. ஆனால் அந்த நிலைமை மாறிக்கொண்டு வருகிறது. அண்மைக்காலத்திலே நம்பிக்கைக்குரியதொரு எழுச்சி யாழ்ப்பாணத்திலே தோன்றியிருக்கிறது.

- யோண்சன் ராஜ்குமார்

நேர்காணல்: சேகர் தம்பிராஜாவுடன் துஷி ஞானப்பிரகாசம்

80 தாய்வீடு பத்திரிகையின் அரங்கியல் விழா ஒளியின் பதிவுகள்

கனடா திருமறைக் கலாமன்றம் இந்த சர்வதேச விழாவை மேடையேற்றி சாதனை படைத்துள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் சர்வதேசக் கலைப்பாலம் 2016 — 86

87 அரங்கியல் விழா - 2016
- ப. ஸ்ரீஸ்கந்தன்

மண்டபத்தைவிட்டு வெளியேறிய போது ஊரில் மண்ணில் குந்தியிருந்து கூத்துப் பார்த்த பேரானந்தம்

நம்பிக்கை வீண்போகவில்லை. இன்னும் சொல்லப்போனால் பன்மடங்கு மகிழ்ச்சி.

போதும் மன்னா போதுமே மன்னா...! — 88
- தமயந்தி

90 அரங்கியல் விழா: சில பார்வைகள்

'அகவெளிப் பொய்கள்' சிந்திக்கவைக்கும் சம்பாசனை, யதார்த்தத்தின் வெளிப்பாடு.

அண்ணாவியார் மதிபாஸ்கரன் இளையோரைப் பயிற்றுவித்து, மேடையேற்றிய வடமோடிக் கூத்து

எழுத்தாளர் இணையம் நடத்திய நாடக விழா — 92

93 தலையங்கத்தில் இருந்து வெகுவாக விலகியிருந்தது மிகுந்த மனவேதனையையும், ஏமாற்றத்தையுமே அளித்தது

உலகத்தமிழ் நாடகவிழா
- க. வாசுதேவன்

தமிழ் மரபுத் திங்கள் - கனடிய நாடாளுமன்ற அங்கீகாரம் 7
கந்தசாமி கங்காதரன்

ஓடி விளையாடும் அமெரிக்கத் தேர்தல் 8
ரதன்

மாதாந்த மின்சாரக் கட்டணத்தில் கழிவு 43
வேலா சுப்ரமணியம்

அடைமானக் கடன்! புதிய மாற்றங்களும் விளைவுகளும் 47
மகேசன் சுப்பிரமணியம்

விஞ்ஞானம் காட்டும் உலகம் உண்மையா கற்பனையா? 54
ப. தயாநிதி

மாயத் தரைவண்மை 108
கருணா

மேலும் ஆக்க விபரங்கள் 4ம் பக்கம்

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

எழுக தமிழ்!

- அ. கணபதிப்பிள்ளை

எழுக தமிழ் என்பது ஒரு விளிப்புணர்வுப் போராட்டம். இதில் போடப்பட்ட விதைகள் முளைத்து விருட்சமாகி எவ்வாறு பலன் தரப்போகின்றனவென்பது பலரதும் கேள்வியாக இருக்கும்பொழுதில் சமகால நிகழ்வுகள் பல இதனை இதன் நோக்கத்திலிருந்து வழுவிச்செல்ல வைத்திடுமா என்ற ஆதங்கம் எல்லோரையும் ஆட்கொண்டிருக்கிறது.

எழுகதமிழின் ஊற்றுக்கண் அடைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இது இப்பொழுது தேவைதானா என்று கேட்பவர்கள் மத்தியில் இப்பொழுது தேவையென்று எழுந்த கூட்டம் பல்கலைக்கழகத்தையே ஊன்றுகோலாகக் கொண்டெழுந்தது.

பல்கலைக்கழக மாணவர்களும் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் ஏனைய புத்திஜீவிகளுக்குக் கொடுத்த பேராதரவு தான் இத்தகையதொரு மக்களெழுச்சிக்கு அத்திவாரம் போல் அமைந்தது. உலகில் எந்தவொரு மாற்றத்துடனும் பல்கலைக்கழக சமூகம் பின்னணியிலிருந்திருக்கிறது என்பது மறக்கமுடியாத உண்மையாகும். அங்குதான் பாதுகாப்பிருந்தது. முன்னாள் பல்கலைக்கழக மாணவர்கள்தான் சம கால அரச யந்திரத்தின் இயக்குனர்களாகவிருந்தனர். கல்விக்கூடத்துடன் அவர்களுக்கிருந்த உறவு அத்தகைய பாதுகாப்பினை அளித்திருந்தது.

இலங்கையில் 1971க்குப் பினனர் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டது. அரச அதிகாரம் தனிநபரிடம் செல்லுமளவுக்கு அரசியற் திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. சட்டங்களாக்கப்படும் பொழுது மேலவை இருக்கவில்லை. பயங்கரவாத தடுப்புச் சட்டங்கள் போன்ற சமூகநலநோக்குடன் பார்க்கப்படாத காட்டு இராஜாச் சட்டங்கள் இலகுவிற் சட்டமாக்கப்பட்டன. இனஞ் சார்பான நியமனங்களுக்கு முன்னரிமை அளிக்கப்பட்டதுடன் பல்கலைக்கழகத்தினுள்ளே இனஜக்கியம் மரணத்தைத் தழுவிக்கொண்டிருந்தது. அதனை உயிர்ப்பிக்க மார்க்கம் காணாது மனிதநேயம் படைத்த புத்திஜீவிகள் மனக்கிலேசம் அடையத் தொடங்கினர். பலரோ சந்தர்ப்பவாத அரசியல் சூழ்ச்சிக்குப் பலியாகிப்போயினர்.

மாணவர் சமூகமும் அரசியற் சுழியுட் சிக்கிக்கொண்டது. இனத்தலைவர்களின் பகடைக்காய்களாக மாணவர்கள் உருட்டி விளையாடப்பட்டனர். மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கெதிரான தரப்படுததற் சட்டம் போன்ற சட்டங்கள் நடைமுறைக்குவந்தன.

கிராமிய மட்டத்திலான அரசஊழியர்களை நியமிக்கும் கல்விமுறையும் அரசியல்வாதிகளே நியமனங்களைக் கையிலெடுக்கும் கையூட்டு முறையும் நடைமுறைக்கு வந்தது.

வேலைகளுக்காக பல்கலைக்கழகப் பட்ட தாரிகள் அரசியல்வாதிகளுடன் போட்டியிட வேண்டியநிலையும் மறுபுறம் அரசியல்வாதிகளிடம் சரணாகதியடைய வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இவ்வித இழுபறியில் பல்கலைக்கழகங்களின் தனித்துவம் மாணவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து செயற்படுந்திறன் மாணவரிடையே இனஞ் சாரா ஐக்கியம் என்பன குறைவடைந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழர் பாரம்பரியத்தினைக் கட்டிக்காக்கத்தக்க உணர்வினை இயல்பாகவே பெற்றிருக்கிறது. பிரதேசத்துக்குரிய பண்பாட்டைப் பேணுமளவுக்கு நவீனநாகரிக நகரமயப்படுத்தப்படாத மாணவர்களையும் மக்களையும் கொண்ட பகுதியிலமைந்திருக்கிறது. அதற்கு இனமில்லாத பழக்கவழக்கங்களை உமிழ்ந்து விடுமளவு உறுதித்தன்மையுடன் திகழ்ந்து வருகிறது.

யாழ்பாணப் பாரம்பரியத்தில் இனங்களுக்கிடையிலான உறவானது நன்கு பேணப்பட்டதாயினும் இனமத வேறுபாடின்றிக் கல்விக்கும் சமூகநீதிக்குமே முன்னுரிமை வழங்கப்பட்டு வந்துள்ளமையினைக் காணலாம். அதேவேளை புதிய தலைமைத்துவப் போட்டியானது உருவாக்கம் பெறத் தொடங்கியது முதல் அரசியலில் பலசித் தாந்தங்களும் பலகட்சிகளும் தோற்றுவிக்கப்பட்டு ஏட்டிக்குப் போட்டியான செயற் பாடு உருவாக்கம் பெற்றிருக்கிறது.

ஒக்ரோபர் 20ம் திகதி இரவு மோட்டார் சைக்கிலில் வந்துகொண்டிருந்த யாழ்ப்-பாணப் பல்கலைக்கழக மாணவர்களிருவர் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்த பொலிசாரினால் குளப்பிட்டிச் சந்தியருகில் வைத்துத் துப்பாக்கியாற் சுடப்பட்டுக் கொலைசெய்யப்பட்டிருக்கி

> **“ எழுக தமிழ் நடக்குமா என்பதை நிஜமாக்கிக்காட்டியவர்கள் மக்களே. தமிழர்கள் கட்சிபேதமின்றி ஒன்றிணைந்து இவ்வளவு மாபெரும் சக்தியாக மாறுவதற்கு அவர்கள் சுமந்த வலியே காரணமாகிவிட்டது. ”**

றார்கள்.

இது உண்மையிலே பல்கலைக்கழக மட்டத்தில் அச்சமூட்டத்தக்க நிகழ்வுதான் சமாதான நல்லாட்சிக்காலங்களில் ஆயுதம் எடுக்க கட்டளையிடுபவர்கள் யார். அரச பயங்கரவாதம் தலைதூக்கிவிட்டதாகக் கண்டனங்களும் கர்த்தால்களும் கடையடைப்புக்களும் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர்கள் எழுந்தமானமாகச் சுடப்பட்டார்களா அல்லது தெரிந்து சுடப்பட்டார்களா என்பவை மறைபொருளாக இருக்கும்நிலையில் அசிங்க அரசியலற் சாயம் பூச நினைப்பது விவேகமான செயலாகிவிடமுடியாது. நீதியைக் குளப்பும் பிரசுர ஏற்பாடுகளுக்கும் பஞ்ச மேற்படாத நிலையும் தோன்றிவிட்டது. நீதி கோரும் மாணவர் போராட்டம் பல்கலைக் கழக மட்டம் பிரதேச மட்டம் என்பதனையும் தாண்டி முதற்தடவையாக சிங்கள தமிழ் மாணவர்களது ஒன்றுபட்ட அரச எதிர்ப்புப் போராட்டத்துக்கு வழியேற்படுத்தியிருக்கிறது.

இந்தப் போராட்டம் தவறானவர்களின் கையிலகப்பட்டுவிடுமாயின் நல்லாட்சிச் சிந்தனைகள் புறக்கணிக்கப்பட்டு கடந்தகாலங்களிலிருந்தது போல் தனிச்சர்வாதிகாரப் போக்குக்கு உயிர்கொடுக்கப்படுமா என்ற சந்தேகம் எழத்தொடங்கியிருக்கிறது. இந்நிலையில்தான் தமிழர் பேரவையால் முன்னெடுக்கப்பட்ட எழுகதமிழ் கண்டனப் பேரணியின் நோக்கமானது சிதறடிக்கப் பட்டுவிடுமா என்ற சந்தேகம் வலுப்பெறத் தொடங்கியிருக்கிறது.

எழுகதமிழ் அரசியற்சாயம் பூசப்படாத விழிப்புப் போராட்டமாக இருந்தது. அதிற் பங்கு கொண்டவர்கள் நல்லாட்சியரசிடம் முக்கியமான கோரிக்கைகளை முன்வைக்கும் நிகழ்வாகவே அதனைப் பார்த்தனர். முதலமைச்சர் சீ.விக்னேஸ்வரன் தமிழர் பேரவையின் உபதலைவராகத் தனது கோரிக்கையினை முன்வைத்திருந்தார். இங்கு சேர்ந்த கூட்டமும் அங்குள்ளோர் ஆற்றிய உரைகளும் இப்பேரணியானது யாருக்கும் எதிரானதல்ல என்பது முதலில் உறுதியாகச் சொல்லப்பட்டது.

சமகால அரசயந்திரத்தின் செயற்பாடுகள் போர்க்காலச் செயற்பாடுகளிலிருந்து சற்றும் வேறுபடாதவகையில் அமைந்திருப்பது நல்லாட்சிமீது சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதனை எல்லோரும் நன்கு அறிய முடிகிறது. இருபத்தைந்து வருடகாலம் அடக்கிவைத்த அரசியல்வாதிகளின் அதிகார உணர்வுகள் வடக்கில் தமது ஆட்சி வேண்டும் வடக்கில் பொருளாதார வாயப்புகள் அதிகமுள்ளன அவற்றைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும் போன்ற அபிலாசைகளை உடனே தூக்கியெறிவது அரசாங்கங்களுக்குக் கடினமாகவிருப்பினும் அவை செய்திருக்கமுடியாதனவாக இருக்கமுடியாது.

இலங்கையில் இராணுவத்தின் உதவியுடன் தான் ஆட்சி நடத்தவேண்டும் என்ற நிலையினைக் கடந்த அரசாங்கங்கள் உருவாக்கிவிட்டிருந்தன. அடுத்த தேர்தலை எதிர்பாக்கக் காத்திருக்கும் எந்த அரசுக்கும் இராணுவத்தின் மீது கைவைக்கும் எண்ணம் இருக்க முடியாத நிலை ஒன்று தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. வடக்கில்

தொடர்தல் 9ம் பக்கம்

வீட்டினுள்ளே இன்னும் வருபவை...

எழுக தமிழ்! 4
அ. கணபதிப்பிள்ளை

கபவாதம் 11
ரவிச்சந்திரிகா

ஆயுள்வேத மருத்துவத்தின் வளர்ச்சியில் பௌத்தர்களின் பங்கு 13
பால. சிவகடாட்சம்

போதை மருந்து - ஃபென்ரனில் 14
கந்தையா செந்தில்நாதன்

வளர்ப்புப் பிராணிகளும் நோய்களும் 17
அ. ராஜ்குமார்

உடல் நீருக்கு அழுகின்றது 18
சிவாஜினி பாலராஜன்

நீர் சூடேற்றிகள் பற்றி... 23
செல்வி அதினி

பிள்ளைகளின் கேள்விகளைக் கையாளும் முறை 24
றாஜினி தார்சீசியெஸ்

அறிவியலும் ஆழ்மனமும் 28
எஸ். பத்மநாதன்

நூல் நாடி நூலகம் நாடி 32
ஸ்ரீராகவன்

குழந்தைகளின் பாசப்பிணைப்பு தடைப்படும்போது...? 34
த. சிவபாலு

வீட்டுக் காப்புறுதிக் கட்டணம் நிர்ணயித்தல் 38
செந்தூரன் புனிதவேல்

பெர்முடா முக்கோண மர்மம் 44
குரு அரவிந்தன்

வணிக ஆதனத்தில் முதலீடு செய்வதற்கான ஆலோசனைகள் 48
பாஸ்கரன் சின்னத்துரை

பிறந்த குழந்தை உள்வாங்கும் முதல் இலக்கியம் 52
சாரதா குமாரசாமி

ஃபிளான்டர்ஸ் களம் 57
குமார் புனிதவேல்

புலம்பெயர் மொன்றியால் தமிழர்களின் ஆரம்பகாலக் கலை, இலக்கிய முயற்சி! 58
லீலா சிவானந்தன்

மனிதருள் தெய்வம் - குருகுலம் திரு.வே. கதிரவேலு 63
பி. பற்குணரஞ்சன்

அப்போதே மனிதா நீ ஜெயித்தாயே! 64
பொன்னையா விவேகானந்தன்.

தேவரையாளி இந்துக் கல்லூரி 67
முருகேசு பாக்கியநாதன்

வாழ்வையும் வாழ்வியலையும் பேசும் பிரதி 73
அருண்மொழிவர்மன்

மறைந்தும் மறையாத மாமகள்-குறமகள் 77
உமை பற்குணரஞ்சன்

தாமரைத் தடாகத்துத் தேனீ திரு. தங்கராசா சிவபாலு 95
வி. கந்தவனம்

ஒரு கோழி முட்டை அளவுள்ளதொரு தானியம் 96
லியோ ரோல்ஸ்ரோய்
மொழியாக்கம்: என்.கே.மகாலிங்கம்

தமிழும் தமிழரும் 98
பொன்னையா விவேகானந்தன்

இலக்கியத் திறனாய்வியலின் இயங்குநிலை 103
நா. சுப்பிரமணியன்

கறுப்பு உயிர்களும் உயிர்களே! 107
க. நவம்

கப்பலில் ஏறிய கதை 109
ஆனந்தப்ரசாத்

தமிழ்வலை 13 111

தமிழ் இதழ்களில் நகைச்சுவை 113
உதயணன்

அந்தகாரம் பரவிய ஆழ்கடல் 118
நிமால் நாகராஜா

Lower rates.
Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

Senthooran Punithavel

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address
797 Milner Avenue, Unit 200
Scarborough, ON M1B 3C3

குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

Toronto District School Board
ரொரான்ரோ மாவட்ட கல்விச்சபையின் உயர்தரப் பாடசாலைகள் வழங்கும் சிறந்த வாய்ப்புகளை அறிந்து கொள்ளுங்கள் - ரொரான்ரோ மாவட்ட கல்விச்சபையின் உயர்தரப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து, அலுலர்களைச் சந்தித்து, பாடசாலைகள் வழங்கும் பல்வேறுபட்ட கற்கைநெறிகளையும் செயற்திட்டங்களையும் அறிந்து கொள்ளுங்கள்.
உயர்தரப் பாடசாலைகள் பற்றிய பட்டியலையும் கற்பித்தல் காலங்களையும் அறிந்து கொள்ள
www.tdsb.on.ca/inspires

The Scarborough Hospital FOUNDATION
ஸ்காபுறோ வைத்தியசாலைக்கான
நிதி சேகரிப்பு
YOGI & PARTNERS PRODUCTION
IDEAL DEVELOPMENTS
ஆதரவில்
பிரணவன், பிரம்யா வழங்கும்
கலை மாலை
Saturday
Dec 3rd
5:00 p.m
கனடா கந்தசாமி கோவில் மண்டபம்
1380 Birchmount Rd, Scarborough, M1P 2E3
ஸ்காபுறோ வைத்தியசாலைக்கான நிதிசேகரிப்பு கலை மாலையில்
கலந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.
தொடர்புகளுக்கு: 416-267-6741

தமிழ் மரபுத் திங்கள்

கனடிய நாடாளுமன்ற அங்கீகாரம்

- கந்தசாமி கங்காதரன் -

‘90களின் பிற்பகுதியில் ரொறன்ரோ மாநகரில் கனடா தமிழ்க் கலை தொழினுட்பக் கல்லூரியால் தமிழ் மொழிக் கிழமை என்றோர் நிகழ்வு நடத்தப்பட்டது.

தமிழ் மொழி, அதன் தொன்மை இலக்கியச் செழுமை போன்றவற்றையும் தமிழர் வரலாற்றையும் மாணவருக்குத் தெளிவுபடுத்தி தமிழ்ப்பண்பாடு சார் விடயங்களுக்குள் அவர்களை ஈர்ப்பதும் இதன் நோக்கமாக இருந்தது.

ஆனால் ஏனோ தமிழ்மொழிக்கிழமை சில ஆண்டுகளில் மறைந்துபோனது.

இவ்வாறான நிலையில், கனடியத் தமிழர்களுக்கான ஓர் அடையாள நிகழ்வு இருக்கவேண்டுமென நினைத்த போது தான் ‘தமிழ் மரபுத் திங்கள்’ எனும் எண்ணம் கருக்கொண்டது.

2009ன் பிற்பகுதியில் அப்போது மார்க்கத்தில் கல்விச்சபை அறங்காவலராக இருந்த நீதன் ஷாண் சில ஆர்வலர்கள், சில அமைப்புகளின் துணையோடு ‘தமிழ் மரபுத் திங்கள் குழு’வொன்றை உருவாக்கினார்.

2011ல் மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டார உறுப்பினர் திரு. லோகன் கணபதி தமிழ் மரபுத் திங்கள் தீர்மானத்தை முன்மொழிய 5ம் வட்டார உறுப்பினர் Colin Campbell வழிமொழிந்தார். யாருமே எதிர்த்து வாக்களிக்கவில்லை. வாக்களிப்பிலிருந்து விலகியிருக்கவுமில்லை. அனைவருமே ஒருமனதாக ஆதரவாகவே வாக்களித்தனர்.

தொடர்ந்து, பிக்கரிங், ஏஜக்ஸ், விற்பி, ஒஷாவா, பிறம்ரன், ரொறன்ரோ, ஒட்டாவா என்று தமிழ் மரபுத் திங்கள் பிரகடனம் செய்த உள்ளூராட்சி மன்றங்களின் பட்டியல் நீண்டு கொண்டுபோக, ஒன்ராறியோ மாகாண மட்டத்திலும் தேசிய அளவிலும் தமிழ் மரபுத் திங்கள் பிரகடனம் செய்யப்படுவதற்கான களநிலைமைகள் கைகூடி வரத் தொடங்கின. டொன் வலி - கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் Michael Coteau 2011 ஜூன் 12ம் நாள் கொண்டுவந்த தனிநபர் பிரேரணை சட்டமன்றத்தில் முதலாவது வாசிப்போடு நின்றுபோனது. அப்போதைய முதல்வர் டோல்ரன் மக்கின்ரி பதவிவிலக புதிய முதல்வராக (கத்லீன்வின் அம்மையார் பதவியேற்க) அந்தப் பிரேரணை காலாவதியானது. மீண்டும் 2014 பெப்பிரவரி 18ல் சட்டமன்ற உறுப்பினர் Todd Smith கொண்டுவந்த தனிநபர் பிரேரணை மார்ச்17 அன்று இரண்டாவது, மூன்றாவது வாசிப்புகளைத் தாண்டி எல்லாக் கட்சிகளாலும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒன்ராறியோ மாகாண ஆளுநர் டேவிட் ஒன்லி அவர்களால் வேந்திய ஒப்புதல் (Royal Assent) வழங்கப்பட்டு மார்ச் 25 அன்று சட்டமானது.

கனடிய நாடாளுமன்றத்தில் தமிழ் மரபுத் திங்கள் சட்டத்துக்கான 2013ம் ஆண்டு முயற்சி வெற்றிபெறாத சூழலில் ஆட்சிமாறியது. ஸ்காபரோ - ரூஜ் பார்க் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக கரி ஆனந்தசங்கரி வெற்றிபெற்றார். மாகாண அரசும் தமிழ் மரபுத் திங்களை ஏற்றுக் கொண்டிருந்த நிலையில் நாடாளுமன்றத்தில் தமிழ் மரபுத் திங்கள் சட்டம் நிறைவேறாமல் போனதில் விசனமுற்றிருந்த ஆர்வலர்களுக்கு நம்பிக்கை பிறந்தது.

ஜனவரியைத் தமிழ் மரபுத் திங்களாகப் பிரகடனம் செய்யக்கோரும் தனிநபர் பிரேரணை ஒன்றை நா.உ.கரி ஆனந்தசங்கரி நாடாளுமன்றில் சமர்ப்பித்தார் அப்பிரேரணை மீதான முதலாவது விவாதம் 2016 மே 20ம் நாள் நடைபெற்றது.

தமிழ்க்கனடியர்கள் கனடாவின் முன்னேற்றத்துக்கு ஆற்றிய பங்களிப்புகளையும் தமிழ் மொழி, பண்பாட்டின் செழுமைமையயும் தமிழ் மரபு பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் எதிர்காலத் தலைமுறையினருக்கு ஊட்டவேண்டியதன் முக்கியத்துவத்தையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரேரணையின் முன்மொழிவு தெரிவித்தது.

“நாடளாவிய வகையில் தமிழ்க் கனடியர்கள் எமது சமூகத்துக்கு ஆற்றியுள்ள அளப்பரிய பங்களிப்புகளையும் தமிழ் மொழியினதும் மரபினதும் பண்பாட்டினதும் செழுமையையும் அங்கீகரிக்கும் வரலாற்று

மைல்கல் இது!” என நா.உ. கரி ஆனந்த சங்கரி தனது அறிமுகவுரையில் கூறினார்.

“உலகில் இன்று பேசப்படும் மொழிகளுள் மிகத்தொன்மையான மொழியாக இருக்கின்ற தமிழ் மொழி, இந்தியாவில் செம்மொழியாகவும் சிங்கப்பூரில் அதிகாரபூர்வ அலுவல் மொழியாகவும் இலங்கையில் தேசியமொழியாகவும் தமிழ்நாட்டில் அதிகாரபூர்வ அலுவல் மொழியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. உலகின் பலநாடுகளிலும் பரந்து வாழும் தமிழர் முதலில் நல்வாய்ப்புகளைத் தேடியும் பின்னர் தொழில் நிமித்தமும் அண்மைக்காலத்தில் பாதுகாப்புத் தேடியும் புலம்பெயர்ந்தனர். 1983ல் இலங்கையில் நடைபெற்ற தமிழருக்கெதிரான வன்செயல்களால் புலம்பெயரத் தலைப்பட்ட தமிழர்களை கனடா சிறப்புச் சலுகைகள் வழங்கி இருகரம்நீட்டி வாரி அணைத்து கொண்டது. இன்று கனடாவில் பல்வேறு அமைப்புகள், சங்கங்கள் மூலமும் தமிழ்ப் பண்பாடும் மொழியும் பேணப்படுகின்ற நிலையில் அவற்றுக்குக் காரணர்களாக இருக்கும் ஆசிரியர்கள், பெற்றோர், தாத்தா, பாட்டியர், ஆர்வலர்கள் அனைவரதும் கடின உழைப்பினைப் பாராட்டுகிறேன். Goose Bay நகரத்து ஆய்வுகூடங்களில், மொன்றியல் நகரின் உணவகங்களில், ரொறன்ரோவின் நிதியியல் மையத்தின் வானுயர்ந்த அலுவலகங்களில், வோண் நகரின் தொழிலகங்களில், வோட்டலூவின் அறிவியற் கண்டுபிடிப்புக் களங்களில், அல்பேர்ட்டாவின் எண்ணெய் வயல்களில், பிரிட்டிஷ் கொலம்பியாவின் பாரஊர்த்தித் துறையில்... என்று எல்லா இடங்களிலும் தமிழ்க் கனடியர்கள் இந்நாட்டின் குடிமக்களாகப் பெருமைகொள்கிறார்கள்” என்று தனது அறிமுக உரையில் மேலும் குறிப்பிட்டார் கரி.

Scarborough - Southwest நாடாளுமன்ற உறுப்பினரும் நீதித்துறை அமைச்சரின் நாடாளுமன்றச் செயலருமான பில் பிளாயர் உரையாற்றுகையில் “இது எமது பொருளாதாரத்துக்கும் ஏனைய துறைகளுக்கும் தமிழ்ச் சமூகம் தொடர்ந்தும் ஆற்றிவருகின்ற அளப்பரிய பங்களிப்புக்களுக்குத் தெளிவான சான்று” எனக் கூறினார்.

எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் முன்மொழிவின் முக்கியத்துவத்தை ஆதரித்துச் சிலாகித்தனர். “தமிழர்களின் உயிர்ப்பான பண்பாட்டையும் மரபுகளையும், நீண்ட வரலாற்றையும் சகக்னடியர்களுக்கு வெளிக் காட்டவும் அவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும் இந்த முன்மொழிவு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும்” என மார்க்கம்-யூனியன்வில் தொகுதிக்கான கொன்சவேட்டிவ் உறுப்பினர் பொப் சொரோயா விவாதத்தின்போதான தனது உரையில் தெரிவித்தார். இந்த முன்மொழிவுக்கு ஆதரவு தெரிவிப்பது “கனடா பல்வகைமையால் பலம்பெறுகிறது” என்பதை ஏற்றுக் கொள்வதை நோக்கி முன்வைக்கப்படும் இன்னொரு அடி என வன்கூவர்-கிழக்கு தொகுதியின் என்.டி.பி.உறுப்பினர் ஜெனி குவான் முன்மொழிவை ஆதரித்து ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

கொன்சர்வேட்டிவ் உறுப்பினர் Kellie Leitch (Simcoe – Grey), NDP உறுப்பினர்களான Scott Duvall (Hamilton - Mountain), Niki Ashton (Churchill – Keewatinook Aski), லிபரல் உறுப்பினர்களான Kevin Lamoureux (Winnipeg - North), Salma Zahid (Scarborough - Centre) என்று கட்சி வேறுபாடின்றி எல்லா உறுப்பினர்களும் பிரேரணையை வரவேற்று ஆதரித்து உரையாற்றினர். பசுமைக்கட்சியும் ஆதரித்தது.

செப்ரெம்பர் 29ம் நாள் இரண்டாவது விவாதத்துக்குப் பிரேரணை வந்தபோது, Calgary - Forest Lawn கொன்சர்வேட்டில் நா.உ Deepak Obhrai, Vancovver East NDP நா.உ Jenny Kwan, Brampton East Liberal நா.உ Raj Grewal, Sherwood Park-Fort Saskatchewan கொன்சர்வேட்டிவ் நா.உ Garnett Genuis ஆகியோரும் ஆதரித்து உரையாற்றினர்.

அவையில் பெரும்பான்மையினர் வாய்மொழி ஆதரவை வழங்கினர். ஒக்ரோபர் 5ம் நாள் பிரேரணை வாக்கெடுப்புக்கு வந்தபோது லிபரல், கொன்சர்வேட்டிவ், NDP, புளொக்கியூபெக்குவா ஆகிய 4 பெரும் கட்சிகளையும் சார்ந்த 283 உறுப்பினர்கள் தமிழ் மரபுத் திங்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். எதிராக ஒருவர்கூட வாக்களிக்கவில்லை.

கனடிய நாடாளுமன்றத்தின் ஒருமித்த கருத்தின் படி ஜனவரி, தமிழ் மரபுத்திங்களாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

கனடிய நாடாளுமன்றத்தில் ஆதரவாக இத்தனை வாக்குகள் கிடைத்தது மட்டுமல்லாது எதிராக ஒரு வாக்கேனும் பதிவாகாததும் மிக அரிதான நிகழ்வுகள். தமிழ் மரபுத்திங்கள் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேறுவதில், பிரேரணையைச் சமர்ப்பித்ததோடு மட்டுமல்லாது போதுமான ஆதரவை எல்லாக் கட்சிகளிடமிருந்தும் திரட்டுவதிலும் நா.உ. கரி ஆனந்தசங்கரியின் கடும் உழைப்பைத் தாய்வீடு பாராட்டுகின்றது.

முதன்முறையாகக் கனடிய நாடாளுமன்றத்திலும் அதிகார பூர்வமாகத் தமிழ் மரபுத் திங்கள் கொண்டாடப்படவிருக்கிறது வருகின்ற ஜனவரியில் கனடாவின் 150ம் ஆண்டு நிறைவையொட்டிய கொண்டாட்டங்களோடு தமிழ் மரபுத் திங்கள் உடனிகழ்வது பெருமைக்குரியதே.

gangatharan.k@thaiveedu.com

ஓடி விளையாடும் அமெரிக்கத் தேர்தல்

- ரதன் -

ஒரு சில தினங்களுக்கு முன்பு அல்பேனிக்கு செல்வதற்காக கனடிய எல்லையைக் கடந்து நியுயோர்க் மாநிலத்திற்குள் சென்றிருந்தேன். சில வாரங்களில் நடைபெறவுள்ள அமெரிக்க அதிபருக்கான தேர்தலே எல்லையைக் கடக்கும் பொழுது எனது மனதினுள் பதிந்திருந்தது. அங்கு அதற்கான எந்த அறிகுறியையும் காணக்கிடைக்கவில்லை. இதே மாதிரி ஒரு தேர்தலுக்கு முன்பு இந்தியாவிற்கு சென்றிருந்தேன். சென்னை விமான நிலையத்தை விட்டு வெளியேறிய சில நிமிடங்களுக்குள்ளேயே தேர்தல் களையைக் காணக் கூடியதாகவிருந்தது. சுவரொட்டிகளும், கட்சிக் கொடிகளும் நகரை அலங்கரித்துக் கொண்டிருந்தது. அமெரிக்கத் தேர்தல் சற்று வித்தியாசமானது. உலகினை ஆட்சி செய்யும் நாட்டின் தலைவருக்கான தேர்தல். வீதிகளில் தெரியாவிட்டாலும் ஊடகங்கள் அனைத்தும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அமெரிக்க ஊடகங்கள் மட்டுமல்ல, உலக ஊடகங்களும் அமெரிக்கத் தேர்தலுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

தேர்தல் நடைபெறும் தினத்திற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே வேட்பாளர்கள் தங்களது தேர்வுகளுக்காக பிரச்சாரம் செய்யத் தொடங்கிவிடுவார்கள். ஊடகங்களும் அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கிவிடுகின்றார்கள். அமெரிக்காவில் இரு பிரதான கட்சிகள் தேர்தலில் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று ஜனநாயகக் கட்சி, மற்றையது குடியரசுக் கட்சி. ஆங்கிலத்தில் முறையே டேமோக்கிரற்றிக், றிப்பளிக்கன் கட்சி என அழைக்கப்படும். றிப்பப்ளிக்கன் கட்சி ஜி.ஒ.பி. அதாவது கிறான்ட் ஒல்ட் பார்ட்டி அதாவது மேலான பழமைக் கட்சி எனப் பொருள் படும். றிப்பளிக்கன் கட்சி வலது சாரி சார்பு கொண்டது என்பது வரலாற்றுச் சான்று. டெமோகிறட்டிக் கட்சி நடுநிலை சார்ந்தது. ஓரளவிற்கு இடது சார்பையும் கொண்டது.

ஒபமா தேர்வு செய்யப்படும் முன்னரும் பின்னரும், கடந்த மாதம் வரை ஒபமா எங்கு பிறந்தார்? அமெரிக்காவிலா பிறந்தார்? எனக் கேள்வி எழுப்பப்பட்டது. ஒபமாவுடன் வேட்பாளருக்கு போட்டியிட்ட கிளறி கிளின்டன் ஒபமாவை வெற்றி கொள்ள அவரது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை பெற முயன்றார் எனக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அமெரிக்க அதிபராவதற்கு என்ன தகுதிகள் வேண்டும்?

- அமெரிக்காவில் பிறந்திருக்க வேண்டும்
- 35 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்
- குற்றஞ்செய்து தண்டனை பெறாதவராக இருக்க வேண்டும்.
- ஆகக் குறைந்தது 14 வருடங்கள் அமெரிக்காவில் வசித்திருக்க வேண்டும்.

(ஜோன் எப் கென்னடியே குறைந்த வயதில் தேர்வு செய்யப்பட்ட அதிபர். அதிபராக தேர்வானபோது அவரது வயது 43. றீகன் இரண்டாம் தடவை அதிபராக தெரிவு செய்யப்பட்போது அவரது வயது 72)

மூன்று பிரதான பிரிவு:

அமெரிக்க அரசானது மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டது. முதலாவது சட்டமியற்றகம் (Legislative) பெயரைப் போன்று இங்கு சட்டங்கள் இயற்றப்படும். சட்டமியற்றகம் அதாவது கொங்கிரஸ் இரு பிரதான சபைகளைக் கொண்டது. ஒன்று செனட், மற்றையது பிரதிநிதிகள் அகம்.

செனட்: ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் இருவர் செனட்டர்களாக தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களது பதவிக்காலம் ஆறு வருடங்கள். இவர்கள் எத்தனை தடவையும் பதவி வகிக்கலாம்.

பிரதிநிதிகள் அகம்: மொத்தமாக 435 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள். 50 மாநிலங்களிலிருந்து மாநில சனத் தொகையின் அடிப்படையில் பிரதிநிதிகளின் எண்ணிக்கையடங்கும். இவர்களது பதவிக்காலம் இரு வருடங்கள். இவர்களும் எத்தனை தடவையும் பதவிவகிக்கலாம்.

அமெரிக்க அதிபருக்கு அடிக்கடி தலையிடி கொடுப்பவர்கள் இவர்களாகத்தானிருப்பார்கள். அமெரிக்க அதிபரின் கட்சிக்கு எதிரான கட்சியினர் அதிகம் கொங்கிரசில் அங்கம் வகித்தால், அமெரிக்க அதிபர் அறிமுகப்படுத்தும் சட்டங்கள், வரவு செலவுத் திட்டங்கள் அனைத்தையும் அமுல் படுத்த முடியாத நிலை ஏற்படும். இவர்கள் திருப்திக்காக பல மாற்றங்களை அதிபர் செய்ய வேண்டிவரும். ஒபமா கேயர் இன்னமும் முறையாக நடைமுறைப்படுத்த முடியாமலிருப்பதுக்கும் இவர்கள் தான் காரணம். அதிக துப்பாக்கிகள் அமெரிக்க மக்கள் கையில் இருப்பதற்கும் இவர்களே காரணம். ஒபமா ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த அதிபர். செனட்டில் இவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் 44 செனட்டர்களே உள்ளனர். குடியரசுக் கட்சியைச் சேர்ந்த 54 செனட்டர்கள் உள்ளனர். இருவர் சுயாதீனமானவர்கள். பிரதிநிதிகள் அகத்தில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த 234 பிரதிநிதிகளும், ஜனநாயக் கட்சியைச் சேர்ந்த 201 பிரதிநிதிகளும் உள்ளனர். இரு சபைகளிலும் குடியரசுக் கட்சியின் பெரும்பான்மையுள்ளது. இதனை எந்த அமெரிக்க அதிபரும் விரும்பமாட்டார்கள்.

இரண்டாவது நிறைவேற்றகம்: இங்குதான் அமெரிக்க அதிபர், துணை அதிபர் மற்றும் அமைச்சர்கள் அங்கம் வகிப்பார்கள். சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் இவ் வகத்திற்கு உண்டு. அதே சமயம் இயற்றப்படும் சட்டங்களை தனது வீட்டோ அதிகாரத்தைக் கொண்டு நிராகரிக்கும் உரிமையும் அமெரிக்க அதிபருக்கு உண்டு. 1947ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 21வது திருத்தச் சட்டம் ஒருவர் இரு பருவங்கள் மட்டுமே அமெரிக்க அதிபராக இருக்க முடியும் என்பதனை சட்டபூர்வமாக்கின்றது.

மூன்றாவது நீதி மன்றம்: இயற்றப்படும் சட்டங்கள் முறையானவையா, நீதியானவையா என நிலை நிறுத்தும் சபை. உச்ச நீதிமன்றம், மற்றும் மத்திய நீதிமன்றங்கள் சட்டங்களை நிலை நிறுத்துகின்றன. உச்ச நீதிமன்றம் அமெரிக்காவின் அதி உயர் நீதிமன்றம். உச்ச நீதிபதியை அமெரிக்க அதிபர் நியமிப்பார். செனட்டில் 51 செனட்டர்கள் அதிபரின் நியமனத்துக்காக ஆதரவளிக்க வேண்டும். தற்சமயம் 9 உச்ச நீதிமன்ற நீதிபதிகள் உள்ளனர். இவர்களது பதவிக்காலம் எல்லையற்றது. அதாவது அவர்களாக ஓய்வு பெறும் வரை பதவியில் தொடரலாம். உச்ச நீதிபதிகளின் எண்ணிக்கையை கொங்கிரசே தீர் மானிக்கும்.

ஜனநாயகக் கட்சி 1828ல் ஆரம்பிக்கப் பட்டது. உலகின் பழமை வாய்ந்த கட்சிகளுள் ஒன்று. இதுவரை ஒபமா உட்பட 15 அதிபர்கள் இக் கட்சியைச் சேர்ந்தவர் கள். கென்னடி, கார்ட்டர் போன்றோர் இக் கட்சியைச் சேர்ந்த அதிபர்கள்.

குடியரசுக் கட்சி 1854ல் அமெரிக்க உள் நாட்டு யுத்தக் காலத்தில் ஆரம்பிக்கப் பட்டது. இக் கட்சியின் முதல் அதிபராக ஏப்ரகாம் லிங்கன் தெரிவு செய்யப்பட்டார். அமெரிக்க அதிபர்களுள் அதி உயரமானவர் இவர். இவரது உயரம் 6'4" ஆகும். அமெரிக்க அதிபர்கள் எண்மர் தங்களது பதவிக்காலத்தில் இறந்துள்ளார்கள். நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களுள் ஒருவர் லிங்கன். பல பிரபல்யமான அதிபர்கள் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். அமெரிக்க ஊடகங்களால் மிக மோசமான அமெரிக்க அதிபர்களுள் ஒருவரென பட்டம் பெற்ற ஜோர்ஜ் டபிள்யு புஸ், றீகன், நிக்சன் போன்றோர் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். நிக்சன் மீது வோட்டர்கேட் ஊழல் குற்றச்சாட்டு எழுந்த போது அப்போது துணை அதிபராக இருந்த ஸ்பைரோரி அக்னியு தனது பதவியை இராஜினமாச் செய்தார். அவரது இடத்துக்கு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜெரால்ட் ஆர் போர்ட்டை துணை அதிபராக நியமித்தார். இதனை செனட்டும் அங்கீகரித்தது. 1974ல் வோர்ட்டகேட் ஊழலை வோசிங்டன் போஸ்ட் பத்திரிகை அம்பலப்படுத்தியதை அடுத்து நிக்சன் இராஜினமாச் செய்தார். விளைவு போர்ட் மக்களால் தெரிவு செய்யப்படாத அதிபரானார். 1869ன் பின்னர் இவ்விரு கட்சியினருமே அமெரிக்க அதிபர்களாக உள்ளனர்.

இம் முறை கிளரி கிளின்டன் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக போட்டியிடுகின்றார். அவருடன் கிறீன் கட்சி பெண் வேட்பாளர் ஜில் ஸ்ரீன் களத்தில் உள்ளார். இதற்கு முன்பு பல பெண்கள் அதிபருக்கான இறுதிப் போட்டியில் போட்டியிட்டுள்ளனர். 1872ல் பெண்ணியவாதியும், நவீனத்துவவாதியுமான விக்ரோரியா வூட்ஹல் சமவுரிமைக் கட்சி சார்பாக போட்டியிட்டார். பெடறிக் டக்ளஸ் என்ற பிரபல்ய கறுப்பின எழுத்தாளர், புரட்சியாளர், சமூகவாதி துணை அதிபருக்காக விக்ரோரியாவுடன் இணைந்து போட்டியிட்டார். இதன் பின்னர் பல பெண்கள் போட்டியிட்டுள்ளனர். பிரதான கட்சி ஒன்றின் சார்பாக கிளறி கிளின்டனே முதல் முதலாக போட்டியிடுகின்றார். 1904ல் ஜோர்ஜ் எட்வேர்ட் ரெயிலர் என்ற கறுப்பினத்தவர் அதிபர் தேர்தலில் போட்டியிட்டார். அதன் பின்னர் பலர் போட்டியிட்டாலும் அதிக பட்சம் 2வீதம் வாக்குகளுக்கு மேல் பெற முடியாமல் போய் விட்டது. 2008ல் ஒபமா ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டார். பிரதான கட்சி சார்பாக போட்டியிட்ட முதல் கறுப்பினத்தவர். அதிபராக பதவி வகித்த முதல் கறுப்பினத்தவரும் இவராவார்.

அதிபர் தேர்வின் போது ஒவ்வொரு மாநிலத்து மக்களும் தங்களுக்கு விருப்பமான வேட்பாளருக்கு வாக்களிப்பார்கள். மொத்த அமெரிக்க மக்களின் ஆதரவைப் பெற்றவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்பட மாட்டார். ஒவ்வொரு மாநிலத்துக்கும் வாக்குகள் உள்ளன. 2000ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அல் கோர் ஐந்து லட்சத்து நாற்பத்தி மூவாயிரம் அதிக வாக்குகளைப் பெற்றிருந்தார். ஆனால் புஸ் 271 பேராளர்களையும் அதாவது மாநில வாக்குகளையும், கோர் 266 மாநில வாக்குகளையும் பெற்றார். இதனால் புஸ் வெற்றி பெற்றார். புளோரிடா மாநிலத்தில் கோர் 537 வாக்குகள் புசைவிட குறையப் பெற்றிருந்தார். அந்த மாநிலத்து 29 வாக்குகளும் புஸ்சுக்கு கிடைத்தன. நியு மெக்சிக்கோவில் புஸ் 366 வாக்குகள் குறையப் பெற்றிருந்தார். அந்த மாநிலத்து ஐந்து வாக்குகளும் கோருக்கு கிடைத்தது. கலிபோர்ணியா 55 வாக்குகளையும், ரெக்சாஸ் 38 வாக்குகளையும், புளோரிடா, நியு யோர்க் 29 வாக்குகளையும் கொண்ட அதிக வாக்காளர்களைக் கொண்ட மாநிலங்கள். இவை தேர்தலின் போக்கை மாற்றக் கூடிய மாநிலங்கள். இது வரை நான்கு தடவைகள் ஒட்டு மொத்த மக்களின் ஆதரவைப் பெற்ற வேட்பாளர் அதிபராக வரமுடியாதிருந்துள்ளது.

நவம்பர் எட்டாம் நாள் நடைபெறவுள்ள அமெரிக்க தேர்தலில் மொத்தம் என்மர் போட்டியிடுகின்றனர். அவர்கள் Hillary Clinton, Donald Trump, Gary Johnson , Jill Stein, Evan McMullin, Darrell Castle, Rocky De La Fuente, Laurence Kotlikoff. இவர்களில் இருவர் சுயேட்சை வேட்பாளர்கள். மற்றவர்கள் றிபோம், லிபரேட்டியன், கிறீன் (பசுமை), கொன்சிரியுசன் கட்சிகளின் சார்பாக போட்டியிடுகின்றார்கள். 1968ல் அமெரிக்கன் இன்டிபென்டன்ற் கட்சி சார்பாக போட்டியிட்ட ஜோர்ஜ் வலஸ் சுமார் 10லட்சம் வாக்குகளையும் 46 பேராளர்களையும் பெற்றார். இது அண்மைக் கால வரலாறாகும். இரு பிரதான கட்சி வேட்பாளர்களுக்கும் ஊடகங்கள் மிக முக்கியத்துவம் அளிப்பதும், கட்சிகளின் செல்வ நிலைமையும் ஏனைய கட்சிகளையும், சுயேட்சைகளையும் பின் தள்ளிவிடுகின்றது. இம் முறையும் நடைபெற்ற மூன்று விவாதங்களின் போதும் இரு வேட்பாளர்களுக்குமே முக்கியத்துவமளிக்கப்பட்டது.

தேர்தலுக்கு இரு வருடங்களுக்கு முன்பே

தொடர்தல் 9ம் பக்கம்



ஓடி விளையாடும்...

8ம் பக்கத் தொடர்ச்சி...

வேட்பாளர்கள் பண வேட்டையில் இறங்கிவிடுவார்கள். பெரும் நிறுவனங்கள் இவர்களுக்கு பணத்தை வாரி இறைக்கின்றது. இது பல தடவைகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன. பல செல்வந்தர்களும் தங்கள் கறுப்பு பணத்தையும், வெள்ளை மனதையும் வெளிக்காட்டுவார்கள். வேட்பாளர்கள் இவர்களின் கோரிக்கைகளை நிராகரிக்க முடியாத நிலை தேர்தலின் முன்பே தோன்றிவிடுகின்றது. தோல்வியடைந்தவரும் பெற்ற பணத்துக்காக அரசின் நிலையை கேள்வி கேட்காமல், மௌனமாகிவிடுவார். தேர்தல் என்பது பணத்துடனேயே ஆரம்பமாகின்றது.

2016 தேர்தலின் கதாநாயகன் டொனால்ட் ரம். இவரை வெறுப்பவர்கள் கூட இவர் என்ன கூறுகின்றார் என்பதில் கவனம் செலுத்துவார்கள். அமரர் றொப் போர்ட் ரொரன்ரோவின் முதல்வராக இருந்த போது முழு உலகமும் ரொரன்ரோவின் பக்கம் திரும்பியிருந்தது. பிரதான ஊடகங்கள் இவரை கண்காணிக்க நிரந்தரமாகவே ஒருவரை நியமித்திருந்தனர். அதே போல் டொனால்ட் ரம். எங்கு என்ன சொல்வது என்று தெரிந்திருக்க வேண்டும். தமிழில் இடம் பொருள் ஏவல் என்பார்கள் - ரம்பிற்கு இவையெல்லாம் பொருட்டல்ல. குடியரசுக் கட்சிக்கான வேட்பாளர் போட்டியில் தனது கண்களாலும், வாயினாலும் ஏனைய வேட்பாளரை பின்தள்ளி வெற்றி பெற்றார். இவருக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்காமலேயே வெற்றி பெற்றார். ஆனால் இறுதித் தேர்தல் அப்படியல்ல. மக்கள் விழிப்பாகவே உள்ளார்கள். 70 வயதான டொனால்ட் ரொம் ஒரு செல்வந்த குடும்பத்தின் மைந்தன். இவரது தந்தையின் வம்சாவளியினர் ஜேர்மனியிலிருந்து அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தவர்கள். தாயின் வம்சாவளியினர் ஸ்கொட்லன்ட்டிலிருந்து குடிபெயர்ந்தவர்கள். இவரது மாமனார் பிரபல்ய எம்.ஐ.ரி (Massachusetts Institute of Technology (MIT) பல்கலைக்கழக நிறுவனத்தில் பேராசிரியராக இருந்தார். இவர் பின்நாட்களில் எக்-ஸ்-ரே கருவியில் பல புதிய மாற்றங்கள் கொண்டுவரக் காரணமாகவிருந்தார். தந்தையார் நியூயோர்க் நகரத்தில் மிகப் பெரிய ஆதன அபிவிருத்தி, விற்பனை நிறுவனத்தினை நடத்திவந்தார். டொனால்ட் ரம் பாடசாலையில் படித்த காலங்களில் சக மாணவர்களை கேலிவதை செய்ததையடுத்து அங்கிருந்து வெளியேறி நியூயோர்க் இராணுவ பாடசாலையில் எட்டாம் வகுப்பை முடித்தார். பின்னர் பொருளாதார பட்டதாரியானர். பல்கலைக் கழகத்தில் இவர் ஆதனத்துறையும் கற்றார். பல்கலைக் கழக கல்வியை முடித்து விட்டு தந்தையின் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

தனது 23வது வயதிலேயே பல ஆதனச்



சொத்துக்களை வெற்றிகரமாக அபிவிருத்தி செய்து விற்பனை செய்தார். நியூயோர்க் நகரின் இவருக்குச் சொந்தமாக பல அதி உயர் கட்டடங்கள் உள்ளன. கோல்ப் விளையாட்டகங்கள் பலவற்றையும் நடத்தி வருகின்றார். சர்வதேச அழகிப் போட்டிகள் நடத்தும் நிறுவனத்திலும் இவருக்கு அதிக பங்குகள் உண்டு. லாஸ் வெகாஸ் நகரிலும் இவரது நிறுவனங்கள் உள்ளன.

இவர் தனது மூன்றாவது மனைவியுடன் தற்சமயம் வாழ்ந்து வருகின்றார். முதல் இரு மனைவிகளை விவாகரத்து செய்துவிட்ட போதிலும் அவர்களுடன் நட்பை பேணி வருகின்றார். ஆறுதடவைகள் வங்குரோத்து நிலையை பிரகடனப்படுத்தியுள்ளார்.

இவருக்கு எதிராக பல அவதூறுகள் உண்டு. வருமானத்துறை தொடர்ந்து இவரது வரவு செலவுகளை பரீசிலிக்கின்றது. தனது வருமானப் பத்திரங்களை மக்கள் முன்வைக் கவில்லை. பொதுவாகவே அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் தங்களது வருமான பத்திரங்களை மக்கள் முன் சமர்ப்பிப்பது வழமை. இதனை ரம் முறியடித்து விட்டார். ரம்பிற்கு இத் தேர்தல் முதல் தேர்தலல்ல. 2000ம் ஆண்டு றிபோம் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டு பிரச்சாரங்களையும் மேற்கொண்டு விட்டு பின்னர் போட்டியிலிருந்து விலகிவிட்டார். இவர் ஜனநாயகக் கட்சி உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இவருடன் போட்டி போடும் கிளறி கிளின்டன் முன்னால் அதிபர் கிளின்டனின் மனைவி. இவர் சிக்காகோ நகரில் பிறந்து வளர்ந்தார். வெலஸ்லிக் கல்லூரியில் அரசியல் விஞ்ஞானம் கற்று பட்டதாரியானார். பிரபல்ய யேல் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்று வழக்குரைஞரானார். அங்கு தான் பில் கிளின்ரனைச் சந்தித்தார். பாடசாலையில் கல்வி கற்ற காலங்களிலேயே அரசியலில் ஆர்வம் காட்டினார். பல அமைப்புக்களின் தலைவராக செயல்பட்டார். திருமணத்தின் பின்னார் பில் கிளின்ரன் தனது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற முனைந்த போது அவருக்கு தோள்கொடுத்தார். பில் கிளின்ரனின் காதல் பிரச்சினைகளை வெளியே தெரிந்த போதும், அவருடனேயே தனது வாழ்க்கையைத் தொடர்ந்தார். இதனைப் பற்றிய கடும் விமர்சனங்கள் இவர் மீது தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டது. அதனைக் கடந்து வந்துவிட்டார். நியூயோர்க் மாநில செனட்டராக எட்டு ஆண்டுகள் கடமையாற்றினார். ஒபாமா அரசில் வெளியுறவுத்துறை அமைச்சராகவும் கடமையாற்றிருந்தார்.

கிளறி கிளின்டன், டொனால்ட் ரம் இருவரும் தங்களது பிரச்சாரங்களின் போது மக்களுக்கு என்ன செய்வார்கள் என்று கூறியதை விட ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டியதே அதிகம். ரம்பின் கூற்றுக்கள், தனிப்பட்ட வாழ்க்கை விமர்சிக்கப்பட்டன. கிளறி அமெரிக்க அரசின் மந்திரியாக இருந்த பொழுது ஏற்பட்ட 'ஈ மெயில் துஸ்பிரயோகம்' பற்றி ரம் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டினார். அத்துடன் கிளறி கணவர் பில் கிளின்ரனின் பெண் விவாகரத்தையும் விமர்சித்தார். மூன்றாம் உலக நாடுகளின் தேர்தல்களை விட மிக மோசமான தேர்தல் பிரச்சாரமாகவே அமெரிக்கத் தேர்தல் பிரச்சாரம் நடைபெறுகின்றது. திடீரென சில பெண்கள் வெளிவந்து ரம் தங்களை பாலியல் தொல்லை கொடுத்தாக குற்றஞ்சாட்டுகின்றார்கள். இவர்கள் ஏன் திடீரென முன்வருகின்றார்கள்? இவர்களுக்கு பின்னால் யார் உள்ளார்கள்? கிளறி அமெரிக்க அதிபரான பின்னர், ரம்பின் மீது விசாரணை நடத்தப்படுமா? தற்சமயம் ஏன் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை? போன்ற பல கேள்விகளுக்கு விடை மௌனமாகத்தானிருக்கும். 'இதெல்லாம் அரசியலில் சகஜம்' என்பது அமெரிக்காவிற்கும் பொருந்திவிட்டது.

அபிப்பிராய வாக்கெடுப்புக்களின் முடிவுகள் கிளறி கிளின்டன் வெற்றி பெறுவது உறுதியானது என்பதை தெரிவிக்கின்றன. ஆனால் இம்முறையும் மக்கள் தோல்வியடைந்துவிட்டார்கள்.

அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன்
- இழுக்கா
மானம் உடையது அரசு

என்கின்றார் வள்ளுவர். திறமையும் மக்கள் பற்றிய சிந்தனையும் கொண்ட தலைவர்களை அமெரிக்க உருவாக்காவிட்டால், அமெரிக்கா வல்லரசு என்ற நிலையில் நீண்ட காலம் நீடிக்க முடியாது.

(October 26, 2016)

rathan@thaiveedu.com

எழுக தமிழ்...

9ம் பக்கத் தொடர்ச்சி...

சிறிய கிராமங்களில்கூட இராணுவக்குடியிருப்புகள் இருக்கின்றன. இராணுவ வண்டிகளில் வரும் இராணுவத்தினர் எல்லாக் குடியிருப்புகளையும் இணைக்கும் செயலினைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இராணுவத்தினர் துப்பாக்கியுடன் நடந்துசெல்வதையும் மோட்டார் சைக்கில்களில் ஆயுதத்துடன் செல்வதனையும் காணமுடிகிறது.

இராணுவம் பொலிசார்போல் அன்றாட வாழ்க்கைக்கு இடையூறாகவோ கையூட்டுப்பெறும் நிலையிலும் இல்லாத காரணத்தால் பொலிசாரைவிட அவர்கள் மேல் என்ற கையாலாகாத்தனச் சலிப்பு உருவாகியிருக்குறது. நீண்டகால அடிப்படையில் அதன்விளைவுகள் பாரதூரமாக அமையக்கூடும் என்பதனை அனுமானிக்கும் நிலையில் மக்களிருக்கவில்லை. அவர்களுக்கு ஒரு அனுபவம் தேவைப்படுகிறது. அன்றாட வாழ்க்கைப்போராட்டத்தின் மத்தியில் இதுபற்றிய சிந்தனைகள் எழக்கூடிய நிலையில் அவர்களில்லை. வன்னிமக்களோ போரிலிருந்து மீண்டு வந்ததனை மறுவாழ்வாக எண்ணுகிறார்கள்.

இராணுவத்திடதிருந்து தமது உடமைகளை மீட்கவும் உயிரைப்பாதுகாக்கவும் வழிதேடியும் நிற்கிறார்கள். இதனாற்தான் எழுகதமிழ் ஊடாக நிலைகொண்டிருக்கும் 150000 இராணுவத்தினர் வெளியே எடுக்கப்பட்டு மக்கள் அச்சமின்றி வாழ வழி செய்யவேண்டும் என்றகோரிக்கை முன்வைக்கப்பட்டது. பௌத்தரில்லா இடங்களில் பௌத்த விகாரைகள் ஏன்?. இராணுவத்தின் உதவியுடன் சிங்கள பௌத்த மேலாண்மையினை உறுதிப்படுத்தும் முயற்சியாயின் அது உடனே தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதுவும் முக்கியம் பெற்றிருந்தது.

நல்லாட்சியில் அரசியற் கைதிகளுக்கு விடுதலையில்லை. காணாமற் போனோர் பற்றிய விபரமில்லை. பயங்தரவாத தடைச் சட்டத்தில் மாற்றமில்லை. முப்படைகளும் சாமானியர்களுக்கெதிராக அநீதி இளைத்தால் படையினரைப் பாதுகாக்கவா இவ் வகைச்கட்டங்கள் என மக்கள் கேட்கிறார்கள். மன்னார் முசலிப்பகுதி மக்கள் உட்பட வடபகுதி மக்கள் கொள்ளையிடுவோரிடமிருந்து தமது பொருட்களைக் காக்கமுடியாது அவலப்படுகிறார்கள். யாரிந்தக் கொள்ளையர்கள்? வாளேந்துபவர்கள் யார்.? இவற்றின் பின்னணியில் இருப்பவர் யாரெனத் தெரியாது மக்கள் குளம்பிப்போயிருக்கிறார்கள்.

அரசியல்வாதிகள் சமஸ்டி என்பதனைக் கேட்கப் பயப்படுகிறார்கள். தருவதனை வாங்கிக்கொள்ளுவோம் என்ற உணர்வும் அறுபதாண்டுகளாக ஏமாற்றப்பட்ட தமிழர்கள் இம்முறையும் ஏமாற்றப்படுவதனால் எந்த இழப்பும் நேரப்போவதில்லை என்பதுவும் கூட அரசியலுபாயம் தான் என்ற நிலைக்குள் வந்துவிட்டது. எழுகதமிழ் சமஸ்டியை அரசியற் திட்டத்துள் உட்புகுத்துங்கள் என்ற கோரிக்கையினைக் கேட்டது.

மக்களது வாழ்வாதாரங்களைச் சுரண்ட வேண்டாம் சுரண்டுபவர்களுக்கு உதவவும்வேண்டாம் என உறுதியாகக் கேட்டது. 1919ம் ஆண்டுமுதல் பெரும்பான்மை இனம் அரசியற்திட்டத்தினூடாகத் தமிழர்களை வஞ்சித்து வருகிறது இம்முறையும் வீசியகையும் வெறுங்கையுமாகத் திரும்பிவரத் தமிழர்கள் தயாரில்லை எனபதனை மக்கள் சார்பாக எழுகதமிழ் எடுத்துரைத்திருக்கிறது. இதில் பேசியவர்கள் தமிழ் மக்களின் தீர்க்கப்படாத அவலங்களைப் பற்றியே ஆட்சியாளரிடம் எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார்கள்.

அரசியற் திட்ட மாற்றங்கள் வெளிவர வேண்டிய இக்கால கட்டத்தில் மக்கள் மௌனியாக இருந்துவிட்டார்கள் என்பதைப் பெரும்பான்மை அரசியல்வாதிகளால் சொல்லப்பட்டுவிடக்கூடாது என்பதில் அங்கு கூடிய தமிழர்கள் மிகுந்த கரிசனையுடன் காணப்பட்டார்கள்.

நீண்டகாலமாகச் சொல்லப்படுகின்ற சாக்குப்போக்கு மக்கள் ஒற்றையாட்சியின் கீழ் வாழவிரும்புகிறார்கள் அரசியல்வாதிகள் தான் சமஸ்டி கேட்கிறார்கள் என்பதாகும். சமஸ்டி என்பது மக்கள் தெரிந்தெடுக்கும் ஆட்சிமுறை. அதனைப் பெரும்பான்மை மக்களிடம் கேட்டுத்தான் கொடுப்போமென விதண்டாவாதம் பேசுவது அரசியல் நாகரிகமாகிவிட முடியாது.

பெரும்பான்மை மக்கள் சமஸ்டி தமக்கு வேண்டாமென்பார்களாயின் அவர்கள் தமது சமஸ்டி எல்லைக்குள் அவ்வாட்சி முறையினைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பிருக்கிறது.

தமிழர்களைத் தமிழர்களுடன் மோதவைத்துப்பார்க்கும் அரசியற் தந்திரோபாயத்துக்குச் சாவுமணியடிக்க வேண்டிய காலம் இது தான் இதனைத் தவறவிட்டால் காலம் மீண்டும் இதே வடிவத்தில் வரப்போவதில்லை என்பதனை எல்லாத் தமிழ்மக்களும் உணர வேண்டிய நேரமிது.

எழுகதமிழ் என்பது தமிழர்களே விழித் தெழுங்கள். உறங்கியது போதும் விடிய இன்னமும் நீண்ட நேரமில்லை. விடிவதற்குள் நாம் எதிர்கொண்ட போரென்ற கடும் இருட்டும் இருட்டாகிப்போன மனித உறவுகளும் எம்மனத்தைவிட்டு இன்னும் மறையவில்லை. விடியலுக்காகக் காத்திருக்கும் தமிழினம் விடியலின் முழுப்பயனையும் பெறவேண்டுமாயின் நீங்கள் விழித்துக் கொள்ளவேண்டும். என்பதற்காக எடுத்த முயற்சி என்று கூறலாம்.

இதற்காக முன்னின்று உழைத்த பேராசிரியர்களும் பேரவை அங்கத்தவர்களுக்கும் கிடைத்த ஓர் அங்கீகாரம் தான் இந்த வெற்றி சொல்லும் செய்தியாகவிருக்கிறது. செப்ரெம்பர் 24ம் திகதி இது நடக்குமா என்பதை நிஜமாக்கிக்காட்டியவர்கள் மக்களே. தமிழர்கள் கட்சிபேதமின்றி ஒன்றிணைந்து இவ்வளவு மாபெரும் சக்தியாக மாறுவதற்கு அவர்கள் சுமந்த வலியே காரணமாகிவிட்டது.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■

இந்திய மருத்துவம்

உடலும் - மனமும்

- மருத்துவ ஆலோசனைகள்
- மூலிகைகள்
- மருத்துவம் கற்றுக் கொள்ள
- மருத்துவ தொழில் ஆலோசனை பெற

நேரில் சந்திக்கவும்:

இராஜசேகர் ஆத்தியப்பன்
416-995-0416
ayurvetha@gmail.com
www.ayurexpress.net



Ceycan Transhipping Inc.

INTERNATIONAL FORWARDING & LOGISTICS

SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA

We are expanding Now in Dubai

PERSONAL EFFECTS
SHIPMENTS BY SEA & AIR
TO SRI LANKA

SRI LANKA'S
Best Clearing Facilities in
COLOMBO, KANDY & BATTICALOA

REGULAR
AIR SHIPMENTS NOW
AVAILABLE

For further information contact
Kumar
905-673-9873

Vancouver: Randy - 604-273-4911 Edmonton, Calgary: Desmond - 780-918-2501 Montreal: Gana - 514-573-0093
Ottawa: Ignatius (Iggy) - 613-799-3519 Dubai: Gihan Jayasankha - 971564036107

Dubai
Ceycan Transhipping Inc.
C/O: RSL Freight CO LLC
Office : Flat No 306/4
Zabeel Business Centre,
Karama, Dubai U.A.E

United Kingdom
Transcontinental Shipping
Ashley House, 235 High Road
Suite 412, Woodgreen, London
Tel: 0208 889 8486

Colombo
Ceylon Shipping Lines Ltd
760, Dr. Danister De Silva Mawatha
Colombo - 09
Tel: (011) 2680301 - 306

Kandy
Ceylon Shipping Lines
175 Parangantota Road,
Mawilmada, Kandy
Tel: (812) 234356/57/59

Batticaloa
Ceylon Shipping Lines Ltd.
134 Main Street
Addalaichenai - 09
Tel: (067) 2277302

1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9 Email: Ceycantrans@gmail.com web: ceycantranship.com

கபவாதம் / Pneumonia

- ரவிச்சந்திரிகா -

சுவாச நோய்களின் இரண்டாவது பகுதியான Lower Respiratory Diseases பற்றி இம்மாதம் பார்ப்போம்.

இந்நோய்களை Acute, Chronic என இரண்டாகப் பிரிக்கலாம்.



குறுகிய காலத்தில் மிகவும் கடுமையான அறிகுறிகளுடன் ஏற்படுவது acute disease எனப்படுகிறது. உகந்த சிகிச்சைகள் அளிக்கப்பட்டால் அனேகமாக நீங்கி விடுகிறது.

நீண்ட காலமாக உடலில் உள்ள நோய், chronic disease எனப்படுகிறது. தொடர்ந்து மருத்துவம் செய்யப்பட வேண்டும். உடலைச் சிறிது சிறிதாகப் பாதிக்கிறது. மருத்துவம் இல்லாத நிலையில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

உலகில் உள்ள ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளை அதிகமாகப் பாதிக்கும் தொற்றுநோய் pneumonia ஆகும். எனவே இந்நோய் பற்றிய அறிவைப் பரப்புதல், நோய்த்தடுப்பு முறைகளை கற்றுத் தருதல், நோய் ஏற்பட்டால் உடனடி சிகிச்சை அளித்தல் அவசியமாகும். இதற்காக உலக சுகாதார மையம் (WHO) நவம்பர் 12ம் திகதியை "உலக நியூமோனியா நாள்" ஆகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

Acute Lower Respiratory Disease என்ற வகையில் pneumonia இடம் பெறுகிறது. பிரித்தானிய ஆங்கிலத்தில் நியூமோனியா என்றும், அமெரிக்க ஆங்கிலத்தில் நிமோன்யா என்றும் கூறப்படுகிறது. இரு வகை உச்சரிப்பிலும் 'P' என்னும் முதல் எழுத்து அமைதியாக இருக்கும். இங்கு இனி நியூமோனியா என்று மட்டும் குறிப்பிடப் போகிறேன்.

நியூமோனியா என்பது நுரையீரல்களில் ஏற்படும் அழற்சி (Inflammation) ஆகும். இது பக்டீரியா, வைரஸ், பங்கஸ், என்னும் ஒட்டுண்ணி ஆகிய நுண்ணுயிர்கள் மூலம் தொற்றுகின்றது. இந்த நுண்ணுயிர்கள் சுவாசம் மூலம் நுரையீரலை அடைகின்றன. இவற்றில் மிகப் பொதுவானவை பக்டீரியா, வைரஸ் தொற்றுகள் ஆகும். (சில இரசாயனப் பொருட்கள் மூலம் ஏற்படும் pneumonia உள்ளது. இது தொற்றுவதில்லை. இது பற்றி வேறு ஒரு சமயத்தில் பார்க்கலாம்)

Viral Pneumonia:பல விதமான வைரஸ்கள் இத் தொற்றுநோய்க்குக் காரனமாகின்றன. நோய் கொண்டவரின் சுவாசம் மூலம் மற்றவர்களுக்குப் பரவுகிறது. காய்ச்சல், இருமல், சுவாசிப்பதில் சிரமம், சளி ஆகியவை காணப்படும். ஆனால் இவை மிகக் கடுமையாக இருப்பதில்லை. வைரஸ்களை அழிப்பதற்கு மருந்துகள் கொடுக்கப்படுவதில்லை. ஏனெனில் பொதுவாக வைரஸ்களை மருந்துகள் பாதிப்பதில்லை. ஓய்வாக இருப்பதும், அதிக அளவில் நீர் அருந்துவதும் பரிந்துரைக்கப்படும். உடலில் வேறு நோய்கள் இல்லாதவர் விரைவில் குணம் அடைவார்.

Bacterial Pneumonia: பலவிதமான பக்டீரியா மூலம் இந்நோய் ஏற்படுகிறது. உடலில் நீண்ட காலமாக நோய் உள்ளவர்கள், உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவானவர்களுக்கு இவ்வகை நியூமோனியா ஏற்பட அதிகமான சாத்தியக் கூறுகள் உள்ளன. எனவே வைத்தியசாலையில் இருக்கும் நோயாளிகள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். வைத்தியசாலையில் தொற்றும்போது Hospital Acquired Pneumonia எனப்படுகிறது. பொதுவெளிகளில் தொற்றும்போது CommunityAssociated Pneumonia எனப்படும்.



காய்ச்சல், இருமல், சுவாசிப்பதில் சிரமம், உடலில் நடுக்கம், சுவாசிக்கும் போது நெஞ்சு வலி, களைப்பு, வாந்தி எடுப்பது போன்ற உணர்வு, இருக்கும். சளியில் குருதி, சீழ் (மஞ்சள் அல்லது பச்சை நிறத்தில் இருக்கும்)காணப்படும். Antibiotics எனப்படும் நுண்ணுயிர்க் கொல்லிகள் கொண்டு பக்டீரியா அழிக்கப்படுகிறது.

Pneumocystis Pneumonia: ஒரு வகை ஒட்டுண்ணிகள் இந்த pneumonia வுக்குக் காரணமாகின்றன. நோய் எதிர்ப்புச் சக்தி குறைவான நிலையில் இந்த வகை நியூமோனியா அதிகமாகத் தொற்றுகின்றது. உதாரணமாக HIV/AIDS உள்ளவர்களுக்கு இந்த நோய் ஏற்படச் சாத்தியங்கள் அதிகம்.

பின்வரும் காரணிகள் pneumonia ஏற்படுவதற்குரிய சாத்தியக் கூறுகளை அதிகரிக்கின்றன.

- புகைத்தல்: இளைஞர்களுக்கு நியூமோனியா ஏற்படுவதற்கு மிக முக்கிய காரணம் இதுவாகும்.
- Asthma, Choronic Obstructive Pulmonary Disease ஆகிய சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் உள்ளவர்கள்
- ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள்
- 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள்
- நோய் எதிர்ப்புச் சக்தி பாதிக்கப்பட்டவர்கள், நோய் எதிர்ப்புச்சக்தி பலவீனமாக இருப்பவர்கள்
- இதய நோய்கள், சர்க்கரை நோய் உள்ளவர்கள்
- சமீபத்தில் தடிமன், Flu ஏற்பட்டிருத்தல்
- இரைப்பையில் அமிலம் சுரப்பதைக் குறைக்கும் மருந்துகளான Prilosec அல்லது Protonix உட்கொள்பவர்கள்.
- கடந்த மூன்று மாதங்களுக்குள் வேறு நோய்களுக்கு மருத்துவம் செய்வதற்காக வைத்தியசாலை சென்றிருத்தல்
- உடலில் உள்ள மண்ணீரல் (spleen) என்னும் அங்கம் அகற்றப்பட்டிருத்தல், அல்லது மண்ணீரல் சரியாக வேலை செய்யாதிருத்தல்
- அதிக அளவில் மது அருந்துபவர்கள், மதுவுக்கு அடிமையானவர்கள்
- நெருக்கமான சூழ்நிலையில் வாழவேண்டியவர்கள். கல்லூரி விடுதிகள், மருத்துவமனைகளில் வாழ்பவர்கள்

குளிர் காய்ச்சல், சுவாசிப்பதில் சிரமம், இருமும்போது வெளியேறும் சளி மஞ்சள் அல்லது துரு நிறத்தில் இருந்தால், குருதித் துளிகள் இருந்தால் உடனடியாக வைத்தியரோடு தொடர்புகொள்ள வேண்டும்.

நெஞ்சு வலி, சுவாசிப்பதில் மிகுந்த சிரமம், இருமும்போது அதிக அளவு குருதி வெளியேறுதல், மயக்கம் ஏற்படுதல் ஆகிய நிலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவினரை உடனடியாகத் தொடர்பு கொண்டு வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும்.

நியூமொனியாவைப் பொறுத்த வரையில் எவ்வளவு விரைவில் சிகிச்சை செய்யப்படுகிறதோ அவ்வளவு விரைவில் பாதிக்கப்பட்டவர் குணமாகிறார். மேலும் நோயின் கடுமை குறைகிறது. எனவே காலம் தாழ்த்தாது சிகிச்சை பெற வேண்டியது மிக அவசியம் ஆகும். உரிய சிகிச்சை அளிக்கப்பட்டால் 2 - 3 தினங்களில் முன்னேற்றம் காணலாம்.

நியூமோனியா ஏற்படாமல் தடுப்பதற்குப் பின்வரும் வழிமுறைகளைக் கடை பிடித்தல் நல்லது.

- புகைத்தலை நிறுத்தவும்
- தடிமன், காய்ச்சல், சுவாசத்தொற்று நோய்கள் உள்ளவர்கள் அருகே செல்வதைத் தவிர்க்கவும்
- உங்களுக்கு இதுவரை சின்னமுத்து, கொப்புளிப்பான் வராதிருந்தால், அதற்குரிய தடுப்பு மருந்துகளை எடுக்காதிருந்தால், அந்நோய் உள்ளவர்கள் அருகே செல்வதைத் தவிர்க்கவும்.
- Flu எனப்படும் காய்ச்சலைத் தவிர்க்கத் தடுப்பு மருந்து எடுத்தல். (Flu Shot)
- கைகளை அடிக்கடி கழுவவும்.

அடுத்து வரும் மாதங்களில் நுரையீரலைப் பாதிக்கும் Chronic Diseases பற்றிப் பேசுவோம்.

உசாத்துணை:

- Wilkins, E. M. *Clinical Pracitce of the Dental Hygienist* (2005). Baltimore, MD: Lippincourt Williams & Williams
- Symptoms of Pneumonia (2016) http://www.webmd.com/lung/tc/pneumonia-symptoms
- World Pneumonia Day (2016) http://www.who.int/life-course/news/events/word-pneumonia-day/en/
- Image of Pneumonia Retrieved on 13th October 2016, from http://howrid.com/ health/get-a-pneumonia/
- Image of World Pneumonia Day Retrieved on 13th October 2016, from https://www.cdc.gov/features/pneumonia/

ravichandrika@thaiveedu.com

SELENE METROGATE
Gnani & Judy
REAL ESTATE
TRIDEL
BUILT FOR LIFE

-Last phase at Metrogate
-Kennedy & 401
-Affordable Luxury Condo
-Comming soon
-VVIP Access Call Us

HOMELIFE
HIGHER STANDARDS

Judy Gnanendran B.Com (Hons)
416-629-9797

Gnani Narasingham
416-937-8090

OFFICE: 416.321.6969
HOMELIFE GTA REALTY INC., 5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* INDEPENDENTLY OWNED & OPERATED, REALTOR

ஆயுள்வேத மருத்துவத்தின் வளர்ச்சியில் பௌத்தர்களின் பங்கு

- பால. சிவகடாட்சம் -

ஆயுள்வேத மருத்துவத்தின் வளர்ச்சியில் பௌத்தர்களின் பங்கு மகத்தானது. பௌத்தர்களின் பங்களிப்பையும் உள்ளடக்கிய முழுமையான மருத்துவநூலாகக் காணப்படும் வாகடரின் (வாக்பட்டரின்) அஷ்டாங்க ஹிருதய சம்ஹித என்னும் நூல் கி.பி.7ம் நூற்றாண்டில் இந்தியா முழுவதும் நன்கு அறியப்பட்ட மருத்துவப்பாடநூலாக விளங்கியது. இக்காலப்பகுதியில் இந்தியாவுக்கு வந்த பௌத்த யாத்திரிகரான இற்சிங்(Itsing) மேற்படி நூலின் சிறப்பு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்தில் ஆயுள்வேத நூலை வாகடம் என்று குறிப்பிடும் வழக்கம் தோன்றியமைக்கு வாகடரின் நூலே காரணமாக இருந்துள்ளது எனக்கருதமுடியும்.

தேரர் அல்லது தேரையர் என்னும் நூலாசிரியரின் பெயரில் பிற்காலத்தில் எழுந்துள்ள தமிழ் மருத்துவ நூல்கள் பலவும் ஆயுள்வேத மருத்துவத்தின் வளர்ச்சியில் பௌத்த தேரர்களின் பங்களிப்பை நினைவூட்டுவனவாகவே உள்ளன. புத்தபெருமானின் சமகாலத்தவரும் புத்தரின் மருத்துவருமான ஜீவகன் என்பாரின் மருத்துவ சாதனைகள் பற்றிய கதைகள் தமிழகத்தில் பரவுவதற்கும் அக்காலப்பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் பௌத்தர்களே காரணமாய் இருந்துள்ளனர் எனக்கருதமுடியும். தமிழகத்தில் பௌத்த மதம் செல்வாக்குப் பெற்றிருந்த காலப்பகுதியில் பௌத்தகுருமார் தமது அறச்சாலைகளில் பொதுமக்களுக்கு மருத்துவ சேவை வழங்கி வந்தனர். திரிபிடகம் என்னும் நூலைப் பயிலும் பௌத்தர்கள் 'பிடகர்' என்று அறியப்பட்டனர். பிடகர் என்னும் சொல் தமிழில் மருத்துவரைக் குறிக்கும் சொல்லாக இருப்பதையும் இவ்விடத்தில் நினைவு கூரலாம்.

சமணத் துறவிகளுடன் ஒப்பிடுகையில் ஆரம்பகாலம் தொட்டுப் பௌத்த குருமாரே மருத்துவப் பணிபுரிவதில் கூடிய அக்கறை காட்டிவந்துள்ளனர். எந்தச் சந்தர்ப்பத்திலும் விலங்குகளுக்குத் தீங்கு இழைத்தல் கூடாது என்னும் விரதத்தைத் தீவிரமாகக் கடைப்பிடித்துவந்த சமணருக்குத் தேன், நெய் போன்ற அத்தியாவசியமான மருந்துப் பொருள்களைக்கூடப் பயன்படுத்த முடியாதிருந்தது. அதேசமயம் பிக்குமாருக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் சில வற்றை ஊடல் நலம் பேணுவதை நோக்கமாகக் கொண்டு தளர்த்திக் கொள்ளப் புத்தர் அனுமதி வழங்கியிருந்தார். பௌத்த சங்கத்தைச் சேர்ந்தோருக்கு மட்டுமன்றிப் பிறருக்கும் சிகிச்சை அளிப்பதன் முக்கியத்துவத்தையும் புத்தர் பிக்குகளிடம் வலியுறுத்தியிருந்தார். அசோகச்சக்கரவர்த்தி முதற்கொண்டு தெற்காசியாவில் பௌத்த மதத்தை ஏற்றுக்கொண்ட மன்னர்கள் மட்டுமன்றி வசதிபடைத்த செல்வந்தர்களும் பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகளை ஏற்படுத்திக்கொடுப்பதில் பெரும் அக்கறை காட்டி வந்துள்ளனர்.

நிகழ் சகாப்தம் நாலாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் இருந்து அரசு புரிந்த இலங்கை மன்னன் புத்ததாச (341-370 C.E) பொதுமக்களின் நலன்கருதி ஒவ்வொரு கிராமத்திலும் நோயாளிகளுக்குச் சிகிச்சைசாலைகளை நிறுவி அங்கு மருத்துவர்களை நியமித்ததாகவும் யானைகளுக்கும் முடவர்களுக்கும் பராமரிப்பு நிலையங்களை அமைத்துக்கொடுத்ததாகவும் சிங்கள பௌத்தரின் வரலாற்று நூலான மகாவம்சம் தெரிவிக்கின்றது. இது தவிர மருத்துவ நூல்களின் சாரத்தை ஒன்று திரட்டி ஒரு மருத்துவ நூலை இம்மன்னன் ஆக்கியதாக மகாவம்சம் கூறுகின்றது. பௌத்தத்தைத் தழுவிக்கொண்ட இலங்கை

யுவான் சுவாங் / HIUEN TSANG:

மன்னர்கள் பலரும் பொதுமக்களுக்கு மருத்துவ வசதிகளை அமைத்துக் கொடுப்பதில் மிகுந்த அக்கறை காட்டிவந்துள்ளனர் என்பதில் ஐயமில்லை.

கி.பி. 399ம் ஆண்டில் பா-ஹியன்(Fa-hsian) என்னும் பெயருடைய சீனத்துப் பௌத்த துறவி ஒருவர் தெற்காசியாவில் உள்ள பௌத்த நாடுகளுக்கான பயணத்தைத் தொடங்கியிருந்தார். கி.பி. 402ல் இந்தியா வந்தடைந்த பா-ஹியன் கௌதம புத்தரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய கபிலவஸ்து, வாரணாசி போன்ற இடங்களுக்குச் சென்று விட்டு மகதநாட்டின் தலைநகரமான பாடலிபுரம் வந்தடைந்தார். பௌத்தருக்கும் இந்துக்களுக்கும் நெருங்கிய நல்லுறவு இருந்தகாலம் அது. ஒவ்வொரு ஆண்டும் இரண்டாம் மாதம் எட்டாம் நாளன்று நடைபெறும் தேர்த்திருவிழா பற்றிய விபரங்களை பா-ஹியன் தந்துள்ளார். இலங்கையில் இன்றும் நடைபெற்றுவரும் கண்டி எசெலப் பெரஹரவை ஒத்த நிகழ்வு இது. எனினும் யானைகளுக்குப்பதில் தாதுகோபம் வடிவில் செய்யப்பட்ட இருபது தேர்கள் இந்த ஊர்வலத்தில் இடம்பெற்றன. பௌத்த மதத் தவரின் இந்த விழாவில் கலந்து கொள்ள அயலூர்களில் இருந்து நகரத்துக்கு வருகை தரும் பௌத்தர்களை உள்ளூர்ப் பிராமணர்கள் எதிர்கொண்டு வரவேற்றனர். நகரில் செல்வத்துடன் வாழ்ந்து வந்த வணிகப் பெருங்குடி மக்கள் விழாக் காண வரும் அனைத்து மக்களுக்கும் தங்குமிடமும் மருந்தும் கொடுத்துப் பராமரிக்கும் அறச் சாலைகளையும் அமைத்துக்கொடுத்தனர்.

நாட்டில் உள்ள ஏழைகள், அனாதைகள், விதவைகள், குழந்தையில்லாதோர், முடவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் மற்றுமுள்ள வியாதிக்காரர் அனைவரும் இத்தகைய அறச்சாலைகளுக்குச் சென்று தேவையான அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொள்ள முடிந்ததையும் கைதேர்ந்த மருத்துவர்களைக்கொண்டு நோயாளிகளைப் பரிசோதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததையும் பா-ஹியன் வியப்புடன் விபரித்துள்ளார். தேவையான உதவிகளைப் பெற்று ஆறுதலும் சுகமும் அடைந்தோர் தாமாகவே அறச்சாலைகளைவிட்டுச் சென்றுவிடுவதையும் பா-ஹியன் குறிப்பிட்டுள்ளார்.

இற்றைக்கு ஆயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே பொதுமக்களுக்கு இலவச மருத்துவமனைகளை அமைத்துக் கொடுப்பதில் இந்தியாவின் மன்னர்கள் மட்டுமன்றி வசதிபடைத்தோரும் அக்கறை காட்டி வந்துள்ளனர் என்பதற்கு சீனத்தவரான பா-ஹியனின் அவதானிப்புக்கள் தக்க சான்றாக உள்ளன.

பா-ஹியன் இந்தியா வந்திருந்த காலப்பகுதியில் தமிழகத்தில் ஏழைகளுக்கும் நோயாளருக்கும் உணவும் மருந்தும் கொடுத்து ஆதரிக்கும் அறச்சாலைகள் பௌத்தர்களால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது பற்றிய விபரங்களை மணிமேகலை வாயிலாக அறிந்துகொள்ளமுடிகின்றது.

பௌத்த மதநூல்கள் ஆக்கப்பெற்ற பாளி மொழியில் நோயாளரைக் குறிக்கும் 'ஆதுர' என்னும் சொல் தமிழகத்திலும் நோயாளரைக் குறிக்கப் பயன்பட்டது. நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் நிலையங்கள் 'ஆதுரசாலைகள்' என்று அறியப்பட்டன.

தமிழகத்தில் பௌத்தமும் சமணமும் கோலோச்சிய களப்பிரர் ஆட்சிக்காலத்தை அடுத்து வந்த பல்லவர் ஆட்சிக்காலம் பௌத்த, சமணமதங்களின் வீழ்ச்சியையும் சைவ, வைணவ மதங்களின் எழுச்சியையும் கண்டது. கி.பி. 550க்கும் கி.பி. 800க்கும் இடைப்பட்ட காலம் இது என்பது வரலாற்று ஆய்வாளார்களின் கருத்து. அப்பர், சம்பந்தர் போன்ற சைவநாயன்மாரினதும் திருமங்கை ஆழ்வார் போன்ற வைணவ ஆழ்வார்களினதும் தீவிரமுயற்சிகளின் பலனாக சைவம் மறுமலர்ச்சி பெற்றது. பௌத்தமும் சமணமும் நலிவுற்றன. எனினும் பௌத்த சமண மதங்கள் வலியுறுத்திவந்த கொல்லாமை, புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை, பரத்தையரை நாடாமை போன்ற ஒழுக்க நெறிகள் சைவர்கள் மத்தியிலும் வேரூன்றி விட்டன.

பௌத்தர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டது போன்ற அன்னதான மடங்களும் நோய் தீர்க்கும் மருத்துவ நிலையங்களும் சைவம், வைணவம் சார்ந்த மன்னர்களாலும் பெருமக்களாலும் தொடர்ந்து பேணப்பட்டன. இதற்கான ஆதாரங்களைப் பல்லவர் காலத்துச் சாசனங்களில் மட்டுமன்றி திருநாவுக்கரசரின் தேவாரங்களிலும் ஆழ்வார் பாசுரங்களிலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

நாவுக்கரசர், சம்பந்தர் வாழ்ந்த காலப்பகுதியில் இந்தியாவுக்கு வருகைதந்தவர் சீனதேசத்துப் பௌத்தகுருவான யுவான் சுவாங் (HIUEN TSANG). வடக்கே ஹர்ஷவர்த்தனனும்(629-645 C.E)தெற்கே காஞ்சிபுரத்தில் திருநாவுக்கரசரால் சமணத்தில் இருந்து சைவத்துக்கு மதமாற்றம் செய்யப்பட்ட மகேந்திரவர்மனின் மகன் முதலாம் நரசிம்மவர்மனும் (மகாபலிபுரம் கட்டுவித்த மாமல்லன் இவன் தான்) ஆண்டு கொண்டிருந்த காலம் இது. நிகழ் சகாப்தம் 640 (640 C.E)ல் யுவான் சுவாங் காஞ்சிபுரத்துக்கு வந்திருந்தார். இவர் இந்தியாவில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட மருத்துவ வசதிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். நகரங்களையும் ஊர்களையும் ஊடறுத்துச் செல்லும் பெருந்தெருக்கள் அனைத்திலும் தாம் அறச்சாலைகளைக் கண்டதாகவும் அச்சாலைகளில் பிரயாணம் செய்து வருவோர்க்கும் ஏழைகளுக்கும் உணவும் பானமும் வழங்கப்பட்டதோடு மருத்துவர்கள் அவர்களைப் பரிசோதித்துத் தேவையான மருந்துகளையும் கொடுத்ததாக யுவான் சுவாங் எழுதிவைத்துள்ளார். இத்தகைய அறச்சாலைகள் புண்ணியசாலைகள், பன்சாலைகள், தர்மசாலைகள், விகாரைகள், மடங்கள் என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்பெற்றன. இப்பெயர்களை நோக்குமிடத்து இவற்றுட்பல பௌத்தர்களால் நடத்தப்பெற்றிருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது.

நோயாளி ஒருவருக்குச் சிகிச்சை அளிக்கப்படுமுன்னர் அந்நோயாளி இரண்டு கிழமைகளுக்கு விரதம் அனுட்டிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவதாகவும் இதன் பின்னரேயே அவருக்குச் சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் எழுதிவைத்துள்ள யுவான் சுவாங் நோயாளி விரதம் அனுட்டிக்கும் அந்த இருகிழமைக்குள் எந்தவித மருந்தும் இன்றி நோய் தானாகவே மாறிவிடுவதும் உண்டு என்பதையும் குறிப்பிடத் தவறவில்லை. அக்காலப்பகுதியில் பெரும்பாலான நோய்கள் தவறான உணவுப் பழக்க வழக்கங்களால் தோற்றுவிக்கப்படுகின்றன என்ற உண்மையை இந்திய மருத்துவர்கள் அறிந்து வைத்திருந்தனர் என்பதையே இது காட்டுகின்றது.

தமிழகத்தில் பல்லவர் ஆட்சி நடைபற்று வந்த காலப்பகுதியில் பிராம்மண வகுப்பினர் சமுதாயத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டனர். மன்னர்களின் ஆலோசகர்களாகவும் விளங்கினர். சமஸ்கிருதம் அரசகரும மொழியாகவும் போதனாமொழியாகவும் அங்கீகாரம் பெற்றது. பல்லவரின் தலை நகரமாகத் திகழ்ந்த காஞ்சிபுரத்தில் பல் கலைக்கழகமும் மருத்துவக்கல்லூரிகளும் இருந்தன.

தொடர்தல் 14ம் பக்கம்

WALK-IN CLINIC
அனைத்துக் குடும்ப வைத்தியத் தேவைகளையும் தமிழில் உரையாடி
பூர்த்திசெய்துகொள்ள நீண்டகால அனுபவமுடைய குடும்ப வைத்தியர்
416.289.1212
Mon - Fri: 10am - 8pm
Sat - Sun: 10am - 3pm
OPEN 7 DAYS
no appointment required
MedCheck Clinic
1200 Markham Road, Unit 115
Toronto, ON M1H 3C3
(at Markham & Ellesmere)

போதை மருந்து - ஃபென்ரனில் / Fentanyl

- கந்தையா செந்தில்நாதன் -

உலகின் பல பாகங்களில் பலவிதமான போதை மருந்துகள் பாவனையில் உள்ளன. ஒவ்வொரு நாடும் போதை மருந்துப் பாவனையைக் கட்டுபாட்டில் கொண்டு வந்து முற்றாக அறவே பாவனையை ஒழித்துவிட முயன்ற வண்ணம் செயற்படுகின்றது. எனினும் புதுப்புதுப் போதை மருந்துகள் பாவனையாளர்களை வந்தடைந்த வண்ணம் இருக்கின்றன. இவற்றுள் வைத்தியர்களால் ஒருவரது தாழாத வேதனைகளைக் குறைப்பதற்குப் பயன்படும் பல மருந்துகளும் உண்டு. இம்மருந்துகள் வைத்தியர்களால் மிகுந்த கட்டுப்பாட்டுடன் நிர்ணயிக்கப்பட்டு மருந்தாளர்களால் மிகுந்த எச்சரிக்கையுடன் விநியோகிக்கப் பட்டாலும் ஏதோ வகையில் அத்தகைய மருந்துகள் போதைப் பொருள் பாவனையாளர்களிடமும் சிக்கி விடுகின்றன.

இக்கட்டுரையில் மிகவும் சக்தி வாய்ந்த ஃபென்ரனில் என்று கூறப்படும் மருந்தை கவனிப்போம் இம் மருந்து வைத்தியர்களினால் மிகுந்த வேதனைகளுக்கு வலி நிவாரண மருந்தாகப் பரிந்துரைக்கப்படுகின்றது. மருந்தினை பூரணமான பெயர் 'பென்ரனில் சிற்றேற்' ஆகும். இது உணவு மருந்துகளின் கட்டுப்பாட்டு அட்டவணையில் கட்டுப்பத்தப்பட்ட மருந்துகளின் அட்டவணையில் 2ம் அட்டவணையில் அடங்குகின்றது. இம் மருந்திற்கு வேறு மருத்துவப் பெயர்களும் உண்டு. அக்ரிக், டியுறாஜீசிக், சப்லிமேஸ் என்பன அப்பெயர்களாகும்.

மிகுந்த வேதனை, மனோ எழுச்சிகள் என்பனவற்றைக் கட்டுப்படுத்தவும், புற்று நோயின் பொழுது அல்லது சத்திர சிகிச்சையின் பின்பு ஏற்படும் வேதனைகளைக் குறைப்பதற்கும் இது பயன்படுகிறது. அநேகமாக ஊசி மூலம் ஏற்றப்படும் இம் மருந்து வாயினால் உமிழப்படும் மருந்தாகவோ அல்லது தோலின் மீது ஒட்டப் படும் பட்டியாகவோ வைத்தியர்களினால் பரிந்துரைக்கப்படுகின்றது.

தவறான பாவனை:

பதினெட்டு வயது நிரம்பிய சிறார்களால் இம்மருந்தானது தகரத்தாள்களால் (Tin-foil) சுற்றப்பட்டு புகைக்கப்படுகின்றது. தோலின் மீது ஒட்டப்படும் பட்டிகள் கழிவுப்பொருள் வாளிகளில் வீசப்படும் பொழுது போதைப் பொருளிற்கு அடிமையானவர்கள் அவற்றைத் தேடி எடுத்து அவற்றைச் சுரண்டி எடுக்கக் கூடிய மருந்துகளை தமது முரசுகளில் பூசி விடுவார்கள் சிறிது சிறிதாக அம்மருந்து உடலில் உறிஞ்சப்பட்டுப்போதையைக் கொடுக்கின்றது. உடனடியாக உச்சக்கட்டப் போதையை வேண்டி சிலர் அதனை அப்படியே உட்கொண்டு விடுகிறார்கள்.

தெரு மருந்துகளும் அதில் உள்ள அளவுப் பிரமாணமும்:

தெரு மருந்துகள் தரநிர்ணயமற்ற மருந்துகளைத் தயாரிக்கும் அரச அனுமதியற்ற தொழிற்கூடங்களில் தயாரிக்கப்படுகின்றன. ஃபென்ரனில் மருந்தின் அளவு வில்லைக்கு வில்லை வேறுபடுகின்றது. மற்றும் தயார் செய்யப்படும் ஒவ்வொரு கட்டத்திலும் பிரமாண அளவுகள் மிகுந்து வேறுபடுகின்றது. தெருவில் வாங்கப்படும் மருந்தில் எவ்வளவு, என்னென்ன இருக்கும் என்று கூறமுடியாது.

மருந்தின் தெருப் பெயர்கள்:

Apache, China girl, China white, Friend, Dance Fever, Goodfella, Jackpot, Murder 8, TNT, Tango, Cash

அண்மையில் ஏற்பட்டிருக்கும் அதி கூடிய போதையும் போதை மரணங்களும் இம்மருந்தானது வேறு போதை மருந்துகளுடன் கலக்கப்பட்டதாலும், ஹெரோயின் என்ற மருந்துக்குப் பதிலாகப் பாவிக்கப்பட்டதாலும் ஏற்பட்டது. ஏனெனில் பென்ரனில் மருந்து மோர்பீன் என்ற மருந்தை விட 100 மடங்கு பலமானது. மோர்பீன் மருந்து வைத்தியசாலைகளில் நோய் கொல்லி மருந்தாக வேதனையைக் குறைப்பதற்குப் பயன்படுகிறது.

இத்தகைய மருந்து உடலில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்பதைப் பார்ப்போம்.

இம்மருந்தின் வலு உடனடியாகவே உடலில் மருந்தின் அளவுப் பிரமாணத்தை கூட்டக் கூடியதும் அதேசமயம் மரணத்தையும் ஏற்படுத்த வல்லது. (இது உட் கொள்ளும் அளவையும் பொறுத்தது.)

மேலும் வாந்திக்குணம், தடுமாற்றம், மயக்கம், சகிப்புத்தன்மை, போதை, மலக்கட்டு பதட்டம் என்பனவற்றுடன் சுவாச மையத்தையும் தாக்கி சுவாசத் தாழ்வை ஏற்படுத்தி அத்துடன் சுவாசத்தை முற்றாக நிறுத்தவும் வல்லது. ஏற்படும் சுவாசத் தாழ்வு உட்கொள்ளும் மருந்தின் அளவைப் பொறுத்தது. மூச்சுத்திணறல், உடல் மரத்துப்போதல், இருதயத்துடிப்புக்குறைதல், சுவாசத்தாழ்வு என்பன மருத்தின் அளவைப்பொறுத்து ஏற்படும் குணங்குறி களாகும். பார்வை மங்குதல், கூடிய இரத்த அழுத்தம், தலைசுற்று, வாந்தி, அத்துடன் சுவாசத்தசைகளில் தசைத்துடிப்பு என்பனவும் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

ஆபத்து நிலையில் செய்ய வேண்டியது:

911 ஐ அழைக்கவும்.

தற்சமயம் ஒன்ராறியோ மாகாணத்தில் சுகாதார அமைச்சினால் பல மருந்தகங்கள் இதற்குரிய மாற்று மருந்தை (Antidote) போதை மருந்து பாவனையாளர்களுக்கு விநியோகம் செய்வதற்கு ஏற்பாடாகியுள்ளது.

முறிமருந்து (Antidote): பென்ரலில் என்ற இந்த மருந்தை அதிகளவு உட்கொண்டுவிட்டால் சுவாசமையம் தாக்கப்பட்டு சுவாசம் நின்றுவிடுவதால் இறப்பு நிகழ்ந்துவிடுகிறது. இத்தகைய இறப்புக்கள் அருகில் உள்ளவர்களால் தடுக்கக் கூடியவையாகும். இம்முறிமருந்தின் பெயர் நலொக்சோன் கைற்றோ குளோரைட் (Naloxone Hydrochloride) ஆகும்.

மருந்தாளர்கள் இதனை விநியோகிக்க ஏற்பாடாகியுள்ளது. அதே சமயம் 911ஐ அழைத்து அவசர மருத்துவப் பிரிவினர் வந்ததும் இம்மருந்தை ஊசி மூலம் ஏற்றுவார்கள். சுவாசம் நின்று விடுகிற தறுவாயில் உடனெயே உயிர்காப்பாற்றப்பட வேண்டும் என்ற ரீதியில் ஒன்ராறியோ சுகாதார அமைச்சு பல மருந்தங்களைத் தெரிவு செய்து அவர்கள் மூலமும் உடனடியாக இம்மருந்து கிடைப்பதற்கு வழிவகை செய்துள்ளது.

உசாத்துணை:

- *National Institute on Drug Abuse (Website)*
- *Thestar.com*
- *ctvnews.ca*
- *Toronto Public Health – Naloxone information*

Certified First Aid & CPR Course Instructor

EMS - Toronto

Dr. Kandiah Senthilnathan (SLMC)

Ultra-sonographer (CSDMS)

(Home work help available for Students)

647-801-9252

kandiahsenthilnathan@gmail.com

ஆயுள்வேத மருத்துவ...

13ம் பக்கத் தொடர்ச்சி...

கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர் என்று புகழப்பெற்ற பல்லவரின் தலைநகரிலும் ஏனைய இடங்களிலும் இருந்த கடிகைகளில் (கல்லூரிகளில்) வடமொழியே போதனாமொழியாக விளங்கியது. அந்தணரும் அரசகுலத்தினருமே அரசு ஆதரவு பெற்ற கல்லூரிகளில் கல்வி பெறும் வாய்ப்பினைப் பெற்றனர். ஆயுள்வேத மருத்துவக்கலை வடமொழிப்புலமை பெற்ற அந்தணருக்கே உரியதாகும் நிலை ஏற்பட்டது. மருத்துவசாலைகளின் பொறுப்பாளராகவும், தலைமை மருத்துவர்களாகவும் திகழும் வாய்ப்பினை வேதம் கற்ற பட்டர்களே பெற்றனர்.

அந்தணருக்கென உருவாக்கப்பெற்ற பிரமதேயச் சிற்றூர்களும் கோவில்களுக்கென ஒதுக்கப்பெற்ற தேவதானச் சிற்றூர்களுமே மருந்துச் செடிகளைப் பயிரிடும் உரிமை பெற்றிருந்தன. ஏனைய சிற்றூர்கள் இவற்றைப் பயிரிடுவதற்கு 'நடுவரி' செலுத்தி அரசினரிடம் அனுமதி பெறவேண்டியிருந்தது. மருந்துச் செடிகளைப் பயிரிடவும் விற்பதற்குமான அநுமதி பெறச் செலுத்தப்பட்ட தொகை 'காணம்' எனப்பட்டது. இவ்வாறு 'காணம்' செலுத்தப்படவேண்டியிருந்த மருந்துச் செடிகளுள் இருவேரி, செங்கொடிவேரி, கரிசிலாங்கண்ணி,குவளை, செங்கழுநீர், கல்லால், மருக்கொழுந்து என்பன அடங்கியிருந்தன.

பல்லவர் காலத்தில் நடுவரி செலுத்த வேண்டியிருந்த மருந்துச் செடிகளுள் மருக்கொழுந்தும் ஒன்று என்பதை அவதானித்தோம். சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிராததும் சீனதேசத்துக்கு உரியதுமான இம்மூலிகை பல்லவர் ஆட்சிக்காலத்தில் சீனாவில் இருந்து தமிழகத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டு இங்கு பயிரிடப்பெற்றது எனக் கருதலாம். மருக்கொழுந்து மட்டுமல்லாது நேர்வாளம். சித்தரத்தை, சீனவேர் ஆகிய வேறுபல மூலிகைகளும் பாதரசம், சீனக்காரம், நவச்சாரம், வெடியுப்பு போன்ற இரசாயனப் பொருள்களும் சீனா மூலமாக தமிழக மருத்துவர்களுக்கு அறிமுகமாகியிருத்தல் கூடும்.

Legge, James (Translator), A record of Buddhistic kingdoms; being an account by the Chinese monk Fâ-Hien of his travels in India and Ceylon, A.D. 399-414, in search of the Buddhist books of discipline. Oxford 1886

Sivakadadcham@thaiveedu.com

வீடு, வியாபாரம் காணி வாங்கவும் விற்கவும் மற்றும் ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் அழையுங்கள்

Call Us For All of Your Real Estate Needs...
www.sivamhomes.com

Siva Velupillai
Real Estate Sales Rep.
Call : (416) 706-2323
pvsivam@gmail.com

Arthi Velupillai
Real Estate Sales Rep.
Cell: (416) 807-6213
arthi.velupillai@gmail.com

HomeLife/Future Realty Inc.
Brokerage Independently Owned and Operated

205-7 Eastvale Driv, Markham, Ontario L3S 4N8
Bus: (905) 201-9977 | Fax: (905) 201-9229

TRUE HAIR REPLACEMENT
& COSMETICS CENTRE INC.

Spring SALE

For New Clients Only

Look 7 to 10 years younger, get free hair (One Free Hair System) for joining our one year program.

Don't miss out on this great opportunity for looking younger and boosting your self confidence.

Call now and make a appointment for your free consultation

416-492-7873

7 முதல் 10 வயது வரை இளமையாகத் தோன்றுவதற்கு ஒரு அரிய சந்தர்ப்பம்

Visit our website
www.truehair.ca

TRUE HAIR REPLACEMENT
& COSMETICS CENTRE INC.

Tel: **416-492-7873**
Fax: 416-492-8664

Be a part of the fastest growing Century 21 Brokerage...

Century 21 Innovative Realty Inc.
INDEPENDENTLY OWNED AND OPERATED Brokerage

Serve more... Earn more... and Keep more...

Many reasons to join Century 21 Innovative Realty?

- Experienced and dedicated Broker of Record
- Three Friendly Managers with many years of experience
- Grand Centurion Office, 2 years in a row
- Top 10 Office in Canada / Chairman's Circle Office
- Two Locations (Scarborough and Mississauga)
- Third one coming soon to Ajax
- Over 200+ Agents and growing...
- Supportive Staff & Multi cultural Environment
- One on One and group training (3 times weekly)
- VIP access to pre-construction condos & new homes
- Land Development & custom home construction advice
- Investment Opportunities to agents
- and More and More...

Please call to arrange an appointment at
416 298 8383
Owned and Managed by
Sameem Mohamed, BASc, P. Eng
Broker of Record / Owner

2250 Markham Road, Unit 3,
Toronto ON M1B 2W4
(Markham & Finch, behind McDonalds)
Tel: 416 298 8383 Fax: 416 298 8303

350 Burnhamthorpe Dr. W. Unit 127
Mississauga, ON L5B 3J1
Tel: 905 270 8100

Coming soon to
Ajax

TOP 10 Brokerage in Canada*

*within Century 21 in Canada

Ravi Kana Broker

COMMITTED TO EXCELLENCE

Call me now to get your HOME SOLD 416-725-7284

Century 21 Percy fulton Ltd. Borkerage

MASTERS HALL OF FAME

Centurion (Lifetime) Winner 1999-2015

2911 Kennedy Rd. Toronto, ON M1V 1S8 Office 416.298.8200

Ravi Kana
Broker

Cell 416.725.7284
ravikana@trebnet.com
www.ravikana.com

MORTGAGE SOLUTIONS FOR EVERYONE!

2.69% FOR 5 YEAR FIXED*
2.30% FOR 5 YEAR VARIABLE*
*OAC

- Purchase
- Refinance
- Renewals / Switches
- 1st, 2nd, 3rd Mortgage
- Equity Lines of Credit
- Bad Credit / No Credit
- Bankruptcy/ Consumer Proposals
- Power of Sale
- Tax & Mortgage Arrears

MORTGAGE ALLIANCE

Ram Krish
Mortgage Agent - Mortgage Alliance
Lic # M08002015

Call Now : 416-427-5555

10 Milner Business Court, Suite 401 Scarborough, ON M1B 3C6

Visit us at www.lenderhub.ca

வளர்ப்புப் பிராணிகளும் நோய்களும்

- அ. ராஜ்குமார் -

காதுத் தொற்று (Ear Infection):

பொதுவாக வளர்ப்பு நாய்களின் காது வாரம் ஒருமுறை தூய்மை செய்யப்படவேண்டும். இது பராமரிப்பு என்ற விடயத்துக்குள் அடங்கும். இதேபோன்று மாதம் ஒருமுறை நகம் வெட்டுதல், இருமாதத்திற்கு ஒருமுறை நன்றாக நீராட்டி அளவுக்கதிகமாக வளர்ந்திருக்கும் முடியைக் கத்தரித்தல் போன்றன இன்றிய மையாதது.

இவ்வாறான முறையான பராமரிப்பு மூலம் வளர்ப்பு நாய்களுக்குப் பல நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியும்.

நமது காதுடன் ஒப்பிடும்போது நாயின் காது மிக நீண்ட வெளிப்புற Cannel துவரம் கொண்டு காணப்படுகின்றது. இந்த Cannel wax சாதாரணமாக மஞ்சள் நிறமுடையதாகக் காணப்படும். காதைச்சுற்றியுள்ள சருமம் அல்லது காது மடல் சிவந்து காணப்படின் அல்லது துர்நாற்றம் காதுகளில் இருந்து வெளிவரின் ஒரு பஞ்சுத் துண்டு கொண்டு காதுத் துவாரத்தைச் சுத்தம் செய்யவேண்டும். இவ்வாறு சுத்தம் செய்யும்போது Dark brown wax கூடிய அளவில் காணப்படின் அல்லது சிதல் (Pus) காணப்படின் காதில் Infection உண்டாகி இருப்பது உறுதிப்படும்.

(சாதாரணமாக காதைத் தூய்மை செய்வ தற்கு Ear Cleaning Solution Pet store ல் வாங்கிப்பாவிக்கமுடியும். websites ல் வாசித்து Viniger or Vegetable oil or Salt Water / Hydrogen Proxide) போன்றவற்றை வளர்ப்புப் பிராணிகளின் காதினுள் விடுவதைத் தவிர்க்கவேண்டும்).

வளர்ப்பு நாயின் காதுகள் Infection ஆவது, 3 முக்கிய காரணங்களால் ஏற்படுகிறது.

- முறையான வராவாரம் சுத்தம் செய்து பராமரிக்காமை.
- நீராட்டும்போது நீர் உட்புகுதல் அல்லது Food or Environment Allergyஆக இருக்க முடியும்.
- Allergy Reaction - Allergy மனிதரின் கண்கள் கடிக்கத் தொடங்குவது போல் வளர்ப்பு மிருகங்களின் காதுகள் கடிக்கத் தொடங்குவதில் ஆரம்பிக்கின்றது. இது Ear Infection ஆக முடிவுறுகிறது.

De Worming:

வளர்ப்பு பிராணிகளிடம் காணப்படும் பூச்சி, புழு இனங்கள் மனிதரிடம் தொற்று ஏற்படுத்தக் கூடியவை. இதனால் குறைந்தது ஆண்டுக்கு இரண்டு தடவை De Worm பூச்சி மருந்து நமது செல்லப்பிராணிகளிற்கு வழங்கப்பட வேண்டும்.

பொதுவாகக் காணப்படும் பூச்சி புழு இனங்கள்:

- Tape Worm (நாடாப்புழு)
- Round Worm (ஊருண்டைப்புழு)

- Hook Worm (கொழுக்கிப்புழு)
- Whip worm
- Pin Worm
- Giardia

சருமத்தில் காணப்படும் பூச்சிவகைகள்:

- Ticks.
- Fleas (தெள்ளு)
- Mange / Scabies
- Lice (பேன்)

மேற்குறிப்பிட்ட வெவ்வேறு வகையான ஒட்டுண்ணி பூச்சிகள் புழுக்கள் யாவும் மனிதர்களாகிய எமக்கும் தீங்கு பயக்கவல்லவை என்பதை உணர்ந்து, Spring And Fall time வருடம் இருமுறை இவற்றுக்கான கட்டுப்பாட்டு மருந்து செல்லப்பிராணிகளிற்கு வழங்குவது அவசியமாகும்.

பூச்சி, புழு தொற்றின் அறிகுறிகள்:

- Diarrhea (May be bloody)
- நிறைகுறைதல்
- சாப்பாட்டில் விருப்பம் இன்மை,
- வரண்ட (Dry ஆன) சருமம்,
- மலவாசலை நக்குதல் அல்லது நிலத்தில் உரசுதல்
- குறித்த சில பகுதிகளில் கூடுதல் முடி உதிர்தல்.

Behaviour - பிழையான பழக்கவழக்கம்:

வளர்ப்புப் பிராணிகளின் பழக்கவழக்கம் நாம் எவ்வாறு கற்றுக்கொடுக்கின்றோம் என்பதிலேயே தங்கியுள்ளது. சரியான ஒரு பயிற்சியாளர் (Dog trainer)ன் உதவியை 3 தொடக்கம் 6 மாதங்களுக்கிடையே நாடி, அவர்களின் வழிகாட்டலில் உங்கள் வளர்ப்புப் பிராணியை பயிற்றுவித்தல் வேண்டும். இவ்வாறான பயிற்சியை உங்கள் செல்லப்பிராணிகள் பெறுவதுடன் எல்லாம் முடிந்து விடுவதில்லை. நாமும் அவர்கள் சொல்லுவதை உள்வாங்கிப் பின்பற்றுதல் வேண்டும். அடிப்படையான பயிற்சியை பொதுவாக அருகில் உள்ள Pets martல் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு training வழங்கப்படாதவிடத்து, நமது நாய் ஒரு சமுதாயத்துடன் ஒத்துவாழ முடியாத அங்கத்தவராக ஒதுக்கப்பட நேரிடுகின்றது இந்நிலைப்பாட்டிற்கான முழுப்பொறுப்பும் நம்மையே சாரும்

Vomiting & Dierrhea:

வளர்ப்பு நாய்கள் வாந்தி (Vomit) எடுப்பது மிகவும் பாரதூரமானதாகக் கருதப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட தடவை வாந்தி எடுக்கும் போது உடல் நீர், அயன்ஸ் என்பவற்றை இழக்கின்றது. இத்தகைய சந்தர்ப்பத்தில் உடனடியாக மிருகவைத்தியரை நாட வேண்டும்.

வளர்ப்புப் பிராணிகளின் தோல் நோய்கள்:
பல்வேறு காரணங்களால் தோல் நோய், மயிர் கொட்டுதல், கட்டிகள் வளர்தல், தோற் புண் உண்டாதல், தோற்கடி போன்ற குணம் குறிகளுடன் வெளிப்படுகின்றது. தோல் நோய்கள் சில, முதல்நிலைக் காரணங்களாலும் வேறு சில சந்தர்ப்பங்களில் வேறு சில நோயின் அறிகுறியாகவும் வெளிப்படுகின்றது.

தோல் நோயைப் பொறுத்தவரை அறிகுறிகள் தென்பட்ட உடனேயே கவனம் செலுத்த வேண்டும். கவனியாது விடுதல் அல்லது கைவைத்தியம் செய்து நாட்களை வீணடித்தல் என்பன மிகவும் பாரதூரமான நிலைக்கு இட்டுச்சென்றுவிடும்.

தோல் நோய்க்கான பொதுவான காரணங்கள்:

- உணவு ஒவ்வாமை
- சூழலில் காணப்படும் ஒவ்வாமை
- பக்ரீரியா தொற்று
- Hormonal Imbalance
- Ring Worm எனப்படும் fungus

இவ்வாறு இந்தப் பட்டியல் நீண்டு செல்கின்றது. இந்தத்தோல் வியாதிகள் பல மனிதருக்கும் தொற்றவல்லது என்பதால் உடன் மிருகவைத்தியரை நாடுவது
நல்லது.

rajkumar.a@thaiveedu.com

Forestbrook Pet Hospital
Dr Raj DVM
905-831-1118
fax: 905-831-4119
3-1105 Finch Avenue
Pickering, Ontario L1V 1J7
www.forestbrookpethospital.com
info@forestbrookpethospital.com



உடல் நீருக்கு அழுகின்றது

- சிவாஜினி பாலராஜன் -

அளைகையில் சில்லென்ற சிலிர்ப்பும்
குளிர்மையும் தந்து
பருகையில் களைப்பினைப் போக்கி
நிறைவுதந்து
நிர்மலமாய் இருக்கும் நீருமுயிர் -
குடிக்குமென மனதில் கொண்டு
குணாதிசயம் பகுத்துட்கொள்வாய் மனிதா!

நீரினால் ஏற்படும் நோய்கள் இவைதான் என நாங்கள் அனைவரும் நினைத்துக் கொண்டிருக்கும் நோய்களின் பட்டியல் மிக மிகப் பெரியது. நீர் பற்றாக் குறையினால் பல நோய்கள் உண்டாவது மாத்திரமன்றி நீர் மாசாக்கத்தினாலும் நீர் மாசுபடுதல் அல்லது கறைபடுதலாலும் வெவ்வேறு நோய்களை நாம் எதிர்கொள்ள வேண்டி இருக்கும். முதலில் நீர் மாசாக்கம் (water pollution) என்றால் என்ன மாசுபடுதல் (water contamination) என்றால் என்ன?

மாசாக்கம் என்பது வார்த்தைக்கேற்ப மாசுபடுத்தப் படுவது. அதாவது மனிதர்களால் அல்லது மனிதர்களின் வெவ்வேறு செய்கைகளினால் நீர் மாசுபடுத்தப்படுவது. மாசாதல் என்பது இயற்கைக் காரணங்களினால் நீரானது மாசுபடுவது. இவ்வாறு மாசுபட்ட நீரினை நாம் அருந்துவதால் எவ்வாறான நோய்கள் ஏற்படுகின்றன என்பதுதான் மிகவும் பெரிய கேள்வியாக இருக்கின்றது.

நீரினால் ஏற்படும் அல்லது நீர் சம்பந்தப்பட்ட நோய்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்படும். Water Dispersed Diseases Borne நீரினால் பரவும் நோய்கள், Water Based Diseases நீரை அடிப்படையாகக் கொண்ட நோய்கள், Water related Diseases நீருடன் தொடர்புடைய நோய்கள், Water Washed Diseases நீர் பற்றாக்குறையினால் ஏற்படும் நோய்கள்.

நீர் சம்பந்தப்பட்ட நோய்கள் பல இருந்த போதிலும் முக்கியமாக நீர் பற்றாக்குறையின் விளைவுகளை மட்டும் இங்கு கருத்திற் கொண்டமைக்கு காரணம் எங்களுக்கு இங்கு ஓரளவு சுகாதாரமான நீர் கிடைக்கின்றது. இருந்த போதிலும் நீரினை ஒழுங்காக அருந்தாமலும் வாந்தி வயிற்றோட்டம் வரும் நேரங்களில் உடலிலிருந்து இழக்கப்படும் நீரினை ஈடுசெய்யும் அளவிற்கு நீர் அருந்தாமல் இருப்பதால் வரும் நீர் பற்றாக்குறையினையே முழுமையாக கருத்திற் கொள்ள வேண்டும். அத்துடன் தற்போது பலரும் உடல் எடைக் குறைப்பு, ஆரோக்கியம் என்பதற்காக அதிக தூரம் நடப்பது உடற்பயிற்சி நிலையங்களுக்குச் சென்று அதிக உடற் பயிற்சி செய்வது போன்ற பல முயற்சிகளைச் செய்த வண்ணமே இருக்கின்றார்கள். இதன் காரணமாக வியர்ப்பதாலும் சுவாசத்தின் வேகம் கூடுவதாலும் உடலிலிருந்து நீர் இழக்கப் படுகின்றது.

உடலில் கிட்டத்தட்ட 60 – 70% நீர். குருதியின் பெரும் பாகம், தசைநார்கள், இழையங்கள், கலங்கள், மூளை இவ்வாறு எல்லா இடங்களிலும் நீர் ஒரு முக்கியமான அங்கத்தினை வகிக்கின்றது.

நீர் பற்றாக்குறையினால் ஏற்படும் நோய்கள்.

உடலில் ஏற்படும் நோய்களுக்கு நோய் வந்த பின் கட்டாயமாக மருத்துவம் செய்து அந்த நோயினைத் தீர்க்க வேண்டும். ஆனால் நோய் வராது தடுப்பது நோய்வந்தபின்னர் வைத்தியம் செய்வதனை விட மிகவும் முக்கியமானது. உடலுக்கு நீர் மிகவும் அத்தியாவசியமானது எனப் பலருக்கும் தெரிந்திருந்த போதிலும் ஆரோக்கியமாக வாழ நீர் ஒரு முக்கிய காரணியாக இருக்கின்றது என்பதனை சில சமயங்களில் நாம் மறந்து விடுகின்றோம். உடலில் ஏற்படும் நீர்பற்றாக்குறையானது உடலில் மூச்சிரைப்பு (asthma) உயர் இரத்த அழுத்தம் (hypertension) மூட்டு வாதம் (arthritis) குடற்புண் (ulcers) ஒவ்வாமை (allergies) போன்ற பல நோய்களுக்கு காரணியாக அமைகின்றது.

உடலின் ஒவ்வொரு தொழிற்பாடும் நீருடன் இணைக்கப்பட்டு நீரினால் கண்காணிக்கப் பட்டு வருகின்றது. Dehydration என அழைக்கப்படும் நீர்பற்றாக்குறை உடலில் பலவித மான பாதிப்புக்களை உருவாக்குகின்றது. மூளையானது தனது தொழிற்பாடுகளைச் சரிவரச் செய்வதற்கு நீர் மிகவும் முக்கிய மூலப் பொருளாகப் பார்க்கப்படுகின்றது. வாந்திபேதி அல்லது வேறு காரணங்களால் உடலில் நீர்ப்பற்றாக் குறை ஏற்படும் போது மூளையானது உடலின் சமநிலையினை பேணுவதற்குச் சிரமப் படுகின்றது. இதன் காரணத்தினால் தலைச் சுற்றல் மாத்திரமன்றி கிரகிப்புத் தன்மையிலும் குழப்பங்கள் ஏற்படுகின்றது. எமக்குள்ள 24 மணிநேரத்தில் பொதுவாக ஆறு மணி நேரமாவது நாம் நீரைத் துப்புரவாக உள்ளெடுப்பதில்லை. இது எமது நித்திரை கொள்ளும் நேரமாகும். இவ்வாறு ஆறுமணி நேரமும் நாம் நீரை உள்ளெடுக் காவிடினும், இந்த ஆறுமணி நேரத்திலும் கூட எமது உடலிலிருந்து நீர் சுவாசம் மூலம் இழக்கப்படுகின்றது.

உடலில் நீரினளவு குறையும் போது நரம்புகளின் தொழிற்பாடும் குறைகின்றது. சிலருக்கு எலும்புகள் நரம்புகளில் நோவு அல்லது வலி ஏற்படுவதுண்டு. இவர்கள் தங்களது வழமையான நீர் உள்ளெடுப்பை விட அதிகமாக உள்ளெடுத்து இதனைக் குறைத்துக் கொள்ளலாம். மூட்டுவலி உள்ளவர்களும் இதனைக் கருத்திற்கொள்ள வேண்டும். நீரிலுள்ள ஐதரேனியம் அயனின் (hydronium ions) உதவியுடன் எமது உடலிலுள்ள கலங்கள் ஒன்றிணைக்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி கலங்களுக்கிடையில் கனிமங்கள் பரிமாற்றம் நடைபெறுவதற்கும் நீர் உதவுகின்றது. நீர் பற்றாக்குறையானது எங்கள் உடலின் ஜீவதத்துவ பரிணாமம் எனப்படும் metabolism, உடலின் நோய் எதிர்ப்புத் தன்மை ஆகியவற்றினைப் பாதிக்கின்றது. புற்று நோய், இதயநோய், பக்கவாதம் போன்றவற்றினை வராது பாதுகாப்பதற்கு antioxidant வகை உணவுகளை உட்கொள்ள வேண்டும் என அனைவரும் கதைப்பதுண்டு. அதுமாத்திரமன்றி தேடி உண்பதும் உண்டு. போதியளவு நீர் உட்கொள்பவர்களுக்கு இந்த antioxidant இன் தேவை குறைக்கப்படுகின்றது. நீர்பற்றாக் குறையானது எங்கள் நுரையீரலிலும் நீர் பற்றாக்குறையினைத் தோற்றுவிப்பதால் அடிக்கடி வரண்ட இருமல், தொய்வு என அழைக்கப்படும் asthma வினையும் chronic bronchitis போன்றவற்றினையும் தோற்றுவிக்கும். மேலும் உடலில் நீர் குறையும் போது உடலிலுள்ள அமினோ அமிலங்களின் சம நிலை பாதிக்கப்படுவதால் மன அழுத்தம் போன்ற பிரச்சினைகள் உருவாகின்றன. நீர் பற்றாக்குறை இரத்த அழுத்தத்தினையும் பாதிக்கும். Dehydration என்னும் ஒரு சிறு சொல்லில் எத்தனை பிரச்சினைகள் உள்ளடங்கியுள்ளன. இது மூளையினைச் சுருக்கி விடுவது மாத்திரமன்றி பல பக்க விளைவுகளை உருவாக்கி விடுகின்றது. 90 மணித்தியாலம் தொடர்ந்து நன்றாக வியர்த்தால் கூட அது மூளையில் ஒரு வருட வயது முதிர்ச்சியினை ஏற்படுத்திவிடும் என ஆய்வுகள் கூறுகின்றன.

முதியோர்களில் நீர்பற்றாக்குறை ஏற்படுவது அதிகம். ஏனெனில் வயது முதிர்ந்து செல்லும் போது உடல் நீருக்காக அழுவது அல்லது நீர் தேவை என்பதனை வெளிக்காட்டுவது குறைவு. சொல்லப் போனால் தாகம் எடுப்பது குறைவு எனலாம். இதனால் முதியோர் நீர் அருந்த வேண்டும் என நினைப்பதில்லை. அத்துடன் நீர் அருந்தினால் அடிக்கடி கழிவறைக்குச் செல்லவேண்டும் என்னும் ஒரு காரணமும் அவர்களை அதிகம் நீர் அருந்த விடாது தடுத்துவிடும்.

அறிகுறிகள்:

துர்நாற்றத்துடனும் கூடுதலான மஞ்சள் நிறத்திலும் சிறுநீர் போனால் அதற்குக் காரணம் உள்ளெடுக்கப்பட்ட நீரினளவு போதாது. மேலும் தற்போது பலருக்கும் முதுகுவலி ஒரு பொதுவான நோயாகக் காணப்படுகின்றது. கீழ் முதுகு அல்லது இடுப்பு வலி, தலைவலி, மலச்சிக்கல் போன்றவை உடலில் நீர்பற்றாக்குறை இருப்பதற்கு அறிகுறியாகும்.

நீர்பற்றாக்குறை தெரிந்தவுடன் மூளை முதலில் தாகத்தினைத் தோற்றுவிக்கும். வியர்வை சிறுநீர் வெளியேற்றம் என்பன குறைக்கப்படும், அத்துடன் வாய் உலர்ந்து போகும் தோலின் விரிந்து மடியும் தன்மை குறைக்கப்படும். இவ்வாறான அறிகுறிகளைக் கண்டவுடன் எனது உடலில் நீர்பற்றாக்குறை ஏற்படுகின்றது என்பதனை நாம் புரிந்து கொண்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு குழந்தைக்கு நீர் பற்றாக்குறை எனின் அது அழும்போது கண்ணீர் வராது. வாய் உலர்ந்து போகும், மேலும் தலையில் உச்சிக் குழி மிகவும் உட்குழிந்து போதல், ஏழெட்டு மணிநேரங்களுக்கு சிறுநீர் கழியாமை என்பன ஏற்படும்.

sivagini.bala@thaiveedu.com

> ***உடலுக்கு நீர் மிகவும் அத்தியாவசியமானது எனப் பலருக்கும் தெரிந்திருந்தபோதிலும் ஆரோக்கியமாக வாழ நீர் ஒரு முக்கிய காரணியாக இருக்கின்றது என்பதனை சில சமயங்களில் நாம் மறந்துவிடுகின்றோம்.***

The Honda 2016/17 MODEL CLEAROUT

TIME IS ALMOST UP!

2016 CIVIC LX FROM MODEL RG1E3GEX
$70 @ 2.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS[D].
$0 DOWN PAYMENT/OAC $0 SECURITY DEPOSIT
PLUS GET A $750[S] LEASE & FINANCE BONUS ON ALL 2016 CIVIC MODELS

2016 HR-V LX MODEL RU5G3GEX
NEW LOWER PAYMENT FROM
$65 @ 3.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS[D].
$0 DOWN PAYMENT/OAC $0 SECURITY DEPOSIT
PLUS GET A $500[S] LEASE & FINANCE BONUS ON ALL 2016 CIVIC MODELS

2016 CR-V LX FROM MODEL RM3E5GSE
$72 @ 1.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS[D].
$0 DOWN PAYMENT/OAC $0 SECURITY DEPOSIT
PLUS GET A $1500[^] LEASE & FINANCE BONUS ON ALL 2016 CIVIC MODELS

2016 NORTH AMERICAN CAR OF THE YEAR

HONDA
Honda Indy TORONTO
JULY 15 - 17, 2016
EXHIBITION PLACE
HondaOntario.com
Ontario Honda Dealers

ONCE THEY'RE GONE, THEY'RE GONE!

LEASE PAYMENTS INCLUDE FREIGHT & PDI. EXCLUDES LICENCE AND HST.

HONDA

Shan Sarvananthan
Sales & Leasing Consultant
Cell 416-720-1184

HONDA
Formula Honda
Where You're Treated like Family.

2240 Markham Road Scarborough,
ON, M1B 2W4
Telephone: 416-754-4555
formulahonda.com

Rajah Tharmalingam
Sales & Leasing Consultant
Cell 647-833-4998

D Limited time lease offers available through Honda Financial Services Inc. (HFS), to qualified retail customers on approved credit. Weekly payment includes freight and PDI ($1,595), DHF tires & filters ($22), A/C charge ($100), and OMVIC fee ($10). Taxes, license, insurance and registration are extra. Representative weekly lease example: 2016 Civic LX Sedan MT (Model FC1E5GE) on a 60 month term with 260 weekly payments at 1.99% lease APR. Weekly payment is $70.85 with $0 down or equivalent trade-in and $240 total lease incentive included. Down payments, $0 security deposit and first weekly payment due at lease inception. Total lease obligation is $15,901.46. 120,000 kilometre allowance; charge of $0.12/km for excess kilometres. PPSA lien registration fee of $45.61 and lien registering agent's fee of $5.65, due at time of delivery are not included. For all offers: license, insurance, other taxes (including HST) and excess wear and tear are extra. Taxes payable on full amount of purchase price. Offers only valid for Ontario residents at Ontario Honda Dealers. Dealer may lease for less. Dealer order/trade may be necessary. Colour availability may vary by dealer. Vehicles and accessories are for illustration purposes only. Offers, prices and features subject to change without notice. See your Ontario Honda Dealer or visit HondaOntario.com for full details. ** Based on Association of International Automobile Manufacturers of Canada (AIAMC) data reflecting sales between 1997 and December 2015. ◊For more information, visit Kelley Blue Books KBB.com. Kelley Blue Book is a registered trademark of Kelley Blue Book Co., Inc. ^None of the features described are intended to replace the driver's responsibility to exercise due care while driving. Drivers should not use handheld devices or operate certain vehicle features unless it is safe and legal to do so. Some features have technological limitations. For additional feature information, limitations and restrictions, please visit www.honda.ca/disclaimers or refer to the vehicle's owner's manual. Bluetooth is a registered trademark of SIG Inc. Apple and Apple CarPlay are trademarks of Apple Inc. Android and Android Auto are trademarks of Google Inc.

Buying Or Selling

Residential, Commercial, Land & Investment Properties

For Sellers:

- Free Market Evaluation Available
- Competitive Commission Packages Available
- Will pay for Staging & Condition
- WIll pay the Professional Photographer
- Virtual Tour
- Color Brochure
- Will do open house until house get sold
- Will market your home with social medias

For Buyers:

- Will find the home in any area within your budget
- Get you the lowest mtg. rate
- 1 Year Home Warranty Available for Limited Time
- Preferred pricing on Furniture, Appliance & Electronics through "The Brick" up to 35% off

Home of the top producers!

SATHY SIVASUBRAMANIAM
Sales Representative
Dir: 416-624-5044
Email: realtorsathy@gmail.com
Web: realtorsathy.com

RE/MAX
Remax Realtron Realty Inc., Brokerage
Bus: 416 289-3333

Diwali Specials

DIRECT FROM MANUFACTURER

More than 20 years mattress manufacturing experience

Single Bed

Single Mattress

Deluxe Premium

3 Pcs Leather So Setfa

Back Care (High Den Foam)

Orthopedic

மெத்தை உற்பத்தி துறையில் 20 வருடங்களுக்கு மேல்அனுபவமுள்ள
உங்களுக்கு அறிமுகமான உதயனின் நிர்வாகத்தில்

Relaxwell
manufacturerofqualitymattresses

Tel: 416-759-2600

1600 Midland Ave.,#2,
Scarborough, ON M1P 3C2

support@relaxwell.ca relaxwell.ca

SIVA & JOY REAL ESTATE TEAM

• Knowledge • Experience • Success

Marydel Homes

Near the shores of Lake Simcoe

Detached home Starting Price $ 429,900

Don't Miss !!!

Phase 5 and 6 released

Price: $429,900

Price: $449,900

Price: $479,900

Price: $469,900

Price: $499,900

Price: $489,900

Price: $489,900

Price: $489,900

Price: $509,900

Price $529,900

Price: $509,900

Price: $509,900

Price: $529,900

Price: $539,900

Price $ 569,900

Price: $ 589,900

There's also a NEW MODEL name : PRIMEROSE 40 Foot Lot, Price $569,900, Sq Ft 2981

Phase 6 limited time promotion $40,000 off posted price and free Air Conditioning.

Top Real Estate Professional Team

TOP TEAM # 3 IN HOMELIFE CANADA 2014

Siva & Joy Real Estate Team

416-545-7482

Siva Shanmuganathan
Broker
416-545-7482

SIVA & JOY REAL ESTATE TEAM 416 267 9700

Joy Selvanayagam
Broker
416-358-6928

HomeLife/Future Realty Inc., Brokerage*
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8 Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated

நீர் சூடேற்றிகள் பற்றி...

- செல்வி அதினி -

வீட்டின் தண்ணீர் சூடேற்றி பழுதாகிய பின்னால் தான் அதைப் பற்றிய யோசனை தோற்றுகின்றது. எமது தண்ணீர் எவ்வாறு சூடேற்றப் படுகின்றது. எவ்வகையான சூடேற்றிகள் உள்ளன என்பது பற்றிய அறிவும் எமக்கு அதிகமாக இருப்பதில்லை. இனியும் கடைசி நிமிடம் வரையும் காத்திருக்காமல், புதியது வாங்கும் போது உங்களை நீங்கள் தயார்ப்படுத்தல் நல்ல தல்லவா?

நீங்கள் தீர்மானிக்கவேண்டிய:

- அடிப்படையில் உங்கள் சுடுநீர் தேவையை நீங்கள் தீர்மானிக்கவேண்டும்.
- குறைந்த செலவில் நிறைந்த பயன் தரும் வழியை பின்பற்றவேண்டும்,
- சரியான வழியில் சூடேற்றி பொருத்தப்படல் வேண்டும்.

பாவனையில் உள்ள நீர் சூடேற்றிகள்:

கடந்த சில வருட காலமாக பாவனையாளருக்கு வெவ்வேறு வகை சூடேற்றிகள் அறிமுகமாகியுள்ளன. அவையாவான:

- சுடுநீர் தாங்கியுடைய மரபுமுறை சூடேற்றிகள் (Storage Water Heaters)
- தேவைக்கு ஏற்ப நீரை சூடேற்றல் (Demand Water Heaters)
- வெப்பப் பம்பு சூடேற்றிகள் (Heat Pump Water Heaters)
- தாங்கியற்ற வெப்பச்சுருள் சூடேற்றி (Tankless Coil Water Heaters)
- சூரியசக்தியை பாவித்து நீரைசூடேற்றல் (Solr Water Heaters)

சுடுநீர் தாங்கியுடைய மரபு முறை சூடேற்றிகள் / Storage Water Heaters:

இவ் முறையில் நீரை சூடேற்றுவற்கு பல வழிமுறைகள் உள்ளன. மின்சாரம், எரிவாயு, மண் எண்ணை அல்லது எண்ணை.

பொதுவாக 75.7லீற்றர் 302.8லீற்றர் கொள்ளவு கொண்ட தாங்கிகள் விற்பனையில் உண்டு. கனடாவில் பொதுவாக பாவிக்கப்படும் சூடேற்றிகள் இவ்வகையினதே. சூடு நீர் தேவைப்படும் போது தாங்கியின் மேல் உள்ள குழாயினால் வெளியேறுகிறது. அத்துடன் தண்ணீர் தாங்கியின் கீழ் பகுதியினால் உள்ளே சென்று தாங்கியை நிறைத்து வைத்திருக்கும்.

தாங்கியில் உள்ள நீரை தொடர்ச்சியாக சூடேற்றிக்கொண்டிருக்கும். நாங்கள் பாவிக்காத பொழுதுகளிலும் நீர் சூடேற்றப்படுவதால் சக்கி வீணே விரயமாகிக் கொண்டே இருக்கும். இதை தயார்நிலை வெப்ப இழப்பு எனக் கூறுகிறோம். தற்போது விற்பனைக்கு வந்துள்ள தயாரிப்புகள் இவ் வெப்ப இழப்பை குறைப்பதற்கான தொழில் முறைகளை உள்ளடக்கியதாய் உள்ளன. பெரும்பாலும் இவற்றின் தொழில் முறை குறிப்பிலும், சக்தி சேமிப்பு குறிப்பிலும் மேலதிக விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

தேவைக்கு ஏற்ப உடன் நீரை சூடேற்றல் Demand Water Heaters:

தண்ணீர் இவ் சூடேற்றிக்கூடாக செல்லும் போது சூடு நீராக்கப்படுகிறது. இவ் தொழில் நுட்பத்தில் தாங்கிகள் இல்லை. எனவே சுடு நீர் தேவைப்படும் போது உடனுக்குடன் நீர் சூடேற்றி வழங்கப்படுகிறது. இதன் ஊடாக தயார்நிலை வெப்ப இழப்பு முற்றிலும் தவிர்க்கப்படுவதுடன் 20 வீதத்திலிருந்து 30 வீதம் வரையில் சக்தி சேமிக்கப்படுகிறது. சூடேற்றுவதற்கு எரிவாயு அல்லது மின்சாரம் பாவிக்கப்படுகிறது. இதனால் நீங்கள் குளிக்கும் போது சுடுநீர் இல்லாமல் போகும் நிலை வராது. ஆனாலும் நீர்ப்பாச்சல் வீதம் மட்டுப்படுத் தப்பட்டதாயே இருக்கும். பொதுவாக, இம்முறை மூலம் 7.6 லீற்றர்-15.2 லீற்றர் ஒரு நிமிடத்துக்கு என்ற பாச்சல் வீதமே இருக்கும். குறிப்பிட்ட ஒரு தேவைக்காய் மட்டும் சுடு நீரை பாவிக்கும் போது இவ் நீர்ப் பாச்சல் வீதம் போதுமானதாயே இருக்கும். ஒரே தடவையில் குளிப்பதும், சலவை இயந்திரமும் இயங்கும் சந்தர்ப்பங்களில் சுடுநீர் போதுமானதாக இருக்காது. தேவைக்கு ஏற்ப சமாந்தரமாக வேறு பம்பு களை பொருத்துவதன் மூலம் தேவையை சமாளிக்க முடியும். எரிவாயுவை பாவிக்கும் போது நீர்பாச்சல் வீதத்தை அதிகரிக்க முடியும். ஆனால் மின்சாரத்திலிலும்விட அதிகளவு சக்கி எரிவாயுவினால் விரயமாகிறது. ஏனெனில் பைலட் விளக்கு தொடர்ந்தும் எரிந்து கொண்டிருப்பதால் அதற்கான வாயு விரயமாகிறது. ஆயினும் இது மிகவும் குறைந்தளவே.

வெப்பப் பம்பு சூடேற்றிகள் Heat Pump Water Heaters:

வெப்பப் பம்பு மின்சாரத்தினால் இயக்கப்படுகிறது. மின்சாரத்தினால் நேரடியாக வெப்பத்தை உண்டாக்காமல், வெப்பத்தை ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு கொண்டு செல்வதற்கே இங்கு மின்சாரம் பாவிக்கப்படுகிறது. இவ் வகையான சூடேற்றிகள் நீர் தாங்கிகளுடனும் வருகின்றன. அல்லது உங்களது தற்போதைய நீர் தாங்கியையும் இதனுடன் பாவிக்க முடியும்.

Coil Water Heaters

Demand Water Heaters

Heat Pump Water Heaters

Solr Water Heaters

இத்தகைய பம்புகளை பொருத்துவதற்கு செலவு பெருமளவில் எதிர்பார்க்கப்படுகிறது. இப் பம்புகள் பொருத்தும் இடம் குறிப்பாக 4.4 சென்றிகிரேட் - 32.2 சென்றிகிரேட் வெப்ப நிலையில் பேணப்படவேண்டும். அத்தோடு பம்பைச் சுற்றிய சூழல் குறைந்தது 1000 கன அடியாக இருத்தல் வேண்டும். இப் பம்பு சிறப்பாக தொழில்படுவதற்கு எரிவாயு அறைக்குள் இவற்றை பொருத்துவதே உசிதமானது. குளிர் கூடிய இடங்களில் இவை சிறப்பாக வேலை செய்வதில்லை.

தாங்கியற்ற வெப்பச்சுருள் சூடேற்றி Tankless Coil Water Heaters:

சுடு நீரைப்பாவித்து உங்கள் வீட்டை சூடேற்றும் முறையை பாவிப்பவர்களுக்கு இம்முறை இலகுவாய் இருக்கும். இவற்றுக்காக கொதிகலன் பாவிக்கப்படுகிறது. இதுவொரு தாங்கியல்ல. குளிர் காலங்களில் வீட்டை சூடேற்றுவதற்காக கொதிகலன் பாவிக்கப்படுவதால், சுடு நீர் தேவைப்படும் போது தண்ணீர் வெப்ப மாற்றியூடாக சென்று சுடு நீராக எமது தேவைக்கு வருகிறது. இங்கு வெப்பமாற்றி பாவிக்கப்படுகிறது. இவ் மாற்றியே கொதிகலனை தேவை கருதி கட்டுப்படுத்தி வைக்கிறது. குளிர் காலங்களில் வீட்டைச் சூடேற்றுவதற்கும் இம்முறை பாவிக்கப்படுவதால், சுடுநீர்த் தேவையும் இலகுவாக பூரணப்படுத்தப்படுகிறது. ஆனால் கோடை காலங்களில் சுடு நீரைப் பெறுவதில் சிறு சிக்கல்கள் உண்டு.

சூரியசக்தியை பாவித்து நீரைசூடேற்றல் Solr Water Heaters:

சூரிய சக்தியைக் கொண்டு நீரை சூடேற்றி எமது தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும். பல்வேறு தயாரிப்புகள் வெளிவந்துள்ளன. ஆயினும் கனடா போன்ற குளிர் நாட்டில் துணைக்கு (பின்பலமாக) மற்றய சூடேற்றிகளில் ஏதாவதொன்று இருப்பது நன்றே.

■ ■ ■

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A

Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER

பாலியல்: ஆரோக்கியமான சிறார்களை வளர்த்தல்

பிள்ளைகளின் கேள்விகளைக் கையாளும் முறை

- றாஜினி தார்சீசியெஸ் -

பிள்ளைகள் கேட்கும் பாலியல் சம்பந்தமான கேள்விகளுக்கு பெற்றோர் எப்போதும் ஏன் விடைபகர வேண்டும்?

சிறுவர்களின் இயல்பு எந்த விடயம் பற்றியும் அறிய விரும்புவர். அந்த வகையில் பாலியல் பற்றியும் அறிய ஆவலாக இருப்பர், சிறுவர்கள் ஏனைய விடயங்களில் இருந்து பாலியலை வேறாகப் பிரித்துப் பார்க்கமாட்டார்கள். மற்றைய விடயங்களைப் போலவே தமது ஆர்வத்தை, தேடலை கேள்விகளாக பெற்றோரிடம் கேட்பார்கள். சிறார்கள் தங்களைச் சுற்றி நடக்கும் பல புரியாத குழப்பமான விடயங்களை இயல்பாகவே அவதானித்துக் கொண்டிருப்பர். சிறார்கள் கேட்கும் எந்தக் கேள்வியும் முட்டாள் கேள்விகள் என ஒன்றுமே இல்லை. அறியும் ஆவலினாலும் அவர்களுக்குள்ளே இருக்கும் தேடலினாலும் தான் கேள்விகளைக் கேட்கிறார்கள் எனவே, அவர்கள் கேட்கும் கேள்விகளை, கேள்வி கேட்கும் தன்மையை பெற்றோர் வரவேற்க வேண்டும். எப்போதும் மிகவும் நம்பிக்கைக்குரியவர்கள் பெற்றோரே என்ற உணர்வு எந்தச் சிறு குழந்தைக்கும் உண்டு. பிள்ளைகள் கேள்விகளுடன் பெற்றோரிடம் வருகையில் பெற்றோர் தகுந்த விதத்தில் வரவேற்புடன் கையாண்டால், தொடர்ந்து பிள்ளைகளுக்கு உதிக்கும் கேள்விகளுக்கான விடைகளை நாடியும், சந்தேகங்களைத் தீர்க்கவும் பிள்ளைகள் தயங்காமல் பெற்றோரிடம் இயல்பாகவே வந்து கதைக்கத் தொடங்குவார்கள். இல்லையேல் வேறு வழிகளை நாடுகையில் விடைகள் பிழையானதாகவோ அல்லது பொறுப்பற்ற விதத்தில், அக்கறையில்லாமல் கொடுக்கப்பட்ட விடையாகவோ அமைவதால் குழப்பமாக இருந்து, பின்விளைவுகள் பாதகமாகலாம். பெற்றோர் சரியானபடி பிள்ளைகளின் கேள்விகளை வரவேற்றுப் பதிலளிக்கையில், பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் ஆரோக்கியமான உறவுமுறை உருவாகும்.

திறந்த மனதுடன் எதையும் கதைத்து, பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்கவும் உதவுகின்றது. ஆரோக்கியமான உறவுப் பாலத்தின் ஊடாக, குடும்பம் பற்றியும் பெற்றோர் தங்கள் கலாச்சாரத்தின் மேன்மைபற்றியும் பிள்ளைகளுடன் கலந்துரையாடுவதற்கு ஏற்ற சந்தர்ப்பங்கள் நிறைவே உருவாகும். பெற்றோர் அவர்களின் கேள்விகளுக்கு உண்மையாக, நல்ல விதமாக, சாதகமாக பதில் கூறும் பொழுது பாலியல் என்பது ஓர் அற்புதமான விடயம், நாங்கள் மிகவும் மதிப்-பிற்குரியவர்கள் என்ற எண்ணத்தை மீண்டும் மீண்டும் பிள்ளைகள் மனதில் வலியறுத்துவதினால் சிறந்த ஆளுமை உடைய சிறார்களாவர்.

எப்போது நாம் சிறார்களின் பாலியல் சம்பந்தமான கேள்விகளுக்கு விடை கூற வேண்டும்:

பிள்ளைகள் எப்போது கேள்வி கேட்கிறார்களோ அந்நேரம் (அப்போது). கேள்வி கேட்கையில் கேள்விக்குரிய சரியான பதிலைக் கொடுக்க முடியாவிட்டால் அல்லது பதில் தெரியாவிட்டால் நாம் இது பற்றி பின்னர் கதைப்போம் என்று கூறி அதை ஞாபகத்தில் வைத்து, பின்னர் உரிய நேரத்தில் கதைக்க வேண்டும். அல்லது சரியான பதிலைத் தேடி பின்னர் பிள்ளைகளுக்குக் கூற வேண்டும். பெற்றோருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் வேளை எல்லாம் பெற்றோர் அவர்களுடன் கதைக்கலாம். உதாரணமாக, தொலைக்காட்சி நிகழ்ச்சி பார்க்கும் பொழுது, கர்ப்பவதியான ஒருவரைப் பார்க்கும் பொழுது, அல்லது விலங்குகள் குட்டி ஈனும் காட்சியைக் காணும் வேளை என பெற்றோர் கதைப்பதற்கு தகுந்த தருணம் என உணரும் வேளை எதுவோ அவ்வவ்

தொடர்தல் 26ம் பக்கம்

Engineering Drawing Package for Custom Build Home to Obtain Site Plan Approval and Building Permits - $11,995+HST

Our Engineering Drawing Package for Custom Build Home includes the all the Applicable Drawings, Plans and Reports including Boundary & Topographical Survey, Site Plan, Site Grading & Erosion Control Plan, Site Servicing Plan, Floor Plans, Elevations, Cross Sections, Foundation & Roof Details, Arborist Report, Heat Loss Calculations, Duct & Ventilation Design to obtain the Site Plan Approval and Building Permits.

Create Your Dream Home !!

We offer Total Project Management for Custom Build Home, including Site Plan Approval, Building Permits, Arranging Construction Loan, and Construction Management for $22,975+HST

சகலவிதமான கட்டிட நிர்மாண வரைபடத் தேவைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்

M.BASKARASINGHAM, P.Eng.

CHARLES AARON JAYAKAR, B.Arch **JOOMIN PARK**, M.Eng

416 **332 1743** www.**buildingexpertscanada**.com

சக்தி என்றால் காப்புறுதி

காப்புறுதி துறையில் '32' வருட முழுநேர உன்னதமான, நெறியான சேவை

'சகல காப்புறுதி நிறுவன பிரதிநிதி'

- இதுவரை 11,000 இற்கு மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்.
- 250 துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- ஏறத்தாழ 50 நிரந்தர, பகுதி ஊன இழப்பீடுகள்.
- பாரபட்சமின்றி எந்த நிறுவனத் திட்டமாக இருப்பினும் தெளிவான, துல்லியமான, இலகுவில் கிரகிக்கும் வண்ணம், பொறுமையான விளக்கம்.
- பல்வேறு நிறுவனங்கள் மூலம் சிறப்பு விருதுகள் பெற்ற பெருமை.
- எவ்வித வருத்தங்கள் இருப்பினும் அதற்கேற்ப தகுந்த காப்புறுதி திட்டங்கள் அளிக்கும் திறமை.
- உங்கள் காப்புறுதி மனுப்பத்திரம் ஏதாவது நிறுவனம் மூலம் நிராகரிக்கப் பட்டாலும் தகுந்த காப்புறுதி திட்டம், நிறுவனங்களின் நிபந்தனைக்கு அமைய நிச்சயமாக, உறுதியாகக் கொடுக்கப்படும்.
- உடனே அமுலுக்கு கொண்டுவரும் மருத்துவ ரீதியின்றி ஆயுள்காப்புறுதி.

மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

- 85 வயதிற்குட்பட்ட எவரும் **$600,000** வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)
- அதிகூடியதான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.

சக்திவேல்

416.706.3530, 905.763.8912

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!

வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

வீடு வாங்க விற்க

SELLING/BUYING REALESTATE

OUR FREE SERVICES

- Home Staging
- Professional Photos & Virtual Tours
- Market Evaluation
- Open House & Feature Sheets
- Sale Signs & Direction Signs
- Renovation Arrangement
- Full MLS Listing Service
- Weekly Media Advertisement

FREE MARKET EVALUATION

LIST WITH KATHIR & GET MAX PRICE.

BUY WITH KATHIR & GET DREAM HOME

HomeLife/Future Realty Inc.,
Brokerage *Independently Owned and Operated
O: (905)201-9977 F: (905)201-9229
205-7 Eastvale Dr., Markham,Ont, L3S 4N8

HOMELIFE HIGHER STANDARDS

Some condition apply

Kathir Kathirgamanathan B.A,
Real Estate Broker
Dir: 416-230-6462

செம்மண் கீற்று 2016

நத்தார் ஒன்றுகூடல்

அச்சுநகர் புனித சூசையப்பர் பங்கு
மக்கள் ஒன்றியம் - கனடா நடத்தும்
12 வது வருடாந்த நத்தார் ஒன்றுகூடல் நிகழ்விற்கு
எமது பங்கு உறவுகளையும், ஊர் மக்களையும்
மற்றும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

டிசம்பர் 03

சனி

மாலை 6.30 மணி

JC'S Banquet Hall

1686 Ellesmere Road , Scarborough.

(Ellesmere & McCowan)

தொடர்புகளுக்கு:

647 885 1778
416 567 5444
416 457 7682

பிள்ளைகளின் ...

24ம் பக்கத் தொடர்ச்சி...

வேளைகளில் கதைக்கலாம். பிள்ளைகள் கேட்காவிடினும் அவர்களைக் கட்டாயப் படுத்தாத விதத்தில் பெற்றோர் கேட்கலாம் - "இது பற்றி என்ன நினைக்கிறாய்? இது பற்றி என்ன தெரிந்துள்ளாய் அல்லது அறிந்துள்ளாய்?" என்று. பெற்றோர் இப்படிக் கேட்பதால் பிள்ளைகளுக்குத் தெரியவரும். அவர்கள் விரும்பும் நேரம், அத்துடன் பெற்றார் பாலியல் விடயத்தைத் திறந்த மனதுடன் தம்முடன் கதைக்கத் தாயாராக இருக்கின்றனர் என. பெற்றோருக்கும் பிள்ளைக்கும் சௌகரியமாக உணரும் எவ்வேளையிலும் இரு தரப்பினரும் கதைக்கலாம்.

கேள்விகளுக்கு விடை கூறும் பொழுது நாங்கள் என்ன கூற வேண்டும்?

விடைகளைச் சரியாக, இலகுவாக விளங்கக் கூடிய விதத்திலும், பிள்ளைகளின் வயதிற்கு விளங்கக் கூடிய சொற்களையும் கருத்துக்களையும் உள்ளடக்கிய விடைகளைப் பகருதலானது, தொடர்ந்து பிள்ளைகளுடன் தொடர்பாடலுக்கு சாதகமாக அமையும். தமது குடும்பம், கலாச்சாரம், சமயம், போன்றவற்றில் முக்கியமானது, பெறுமதியானது என்று பெற்றோர் கருதும் விடயங்கள் பற்றி பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கலாம். நீண்ட அறிவுரைகளையும் கோபமான உரையாடல்களையும் தவிருங்கள். அவர்களது கேள்விகளை உயர்ந்த எண்ணத்துடன் செவிமடுத்து, அவர்கள் அவ்வாறு கேட்பதை நீங்கள் வரவேற்பதை பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்துங்கள். அவர்களது கேள்விகள் வரவேற்கப்படுவதை வலியுறுத்துவதுடன், தொடர்ந்து கதைப்பதற்கு வழிவகுத்துக் கொடுங்கள். பிள்ளைகளது கேள்விகள் பெற்றேருக்கு மிகவும் சங்கடமாக, தனிப்பட்ட விடயமாக அமைகையில் பெற்றோரின் சொந்த பாலியலுறவு பற்றிய கேள்விகளுக்கு விடையளிக்கும் பொழுது அது, ஒருவரின் தனிப்பட்ட விடயம்; அவர்களுக்கு மட்டும் உரிய இரகசியமான விடயம் என்று புரியவைக்க முயலுங்கள். உதாரணமாக "எனக்கும் அப்பாவுக்கும் வாய்வழி உறவு பற்றி கேள்வி கேட்டநீங்கள். சில விடயங்கள் எங்கள் இருவருக்கும் உரிய தனிப்பட்ட விடயம். அதில் இதுவும் ஒன்று. இதை நாங்கள் வேறு ஒருவருடனும் பகிர்ந்து கொள்ள மாட்டோம். உங்களுக்கும் சில தனிப்பட்ட விடயங்கள் இருக்கும்; இருக்கலாம். இவ்விடயங்களை நீயும் மற்றவருடன் பகிர்ந்து கொள்ள விரும்ப மாட்டீர்கள்" என்று பதிலளிக்கலாம்.

இதுதான் சரியான விடையென இல்லை. ஒவ்வொரு பிள்ளையும் கேட்கும் கேள்வியின் தன்மைக்கும் சூழல் சந்தர்ப்பத்திற் கேற்ற விதத்திலும் பெற்றோர் விடைகளைக் கையாளலாம்.

கேள்விகளுக்கு எவ்வாறு விடை கூற வேண்டும்?

பெற்றாரிடம் பிள்ளைகள் கேள்விகளைத் தொடுக்கும் பொழுது கேட்கின்ற விடயம் பற்றி ஏதோ ஒரு விடயத்தை அறியும் ஆவலில் கேள்வி தொடுப்பார்கள். எனவே, பிள்ளையிடம் இவைபற்றி ஏற்கனவே என்ன அறிந்துள்ளாய், என்ன தெரியும், நீ என்ன உணர்கின்றாய் என பிள்ளையின் எதிர் பார்ப்பை அறிய முயலுதல் நன்று.

பிள்ளைகளின் கேள்விகளுக்கு எப்படி விடை கூறலாம் என நேரம்எடுத்து யோசிக்கலாம். பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு விடை கூறுவது தான் முக்கியமாகையால், அது சில நிமிடங்களின் பின்னராகவோ அல்லது சில நாட்களின் பின்னராகவோ இருக்கலாம். கேள்வி கடினமாக இருந்தால், அதற்கு எவ்வாறு பதில் கொடுக்கலாம் என்பது பற்றி வேரு யாருடனாவது கலந்துரையாடலாம். பிள்ளைகளின் கேள்வி பெற்றோருக்கு அசௌகரியமாக அல்லது சங்கடமாக உணர்ந்தால் சங்கடமாக உள்ளது என தெரிவிக்கலாம். அல்லது சங்கட உணர்வை ஒப்புக் கொள்ளலாம். விடை பெற்றோருக்குத் தெரியாவிட்டால் பிழையான விடை கொடுக்காது, விடை தெரியாததை வெளிப்படுத்தலாம். பெற்றோர் தம் பிள்ளையின் கேள்விக்கு உரிய விடயம் அடங்கிய புத்தகம் ஒன்றைக் கண்டுபிடித்து அப்புத்தகத்தை பிள்ளையுடன் சேர்ந்து வாசிப்பது நன்று.

ஆதாரம்: ரொரன்ரோ பொதுச் சுகாதாரக் கையேடு.

■ ■ ■

ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்

மாதாந்த இலக்கியக் கலந்துரையாடல்

'கத்தோலிக்க கூத்து மரபு'

ஒருங்கிணைப்பு: சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன்

சிறப்புப் பேச்சாளர்கள் உரை:

ஐயந்தெளிதல் அரங்கு

நாள்: 26-11-2016

நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை

இடம்: ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
3A, 5637 Finch avenue East,
Scarborough,
M1B 5k9

தொடர்புகளுக்கு: அகில் - 416-822-6316

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். அனுமதி இலவசம்

20 Pay Insurance

இருபது வருடக் கட்டுப்பணம்!
வாழ்நாள் முழுவதும் காப்புறுதி!

இருபது வருடங்களுக்கு மட்டும்
மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்துங்கள்.
அதன் பின்னர் உங்கள் வாழ்நாள் முழுவதும்
உங்களுக்கு காப்புறுதி இருக்கும்.

இருபது வருடங்களின் பின், விரும்பினால் காசுப் பெறுமதியை (Cash Value) அல்லது Policy Loan ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

Age	20		25		30		35		40	
	M	F	M	F	M	F	M	F	M	F
100	63	57	78	63	90	80	106	92	125	110
200	122	105	144	121	168	150	208	177	240	214
300	181	155	214	179	250	223	309	264	357	319

RBC Insurance Manulife · Industrial Alliance · LaCapitale Financial Group · Assomption Life · BMO Insurance · Sun Life Financial

Thana Manickavasagar Broker

Cell:416.728.5772 Office:416.519.3896

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
• Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4

Dedicated & Trusted
Real Estate Agent
with 20 years of experience!

BUYING
SELLING
LEASING
RESIDENTIAL, COMMERCIAL
& INVESTMENT PROPERTIES

HOMELIFE LANDMARK Brokerage
7240 Woodbine Ave, Suite 103
Markham, ON L3R 1A4
Bus: 905 305 1600
nanadarajah@trebnet.com

NADA G. NADARAJAH B.V.Sc.
Real Estate Sales Representative
Call me 416 - 616- 8751

அறிவியலும் ஆழ்மனமும்

- எஸ். பத்மநாதன் -

நாம் எல்லோரும் இவ்வுலகில் வாழ்கிறோம். நமக்கு முன் நம் முன்னோர்கள் இந்த உலகத்தில் வாழ்ந்தார்கள். நமக்குப் பின் நம் சந்ததியினர் வாழ்வார்கள். நம் எல்லோருக்கும் சூரியன் ஒளி வீசுகிறது, சந்திரனும் நட்சத்திரங்களும் ஒளி வீசுகின்றன. இயற்கையின் எல்லா உதவிகளோடும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

நாம் யார்? நாம் எங்கிருந்து வந்தோம்? எம்மை சுற்றியுள்ள நிலம், மரம், செடிகள் எங்கிருந்து வந்தன? சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் எங்கிருந்து எப்படி வந்தன? வாழுகின்ற மனிதர்கள் தீய-நல்ல பண்புகளும் கொண்டவர்களாக இருக்கிறார்களே, அது ஏன்? மனிதன் தோன்றிய காலம் முதல் இதற்கு விடைகாண முடியாமலே இருந்துள்ளனர். பயணம் மட்டும் தொடர்கிறது. இது ஒரு தொடர் சிந்தனையாகவே முடியும்.

எல்லாவிதமான சிந்தனைகளிலும் பிரதானமான கேள்வி, 'எம்மைச் சுற்றியுள்ள விலங்குகள், தாவரங்கள், சூரிய, சந்திர நட்சத்திரங்கள், காற்று அனைத்தையும் கடவுள் படைத்தாரா?' என்பதுதான்.

மற்றொரு சிந்தனை, 'இந்த உலகையும். சூரிய சந்திர, நட்சந்திரங்களையும் யாரும் படைக்கவில்லை. அவை இயற்கையின் தோற்றம். அந்த இயற்கை தோற்றத்தின் வளர்ச்சிப் போக்கிலேயே எல்லா உயிரினங்களும் தோன்றின. அவற்றின் பரிணாம வளர்ச்சி (Evolution) யிலேயே மனிதரும் தோன்றினர்' என்பது.

இந்த இரண்டு சிந்தனைகளும் வேறு வேறானவை. எதிரெதிர் கோணத்திலிருந்து வரும் இரண்டுமே சரியானதாக இருக்க வேண்டுமென்பதில்லை.

உலகில் எத்தனை மதங்கள் இருந்தாலும் அவற்றுக்கென வெவ்வேறு கொள்கைகள் இருந்தாலும், ஏறக்குறைய எல்லா மதங்களும் பொதுவாக ஒன்றைத்தான் சொல்லுகின்றன. கடவுள்-கடவுளர்கள் இருந்தார்கள். இப்போதும் இருந்து கொண்டிருக்கிறார். எப்போதும் இருப்பார்கள். அவர்கள்தான் இந்த உலகைப் படைத்தவர்கள். சூரிய, சந்திர, நட்சத்திரங்களைப் படைத்தவர்கள். தாவரங்கள் விலங்குகள் அனைத்தையும் படைத்தவர்களும் அவர்களே தான். மனிதனையும் அவர்களே படைத்தனர். ஆதி அந்தம் இல்லாதவர்கள், உலகின் எல்லா நிகழ்வுகளுக்கும் அவகளே காரணம். அவர்களின்றி ஓரணுவும் அசையாது. உங்கள் தலைவிதியைத் தீர்மானிப்பதும் அவர்களேதான், மரணம் கூட அவர்களால் தான் நிகழ்கிறது. சொர்க்கம் நரகம் இரண்டும் அவர்களது இச்சைப்படிதான் இருக்கும்.

இவையெல்லாம் ஆதிமுதல் வழிவழி வந்த நம்பிக்கைகள் ஆகும்.

இதற்கு எதிரான சிந்தனைகள் அறிவியல் வழிவந்தவை. அறிவியல் என்பது எந்த வொரு பொருளையும் பல்வேறு கோணங்களில் நுணுகி ஆராய்ந்து, அதைப் பல் வேறு தொடர்ச்சியான சோதனைகளுக்கு உட்படுத்தி, அது பற்றிய உண்மைகளை நடைமுறையில் மெய்ப்பித்துக் காட்டுகிறது. இதில் எந்த சந்தேகமும் ஏற்படாது. மழுப்பலான பதில்களும் இல்லை. மாய மந்திரம், தலைவிதி, போன ஜன்மம், அடுத்த ஜென்மம், பாவம் - புண்ணியம் போன்ற கருத்துக்கள் எதுவுமில்லை. மூடக் கருத்துகள் இல்லை. அறிவியல் அல்லது விஞ்ஞானம் எம்மைப் பற்றியும் சூரிய மண்டலம் பற்றியும் ஆதாரபூர்வமாக விளக்கம் கூறுகிறது.

நாம் வாழும் பூமி, பூமியைச் சுற்றியும் பூமிக்கு அப்பாலும் உள்ள சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், வாயுமண்டலம் அனைத்தும் பிரபஞ்சம் அல்லது அண்டம் (Universe) எனப்படுகிறது. கோடானு கோடி வருடங்களுக்கு முன்பு வாயுக்கோள மாகவோ, தூசுமண்டலமாகவோ அண்டம் இருந்தது. இது சிதைந்து விரிந்து உருமாறி, கிரகங்களும் நட்சத்திரங்களும் உருவாகின. அல்லது பெரியதொரு வெடிப்பு கோட்பாடு(Big Bang Theory) மூலம் உருவாகியிருக்கலாம்.

புவியில் உள்ள எல்லா படைப்புக்களையும் செய்தது 'கடவுள்' என்பதும், இயற்கையாகவே அவை உருவாகின என்பதும் ஒரே கேள்விக்கான இரண்டு பதில்கள். இவற்றுள் எது சரி எது பிழை என்று ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவது என்பது இலகுவானதல்ல.

உயிரற்ற இயற்கையிலிருந்து உயிருள்ள இயற்கை தோன்றியது. உயிருள்ள இயற்கைக்கு முன்பே உயிரற்ற இயற்கை இருந்தது. இதற்கு நமது கற்பனைத் திறனை அதிகமாக்கிக் கொண்டு கோடிக்கணக்கான ஆண்டுகள் பின்னோக்கி செல்ல வேண்டியுள்ளது.

பிரபஞ்சத்தில் பல்வேறு நிலவுகைள் (Existence) உள்ளன. இதற்குள் சூரியன், நட்சத்திரங்கள், கோள்கள் நிலவுகின்றன, பூமி நிலவுகிறது. பூமியில் தாவரங்கள் விலங்குகள் நிலவுகின்றன, மனிதர்கள் நிலவுகிறார்கள். மனிதர்களின் சோகம், துயரம், மகிழ்ச்சி நிலவுகிறது. நல்லது கெட்டது, நியாயம் அநியாயம் எல்லாமே நிலவுகிறது. அதாவது பொருள் கருத்து என்பவை நிலவுகின்றன.

கருத்து என்பது மூளையிலிருந்தே பிறக்கிறது. மனித மூளையில் தோன்றாத கருத்து எதுவும் இல்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து உண்டு. கருத்து என்பது பொருள் சார்ந்தது. கருத்தை கண்ணால் காணமுடியாது, காதால் கேட்கமுடியாது, கையால் தொட முடியாது புலன்களால் உணரமுடியாது, கருத்துக்கு நிறம் கிடையாது, உருவம் கிடையாது. ஆனால் அது உள்ளது.

முன் குறிப்பிட்ட 'பொருள்' - 'கருத்து' ஆகியவற்றில் எது முதலில் வந்தது? மனிதனுக்கு முன் விலங்குகள், தாவரங்கள் நிலவிய உலகம், சூரியன் நட்சத்திரங்கள், சந்திரன் நிலவிய உலகம். எனினும், இவையெல்லாவற்றையும் கண்ட பின்பு தான் கருத்து தோன்றியது. மனிதன் என்கிற பொருளிலிருந்தே சிந்தனை, கருத்து தோன்றியது. அதாவது பொருள் இல்லாமல் கருத்து இல்லை என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது.

இதன் அடிப்படையில் வேறொரு கேள்வி பிறக்கிறது. கடவுள் என்பது என்ன? அல்லது கடவுள் என்பது எது? அது பொருளா? கருத்தா? எனக் கேட்டால் அதற்கு நூறு விதமான பதில்கள் வரும். எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர் என்று தொடங்கிப் பலவற்றை அடுக்கி கொண்டே போவார்கள். அவர்களால் பொருள் என்றோ கருத்து என்றோ நிறுவ முடியாது. பொருள் என்றால் மெய்ப்பித்து காட்ட முடியாது. கருத்து என்றால் பிரபஞ்சமே முதலில் தோன்றியது. பிரபஞ்சம் இல்லாமல் கருத்து எப்படி வந்தது? என்றால் அதற்குப் பதில் கூறமுடியாது.

கடவுள் என்ற கருத்தை எடுத்துக் கொண்டால், அதாவது கடவுள் என்ற கருத்து பிரபஞ்சத்தை படைத்தது என்றால் அந்தச் செயலை செய்த, அல்லது அச்செயலை தூண்டிய கருத்துத்தான் கடவுள் என்றால், அந்த கருத்து எந்த பொருளிலிருந்து தோன்றியது? அதுவும் சரியான கருத்தாக எப்படி தோன்ற முடிந்தது? பூமிக்கு புவியீர்ப்பு விசையை தந்து, காற்றுக்கு அழுத்தும் சக்தியை கொடுத்து, மனிதனுக்கு சிந்திக்கும் சிந்தனை கொடுத்து, கோடிக் கணக்கான மனிதர்களை படைத்து, வெவ்வேறான மனித அடையாளங்களைப் படைத்து, அதியுன்னதமான ஒரு கடவுள் என்ற கருத்து எந்த பொருளிலிருந்து தோன்றியது? அது எந்த பொருளும் இல்லாமல் தோன்றியது எப்படி சாத்தியம்?

இயற்கை வேறு, கடவுள் வேறு, கடவுள் என்கிற கருத்து, அதற்கு தரப்படும் வியாக்கியானம் வேறு. கடவுள் சம்பந்தப்பட்ட கோவில், குளம், திருவிழா, பிரார்த்தனை, பூஜை எல்லாம் நீண்ட நாட்களாய், தலைமுறை தலைமுறையாய் மனிதர்களிடம் கலந்துவிட்டவை.

கருத்து முதல்வாதத்தின் அடிப்படை மனம் (Mind) ஆகும். சாதாரணமாக 'மனசு சரியில்லை' என்கிறார்கள், சாப்பாட்டுக்கு கூட மனசுக்கு சரிப்படவில்லை என்கிறார்கள். மனம் ஒரு பொருளா? பொருள் என்றால் எங்கே இருக்கிறது? மனம் என்றொரு உறுப்பு உடலில் இல்லை. எனினும் மனிதனின் உயிரியக்கத்துக்கு மையக் கருவாக உள்ள சிறிய இதயம் உள்ள இடத்தை மனம் என்கிறோம். காலப்போக்கில் மனம் என்பது இதயம் என்று நம்புகிறோம். மனசு, அறிவு இரண்டும் மூளையின் செயல்பாடுகள் ஆகும். மகிழ்ச்சி, துக்கம் ஏற்படும் போது இதயம் படபடப்பதை உணர்ந்து நாம் இதயத்தை மனம் என்கிறோம். உண்மையில் மூளை சிந்திக்கிறது. இதன் போது தர்க்க பூர்வமான சிந்தனை ஏற்படுகிறது.

பேய் என்பது இல்லை என்று பல தடவை கூறினாலும் மனம் ஒப்புக் கொள்ள மறுக்கிறது. கடவுள், அற்புதங்கள் ஒன்றுமில்லை என்றாலும் மனம் ஒப்புக் கொள்ள மறுத்து விடுகிறது. முந்திப் படித்த பேய்க்கதைகள், மர்மான நூல்கள், கடவுள் கதைகள் எல்லாம் முன்னால் வந்து நிற்கும்.

ஒரு காலத்தில் மனிதன் ஒரு சமூக பிராணி (Man is a Social animal) என்று சொல்லி வந்தார்கள் அளப்பரிய ஆற்றல் மிக்க மனிதனை பிராணி என்று கூறுவது அவனை இழிவுபடுத்தலாம் என்பதனால் தற்போது 'மனிதன் ஒரு சமூக உயிரி' (Man is a Social Being) என்கிறார்கள் அறிவியலை ஒரங்கட்டும் மதவாதிகளும், மறுபிறப்புக்கு வழிதேடும் சுவாமிகளும், இரண்டு விதமான பிரச்சினைகளுக்கும் நடுவில் நின்று தவிக்கும் அப்பாவிகளும், உண்டு என்றால் உண்டு இல்லையென்றால் இல்லை என்பவர்களும், நம்மைச் சுதற்றியுள்ளவைகளை பகுத்தாய்ந்து பார்க்காதவர்களும் வாழும் வரை ஒற்றைப் பதில் என்று எதுவும் இல்லை.

pathmanathan.s@thaiveedu.com

Oshawa

வீடு வாடகைக்கு

Simcoe and Conlin. 1 year old 4 Bed 3 Wash House for lease from Nov 15th.

$1875 plus utilities.
Minutes from UOIT ,Durham College and 407.
Call for more details.

Hari Nallarethnam:
416 839 0066

Elilan Panchadcharam:
416 554 9909

Century 21
innovative reality inc.

நிலையான சொத்துக்களை வாங்க, விற்க அழைக்க வேண்டிய
உங்கள் வீடு விற்பனை முகவர் **சுகுமாரன் சின்னையா (சுகு)**

ROYAL DE MONTRÉAL 2010 INC.
4372, Papineau, Montréal, Qc, H2H1T5

Sugumaran Sinniah
Chartered Real Estate Broker

திருப்தியான இல்லம்
ஆனந்தமான வாழ்க்கையின் அடிப்படை !

Direct : 514.299.3186

email: seranvib@hotmail.com Office : 514.529.0454 Fax : 514.525.4557

4+2 Bedrooms, 5 W Room
Walk Out To Deck,
Hard Wood Floor Throughout Main Floor

3+2 Bedrooms, 2 W Room
Finished Basement And
Separate Entrance.

3 Bedrooms, 2 W Room
Bright Home W/Finish Bsmnt In
Desireable Neighbourhood,

4 Bedrooms, 1 W Room
Separate Entrance To Basement
& More. Walk To The Beach, Go Train,

3+1 Bedrooms, 4 W Room
Built On A Family Friendly Court.
Basement Has Separate Entrance

3 Bedrooms, 3 W Room
Pool. Gorgeous Chocolate Hardwood
OnMain/Stairs & 2nd

4 Bedrooms, 4 W Room
All Window Coverings,
Range Hood

4 Bedrooms, 3 W Room
Gorgeous Home Built By
Midhaven.Cert Green Home Design

4 Bedrooms, 3 W Room
Beautifully Kept Mattamy Home
Minutes Away From Mount
Pleasant Go Station

4 Bedrooms, 3 W Room
HiQuality Brook Field Berkley
Model In Preferred N/E Oshawa

4+3 Bedrooms, 5 W Room
Solid Oak Staircase, Skylight.
Oversized Master Br W/Sitting Area.

4 Bedrooms, 4 W Room
Upgraded Kitchen W/Granite/
Backsplash & Floating Island

4 Bedrooms, 4 W Room
Open Concept Home. Separate Living &
Dining With Granite Counter Tops

3 Bedrooms, 3 W Room
Open Concept Kitchen With Mosaic
Backsplash, Quartz Countertops

3+1 Bedrooms, 4 W Room
Finished Basement
With Bedroom And Sep. Entrance.

KZG 647-200-5833

Sell your home
faster
and more money

ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

RE/MAX Platinum Club Award

Your Home Sold In 30 Days or We buy it

When you list your home with Mike,you receive these Guarantees.

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

கடந்த மாதத்தில்...

நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...

ஒக்ரோபர் 29 - ஐரோப்பாவில் இயங்கும் IBC தமிழ் தொலைக்காட்சி, கனடிய ATN தொலைக்காட்சி நிறுவனத்துடன் இணைந்து 'ATN/IBC தமிழ்' தொலைக்காட்சி என்ற புதிய சேவையினை தொடங்கியிருக்கின்றது. ATN தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் ATN அதிபர் திரு. சந்திரசேகர், IBC தமிழ் அதிபர் திரு. பாஸ்கரன் கந்தையா ஆகியோர் இணைந்து இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

ஒக்ரோபர் 17 - புதிய வெளிச்சம் - கருத்துப் பகிர்வும் மக்கள் சந்திப்பும்.
பேராசிரியர் Dr ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் பங்குகொண்டு ஈழத்தீவின் தமிழர் வாழும் பல்வேறு பகுதிகளிலும் 20 நாட்கள் 18 பெருநிகழ்வுகளாக நடைபெற்ற 'புதிய வெளிச்சம்' நிகழ்வு குறித்த கருத்துப் பகிர்வும் மக்கள் சந்திப்பும் ஒக்ரோபர் 17, திங்கள் மாலை ஸ்காபரோ Estate Banquet Hall இல் நடைபெற்றது

ஒக்ரோபர் 01 - கனடா - அராலி கலாச்சார ஒன்றியத்தின் பதினோராவது ஆண்டு ஒன்றுகூடலும் 'சுப்பர் சிங்கர்' புகழ் நிருஜன் செகசோதி கலந்துகொண்ட அக்னி இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும் ஸ்காபரோ Chandni Grand Banquet Hallஇல் நடைபெற்றது.

கனடா - பாடும் மீன்கள் அமைப்பு, மட்டக்களப்பு - பெரிய புல்லுமலையிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறுவதற்காகக் கட்டிய ஐந்து வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. கனடாவில் வாழும் பெரிய புல்லுமலையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் தம்பிராஜா பாபு வசந்தகுமார் சமயத்தலைவர்கள் முன்னிலையில் வீடுகளைக் கையளித்தார். 5 வீடுகளும் அஞ்சல் அலுவலகம், கிராம சேவகர் அலுவலகம் என்பனவும் பாடும் மீன்கள் அமைப்பின் 2.9 மில்லியன் ரூபா நிதியுதவியுடனேயே கட்டப்பட்டன.

உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள், புகைப்படம் எடுத்தவரின் பெயர் மற்றும் உங்கள் தொடர்பிலக்கங்களுடன் events@thaiveedu.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

‘தோழர் விசுவானந்ததேவன்’



நூல் வெளியீடு

November 19

Saturday
6pm to 8pm

Don Montgomery Community Recreation Centre
2467 Eglinton Avenue East
Scarborough, ON M1K 2R1
(beside Kennedy Subway Station and Kennedy GO Station)

416 573 3440

நூல் நாடி நூலகம் நாடி

- ஸ்ரீராகவன் -

நூலகம் என்றால் என்ன? தன்னகத்தே நூல்களைச் சேகரித்து வைத்திருக்கும் உயிரற்ற கற்குவியலா? இல்லை, அதையும் தாண்டிப் புனிதமானதா?

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் கல்வியைத் தமது உயிரினும் மேலாகப் போற்றி வாழ்ந்து வருகின்றமை தெளிவு. அத்தகைய கல்விக் கேள்விகளுக்கான உசாத்துணை மூலவள நிலையமாக விளங்குவது எது? நூலகம் என்பதே இதற்கான விடையாக அமையுமெனில், நூலகமொன்றின் பயன்பாட்டினையும் அதனூடாக முகிழ்த்து எழும் பல சாதகமான முன்னேற்றங்களையும் தமிழர்களாகிய நாம், அதிலும் குறிப்பாகப் புலம் பெயர்ந்து இக்கனடியச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்க் கனடியரான நாம் நன்குணர்ந்து, நூலகம் ஒன்றின் சேவைகளை முழுமையாக உள்நுகர்ந்து, உச்சப்பயன்பாட்டினைப் பெறுகின்றோமா? எனும் வினா இவ்விடத்தில் முக்கியம் பெறுகின்றது. இதனூடான விழிப்புணர்விற்கான ஓர் சிறு தொடக்கப் புள்ளியாக அமைய விளைவதே இவ் ஆக்கத்தின் கரு.

புத்தகங்கள், பத்திரிகைகள், இதழ்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை அச்சுவடிவிலோ அல்லது ஒளி / ஒலி வடிவிலோ ஓர் தொகுதியாக சேர்த்து அவற்றை வரிசைக் கிரமமாக ஆவணப்படுத்தி, ஆர்வலர்கள் தமக்குத் தேவையான பிரதிகளை, தேவையானபொழுது இலகுவில் பெற்றுக் கொள்ளத்தக்கதாக, களஞ்சியப்படுத்தப்பட்ட ஆவணத்தொகுப்பினைச் சேகரித்து வைக்கும் அறை / கட்டடம் / நிறுவனம் என்பதே நூலகம் என வரையறுக்கப்படலாம். புத்தகச் சேமிப்பு அறையெனப் பொருள்படும் 'Libraire' எனும் பிரெஞ்சு மொழிச் சொல்லில் இருந்து பிறந்ததே 'Library' ஆகும்.

நூலகங்கள் ஒரு நாட்டின் அரசியல், பண்பாடு, பொருளாதாரக் கொள்கைகளைப் பிரதிபலிப்பன எனும் கூற்று மிகையான தன்று. இதனால் தானோ என்னவோ, ஒரு நாட்டின் தேசிய பாரம்பரியத்தைச் சிதைத்து அந்நாட்டின் மக்களை அடிமை கொள்ள நினைக்கும் எந்தவொரு நாடும்/அரசும் முதலில் தமது எதிரி நாட்டின் கலாச்சாரச் சின்னங்கள், வணக்கத்தலங்கள் உள்ளடங்கலாக அந்நாட்டின் நூலகங்கள் மீதும் கண் வைத்து அவற்றை முதலில் அழித்தொழிப்பதானது வரலாறு காட்டி நிற்கும் மரபாகவே மாறிவிட்டது. இதனடிப்படையிலேயே சிங்கள அரசும் தமிழர் பெருமையினை உலகளாவிய ரீதியில் பறைசாற்றிக் கொண்டிருந்த எமது பண்பாட்டின் கோயிலான யாழ். பொதுநூலகத்தினை 1981 யூன் 01 அன்று திட்டமிட்டுத் தீக்கிரையாக்கியது. தென்னாசியாவிலேயே தலை சிறந்த நூலகமாகத் திகழ்ந்த யாழ். பொதுநூலகத்துடன் சேர்ந்து பெறுமதி மிக்க 97000 வரையிலான நூல்களும், கிடைத்தற்கரிய பல ஓலைச் சுவடிகளும், ஏனைய ஆவணங்களும் கூட தீயிற்கருகிப்போயின. உலக வரலாற்றில் மற்றுமோர் கறை படிந்த வரலாறான இந்நிகழ்வானது, உலக அரசியல் பண்பாட்டு விழுமியங்களில் நூலகமொன்றானது எத்துணை பங்கினை வகிக்கின்றது என்பதற்கானவோர் கசப்பான எடுத்துக் காட்டு.

அவ்வகையில் வரலாற்று ரீதியில் உலகின் தலை சிறந்த 10 நூலகங்களாக:

- The Library of Alexandria, Alexandria, Egypt
- George Peabody Library, Baltimore, Maryland, USA
- Jay Walker's Private Library, Ridgefield, Connecticut, USA
- Abbey Library of Saint Gall, St. Gallen, Switzerland
- New York Public Library, New York, USA
- Seattle Central Library, Seattle, Washington D.C. USA
- Boston Public Library, Boston, USA
- Reading Room at the British Museum, London, England, UK
- Bodleian Library, Oxford, UK
- Library of Congress, Washington D.C. USA

என்பன குறிப்பிடப்படுகின்றன.

காலவோட்டத்தில் கனடிய நாட்டிலும் நூலகங்கள் முளைக்கத் தலைப்பட்டன. கனடாவில் முதன் முதலிற் குடியேறிய பிரெஞ் சுக்காரரின் வருகையினைத் தொடர்ந்து கியூபெக்கில் (அப்போதைய நியூபிரான்ஸ்) முதன் முதலில் 1632ல் ஜிசட்மிஷின் நூலகம் நிறுவப்பட்டு சமயம், மருத்துவம், தாவரவியல் போன்ற துறைகளில் நூல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன. எனினும் கட்டணம் செலுத்தியே நூல்களை இரவலாகப் பெறமுடிந்ததால் இக்குறையை நிவர்த்திக்கும் பொருட்டு 1810ல் Elmsley House எனும் பெயரில் பொதுமக்களின் இலவச பாவனைக்கான முதலாவது நூலகம் நயாகரா நீர் வீழ்ச்சிப்பகுதியில் நிறுவப்பட்டது. 1884 March 06ல் Toronto மாநகர சபையானது, தனது கட்டுப்பாட்டின் கீழான முதலாவது ரொறன்ரோ பொதுசன நூலகத்தினை(Toronto Public Library) Torontoல் நிறுவியது. அவ்விதை விருட்சமாகி இன்று ரொறன்ரோ பெரும்பாகம் முழுவதிலும் 160க்கும் மேலான கிளைகளுடன், உலகின் சுமார் 180க்குமதிகமான மொழிகளைப் பேசும் பல்லின மக்கட் சமூகத்துக்குக் கட்டணம் எதுவுமின்றி முற்றிலும் இலவசமாக வியத்தகு சேவையாற்றி வருகின்றது.

சிறுவர் நூலகம்:

நூலகம் ஒன்று சிறுவர்களுக்கு ஆற்றும் சேவைகளை நோக்கின் சிறுவர்களுக்கான புறநிலைக் கல்வியூட்டலில் நூலகங்கள் அளப்பரிய பங்காற்றிவருவதைக் காணலாம். உதாரணமாக: கோடைகால வாசிப்புப் பட்டறைகளினை (Summer Reading workshops)ரொறன்ரோ பொது நூலகத்தின் எல்லாக் கிளைகளுமே வழங்குகின்றன. பல்லினச் சிறுவர் ஒன்று கூடலினூடாக நட்புறவுத் தன்மையையும் வாசிப்புப் பின்னூட்டலினூடாக புறநிலைக்கல்விச் செயற்பாடுகளையும் ஒரு சேர அளிப்பதனால் எம் தமிழ்ச்சிறார்கள் எதிர்காலத்தில் தமது கல்வியில் மேன்மையுற இப்பொழுதே பலமான அத்திவாரம் ஒன்று இங்கு இந்நூலகங்களினால் இடப்படுகின்றது. இளையோர்களினை எடுத்துநோக்கின், இளையோர்க்கான ஒன்று கூடல் நிகழ்ச்சித் திட்டங்கள், இனரீதியான சமூக ஒன்றிணைவு நிகழ்ச்சிகள் என்பன பொதுவான சேவையாகவும் சிறப்புச் சேவையாக சில நூலகங்கள் சமூக ரீதியான நிகழ்ச்சித் திட்டங்களினை முன்னெடுக்க, தமது கேட்போர்கூடங்களை இலவசமாக வழங்கி இளையோரது மேம்பாட்டிற்குப் பின்பலமாக நின்று செயலாற்றி வருகின்றமையும் தெளிவு.

பெரும்பாலான நூலகங்கள் தமது நாளாந்த நடைமுறைகளை விளக்கும் கொள்கைவிளக்க அறிக்கைகளை தமிழ் உட்பட ஏனைய பெரும்பாலான மொழிகளில் அச்சிட்டுப் பயனாளிகளுக்கு வழங்குகின்றன. நூலக அங்கத்துவம் என்பதும் ஏதோ மலைப்புக்குரிய விடயமல்ல. ரொறன்ரோ பொதுநூலகத்தைப் பொறுத்தவரையில் ரொறன்ரோ பகுதியில் வாழ்ந்து தொழில் புரியும் பாடசாலைக்குச் செல்லும் அல்லது சொந்த ஆதனம் வைத்திருக்கும் எவரும் நூலக அங்கத்துவ அட்டைக்கு விண்ணப்பிக்கலாம். வயது வந்தோர் நிழற்படத்துடன் கூடிய பெயர் மற்றும் விலாசத்தினை உள்ளடக்கிய (உதாரணம்: சாரதி அட்டை, சுகாதார அட்டை) ஆவணம் ஒன்றினூடாகவும் அல்லது இவை இல்லையெனில் பெயர் மற்றும் விலாசத்தினை நிரூபிக்கும் வகையில் இரு ஆவணங்களை (உதாரணம்:பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் /கனடிய குடியுரிமை அட்டை /வைத்திய சாலை அட்டை / பணியாளர் அட்டை / சமூக காப்புறுதி இலக்க அட்டை/ கடவுச் சீட்டு / கடனட்டை) சமர்ப்பித்து அங்கத்துவத்தினை எந்தவொரு நூலகக்கிளைக்கும் நேரிடையாகச் சென்று இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

12 வயதிற்கு அல்லது அதற்குக் கீழான வயதுள்ள குழந்தைகள், தாமும் தமது பெற்றோரும், பெற்றோரது நூலக அங்கத்துவ அட்டை அல்லது மேற்கூறிய ஆவணங்களினூடாக அங்கத்துவத்தினைப் பெற முடியும். 13-17 வயதுடையோர் தமது பெற்றோருடனும், அவர்களது நூலக அங்கத்துவ அட்டையினையும் சமர்ப்பிப்பதனூடாக இலகுவில் அங்கத்துவம் பெறலாம். சில நூலகங்கள் சுயவிருப்பினடிப்படையில் சேவையாற்றும் பல்வேறு மொழிகளுக்கான மொழி பெயர்ப்பாளர்களையும் இலவசமாக வழங்குகின்றன. இவ்வகையில் பல்வேறு தேவைகளின் நிமித்தம் தன்னார்வத் தொண்டராகப் பணியாற்றி அதற்கான சான்றிதழைப்பெற விழைவோர், குறிப்பாகப் பல்கலைக்கழக அனுமதி தொடர்பில் தேவையான சமூக சேவைப் பங்களிப்பு மணித்துளிகளைப் பெறவிளையும் எம் தமிழ் மாணவர் சமூகம் இவ்வாறான பொதுசனநூலகங்களில் தொண்டராக இணைவதனூடாக, எமது தமிழ்ச் சமூகத்துக்குக் காத்திரமான பங்களிப்பினை வழங்குவதுடன், தமது சுயதேவையினையும் பூர்த்தி செய்ய முடியுமானது ஒரு கல்லில் இருமாங்காய்களை வீழ்த்தும் விவேகமான செயல் எனில் மிகையன்று.

மேலும், அனேக பொதுநூலகங்கள் ஏனைய மொழிகளுடன் தமிழுக்கும் தனியிடம் ஒதுக்கி தமிழ் மக்கள் தமது வாசிப்புத் தேடலைப் பூர்த்தி செய்துகொள்ள வழிவகுத்துள்ளன. ஆங்கில மொழியூடான தேடலெனின் அரசியல், பொருளாதாரம், வரலாறு, கணனி, விஞ்ஞான நடைமுறைகள், விஞ்ஞானப்புனைவுகள், அறிவியல் மற்றும் துறைசார் இன்னோரன்ன நூல்கள் என நூல்கள் யாவும் வரிசையாக வகைப்படுத்தப்பட்டுள்ளதனால் தேடலுக்கான 'மாய்ச்சல்' குறைக்கப்படுவதுடன் அன்பும், பண்பும், ஆளுமையும் நிறைந்த சிறப்புப் பயிற்சி பெற்ற நூலகவியலாளர்கள் எமக்கு இன்முகம் காட்டி எந்நேரமும் உதவத் தயாராக உள்ளமையானது நூலகத்தின் சிறப்புக்கு ஒரு மணி மகுடம் என்பது பொருத்தப்பாடானதே.

இது தவிர, ஒலி / ஒளி இறுவட்டுக்கள் முற்பதிவினூடாக இலவசமாக தவணை-யடிப்படையில் நூலகங்களால் வழங்கப்பட்டு வருகின்றமையும் இன்னொரு வரப்பிரசாதமே. ஏனெனில் கிடைத்தற்கரிய பல ஒளி இறுவட்டுக்கள் (DVD) இந்நூலகங்களினூடாக இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிகின்றமை எனது சொந்த அனுபவ வெளிப்பாடு. தேவையுள்ளோர் இச்சேவையினை தயங்காது தவறாது பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். ரொறன்ரோ பெரும்பாகத்தினைப் போல ஏனைய மாநகரங்களிலுமுள்ள அந்தந்த மாநகர சபைக்குச் சொந்தமான நூலகங்களினை நாடி எமது வாசிப்புத் தேடலை விரிவாக்கித் தரணியெங்கும் தமிழ் வளர்ப்பதுடன் மட்டுமன்றி ஆங்கிலப் புலமையினையும் மேம்படுத்தலினூடாக, இக்கனடியச் சூழலில் இலகுவாக இசைவாக்கம் பெற வழிசமைக்கும் ஏதுநிலையினை உருவாக்கிடவும் முடியுமென்பது திண்ணம்.

தேடல் உள்ள உயிர்களுக்கே வாழ்வில் சுவையிருக்குமல்லவா? எமக்கென்றோர் நாடு, எமக்கென்றோர் மொழி, எமக்கென்றோர் பண்பாடு எனத் தமிழின் தனித்துவத்தினை வாழ்க்கைத் தேடலில் அவாவி நிற்கும் எம்மவரில் குறிப்பாக இளம் தமிழ் மாணவர் சமூகம், தமது கல்விக்கூடங்களிலுள்ள நூலகங்களுடன் மட்டும் நின்று விடாது, இச்சமூக நூலகங்களிலும் அங்கத்துவம் பெற்று சங்ககாலம் முதல் கலிகாலம் வரை வரிசைப்படுத்தப்பட்டுள்ள நூல்களையும், பயனுள்ள காணொளி இறுவட்டுக்களையும் தேடிப்பெற்றுப் பயனடைவதனூடாக உலகளாவிய ரீதியில் தமிழுக்கென ஓர் சர்வதேச அடையாளத்தையும், அங்கீகாரத்தையும் ஈட்டித்தரப் பாடுபடவேண்டியது வரலாற்றுக் கடமையாகின்றது. அவ்வகையில் எனது இளமைக்கால வாசிப்புக்குத் தீனி போட்ட யாழ். திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தினையும் இவ்வேளையில் நன்றியுடன் எண்ணிப்பார்க்கின்றேன். இளையோரை மட்டுமன்றி, தனிமையில் உழலும் முதுமிழர்களையும் ஆதரவுக்கரம் நீட்டி அழைக்கின்றன இச்சமூக நூலகங்கள். வாசிப்பின் மூலம் மனிதன் ஞானியாகலாம் என்பதனை எவரும் மறுக்கார். 'வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்' என்று எமது முன்னோர்கள் சும்மாவா சொல்லியிருப்பார்கள்?

உசாத்துணை:

- History of Toronto Public Library- http://www.tor ontopubliclibrary.ca/about-the-library/library-history/
- 10 Best Libraries in the World- http://www.funonthenet.in/places/best-libraries-world.html
- Toronto Public Library Home- http://www.torontopubliclibrary.ca/

sriragawan@thaiveedu.com

Life Insurance $0 First Month Premium*

upto $500,000 in Coverage for No Medical

* monthly payment plans only

CANADA PROTECTION PLAN®

Simply Peace of Mind

Pakeerathan Sahadevan
Insurance Broker
Dir: 416.908.6003



1st Mortgage

Re-Financing

Home Equity Line of Credit

Good or Bad Credit

2nd Mortgage Low Finder Fee

Low Interest Rate

PROFESSIONAL, RELIABLE & EXPERIENCED SERVICE

LOKAN SUNDARAM AMP
Mortgage Broker
416-450-3984
www.lokanmortgage.com

MORTGAGE ALLIANCE

5 Year Rates:

Fixed **2.39%**
Variable **2.14%**

I Provide Mortgage Solutions...

...For Any Situation

குழந்தைகளின் பாசப்பிணைப்பு தடைப்படும்போது...?

- த. சிவபாலு -

கனடாவில் உள்ள ஒரு மாகாணத்தில் 'பத்துவயதுச் சிறுமி தூக்கிட்டுத் தற்கொலை' என்ற அதிர்ச்சியூட்டும் செய்தி கனடாவை மட்டுமல்ல உலகமெலாம் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. கேட்போரைத் திகைக்க வைத்தது.

இது ஏன் நடந்தது? அதுவும் பத்து வயதுப் பிள்ளைக்கு தூக்கில் மாட்டிக்கொள்ள வேண்டிய ஒரு நிலை ஏன் எற்பட்டது? இது அறிவாற்றல் படைத்த ஒவ்வொருவரையும் சிந்திக்கத்தூண்டியது. பிள்ளையின் இந்த முடிவுக்கு பிள்ளையின் குடும்பம் மற்றும் சமூகப் பின்னணிகளே காரணம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பெற்றோரின் அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு, மேற்பார்வை, கல்வியறிவின்மை என்பன பிள்ளையின் மனநிலையைப் பாதிக்கும் முக்கிய காரணிகளாக உள்ளன. பெற்றோர் அக்கறையோடு அன்பாகப் பேணியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்பது பலரதும் மனங்களிலும் எழும் கேள்விதான்.

வேலை, பொருளாதாரப் பளு எனப் பல காரணிகளால் பெற்றோர்கள் இருவருமே வேலைக்குச் செல்லும் நிலை பிள்ளைகளோடு பொழுதைக் கழிக்க முடியாதபடி செய்துவிடுகின்றது. இது பல குடும்பங்களின் அவல நிலைமைக்குக் காரணமாகின்றது. வேலைக்குச் செல்லும் பெற்றோர் பிள்ளைகளை 'பிள்ளைகள் காப்பகங்களில்' விட்டுச் செல்லுகின்றனர். இக் காப்பகங்களில் நேரத்தைக் கழிக்கும் பிள்ளைகளுக்குத் தாய்ப்பாசம், தந்தையின் அன்பு, சகோதர பாசம் என்பன என்ன என்று தெரியாமல் வாழும் நிலைமை ஏற்படுகின்றது. பெற்றோர் வேலையால் வரும் போது பிள்ளைகள் உறங்கிவிடுவார்கள். எனவே பெற்றவளின் அன்பைப் பகிர்ந்து கொள்ளவேண்டிய நேரத்தில் அது கிடைக்காமல் மனதில் ஏக்கத்துடன் வளரும் பிள்ளைகளின் நிலை என்ன என்பதனை நாம் சிந்திக்கின்றோமா? ஏதோ காரணங்களினால் தந்தை தாயின் நெருக்கம் கிடைக்காமல் தடைப்படும்போது பிள்ளைகளின் உளவியலில் தாக்கம் ஏற்படுகின்றது. ஏக்கத்துடன் வாழும் நிலையைத்தான் அவர்களுக்கு நாம் விட்டுச் செல்கின்றோம் என்பதனை மறந்து அவர்களுக்கு நாம் என்ன குறை விட்டோம் என்று கேட்கும் பெற்றோரும் இருக்கத்தான் செய்கின்றார்கள். வீடு, வாகனம், பிள்ளைகளுக்குத் தேவையானவை மட்டும் போதாது. அவர்களுக்கு அடிப்படைத்தேவையான அன்பு, பாசம், அரவணைப்பு எப்வெப்போது தேவைப்படுகின்றதோ அவ்வப்போது அது கிடைத்தே ஆக வேண்டும். குழந்தை கருவில் இருக்கும் போதே அன்னையின் உளவியல் தாக்கம் அதனையும் தாக்குகின்றது என்பது மருத்துவர்களின் ஆய்வுகளின் முடிபு.

ஒரு பிள்ளையின் உலகமே பெற்றோர்தான். பெற்றோருடனான நெருக்கம் அல்லது பிணைப்புத் தடைப்படும்போது அந்தப் பிள்ளையின் உளத்தில் பல்வேறு மாற்றங்கள், ஏமாற்றங்கள், கேள்விகள் என்பன ஏற்படுகின்றன என்பது உளவியல் கண்ட முடிவு. ஒரு குழந்தை எவ்விதம் உலகத்திற்கு ஒப்படைக்கப்படுகின்றது என்பது பெற்றோரின் பிணைப்பில் தங்கியுள்ளது. குழந்தை கருவில் உற்பத்தியாகும் வேளையில் இருந்தே அதன் உளவியல் செயற்பாடுகள் ஆரம்பிக்கின்றன. அவை படிப்படியாக வளர்ச்சியடைய அந்தக்குழந்தை வளரும் சுற்றாடல், சூழ்நிலைகள் என்பன முக்கிய பங்காற்றுகின்றன. இவையனைத்துமே குழந்தையின் வளர்ச்சியில் இடர்பாடுகளை அல்லது தடைகளை ஏற்படுத்

தும் காரணிகளாகவும் அமைந்துவிடுகின்றன. சுற்றாடல் மற்றும் சூழல் நிலைமைகள் என்பன பெற்றோர், பாதுகாவலர், அல்லது பராமரிப்பாளர்கள் என்பவர்களோடு வெவ்வேறு கண்காணிப்பாளர்கள், நோய்கள், போதைப்பாவனை, குடும்ப வன்முறைகள், பெற்றோர் பிரிந்துவாழுதல் போன்ற காரணிகள் ஒரு குழந்தையின் வாழ்வியலைப் பாதிக்கும் அல்லது வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் காரணிகளாக அமைகின்றன. ஒரு குழந்தை உலகத்திற்கு எப்படியானதாக ஒப்படைக்கப்படுகின்றது என்பது அந்தக் குழந்தையின் பெற்றோர்களின் கைகளிலேய தங்கியுள்ளது. பெற்றோரின் பாசப்பிணைப்புத்தான் குழந்தையின் உள வளர்ச்சியிலும் உடல்வளர்ச்சியிலும் தாக்கத்தைக் கொண்டுள்ள பிறக்காரணிகளாகக் கொள்ளமுடியும். பெற்றோரின் மரபணுத்தன்மைகளின் தாக்கத்தைவிட, சுற்றாடல் தாக்கம் ஒரு குழந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கும் காரணியாக அமைகின்றது.

தந்தையின் அல்லது தாயின் அரவணைப்பை இழந்த குழந்தைகளே வளர்ந்தவர்களாக வரும்போது பல குற்றவியல் செயல்களில் ஈடுபடுகின்றார்கள் என்பது ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

பெற்றோரைக் கொண்டு பிள்ளைகளை அறியலாம் என்பது தொன்று தொட்டுப் பயின்றுவரும் முதுமொழி. "தக்கார் தகவி லர் என்பது அவர் அவர் எச்சத்தால் காணப்படும்." என்றார் வள்ளுவப் பெருந்தகை. ஆம் பெற்றோரின் அணைப்பும், வழிகாட்டலும் ஒரு குழந்தைக்கு இன்றியமையாததாகும். குழந்தை நல்லவனாக, வல்லவனாக, அறிவுடையவனாக வளர்வதற்கு வழிவகுக்க வேண்டியவர்கள் பெற்றோரே. பெற்றோரும் குழந்தைகளும் மனிதப்பிறவிகளே. அவர்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்னும் கட்டுப்பாட்டுக்குள் அடக்கி வைக்க முடியாதவர்கள். இப்படித்தான் இருக்கவேண்டும் என்னும் நிபந்தனைக்கு அல்லது சித்தாந்தத்திற்கு அப்பாற்பட்டவர்கள். எனவே ஒரு சிறந்த பெற்றோர் பிள்ளை உறவினை எவ்விதம் கட்டியெழுப்பலாம் என்பதனைக் கருத்திற் கொள்ளவேண்டும். பெற்றாரோ பிள்ளையோ நூற்றுக்கு நூறுவீதம் சரியானவர்களாக இருக்கமுடியாது. எனவே அவர்களின் உறவு எவ்வளவிற்கு சாத்தியமானதோ அந்தவளவிற்கு இறுக்கமானதாக அமையவேண்டும். அதற்குப் பெற்றோர் என்ன செய்ய வேண்டும் என்பதனைக் கருத்திற்கொண்டதாக இக்கட்டுரை அமைகின்றது. பிள்ளைகளின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையப் பெற்றோர் செய்யத்தக்கவை எவை என்பனவற்றை நோக்குவோம்:

குழந்தைகளோடு மிக அதிக நேரத்தைப் பெற்றோர் செலவிடுதல் வேண்டும். குழந்தைகள் தங்களுக்குப் பாதுகாப்பு உண்டு, தங்களில் கரிசனை கொள்கின்றார்கள் என்பதோடு தங்களை மிகவும் நேசிக்கின்றார்கள் என்பது குழந்தைகளுக்குத் தெரியவேண்டும். தங்களுக்கு அன்பு செலுத்த யாருமே இல்லை என்று ஒரு பிள்ளை நினைக்குமானால் அந்தக் குழந்தையிடம் ஏற்படும் உளவியல் தாக்கம் வளர்ந்து பெரியவனாக வரும்போது விஸ்தாரமாகி விசுவரூபம் எடுத்து விடும் என்பதனைக் கருத்திற் கொள்வதன் மூலம் நல்ல சுற்றாடலைக் குழந்தைக்கு ஏற்படுத்திக்கொடுக்கும் போது வீடு உண்மையிலேயே மகிழ்ச்சிமிக்கதாகவும் ஆரோக்கியம் மிக்கதாகவும் அமைந்துவிடுகின்றது.

உணர்ச்சிவசப்பட்டு பிள்ளைகளோடு உரையாடுதல் உண்மையிலேயே அவர்களது உளத்தைப் பாதிப்பதோடு அவர்களை உண்மை சொல்லாமல் தடுக்கவும் கூடும். எனவே வினாக்களைக் கேட்கும் போது நல்ல சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டு மிகவும் இளகிய குரலில் கேள்விகளைக் கேட்டறிதல் அவர்களும் விருப்போடு விடைகளைத் தரத் தூண்டுவதாகவும் அமையும்.

பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும்போது பிள்ளையை நல்லதொரு மகிழ்ச்சிகரமான இடத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு அதிகளவு அன்பைக் காட்டிக் கொண்டு அவர்கள் செய்தது சரியானது அல்ல என்பதனை மிகவும் அமைதியாக சிரித்துச் சிரித்துச் சொல்லுதல் வேண்டும். ஒரு போதும் தவறான செயல்களுக்கு உடன்படுதல் கூடாது. ஏனெனில் அவர்கள் உங்கள் பிள்ளைகள்.

உங்கள் பிள்ளைக்கு எதிராகக் கடினமான அல்லது முரண்பாடான செயல்களை எப்போதும் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும். உங்கள் பிள்ளை தவறான நடத்தையைக் கொண்டுள்ளபோதும் உங்கள் அன்பைக் காட்டத் தவறக்கூடாது. அன்பைக் காட்டுவதன் மூலம் அவர்கள் செய்யும் தவறான நடத்தைகளை அல்லது பிழையான செயல்களை நீங்கள் வெறுப்பதனை அவர்களுக்குக் காட்டவேண்டும். எவ்வாறாயினும் அவர்களது நடத்தை அல்லது எண்ணப்பாங்கு, சிந்தனையோட்டம் தவறாக இருப்பினும் அவர்கள் மீது அன்பைப் பொழிவதனை அதிகப்படுத்த வேண்டுமே ஒழிய அதனை நிறுத்தவே கூடாது.

உங்கள் குழந்தை, சரி எது தவறு எது என்பதனை அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். உங்கள் குழந்தைக்கு நீங்கள் எது பிழை எது சரி என்பதனைக் காட்ட வேண்டும். தவறானவற்றை உங்கள் பிள்ளைகள் அறியக்கூடாது என மறைத்தல் கூடாது. தவறானவற்றைத் தெரியவிடாது மறைத்தால் அவற்றை அவர்கள் எப்போது தவறவிட்டுவிட்டோம் என உணரும் போது அது ஆபத்தானதாக அமைந்துவிடும். குழந்தையின் கூட்டாளிகள் இவற்றை அவர்களுக்குத் தெரியவைப்பார்கள் என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது. பெற்றோர் தமக்கு மறைத்துவிட்டார்களே என பிள்ளை உணரும்போது அதனைப் பற்றி அறிய அந்தப்பிள்ளை தீய நடத்தைகளில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே அவற்றை ஒழிவு மறைவின்றி தெரியவைப்பது அவர்களை நல்வழிப்படுத்த உதவும். எதையாவது உங்கள் பிள்ளைக்குத் தெரியவைப்பதற்கு வெட்கமோ தயக்கமோ காட்டக்கூடாது. எப்பவோ, எப்படியோ அவர்கள் அறிந்துகொள்ளத்தான் போகின்றார்கள். எனவே முன்கூட்டியே அவர்களுக்குத் தெரியவைத்து அதன்வழி அவர்கள் நல்லதையம் கெட்டதையும் பகுத்து அறிந்துகொள்வது அவர்களைத் தவறான வழியில் செல்லாது தடுக்கும் என்பதனை ஒவ்வொரு பெற்றோரும் உணருதல் வேண்டும்.

உங்கள் பிள்ளையின் உளப்பாங்கை எப்பொழுதும் மேற்பார்வை செய்தல் அவசியமானது. அது அவர்களின் விடயங்களில் அனாவசியமாக உங்கள் மூக்கைப் புகுத்துவதாக அமையாது. அவர்களிடம் சில குறிப்பிட்ட விடயங்கள் பற்றிக் கேள்விகள் கேட்டுக்கொள்ளுங்கள். பெற்றோர் என்ற முறையில் பிள்ளையின் ஒவ்வொரு விடயத்தையும் அறிந்துகொள்ளும் உரிமை உங்களுக்கு உண்டு. எனவே அவர்களோடு மிக நெருக்கமாக உறவாடி கதைகளை மிக லாவகமாகவும் சாதாரண மென்மையான குரலிலும் கேட்டல் வேண்டும். அது அவர்களை உங்கள் பால் நம்பிக்கையையும் பிடிப்பையும் ஏற்படுத்தும். ஒழிவு மறைவின்றி அனைத்தையும் சொல்லுவதற்கு அவர்களுக்கு நீங்கள் காண்பிக்கும் அன்பும் நம்பிக்கையுமே காரணமாக அமையும்.

'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் கெட்டவராவதும் அன்னை வளர்ப்பினிலே' எனப் புலவர் புலமைப்பித்தன் எழுதிய பாடல் வரிகளின் தத்துவார்த்த உண்மையினைச் சிந்தனையில் ஏற்றி பிள்ளைகளின் நலன்பேணி நற்கருமம் ஆற்றுதல் வேண்டும். 'நல்ல ஒரு குடிமகனைப் பெற்றோர்தான் இந்தநாட்டிற்கும், உலகிற்கும் அளிக்கின்றார்கள் என்பதனை மனதிருத்தி பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொள்ளல் அவசியமானது.

sivapalu@thaiveedu.com

Tuition Classes

Tuition classes are given by an experienced retired teacher based on Ontario Curriculam.

English & Math

Grades: S.K. to 8

English:

Grammar, Pronunciation, Vocabulary, Sentence Construction, Comprehension, Creative Writing, Essay, Letter Writing

3650 Kingston Rd.
(opposite to Good Life Fitness)

416 289 3641

வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

MOTOR VEHICLE ACCIDENT

Fractures | Spinal Cord Injury | Brain or Head Injury | Internal Injuries | Scarring or Disfigurement | Catastraphic Injuries

FOR CASH SETTLEMENT KNOW YOUR RIGHTS AGAINST THE INSURANCE COMPANY.

MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

Over 30 Years Combined Experience

Even if you are at fault:

Unemployed . Employed

Passenger . Pedestrian

Cyclist . Travelling in public transit . Student

Housewife.

DON'T BE MISLEAD INTO TAKING A POOR OR SMALL
CASH SETTLEMENT
IF YOU ARE INJURED PHYSICALLY AND/ OR PSYCHOLOGICALLY
CALL US NOW!

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்.

தீபன்

(416) 505-9804

(416) 831-4444

24 Direct Line

2190 Warden Ave., Suite 202,
Toronto, ON M1T 1V6

JRS College

"Committed to providing quality training"

International Students

Now we accept international students

Food Service Worker

Starts on November 22, 2016 @6.00 pm (Tuesday)

STUDENT TESTIMONIALS

"I have chosen Early Childcare Assistant diploma program which is 36 weeks in length at JRS College of Business and Health Care Inc. To do this diploma program at JRS College, I received over $34, 000 from government."

Mathu

"I have chosen 40 weeks of Health Office Administrator diploma program at JRS College of Business and Health Care Inc. Due to long duration program I received $44, 000 through Second Career to cover my studies, day care, living allowance and transportation."

Thiny

"With the help of JRS College of Business and Health Care Inc., I am able to take Accounting and Payroll Administration diploma program with the government funding of $36, 000. The main reason for me to get high amount is since the program duration is 45 weeks."

Suba

15 Programs

Business

-Accounting & Payroll Admin-PT	(50 Weeks)
-Accounting & Payroll Admin	(45 Weeks)
-Computerized Accounting	(30 Weeks)
-Office Assistant	(16 Weeks)

Health Care

-Community Service Worker	(52 Weeks)
-Early Childcare Assistant	(36 Weeks)
-Health Office Administrator	(40 Weeks)
-NACC PSW 2015-PT (Certificate)	(35 Weeks)
-NACC PSW 2015 (Certificate)	(35 Weeks)
-Pharmacy Assistant	(46 Weeks)

Technology

-3D Animation for Video Games	(72 Weeks)
-Graphic Design	(34 Weeks)
-Web Development	(43 Weeks)
-Computer Network & Security	(40 Weeks)
-Engineering Design and Drafting Technologist	(28 Weeks)

Contact info

(Midland & Finch)
330-4168 Finch Ave East
Scarborough, ON M1S 5H6
416-292-2455

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒருமணம்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315

கனடா:
Tel: 647-724-4188

email: info@orumanam.com

மணமகள் தேவை

1. 31 வயது, 5'7" Student visa, Engineer in UK. தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2871.

2. 29 வயது 5'9", UK தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 2872.

3. 35 வயது 5'10" Born & brought up in UK, Working as a quality analyst. Ref 2881.

4. 31 age 5'6" Born & brought up in UK, Doctor. Ref 364.

5. 27 வயது. 5'6" Living in India, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2867.

6. 41 வயது, 5'2" Graduate , PR in Uk, Working in a supermarket as an assistant manager, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 2869.

7. 38 வயது, 5'10" Born and brought up in UK, Graduate, Engineer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2856.

8. 31 வயது. 5'7" Student visa, Working in a travel agent and artist, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2857.

9. 49வயது, 5'9" Divorced, Graduate, working in a NHS, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 2858.

10. 29வயது, 5'8" Born & brought up in Uk. Graduate Chartered accountant. Working in a company as a Director, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2860.

11. 36 வயது, 5'6" Graduate, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2864.

12. 38வயது, 5'6" Graduate working as an accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2865.

13. 54 வயது, 5'9" Divorced, German citizen, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 2835.

14. 29 வயது, 5'6" work permit visa Graduate engineer, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 2837.

15. 50 வயது, 5'10" British citizen, Divorced, Graduate working as a research scientist in central london, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2838.

16. 26 வயது, 5'10" british citizen, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2843.

17. 38 வயது, 5'6" Temporary visa, Living in France, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2850.

18. 32 வயது, 5'5" British citizen, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2851.

19. 34 வயது, 5'8" Born & brought up in UK. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5805.

20. 36 வயது, 5'6" Work permit, Finished master degree, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5396.

21. 50 வயது, 5'9" Norway citizen, Graduate working in a company as a sales executive, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5781.

22. 32 வயது, 5'7" British citizen, graduate, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5783.

23. 26 வயது, 5'6" British citizen, Working in a company as a Manager, divorced, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5784.

24. 34 வயது, 5'4" British citizen, Finished degree in computer engineer working as an accounts manager, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5788.

25. 28 வயது, 5'10" Graduate, Working as a software engineer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5789.

26. 39 வயது, 5'5" British citizen working as a electronic engineer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5793.

27. 30 வயது, 6'0" British citizen, RC, Working as compliance & development manager for a company, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5735.

28. 39 வயது, 5'6" Temporary visa, Living in France, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5768.

29. 31 வயது, 5'8" Temporary visa, Finished MSc in Software Engineering, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5132.

30. 35 வயது, 5'1" Temporary visa, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5766.

31. 27 வயது, 5'8" Born & brought up in Uk. Graduate working as a Medical sector, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5771.

32. 31 வயது, 6'1" Divorced, Born & brought up in UK. Graduate in Bsc & Msc. working as a senior transport planner, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5772

33. 32 வயது, 5'7" Temporary visa, Christian தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5769.

34. 28 வயது, 5'9" work permit visa, graduate, working as an IT sales executive, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5777.

35. 48 வயது, 5'0" Divorced, Living in colombo, working in a press, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5729.

36. 33 வயது, 5'3" Temporary visa, graduate in electrical & electronic engineer, working as a engineer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5472.

37. 36 வயது, 5'7" British citizen, Divorced, Doctor, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5780.

38. 50 வயது, 5'5" British citizen, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5738.

39. 34 வயது, 5'7" Graduate in Bsc & Msc (Business & information), தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5739.

40. 34 வயது, 5'9" Business visa working as an IT Consultant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5743.

41. 32 வயது, 5'9" PR, Graduate in MSc working in a project manager construction company as a civil engineer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5746.

42. 37 வயது, 5'6" Temporary visa, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5749.

43. 32 வயது, 5'9" British citizen, working in a supermarket, தகுந்தமண மகனை தேடுகின்றனர் Ref 5181.

44. 47 வயது, 6'0" British citizen Machine operator working in a company, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5334.

45. 31 வயது, 5'6" British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5406.

46. 33 வயது, 5'6" Work permit Graduate in Bsc computer science, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5753.

47. 29 வயது, 6'0" student visa Graduate, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5721.

48. 44 வயது, 5'11" Divorced self employed, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5725.

49. 44 வயது, 5'8" British citizen Graduate Now working in Investment bank as an Accountant, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 4558.

50. 46 வயது, 5'8" MBA holder Divorced working as a representative marking, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 3856.

51. 35 வயது, 5'8" British citizen, Divorced, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5718.

52. 29 வயது, 5'5" Born & brought up in UK, Graduate working as an Electronic engineer, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5498.

53. 31வயது, 5'6" Graduate Engineer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5694.

54. 33 வயது, 5'7" Student visa working in a Business establishment, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5697.

மணமகன் தேவை

1. 28 age 5'6" Born & brought up in UK, Working as a teacher. Ref 2873.

2. 32 age 5'7" British citizen. Teacher. Ref 2876.

3. 28 age 5'5" Born & brought up in UK, Doctor. Ref 2880.

4. 34 age 5'5" Born & brought up in UK, Doctor. Ref 2726.

5. 38 age 5'6" british citizen. Ref 2882.

6. 29 age 5'4" Born & brought up in UK, Ref 2885.

7. 25 age 5'4" British citizen. Doctor. Ref 2868

8. 24 வயது, 5'5" British citizen, Finished degree in Pharmacist. Now working in a same field, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2866.

9. 24 வயது, 5'2" British citizen, Doctor, தகுந்த மணமகனைதேடு கின்றனர் Ref 2868.

10. 39 வயது, 5'5" Living in Holland, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2870.

11. 40 வயது, 5'0" Graduate Living in India, தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref 2854.

12. 33 வயது, 5'2" Now studying PHD, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 1479.

13. 39 வயது, 5'1" Born & brought up in Uk, Graduate in Msc, working as a medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2070.

14. 32 வயது, 5'4" Born & brought up in Uk. Graduate, Accountant., தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2834.

15. 25 வயது, 5'5" British citizen, Graduate, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2845.

16. 25 வயது, 5'6" born & brought up in Uk, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2848.

17. 33 வயது, 5'4" Divorced, Work permit, Graduate, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5798.

18. 37 வயது, 5'6" MBA & CIMA qualified accountant, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5799.

19. 32 வயது, 5'3" British citizen as a Lawyer, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5801.

20. 26 வயது, 5'2" British citizen, Graduate in accounts & finance, working as an accountant, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5803.

21. 30வயது, 5'4" born & brought up in uk, Doctor, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5806.

22. 28 வயது, 5'6" British citizen, medical student final year, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5807.

23. 33 வயது, 5'2" British citizen, graduate in financial economic, working in property, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 4483.

24. 29 வயது, 5'2" European citizen, Doctor, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5809.

25. 26 வயது, 5'2" British citizen, graduate in Bsc clinical science. Working in a high school as a letting supervisor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5808.

26. 26 வயது, 5'4" Born & brought up in uk, Graduate, working in a pharmaceutical company as a laboratory technician, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5530.

27. 26 வயது, 5'3" Born & brought up in Uk, Graduate Lawyer, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5785.

28. 32 வயது, 5'2" British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5786.

29. 36 வயது, 5'0" Born & brought up in UK, Graduate in maths & computing. Working in a Investment Bank, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5790.

30. 25 வயது, 5'6" Born & brought up in UK. Studied in a leading girls private school. Graduate in Biomedical. Now working as an acting manager, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5778.

31. 33 வயது, 5'3" British citizen, Graduate Bsc in IT, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5796.

32. 42 வயது, 5'5" Widowed, British citizen, Working as a teacher, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5797.

33. 35 வயது, 5'6" British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 3423.

34. 45 வயது, 5'5" Finished degree in CEMA & MBA. Working as an accountant, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5757.

35. 26 வயது, 5'0" Born & brought up in Canada, graduate Now studying achieve maths, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5758.

36. 23 வயது, 5'4" British citizen, Graduate in finance working as a financial sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5435.

37. 31 வயது, 5'5" British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5761.

38. 42 வயது, 5'8" Divorced, British citizen, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5774.

39. 28 வயது, 5'5" working in Singapore, Graduate in BSc, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5779.

40. 29 வயது, 5'3" DLR visa, graduate in Bsc maths Now studying Msc, தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref 282.

41. 30 வயது, 5'3" British citizen, Graduate working as a podiatrist in NHS. தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5400.

42. 31 வயது, 4'10" Divorced, British citizen Studying Nurse. தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5731.

43. 26 வயது, 4'9" British citizen Graduate in Biomedical science working as a Lab technician, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5736.

44. 26 வயது, 5'4" British citizen Finished Bsc working in a headquarter as a IT support, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5748.

45. 23 வயது, 5'4" Born & brought up in UK. Lawyer, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5752.

46. 26வயது, 5'4" Living in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5722.

47. 39வயது, 5'4" Divorced, Living in Norway medical sector, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5723.

48. 26வயது, 5'6" Born and brought up in UK, Graduate in Bsc & Msc. Working as a pharmacist, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5728.

49. 25 வயது, 5'3" British citizen Accountant now doing chartered accountant, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5730.

50. 31 வயது, 5'2" Finished diploma in Preschool, Now working as a teacher, Living in sri lanka, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5705.

51. 29 வயது, 5'2" British citizen Graduate in Msc. Now studying Phd, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5710.

52. 29 வயது, 5'2" British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5719.

53. 29 வயது, 5'4" British citizen, graduate working as a Finance project manager, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5720.

54. 26 வயது, 5'2" British citizen working as a Lawyer, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5693.

55. 22வயது, 5'1" Living in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5695.

56. 29 வயது, 5'3" Born & brought up in UK, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5698.

57. 30 வயது, 5'4" Born in Germany brought up in Uk Graduate in Bsc. Now studying in medicine, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5700.

58. 29 வயது, 5'6" British citizen. Christian working as a Child care, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5505.

59. 29வயது, 5'2" Living in Sri Lanka, working as a accountant, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5704.

60. 34வயது, 5'4" British citizen graduate in Bsc mathematical computing, Working as a accountant, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5504.

61. 38 வயது, 5'5" British citizen, Doctor Consultant, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5673.

62. 33 வயது, 5'5" British citizen Doctor, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref 5677.

63. 25 வயது, 5'4" Born and brought up in UK, Finished degree in Sociology Bsc, Now working as a teacher, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5679.

64. 30 வயது, 5'2" British citizen Finished degree in Biomedical science and human resource, Now working as a administrator, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref 5680.

இணையத்தில்
மேலதிக விபரங்கள்
www.orumanam.com

Bodhi Meditation for Health for Life

A federally registered not-for-profit charity organization in Canada, Bodhi Meditation is the distillation of wisdom and experiences of Master JinBodhi through decades of self-cultivation. Because of its effectiveness, it has quickly gained popularity and spread to more than thirty countries and regions around the world in a short ten years. Millions of people have benefited from it with improved health and quality of life.

Regardless of gender, age, cultural background, belief, occupation, language or nationality, anyone is able to learn and practice Bodhi Meditation within a short period of time. It can help to quickly replenish our energy, promote self-healing and stress relief. Many people have experienced improvement in a variety of acute and chronic conditions including but not limited to:

- Headache, migraine, insomnia, nervous breakdown, sub-health etc.
- Back pain, pain and numbness in limbs, rheumatism etc.
- Discomfort and weakening in internal organs.
- All types of allergies.
- High blood pressure, high cholesterol and high blood sugar.
- Depression, mood swings, and low self-esteem.

We host regular classes every month and our Centre is open every day with experienced teachers leading meditation practices from 5:30am to 6:30pm. Take a well-deserved break from your busy life and find your oasis in Bodhi Meditation where you can relax, refresh and recharge. Drop-in anytime to get a feel, or better yet, attend our regular classes to reap the maximum benefit! Join us in our beautiful home at

180 Yorkland Blvd, Toronto, M2J 1R5, Tell (416) 223-1462, (647) 797-7768, email:putitor@gmail.com, Website: www.puti.ca

菩提禪修
BODHI MEDITATION

Add: 180 Yorkland Blvd, Toronto, M2J 1R5
Tel: (416) 223-1462, (647) 797-7768
Email: putitor@gmail.com
Web: www.puti.ca

நலம் நாடுவதும் அதுவே
உங்கள் மாற்றத்தின் மாற்றத்திற்கு
என்னை அழையுங்கள்

வீடு
வியாபார நிலையங்கள்
வாங்க
விற்க

HOMELIFE
HIGHER STANDARDS

No credit
Bad credit
No Problem

Kathir

Buy or Sell call 24-7

Subramaniam Kathirgamanathan P.Eng. *HomeLife GTA Realty Inc. Brokerage.*

Cell: 416 856 6900
kathirhomes@gmail.com

Bus:416 321 6969
Fax:416 321 6963

வீட்டுக் காப்புறுதிக் கட்டணம் நிர்ணயித்தல்

- செந்தூரன் புனிதவேல் -

"காப்புறுதி கட்டணத்தை எப்படி நிர்ணயிக்கிறீர்கள்?" என்று நண்பர் ஒருவர் கேட்டார். இந்தக் கேள்வி எனக்குப் புதிதல்ல. காப்புறுதி முகாமைத்துவத்தில் இருக்கும் என்னிடம் இந்தக் கேள்வியைப் பலரும் கேட்டு உள்ளார்கள். இதுபற்றி ஒரு தெளிவான விளக்கத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

காப்புறுதி என்பது வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாராத நாட்டங்களைக் ஈடுசெய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. இதற்கான கட்டணத்தை முன் அனுபவத்தின் துணைகொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. பல அமைப்புக்கள் இந்தச் சேவையை வழங்க முற்படுவதால் இயன்றவரை கட்டணத்தைக் குறைவாக வைத்திருப்பது முக்கியமாகிறது.

ஒரு காப்புறுதியின் கட்டணத்தைத் தீர்மானிக்கும் காரணிகளைக் கவனத்தில் கொள்ளுவதவசியம். முதலாவதாக வீட்டுக் காப்புறு-தியைக் கவனிப்போம்.

வீட்டுக் காப்புறுதி:

1 - இடம் அல்லது ஸ்தானம்:

இது ஒரு முக்கிய காரணியாக வீட்டுக் காப்புறுதிகளில் இருப்பது வியப்பில்லை. அதிகம் களவுகள், நெருப்புகள் போன்ற அனர்த்தங்கள் நடக்கும் சுற்றாடலில் இருக்கும் வீடுகளுக்குக் காப்புறுதிக் கட்டணம் அதிகமாகவே இருக்கும்.

2 - வீட்டின் வயது / அளவு மற்றும் சிறப்பம்சங்கள்:

பழைய வீடுகள் கூடிய பிரச்சினைகளை முகம் கொடுப்பதனால் பழைய வீடுகளுக்குக் காப்புறுதிக் கட்டணம் அதிகமாயிருப்பது இயல்பானதே, மேலும் அவற்றின் அளவு, அதாவது பெரியவீடுகளில் நெருப்புப் போன்ற அனர்த்தங்கள் ஏற்படுகையில் கூடிய செலவினம் வருவதனால் அவற்றிற்கான கட்டணம் மிகையாக இருக்கும். வீட்டில் உள்ள தன்மைகள் உதாரணமாக வீடு குளிர்படுத்தப்பட்டிருந்தால், இதுபோன்ற சிறப்பம்சங்கள் இருப்பின் கட்டணம் சற்று மிகையாக இருக்கும்.

3 - கட்டிடத்திற்காகப் பாவிக்கப்பட்ட கட்டடப்பொருட்கள்:

உதாரணத்திற்கு கல்லால், அல்லது செங்கற்களால் கட்டிய சுவர்கள் இருப்பின் அவை Dry wall சுவர் வீடுகளிலும் வித்தியாசமாக இருக்கும். டொரண்டோ மொன்றியல் போன்ற நகரங்களில் பெருமளவு வீடுகள் Shingle எனும் கூரையினால் அமைந்திருப்பினும் மரப்பட்டையால், இரும்புத்தகட்டால் அமைந்த கூரை வீடுகளும் உண்டு என்பதை மறந்து விடலாகாது. எனவே கட்டிடப்பொருட்களினால் காப்புறுதிக் கட்டணம் வித்தியாசப்படும்.

4 - உஷ்ணப்படுத்தும் உலைகள்:

கனடாவில் உள்ள வீடுகள் அனைத்துமே குளிர் காலத்தில் உஷ்ணப்படுத்வேண்டியிருக்கும். இந்த உலைகள் மூன்று வகையான எரிபொருட்களைப் பாவிக்கும். அவை மின்சாரம், இயற்கைவாயு எரி எண்ணை. இதையும்விட சூரிய உலை பாவித்தும் வீடுகள் சூடாக்கப்படுவதை மறந்துவிடலாகாது இந்த உலைகளின் எரிபொருள், வயது ஆகியவையும் ஒரு தாக்கத்தைக் காப்புறுதி கட்டணத்தில் ஏற்படுத்தும்.

5 - கழிவுநீர் தேக்கம் (Sewer back up):

நீரினால் காற்றினால் ஏற்படும் அனர்த்தங்களும் ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தும் உதாரணத்திற்கு மிகப்பழைய வீடுகள் உள்ள பகுதியில் கழிவு வாய்க்கால்கள், குழாய்கள் பழசாகி பழுதடைந்து மீண்டும் மீண்டும் செலவை ஏற்படுத்துமாகையால் இத்தகைய பகுதியில் காப்புறுதி கட்டணம் மிகையாகக் காணப்படும்.

6 - சொந்தப் பாவனைப் பொருட்களும் உடமைகளும்:

சொந்தப் பாவனைப் பொருட்கள், மற்றும் உங்கள் தனிப்பட்ட உடமைகளின் பெறுமதி ஆகியனவும் கட்டுப்பணத்தை நிர்ணயிப்பது இயல்பானதே. அதிலும் பொதுவாக ஒரு காப்புறுதி மொத்தமாகத் தனிப்பட்ட உடமை இத்தனை ஆயிரம் எனக் குறிப்பிடினும் சில பொருட்களின் வரையறை நிர்ணயித்திருப்பார்கள். உதாரணத்திற்கு நகைகள் இரண்டாயிரம் அல்லது ஐயாயிரம் என ஒரு வரையறை வகுத்திருப்பார்கள். அதற்கு மேலான நகை வீட்டில் வைத்திருப்பதானால் மேலதிக கட்டணத்தை அறவிடுவது இயல்பானதே. இதேபோலவே வேறுபல பொருட்களுக்கும் வரையறை உளது.

7 - சுற்றாடல்:

நீங்கள் வதியும் இடத்தில் பல களவுகள், தீ, வெள்ளம் போன்ற அனர்த்தங்கள் இடம் பெறுமானால் அப்பகுதிகளில் உள்ள அனைத்து வீட்டுக் காப்புறுதிக் கட்டணங்களும் சற்று அதிகமாகவே இருப்பது இயல்பாகும். இத்தகைய சுற்றாடலில் வீடுகள் மலிவாகவும் இருக்கும். எனவே மலிவாக வீடு வாங்கலாம் என்பதற்காக இத்தகைய சற்றாடலில் வீடு வாங்குவது வேலியில் ஓடும் ஓணானை சட்டைக்குள் விட்டு விடுவதுபோல் இருக்கும்.

8 - தீ, களவு:

Alarmகளையுடைய வீடுகளுக்குக் கழிவு கொடுப்பது வளமையாகும். காரணம் இத்தகைய வீடுகளில் தீமைகள் நடந்தாலும் அதனால் ஏற்படும் நட்டம் சொற்பமாகவே இருக்கும்.

9 - தீயணைக்கும் படைநிலையத்திற்கும் வீட்டிற்குமான தூரம்:

தீயணைக்கும் படைநிலையத்திலிருந்து வீட்டின் தூரமும் காப்புறுதிக் கட்டணத்தை நிர்ணயிக்கும். டொரண்டோ, மொன்ரியால் போன்ற பெரு நகரங்களில் வீடுகள் அனைத்துமே தீயணைக்கும் படை நிலையத்திலிருந்து ஒரிரு கிலோமீட்டர் தூரத்திற்குள்ளேயே இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. அத்துடன் நிர்ச்சூத்திரம் (Hydrant) வீட்டிற்கு நூறு யார் தூரத்திற்குள் இருப்பதைக் காணலாம். ஆனால் நாடளாவிய விதத்தில் பார்க்கையில் பெருமளவு வீடுகள் தீயணைக்கும் படை நிலையத்திலிருந்து பல கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. அப்படி தீயணைக்கும் படை நிலையம் தூரத்தில் அல்லது நீர்ச்சூத்திரம் தூரத்தில் இருப்பின் கட்டணம் அதிகமாயிருக்கும்.

10 - நிலக்கீழ்ப் பகுதி (பேஸ்மன்ட்) வாடகைக்கு விடல்:

நிலக்கீழ்ப் பகுதி (பேஸ்மன்ட்) வாடகைக்கு விடப்பட்டிருக்கும் வேளைகளில் அதற்கான சிறுதொகைக் கட்டணத்தைப் பெறப்படும். அப்படி அறிவித்துக் கட்டணம் செலுத்தப்படுவதால் அங்கு ஏற்படும் அனர்த்தங்களுக்கும் நஷ்டஈடு தரப்படும் என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியம்.

11 - நம்பிக்கைச் சுட்டு எண் (Credit Score):

நம்பிக்கைச் சுட்டு எண். ஏது வீட்டு அடமானக்கடன், கடன் அட்டை போன்றவற்றிற்குப் பாவிக்கப்படும் நம்பிக்கைச் சுட்டு எண் (Credit Score) எதற்காக என்று கேட்க இடம் உண்டு. அனுபவத்தில் காப்புறுதி அமைப்புக்கள் குறைந்த நம்பிக்கைச்சுட்டு எண் உடையவாகள் வீட்டில் கவலையீனம் காரணமாகப் பல அனர்த்தங்கள் நிகழ்வதை அவதானித்துள்ளார்கள். இதன் நிமிர்த்தம் நம்பிக்கைச்சுட்டு எண் குறைவாக உள்ளவர்களுக்குக் காப்புறுதிக்கட்டணத்தைக் கூட்டிவைத்துள்ளார்கள்.

12 - கடந்தகாலத்தில் காப்புறுதியில் இருந்து பணம் பெற்றவர்கள்:

கடந்தகால அனுபவம். அதாவது முன்பு காப்புறுதியில் இருந்து பணம் பெற்றவர்களுக்குக் கட்டணத்தைச் சற்றுக்கூட அறவிடுவார்கள். அதேவேளை தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு ஒருவித அனர்த்தமும் இல்லாது இருப்பின் பத்து வீதக் கழிவும் கொடுப்பார்கள். இங்கு இன்னும் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். குட்டக்குட்டக் குனிபவனும் மடையன், குனியக் குனியக் குட்டுபவனும் மடையன் என்ற வாக்குக்கமைய அடுத்தடுத்துக் காப்புறுதியில் பணம்பெற விளைந்தால் ஒரு நிலையில் அவர்கள் காப்புறுதியை நிறுத்திவிடுவார்கள். இந்நிலையில் வேறு அமைப்பில் காப்புறுதி பெறுவதும் கடினம். இந்நிலை வராது தவிர்ப்பது யாவர்க்கும் நலம்.

13 - எத்தகைய காப்புறுதியை நீங்கள் பெறுகின்றீர்கள்:

எத்தகைய காப்புறுதி வேண்டும் என்பதிலும் கட்டணம் நிர்ணயிக்கப்படும். உதாரணத்திற்கு நஷ்டஈடு செய்கையில் புதிய பொருளின் விலை (Replacement Cost Guarantee) அல்லது இழந்த பொருளின் தற்போதைய விலை (actual Cash value) என்ற விதத்தில் ஈடு செய்யப்படலாம். உதாரணத்திற்கு 1990 ஆண்டு $1000இற்கு வாங்கிய உங்கள் தொலைக்காட்சி உபகரணம் இன்று இருபது வருடப் பழைமையானதால் $50ஐ கூட பெறமாட்டாது. ஆனால் அதற்காகப் புதிது வாங்குவதனால் இன்று $1500இற்குமேல் வரும். எனவேதான் புதிய பொருளின் விலையில் நட்ட ஈடு வழங்குவதைப் பலரும் விரும்புவர்.

14 - ஒரு காப்புறுதி அமைப்புடன் ஒன்றிற்கு மேற்பட்ட காப்புறுதிகள் வைத்திருத்தல்:

இறுதியாக ஒரு காப்புறுதி அமைப்புடன் ஒன்றிற்கு மேற்பட்ட காப்புறுதிகள் வைத்திருப்பின் அதற்காக சிலவிகிதக் கழிவு தரப்படும் என்பதனை மறக்கலாகாது.

மேலே நான் வீட்டுக் காப்புறுதிக் கட்டணம் எப்படித் தீர்மானிக்கப்படுகிறது எனச் சுருக்கமாய்த் தந்துள்ளேன். அடுத்த இதழில் வாகனக் காப்புறுதிக்கட்டணம் எப்படித் தீர்மானிக்கப்படுகிறது என்பதனைப் பார்ப்போம்.

தமிழாக்கம்:
குமார் புனிதவேல்

senthuran.p@thaiveedu.com

பால. சிவகடாட்சம் அவர்களின் சரசோதிமாலை அறிமுகமும் பாராட்டுவிழாவும்

தாய்வீடு பத்திரிகையின் தொடர் எழுத்தாளரும் முன்னைநாள் யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியருமான முனைவர் பால. சிவகடாட்சம் அவர்களின் விளக்கவுரையோடு வெளிக்கொண்டுவரப்பட்டது 'சரசோதி மாலை' என்னும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நூல். இந்நூல் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியீடு செய்யப் பட்டமை தாய்வீடு வாசகர்கள் அறிந்ததே. சரசோதி மாலையைத் தொகுத்துத் தந்ததோடு அதற்கு ஒரு விளக்கநூலாக 'சரசோதிமாலை ஓர் சமூக பண்பாட்டுப் பார்வை' என்னும் நூலையும் பால. சிவகடாட்சம் அவர்கள் எழுதியிருந்தார்.

அவ்விரு நூல்களையும் வடமாகாண கல்வி கலாச்சார விளையாட்டுத்துறை பொறுப்பேற்று, அதற்கு ஒரு அறிமுக விழாவினைக் கடந்த செப்ரெம்பர் 26, 2016 இல் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நடத்தியது. இந்தவிழாவுக்கு வடமாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் குருகுலராசா அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு, அங்கு கொண்டுசெல்லப்பட்ட அனைத்து நூல்களையும் பெற்று பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்கியமை குறிப்பிடத் தக்கது.

வடமாகாண சபையின் உறுப்பினர் கலாநிதி சர்வேஸ்வரன் அவர்களின் வரவேற்புரையினைத் தொடர்ந்து, யாழ் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற தமிழ்த் துறைப் பேராசிரியர் சிவலிங்கராஜா, யாழ் பல்கலைக்கழகத்தின் இந்துநாகரிகத் துறையின் பேராசிரியர் வேதநாதன், விரிவுரையாளர் இ. செல்வமனோகரன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

HELP WANTED

மிஸ்ஸிசாகுவா, நோத்யோர்க், ஸ்கார்பரோ
(Mississauga, North York, Scarborough)
ஆகிய பகுதிகளில்
கிளீனிங் வேலைக்கு ஆட்கள் தேவை.

Nathan

647 646 8667

Procare building Maintence

SUPER VISA
INSURANCE
For Parents and Grandparents Visiting Canada
100% FULL REFUND IF VISA REFUSED!
Best rate in the market and
Flexible start date!
Call us to find out more or message us.
Your Super Visa Insurance Specialists..
416 321 6000
416 909 0400
iNFORCE LIFe
Financial Services Inc.
Delivering Promises. Building Trust.
10 Milner Business Court Unit 707 Scarborough, ON M1B 3C6.
www.inforcelife.com

மார்க்கம்
கவுன்சிலர் லோகன் கணபதி

இம்முறையும் இரண்டு நாள் பெருவிழாவாக தயாராகிக்கொண்டிருக்கும்

மார்க்கம் தைப் பொங்கல் விழா

கனடாவில் தமிழ் மரபுப் பெருவிழா

சனவரி 14 & 15, 2017

அனுமதி மற்றும் பங்கேற்பு இலவசம்

சனிக்கிழமை

14 தமிழ் விழா

சனவரி இடம்: மார்க்கம் மாநகரசபைக்கூடம்

ஞாயிறு

15 திருவிழா

சனவரி இடம்: மார்க்கம் அரங்கம்

பொங்கலோ பொங்கல்!
பொங்கலோ பொங்கல்!

மார்க்கம் இது நம்ம பொங்கல்

அனைவரும் வருக!

தொடர்புக்கு 905-479-7748 / lkanapathi@markham.ca

TD Canada Trust

Call Me First and Say "YES" to The Home Of Your Dreams!

For all your Mortgage needs

Purchase, Pre-Approvals, Refinances, Renewals and Switch,
Builder Purchase, Home Line Of Credit, Self Employed,
New Immigrants, Multi Rental Properties.

Peter Sober
Manager, Mortgage Specialist
Platinum Sales Award
Dir: 416-275-3571
Pager: 1-866-767-5446
Fax: 905-240-3882
Email: peter.sober@td.com

சகல Mortgage தேவைகளுக்கும்
தமிழில் உரையாட என்னை அழையுங்கள்

Your Smile Is My Best Return!

Four TD Branch Locations to serve you better

Scarborough: 2650 Lawrence Avenue East, Scarborough, ON, M1P 2S1 | **Markham:** 80 Copper Creek Drive, Markham, ON, L6B 0P2
Brampton: 8125 Dixie Road, Brampton, ON, L6T 2J9 | **Pickering:** 1790 Liverpool Road, Pickering, ON, L1V 1V9



Finding Homes to Fit Your Lifestyle

Suba Aynkharan
Broker
Cell: **416-722-4444**
E-mail: suba_ay@hotmail.com

1265 Morningside Ave, Suite 203
Toronto, ON M1B 3V9
Tel: **416-287-2222**
Fax: 416-282-4488

Each Office Independently Owned and Operated.

RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage

-digi Media-

Make your house work for you!

Consolidate your high interest rate debts into your mortgage prior to renewal time for a better cash flow.

		Before	After
Mortgage Payment	320,000 @ 5.4%	1,934.67	-
Car Loan	21,000 @7.5%	764.25	0.00
Line of Credit	16,000 @ 6.5%	566.67	0.00
Line of Credit 2	12,500 @ 7%	447.92	0.00
Credit Card 1	8,800 @ 12%	352.00	0.00
Credit Card 2	5,200 @ 19%	238.34	0.00
Store Card	3,000 @ 24%	150.00	0.00
New Mortgage payment	386,500 @ 2.8%		1,584.80
Total Dept		386,500.00	386,500.00
Total Payment		**4,450.85**	**1,584.80**

Based on this scenario,

YOU CAN SAVE

$2,866.05

Monthly

-digi Media Creations-

BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216

TD Canada Trust · Scotiabank · Street Capital Financial Corporation · First National Financial LP · MCAP · National Bank of Canada · MERIX

Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479

Dir. **416-436-1111**

Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

மாதாந்த மின்சாரக் கட்டணத்தில் கழிவு

- வேலா சுப்ரமணியம் -

வீடும் விடியலும் - 126

வருமானம் குறைந்தோருக்கு மாதாந்த மின்சாரக் கட்டணத்தில் கழிவு:

வருடந்தோறும் அதிகரித்து வரும் மின்சாரக் கட்டணம் என்பது கனடாவில் நுகர்வோர் மத்தியில் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. மாதாந்த மின்சாரச் செலவைக் கட்டுப்படுத்த பல விதமான யுக்தி முறைகளைக் கையாண்டாலும் அதிகரித்து வரும் மின்சாரம் கட்டணத்தினால் நுகர்வோர் எதிர்மாறான பலன்களை அடைவது என்பது தவிர்க்க முடியாததாக உள்ளது.

நேரத்திற்கு தகுந்தவாறு மின்சாரப் பாவனையைக் கட்டுப்படுத்தல் (Time of Usage) LED மின்குமிழ்களை மாற்றுவதற்குச் செலவு செய்தல் போன்ற பலவிதமான முறைகளைக் கையாண்டாலும் மின்சார செலவுக்கான மாதாந்த தொகை அதிகரித்துச் செய்வது நுகர்வோர் மத்தியில் ஒரு விரக்தி நிலையை தோற்றுவித்துள்ளது. இதனாலேயே மாகாண அரசின் அமர்வுகளில் கூட இது பற்றி அடிக்கடி பேசப்படுவதைப் பலரும் அவதானித்து இருக்கலாம்.

இந்த வகையில் ஒன்ரோறியோ மின்வள சபை (Ontario Engergy Board) OESP எனும் ஒரு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. அதாவது ஒன்ராறியோ மின்சார உதவித் திட்டம் (Ontario Electricity support program) என்பது தான் அதன் விளக்கம்.

அதாவது குறைந்த வருமானம் உடைய குடும்பத்தவர்களுக்கு ஒன்ராறியோவில் மாதாந்த மின்சாரச் செலவைக் குறைக்க உதவி செய்தல் ஆகும். குறிப்பாக ஒரு வீட்டின் அளவு அந்த வீட்டில் வாழும் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை என்பவற்றைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கான மாதாந்தக் கழிவுவத் தொகை தீர்மானிக்கப்படும். தகுதி பெறும் பட்சத்தில் அத்தொகை அவர்களது மாதாந்த மின்சார கணக்கில் நேரடியாக கழித்துக் கணக்கிட்டுக் காட்டப்படும்.

பின்வரும் அட்டவணையின் அடிப்படையில் மாதாந்தக் கழிவுத் தொகை தீர்மானிக்கப்படும்.

OESP Monthly Credit Amounts by

Household Income (After Tax)	Household Size (Number of people living in household)						
	1	2	3	4	5	6	7+
$28,000 or less	$30	$30	$34	$38	$42	$50	$50
$28,001 to $39,000			$30	$34	$38	$42	$50
$39,001 to $48,000					$30	$34	$38
$48,001 to $52,000							$30

குறிப்பிட்ட வீடு மின்சார சக்தியின் மூலம் வெப்பமாக்கப்படும் (Base board Heaters) சூழ்நிலை இருந்தாலோ அல்லது வைத்திய உபகரணங்கள் பாவிப்பதற்கு அதிகளவு மின்சாரத்தைப் பாவிக்க வேண்டிய கட்டாய தேவை இருந்தாலோ கிடைக்கும் உதவித் தொகை அதிகமாக இருக்கும்.

Oxygen concentrator, Mechanical Ventilator போன்ற மருத்துவ உபகரணங்களின் பாவனைக்கான உதவி இத்திட்டத்தில் அடங்கும். பின்வரும் அட்டவனை இத்தகைய மின்சாரப் பாவனையாளர்களின் மாதந்த கழிவு தொகையைத் தீர்மானிக்க பயன்படுத்தப் படுகிறது.

OESP Monthly Credit Amounts by

Household Income (After Tax)	Household Size (Number of people living in household)						
	1	2	3	4	5	6	7+
$28,000 or less	$45	$45	$50	$55	$60	$75	$75
$28,001 to $39,000			$45	$50	$55	$60	$75
$39,001 to $48,000					$45	$50	$55
$48,001 to $52,000							$45

எனவே "கேளுங்கள் தரப்படும்" என்ற கூற்றை மறந்து விடாதீர்கள். குறிப்பாக கனடாவில் எதுவும் கேட்டால் தான் கிடைக்கும். நீங்கள் தகுதி பெறுகிறீர்களா இல்லையா? என்பது மேற்கண்ட அட்டவணையைப் பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். அல்லது கீழ்க்காணும் தொலைபேசி எண்ணை அழைத்தோ அல்லது இணையத்தளத்திற்குச் சென்று உங்கள் தகவல்களை உள்ளிடுவதன் மூலமோ உங்கள் தகுதியை உறுதி செய்து கொள்ளலாம்.

தொலைபேசி: 1-855-831-8151
https://ontarioelectricitysupport.ca

விண்ணப்பப்படிவங்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள இணையத்தளத்தில் உண்டு.



OESP Consent Form
OESP Application Form

என்பவற்றைப் பூர்த்தி செய்து உங்கள் மாதாந்த மின்சார Bill, மற்றும் வருமானத்தை உறுதி செய்யும் பத்திரங்களையும் அனுப்பிவைக்க வேண்டும்.

பொதுவாக 6 - 8 வாரத்தில் விண்ணப்பங்களின் கொடுப்பனவு தொடர்ந்து வரும் 2 ஆண்டுகளுக்கு அமுல் செய்யப்படும். அதன் பின்னர் மீண்டும் விண்ணப்பத்தை புதுப்பித்தல் வேண்டும்.

பத்திற்கான பதிலையும் அதற்கான கொடுப்பனவையும் எதிர்பார்க்கலாம். இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பிப்பவர்களுக்கு மிக விரைவில் பலன் கிடைக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது.

குறிப்பு: தகுதி பெற்ற விண்ணப்பதாரர்

velasubramaniam@thaiveedu.com

மாரி காலத்திற்கான மின்சார நேர அட்டவணை:

ஒன்ராறியோவில் பெரும்பாலான இடங்களுக்கு Smart Meter ன் பாவனை நடைமுறைக்கு வந்திருப்பது பலருக்கும் தெரிந்திருக்கும். இதன் துணையோடு மின்சாரம் பாவிக்கப்படும் நேரத்தை அடிப்படையாக வைத்தே மின்சாரக் கட்டணங்கள் கணிப்பிடப்படுகின்றன.



நவம்பர் 1ந் திகதியில் இருந்து ஏப்ரல் 30ந் திகதி வரை மாரி காலத்திற்கான நேர அட்டவணை அமுலுக்கு வருகின்றது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

சில செயற்பாடுகளை கட்டணம் குறைந்த நேரங்களில் மேற்கொள்ளுவதன் மூலம் அதிக பலன் பெற முடியும். உதாரணமாக உடுப்பு துவைத்தல், பாத்திரம் கழுவுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம். சூழலுக் கேற்றவாறு நாமும் எமது பழக்கவழக்கங்களை முடிந்தளவு மாற்றுவதன் மூலம் மிகுந்த பலனை அடையமுடியும்.

New electricity prices effective May 1, 2016.

பெர்முடா முக்கோண மர்மம்

- குரு அரவிந்தன் -

நீண்ட காலமாகவே பெர்முடா பகுதியில் நடக்கும் அனேகமான சம்பவங்கள் பலரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கின்றன. இப்பகுதியில் திடீரென மறைந்து போகும் அனேகமான கப்பல்களுக்கும் விமானங்களுக்கும் என்ன நடந்தது என்று இதுவரை கண்டறிய முடியவில்லை. திடீரெனத் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் அவை காணாமல் போயிருந்தன. பல வருடங்களாக அனேக கப்பல்கள் அப்பகுதியில் காணாமற் போயிருந்தாலும், இரண்டாம் உலகப் போரின் போது 1945ம் ஆண்டு அமெரிக்க கடற் படைக்குச் சொந்தமான 'விமானப்பறப்பு இலக்கம் 19'ல் பயணித்தவர்களின் குண்டுவீசும் விமானங்கள் திடீரென காணாமற் போனது நேசநாடுகளை அச்சத்தில் கலங்க வைத்தது. அப்பகுதியில் எதிரிகளின் நடமாட்டமே இல்லை என்று நம்பியிருந்தவர்களுக்கு இந்த விமானங்கள் தொலைந்து போனபோது பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. இந்த விமானங்கள் மட்டுமல்ல அதைத் தேடிச் சென்ற ஒரு விமானமும் தொலைந்து போன போது, இவர்களுக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. எதிரியின் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து இந்த விமானங்கள் தாக்கப் பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் அப்போது எழுந்திருந்தது. தங்கள் கண்களில் படாமல் எதிரியின் நீர்மூழ்கிக் கப்பல்கள் அப் பகுதியில் மறைந்திருக்க முடியுமா என்ற சந்தேகமும் அப்போது எழுந்தது.

அட்லாண்டிக் கடலில் உள்ள பெர்முடா முக்கோண பகுதியில் பறந்த சுமார் 75க்கும் மேற்பட்ட விமானங்களும், அந்தக் கடலில் சென்ற நூற்றுக்கும் மேற்பட்ட கப் பல்களும் தடம் தெரியாமல் மறைந்தது போனது பெரும் புதிராகவே இதுவரை இருந்து வந்தது. உதாரணமாக 1872ம் ஆண்டு 'மேரி செலஸ்டி' என்ற கப்பல் சில நூறு பயணிகளுடன் காணாமல் போனது. 1918ம் ஆண்டு இப்பகுதியில் உள்ள பார் படோஸ் தீவுகளில் இருந்து புறப்பட்ட யுஎஸ்எஸ் 'சைக்ளோப்ஸ்' என்னும் கப்பல் மர்மமான முறையில் அதில் பயணித்த 309 ஊழியர்களுடன் பெர்முடா பகுதியில் காணாமல் போனது. எனவே பெர்முடா பகுதி என்றால் என்ன, அது எங்கே இருக்கிறது, பயணிகள் எல்லோருடைய பார்வையும் ஏன் அதை நோக்கித் திரும்பியிருக்கிறது என்பதை முதலில் பார்ப்போம். பெர்முடா முக்கோணப் பகுதி என்பது அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள மியாமி, பெர்முடா தீவு, போட்டோறிக்கா

தீவு ஆகிய மூன்று இடங்களையும் இணைக்கும் முக்கோணப் பகுதிக்குள் வட அத்திலாந்திக் கடலில் சுமார் 500,000 சதுரக் கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்திருப்பதே பெர்முடா முக்கோணப் பகுதியாகும். 'கொல்லைப் புறத்தில் கடல் மர்மம்' என்ற கட்டுரை 1950ம் ஆண்டு பத்திரிகை ஒன்றில் வெளிவந்த போதுதான், இந்த முக்கோண மர்மம் பற்றி பொதுமக்கள் அறிய வேண்டி வந்தது.

இப்பகுதிக்குச் செல்லும் கப்பல்களைக் கடற் கொள்ளையர்கள் தாக்கி அழித்திருக்கலாம் என்று நீண்ட காலத்திற்கு முன்பு நம்பப்பட்டது. ஆனால் நவீன வசதிகள் வந்த பின்பும் கப்பல்கள் தொலைந்து போனதால், அப்படி நடப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. கடற் கொள்ளையர்கள் தாக்கியிருந்தால் நவீன வசதிளைக் கொண்ட கப்பல்களில் இருந்து அவசர அழைப்புகள் வந்திருக்கும். அந்தப் பகுதியில் என்ன நடக்கிறது என்பது பற்றிய விபரங்களாவது தெரிய வந்திருக்கும். எனவே காணாமற் போன கப்பல்களின் விடயத்தில் கடற்கொள்ளையர்கள் காரணம் அல்ல என்பது அறிவு பூர்வமாக அறியப்பட்டது. ஆனால் அப்பகுதியால் செல்லும் விமானங்களின் திடீர் மறைவுக்கு என்ன காரணமாக இருக்கலாம் என்று பல வகையிலும் ஆராயப்பட்டது.

ஏலியன் என்று சொல்லப்படுகின்ற வேற்றுக் கிரகவாசிகளால் தாக்கப்பட்டிருக்கலாம், அல்லது கடத்தப்பட்டிருக்கலாம் என்றெல்லாம் ஊகங்கள் அப்போது வெளியிடப்பட்டன. ஊகங்களின் அடிப்படையில் காணாமற்போன விமானங்கள் பற்றிப் பல கதைகள் சோடிக்கப்பட்டன. இப் பகுதியில் பயணிக்கும் போது திசைகாட்டியில் திசை மாற்றமடைவதாகவும் வதந்திகள் பரப்பப்பட்டன. பலராலும் இது நம்பப்பட்டதால், அப்பகுதியால் பயணிக்கும் விமானங்களில் செல்வதைச் சில பயணிகள் தவிர்த்தும் வந்தனர். பிபிசி தொலைக் காட்சித் தொடர் ஒன்றில் 'த கேஸ் ஒவ் பெர்முடா டிரையாங்கிள்' குறித்துத் சொல்லப்பட்ட போது, உலகின் மற்றப் பகுதிகளில் நடப்பது போலத்தான் இங்கும் கப்பல்களும் விமானங்களும் செயல்படுகின்றன, அதிகளவு போக்குவரத்து நடப் பதால் விபத்துக்களும் அதிகமாக இருக் கின்றன என்ற கருத்துப்பட விமர்சிக்கப் பட்டது. கற்பனைக் கதைகளைவிட உண்மையில் என்ன நடக்கிறது என்பதைக் கண்டறிய வேண்டும் என்பது, கற்பனைக் கதைகளை விரும்பாத பலரின் விருப்பமாக இருந்தது.

2012ம் ஆண்டில் இதுபற்றி ஆராய்ந்த சில விஞ்ஞானிகள், பெர்முடா கடற்பகுதியில் கடலின் அடியில் காணப்படும் உயிரோட்டமான எரிமலையின் பாதிப்பால் தான் அப்பகுதியில் பயணிக்கும் கப்பல் கள் மாயமாக மறைந்து போவதாக அறிவித்து இருந்தனர். ஆனால் அதற்குத் தகுந்த ஆதாரம் எதுவும் இல்லாததால், அது நம்பகமான முடிவாக இருக்கவில்லை. பெர்முடா பகுதியில் தொலைந்து போன கப்பல்கள், விமானங்கள் குறித்த மர்மத் திற்கு, அறிவியலாளர்கள் தற்போது அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து அண்மையில் ஆய்வு நடத்திய இங்கிலாந்து விஞ்ஞானிகள், இதற்கான மர்மத்தை கண்டறிந்துள்ளனர். இந்த பெர்முடா பகுதியில் அறுங்கோண மேகங்கள் காணப்படுவதாகவும், அதனால் அந்த பகுதியில் நீர் சுழற்சி ஏற்படுவதாகவும் அறிவித்து உள்ளனர். இதனையே அமெரிக்காவில் உள்ள கொலராடோ மாநில பல்கலைக்கழக வானியல் செயற்கைக் கோள் ஆய்வாளர் கலாநிதி ஸ்டீவ் மில்லரும் (Dr. Steve Miller) உறுதிப்படுத்தியுள்ளார்.

பெர்முடா கடல் மட்டத்தில் உள்ள காற்று 170 மைல் வேகத்தில் இருப்பது கண்டறியப்பட்டதாகவும், இதனால் சுமார் 45 அடி உயரம் வரை சக்தி வாய்ந்த அலைகள் உருவாகி, மேல் எழும்பும் போது அதன் அழுத்தத்தால் விமானங்களை நிலைகுலைத்து கடலில் விழச்செய்வதாகவும் தெரிகின்றது.

மேலும் இங்கு தோன்றும் அறுங்கோண வடிவங்கள் (hexagonal clouds), மணிக்கு 170 மைல் வேகத்தில் விமான குண்டுகளை போல் செயல்பட்டு கப்பல்களை கவிழ்த்தும், விமானங்களை கடலில் வீழ்த்தியும் தடம் தெரியாமல் மறைத்து விடுவதாகவும் மற்றோரு வானியல் ஆய்வாளர் ராண்டி செர்வேனியும் (Randy Cerveny) தெரிவித்துள்ளார். மேலும் அவர் குறிப்பிடும் போது, 'செயற்கைக்கோள்கள் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களில், இந்தக் காற்று வடிவங்கள் மிகவும் வினோதமான வடிவில் இருக்கின்றன. இவை ஏற்படுத்தும் வெடிப்புதான் அழுத்தத்துக்குக் காரணம் என்பது தெளிவாகத் தெரிகிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார். பெர்முடா முக்கோண மர்மத்தைக் கருவாக வைத்துப் பல திரைப் படங்களும், புத்தகங்களும் வெளிவந்து கோடிக்கணக்கான வருவாயைத் தந்திருக்கின்றன. இத்துடன் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா அல்லது மர்மம் இன்னும் தொடருமா என்பதைக் காத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

உசாத்துணை:

- http://www.nbcnews.com/news/weather/bermuda-triangle
- Daniel Berg (2000). Bermuda Shipwrecks. ISBN 0-9616167-4-1.
- Richard Winer (1975). The Devil's Trian gle 2. ISBN 0553024647.
- [39] Adi-Kent Thomas Jeffrey (1975). The Bermuda Triangle. ISBN 0446599611.

kuruaravindan@thaiveedu.com

SELS Inc.

CARRIER & RIDE SERVICES

OTTAWA → KINGSTON → TORONTO → HAMILTON

Ottawa Greenboro பஸ் தரிப்பிடத்திலிருந்து புறப்படும் நேரம்:

திங்கள் - வெள்ளி காலை 10:00 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும்
ஞாயிறு மாலை 4:00 மணிக்கும் புறப்படும்.

Toronto வில் இருந்து புறப்படும் நேரம்:

திங்கள் - வெள்ளி காலை 10:00 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும்
ஞாயிறு மாலை 4:00 மணி

Parcels + Courier எதுவாயினும் உரிய இடத்துக்குப் பாதுகாப்பாகக் கொண்டு போய்ச் சேர்க்கப்படும்.

நீண்ட விடுமுறை மற்றும் வார இறுதி நாட்களில் சிறப்புச்சேவை உண்டு!
We also do small Moving and Parcel delivery all over Ontario!

உங்கள் மனநிறைவே எங்கள் தரம்!

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்:
குமரன் (செல்வா) 613.889.8733 / 647.648.0166
மின்னஞ்சல்: **sels4ride@gmail.com**

Math Tutoring
A. Puranthagan (Puran) BSc. Eng.
Specializing in tutoring Math from Gr. 10 - 12.
Available for home visits.
H: 905-428-1928
C: 416-819-7923
1629 Winville Rd.,
Pickering, ON L1X 0C8

#1 RE/MAX Outstanding Agent for Outstanding Results.

FOR SALE

Bedrooms:1+1 / Washrooms:1
Toronto

Bedrooms:2+1 / Washrooms:4
Markham

Bedrooms:3 / Washrooms:3
Markham

Bedrooms:4 / Washrooms:3
Whitby

Bedrooms:3 / Washrooms:3
Markham

Bedrooms:4+2 / Washrooms:2
Toronto

Bedrooms:4+2 / Washrooms:5
Richmond Hill

Bedrooms:3 / Washrooms:3
Markham

Bedrooms:4 / Washrooms:4
Brampton

Bedrooms:5+4 / Washrooms:5
Ajax

Bedrooms:2 / Washrooms:2
Toronto

RE/MAX® Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770
50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
*Independently Owned And Operated
Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor.

Raj Nadarajah
Sales Representative
Dir: 416.333.6115
nanohomes@gmail.com

Mortgage?
Call Mahesan
416-816-0141

Home Equity
Refinance
Call Mahesan
416-816-0141

Residential Mortgages
2nd Mortgages upto $500,000
Private Funds Available
Debt Consolidation
Home Equity - Refinance
No Income Qualifier - No Credit
Call me for more details...

5200 Finch Ave. E. Unit 306,
Scarborough, ON. M1S 4Z5

KAPITAL CARE
MORTGAGE INC. Lic#12623

Mahesan Subramaniam AMP
Principal Broker Lic #12623

Office : 416-335-5264 / Direct : 416-816-0141

CORPORATE & COMMERCIAL
FINANCING

- வீடு கட்டுவதற்கான கடன்
- Bridge Financing
- நிலம் கொள்முதல் கடன்
- Mezzanine Capital Loan
- வணிக உபகரண கடன்
- Truck & Trailer Loan
- வியாபாரக் கடன்
- Equity Take Out
- சுயவர்த்தக அடமான கடன்
- Hotel, Motel, Building

அழையுங்கள்:
PRABA NAMASI (A.I.C.B)
416 645 3027

O/A 6401473 Canada Inc,
Broker NO: 11108, Agent No: M15000851

Are you planning to
sell or buy in the near future?
Do you want to know
how much your property is worth?

VEEDU
REALTY INC.
BROKERAGE

Negotiable commission will save you thousands!
CALL ME FIRST

Sri Sivasubramaniam
Sales Representative
416.884.3991
Offce: 416-759-6000
Fax: 416-759-6005
ssriskand@gmail.com
www.sriveedu.com

Your interest is my capital

1345 Morningside Ave., Unit # 9, Toronto, M1B 5K3

அடைமானக் கடன்!

புதிய மாற்றங்களும் விளைவுகளும்

- மகேசன் சுப்பிரமணியம் -

வரலாற்றில் குறைந்த வட்டிவிகிதங்களைக் கொண்ட ஒரு சகாப்தத்தில், தங்களுக்குக் கட்டுப்படியாகாத பெரிய அளவிலான அடைமானக் கடன்களைப் பெற்றுக்கொள்வதில் கனடாகுடிமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதை உணர்ந்த லிபரல் அரசு, அடைமானக்கடன் தொடர்பான புதிய மாற்றங்களை அறிவித்துள்ளது.

இந்த மாற்றங்கள் கனடாவில் வீடுகளை வாங்கி உடனடியாக விற்கும் வெளிநாட்டுக் கொள்வனவாளர்கள் தொடர்பான வணிக விடயங்களைக் குறி வைப்பதாக உள்ளது.

திங்கட்கிழமையன்று நிதியமைச்சர் பில் மோர்நோ அறிவித்த நான்கு பாரிய மாற்றங்களைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

நடப்பிலுள்ள விதிகள்:

கொள்வனவு விலையில் ஆகக் குறைந்தது 5 வீதத்தையும் ஆனால் 20 வீதத்திற்குக் குறைவானதுமான முற்பணக்கொடுப்பனவை வைத்திருக்கும் கொள்வனவாளர்கள் வீட்டு அடைமானக் காப்புறுதியால் பலப்படுத்தப்பட்டவர்களாக இருக்கவேண்டும். இது வீட்டை வாங்குபவர் தவணை தவறும் வேளையில் கடன் வழங்கியவரைப் பாதுகாக்கும். இந்தக் கடன்கள் 'உயர் கடன்-பெறுமதி விகிதம்' அல்லது 'உயர் விகிதம்' எனப்படும்.

கொள்வனவாளர் 20 வீதமோ அல்லது அதற்கு மேலாகவோ முற்பணக் கொடுப்பனவைக் கொண்டிருக்கும் வேளைகளில், கடன் கொடுப்பவர் அல்லது கடன் வாங்குபவர் 'தாழ்ந்த விகிதம்' என்ற காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளலாம். இது தவணை தவறும் வேளையில் கடனின் 100 வீதத்தையும் காப்பீடு செய்யும்.

கனடாவில் வீட்டு அடைமானக் காப்புறுதியானது கனடா வீடு வதிவிடக் கூட்டுத்தாபனத்தினூடாக (CMHC) மத்திய அரசாங்கத்தால் கையாளப்படுகிறது. இக்காப்புறுதி CMHC யாலும் வேறு இரண்டு தனியார் காப்புறுதியாளர்களான ஜென்வேர்த் ஃபய்நான்ஷல் மோட்கேஜ் இன்சுரன்ஸ் கம்பனி கனடாவாலும் கனடா கெரன்டி மோட்கேஜ் இன்சுரன்ஸ் கம்பனியாலும் விற்கப்படுகிறது. மத்திய அரசாங்கம் இந்த இரண்டு தனியார்துறை நிறுவனங்களும் வழங்கும் காப்புறுதிக்கு 10 வீத கழிப்புத் தொகையோடு ஆதரவளிக்கிறது.

மாற்றம்:

ஒரு வீட்டு அடைமான விகித அழுத்தத் தேர்வாய்வை எல்லாக் காப்புறுதி செய்யப்பட்ட அடைமானங்களுக்கும் விரிவுபடுத்துதல்.

விளக்கம்:

ஒக்ரோபர் 17 இலிருந்து உயர் விகித அடைமானங்களை அங்கீகரிக்கும் அழுத்தத் தேர்வாய்வானது புதிதாகக் காப்புறுதி செய்யப்பட்ட எல்லா அடைமானங்களுக்கும் பிரயோகிக்கப்படும். முற்பணக் கொடுப்பனவுக்கு 20 வீதத்திற்கும் மேலாக வைத்திருக்கும் கொள்வனவாளர்களும் இதற்குள் அடங்குவர். இந்த அழுத்தத் தேர்வாய்வு, வீட்டை வாங்குபவரால் வட்டி வீதங்கள் உயர்ந்துகொண்டு போனாலும் அடைமானத்தைத் தாங்கிக்கொள்ள முடியும் என்பதைக் கடன் கொடுநருக்கு உறுதி செய்வதில் குறிவைக்கிறது. வீடு வாங்குபவர் அடைமான உடன்படிக்கையில் ஒப்பந்தம் செய்த விகிதப்படி, ஒரு கடன்

தொகைக்கும் கனடா வங்கியின் ஐந்து வருட நிர்ணயிக்கப்பட்ட அடைமான விகிதத்திற்கும் தகுதியுடையவராக இருக்க வேண்டும். இந்த விகிதம் கனடாவிலுள்ள ஆறு பெரிய வங்கிகளின் சராசரி நிர்ணய விகிதமாகும். இது பொதுவாக கொள்வனவாளர்களால் பேசித் தீர்க்கப்படக்கூடிய விகிதத்திலும் உயர்வானது. செப்டெம்பர் 28 இல் இந்த நிர்ணய விகிதம் 4.64 வீதமாகும்.

இந்த அழுத்தத் தேர்வாய்வின் மற்றைய நோக்கங்கள் வீடு வாங்குபவர் வருமானத்தில் 39 வீதத்திற்குமேல் இல்லம்சார் செலவுகளான அடைமானக் கொடுப்பனவுகள், வெப்பசக்தி மற்றும் வரிகள் போன்றவற்றில் விரயமாக்க முடியாது. மொத்தக் கடன் சேவை எனப்படும் இன்னொரு நடவடிக்கை ஏனைய கடன் கொடுப்பனவுகளும் மொத்தக் கடன் சேவை விகிதமும் 44 வீதத்தை மேம்படக்கூடாது என்பதை உள்ளடக்கும்.

பாதிப்புகள்:

இந்த நடவடிக்கை குறைந்த பட்சம் 20 வீதம் முற்பணக் கொடுப்பனவைக் கொண்டிருப்பதோடு, வட்டி விகிதங்கள் உயர்ந்தால் வீட்டு அடைமானத்தை முடிந்தளவு நீட்டிக்கொள்ளக்கூடிய அடைமானத்தை நாடிச்செல்ல விரும்பும் வீட்டுக் கொள்வனவாளர்களைப் பாதிக்கும். அத்தோடு அரசாங்க ஆதரவுள்ள தாழ்ந்த விகித அடைமானக் காப்புறுதிகளைத் தேடும் கடன் கொடுப்பவர்களையும் பாதிக்கும்.

காரணம்:

அடைமான விகிதங்கள் உயர்ந்தால், ரொரன்ரோ மற்றும் வன்கூவர் போன்ற நகரங்களில் வீட்டு விலைகளின் கூர்மையான அதிகரிப்பானது தவணை தவறும் இடர்ப்பாடுகளை அதிகமாக்கலாம் என்ற ஐயப்பாடுகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்கின்றது.

•

மாற்றம்:

நவம்பர் 30ல் அரசாங்கம் தாழ்ந்த விகித அடைமானங்களுக்கான காப்புறுதியை எப்போது ஏற்பாடு செய்துகொடுக்கும் என்பதில் புதிய கட்டுப்பாடுகளைப் புகுத்தும்.

விளக்கம்:

இந்தப் புதிய விதிகள் சமீபத்திய கட்டளை விதிகளை அடிப்படையாகக் கொண்ட இந்த வகைப்பட்ட அடைமானங்களுக்கான காப்புறுதியைக் கட்டுப்படுத்துகின்றன. இவற்றுள், கடனிறுப்புக் காலப்பகுதி 25 வருடங்களோ அல்லது அதற்குக் குறைவாகவோ இருக்கவேண்டும், கொள்வனவு விலை $1 மில்லியனிலும் குறைவாக இருக்கவேண்டும், வாங்குபவரின் கடன் மதிப்பெண் 600 ஆக இருக்கவேண்டும் மற்றும் அந்த ஆதனம் உரிமையாளர் குடியிருப்பதாக இருக்கவேண்டும் போன்ற விதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாதிப்புகள்:

இந்த நடவடிக்கை $1 மில்லியன் அல்லது அதற்கு மேலான பெறுமதியுடைய ஆதனங்களின் குடியிருப்பு அடைமானங்கள் தொடர்பான அரசாங்கத்தின் பாதிப்பைக் குறைப்பதற்காகக் குறிவைக்கப்பட்டது எனத்தெரிகிறது. சந்தையில் இந்த வகையான ஆதனங்கள் அண்மைக் காலங்களில் வான்கூவர் மற்றும் ரொரன்ரோவில் கூர்மையாக அதிகரித்துவிட்டன.

காரணம்:

அரசாங்கத்தின் எல்லா மட்டங்களிலும் உள்ள செயற்திட்ட உருவாக்குநர்களின் முக்கிய சமாச்சாரமாக வான்கூவர் ரொரன்ரோ ஆகிய இரண்டு ஆதனச் சந்தைகளும் உள்ளன. இந்த நடவடிக்கைகள் இப்படியான சந்தைகளைக் குறிவைப்பதாகத் தெரிகின்றது.

•

மாற்றம்:

ஆரம்ப உறைவிட முதலீட்டு இலாப விதிவிலக்குகளுக்கான புதிய அறிவிப்பு விதிகள்.

விளக்கம்:

தற்போது, உங்கள் ஆரம்ப உறைவிடத்தை விற்பதால் கிடைக்கும் எந்த நிதி வருவாய்க்கும் வரிவிலக்கு உள்ளதுடன், அதை வருமானமாகக் காட்ட வேண்டிய தில்லை. இந்த வரி ஆண்டில், முதலீட்டு இலாப வரிக்கு இன்னும் விலக்கு இருப்பினும், அந்த ஆரம்ப உறைவிடத்தின் விற்பனையை வரிசெலுத்தும் காலத்தில் கனடா வருவாய்த் திணைக்களத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

பாதிப்புகள்:

தங்கள் ஆரம்ப உறைவிடத்தை விற்பனை செய்யும் ஒவ்வொருவரும் கனடா வருவாய்த் திணைக்களத்திற்கு அந்த விற்பனையைத் தெரிவிக்க வேண்டிய புதிய கடப்பாடு உண்டு. இருப்பினும் வெளிநாட்டு வாங்குநர்கள், தங்களுக்கு உரிமையற்ற ஆரம்ப உறைவிட வரிவிலக்கைக் கோரி வீடுகளை வாங்கி விற்பதைத் தடுப்பதையே இந்த மாற்றம் கவனத்திலெடுக்கிறது.

காரணம்:

அதிகாரிகள் மேலும் தரவுகள் தேவை எனக் கூறும்போதும், வெளிநாட்டு முத

தொடர்தல் 52ம் பக்கம்

எல்லோராலும் கடன் மதிப்பீட்டைச் சிறப்பாகப் பேண முடிவதில்லை. முடிந்தவரை சிறப்பாகப் பேண வேண்டும் என்பதற்காகவே கடன் அட்டை தொடர்பான பல விளக்கங்களைத் தமிழில் தந்திருக்கின்றோம். வாடிக்கையாளருக்கான அடமானக் கடனைச் சிக்கலின்றிப் பெறுவதில் திறமை மிக்க முகவர் பலர் எம் நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர். அடமானக் கடன் பெற முயலும் வாடிக்கையாளர் ஒருவர் எதிர்கொள்ளும் சிக்கல்களை முறையாக அடையாளம் கண்டு, அவற்றைத் தீர்த்து குறைந்த வட்டி வீதத்தில் அடமானக் கடன் பெற்றுக் கொடுப்பதையே நாம் கைதேர்ந்த பணியாகக் கொண்டுள்ளோம். அடமானக் கடன் முகவர்களாகிய நாம் உங்கள் தேவைகளை முன்னிறுத்தி சேவை செய்யக் காத்திருக்கின்றோம். கனடாவில் உள்ள அடமானக் கடன் வழங்கும் நிறுவனங்களின் வட்டி வீதங்களை ஒப்பு நோக்கி, சிறந்த அடமானக் கடன் ஒழுங்குகளை எம்மால் செய்துதர முடியும்.

Rambo
Tharmalinagm
Mortgage Agent LIC #M08884?9
647-290-3416

Mahesan
Subramaniam, AMP
Principal Broker Lic-12623
416-816-0141

Kethes
Sivasubramaniyam AMP
Mortgage Agent LIC #M08934198
416-873-5780

KAPITAL CARE
MORTGAGE INC. Lic-12623
Office : 416-335-5264 Fax : 416-335-5266
5200 Finch Ave. East, Unit 306 Toronto, ON. M1S 4Z5
www.kcmi.ca

வணிக ஆதனத்தில் முதலீடு செய்வதற்கான ஆலோசனைகள்

அநேகமான ஆதன முதலீட்டாளர்கள் தனியான குடும்ப வீடுகளை வாங்குவதிலதான் தங்களுடைய ஆதன முதலீட்டை ஆரம்பிப்பார்கள். காரணம் பெரும்பாலும் அவை தான் முதலீட்டாளர்களுக்கு நன்கு தெரிந்த முதலீடாக இருக்கின்றன. முதலீட்டாளர் நேரடியாகப் பெரிய அளவில் முதலீடு செய்ய விரும்புகின்ற வேளையில் அல்லது வீடுகளிலிருந்து பாரிய அளவில் மேலதிக இலாபமீட்டும் பேரங்களை நோக்கி முன்னேறத் தயாராகின்ற போதில் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள பல விடயங்களை அறிந்திருப்பது அவசியம். இத்துறையில் வெற்றியீட்டித்தர உதவுகின்ற, பரீட்சித்துப் பார்க்கப்பட்ட 10 வழிகாட்டல்களைத் தருகின்றோம்.

பெரிய அளவில் சிந்தியுங்கள் - Think Big:

ஒரு 5 தொகுதி அடுக்குமாடிக் கட்டிடத்தை வாங்க உங்களுக்கு வணிக நிதியீடு தேவைப்படுகின்றது. எவ்வாறாயினும் நிதியைப் பெறத்தான் போகின்றீர்கள். நாங்கள் சிபாரிசு செய்வது குறைந்த பட்சம் 10 தொகுதிகள் கொண்ட ஆதனங்களை வாங்குவதையே. எவ்வளவு தொகுதிகளை நீங்கள் வாங்குகின்றீர்களோ, அவ்வளவுக்கு அவை இலாபமீட்டித் தரக்கூடியவை என்பதை நினைவில் வைத்திருங்கள். அத்துடன் "டேவ் லின்டாலின்" என்ற வல்லுனரின் கூற்றுப்படி, "50 தொகுதிகளை நிர்வகிப்பது பத்துத் தொகுதிகளை நிர்வகிப்பதை விடக் கடினமானதல்ல."

நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள் - Take Your Time:

வணிகப்பேரங்கள் தனியான குடும்ப வீடுகளை விடக் கூடுதலான நேரமெடுக்கும். அவற்றைக் கொள்வனவு செய்ய, திருத்தியமைக்க, விற்பனை செய்ய நீண்ட காலமெடுக்கும். இது வணிகப் பேரங்களின் போது இயல்பாக நடைபெறுவதுதான். பிழையான செயற்பாடல்ல. ஆனால் நீங்கள் பொறுமையிழந்து அல்லது தவறான முடிவை எடுக்க அவசரப்பட்டுவிடக்கூடாது என்பதை மனதில் வைத்திருங்கள். வர்த்தக ஒப்பந்தங்களை மிகையூதியங்களாகவோ அல்லது உங்கள் இளைப்பாற்று வாகனமெனவோ நினைத்துக் கொள்ளுங்கள், விற்பனைச் சிட்டைகளைச் செலுத்துவதற்காக உடனடியாகச் சேகரிக்கும் பணத்திற்கான வழியல்ல இது.

கட்டிடங்களை தேர்ந்தெடுக்கும் போது தெரிவு செய்யப்பட்டவற்றை எடுக்காதீர்கள். Don't Choose Apartments By Default:

குடியிருப்புக்குரிய கட்டிடங்களில் உள்ள படியே முதலீடு செய்வதில் பிழையேதுமில்லை. நாங்கள் குறித்துக் காட்டுவது என்னவென்றால் அநேகமான முதலீட்டாளர்கள் குடியிருப்பு ஆதனங்களில் ஏற்கனவே நாட்டம் செலுத்துவதால், அவர்கள் கட்டிடத் தொகுதிகளைத் தேடுகின்றார்களே தவிர அலுவலகக் கட்டிடங்கள், தொழிற் சாலைகள், நடமாடும் வீட்டுப் பூங்காக்கள், நிலம் போன்ற வணிக ஆதனங்களைக் கருத்தில் எடுப்பதில்லை. இந்த எல்லா விதமான ஆதன வகைகளையும் சீர்தூக்கிப் பார்த்து உங்கள் தனிப்பட்ட குறிக்கோள்களை அடைய, எனக்கு இதுதான்

- பாஸ்கரன் சின்னத்துரை -

வசதியான இடம் எனக் கருதாமல் உங்களுக்குரிய இடத்தைத் தெரிவு செய்யுங்கள்.

முதலாவதாக கூடியளவு நேரத்தைச் செலவழிக்கத் தயாராகுங்கள் Be Prepared to Spend a Lot of Time at First:

இதுவரைக்கும் உங்கள் முதலாவது ஒப்பந்தத்தை முடிக்கவில்லையானால் அல்லது முந்திய ஒப்பந்தங்களை விட மேலும் அதிக நேரத்தை ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் செலவழிக்கிறீர்கள் என்றால் ஒரு சோர்வு ஏற்படக்கூடும். அவ்வாறான சோர்வான நினைப்பு ஏற்படாது எதிர்த்துப் போராடுங்கள். வீடுகள் எல்லாம் ஒரே மாதிரியானவையாதலால் அவ்வணிகத்தால் ஏற்படுகின்ற அனுபவங்களும் பெரும்பாலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். நாங்கள் வணிக ஆதனங்களைத் தேடத் தொடங்கியபோது, எவ்வளவு நேரத்தை ஒப்பந்தங்களை ஆய்வு செய்வதற்கும் விருப்பத் தேர்வுகளைப் பரிமாறவும் செலவிட்டோம் என்பதில் ஆச்சரியப்பட்டோம். ஒவ்வொன்றிலும் நாம் கற்பதற்கு நிறையவுண்டு. எல்லாம் காலப்போக்கில் விரைவாக நடக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

புதிய சூத்திரங்களைக் கற்றுக்கொள்ளுங்கள்

தொடர்தல் 50ம் பக்கம்

WE PROVIDE
MORTGAGE SOLUTIONS
FOR EVERYONE!

- Purchase
- Refinance
- Pre Approvals
- Self Employed
- Debt Consolidation
- New Immigrant
- Equity Lines of Credit
- 1st, 2nd, 3rd Mortgages.

MORTGAGE ALLIANCE

Call Now : 416-505 7333

Visit us at www.lenderhub.ca

LOW RATES STARTS AT
2.79 FOR 5 YEAR FIXED &
2.35 FOR 5 YEAR VARIABLE

Piraba Ratnam
Mortgage Agent / Mortgage Alliance
LIC # M13001215
10 Milner Business Court, Suite 401
Toronto, Ontario, M1B 3C6

We have solutions for everyone!

10 Milner Business Court, Suite 401
Scarborough, ON M1B 3C6

People don't plan to fail, but they do fail to plan

You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!

- Super Visa Insurance
- Disability Income Insurance
- Critical illness Insurance
- Mortgage Insurance
- No medical exam Life Insurance
- Permanent Life Insurances
- Term Life Insurance
- Travel & Visitor Insurance
- RRSP Loan / Investment
- RESP

நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்

As an Independent Insurance Broker,
I will shop around for you and get you the best rate...

Guna Thuraisingham M.A.Sc (Eng.), P.Eng.
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
Tel: 905 230 4986 | guna@gtbrokers.ca
www.gtbrokers.ca

Super Visa Insurance 100% Refund

INDUSTRIAL ALLIANCE · RBC Royal Bank · Assumption Life · Desjardins · Manulife · Canada Protection Plan · Foresters

வணிக ஆதனத்தில்...

48ம் பக்கத் தொடர்ச்சி...

Learn the new formulas:
நீங்கள் வீடுகளை வாங்குகின்றீர்களானால், திருத்தியமைக்கப்பட்ட பெறுமதியின் பின் 75%ல் வாங்குதல் மதிப்பிடப்பட்ட திருத்தங்களைக் கழித்தல் போன்ற சூத்திரங்களைப் பாவிக்கவேண்டியேற்படும். நிகரத் தொழிற்பாட்டு வருமானம் முதலீடாகப் பயன்படுத்தும் விகிதம் (Net Operating Income and Cap Rates) போன்ற வணிக ஆதனங்களின் புதிய வேறுபட்ட சூத்திரங்கள் பழக்கப்பட்டுவிடும். ஒப்பந்தங்களைச் செய்யும்போது எது உங்கள் பகுதியில் நல்லது என கணிக்கப்படுகிறதோ அவற்றுடன் பழக்கப்பட்டுவிடுங்கள்.

உறவுகள் மிகவும் முக்கியமானவை Relationships Are Even More Important:
ஆதனங்களை வாங்கும்போது, ஏனைய முதலீட்டாளர்களுடனும் தனியார் கடன் கொடுப்பவர்களுடனுமான உறவுகள் முக்கியமானவை. வணிக ஆதனங்களை வாங்கும்போது இவை மேலும் முக்கியமானவை. ஒன்று, ஒரு மில்லியன் டாலர்கள் அல்லது அதற்கு மேலான ஆதனங்கள் பெரும்பாலும் தனிப்பட்ட விதத்தில் எங்கள் எல்லோரினதும் நிதி சார்ந்த சாதனங்களுக்கு உட்பட்டவை. ஆகவே அவர்களைத் தெரிந்துகொண்டு பங்காளிகளுடன் சேர்ந்து பணிபுரிவதைவிட வேறு வழியில்லை. அத்துடன், பல வணிக ஆதனங்கள் முதலில் நிரலிடப்படாமலே விற்பனை செய்யப்படுகின்றன. ஆகவே நீங்கள் எதைத் தேடுகின்றீர்கள் என்பதை அறிந்த எத்தனை மனிதர்கள் உங்கள் பிணையத்தில் உள்ளனரோ, அத்தனை ஒப்பந்தங்களை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

நல்ல நிதியீட்டை முன்பாகவே கண்டு பிடியுங்கள். Find Good Financing In Advance:
வணிகக் கடன்கள் குடியிருப்புக் கடன்களைவிட வித்தியாசமானதோடு, சில வழிகளில் சிறப்பானவை. தேவைப்படும் முற்பணக் கொடுப்பனவுகள் தனியான குடும்ப வீடுகளைவிட பொதுவாக அதிகளவு வட்டிவீதங்களைக் கொண்டவை. அதாவது நீங்கள் கூடுதலான முற்பணம் கொடுக்க வேண்டும் (அல்லது உங்கள் பங்காளர் கூடுதலான முற்பணத்தைப் போடவைக்க வேண்டும்). இருப்பினும், ஒப்பந்தம் பெறுமதி இழந்தால் தனிப்பட்ட பொறுப்புகள் இருக்காது. நீங்கள் வேறொருவரிடமிருந்து முற்பணக் கொடுப்பனவை கடனாக வாங்கவிடுவதில் அவர்கள் கடுமையாக இருக்கமாட்டார்கள். இருந்தபோதிலும், ஒப்பந்தங்களைச் செய்யுமுன், உங்கள் பகுதியில் யார் வணிக ஆதனங்களை வாங்கும்போது சிறந்த கடன் கொடுப்பாளர்கள் என்பதைக் கேட்டுத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

உரிய விடாமுயற்சிப் பணத்தை இழக்கத் தயாராக இருங்கள். Be Prepared to Lose Due Diligence Money:
உங்கள் விருப்பத்தேர்வு ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டால், இப்பணத்தைப் பெற்றுக்கொள்ள ஒரு கால அவகாசம் இருக்கும். நீங்கள் ஒரு மதிப்பீடு, ஆதனப் பரிசோதனை, ஏனைய கண்காணிப்புகளைச் செய்யவேண்டும் என்பது சட்டம். ஒரு சிக்கல் என்னவெனில் சிறிய ஒப்பந்தங்களை விட இவை கூடுதலான பணத்தை விரயமாக்கும். ஒரு ஒப்பந்தத்திற்கு நீங்கள் $5,000-$10,000 செலவு செய்யவேண்டும் கடைசியாக அதை நீங்கள் வாங்க முடியாமலும் போகலாம். கூடாத ஒப்பந்தங்களை வாங்குவதைவிட இது சிறப்பானதாக இருப்பினும், இப்படியான செலவுகளுக்கு நீங்கள் தயாராக இருக்கவேண்டும்.

பங்காளர்கள் உங்களது செல்வத்திற்கான பாலம். Partners Are Your Bridge to Wealth:
நான் முன்னர் கூறியதுபோல், மில்லியன் டாலர் ஆதனத்தை வாங்குவதற்கு பலர் தகுதியாக மாட்டார்கள் (உண்மையில் ஒரு வீட்டை வாங்குவதற்குக் கடன் கிடைப்பதே கடினம்] ஆகவே தனியார் கடன் கொடுப்பவர்களைக் கண்டுபிடிப்பதில் அல்லது பங்காளிகளை உதவி செய்ய இணங்க வைப்பது போன்ற விடயங்களுக்கு கூடிய நேரம் செலவழிக்க வேண்டும். ஒரு பங்காளி ஒரு ஆதனத்தைக் கொள்வனவு செய்ய பணமோ கடனோ தரலாம். அதைச் சீர்செய்ய நீங்கள் ஒரு நிலையான வட்டிவீதத்தை அல்லது விற் பனையிலிருந்து வரும் பணத்தில் ஒரு விகிதத்தைக் கொடுக்கலாம்.

கடினமான கேள்விகளுக்கான விடைகளை எங்கே தெரிந்து கொள்ளலாம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். Know Where to Get Tough Questions Answered:
கடைசியாக, நீங்கள் ஆதனங்களை மதிப்பீடு செய்யும்போது வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்க அனுபவம் உள்ள வணிக முதலீட்டாளர்களுடன் தொடர்புகொள்வது முக்கியமானது. சில சுற்றுச்சூழல் விதிமுறைகள் அல்லது குப்பை சேகரிப்பிற்கான செலவை மதிப்பிடுவது போன்றவற்றை விளங்கிக்கொள்ளாததற்காக ஒரு ஒப்பந்தத்தை இழப்பதிலோ ஒரு கூடாத ஆதனத்தை வாங்குவதிலோ ஒரு பிரயோசனமும் இல்லை. தேவைப்படும்போது யாரிடமிருந்து விரைவான பதில்கள் கிடைக்கும் என்பதைத் தெரிந்து அவர்களை உங்கள் புதிய மிகச் சிறந்த நண்பர்களாக மாற்றுங்கள்.

மேற் கூறப்பட்ட இந்தப் 10 வழிமுறைகளைக் பின்பற்றினாலும் வெற்றி கிடைத்து விடும் என எம்மால் உத்தரவாதம் தரமுடியாது. இருப்பினும், வணிக ஆதனத்தில் முதலீடு செய்வதில் உங்களுக்கு சரியான இலக்கும் போக்கும் இருக்குமாதலால் மேற்கூறப்பட்ட வழிமுறைகயோடு உங்களுடைய அயராத உழைப்பையும் இணைத்துக் கொள்ளுங்கள்.

தனியான குடும்ப வீடுகளிலான முதலீட்டிலிருந்து பெரிய அளவிற்கு மேலெழுவதற்கு எங்கள் வாழ்த்துகள்.

baskaran.s@thaiveedu.com

SP Electronics

TV, VCR, DVD, Players, Telephone-Computers அனைத்துத்

தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்

416 264 6400

2641 Eglinton Avenue East (Brimley & Eglinton)

Since 1999
NOBLE REIGN
SECURITY & COMMUNICATIONS
Trusted in Your Neighbouhood. Trusted for your Family

SECURITY ALARM Monitoring $12.95 Per Month
SECURITY ALARM with 36 Months Contract $23.95 Per Month
SECURITY ALARM No Contract $27.95 Per Month

INTERNET $39.95 — FAST: 25Mbps Download / 10 Mbps upload; No usage limits / No contracts
INTERNET $49.95 — SUPER FAST: 50Mbs Download / 10 Mbps upload; No usage limits / No contracts
HOME PHONE $14.95 — UNLIMITED NORTH AMERICA: Unlimited calling within North America; 15 features included; Low long distance rates over 60 countries
HOME PHONE $12.95 — UNLIMITED CANADA: Unlimited calling within Canada; 15 features included; Low long distance rates over 60 countries

416 710 5050
3341 Markham Rd. Unit B101
Scarborough, M1X 0A6 (Blue Building - Markham & Steeles)
தமிழில் தொடர்புகளுக்கு 416 710 4900

NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke,
high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால்
பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும்,
வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்கள், சுப்பர் விசாவில் உள்ளவர்களும் பெறலாம்.

உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.

Nimal Subramaniam

Cell: 416.816.7994 **Email:neel900@hotmail.com**

La Capitale Financial Group | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

வீடு வாங்க விற்க

$1,199,000

South of Patterson
4 + 7 Bedrooms 7 Washroom
W/O Basement Finished

$375,000

Markham/McNicoll
Commercial Condo

Kuga Raveendrarajah
Real Estate Broker
Dir: **416-843-8585**

HOMELIFE HIGHER STANDARDS

Mathan Selvendarakumaran
Sales Representative
Dir: 416-625-2870

MLS MULTIPLE LISTING SERVICE®

Shajetha (Suzy) Sabanathan B.Sc.
Sales Representative
Cell: **416-298-3200**

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

சேமிப்பின் அடையாளம் அழகானதோர் வீடு
Bus: 416-298-3200

*Independently Owned and Operated, Realtor

பிறந்த குழந்தை உள்வாங்கும் முதல் இலக்கியம்

- சாரதா குமாரசாமி -

தாய்மை உலகிற்கு வழங்கிய முதற்ப டைப்பு தாலாட்டு. இது தாய்மை உணர் வில் மலர்ந்த வெளிப்பாடு. 'தாய், ஆழங் காணமுடியாத ஓர் அன்புக்கடல். அக்கட லின் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு. தால் என்றால் நாக்கு. நாக்கை ஆட்டிப் பாடுவதால், இது தாலாட்டு ஆயிற்று.

படிப்பறிவற்ற பாமர மக்களால் கிராமப்பு றங்களில், குழந்தையைத் தூங்க வைக்க, நாக்கை அசைந்து தாம் விருப்பிய சொற் களை வைத்து, இசைத்துப்பாடி அமைத் துக் கொண்டவையே தாலாட்டுப் பாடல் கள். இப்பாடல்களில் புலவர்கள் கூறும் இலக்கிய, இலக்கண நுட்பங்களை எதிர் பார்க்க முடியாவிடினும், இயற்கையோடு அமைந்த உவமை உருவகங்கள், இப்பா டல்களுக்கு இலக்கிய நயத்தை அளிக்கின் றன. இந்த இலக்கியத்தரம் வாய்ந்த தாலாட் டுப் பாடல்களை பிறந்த குழந்தை முதன் முதலாக உள்வாங்குகிறது.

உலகெங்கிலும் உள்ள தாய்மார் தம் தாய்மொழியிலே தாலாட்டுப்பாடி குழந் தைகளைத் தூங்க வைப்பதை அறிகிறாம். சமுதாயப் பழக்கவழக்கங்களுடன் தொடர் புடையதாகக் காணப்படும் இவ்விலக்கி யம் அவர்களது வாழ்க்கையைப் பின்னணி யாகக் காட்டுவதாக அமைகிறது. 'Cradle Song', 'Lullaby' என ஆங்கிலத்திலும் 'தாராட்டு' என மலையாளத்திலும், 'ஊஞ் சோதி' எனத் தெலுக்கிலும், 'ஜோகுல' எனக் கன்னடத்திலும் வழங்கப்படும் தாலாட்டு, தமிழில், 'ஓராட்டு', 'தாலேலோ' எனவும் வழங்கப்படுகிறது. இது, 1. குழந்தையைப் பற்றியது. 2. குழந்தையின் பொருட்களைப் பற்றியது. 3. குழந்தை உறவினரைப் பற்றி யது என 3 வகையாகப் பகுக்கப்பட்டுள் ளது.

'நீலாம்பரி' என்ற பண்ணைக் கொண்டுள்ள தாலாட்டு, தாயின் மனநிலைக்கேற்பவும், குழந்தையின் உறக்க நிலைகேற்பவும் பாடவல்லதாக அமையும் இதன் அளவு சிறிதாகவோ, பெரிதாகவோ, அடிவரையறை அற்றதாகவோ அமையும். முதலில் நாவின் அசைவுடன் தொடங்கி, குழந்தையைப் பற்றியதாக இப்பாடல் அமையும். குழந் தைமீது தாய் வைத்திருக்கும் அளவற்ற பாசத்தின் தூண்டுதலால், கற்பனை வளத் துடன் குழந்தையைப் புகழ்ந்து பாடுகி- றாள். நாட்டார் பாடல்களுள் அதியுயர்ந்த கற்பனைவளம் நிரம்பியது தாலாட்டுப் பாடலே. இதோ சான்றுக்கு ஒரு பாடல்.

'பச்சை இலுப்பை வெட்டி
பால் வடியத் தொட்டில் கட்டி
தொட்டிலுமோ பொன்னாலை
தொடுகயிறோ முத்தாலை
தம்பிக்கு முத்தளப்பான் செட்டி
முடிதரிப்பான் ஆசாரி'

கற்பனைவளம், செய்யுள் இலக்கணம் கொண்ட மற்றுமொரு கற்பனைப்பாடல்.

'ஆரடித்தார் நீ அழுதாய்
அடித்தாரைச் சொல்லி அழு
சோலைப் பசுங்கிளியே
சுந்தரமே சொல்லி அழு

மாமன் அடித்தானோ
மல்லிகைப்பூ செண்டாலே
மாமி அடித்தாளோ
மாதாளம்பூ கையாலே
கண்ணே கண்மணியே
கண்ணுறங்கு கண்ணுறங்கு'

இதைப் போன்று அளவிடமுடியாத, கற் பனை நிரம்பிய பாடல்கள் ஏராளம். தாயின் உணர்ச்சிகளும் செயல்களும் குழந்தைப் பாசத்தின் உச்சநிலையும் பாடல்களுக்கு உயிரூட்டி விடுகின்றன. இவற்றோடு கற் பனை வளமும் இணைய இப்பாடல்கள் சாகாவரம் பெற்றுவிடுகின்றன.

பாடல்களுக்கு இனிமையூட்டி இன்புறச் செய்பவை ஓசை, சந்தம், எதுகை, மோனை போன்றவையே. இப்பாடல்கள் இனிமையா கவும் ஒரு இயங்கு சக்தியாகவும் இருந்து குழந்தையைத் தூங்க வைக்கிறன.

தாய்மார் தமமுடைய அறிவு, ஆற்றல், சுற்றாடலுக்கு ஏற்றவாறு, சொற்கள், சொற் றொடர்கள், கருத்துக்களைக் கொண்டும், தம் அனுபவங்கள் ஆகியவற்றை ஆதா ரமாக வைத்தும் கற்பனைவளத்துடன் திரும் பத் திரும்பப் பாடுகிறார்கள். இப்படிப் பாடும்போது, வடிவமைப்பிலும், இசைய மைப்பிலும் வாய்ப்பாடு ஆக்கம் பெறுகி றது. குழந்தையின் மனநிலைக் கேற்ப, சொற்களை மாற்றிமாற்றிப் பாடுவர்.

மூவாயிரம் ஆண்டுகட்கு முன், வாழ்விய லுக்கு இலக்கிய, இலக்கணம் படைத்த தொல்காப்பியர், தாலாட்டைப்பற்றி, 'குழவி மருங்கினும் கிழவதாரும்' என்றும், 'கண் படை கண்ணிய கண்படை' என்றும் செய் யுள்களில் குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கியமான பரிபாடலில், தாலாட்டு என்ற சொல், 'வரையழி வாலருவி வா தாலாட்ட;' என்று வருகிறது. தமிழ்மொ ழியில், பிள்ளைத்தமிழ் பிரபந்தங்களாக முதன் முதலில், பெரியாழ்வார், கண்ணனைக் குழந்தையாகத் தொட்டிலிட்டு, 'மாணிக் கக்கட்டி, வயிர இடைக்கட்டி;' எனப்பாடி யுள்ளார். இதைத் தொடர்ந்து குலசேக ராழ்வார் இராமனை குழந்தையாக வைத் துத் தாலாட்டுப் பாடியுள்ளார்.

மேலும், தேவாரம் முத்தொள்ளாயிரம், கம் பராமாயணம் போன்ற தமிழ் இலக்கியங் களில் தாலாட்டுப் பாடல்கள் இடம் பெற் றுள்ளன. பாரதியார், 'கண்ணன் பாட்டு' என்ற பகுதியில், 'கண்ணம்மா என் குழந்தை என்ற தலைப்பில், 'என்னைக் கலி தீர்த்தே உலகில் ஏற்றம் புரிய வந்தாய்' எனத் தாலாட்டுப் பாடியுள்ளார்.

ஒரு குழந்தை அழுது கண்ணீர் வடிக்கும் போது பாசம் நிறைந்த தாய், உணர்ச்சி வசப்பட்டு, கற்பனைவளம், உயர்நவிற்சி பெற்று, தன் உணர்வுகளை இனிமையான பாடலாக பாடுகிறாள். பாடலில், குழந் தையின் கண்ணீர் பெருகி, உறவினரை நனைக்கிறது. பின் அக்கண்ணீரால் ஆறு குளம் எல்லாம் பெருக்கெடுத்து ஓடுகிறது. வாய்க்கால் நிரம்பி வழிகிறது, கேட்போர் நெஞ்சை அள்ளுகிறது. தாய்மையின் தவிப் பும், பூரிப்பும் இயற்கைவள வர்ணிப்பும் இறைவன் திருநாமங்களும் பாடலில் நிறைந்திருப்பதைக் காணலாம்.

இவ்வுலகில், தாய்மையும் சேய்மையும் உள்ளவரை, பாசமும் பற்றும், அன்பும் அரவணைப்பும், இசையும் பாடலும் இருக் கும்வரை தாலாட்டுக்கள் இருந்து கொண்டே இருக்கும். சினிமாப்பாடல்களிலும் தாலாட் டுப் பாடல்கள் குறிப்பிடத்தக்கவளவு இடம் பெற்று வருகின்றன.

'கண்ணே கண்மணியே;' 'கண்ணன் ஒரு கைக்குழந்தை;? 'தூளியிலே ஆடவந்த வானத்து மென் விளக்கே, 'தாலாட்டு;' போன்ற பல பாடல்கள் திரைப்படங்களில் இடம்பெற்றுள்ளன.

படிப்பறிவில்லாத, பாமரமக்கள் வாழும் கிராமப் புறங்களில் உள்ள தாய்மாரின் வாயில் உருவாகி, இலக்கண அமைப்பில் புகுந்து, இலக்கியத்தரம் பெற்று கற்பனை வளத்துடன் வளர்த்து, இசையுடன் கூடி மனதை மகிழ்விக்கும், இலக்கியவகை யில் ஒன்றாகத் திகழ்ந்த தாலாட்டு, பிறந்த குழந்தை உள் வாங்கும் முதல் இலக்கி யமாகிறது. குழந்தை கேட்பதோடு மட்டு மன்றி, பாடலுக்கு இயைந்து, தூங்குகிறது, சொற்களும் இசையும் அதன் செவிகளில் சேர்கின்றன. குழந்தையின் பருவம் ஒரு குறிப்பிட்ட காலந்தான்! அப்பருவத்துக்குள் எவ்வளவு மகத்தானவை பிறந்த குழந்தை யின் செயல்கள்! நாமும் அப்பருவத்தைக் கடந்துதான் வளர்ந்திருக்கிறோம்!

உசாத்துணை:
• நாட்டுப்புற இயல் ஆய்வு - by Dr. சு. சத்திவேல்
• ஈழத்து நாட்டார் பாடல்கள் - கலாநிதி. இ. பாலசுந்தரம்.

saradha.k@thaiveedu.com

அடைமானக் கடன்!...

47ம் பக்கத் தொடர்ச்சி...

லீட்டாளர்கள் கனடாவில் வீடுகளை வாங்கி விற்பதுடன் போலியாக ஆரம்ப உறை விட வரிவிலக்கைக் கோரிப்பெற்றுக்கொள் கிறார்கள் என்பதை ஓட்டாவா விரிவான விவரண ஆதாரங்களையும் ஊடக அறிக் கைகளையும் காட்டிப் பதிலிறுக்கிறது.

•

மாற்றம்:

அரசாங்கம் கடன் கொடுநரின் இடையூறு களைப் பகிர்ந்துகொள்வது பற்றிய ஆலோ சனைகளைப் பெற்றுக்கொள்ளும் புதுமு யற்சியில் இறங்குகிறது.

விளக்கம்:

தற்போது மத்திய அரசாங்கம், ஒரு தவணை தவறும் பட்சத்தில் ஒரு காப்புறுதி அடை மானத்தின் 100வீத செலவையும் பொறுப் பேற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. மத்திய அரசாங்கமோ இது சர்வதேச அளவில் "விந்தையானது" எனவும் வங்கி கள் போன்ற கடன் கொடுப்பவர்கள் இந் தச் சிக்கல்களில் சிலவற்றைத் தாங்கிக் கொள்ளவேண்டும் என்றும், இது தொடர் பாக ஒரு பொதுசன ஆலோசனை அறிக் கையை விரைவில் வெளியிடுவதாகவும் கூறுகின்றது. கனடிய நிதித் திணைக்களம் இதை "கனடாவின் வதிவிட நிதி ஒழுங்கு முறையில் ஒரு குறிப்பிடத்தக்க கட்டமைப்பு மாற்றம்" என ஒப்புக் கொள்கிறது.

பாதிப்புகள்:

வங்கிகள் போன்ற அடைமானம் கொடுப் பவர்கள் மேலதிக அபாய நேர்வுகளை எதிர்கொள்ள வேண்டியேற்படும். இது கூடு தலாக வீடு வாங்குபவர்களை அதிகளவு அடைமான விகிதங்களுக்கு இட்டுச்செல் லலாம்.

காரணம்:

மத்திய அரசாங்கம் தனது நிதிக்கடப்பா டுகளை, பரந்தளவு அடைமானத் தவணை தவறும் வேளைகளில் கட்டுப்படுத்த வேண் டியுள்ளது. அது புத்திசாலித்தனமான கடன் கொடுக்கும் பழக்கங்களை ஊக்குவிக்க வேண்டியுள்ளது.

2008 இலிருந்து, ஐந்து கடந்த மத்தியரசு வதிவிட முயற்சிகள்:

திங்கட்கிழமை அறிவிப்புகளின் தொகுப் பானது, 2008ல் ஆரம்பித்த நிதி நெருக்க டியிலிருந்து கனடாவின் வீட்டுவசதிச்சந்தை பற்றிய பிரச்சினைகளுக்கான பதிலாக ஓட்டாவா மேற்கொண்ட செயற்திட்ட நட வடிக்கையின் ஆறாவது திருத்தமாகும்.

ஜூலை, 2008: 40 வருட கடனிறுப்புக் காலப்பகுதியுடன் உயர் விகித அடைமா னங்களைக் காப்புறுதி செய்ய CMHC I சுருக்கமாக அனுமதித்துவிட்டு, அப்போ தைய கன்சவேட்டிவ் நிதி அமைச்சரான ஜிம்ஃபிலகேட்டி அந்த விதிகளை இறுக் குவதற்காக உயர் விகித அடைமானத்தின் ஆகக்கூடிய காப்புறுதிக் காலத்தை 35 ஆண்டுகளாகக் குறைக்க நடவடிக்கை எடுத்தார்.

பெப்பிரவரி, 2010: அதிகரித்துச் செல் லும் தங்கள் வீடுகளின் பெறுமதிகளுக்கு எதிராக சில கனடியர்கள் ஆகக் கூடுத லாகக்கடன் வாங்குகிறார்கள் என்ற பிரச் சினைக்காக, அந்த அரசாங்கம் கனடியர்கள் தங்கள் அடைமானத்தை மீள்நிதியாக்க, வீட்டுப்பெறுமதியின் ஆகக்கூடிய தொகை யாக 90 வீதத்தைக் கடனாகப் பெறக்கூ டியவாறு குறைத்தது. இந்த நடவடிக்கை அரசாங்க ஆதரவு அடைமானக் காப்புறு தியை, அந்த வதிவிடத்தில் வசிக்காமல் ஊகத்தோடு வாங்கும் உரிமையாளர் மீது ஒரு புதிய 20வீத முற்பணக் கொடுப்பன வுக்கான தேவைப்பாட்டைத் திணித்தது.

ஜனவரி, 2011: ஸ்டிஃபன் ஹாபரின் கன்சவேட்டிவ் அரசாங்கம் இந்த விதி- களை மேலும் இறுக்கியதோடு, உயர் விகித காப்புறுதி அடைமானத்தின் ஆகக்கூடிய கடனிறுப்புக் காலப்பகுதியை 30 வருடங் களாகக் குறைத்தது. கனடியர்கள் மீள்நி தியாக்கம் மூலமாகக் கடனாகப் பெறக் கூடிய ஆகக்கூடிய தொகை 85 வீதமாக மேலும் குறைக்கப்பட்டது.

ஜூன், 2012: மூன்றாவது சுற்று இறுக்க மானது, உயர் விகித காப்புறுதி செய்யப் பட்ட அடைமானங்களுக்கான ஆகக்கூடிய கடனிறுப்புக் காலப்பகுதியை 25 வருடங் களாகக் குறைத்தது. உயர் விகித அடை மானத்தை நாடும் கடன் கொடுப்பவர்க ளின் கடன் செலவுகள் அவர்களது வரு மானத்தின் 44 வீதத்திற்கு மேலாக இருக்க முடியாது என்பதை உறுதிசெய்ய ஒரு புதிய அழுத்தத் தேர்வாய்வை அறிமுகப் படுத்தியது. மூன்றாவது முறையாக மீள் நிதியாக்க விதிகள், ஒரு புதிய ஆகக்கூ டிய கடன் ஆதனப் பெறுமதியின் 80 வீத மாக இருக்குமாறு மேலும் இறுக்கப்பட்டன. இன்னொரு புதிய நடவடிக்கை அரசாங்க ஆதரவுள்ள காப்புறுதி செய்யப்பட்ட உயர் விகித அடைமானங்கள் கிடைக்கும் தன்மை 1 மில்லியனுக்குக் குறைவான பெறுமதி யுடைய வீடுகளுக்கே கிடைக்குமாறு கட் டுப்படுத்தப்பட்டன.

டிசம்பர், 2015: அண்மையில் தேர்ந் தெடுக்கப்பட்ட லிபரல் அரசாங்கம், தாங் கள் வதிவிடத்துறையின் "சிக்கலான வெற் றிடங்கள்" மேல் கவனம் செலுத்துவதாகக் கூறி, $500,000 ற்கு மேலான பெறுமதி கொண்ட வீடுகளுக்குக் கடன் கொடுக் கும் விதிகளை இறுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தது.

இந்த நடவடிக்கைகளின் தொகுப்பானது ஆகக் குறைந்த முற்பணக் கொடுப்பனவை இரட்டித்ததோடு $500,000 இலிருந்து $1 மில்லியன் வரை பெறுமதியுள்ள வீடுக- ளின் காப்புறுதி செய்யப்பட்ட உயர் விகித அடைமானங்களை 5 வீதத்திலிருந்து 10 வீதமாக்கியுள்ளது.

மூலம் - நன்றி: The Globe and Mail

தொடரும்...

mahesan.s@thaiveedu.com

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

Delta Academy Inc.

Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.

BSID # 667561

Grade 10	
English	ENG2D
Principle of mathematics	MPM2D
Science	SNC2D
Grade 11	
English	ENG3U
Functions	MCR3U
Biology	SBI3U
Chemistry	SCH3U
Physics	SPH3U
Accounting	BAF3M
Economics	CIA3U
Grade12	
English	ENG4U
Advanced Functions	MHF4U
Calculus and Vectors	MCV4U
Data Management	MDM4U
Biology	SBI4U
Chemistry	SCH4U
Physics	SPH4U
Accounting	BAT4M
Economics	CIA4U

ART COURSES

Grade 10	
Tamil Vocal	LITBD1
Violin Veena	AMU20
Piano Keyboard Dance	ATI201
Miruthangam	AMP20
Grade 11	
Tamil Vocal	LITCU1
Violin Veena	AMU3M
Piano Keyboard Dance	ATI3M1
Miruthangam	AMP3M
Grade 12	
Tamil Vocal	LITDU1
Violin Veena	AMU4M
Piano Keyboard Dance	ATI4M1
Miruthangam	AMP4M

Classes begins on
February, July, September
Register with us early as the space is limited.
All courses are 110 hours.
Course fee is $500 (Including registration)

KINDERGARTEN TO GRADE 12
TUTORING & HOMEWORK HELP
Special Classes For:

- Functions
- Advanced Function
- Chemistry
- Physics
- English
- Calculus & Vectors

Evening and weekend classes available
Qualified and experienced teachers to help your children to do better

416.751.2011
deltaacademyinc@hotmail.com
1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8

VEL
HEATING AND COOLING
Sales, Installation, Service, Repair

$2100 வரை பணம் பெறலாம்

பழைய Furnace, Air conditioner, Water Heater களை High Efficiency க்கு மாற்றும் போது Hydro, gas நிறுவனங்களிடம் இருந்து $2100 வரை பெறுவதுடன் உங்கள் மாதாந்த bill இல் இருந்து 40% வரை சேமிக்கலாம்.
குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே இச் சலுகை.
கடன் ஒழுங்கும் செய்து தரப்படும்.

Ramakumar:647-781-4689
velheatandcool@gmail.com

Furnace / AC
From
$1999
10 Years Warranty

LEARN TO DRIVE

Special Training Program

K.C. Driving School

Chasi
647-718-4363, 416-514-0925
drivecar3200@yahoo.ca

விஞ்ஞானம் காட்டும் உலகம் உண்மையா கற்பனையா?

- ப. தயாநிதி -

'ஒவ்வொருவரும் தமக்கென்று ஒரு உல கத்தைத் தமது மனதில் சிருஷ்டித்துக் கொள்கின்றனர்' என்று மெய்யியலில் ஒரு கருத்து உள்ளது. காதலில் வெற்றி அடைந் தவுடன் உலகம் அழகுமயமாகத் தெரிவ தும், பெரிய இழப்பைச் சந்தித்தவுடன் உலகம் துன்பமயமாகத் தெரிவதும் நாம் அறிந்ததே.

எம்மில் சிலர் சூனியம், பேய் உள்ள உல கைத் தமது மனதில் சிருஷ்டித்து அதனை நம்புகிறார்கள். உலகில் பெரும் பகுதியி னர் ஏதோ ஒரு சமயத்தை தற்பொழுது நம்புகிறார்கள். இந்து சமயத்தைப் பின் பற்றுபவர்களாக இருந்தால் கடவுள், ஆன்மா, மறுபிறப்பு உள்ள உலகத்தை நம்புவார்கள். அவர்களே கிறிஸ்தவ அல் லது இஸ்லாமிய மதத்தவராக இருந்தால் மறுபிறப்பை நம்பமாட்டார்கள், ஆனால் கடவுள், சொர்க்கம், நரகம், தீர்ப்புநாள் (judgement day) என்பவற்றை நம்புவார் கள். சமண, புத்த சமயத்தினர் கடவுளை நம்ப மாட்டார்கள். சமண சமயத்தினர் ஆன்மா, மறுபிறப்பு என்பவற்றை நம்பு வார்கள். புத்த சமயத்தினர் மறுபிறப்பை நம்புவார்கள், ஆனால் ஆன்மாவை நம்ப மாட்டார்கள்.

தம்மைப் பெரும் பகுத்தறிவாளர்கள் என்று கூறுபவர்களில் பலர் பேய், கடவுள், உயிர், மறுபிறப்பு, சொர்க்கம், நரகம் என்பவற் றில் பலவற்றை நம்பமாட்டார்கள். ஆனால் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு மனதில் கட்டிய உலகத்தை நம்புவார் கள். உலகத்தில் பெரும்பாலானோர் எவ் வித தயக்கமும் இன்றி 'உண்மை உல கம்' என நம்புவதும் ஏற்றுக்கொள்வதும், விஞ்ஞானம் எமது மனதில் சிருஷ்டிக்கும் உலகத்தை ஆகும்.

"சூரியன், கிரகங்கள், நட்சத்திரங்கள் என் பனவே பூமியைச் சுற்றி வந்தன" என்று புராதன வானியல் வல்லுநர்கள் நம்பினார் கள். அதன் அடிப்படையில், நீண்ட கால அவதானிப்புகளை உபயோகித்து, சூரிய, சந்திர கிரகணங்கள் உட்படப் பல வானி யல் நிகழ்வுகளை ஓரளவுக்குச் சரியாகவே அவர்கள் எதிர்வு கூறினார்கள். நிக்கலஸ் கொப்பநிக்கஸ் என்பவர் 16ம் நூற்றாண் டில் சூரியனைச் சுற்றியே, பூமி உட்பட, எல்லாக் கிரகங்களும் சுற்றுகின்றன எனப் பற்பல ஆதாரங்களுடன் நிரூபிக்கும் வரை, பூமியை மையமாகக் கொண்ட பிரபஞ் சக் கருத்தே நிஜஉலகத்தினைச் சரியாகப் பிரதிபலிப்பதாய் அப்போதைய விஞ்ஞான உலகம் நம்பியது,

விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியினால் மனித வாழ்க்கையில் முன்னொருபோதும் இல்லாத வகையில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இத்தகைய மாற் றங்களைச் சாத்தியப்படுத்த உதவும் விஞ் ஞானம் காட்டும் உலகம் நிஜமானதா? இதற்கான பதிலை நியூற்றனின் கோட்பா டுகளையும் ஐன்ஸ்ரைனின் கோட்பாடுக ளையும் உதாரணமாகக் கொண்டு ஆராய் வோம்.

நியூற்றன் பூமியின் ஈர்ப்பு விசையைப் பற் றிக் கூறியதன் பின்னர் பெரும்பாலானோ ரின் மனதில் பூமியின் ஈர்ப்பு விசை என்பது ஒரு மறுக்க முடியாத உண்மையாகப் பதிந்துள்ளது. திணிவு(mass) உள்ள எந் தப் பொருளும் இன்னொரு திணிவுள்ள பொருளை GM_1M_2/R^2 என்னும் நியூற்ற னின் விதிக்கமைய, ஒன்றில் ஒன்று ஈர்ப்பு விசையை பிரயோகிக்கின்றது. நியூற்றனின் விதிகளை உபயோகித்து இயற்கையில் உள்ள பல நிகழ்வுகளுக்கு விளக்கம் கொடுக்கக் கூடியதாகவும், பல நிகழ்வு களை அவை நடப்பதற்கு முன்னமேயே எதிர்வு கூறக்கூடியதாகவும் இருக்கின்றது.



அதனால், நியூற்றனின் விதிகள் காட்டும் உலகம் நிஜமானதே என நம்புகிறோம்.

நியூற்றனின் கோட்பாடுகளைப் பயன்படுத்தி உலகின் பல நிகழ்வுகளை விளக்கவும், எதிர்வு கூறக்கூடியதாகவும் இருந்தாலும், ஒளியின் வேகத்துடன் ஒப்பிடக் கூடிய வேகமுள்ள பொருள்களின் நடத்தையை விளக்குவதற்கோ, அல்லது எதிர்வு கூறு வதற்கோ இது பயன்படுவதில்லை. மேலும் வானசாத்திரத்தில் சில கிரகங்களின் பிறழ்வு நடத்தைகளை (anomaly) விளக்குவதற்கோ, எதிர்வுகூறுவதற்கோ இயலாமல் போகிறது.

நியூற்றனின் கோட்பாடுகள் விளக்குபவற் றையும் எதிர்வுகூறல்களையும் செய்து கொண்டு, அதற்கும் மேலாகவும் ஒளியுடன் ஒப்பிடக்கூடிய வேகத்தையுடைய பொருட் களின் நடத்தையையும், வானசாத்திரத்தில் சொல்லப்பட்ட பிறழ்வு நடத்தைகளையும் விளக்கவும், எதிர்வுகூறவும் ஐன்ஸ்ரைனின் கோட்பாடுகள் பயன்படுகின்றன.

உதாரணமாக புதன் கிரகத்தின் பாதை ஓர் நீள்வட்டத்தில் உள்ளது என்பதை நியூற்றனின் விதிகளை வைத்தே விளக்க முடிகின்றது. அந்த நீள்வட்டத்தின் இருப் பிடம்(location) காலத்திற்கு காலம் மாறு படுகிறது. இதனை அச்சலைவு (precession) என்று கூறுவார்கள். ஒரு நூற்றாண்டில் இவ் இருப்பிட கோணமாற்ற அளவு 570 விகலை(seconds) ஆகும். அதில் ஒரு பகு தியான 530 விகலை, வேறுகிரகங்களின் ஈர்ப்பு விசையின் விளைவு என்று நியூற்ற னின் விதிகளின் மூலம் விளக்கலாம். ஆனால் எஞ்சிய 40 விகலையை நியூற்ற னின் விதிகளால் விளக்க முடிவதில்லை. அதனை விளக்குவதற்கு 200 வருடங்கள், ஐன்ஸ்ரைனின் கோட்பாடுகள் வரும்வரை காத்திருக்க வேண்டி இருந்தது.

ஐன்ஸ்ரைனின் கோட்பாட்டில் நியூற்றனின் ஈர்ப்பு என்பது ஒரு விசை அல்ல. இது பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். எமது அன்றாட வாழ்வில் ஈர்ப்பு விசையின் விளைவுகளைப் பார்த்தவண்ணம் உள் ளோம். அது எப்படி இல்லாமல் போகும்? ஆனால், நியூற்றனின் கோட்பாடுகளை விட, ஐன்ஸ்ரைனின் கோட்பாடுகளால் பல விஷயங்களைத் துல்லியமாக எதிர்வுகூற வும், விளக்கவும் இயலும் என்பதைப் பௌதிக விஞ்ஞான உலகம் ஏற்றுக்கொண் டுள்ளது. எனினும் தற்பொழுதும் நாம் நியூற்றனின் கோட்பாடுகள் உண்மையான வை அல்ல என்று தெரிந்தும் அதனைப் பயன்படுத்துகிறோம். ஏன்?

நியூற்றனின் விதிகள் எளிமையானவை. அதனைப் பிரயோகித்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பது இலகுவானது. அதனுடைய துல் லியத்தன்மை (accuracy) அன்றாட பௌதிக வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற் குப் போதுமானதாக இருக்கிறது. அத்து டன், எமது இயல்பறிவிற்கும் (common sense) இது ஏற்புடையதாக இருக்கிறது.

ஐன்ஸ்ரைனின் கோட்பாட்டில் ஈர்ப்பு என் பது ஒரு விசை இல்லை என்று கூறியி ருந்தேன். அப்படியாயின் எப்படித்தான் ஐன்ஸ்ரைனின் கோட்பாடு மரத்திலிருந்து அப்பிள் விழுவதை விளக்குகின்றது?

ஐன்ஸ்ரைனின் கோட்பாடு, நியூற்றனின் கோட்பாடு போல் எளிமையானது அல்ல. அதனை விளங்கிக் கொள்வது மிகவும் கடினம். எமது இயல்பறிவிற்குச் சவால்வி டும் விஷயங்களும் அதில் அடங்கியுள்ளன.

ஐன்ஸ்ரைனின் கோட்பாட்டின்படி ஈர்ப்பு என்பது ஒவ்வொரு திணிவுள்ள பொருளும் தன்னைச் சுற்றியுள்ள வெளியை (space) தன்னுடைய திணிவுக்கேற்ப வளைக்கின் றது. அண்ணளவான உதாரணமாக, ஒரு மெத்தையில் வைக்கப்படும் இரும்புப் பந் தைக் குறிப்பிடலாம். மெத்தையில் இவ் விரும்புப் பந்துக்குப் பக்கத்தில் சிறுவர்கள் விளையாடப் பயன்படும் ஒரு மிகச்சிறிய கண்ணாடிப்பந்தை (toy glass marble) வைத்தால் என்ன நடக்கும்? மெத்தையில் உள்ள பெரிய இரும்புப் பந்தை நோக்கிச் சிறிய கண்ணாடிப்பந்து செல்லும் அல் லவா? இதற்கு இரும்புப் பந்தின் ஈர்ப்புச் சக்தியை விடுத்து இரும்புப் பந்து மெத் தையை வளைப்பதால் மெத்தையில் உள்ள வளைவே காரணம் என்பதைக் கற்பனை செய்யக் கூடியதாக உள்ளதல்லவா?

மேலும், ஐன்ஸ்ரைனின் கோட்பாட்டின் விளைவுகள் நம்புவதற்குக் கடினமானவை. எந்தப் பொருட்களோ அல்லது சைகை களோ (signal), ஒளியின் வேகமான 300,000 km/sற்குக் கூடிய வேகத்தில் செல்லமுடி யாது. பயணம் சென்று வருபவர்களுக்கு, அல்லது ஈர்ப்புக் கூடிய இடத்தில் இருப் பவர்களுக்கு நேரம் மெதுவாகவே செல்லும். அதாவது, அவர்கள் மற்றவர்களை விட முதுமை அடைவது தாமதாகும். ஆனால் இதனை அவதானிப்பதற்கு அவர்கள் மிக வேகமாக அதாவது ஒளியுடன் ஒப்பிடக் கூடிய வேகத்தில் சென்று வரவேண்டும் அல்லது ஈர்ப்பு மிக அதிகமான 'கருந் துளை' (Black Hole) போன்ற மிகப்பெ ரும் திணிவிற்கு அருகில் வசிக்க வேண்டும். குறைந்த வேகத்தில் செல்பவர்களுக்கும், குறைந்த ஈர்ப்பு உள்ள இடங்களில் இருப் பவர்களுக்கும் கூட நேரம் வித்தியாசமாக செல்லும் ஆயினும், இவ் நேரவித்தியாசம் மிகக்குறைவாக இருப்பதால் இதனை அவதானிப்பது கடினமாகும். மிகச் சிறிய அணுத்துகள்களை மிக வேகமாக அனுப்பி நேரம் குறைவதற்குரிய ஆதாரங்களை விஞ்ஞானிகள் பெற்றுள்ளனர்.

இதே போல் பூமிக்குத் தூரமாக இருந்து சுற்றும் செயற்கைக் கோள்களில் (satal-lite)நேரம் விரைவாகச் செல்வதால் அதனை பயன்படுத்திக் கணிக்கப்படும் எமது கார் களில் வழிகாட்டியாகப் பயன்படும் GPS இல் அதற்குரிய நேரத் திருத்தம் செய்ய வேண்டியதாக உள்ளது. இந் நேரத்திருத் தம் செய்யாவிடின், ஒரு நாளைக்கு 10 கிலோ மீற்றர் வரை எமது GPS பிழை யாகக் காட்டும். எனவே, ஐன்ஸ்ரைன் கோட் பாடுகளால் காட்டும் உலகம் தான் நிஜ மானதா?

ஐன்ஸ்ரைனின் கோட்பாடுகள் அணுவிலும் சிறிய அளவுள்ள இடங்களில் பிரயோகிக் கப்படமுடியாதவை. அவ்விடங்களில் சொட் டுப் பொறிமுறை (quantum-mechanics) உபயோகிக்கப்படுகின்றது. இவ்விரண்டு கோட்பாடுகளையும் இணைத்து ஓர் சர் வக் கோட்பாட்டை (theory-of-everything) உருவாக்கும் முயற்சி ஐன்ஸ்ரைனின் காலத்திலிருந்தே நடைபெறுகிறது. அம் முயற்சி கைகூடும் பொழுது மேலே குறிப் பிட்ட இரண்டு கோட்பாடுகளுமே கைவி டப்பட்டு புதியதொரு கோட்பாட்டின் மூலமே நாம் எமது உலகத்தை நோக்குவதாக இருக்கும் சாத்தியக்கூறுகளும் உள்ளன. அப்பொழுதுகூட நாம் மனிதனால் உரு வாக்கப்பட்ட ஒரு கோட்பாட்டின் அடிப்ப டையில்தான் உலகத்தை அறிந்துகொள் வோமே தவிர, நிஜ உலகத்தை அறிந்து கொள்வோமோ என்பது சந்தேகத்திற்கிட மானதே.

thayanithy@thaiveedu.com

கனடிய தமிழ் வழக்கறிஞர்

The Law Office of
Raphael Maharaja
Barrister & Solicitor

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com

சகலவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும்...

என்னை முதலில் அழையுங்கள்

வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்

416.873.5780

உங்கள் தேவை இவற்றில் ஒன்றா?

- வீட்டு விலை உயர்வை சாதகமாக்கி உங்களின் கடன்களில் இருந்து விடுபடவேண்டுமா?
- வீட்டின் Equity யைப் பயன்படுத்தி உயர் வட்டியில் உள்ள கடனில் இருந்து விடுபட வேண்டுமா?
- வீட்டுத்திருத்த வேலைக்கு தேவையான பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- சொந்த தேவைக்காக (Proposal Payment, பிள்ளைகளின் படிப்பு, அரங்கேற்றம், சுற்றுலா) பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- பிறிதொரு வீட்டை வாங்க தேவையான முற்பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- உயர் வட்டியில் உள்ள மோட்கேஜ்ஜை குறைந்தவட்டியிலுள்ள மோட்கேஜ்ஜாக மாற்ற வேண்டுமா?
- சொந்த தொழில் செய்பவர்கள் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- புதிதாக கனடாவுக்கு வந்தவர்கள் மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- வெளிநாட்டில் உள்ளவர்கள் கனடாவில் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- பெற்றோர் பிள்ளைகளுக்கு வீட்டை மாற்றி மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- கிறடிற் பிரச்சினை (Consumer Proposal, Late payments, previous bankruptcy) ஆனால் வீடு வாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- அவசர தேவைக்கு 2nd Mortgage எடுக்க வேண்டுமா?

* some conditions apply

KAPITAL CARE MORTGAGE INC. Lic#12623

Kethes Sivasubramaniyam AMP

Mortgage Agent - (Lic # M08006105)

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

SRI

CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com

digi

ஃபிளான்டர்ஸ் களம்

- குமார் புனிதவேல் -

இவ்வருட வைகாசி, ஆனி மாதங்களில் எனக்கு ஸ்பெயின் நாட்டின் வடபிரதேசத்தில் ஒரு நெடும் பாதயாத்திரை செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அத்தருணம் பரீஸ் நகரத்திலிருந்து நடைப் பயணத்தில் பிரனீஸ் மலைத்தொடரில் ஏறத்தாழ ஐந்நூறு கிலோமீட்டர் நடந்தேன். அப்பயணத்தில் சற்றுத் தொலைவில் தரை இரத்தச்சிவப்பாக காட்சியளிக்கவே எனது நண்பருடன் அருகில் சென்று பார்த்தேன். அங்கு பொப்பி மலர் களையாக வளர்ந்திருப்பதை அவதானித்தேன்.

நவம்பர் மாதம் பதினொராம் நாள் உலகனைத்திலும் 'நினைவுறுத்தும் நாளாக' (RememberanceDay) கொண்டாப்படுவதை யாவரும் அறிவீர்கள். சிவப்பு நிறப் பொப்பி மலர் இந்த நாளுக்குரிய சின்னமாக விளங்குகிறது. பொப்பிச் செடிகள் கொடூரமான போர் நடந்த பிளான்டர் எனும் இடத்தில் மிகையாகப் பெருகிக் காணப்பட்டன. இதன் சிவப்பு நிறம் போரில் சிந்திய குருதியின் நிறத்தை நினைவுபடுத்தி நிற்கின்றது.

இந்தப் பொப்பி மலர்கள், நினைவுறுத்தும் நாளில் (Rememberace Day) போராளிகளின் குடும்பத்திற்கு நிதி சேகரிப்பதற்காக உலகெங்கிலும் விற்பனையாவதை யாவரும் அறிந்திருப்பீர்கள். ஆனால் இந்தப் பொப்பி மலருக்கு ஒரு சுவையான பின்னணி இருப்பதையும் அதன் ஆதிமூலம் ஒரு கனடியரே என்பதையும் பலரும் அறிந்திருப்பதில்லை. எமது நாட்டின் வரலாற்றை நாம் அறிந்திருப்பது அவசியமல்லவா? எனவே சற்று விளக்கமாக இதனைக் கவனிப்போம்.

பொப்பி மலரின் பிரபல்யத்துக்குக் காரணமாயிருந்த லெப்டினன்ட் கேணல் ஜோன் மக்கரே, டொரன்டோவிற்கு அண்மையிலுள்ள கொல்ப் (Guelph) நகரை பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் பல்கலைக்கழகத்தில் கற்கையில் 'அஸ்துமா' வருத்தம் காரணமாகப் படிப்பை ஒருவருடம் தவறவிடவேண்டி வந்தது. மேலும் வைத்தியக் கலாசாலையில் கற்கையில் பொருளாதாரக் நெருக்கடி காரணமாக மாணவர்களுக்குப் பாடம் கற்பித்து வருவாய் பெற்றார். அவருடைய இரு மாணவிகளே ஒன்ராரியோ மாகாணத்தில் வைத்தியர்களாக வெளிவந்த முதல் பெண்மணிகள் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

1914ம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் பிரித்தானியா ஜேர்மனியுடன் யுத்தப்பிரகடனம் செய்ததை அடுத்து மூன்று வாரங்களில் 45,000 கனடியர்கள் யுத்தக்களத்திற்குச் சென்றார்கள். போர் முனைக்குப் புறப்படுமுன் ஜோன் மக்கரே தனது நண்பர்களுக்கு எழுதிய கடிதத்தில், ''இங்கு நிலைமை மிக மோசமாக உள்ளது. ஒவ்வொரு பிரம்மச்சாரியும், அதுவும் குறிப்பாக யுத்த அனுபவம் உடையவர்கள் போருக்கு செல்ல வேண்டும் என எண்ணுவதனால் நானும் யுத்தத்திற்குப் போவதற்கு எண்ணியுள்ளேன். உண்மையில் எனக்குப் பயமாக உள்ளது. ஆனாலும் எனது மனச்சாட்சிக்கு அதிகம் பயப்படுகிறேன்.

ஏப்ரல் 1915ல் இவர் எட்டு அடிச் சதுர கிடங்கில் இருந்து காயமுற்றவர்களுக்குச் சிகிச்சையளித்துக் கொண்டிருந்தார். ஏப்ரல் 22ம் திகதி ஜெர்மனியர்கள் குளோரின் நச்சு வாயுவை உபயோகித்தார்கள். ஜோன் மக்கரே நூற்றுக்கணக்கானவர்களுக்குத் தினமும் சிகிச்சையளித்துக் கொண்டிருந்தார்.

மே மாதம் இரண்டாம் திகதி மக்கரேயின் முன்னைய மாணவரும் நண்பருமான அலெக்ஸ் ஹெல்மர் ஜேர்மன் குண்டு வீச்சில் இறந்தார். அங்கு மதகுரு யாரும் இல்லாத நிலையில் தனது நண்பரின் இறுதிக் கிரியைகளைத் தானே நடத்தி தற்காலிக சவக்குழியில் கிடத்தினார். அடுத்த நாள் அதாவது 1915ம் ஆண்டு மே மாதம் 3ம் திகதி சாஜன்ட் மேஜர் சிறில் அலிசன் என்பவர் தபால்களை விநியோகிக்க லெப்டினன்ட் மக்ரேயினிடத்திற்கு வந்தார். அங்கு மக்கரே தனது அம்புலன்ஸ் வண்டியில் இருந்தபடி முதல் நாள் தான் அடக்கம் செய்த தனது நண்பர் அலெக்ஸ் ஹெல்மர் இருந்த இடத்தைச் சோகத்துடன் விறைத்த நிலையில் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அந்த இடத்தில் தனது உள்ளத்து சோகத்தை ஒரு செய்யுளாக வடித்தார் ஜோன் மக்கரே. அந்த செய்யுள் பிளாண்டர் களத்தை நோக்கி எழுதப்பட்டதால் ''பிளாண்டர்ஸ் பீல்ட்'' என அழைக்கப்பட்டது.

சில நிமிடங்களில் தான் எழுதிய அந்த செய்யுளை மேஜர் அலெக்சிடம் கொடுத்தார். அலெக்ஸ் அந்த செய்யுளை வாசித்தவுடன் தனக்கு ஏற்பட்ட உணர்வினைக் குறிப்பிடுகையில், அந்த செய்யுள் தனது உள்ளத்தில் பெரும் வேதனையைத் தோற்றுவித்ததுடன் தன் கண் முன்னே தோன்றிய காட்சியை வார்த்தையால் வடித்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அவர் இந்த செய்யுளைப் பிரசுரிப்பதற்காக 'The Spectator' என்ற சஞ்சிகைக்கு அனுப்பினார். ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அடுத்ததாக அதனை ''Punch'' என்ற சஞ்சிகைக்கு அனுப்பினார். டிசம்பர் 8ம் திகதி 1915ம் ஆண்டில் முதன் முதலில் இக்கவிதை அவ்விதழில் அது பிரசுரமானபோது அவர் பெயர் இடம்பெறத் தவறிவிட்டது.

பிரசுரமானவுடனேயே அந்தச் செய்யுள் மிகப் பிரபல்யமாகியது. முதலாம் உலக மகாயுத்த காலத்தில் இக்கவிதை மிகப் பிரபல்யமானதுடன் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது. கனடாவில் மக்களிடம் யுத்த புனருத்தாரண நிவாரண நிதிக்குப் பணம் சேர்ப்பதற்கு இப்பாடலை பயன்படுத்தினார்கள். அத்தருணம் $150,000 சேர்க்கும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், இறுதியில் அக்காலத்திலேயே $400,000 சேர்க்கப்பட்டது. மேலும் யுத்தத்தை நினைவூட்டும் மலராக பொப்பி மலரும் நிலைபெற்றது.

அவர் பாடிய பாடல்!

In Flanders fields the poppies blow
Between the crosses, row on row
That mark our place: and in the sky
The larks still bravely singing fly
Scarce heard a mid the guns below.

We are the dead: Short days ago,
We lived, felt dawn, saw sunset glow,
Loved and were loved: and now we lie
In Flanders fields

Take up our guard with the foe
To you, from failing hands we throw
The torch: be yours to hold it high
If ye break faith with us who die
We shall not sleep, though poppies grow
In Flanders fields

(மொழிபெயர்ப்பு)

பிளான்டர் களத்தில் பொப்பி மலர்கள்
- அசைந்திட
நிரை நிரையாக நிற்கும் சிலுவைகளுக்
- கிடையில்
எம்மை நினைவூட்டி நின்றிடும்.
வானில் பறந்திடும் வானம்பாடிகள் துணிவுடன்
- பாடும் பாடலோசை
மண்ணில் ஒடுங்கின. பிரங்கி ஒலியில்
- இறந்தவர் நாங்கள்.

சில தினங்கள் முன் வாழ்ந்தவர் நாங்கள்
விடியலை ரசித்து மாலையில் மயங்கி
பாசம்காட்டி நேசம் பெற்று,

இன்று உலகெங்கும் இந்த செய்யுள் 'நினைவுறுத்தும் நாளாக' முக்கிய அங்கமாக இடம் பெற்றுள்ளது. ஜீன் பரிஸ் என்பவரால் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு கனடாவிலும் பிரஞ்சில் இது பாடப்படுகின்றது. 2001ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டுவரை அச்சடிக்கப்பட்ட பத்து டொலர் தாள்களில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

இச்செய்யுளின் நூறாவது ஆண்டு நிறைவை நினைவுபடுத்துமுகமாக சிவப்பு நிற பொப்பி மலருடன் 25 சத நாணயமும் இரண்டு டொலர் நாணமும் பதிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

1940ம் ஆண்டிலிருந்து மொன்றியால் கனடியன் ஹொக்கி கழகத்தின் மகுட வாசகம் (Motto) 'உம்மிடம் தந்தோம் தீவட்டியை, உங்களதாக! உங்களுக்காக! உயரவே பிடித்திடுங்கள்.

ஒரு இனத்தின் மேன்மை தொடர்ச்சியிலேயே தங்கியிருக்கின்றது. அடுத்த தலை முறையிடம் கையளிக்க வேண்டிய தீவட்டிகளை நாமும் வைத்திருக்கின்றோம்.

இப்போ
துயில்கிறோம் பிளான்டர் களத்தில்.

எதிரிகளுடன் எமக்குள்ள பிணக்கை ஓயும்
- கரங்களால்
உம்மிடம் தந்தோம் தீவட்டிகளாக,
உங்களதாக உயரவே பிடித்திடுங்கள்.
நம்பிக்கையை நீங்கள் முறித்தால் இறந்தவர்
- நாங்கள் துயில மாட்டோம்.
எனினும் பிளான்டர் களத்தில் பொப்பி மலர்கள்
- தொடர்ந்து
மலர்ந்து கொண்டேயிருக்கும்.

kumar.punithavel@thaiveedu.com

MENAKA CARD
திருமணம், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள்
அச்சிட தொரன்ரோவில் புதிய காட்சியறையுடன்
மேனகா அழைப்பிதழ்
Invitations for all occasions
80 Nashdene Road, Suite 113, (E Block), Toronto, Ontario, M1V 5E4. Tel : 416.335.1155

புலம்பெயர் மொன்றியால் தமிழர்களின் ஆரம்பகாலக் கலை, இலக்கிய முயற்சி!

பகுதி: 08

- லீலா சிவானந்தன் -

1985ம் ஆண்டு ஜூலை மாதம் தமிழ்த் தென்றல் ஒராண்டு நிறைவை எட்டியபோது அதை ஒரு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்பது பலரது கருத்தாக இருந்தது. அதற்கான ஏற்பாடுகள் தொடங்கின. விழாவுக்கான ஒழுங்குகள், நிகழ்ச்சிகள் என்பவற்றைச் செய்யும் பொறுப்பு வானொலி இயக்குனர் என்ற முறையில் என்னிடம் வந்தது. அதற்குரிய ஒழுங்குகளைச் செய்வதற்குப் பலரும் உறுதுணையாக இருந்தனர்.

இந்த இடத்தில் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். பொதுவாழ்வில் ஈடுபட்டுச் சமூகத்துக்காகச் சேவை செய்ய முன் வருபவர்கள் சேவை மனப்பான்மையுடன் தன்னலம் கருதாதவர்களாக இருக்க வேண்டும். வருகின்ற பிரச்சினைகளை எதிர்கொள்ளும் துணிவும், சிந்தனைத் திறனும், பொறுமையும் உடையவர்களாக இருக்க வேண்டும். இதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்கள் மொன்றியாலில் தமிழர் ஒளி மூலம் பெரும் தொண்டாற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்குழு அங்கத்தவர்கள் ஆவர். எந்தவித பிரதிபலனும் கருதாது மக்கள் நலன் ஒன்றே முக்கியம் என்று கருத்தில் கொண்டு உழைத்தவர்கள் இவர்கள்.

இவர்கள் அனைவருமே முழுநேரமாக வேலை செய்து கொண்டிருந்தவர்கள். இக்காலத்தில் மொன்றியாலில் எவ்விதமான வேலைகளைச் செய்ய முடிந்தது என்பதை இப் பதிவில் ஏற்கனவே கூறியிருந்தேன். அத் தகைய கடுமையான வேலைப்பளுக்களிடையேயும் ஏனைய பிரச்சினைகளிடையேயும் இவ்வாறான பொதுச் சேவையில் முன்னின்று ஈடுபட்டனர். தினமும் வேலை முடிந்த பின்னர் தமிழர் ஒளி நிலையத்தில் செயற்குழு உறுப்பினர்கள் கூடுவார்கள். பயிற்சித் திட்டங்களில் ஏராளமானவர்கள் பங்கு பற்றியிருந்தாலும், பிற பணிகளான மொழி பெயர்ப்பு, குடிவரவுப் பிரச்சினைகள் போன்றவற்றிலும் செயற்குழு உறுப்பினர்கள் அதிக நேரம் நிலையத்தில் செலவழித்தனர். நிர்வாக உதவியாளர்கள் இருந்தும் கூட இவர்களின் மேற்பார்வை அவர்களுக்குத் தேவைப்பட்டது.

இவர்களின் அர்ப்பணிப்பு, சேவை மனப்பான்மை, உதவும் குணம் ஆகியன போற்றுதற்குரியவை. சங்கம் தொடங்கினோம், நடத்தினோம் என்றில்லாமல் அதைத் தேவைக்கேற்ற முறையில் பயன்படுத்தியதாகட்டும், மக்களுக்கு உதவி போய்ச் சேர வேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்ததிலாகட்டும் இவர்களின் பங்கு மகத்தானது.

இப்போது வானொலியின் முதலாம் ஆண்டு விழா பற்றிப் பார்ப்போம். ஏற்கனவே சில விடயங்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன் இப்போது மேலும் சில விபரங்களைப் பார்க்கலாம். மொன்றியால் மக்கள் அனைவருக்குமே அது மகிழ்ச்சியான ஒரு சம்பவமாக அமைந்திருந்தது. மொன்றியாலுக்குத் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வரத் தொடங்கிய இரண்டு வருடங்களுக்குள்ளாகவே இப்படியானதொரு முயற்சியில் ஈடுபட்டமை அனைவருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. வசதி வாய்ப்புகளைக் கருத்தில் கொள்ளாது மிகுந்த ஆர்வத்துடன் பலவிதமான முடிவுகள் எடுக்கப்பட்டன. அந்த நேரத்தில் மலர் வெளியீடு என்பது மிகவும் சிரமமான செயலாக இருந்தது என்பதை நான் இங்கே குறிப்பிட வேண்டும்.

தீர்மானம் மேற்கொண்டாயிற்று. இனி செயலில் இறங்க வேண்டும் என்று கருதி அதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. முதலில் தமிழர் ஒளி நிலையம் இருந்த பகுதியான Sainte – Anne பகுதியின் தேசியப் பேரவை உறுப்பினரான (Member of National Assembly a quebec for saint - Anne) maximilien polak அவர்களையும் அவரது துணைவியாரையும் பிரதம விருந்தினர்களாக அழைப்பது என்று முடிவாயிற்று. Maximilien Polak நெதர்லாந்தில் உள்ள Leider என்ற இடத்தைச் சேர்ந்தவர். மொன்றியாலுக்கு வந்து முதலில் வழக்கறிஞராகப் பணிபுரிந்து பின்னர் நீதிவானாக உயர்ந்தவர். பின்னர் அரசியலில் நுழைந்து Sainte – Anne தொகுதியில் Liberal கட்சியின் சார்பில் போட்டியிட்டு 1981லிருந்து 1985 வரையும் பின்னர் 1985லிருந்து 1989 வரையும் Saunte Anne தொகுதியின் தேசியப் பேரவையின் உறுப்பினராக இருந்து பேதம் பாராது எல்லோருக்கும் சேவை செய்தவர். 1985ம் ஆண்டில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 60.92 வீதமான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரைப் பற்றி இவ்வளவு குறிப்பிடுவதற்குக் காரணம், இவர் தன் மனைவியாருடன் நிகழ்ச்சியின் ஆரம்பத்திலேயே வந்திருந்து நிகழ்ச்சியின் இறுதி வரைக்கும் எம்மோடிருந்து நிகழ்ச்சியைப் பார்த்து மகிழ்ந்தார். அன்று அவர் நிகழ்த்திய உரை மண்டபம் நிரம்பியிருந்த மக்களுக்கு மனதில் ஒரு தெம்பையும் உறுதியையும் எதிர்காலத்துக்கான ஒரு நம்பிக்கையையும் அளித்தது என்று கூறலாம்.

நான் ஏனைய நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு படுத்தும் முயற்சியில் ஈடுபட்டேன். மொன்றியாலில் 'நிருத்தியாலயா' என்ற நடனப் பள்ளியை மிகவும் சிறப்பாக நடத்திக் கொண்டிருந்த திருமதி வசந்தா கிருஷ்ணன் எங்கள் நிகழ்வுக்கு நடன நிகழ்ச்சி தர ஒப்புக்கொண்டார் இவரிடம் நிறைய மாணவிகள் நடனம் பயின்று வந்தனர். அருமையான பல நடன நிகழ்ச்சிகளையும் நடத்திக்கொண்டிருந்தார். இதனோடு மற்றுமொரு நடனம், ரவி அமிர்தவாசகத்தின் தனிநடிப்பு, சிவாஜி மகேந்திரனின் பாட்டுக்கு அபிநயம் ஆகிய நிகழ்வுகளுடன், சிறப்பு நிகழ்ச்சியாக சிறீஸ்கந்தராசாவின் ஜூலியஸ் சீசர் நாடகம் இடம் பெற்றது. சிறிஸ்கந்தராசாவின் நெறியாள்கையில், ஜூலியஸ் சீசராக செல்வராசா திலீபன் அருமையாக நடித்திருந்தார். இப்போதும் ஞாபகம் இருக்கிறது. நீண்ட நாட்கள் செலவழித்து சரித்திர நாடகத்துக்கான அதுவும் ஆங்கில கலாசாரப் பின்னணியில் அமைந்த ஒரு நாடகத்திற்காக உடைகள், வாள்கள், கிரீடங்கள், காலணிகள், கையுறைகள், மன்னர் சேவகர்களுக்கான பொருட்கள், அரசிருக்கை எல்லாம் ஏற்பாடு செய்திருந்தார்கள். இவை அற்புதமான இருந்தன. திலீபனின் ஜூலியஸ் சீசர் உடை மிகவும் அற்புதமாக இருந்தது. நிகழ்ச்சி முடிந்த பின்னரும் நீண்ட நாட்கள் ஜூலியஸ் சீசரைப்பற்றிய கதையே பலராலும் பேசப்பட்டது.

சிவாஜி மகேந்திரன், நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பாடல் காட்சிகளுக்கு நடித்துக் காட்டுவார். அச்சு அசலாக சிவாஜி கணேசன் நடிப்பது போலவே இருக்கும். சிறு கண்ணசைவைக் கூட சிவாஜி கணேசன் போலவே தத்ரூபமாகச் செய்து காட்டும் திறமை அவரிடம் இருந்தது. அவர் ஒரு திறமையான ஒரு கலைஞன். அதே போல் திலீபனும் ஒரு பிறவிக் கலைஞன். தந்தையின் கலைத்திறமை அப்படியே திலீபனிடம் இருந்தது. கலைத்துறையில் தொடர்ந்து இருந்திருந்தால் மிகச் சிறந்த ஒரு கலைஞனாக மிளிர்ந்திருப்பார்.

நிகழ்ச்சிகளின் இடையே பிரதம விருந்தினர் Maximilien Polat அவர்களின் சிறப்புப் பேச்சு இடம் பெற்றது. அவரும் நெதர்லாந்தில் பிறந்து கனடாவுக்கு குடிபெயர்ந்தவர் என்று தன்னைப் பற்றிக் கூறி, மேலும் நிகழ்விற்கு தான் வரும்போது கார் நிறுத்துமிடத்தில் மிகச் சில கார்களே நின்றதாகவும் இவ்வளவு பெரிய St Henri auditorium க்கு வந்திருப்பவர்கள் சிலராகத் தான் இருக்கும் என்று நினைத்ததாகவும், உள்ளே வந்தவுடன் மண்டபம் நிரம்பிய மக்களைக் கண்டதும் தனக்கு நம்ப முடியவில்லை என்றும் கூறினார்.

மேலும் அவர், புலம்பெயர் தமிழ் மக்களின் நிலையைப் புரிந்து கொள்ள முடிகின்றது என்றும் அவர்கள் மிகக் கடின உழைப்பையும் சிறப்பான பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் உடையவர்கள் என்று கூறி, இப்பொழுது ஒரு சில கார்களே கார் நிறுத்துமிடத்தில் நிற்கின்றன. அடுத்த வருடம் நான் இங்கே உங்கள் நிகழ்ச்சிக்கு வரும்போது கார் நிறுத்துமிடம் கார்களால் நிரம்பியிருக்க வேண்டும், நிரம்பியிருக்கும் என்று பலத்த கைதட்டல்களுக் கிடையே கூறினார். அதுபோலவே அடுத்த முறையும் அவரை விருந்தினராக அழைத்திருந்தோம். கார் நிறுத்துமிடம் கார்களால் நிறைந்திருந்தது. அதைத் தன் பேச்சில் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். 1986ல் நடைபெற்ற இவ்விழா பற்றிப் பின்னர் பார்ப்போம்.

இன்னுமொரு விடயம் இங்கே கூற வேண்டும். இந்த விழாவையொட்டி ஒரு மலர் வெளியிட வேண்டும் என்று நினைத்தோம். நினைத்தவாறே மலரும் வெளிவந்தது. அந்த மலர் வெளியிட நாங்கள் எடுத்த முயற்சிகள் பற்றியும் அதில் பங்களித்தவர்கள் மற்றும் உதவி புரிந்தவர்கள் பற்றியும் அடுத்த மாதம் பார்ப்போம்.

leela.sivananthan@thaiveedu.com

HELP WANTED

மிஸ்ஸிசாகுவா, நோத்யோர்க், ஸ்கார்பரோ
(Mississauga, North York, Scarborough)
ஆகிய பகுதிகளில்
கிளீனிங் வேலைக்கு ஆட்கள் தேவை.

Nathan
647 646 8667
Procare building Maintence

Build Your Home
With a
Trusted and Registered
Builder

REGISTERED BUILDER
TARION
TARION WARRANTY CORPORATION

45266

Tarion Registered Builder

G
GALAXY
COMMUNITIES

www.galaxycommunities.com
416-899-0500

DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION

What if your Lawyer is also an Accountant?

- Tax Law
- HST - New Housing Rebate and Residential Rental Property Rebate Claims
- Appeals to CRA / Tax Court of Canada
- CRA Questionnaires / CRA Audits
- Tax planning for businesses and individuals
- Business law – Incorporations / Purchase, Sale & Lease
- Employment Law – Termination / Dismissal Claims
- Estate Planning and Last Wills

Vinayagamoorthy **Devadas CPA, CMA, MBA**
Barrister & Solicitor
devadas@vdlaw.ca

- Real Estate – Residential / Commercial - Purchase, Sale & Refinancing
- Family law – Divorce / Separation / Custody & Support
- Immigration – Sponsorship / Super Visa / Work Permits
- Power of Attorney, Affidavits, Statutory declaration
- Notarization & Commissioning

Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca

DROP IN FOR A FREE 30 MINUTE INITIAL CONSULTATION
Evenings & weekends consultation by appointments

Devadas Law Professional Corporation
LAW with ACCOUNTability

1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Next to RBC @ Kennedy & Ellesmere

Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
www.vdlaw.ca

Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

Call Before You List & See The Difference!

LAWRENCE/KINGSTON RD

Stacked Townhouse, 3 Bedrooms, 2 Bathrooms, 2 Main Entrances. Very Spacious Multi Level Condo. Perfect For Small Or Large Family.

HWY 7/BAYVIEW

Modern Stylish Thornhill Tower Sun Filled 1 Bedroom Suite W/Functional Layout^ Modern Open Concept Kitchen^ Laminated Flr.

ROSSLAND/STEVENSON

Spacious And Bright Bungalow On Premium Size Lot 68 X 200 Feet Located In Demand Sought-After Location!! Bsmnt W/Sep Ent.

FINCH/MARKHAM RD

Investers Welcome! *3 Bedroom With 3 Bed Bsmt Apt Sep Ent.Bungalow*. Freshly Painted, Brand New Bath, Upgraded Kitchen.

DIXIE/FINCH

A Rare Opportunity To Own A Great Home In This Family Friendly Neighbourhood, Over 2000+ Sq Ft Of Living Space, W/Sep Ent.

NEILSON/MCLEVIN

Never Freehold! Absolutely Gorgeous! End Unit Like Semi! With No Feast 3+1 Bedrooms 4 Baths, Full Upgraded Hardwood Floors.

DANFORTH/ST.CLAIR

Beautiful Arista Built Freehold Townhouse! 3 Years New! Modern Kitchen With Granite Counter-Tops, Back-Splash & S.S Appl.

BROCK RD/MAJOR OAKS

Gorgeous 2 Story Double Garage Walk Out Finished Basement**Family Room With Fire Place.3 Bed Rooms, 2 Walkouts.

MAVIS/EGLINTON

Beautiful Freehold Townhouse In The High Demand Area In Mississauga. Double Door Entrance With Large Foyer, Fin Basement.

YONGE/BATSON

Unbelievable Price For This Beautiful Totally Renovated 2-Storey Home, With Absolute Privacy Backing To Ravine And Park.

FINCH/MORNINGSIDE

Wow! Gorgeous, Meticulously Cared Home In A Rouge Neighbourhood. Walk To Community Centre, School, TTC. Close To Toronto Zoo.

LESLIE/VANHORNE

Must See This Beautiful Home Maintained By The Proud Original Owners. Well Established Residential Neighbourhood. 2 Family Home.

HWY 2/NASH RD

Enjoy The Nature & Serenity Of Your Very Own 45 Acres Of Park Like Setting, While Still Being Close To All Amenities & Hwy 401.

HARMONY/TAUNTON

This Absolutely Beautiful & Spacious 4 Bedroom Detached Home In Oshawa Boasts 2 Balconies In Master & 3rd Bedroom*9Ft Ceilings on Main.

KEELE/MAJOR MACKENZIE

Remks Location! Luxurious Executive Town-home In The Heart Of Maple. Outstanding Finishes In This Live/Work Residence.

YONGE/BANTRY

Freehold TH, But Like Semi-Det, South Side Connected Only By Garage, Over 1,750 Sqft. Very Well Maintained, In High Demand Area.

ROSSLAND/SALEM

Rarely Offered, Gorgeous Medallion Built Home That Backs Onto A Breathtaking Picturesque Pond And Lush Greenspace (Premium Lot).

BAY/HARBOUR/YONGE

Love Lake Living? Above The City And The Bay!! Sail Into The Panoramic Water View! Gentle Breezes At Prestigious Point.

LIST YOUR HOME HERE!

LIST YOUR HOME HERE!

Free Home Evaluation. No Cost. No Obligations

RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002

MLS 2009-2015 2007-2008

YS
YATHAVANN SELVARAJAH
Sales Representative

Dir:416-992-4474 | www.HouzzValue.ca

*Not Intended to solicit buyer or seller under contract.

ENTER FOR A CHANCE TO

WIN

WITH HOMELIFE GALAXY REAL ESTATE LTD., BROKERAGE

BUY • SELL • LEASE

THROUGH OUR BROKERAGE

GRAND PRIZE

civic 2017*

Win 1 of 3

All inclusive Trip*

for 2 to the Caribbean

HOMELIFE
HIGHER STANDARDS

DRAW DATE:

GALAXY GALA NITE 2016

November 4th 2016 @ 10 pm

* Winning prices shown above may not look exactly same, No Purchase necessary.

*Visit www.homelifegalaxy.com for terms and conditions

HomeLife Galaxy

REAL ESTATE LTD., BROKERAGE, INDEPENDENTLY OWNED & OPERATED

Tel: 416.284.5555 | Fax: 416-284-5727

111 Grangeway Ave, #301, Toronto, ON M1H 3E9

*Not intended to solicit buyers or sellers under contract with any other brokerages

மனிதருள் தெய்வம் - குருகுலம் திரு.வே. கதிரவேலு

- பி. பற்குணரஞ்சன் -

கிளிநொச்சி மாவட்டத்தில் அரும்பெரும் தொண்டாற்றிய மகான் திரு வே. கதிரவேலு அவர்களின் நூற்றாண்டு நிகழ்வு கடந்த ஒக்டோபர் 21ம் நாள் கிளிநொச்சியில் கொண்டாடப்பட்டு, அவரது உருவச்சிலை யும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அவர் நினைவாக 'நினைவழியாப் பெருமனிதர்' என்ற நூலும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

யார் இந்த 'அப்புஜி' என்று அனைவரா லும் போற்றப்பட்ட மகான்? இவர் சமூகத் துக்காகச் செய்த சேவைகள் என்ன? என்ற வினாக்கள் தற்போதைய தலைமுறையின ருக்கு ஏற்படுவது இயல்பானதே.

அப்புஜி அவர்களின் நூற்றாண்டை முன் னிட்டு, இந்த வினாக்களுக்குப் பதிலிறுக் கும் வகையில் இக்கட்டுரை எழுதப்படு கின்றது.

பல்வேறு சிறப்புகள் நிறைந்த பூமியான நெடுந்தீவில் 1916, ஒக்டோபர் 21ம் திகதி அப்புஜி அவர்கள் பிறந்தார். கல்வியிலும் சமூகத் தொண்டிலும் ஈடுபாடு கொண்ட வராகவே திரு கதிரவேலு வளர்ந்தார். அவரிடம் சைவ சமயப் பற்றும் ஆன்மீக ஈடுபாடும் பெருகிக் காணப்பட்டது. அவ் வேளை கிளிநொச்சி 7ம் வாய்க்கால் பகு தியில் இயங்கி வந்த மகாதேவா ஆச்சிர மம் என்ற ஆன்மீக மடத்தோடு நெருக்க மான தொடர்பையும் கொண்டிருந்தார்.

இவ்வேளை அவருடைய வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி அவரது வாழ்வின் போக்கு களை மாற்றி விட்டது.

கண்டி - யாழ்ப்பாண புகையிரத்தில் தன் குடும்பத்தினருடன் யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்த வேளை புகைவண்டியின் வெளியே கால்களை நீட்டிக் கொண்டி ருந்தார். எதிர்பாராதவிதமாக அவருடைய கால்கள் மின் கம்பங்களில் மோதிவிட, அப்புஜி படுகாயம் அடைந்தார். உடனி ருந்தோர் அவரை மீட்டு உடனடியாக உரிய மருத்துவத்தை மேற்கொண்டனர். ஓரளவு நலமடைந்த பின் தன்னை மகாதேவா ஆச் சிரமத்தில் சேர்ப்பித்து விடுமாறு உறவின ரைக் கேட்டுக்கொண்டார்.

இறை வழிபாட்டிலும் ஆன்மீகத்திலும் பெரு நம்பிக்கை கொண்டிருந்த அப்புஜி தன் ஆன்மபலத்தால் விரைவில் நலமெய்தி னார். அவ்வேளை பெரு வளர்ச்சியுறாதி ருந்த கிளிநொச்சி மக்களையும் அவர்க ளுடைய வாழ்வாதாரப் போராட்டங்களை யும் நன்குணரத் தொடங்கினார். குடியேற் றப் பூமியான கிளிநொச்சியில் தொடக்க காலத்தில் பல படித்த வாலிபர் நிலத்திட் டங்கள் உருவாகியிருந்தன. அந்த நிலங் களைப் பெற்று கிளிநொச்சியைப் பொன் கொழிக்கும் பூமியாக மாற்றியதில் நெடுந் தீவு மக்களுக்குக் கணிசமான பங்குண்டு. அவ்வேளை 1958ல் நடந்த இனவழிப்பால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான குடும் பங்கள் கிளிநொச்சியில் குடியேறியிருந் தனர். அவர்களில் பெரும்பாலானோர் உற வுகளையும் பொருளையும் இழந்தவர்க ளாக இருந்தனர். அவர்கள் காடு திருத்தி நிலத்தைக் கழனிகளாக்கப் போராடிக் கொண்டிருந்தனர். மலேரியா போன்ற கொடிய நோய்களும் அவர்களைத் தாக்கின. வறிய குடும்பத்துப் பிள்ளைகள் பெரிதும் பாதிக் கப்பட்டனர். இவ்வேளை சில கிறிஸ்தவ அமைப்புகளான கருணாநிலையம், நவ ஜீவனம் போன்றன சிறுவர் காப்பகங்க ளைத் தொடங்கின. வெளிநாட்டு அமைப் புகள் அவற்றுக்குத் துணை செய்தன.

இந்துகளைப் பெருமளவில் கொண்டிருந்த சமூகச் சூழலில், இந்து மரபுகளோடு கூடிய ஒரு சிறுவர் பராமரிப்பகம் அங்கு தேவை என்பதை அப்போது அப்புஜி உணர்ந்தார்.

இந்து மரபைப் பேணும் நோக்கோடு வட பகுதியெங்கும் இந்துக் கல்லூரிகளும் இந்து மகாவித்தியாலங்களும் தோற்றம் பெற்றி ருந்தன. கிளிநொச்சியின் தொடக்ககால குடியேற்றப் பிரதேசங்களாகத் திகழ்ந்த 7ம் வாய்க்கால், 8ம் வாய்க்கால், ஜெயந் திநகர் என்ற கிராமங்களை மையப்படுத்தி 7ம் வாய்க்காலில் இந்து வித்தியாலயம் தோற்றம் கொண்டிருந்தது. இது மகாதேவா ஆச்சிரமத்துக்கு அருகாமையிலேயே அமைந்திருந்தது.

தன் எண்ணத்தில் உதித்த கருவைச் செய லாக்கத் தொடங்கினார் அப்புஜி. கிளிநொச் சியில் நிலங்கள் பல கேட்பாரற்றுக் கிடந்த காலம் இது.

இந்து வித்தியாலயத்துக்குப் பின்னால் இருந்த நிலத்துக்குரியவரான திரு நாக

லிங்கம் என்பவரோடு தொடர்பு கொண்டு, அந்த நிலத்தைத் தன் பராமரிப்பகத்துக் காகப் பெற்றுக் கொண்டார். அந்த நிலத் தைத் திருத்தி குடில்கள் அமைத்து வாழ் விடத்துக்குரியதாக மாற்றினார்.

24.02.1964ம் நாள் பதினொரு சிறார்களோடு குருகுலம் என்ற இந்து மரபு சார்ந்த காப்பகம் ஆரம்பமானது. எந்த அமைப் பையும் பொருளாதார வளமின்றிக் கொண்டு நடத்த முடியாது. பெரியளவில் பொரு ளாதாரப் பின்புலமற்ற நிலையில்தான் அப்புஜி இதனைத் தொடங்கினார். இதற்கு அவருடைய தன்னம்பிக்கையே அடித்தள மாக இருந்தது. குருகுலத்தை அண்டிய காணிகள் பலவும் குருகுலத்துக்காகக் கிடைத்தன. அவற்றை விவசாய பூமியாக் கினார். கைத்தொழில் துறையில் தேர்ச்சி பெற்றிருந்த அப்புஜி சில கைத்தொழில் களையும் அங்கு மேற்கொண்டார். இவை தந்த வருமானம் குருகுலத்தைத் தொடர்ந்து நடத்த உதவியது.

அப்புஜி அவர்களோடு அவரது துணைவி யார் சின்னம்மா அவர்களும் இப்பணி யில் முழுதாக இணைந்தார்.

'குருகுலம்' என்ற கட்டுப்பாடுகள் மிக்க அமைப்பின் செயற்பாடுகள் மிக நேர்த்தி யாக அப்புஜியால் உருவாக்கப்பட்டிருந் தன. சிறுவர்கள் காலை முதல் இரவு தூங் கச் செல்லும்வரை கடைப்பிடித்த நாளாந் தக் கடமைகள் வெகு சிறப்பானவை. கட் டுக்கோப்பும் ஒழுக்கமும் வழிபாடும் நிறைந் தவை. தீயவை எதுவும் தீண்ட முடியாத புனித பூமியாகவே அது திகழ்ந்தது. குரு குல மாணவர் அனைவரும் இந்து மகா வித்தியாலத்தில் கற்றனர். குருகுல மாண வர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினர். ஏனைய மாணவர்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தனர்.

பின்னாட்களில் குருகுலத்தில் இணைவோர் தொகை பெருகியது. வறியோரும் பெற் றோரை இழந்தோரும் குருகுலத்தில் தஞ் சம் அடைந்தனர். எவ்வித ஏற்றத்தாழ்வுக ளும் இல்லாது அனைவரையும் ஏற்றுக் கொண்டார் அப்புஜி.

எமக்குத் தெரிந்து எந்தப் பெருநிறுவனங் களோ அல்லது அரசோ குருகுலத்துக்கு உதவியதாகத் தெரியவில்லை. மாணவ ரின் வறுமையை, ஆதரவற்ற நிலையை வெளிப்படுத்தி நிதி சேகரிக்கும் ஒருவ ராக அப்புஜி இருந்தில்லை. எந்தத் தந் தையும் தன் பிள்ளைகளின் துயரத்தை வெளியே கூறி பணம் சேகரிப்பதில்லை. அந்த குருகுலத்தில் இருந்த அத்தனை பேரும் அப்புஜின் பிள்ளைகளாகவே இருந் தார்கள்.

எழுபதுகளின் பிற்பகுதியில் நூற்றுக்கணக் கான பிள்ளைகள் குருகுலத்தில் வாழ்ந் தனர். நாளாந்தம் உணவுக்கே பெருந் தொகை தேவைப்பட்டது. மாணவர்களுக் கான ஆடைகள், கற்றல் உபகரணங்கள் என ஏகப்பட்ட தேவைகள் இருந்தன. எங் கும் கையேந்தாமல் எல்லாவற்றையும் எதிர் கொண்டு வெற்றி பெற்றார்.

கிளிநொச்சியில் அப்புஜி அவர்கள் மேற் கொண்ட இப்பணியின் சிறப்பை விதந்து ரைக்க வார்த்தைகள் இல்லை. அபலைக ளையும் ஆதரவற்றோரையும் வைத்துக் கொண்டு வணிக, அரசியல் இலாபம் தேடும் பலருக்குமிடையே வேறுபட்டவரா கத் திகழ்ந்தார் அப்புஜி. தன்னையோ அல் லது குருகுலத்தையோ அவர் என்றும் விளம்பரம் செய்ததில்லை. அந்த பிள்ளை களின் ஏற்றம் மிக்க வாழ்விலேயே அவ ரது நெஞ்சார்ந்த நிறைவு தங்கியிருந்தது.

எண்பதுகளின் தொடக்கத்திலிருந்தே போர்ச் சூழல் ஈழத்து மண்ணைக் கவ்வியிருந்தது. இராணுவ வளைப்புகளும் ஊரடங்குச் சட்டங்களும் இயல்பு வாழ்க்கையைச் சீர் குலைத்தன. இந்தச் சூழல்களினால் தனிக் குடும்பங்களே அல்லலுற்ற போது, நூற் றுக்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கொண் டிருந்த அப்புஜி எவ்வளவு அல்லலுற்றி ருக்கக் கூடும்?

தளர்ந்து போகவில்லை அப்புஜி. துயரச் சூழல் சுற்றி வளைத்த போதும் பிள்ளை களுக்கு மூன்று வேளையும் உணவூட்டிப் பாதுகாத்தார். பாடசாலைகள் மூடப்பட் டாலும் குருகுல வளாகத்துக்குள்ளேயே பயின்றார்கள்.

1987 டிசம்பரில், அயராது குருகுலப் பணி களைச் செய்துகொண்டிருந்த பொழுதொன் றில், இந்திய இராணுவக் கெடுபிடிகள் சூழ்ந்திருந்த ஒரு துயர் நிறைந்த நாளில், அப்புஜி அவர்கள் குடும்பத்தோடு வெறி கொண்ட இராணுவச்சன்னங்களுக்கு பலி யானார்.

தாயை இழந்த கன்றுகளாகத் தவித்தது குருகுலம். பேராதரவாக இருந்த ஒற்றை மரத்தை இழந்த பறவைகளாயினர் மாண வர். எனினும் அப்புஜி அவர்கள் ஊட்டி வளர்த்த தன்னம்பிக்கையும் தனக்குப் பின் னாலும் குருகுலம் இயங்க வேண்டும் என்ற தூர நோக்கோடு அவரால் உருவாக்கப்பட்ட கட்டமைப்மைப்பும் குருகுலம் குலையாது தொடர வழி செய்தன. பல்வேறு இடப் பெயர்வுகளும் தாக்குதல்களும் சொல்ல ணாத் துயரங்களைத் தந்தபோதும் அப் புஜி அவர்கள் தொடங்கிய சேவை தொடர்ந்து கொண்டேயிருந்தது.

மகாதேவா ஆச்சிரமமும் பல சமூகச் சான் றோரும் கை கொடுக்க குருகுலம் தொடர்ந்து தழைத்தது.

இந்த ஐம்பது ஆண்டுகளில் குருகுலத்தி னால் வாழ்வு பெற்று வாழ்வோர் ஆயிரக் கணக்கில் உள்ளனர். அவர்கள் உள்ளங் கள் யாவற்றிலும் அப்புஜி அவர்கள் நிரந் தரமாக வாழ்ந்து வருகின்றார். அவர் மறைந்து முப்பது வருடங்களின் பின்னால் அதே குருகுல வளாகத்தில் அவருக்குச் சிலை எழுப்பப்பட்டு, அவர் பற்றிய நூலும் வெளி யிடப்படுவது அவரது வாழ்வின் சிறப்பை வெளிப்படுத்துகின்றது.

இன்றும் இந்துமத மரபுகளைக் கைகொண்டு தமிழரது பண்பாட்டு ஒழுக்கநெறிகளுக் கமைய நடத்தப்பட்டு வருகின்ற உன்னத மான அமைப்பு குருகுலமாகும். போரின் பேரழிவுகளினால் பாதிக்கப்பட்ட பிள்ளை கள் பலரும் உடனடியாகத் தஞ்சம் புகுந்த இடம் குருகுலமே. அவ்வேளை நிறைந்த பிள்ளைகளைப் பராமரிக்கப் பெருஞ் சிர மப்பட்டிருக்கின்றனர். ஆயினும் அனைவ ரையும் ஏற்றுப் பாராமரிப்பதில் பின்நிற்க வில்லை அப்புஜி அவர்களின் பாதை யைப் பின்தொடர்ந்தோர்.

போருக்குப் பின் பல சிறுவர் பராமரிப்பு மையங்கள் தோன்றியதும் புலம் பெயர்ந்த நாடுகளில் அவற்றிற்காக நிதி சேகரிக் கப்டுவதையும் பலரும் அறிவீர்கள். குரு குலம் நிதி கோரி யாரையும் அணுகியதா கத் தெரியவல்லை. அதற்கு நிதி திரட்டு வதற்காக யாரும் நிகழ்ச்சிகள் நடத்திய- தாகவும் இல்லை. அதில் பயன் பெற்றோர், அதன் பயன் அறிந்தோர் குருகுலம் இயங்க எப்போதும் உதவி வருகின்றனர். அங்கு பயில்வோரது அடிப்படை வாழ்வாதாரத் தேவைகளை நிறைவேற்றப் போதுமான- தாக அவை இருப்பினும் வளர்ச்சியடைந்து செல்ல அவை போதுமானதாக இல்லை. பொருளாதாரத் தேவைகளுடன் போராட் டம் செய்தபடியே குருகுலம் இயங்குகின் றது என்பதாகவே அறிகிறோம்.

அப்புஜி அவர்கள் அரம்பித்து வைத்த உன் னதமான பணி வலிமையுடன் முன்னெடுக் கப்பட வேண்டியது காலக் கட்டாயமாகும். ஆதரவற்ற பிள்ளைகள் குடும்ப உணர் வோடு வளர்கின்ற அந்தச் சூழல் காலங் காலமாகப் பேணப்பட வேண்டும்.

அந்த மண்ணைத் தாயகமாகக் கொண்ட எங்களுக்கும் அந்தப் பிள்ளைகளைப் பாரா மரிப்பதில் பங்கு உண்டு. குருகுலத்தின் ஐம்பது ஆண்டுகாலப் பணியை உற்று நோக்கினால் எமது உள்ளங்கள் தாமாகவே அதற்கு உதவவென எம்மை உந்தும்.

அங்கு தேவைகள் நிறைந்து கிடக்கின்றன. எங்கள் கதவுகள் திறக்குமானால் குருகு லம் மேலும்
சிறக்கும்.

ranjan.x@thaiveedu.com

அப்போதே மனிதா நீ ஜெயித்தாயே!

- பொன்னையா விவேகானந்தன் -

கவிஞர் அண்ணாமலை

கவிஞர் நா. முத்துக்குமார் மறைந்து 43 நாளில் மற்றுமொரு திரைப்படப் பாடலா சிரியரான ந. அண்ணாமலை மறைந்தமை பலரையும் துயரத்தில் ஆழ்த்தி விட்டது.

சிறந்த கவிஞரும் பாடலாசிரியருமான அண்ணாமலை சமூக அக்கறை மிக்கதொரு படைப்பாளி. எப்போதுமே அனுபவங்களைப் படைப்புகளாக்குவது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த இலக்கியவாதி. அண்ணா-மலையின் மறைவு அவரைப் புரிந்து கொண்ட எல்லோருக்கும் பேரிழப்பாகும்.

திருவண்ணமலை மாவட்டத்தில் உள்ள கள்ளக்குறிச்சி என்ற ஊருக்கு அருகே அமைந்திருந்த கீழப்பட்டு என்ற கிராமமே அண்ணமலையின் பிறப்பிடம் ஆகும். கீழப்-பட்டுக் கிராமத்தில் ஆரம்பக் கல்வியையும் திருவண்ணாமலையில் உயர்கல்வியையும் கற்ற அண்ணாமலை சிறுவயதிலேயே கவிதையில் ஈடுபாடும் கவிதை எழுதும் ஆற்றலையும் கொண்டிருந்தார். அண்ணா-மலையின் தந்தையாரான நடேசன் ஒரு பள்ளி ஆசிரியர். சிறுவயதில் அண்ண-மலையை ஊக்குவித்தவர் இவரே.

தன்னைப் பாதித்த கவிஞரான வைரமுத்து வின் எழுத்துகளை விரும்பிப் படித்த அண்ணாமலை, வைரமுத்து கற்ற கல்லூ ரியிலேயே தானும் கற்க விரும்பி, 1983இல் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இலக் கியம் இளங்கலை பயில்வதற்காக இணைந் தார். திரு மு.பி. பாலசுப்ரமணியன், திரைப் பட இயக்குனர் ஏ. பிரசாசம், கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம், வெ.த. மாணிக்-கம் போன்ற சான்றோர்கள் அவ்வேளை அங்கு பேராசிரியர்களாக இருந்தனர்.

கல்லூரி நாட்களில் கவிதைப் போட்டிக களில் பரிசுகளை வாங்கிக் குவித்தார் அண்ணாமலை. தற்போது திரையுலகில் சிறந்த பாடலாசிரியராக வலம் வருகின்ற கபிலனும் அண்ணாமலையும் வகுப்புத் தோழர்கள். கவிதை தொடர்பாக இருவரும் சுவாரசியமாக முரண்பட்டுக் கொண்டாலும் நல்ல நண்பர்கள். இருவம் கலந்து கொண்ட அனைத்துக் கல்லூரிக் கவிதைப் போட்டி களில் இருவரும் அல்லது இருவரில் ஒரு வரேனும் பரிசு பெறாமல் திரும்பியதே இல்லை.

பிற மாணவர்களாலும் பேராசிரியர்களாலும் பெரிதும் விரும்பப்பட்ட அண்ணாமலை கல்வியிலும் சிறந்து விளங்கினார். தமிழ் இலக்கியத்தில் முதுகலைக் கல்வியை முடித்து, எம்.பில் என்ற இளநிலை ஆய்வுப் படிப்பையும் நிறைவு செய்தவர் அண்ணாமலை. கல்லூரிக் காலத்தில் அவர் எழுதிய கவிதைகளில் இதுவும் ஒன்று.

'உன் முன்னால்
நான் ஒரு தீபத்தைப் போல்
ஏற்றி வைக்கப்பட்டிருக்கின்றேன்.
நீ தென்றலாய் வீசினால் உயிர் விடுவேன்
புயலாய் வீசினால் உயிர் விடுவேன்
விருப்பம் போல் வீசு.'

பல இளங் காதலர்கள் அண்ணாமலையி டம் கவிதைகளை வாங்கிச் சென்று தமது காதலை வளர்த்திருக்கின்றனர்.

கல்வியைத் தொடர்ந்து தன் எழுத்தாற்ற லால் விகடன் குழுமத்தில் இணைந்து பணியாற்றினார். பல்வேறு சஞ்சிகைகளில் தொடர்ந்து கவிதைகளையும் பாடல்களை யும் எழுதி வந்தார். பாடலாசிரியர் என்ப-தற்கு அப்பால் அண்ணாமலை சிறந்த கவிஞராகத் திகழ்ந்தார். கவிதை பற்றிய ஆழமான பார்வையும் அதன் இலக்கியத் தரம் பற்றிய தீர்க்கமான போக்கினையும் கொண்டிருந்தார்.

பின்னாளில் திரையுலகில் "குத்துப்பாட்டா? அண்ணாமலையைக் கூப்பிடு" என்று பேசப்படுமளவிற்குக் குத்துப்பாடல்களை எழுதிய அண்ணாமலை, தீவிர இலக்கியத் தளங்களில் ஆழமான ஈடுபாடு கொண்டவர். கல்லூரிக் காலத்திலேயே நவீன கவிதை முன்னோடிகளில் ஒருவரான ஞானக்கூத்-தனுடன் தொடர்பில் இருந்தவர்.

அவர் நதி என்ற தலைப்பில் எழுதிய

கவிதை.

..... நதிகள் கரையோரம்
நந்தவனம் மலர்கிறது
காயாமல் பூமியைக்
காப்பாற்றி வைக்கிறது

கல்லில் கிழிபட்ட
காயம் மறைக்கிறது
வெண்பல் நுரைகாட்டி
வெளியில் சிரிக்கிறது

இடையில் கோடுகளாய்
எங்கெங்கோ பிரிகிறது
கடல்தான் கல்லறையா
கடைசியில் முடிகிறது

நம்முடைய அழுக்குகளை
நதிகள் சுமக்கிறது
காரணம் இதுதான்
கடல்நீர் கரிக்கிறது.

பின்னாளில் தொலைக்காட்சித் தொடருக் குப் பாடல் எழுதச் சென்றவர், கும்மாளம் என்ற திரைப்படத்தினூடாகப் திரைப்பட பாடலாசிரியரானார். 'பனாரஸ் பட்டுக் கட்டி', 'உச்சி மண்டையில சுள்ளென்னு ஏறுது' என்ற பாடல்கள் அண்ணாமலையை வெளிச்சம் போட்டுக் காட்டின.

திரைப்படத்துறையைத் தன் வருவாய்க்கு ரிய இடமாகக் கருதிய அண்ணாமலை, கவிதை இலக்கியம் சார்ந்து பல பணி-களைச் செய்யத் திட்டமிட்டிருந்தார். அவ ரது கவிதைகள் பலவற்றைத் தொகுத்து நூலாக வெளியிடுவதற்கான முயற்சிக-ளில் ஈடுபட்டிருந்தார்.

பலியாக்கப்பட்ட ஆடு ஒன்றின் மரண வாக்குமூலமாக அண்ணாமலை எழுதிய கவிதை இது. தான் எழுதியதில் தனக்குப் பிடித்த கவிதை இதுவெனக் குறிப்பிடு கின்றார்.

'பசும்புல் வெளியில்
பாதம் ஊன்றி
துள்ளிய நாட்கள்
முடிந்துவிட்டன

காந்திக்கு பால்சுரந்த
கருணைக்கு பரிசு
கழுத்தில் இறங்கிய
கத்தி வெட்டு

காற்றில் கலந்தது
கடைசி மூச்சு
காத்தவராயன்
கடவுளே சாட்சி

இனியென் பிணத்தை
ஈய்க்கள் மொய்க்கும்
ஆடைத் தோலுரித்து
அம்மணமாகும்

சமையலறைக் காற்றிலென்
சதையின் வாடையில்
உலர்ந்த நாக்குகள்
உமிழ்நீர் சுரக்கும்

வயிற்றுச் சுடுகாட்டின்
அமிலத் தீயில்
என்னுடல் துண்டுகள்
எரிந்து மலமாகும்

எருவாகிப் பின்பு
செடிவேர் பற்றி
கிளைகளில் அசையும்
பூக்களில் சிரிப்பேன்

விரல்கொய்த பெண்ணின்
கூந்தலில் அமர்ந்து
நாசிகள் உணர
வாசனை அனுப்புவேன்

ஆயினும் -

உரித்த என் தோல்,
சாவுப் பறையில்
இறப்பின் துக்கத்தை
என்றும் ஒலிக்கும்.

அவர் பல திரைப்பாடல்களை எழுதியி ருந்தாலும் அவர் மீண்டும் மீண்டும் ரசித்த ஒரு பாடல் ஹரிதாஸ் திரைப்படத்தில் இடம் பெற்றிருந்தது. நீண்டகாலமாக அவரது தொலைபேசியில் அழைப்போசை யாகவும் இப்பாடல் வரிகளே இடம் பெற் றிருந்தன.

'அன்னையின் கருவில் கலையாமல் பிறந்தாயே
அப்போதே மனிதா நீ ஜெயித்தாயே!'

'கோடிக்கணக்கான விந்தணுக்களில் வீரி யம் உள்ள விந்தணுவே கருவாகின்றது. பிறக்கின்ற ஒவ்வொரு உயிரும் வெற்றி பெற்றனவே. பிறப்பிலேயே வென்ற உயிர் நீ. பிறந்த பின் ஏற்படும் தோல்விகள் அந்த வெற்றிக்கு முன் சாதாரணமான-வையே' என்ற பொருளைத் தருகின்றது இப்பாடல்.

இந்தப் பாடலின் தொடர்ச்சியான இடம் பெறும் வரிகள் இவை,

'விதைக்குள் தூங்கும் ஆலமரம்
கண்ணுக்குத் தெரியாது
அது மரமாய் வளரும் காலம்வரும்
மண்ணுக்குள் உறங்காது.'

அண்ணாமலை ஒரு படைப்பாளி என்பதற்கு அப்பால் நல்ல மனிதராகத் திகழ்ந்தார். அன்பும் பண்பும் நல்லொழுக்கமும் கொண் டவராக இருந்தார். நல்ல நட்புகளைக் கண்டறிந்து அவற்றை அழகுறப் பேணி னார்.

தான் சார்ந்த சமூகத்துக்காகப் பல பணி-களை ஆற்ற விரும்பியிருந்தார். அவ்வா றான பணிகளில் ஒன்றைத் திரைப்படப் பாடலாசிரியர் பிரியனுடன் இணைந்து செயற்படுத்திக் கொண்டிருந்தார்.

கவிஞர் பிரியன் அற்புதமான கவிஞர். புகழ் பெற்ற பல பாடல்களைத் திரைப்படங்க ளில் எழுதியுள்ளார். எழுதி வருகின்றார். இவரும் அண்ணாமலையும் இணைத்து உருவாக்கிய உன்னதமான முயற்சி 'தமிழ்த் திரைப்பாக்கூடம்'. பாடல் எழுதவல்ல இளங்கவிஞர்களைக் கண்டறிந்து திரைப் படத்துக்குப் பாடல் எழுதுவது எப்படி என்ற பயிற்சியை வழங்கி அவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே இக் கூடத்தின் பணியாக இருந்தது. இதுவரை பல பாடலாசிரியர்கள் இக் கூடத்தினால் உருவாக்கப்பட்டுள்ளனர். போட்டியும் பொறாமையும் மிக்க இந்த உலகில் இரு கவிஞர்களாக இணைந்து, வேறு கவிஞர்களை உருவாக்க எடுத்த முயற்சி பலராலும் பாராட்டப்பட்டதொன்றாகும்.

அண்மையில் தமிழ்த் திரைப்பாக்கூடத்தில் அண்ணாமலையின் பணிகளை நினைவு கூர்ந்து வணக்க நிகழ்வு நடைபெற்றது. கவிஞர் பிரியன் அதனை ஏற்பாடு செய்-திருந்தார். பேராசிரியர் மு.பி. பாலசுப்பிர-மணியன், நடிகரும் இயக்குனருமான விஜய் அன்ரனி ஆகியோர் கலந்து கொண்டு உருவப்படத்துக்கு மலர் அணிவித்திருந்தனர்.

திருமணம் செய்து நீண்ட காலத்தின் பின் தான் அவருக்கொரு பெண் குழந்தை பிறந்திருந்தது. இப்போது அவளுக்கு 5 வயது. தன் குழந்தைமீது அளவிலாப் பேரன்பு கொண்டிருந்தார். தன் வாழ்வே அவளுக்கானது என அடிக்கடி கூறிக் கொண்டிருப்பார்.

இலக்கியப் பரப்பில் அடைய வேண்டிய இலட்சியங்களைப் பட்டிலிட்டுக் காத்தி ருந்த அண்ணாமலையைக் காலம் அழைத் துக் கொண்டமை துயர்மிக்க பேரிழப்பே.

அண்ணாமலையின் கவிதைகள் தொகுக் கப்பட்டு நூலாக வெளிவர வேண்டும். இதுவே அண்ணாமலையை நேசிப்போர் அண்ணாமலைக்குச் செய்கின்ற பெரு-வணக்கமாக இருக்கும்.

vivekanandan.p@thaiveedu.com

Mortgages Made Easy!!!

KAJAN
KANAGAVINAYAGAM

2.39% - 5yrs Fixed
2.30% - 5yrs Variable.

- ☑ First Mortgage
- ☑ Re-Finance
- ☑ Home Equity Line of Credit
- ☑ 2nd Mortgages from 50K to 500K
- ☑ Approved within 24 Hrs

Kajan
Kanagavinayagam
Mortgage Agent (LIC. #M16001059)



KAPITAL CARE MORTGAGE INC. +12623

416-274-4345
kajanmortgage@gmail.com

வீடு வாங்க விற்க வாங்க

RE/MAX COMMUNITY
Realty Inc , Brokerage

CONSUMER CHOICE AWARD 2016 GTA EAST

Esan Kulasegaram
Sales Representative

416.833.9999

off: 416.287.2222 | fax: 416.282.4488
203 - 1265 Morningside Ave Toronto, ON
Brokerage Independently Owned And Operated

புதுப்பொலிவுடன் புதிய முகவரியில்!!

எழும்பு, மூட்டு ஆரோக்கியத்திற்கு!!

NanoCal is a supplement that has been approved by the US FDA as a CURE for osteoporosis and osteoarthritis. NanoCal can actually reverse and cure these conditions!

Combining best practices from Eastern herbal medicine and Western research, the Sagee capsule was developed after years of dedicated research by a team of scientists and herbal medicine specialists. SAGEE capsule is a pure natural herbal product extracted and refined through advanced GMP/ISO facility Canada. It is non-toxic, non-addictive and has no side effects.

தூயபொன் கொண்டு தயாரிக்கப்பட்ட முகசரும கிரீம்!!

24 carat Gold Revitalizer - exfoliating facial

A spa quality facial peel without damaging acids or abrasive polishing agents.Gold Revitalizer, sloughs off old, dead skin cells revealing fresh, smooth skin.

முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது. கபாளத்தில் பொடுகைப் போக்குவதுடன் மூலிகை முடியை செழிப்பாக வைத்திருக்கு உதவுகிறது.

கஸ்தூரி மஞ்சள் உள்ளிட்ட பல மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட கிரீம்

சருமத்தை பாதுகாப்பாகவும் பொழிவாகவும் பேண நம் மூதாதையர் பாரம்பரியமாக பயன்படுத்திய கஸ்தூரி மஞ்சள் கொண்டு தயாரிக்கப்பட்ட முக சரும பராமரிப்பு!!

ஒவ்வாமை அற்ற முடி மை மூலிகை தரும் இன்னுமோர் அற்புதம்!!

மூலிகை முடி மை!!

ஊழைச்சதை நீக்கி!!

மூலிகைகள், உடலின் தேவைக்கதிமாக உள்ள ஊழைச்சதையை நீக்கி நேக ஆரோக்கியத்தைப் பேணுகின்றன.

சலரோக நிவாரணி!!

மூலிகைகள், உடலின் குளுக்கோஸ் அளவை பராமரிப்பதுடன் இரத்த ஒட்டத்தை சீராக வைத்திருப்பதற்கு துணையாய் இருக்கின்றன.

SABONA & Gift

2466, Eglinton Ave East Unit 12B
Scarborough, ON. (Midland & Eglinton)
www.amazonhealthcare.ca 416•264•8787

தமிழ் சைவர்களின் கல்விச் சேவைகள்

தேவரையாளி இந்துக் கல்லூரி - 1914

- முருகேசு பாக்கியநாதன் -

சென்ற மாதத் தொடர்ச்சி...

1932ல் இருந்து 1950 வரையுள்ள காலத்தில் தமிழ் எஸ்.எஸ்.சி பரீட்சைக்குத் தயார் செய்கின்ற பாடசாலையாக மாறியது. அப் பொழுது எஸ்.எஸ்.சி வகுப்பில் படிப்ப தற்காக தூர இடங்களில் இருந்து கல்வி கற்கப் பல மாணவர்கள் வந்து சேர்ந்தார் கள்.

வதிரியூர் வர்த்தகப் பெருமக்களாகிய சி.க. ஆறுமுகம், ஐ. ஆறுமுகம், வே. வல்லிக் குட்டி, வே. இராமலிங்கம், சி. பொன்னர் ஆகியோர் அங்கு படித்த ஏழைப்பிள்ளை களுக்கு புத்தகம், பென்சில், பேனை, சிலேட், சிலேட் பென்சில் முதலிய உபகர ணங்களை அன்பளிப்பாக ஒவ்வொரு வரு டமும் வழங்கி வந்தனர். 1934ல் செல்வி மீனாட்சியம்மா ஆறுமுகம் அவர்கள் ஆசி ரியையாக நியமிக்கப்பட்டார். பின்னாளில் அவரைத் திருமணம் முடித்த திரு ஆ.ம. செல்லத்துரை அவர்களும் அதேயாண்டில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

அதிபர்கள்:பாடசாலை ஆரம்பித்த நாளி லிருந்து இன்று வரை.

1914 - 1923	திரு.வ. வேலுப்பிள்ளை
1923 - 1930	திரு டி.எம். கந்தையா
1930 - 1930	திரு சா. தம்பிமுத்து
1930 - 1952	கவிஞர் மு.செல்லையா
1952 - 1953	திரு வி. வீரசிங்கம்
1953 - 1954	கவிஞர் மு.செல்லையா
1954 - 1979	திரு.க.எம்.எஸ்.சீனித் தம்பி
1980 - 1991	திரு.ஆ.இரத்தினசபாபதி
1991 - 1995	திரு ஆர். விஜயரட்னம்
1995 - 2009	திரு எம். குட்டித்தம்பி
2009 - 2016	திரு எம். நவநீதமணி
2016 -	திரு கிட்டினபிள்ளை இராஜதுரை

முதல் முகாமையாளர் அமரர் க.மூ. சின்னத்தம்பி:

1950ம் ஆண்டிலே வதிரியைச் சேர்ந்த காலி வர்த்தகரும் தனவந்தருமாகிய திரு க.மூ. சின்னத்தம்பி அவர்கள் பாடசாலை முகாமையாளராக கலைஞான சபையா ரால் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் பாடசாலையிலேயே தனது முழு நேரத்தையும் செலவளித்து சேவையாற்ற லானார். இதன் காரணமாக காலியில் இருந்த தனது இரண்டு கடைகளின் பொறுப்பை தனது மகன்களிடம் பாரம் கொடுத்துவிட்டு முழு நேரமாகப் பாடசா லைப் பொறுப்பைக் கவனித்து வந்தார். தென்பகுதி சிங்கள அரசியல்வாதிகளிடம் செல்வாக்கு மிகுந்தவராகக் காணப்பட்ட அவரால் பின்நாளில் பாடசாலைக்குப் பல சாதனைகளை செய்ய முடிந்தது.

முன்பு குறிப்பிட்ட வதிரி அண்ணமார் ஆல யத்தில் பிள்ளையார் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஒரு சிறு கோவிலாகப் பரி பாலிக்கப்பட்டு, ஓர் ஐயர் பூசகராக நிய மிக்கப்பட்டு, இரண்டு நேரப் பூசைகளாக நடைபெற்று வந்த வேளையில் பாடசா லையின் முகாமையாளராகக் கடமையாற் றிய அமரர் க.மூ. சின்னத்தம்பி அவர்கள் முகாமையாளராக நியமிக்கப்பட்டு பழைய சிறு கோயிலுக்கருகில் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் என்றவாறாக சாஸ்திர முறைகளுக்கேற்ப கோவில் திருப் பணி வேலைகள் பொழி கல்லால் நடை-பெற்று, 1955ம் ஆண்டில் முதல் கோயில் குடமுழுக்கு நடைபெற்று மண்டலாபிஷே கத்துடன் கோவில் முழுமை பெற்ற கோவி லாகி உற்சவ மூர்த்தி எழுந்தருளி 10 நாட்கள் பூசைகள் நடைபெற்று தீர்த்தத் துடன் முடிவுற்றுவந்தது. இப்பெருமையும் ஊர்மக்களையும் சேர்த்து முன்நின்று நடத் திய பெருமை இவரையே சாரும்.

இவர் தனது வாழ்நாளிலேயே ஒரு கொடை யாளியாக வாழ்ந்தார். இவரது வியாபார நிலையம் காலியில் இருந்ததனால் கதிர் காமம் செல்லும் பத்தர்களுக்கு இளைப் பாறிச் செல்லும் இடமாக இருந்தது. அத் தோடு கதிர்காமத்திற்கு வரும் யாத்திரி கர்களுக்கு அன்னதானம் வழங்குவார். பாடசாலை முகாமையாளராகப் பொறுப் பெடுத்தவுடன் பல ஏழைப்பிள்ளைகள் படிப்பதனைக் கண்டார். அவர்களது உடை களது நிலையும் பரிதாபநிலையாக இருந் ததனால் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் குறைந்த வருவாயுடைய பிள்ளைகள் சில ருக்கு தீபாவளிக்கு தனது சொந்தப்பணத் தில் உடுபுடவைகள் வழங்கி வந்தார்.

அமரர் க.மூ. சின்னத்தம்பி

இவர் முகாமையாளராகப் பொறுப்பு ஏற்ற போது அமரர் கவிஞர் மு.செல்லையா அவர்கள் தலைமை ஆசிரியராகக் கடமை வகித்தார். இவர் 1930ம் ஆண்டு தொடக் கம் 1952, 1953 வரை தலைமை ஆசிரிய ராகக் கடமையாற்றினார். பாடசாலையை ஆங்கிலப் பாடசாலை ஆக்கவேண்டும் என்பதே முகாமையாளரது முழு எண்ண முமாக இருந்தது. இதன் பொருட்டு ஒரு ஆங்கில ஆசிரியரை அதிபராக நியமிக்க எண்ணி தும்பளை திரு வீ. வீரசிங்கம் அவர்களை 1952ல் அதிபராக நியமனம் செய்தார். இதனால் கவிஞர் மு.செல்லையா அவர்கள் பதவியிறக்கம் செய்யப்பட்டு ஒரு உதவி ஆசிரியராக நியமிக்கப்பட் டார். ஒரு தலைமை ஆசிரியராக 23 வரு டங்களாக கடமையாற்றியவரால் ஒரு உதவி ஆசிரியராக கடமையாற்றுவதென் பது மனதளவில் ஏற்க முடியாதிருந்தது. ஆனால் பாடசாலையின் நலன் கருதி அதனைப் பொறுத்து தனது கடமையைச் செய்து வந்தார். அதிபர் வீ. வீரசிங்கம் அவர்கள் 1953 வரையுமே கடமையாற்றி னார். இவர் குறுகிய காலமே கடமையாற் றினும் சிறந்த நிர்வாகியாகவும் மாணவர் களின் ஒழுக்கங்களைத் திறமையாகப் பேணுவதிலும் முதன்மை பெற்றார். அவ ருக்கு வேறொரு உயர்தரப் பாடசாலையில்

இருந்து அழைப்பு வந்ததனால் அவர் அதனை ஏற்றுச்செல்ல வேண்டிய நிலை ஏற்படவே மீண்டும் கவிஞர் செல்லையா அவர்கள் தலைமையாசிரியராக நியமிக் கப்பட்டார். இப்பதவிக் காலமும் ஒரு வருடமே நீடித்தது.

ஓவியம்: முருகேசு பாக்கியநாதன்

கவிஞர் மு.செல்லையா

பாடசாலையானது சிறு வயதில் நடை-பயின்ற போது அதன் கையைப் பிடித்து ஒழுங்காக நடைபழக்கி அதனைப் பேசப் பழக்கி உணவூட்டி வளர்த்து வைத்தவர் என்ற பெருமைக்குரியவராவர், அங்கு பயிற்றுவித்த ஒவ்வொரு ஆசிரியரையும் புடம் போட்டு வளர்த்துவிட்ட ஆசிரியரா கத் திகழ்ந்தவர் தலைமையாசிரியர் மு.செல் லையா அவர்களாவார். அரசாங்கம் கொடுத்த காலை ஆகாராம் இவர் காலத் திலேயே தொடங்கியது. பாணும் பாலும் இலவசமாகக் கொடுக்கப்பட்டது. பாணுக்கு அவரது மனைவி மூலம் தேங்காய்ச் சம் பலுடன் பாலையும் சுடவைத்து அதனை ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் பாடசாலை ஆரம்பிக்க முன்னர் வழங்குவார். அவரது மனைவி அப்போது பிள்ளைகள் மத்தியில் பாலம்மா என்று அறியப்பட்டிருந்தார். உண் மையில் காலையில் உணவே அருந்தாமல் வரும் பல ஏழைப் பிள்ளைகளுக்கு இக் காலை உணவு ஒரு வரப்பிசாதமாகவே அமைந்தது. இக்காலை உணவால் பல பிள்ளைகள் பாடசாலைக்குக் கவரப்பட்டார் கள். இப்போது இருப்பது போலவன்றி அப்போது ஏழ்மை மட்டம் மிகக்கூடுதலா கவே இருந்தது. இவர் யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற ஒரு கவிஞராக யாழ். இலக் கிய வட்டத்தினுள் அறியப்பட்டவராக இருந் தார். சிறந்த கற்பனை வளம் கொண்ட கவிஞராகத் திகழ்ந்தார்.

இவர் ஒரு குழந்தைக் கவிஞராக, ஹாஸ் யக் கவிஞராக, சமூக விடுதலைக் கவிஞ ராக எனப் பன்முகப் பார்வை கொண்ட கவிஞராகப் பார்க்கப்பட்டார். இவரது நூல் கள் பலவும் வெளியிடப்பட்டுள்ளன. அவற் றில் 'வளர்பிறை' என்ற நூலில் இருந்த 'அம்மா வெளியே பாரம்மா, அழகாய் மேலே பாரம்மா' என்ற சிறுவர் பாடலை வானொலி நடத்திய கவிதைப் போட்டியில் தங்கப்பதக்கப் பெற்று மிகப் பிரபலமாகி யது. தொடர்ந்து தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிவரும் வேளையில் பாடசா லையை ஆங்கிலப் பாடசாலையாக்க வேண்டும் என்ற நோக்கில் 1954ம் ஆண்டு முகாமையாளர் அமரர் மூ.சி. சீனித்தம்பி அவர்களை அதிபராக நியமனம் செய்து அமரர் மு.செல்லையா அவர்களை மீண் டும் பதவியிறக்கம் செய்து சாதாரண ஆசிரியர் தரத்தில் இருக்கும்படி பணித் தார். இத்தகைய ஒரு திறமை மிக்க ஒரு தலைமையாசிரியர் தனது பதவி இறக் கத்தை ஏற்காததனால் முகாமை அவரைப் பதவி நீக்கம் செய்தது. ஆனாலும் அவர் நீதிமன்றத்தை நாடி வழக்காடினார். எனி னும் அவரால் அந்த வழக்கை வெல்ல முடியவில்லை. அந்த இடர் மிகுந்த நிலை யிலும் ஒரு நன்மை பிறந்தது. மிகவும் ஓர்மமாக இருந்த செல்லையா வாத்தியார் அவர்கள் வட அல்வையில் சில மக்களைக் கூட்டி தென் அல்வை மக்களின் உதவி யுடன் 'ஸ்ரீலங்கா வித்தியசாலை' என்னும் பாடசாலையைக் கட்டியெழுப்பினார். தேவ ரையாளிப் பாடசாலை பற்றியே சிந்தித்து வாழ்ந்து வந்த செல்லையா, சூரன் அவர் களினால் புடம் போடப்பட்டு வளர்த்தெ டுக்கப்பட்ட ஆசிரியராவர். அவர் இரவில் ஒரு பண்டிதரிடம் படிக்கச் செல்லும் போது அரிக்கன் விளக்குடன் அவரோடு பாது காப்பிற்குச் சென்று கூட்டிவந்து தந்தை போல் இருந்து அவரைப்படிப்பித்தவர் சூரன் அவர்களே. செல்லையா அவர்க ளுக்கு தனித்தொரு பாடசாலையை நிறுவி அதனை நடத்த ஆத்மார்த்தமான பலத் தைக் கொடுத்தது சூரன் அவர்களது ஆசி யேயாகும். சூரன் அவர்களது மகளான செல்வி சூ. சிவபாக்கியம் அவர்களை அப்பாடசாலையில் ஆசிரியையாக்கிக் கொண்டார். ஒரு இழப்பிலும் இன்னொரு புதுப் பாடசாலை தோற்றம் பெற்று இன்று அப்பாடசாலை ஸ்ரீலங்கா வித்தியாலயமாக வளர்ந்து வடஅல்வைக்கும் அதனைச் சூழவுள்ள கிராமத்துப் பிள்ளைகளுக்கும் அரும்பெரும் சேவையை ஆற்றிவருகின் றது. அத்தோடு இவ்வேளையில் இன் னொன்றை இங்கே குறிப்பிடவேண்டும். தேவரையாளியின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராக இருந்த வடஅல்வை கந்தர் அவர்களின் மகன் அமரர் க. முருகேசு ஆசிரியர் அவர்கள் நீண்டகாலம் தேவ ரையாளியில் ஒரு சிறந்த ஆசானாகத் திகழ்ந்தவர். பல்லாண்டு காலம் படிப்பித் தவர். அவரும் புத்தூருக்குச் சென்று புத் தகலட்டியில் 'ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்' என்னும் ஒரு பாடசாலையை நிறுவி அங் கேயே வாழ்ந்து அந்தப் பாடசாலையை வளர்த்தெடுத்த பெருமை அவருக்குரியது. இவைகளை நோக்கும்போது தேவரையா ளியின் தோற்றமானது காலப் போக்கில் விரிவடைந்து வேறு இரண்டு பாடசாலை

தொடர்தல் 69ம் பக்கம்

நவம்பர் மாதம், 'உரும்பராய் இந்துக் கல்லூரி'

டிசம்பர் மாதம் தாய்வீட்டில் இடம்பெறவிருக்கும் கட்டுரை: உரும்பராய் இந்துக் கல்லூரி பற்றியதாகும்.

உரும்பராய் இந்துக் கல்லூரி பற்றிய தகவல்கள், படங்கள் உங்களிடத்தில் இருப்பின் தயவுசெய்து எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

Thaiveedu
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel: 416-857-6406
Fax: 416-849-0594
e-mail: packiyanathan.m@thaiveedu.com

DEBT SOLUTIONS GTA INC.

Head Office Location:

10 Milner Business Court,
Suite 300,
Scarborough, Ontario, M1B 3C6.
(One block north of 401 on Markham)

2 Robert Speck Parkway,
Suite 750,
Mississauga, Ontario,
L4Z 1H8.

2 Country Court Blvd
Suite 400
Brampton, Ontario
L6W 3W8

CREDIT CARD & DEBT SOLUTIONS

கடன் அட்டைகளினது தொல்லையா? வங்கிக்கடன் தொல்லையா? சம்பளத்தில் பறிமுதலா?
CREDIT CARD PROBLEMS, BANK LOAN PROBLEMS, WAGE GARNISHEE PROBLEMS

உங்கள் வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்துவது சதவீதத்தில் **(PERCENTAGE)** தீர்மானிக்கப்படமாட்டாது

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், கடன் தொடர்பான சட்டப் பிரச்சனை
COLLECTION COMPANIES PHONING AT WORK OR HOME, LAWSUITS

உங்கள் வருமானம் **(Income)** செலவு **(Expenses)** என்பவற்றை வைத்து உங்கள் கடன்களில் **(Debts)** சிறிய மாதாந்தத் தொகையை மட்டும் செலுத்தும் முறை மூலம் உங்கள் மொத்தக் கடன்களில் **(Total Debts)** இருந்து விடுதலை பெறலாம்

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC, Life Insurance, Stocks, Bonds & Shares)

இத்துறையில் 10 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள

Suren Sornalingam BBA

Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 416-264-1272

Fax: 647-794-1990

Web: www.Debtsolutioncanada.ca

தேவரையாளி இந்துக்...

67ம் பக்கத் தொடர்ச்சி...

களின் தோற்றத்திற்கும் மறைமுகமாக வித்திட்டதென்றால் அதனை மறுப்பதற் கில்லை.

அதிபர் எம்.எஸ். சீனித்தம்பி:

1953.ல் முகாமையாளரின் மகன் அமரர் க.மு.சி. சீனித்தம்பி அவர்கள் தனது பட்டதாரிப் படிப்பினை இந்தியாவில் உள்ள இராசதானிக் கல்லூரியில் (Presidency College) முடித்துவிட்டு இலங்கை திரும்பி மாத்தளை புனித ஜோசப் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிவந் தார். இதே காலப்பகுதியில் பாடசாலையை ஆங்கிலப் பாடசாலையாகத் தரமுயர்த்த முகாமையாளரால் பலவித நடவடிக்கை கள் அரசியல் ரீதியாகவும் கல்வித் திணைக் களம் மூலமாகவும் நடைபெற்று வந்தது. அக்காலத்தே அவரது காலி நகரத்து நண் பராக டப்பிள்யு. தகநாயக்கா அவர்கள் காலி பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தது அவரது முயற்சிகளுக்கு உறு துணையாக அமைந்தது. அத்தோடு பருத் தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினராக அமரர் த.இராமலிங்கம் இருந்தார். அவ ரும் பாடசாலையைத் தரமுயர்த்த நடவ டிக்கைகள் எடுத்தார். 1953ம் ஆண்டு முகாமையாளர் மற்றும் அவரது உறவி னர்கள் பலரது முயற்சியால் பாடசாலை கல்லூரி என்னும் தரத்திற்கு உயர்த்தப் பட்டது. அப்போது பாடசாலைக்கு ஒரு ஆங்கிலம் படித்த பட்டதாரி ஆசிரியர் அதிபராகக் கடமையாற்றினால் பாடசா லையின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்று கருதிய முகாமையாளார் சின்னத் தம்பி அவர்கள் தனது மகனான க.மு.சி. சீனித்தம்பி அவர்களைப் பாடசாலை

அதிபர் க.மு.சி. சீனித்தம்பி

அதிபராகப் பொறுப்பெடுக்கும்படி கேட் டுக் கொண்டதற்கிணங்க அவர் 01-01-1954ம் ஆண்டு அதிபராகப் பொறுப்பெ டுத்துக்கொண்டார். அப்போது 338 மாண வர்களும் 10 ஆசிரியர்களும் இருந்களர். 4 ஆசிரியர்கள் மட்டுமே பயற்றப்பட்ட ஆசிரியர்களாக இருந்தனர். அதிபர் தவிர வேறு எவரும் பட்டதாரி ஆசிரியர்களாக இருக்கவில்லை. முகாமையாளர் சீனித் தம்பி அவர்களை தனது மகன் என்பதற் காக அதிபராக அழைக்கவில்லை. அவர் ஓர் ஆங்கில ஆசிரியராகவும், லத்தின் மற்றும் சிங்களம் ஆகியவற்றில் புலமை யுடையவராகவும் ஒரு கலைப் பட்டதாரி யாகவும் இருந்தார். அத்துடன், பெரியெ-தாரு பாடசாலையில் ஆசிரியராகப் பணி யாற்றிய அனுபவத்தோடு இருந்ததனால் அவரை அதிபர் பதவியைப் பொறுப்பெ டுக்கும்படி பணித்தார்.

சீனித்தம்பி அவர்கள் தலைசிறந்த ஆங் கில ஆசிரியராகவும், சிறந்த நிர்வாகியா கவும், ஒழுக்கத்தை மாணவரிடையேயும் ஆசிரியர்களிடையேயும் பேணும் சிறந்த அதிபராகவும் திகழ்ந்தார். மாணவர்களின் ஒழுக்கத்திற்கு ஆசிரியர்களே உதாரண சீலர்களாகத் திகழவேண்டும் என்பதே அவர் ஆசிரியர்களுக்குக் கூறும் அறிவுரையாகும். இவர் பொறுப்பெடுத்தவுடன், முதலில் ஆசிரியர் கூட்டத்தைக்கூட்டி பாடசாலை நிலைமைகளை ஆராய்ந்து, அந்தந்த ஆசிரியர்களுக்கு அந்தந்தப் பொறுப்புக் களை வழங்கியதுடன் அதுபற்றி பிள்ளை களின் கல்வி முன்னேற்றம், பிள்ளைக-ளின் வரவொழுங்கு, அவர்களது ஒழுக்க சீலம் போன்றவற்றினைப்பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆசி ரியர்கள் ஒழுங்காக பாடவிதானக் குறிப் புக்களை (Notice of Lessons) ஒவ்வொரு கிழமையும் எழுதி தனது பார்வைக்கு அனுப்பி அதில் தனது ஒப்பத்தைப் பெற்று அடுத்தகிழமை அதன் முன்னேற்றம் பற் றிய அறிகையையும் பெற்றுக்கொள்ள கட்டளையிட்டார். பொறுப்பெடுத்த இரண் டாம் கிழமையே ஒவ்வொரு திங்கட் கிழ மையும் பாடசாலையில் அசெம்பிளி நடை பெறும். அதில் அந்தக்கிழமை நிகழ்வுகள், சென்ற கிழமை சாதிக்கப்பட்டவை போன் றவைகள் ஆசிரியர்கள், மாணவர்கள் முன் னிலையில் அதிபரால் நடத்தப்பட்டது. அதிபர் தனது பட்டப்படிப்புக்கோல அங் கியுடனேயே ஒவ்வொரு அசெம்பிளிக்கும் வருகை தருவார். அத்தோடு சூரன் அவர் களது காலத்திலிருந்து தொடங்கப்பட்ட சிவபுராணம் ஓதல் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் பாடசாலை தொடங்கும் போது நடைபெற்று வந்ததனை அதிபர் சீனித் தம்பி அவர்களும் தொடர்ந்தார்கள். அத் தோடு இவர் ஒரு சைவ அபிமானியாக இருந்ததனால் முன்பு கட்டப்பட்டு சைவ ஆசிரியர்களால் பூசை செய்யப்பட்டு வந்த சிவன் கோவிலுக்கும் வெள்ளிக்கிழமைக-ளில் பூசை நடைபெற்று வந்தது. அத்தோடு திருவெம்பாவை, நவராத்திரி ஆகிய கொண்டாட்டங்கள் ஒவ்வொரு வகுப்புக் களால் தொடர்ந்து கொண்டாடப்பட்டு வந் தன.

பாடசாலையின் முதலாவது பரிசளிப்பு விழா - 1955:

அவர் பொறுப்பெடுத்த இரண்டாவது வரு டம் இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடை-பெற்றன. 04- 06- 1955 அன்று பாடசா லையின் முதலாவது பரிசளிப்பு விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. முதல் பரிசளிப்பு விழாவை அறிவித்த போது மாணவர்களின் கல்வி, விளையாட்டு, கல்விசாரா நிகழ்வுகளின் முன்னேற்றத் தைக் கணித்து அவர்களை ஊக்குவிக் கும் பொருட்டு முதன்மையானவர்களுக்கு பரிசில்கள் வழங்க முடிவெடுக்கப்பட்டது. அதற்கு பெற்றார்களினதும் தனவந்தர்க ளினதும் ஒத்துழைப்புப் பெற்று பணம் சேர்க்கப்பட்டு முதல் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் அமரர் த. இராமலிங்கம் அவர்களும் அவரது பாரி யாரும் அழைக்கப்பட்டனர். அக்காலத்தே பாடசாலைகளில் பரிசளிப்புவிழா என்பது வடமராட்சியில் ஒரு புதிய நடவடிக்கை யாக இருந்தது. இதற்காக ஒரு கலைவி ழாவும் பரிசளிப்பு விழாவின் பின் ஒழுங்கு செய்யப்பட்டு, நாடகம், நடனம், பாட்டு, பேச்சுக்கள் போன்றன ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்பட்டன. பரிசளிப்பு விழா விற்கான ஒத்திகைகள் அதிபரால் மேடை யில் ஒரு பரிசளிப்பு விழா நடப்பது போலவே நடத்தப்பட்டது. எல்லாமே ஒழுங் காகவும் சரியாகவும் இருக்கவேண்டும் என்பதில் அதிபர் தனிப்பட்ட கவனம் எடுத் தார். மாணவ மாணவிகளின் உடைகள், அவர்கள் அணியும் சப்பாத்து, ரை, அவர் கள் பரிசில் வாங்கும் முறை, அதற்கு பரிசு வழங்குபவருக்கு எப்படி நன்றி சொல் லுவது என்றது வரை சகலதும் பயிற்றப் பட்டது. அது விளையாட்டுப் போட்டியா யினும் சரி, கலைவிழாவாகிலும் சரி சக லதிலும் அதிபரது தனிப்பட்ட கவனம் இருக்கும். காரணம் எல்லாம் நூறு வீதம் சரியாக இருக்கவேண்டும் என்ற உயரிய எண்ணமாகும். இதற்கு இவர் கல்விகற்ற பாடசாலைகளான காலி புனித அலோசி யஸ் கல்லூரி, கொழும்பு ஆனந்தா கல் லூரி அவர் கற்பித்த மாத்தளை புனித தோமஸ் கல்லூரி ஆகியவற்றின் தாக்கத் தினாலாக இருக்கலாம்.

தொடர்தல் 70ம் பக்கம்

தேவரையாளி இந்துக்...

67ம் பக்கத் தொடர்ச்சி...

1955ம் ஆண்டு இலங்கையின் இரண்டாவது பிரதமரான சேர். ஜோன் கொத்தலாவ லையின் யாழ்ப்பாண விஜயம் இடம்பெற் றது. அப்போது தேவரையாளி இந்துக் கனிஷ்ட பாடசாலைக்கும் வருகை தந்தி ருந்தார். அன்று பெரிய மழை பெய்து கொண்டிருந்தது. எனினும் மாணவ மாண விகளும் அதிபர், ஆசிரியர்களும் மழை யில் நனைந்தவாறு வெள்ளைக் கொடி பிடித்து அவரை வரவேற்றார்கள்.

சாரணர் இயக்கம்:

02-08-1957ல் அமரர் த. இரத்தினசிங்கம் ஆசிரியர் தலைமையிலும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சாரண ஆசிரியர் அமரர் நல்லையா அவர்களது அனுசரணையிலும், அதிபர் அவர்களது வழிகாட்டலிலும் அமைக்கப்பட்டு இலங் கையின் பல பாகங்களுக்கும் சென்று பல பாசறைகளில் பங்குபற்றி வெற்றிக்கொடி நாட்டினார்கள்.

1957ம் ஆண்டு 3ம் பிரிவு உதைபந்தாட்ட அணி ஆரம்பகாலத்தே மிகவும் பிரசித்தி பெற்ற பிரிவாகத் திகழ்ந்தது. வடராட்சி யில், யாழ் மாவட்டத்தில் பல முறை சம் பியன்களாகத் தெரிவானார்கள். இதற்கு முக்கிய காரணம் உடற்பயிறசி ஆசிரி யராக இந்தியாவில் சிறப்புக் கல்விகற்று பொறுப்பெடுத்த அமரர் த.இரத்தினசிங் கம் ஆசிரியராவார். இவர் வடமாகாணத் திலேயே சிறந்த உதைபந்தாட்ட வீரரா கத் திகழந்தவரும் இலங்கை உதைபந் தாட்டக் குழுவிலும் இடம் பெற்றவரும் ஆவார். இவரது சிறந்த விளையாட்டுக்கு யாழ் மாவட்டம் முழுவதும் ரசிகர்கள் இருந்தார்கள். இவர் வதிரி டையமண்ட்ஸ் அணிக்காக ஆடிய இவரது ஆட்டத்தைப் பார்க்கவென இவர் எங்கு விளையாடினா லும் ரசிகர்கள் செல்வர். அவராலேயே 3ம் பிரிவு சிறந்த பயிற்சியினைப் பெற்று வெற்றி பெற்றதெனலாம். அத்தோடு வதிரி டையமண்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் இலங்கை பூராக உதைபந்தாட்டத்தில் புகழ்நாட்டிய ஒரு கழகமாகும். அவ்வீரர் களின் பிள்ளைகளே பாடசாலைக்கும் விளையாடியதால் இயற்கையிலேயே உதைபந்தாட்டம் அவர்களுக்கு கைவந்த கலையாயிற்று. தொடர்ந்து 2வது பிரிவும் சிறந்த முறையில் பழக்கப்பட்டும் 3ம் பிரிவில் இருந்து வளர்ந்தவர்கள் 2ம் பிரி வுக்குச் சென்றவுடன் அவர்களும் பாட சாலைகளுக்கிடையே பல வெற்றிகையீட் டினார்கள். இறுதிக் காலத்தில் ஹாட்லிக் கல்லூரியில் இருந்து இரத்தினசிங்கம் அவர்களுக்கு அழைப்பு வந்து அங்கு சென்றும் அப்பாடசாலைக்கு பல வெற்றி களை ஈட்டிக்கொடுத்தார்.

1958ம் ஆண்டு அதிபரும் இரத்தினசிங்கம் அவர்களுமே மெய்வல்லுனர் போட்டிக ளையும் உடற்பயிற்சிப் போட்டிகளையும் ஆரம்பித்தார்கள். காந்தி இல்லம், வள் ளுவன் இல்லம், கம்பன் இல்லம் என மூன்று இல்லங்காளாகப் பிரிக்கப்பட்டு இல்ல விளையாட்டுப் போட்டிகள் தடகள நிலைகளில் நடத்தப்பட்டு யாழ் மாவட் டம், தேசியமட்டத்திலும் பரிசில்கள் பெற் றார்கள். அத்தோடு வருடாவருடம் யாழ்ப் பாணத்தில் நடைபெறும் உடற்பயிற்சிப் போட்டிகளில் (Drill) பங்குபற்றி அதிலும் சில வருடங்களில் வெற்றி பெற்றார்கள். 1960ல் கிராமங்களினூடாக ஓடுதல் என் னும் (Cross Country Race) நீண்டதூரம் ஓடும் போட்டியினை வருடாவருடம் நடாத்தி வந்து அதில் வெற்றி பெறுபவருக்கு சிறந்த பரிசில்களை வழங்கினார்.

சுற்று வாசிப்பு (Circle Reading):

மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தினை அதிகரிக்கும் முகமாக 3ம் வகுப்பிலிருந்து ஜி.சி.ஈ (ஓ.எல்) வரையான மாணவர்களுக்கு அவர்களிடமிருந்தே ஒரு புத்தகத்திற்குப் பெறுமதியான பணத்தை பெற்று மிகுதிப்

பாடசாலை நிறுவனர்
திரு கா. சூரன் அவர்கள்

பணத்தை பாடசாலை நிதியில் இருந்து பெற்று ஒவ்வொரு வகுப்புக்கும் அவர்க ளது வயதுக்கும் சமனான புத்தகங்களை பெற்று, ஒரு வகுப்பில் 35 பிள்ளைகள் படித்துக் கெண்டிருந்தால் 10 நாளைக்கு ஒருவருக்கு ஒரு நூல் வீதம் வகுப்பாசிரி யர் மூலம் பதிந்து கொடுத்து அதனை வாசிக்க ஊக்கப்படுத்தி அதனை அவர் கள் வாசித்து முடித்தபின்னர் அடுத்த புத்தகம் வேறொருவரிடமிருந்து பெற்று அவருக்குக் கொடுக்கப்படும். இவ்வாறாக சுற்று வாசிப்பு முறையில் 35 புத்தகமும் அத்தனை மாணவர்களும் வாசித்து முடிப் பதே இந்த முறையாகும். இதனை விட வாசிகசாலை தனியாக இருந்தது. இம் முறையானதே சிறுவர் முதலே வாசிப்புமு றையில் ஊக்கத்தைக் கொடுத்து அவர் களை சிறந்த வாசகர்களாளவோ அல்லது இலக்கியவாதிகளாகவோ, எழுத்தாளர்க ளாகவோ கொண்டுவர முடிந்தது. அத் தோடு தேசியப் பத்திரிகைகளின் ஆசிரி யர்களாக மூவர் கடமையாற்றியுள்ளனர். பல முற்போக்கு இலக்கிய கர்த்தாக்களைத் தோற்றுவித்தது. தமிழுலகப் புகழ் பெற்ற எழுத்தாளரான 'சாஹித்தியரத்தினா' தெணி யான் இப்பாடசாலையின் ஒரு பொக்கி ஷமாவார். இவ்வாறு பலரைக்குறிப்பிடலாம்.

இரவுப் படிப்பு வகுப்பு:

1970ம் ஆண்டுவரை வடபகுதிக்கு மகா வலி மின்சாரம் வரவில்லை. அப்போது வீடுகளில் இரவுகளில் அரிக்கன் லாம்பும், குப்பி விளக்கும். பணக்கார வீடுகளில் மாத்திரம் பெற்றோமாக்ஸ் பாவிப்பார்கள். கூடுதலான மாணவர்கள் அரிக்கன் லாம் பிலும், குப்பிவிளக்கிலுமே படிப்பர். அது வும் வீட்டில் மேசை கதிரை என்பது கிடை யாது. நிலத்தில் இருந்தே பலர் படிப்பர். பிள்ளைகளிள் படிப்புக் கஷ்டத்தினை உணர்ந்த அதிபர் அவர்கள் இரவு 6 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை ஒரு ஆசிரியரின் மேற்பார்வையின்கீழ் பெற் றோமாக்ஸ் விளக்கில் படிக்க ஒழுங்கு செய்தார். ஒரு நாளைக்கு ஒரு ஆசிரியர் வீதம் மேற்பார்வைக்கு ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. ஒரு நாள் மேற்பார்வையை அதிபர் தானும் பொறுப்பெடுத்துக் கொண் டார். இந்த ஒழுங்கினையடுத்து பலர் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்திப் படித்தார்கள். தொடர்ந்து வந்த ஓ.எல் பரீட்சை முடிவுகளில் இந்த இரவுப்படிப் பின் சாதகமான விளைவைக் காணக்கூடி யதாகவிருந்தது.

விஞ்ஞானப் பாடமும் ஆய்வுகூடமும்:

இதுவரை காலமும் கலைத்துறையே படிப்பித்துக் கொண்டிருந்தார்கள். அதிபர் சீனித்தம்பி அவர்களின் நீண்ட பார்வையி னால் விஞ்ஞானத்துறையை ஆரம்பிப்ப தென்ற நோக்கோடு அதுபற்றி முகாமை யாளருடன் கதைத்து வெளியில் இருந்து பத்திரிகை விளம்பரம் கொடுத்து விஞ் ஞானப் பட்டதாரி ஆசிரியர்களையும் கலைத்துறைப் பட்டதாரி ஆசிரியர்களை யும் எடுப்பதென்ற முடிவோடு விளம்பரம் வெளிவந்தது. அதற்கு பலர் சாதித்தடை யையும் உடைத்து விண்ணப்பம் போட்டி ருந்தார்கள். அவர்களுக்கு அதிபர் அவர் கள் ஒரு நேர்முகத் தேர்வு வைத்து ஏழா லையில் இருந்து விண்ணப்பித்த திரு கந்தையா பி.எஸ்சி அவர்கள் பௌதிக வியலுக்குத் தெரிவு செய்யப்பட்டார். பிற் காலத்தில் இவர் உதவி அதிபராகவும் நியமிக்கப்பட்டார். அடுத்து இரசாயனவி யலுக்கு சுண்டிக்குளியில் இருந்து திரு. மகாலிங்கம் என்ற பி.எஸ்சி பட்டதாரி இளைஞர் தெரியப்பட்டார். கலைப்பாடங் களுக்கு புலோலியில் இருந்து ஆசான் கந்தமுருகேசனார் என்ற முற்போக்குவா தியின் உறவினர் திரு ஆழ்வாப்பிள்ளை. பி.ஏ அவர்களும் எமது அயலூரைச் சேர்ந்த திரு சி. திரவியம் பி.ஏ என்ற இளைஞ னும் தெரிவு செய்யப்பட்டனர். அதிபர் இவர்களைத் தெரிவு செய்ததன் நோக்கம் இரண்டாகும். முதலாவது உடனடியாக ஜி.சி.ஈ - ஓ.எல் ற்கு விஞ்ஞானப் பாடங்க ளைத் தொடங்குவதும், இரண்டாவதாக தொடர்ந்து வரும் வருடங்களில் ஜி.சி.ஈ - ஏ.எல் வகுப்புக்களைத் தொடங்குவதுமே யாகும்.

புதிய கட்டடங்கள்:

1958ம் ஆண்டில் மாணவர்கள் தலைவர் கள் (Prefects) நியமிக்கப்பட்டார்கள். இந்த வருடத்திலேயே ஒரு திறந்தவெளி அரங்கு கட்டப்பட்டது. அதனோடு சேர்ந்த கட்ட டமாக புதிய அதிபர் கந்தோர், நூலகம், இரசாயன ஆய்வுகூடம் ஆகியன கட்டப் பட்டன. 1960ம் ஆண்டு 6 வகுப்பறைகள் கொண்ட புதிய வகுப்பறைகள் கட்டப்பட் டன. அதனைத் திறந்து வைப்பதற்கு காபந்து அரச பிரதம அமைச்சர் டப்பிள்யு. தகநாயக்கா அவர்கள் வருகை தந்தார். வேறு பாடசாலைக் கட்டடங்களைக் கட் டுவதற்கு வடமராட்சி, உடுப்பிட்டித் தொ-குதி பாராளுமன்ற உறுப்பினர்களான அமரர் த. இராமலிங்கம், அமரர் பொன். கந்தையா, அமரர் மு.சிவசிதம்பரம், அம ரர் த. இராசலிங்கம் ஆகியோர் தமது நிதியொதுக்கங்களில் கட்டிடங்கள் அமைத் துக் கொடுத்தனர். த.இராசலிங்கம் அங்கு படித்த பழைய மாணவர். அவர் இரண்டு பெரிய மாடிக் கட்டடங்களும், ஏனைய பாடசாலைகளைவிட ஒரு தனித்துவத்தை வழங்கிய முறைசாராக் கல்விக்கென 1978ல் காணி ஒன்று புதிதாக வாங்கி ஒரு இரண்டுமாடிக் கட்டடத்தைக் கட்டித் திறந்தும் வைத்தார். அங்கு மோட்டார் வாகனம் திருத்தல், றேடியோ திருத்தல், வெல்டிங் வேலை போன்ற முறைசாராக் கல்வி புதிதாகப் போதிக்கப்பட்டது. இவ் வாறான ஒரு தொழில்நுட்பக் கல்வி இப் பகுதியில் இடம்பெற்றதனால் வடமராட்சி யின் சகல மாணவர்களும் கல்வி கற் றார்கள். 5 வருடங்கள் அளவில் இது தொடர்ந்தது. ஆனால் இத்தகைய முறை சாராக் கல்வி ஒழுங்கு ஏனைய பாட சாலைகளிலும் இடம் பெற்றதனால் அத னைத் தொடந்து விரிவாக நடத்த முடி யவில்லை. சிவசிதம்பரம் அவர்களது காலத் தில் பாடசாலைக்கென ஒரு விளையாட்டு மைதானமும் பெற்றுக்கொடுத்தார். அதில் ஒரு பகுதிக் காணியை வதிரியைச் சேர்ந்த சிலர் பாடசாலையின் பாவனைக்கும் வதிரி டையமண்ட் விளையாட்டுக் கழகத் திற்கும் வழங்கியதனால் தற்போது மைதா னம் இரு பகுதியினரும் விளையாட்டுத் தேவைக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

1979ம் ஆண்டு அமரர் சி. சீனித்தம்பி அவர்கள் பலரும் மதிக்கக்கூடிய ஒரு மனம் நிறைந்த கல்விச் சேவையுடன் இளைப்பாறினார். இவர் பாடசாலைக்குச் செய்த சேவைகள் அளவிட முடியாததா கும். பெரிய கல்லூரிகளில் கூட கிடைக் காத பல சேவைகளைச் செய்து கல்வி, விளையாட்டு, நாடகம், பேச்சுப்போட்டிகள், ஆங்கிலம் போற்றவற்றில் முன்னணியில் திகழவைத்தார் என்றால் அது மிகையில்லை என்றே கூறலாம்.

மகுடவாசகம்:

'மெயப் பொருள் காண்பதறிவு'

தொலைநோக்கு (Vision):

'நவீன சமூக இசைவாக்கத்திற்குப் பயனு டைய நற்பிரசைகளை உருவாக்கக் கூடிய பாடசாலையாக மிளிர்தல்'

குறிக்கோள் (Mission):

'மாணவர்கள் விழுமியத்துடன் கூடிய சிறந்த தேர்ச்சி மட்டத்தினைப் பெற்றுக்கொள் வதை அடிப்படையாகக்கொண்டு பாடசா லையை சிறந்த களமாக்கி வாண்மைமிகு ஆசிரிய வளத்தினூடாக வினைத்திறனும் விளைதிறனும் மிக்க முன்மாதிரியான பாட சாலையாக உருவாக்குதலை நோக்கா கக் கொண்டு செயற்படல்'.

உசாத்துணை:
• சூரன் சுயசரிதை (சூரன் அவர்களால் எழுதப்பட்ட சுயசரிதம்)
• வாழ்வும் வடுவும் - இலங்கையன்
• புலவர் தேறல் - சைவப்புலவர் சி.வல்லிபுரம் அவர்களின் நினைவு மலர்
• தேவரையாளி இந்து - சஞ்சிகை
• www.thc.sch.lk

packiyanathan.m@thaiveedu.com

Real Estate
✓ Residential
✓ Commercial
✓ Investment
✓ Property Management
✓ Custom Houses
HomeLife Today Realty Ltd., Brokerage
Office: 416-298-3200
Insurance
✓ Life & Health
✓ Travel
✓ Key Person
✓ Buy & Sell
✓ RESP
iNFORCE LIFe
Financial Services Inc.
Office: 416 880 6051
Tax
✓ Personal
✓ Self Employed
✓ Corporate
✓ Estate
✓ Company Registration
MVK TAX Consultants
Office: 647-947-8449
FOR ALL YOUR
REAL ESTATE | INSURANCE | TAX
NEEDS...!
Vallikkannan (MVK) Maruthappan
Direct : 416 880 6051 | www.mvkhome.ca
25 Years of Experience | Qualified and Well-Known | Award Winning Businessman
INTEGRITY HONESTY RELIABILITY

LIMITED OFFER !!!
HURRY UP !!!
Unlimited Access Super fast service
Internet + HOME PHONE FREE
Starting from $26.95*
INTERNET PACKAGES STARTING FROM
$24.95*
sun sonic
Connecting you to yours...
Special Service from New Administration
www.sunsonic.ca | 416-907-7777
5200 Finch Ave East Unit-301A, Scarborough, M1S 4Z5

ஏழு கடல்கன்னிகள்: வாழ்வையும் வாழ்வியலையும் பேசும் பிரதி

- அருண்மொழிவர்மன் -

தமயந்தி என்கிற பெயரினை, ஒரு ஆளுமையாக நிறையக் கேட்டிருக்கின்றேன். அவரது புகைப்படக் கண்காட்சி - அனேகம் முதலாவதாக இருக்கவேண்டும் - யாழ்ப்பாணத்தில் எண்பதுகளில் இடம்பெற்றதனை யேசுராசா தனது நூலொன்றில் பதிவு-செய்திருக்கின்றார். அவர் எடுத்த நிறையப் புகைப்படங்களை அவரது முகநூல் பதிவுகளூடாகப் பார்த்திருக்கின்றேன். சாதியம், அரசியல் உள்ளிட்ட கருத்துகளை குறிப்புகளாகவும், கட்டுரைகளாகவும் வாசித்திருக்கின்றேன். தவிர, எனக்கும் கூத்துக் கலை மீது ஆர்வம் இருப்பதால் அவர் பகிரும் கூத்துகள் தொடர்பான விடயங்களையும் காணொலிகளையும் பார்த்திருக்கின்றேன். தமிழ்த்தேசியம் பற்றிய அவரது பார்வையிலும் அதை அணுகும் விதத்திலும் எனக்கு உடன்பாடில்லை என்றாலும் ஈழத்துக் கலை வடிவங்களைப் பற்றிய அவரது ஆர்வமும் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்கிற அவாவும், இந்தியாவில் இருந்து நிகழ்கின்ற பண்பாட்டுப் படையெடுப்பில் இருந்து நமது கலைவடிவங்களையும் பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டும் என்கிற அவரது கரிசனமும் எனக்கு அவர் மீது மரியாதையை கூட்டுவதாகவே அமைந்தது. இதுவரை தமயந்தி எழுதிய ஓரிரு கதைகளையே படித்திருக்கின்றேன். அந்தவகையில் ஏழு கடல்கன்னிகள் வாசித்தபோது அது நல்லதோர் வாசிப்பு அனுபவமாக, ஒரு ட்ரீட் ஆக, அவரது பாணியில் சொல்வதானால் புழுங்கலரிச்சோற்றுடன் குஞ்சுக்கணவாயின் புளி அவியல் சாப்பிட்டதுபோல அமைந்திருந்தது.

ஏழு கடல்கன்னிகள், ஏழு கதைகளைக் கொண்ட கதைத் தொகுதி. இந்தக் கதைகள் அனைத்தும் கதைசொல்லியின் அல்லது அவருக்குத் தெரிந்த மனிதர்களின் அனுபவங்களாக, அவர்கள் சார்ந்த நினைவுகளாக, அவர்கள் வாழ்ந்த நிலங்களின் கதைகளாக அமைகின்றன. அப்பு, முபாரக் அலி நானா ஆகியோரோடு தமயந்தியாக இருக்கக்கூடிய கதைசொல்லியும் குடும்பமும் இந்தக் கதைகளூடாக எமக்கு அறிமுகமாகின்றார்கள் எம்முடன் உரையாடுகின்றார்கள். அதுபோல அனேகமாக இந்த ஏழு கதைகளுக்கு இடையிலும் சம்பவங்களின் தொடர்ச்சியும் கூட இருக்கவே செய்கின்றது. அண்மைக்காலமாக இந்த வடிவிலான தொகுப்புகள் நிறைய வந்திருப்பதைக் காணலாம். அ.முத்துலிங்கத்தின் உண்மை கலந்த குறிப்புகள், சண்முகம் சிவலிங்கத்தின் காண்டாவனம் போன்றனவும் கூட இதே தன்மையானவை. அதன் காரணமாக உண்மை கலந்த குறிப்புகளையும், காண்டாவனத்தையும் நாவல்கள் என்பதாக முன்வைப்பவர்களும் உள்ளனர். ஆயினும் எனது வாசிப்பில் நான் ஏழு கடல்கன்னிகளை நினைவுக் குறிப்புகளாக, கதைகளின் தொகுதியாகவே அதிகம் காண்கின்றேன்.

தொகுதியின் முதலாவது கதை கிற்றார் பாடகன் இத்தொகுதியில் உள்ள கதைகளில் முதலில் எழுதப்பட்டதும் என்று நினைக்கின்றேன். கசப்பும், அடுத்த மனிதர் மீது நம்பிக்கையில்லாத வெறுமையுமாக இருக்கின்ற நடைமுறை உலகைவிட்டு வேறொரு தளத்திலான அன்பும் கனிவும் நிறைந்த உலகொன்றில் வாழும் மனிதர்களது உலகு பற்றியதாக இக்கதை அமைகின்றது. நீடுழி வாழ்க என்பதனை எப்படித் தமிழில் சொல்வது என்று கேட்கின்ற நோர்வீஜிய கிழவனுக்கு "நீ குன்ஷாமணி" என்று சொல்லித் தருகின்றான் ஒருவன். தான் காணும் தமிழர்களிடன் கபடமில்லாமல் அதைச் சொல்லுகின்ற அந்தக் கிழவனிடம் அந்த வார்த்தைகளின் அர்த்தத்தை கதைசொல்லி கூறுகின்றபோது அவன் சிரிக்கின்றான். ஏன் சிரிக்கின்றாய், உனக்குக் கோபம் வரவில்லையா என்று கேட்க அவன் கூறுகின்றான் "இல்லை நண்பா சந்தோஷப்படுகின்றேன். பயணக்களைப் புத்தெரியாமல் அந்த நண்பனுக்கு நானொரு இலவச பொழுதுபோக்குச் சாதனமாக பயணப்பட்டிருக்கின்றேன். அந்த வகையிலாவது நான் பயன்பட்டேன் என்பது என்னைப் பைத்தியம் என்று சொல்லும் நபர்களுக்குச் சாட்டை அடியாக இருக்கட்டும் என்கிறான். கெட்டிக்காரர், சுழியன், நல்லவர், வல்லவர், தந்திரசாலி, நேர்மையானவர் என்கிற அடையாளங்களோடு மனிதர்கள் அறிமுகப்படுத்தப்படுகின்ற இன்றைய நாட்களில் அன்பான மனிதர் என்று எத்தனை பேரை எம்மால் அடையாளம் காணக் கூடியதாக இருக்கின்றது என்கிற கேள்வியே இப் போதெல்லாம் என்னிடம் அதிகம் இருக்கின்றது. அப்படியான ஒரு உலகு இந்தக் கதையூடாக அறிமுகமாகின்றது.

இந்தக் கதையில் வருகின்ற அப்பு, தொடர்ந்து ஏனைய கதைகளிலும் வருகின்றார். இந்தப் புத்தகத்தை வாசித்தவர்களுக்கும், வாசிக்காதவர்களுக்கு வாசிக்கும்போதும் தெரியும் அப்பு ஒரு அருமையான நிதானமான மனிதர். வாழ்வை எந்த அவசரமுமில்லாமல், நிதானமாகவும் பரிவோடும், குழந்தைத்தனமான அன்போடும் கடந்துசெல்பவர். அவரது வாழ்வு ரசனைகளாலும் சுவைகளாலும் நிறைந்தது. கள்ளுக்குடிப்பதென்றால் அப்பு சும்மா குடிக்க மாட்டார். நண்டுச் சம்பல் வேண்டும். அதற்காக அவர் கடல்கரைக்குத் தானேபோய் சினை நண்டுகளாய் வாங்கிவருவார். துவரஞ்சுள்ளிகளை வீட்டின் கோடிப் புறத்தில் அடுக்கி நண்டுகளைச் சுடுவார். நண்டுச் சதையை ஆய்ந்தெடுத்து ஒரு கிண்ணத்திலிட்டு வெங்காயம், பிஞ்சு மிளகாயுடன் உப்பு, தேசிக்காய் ஆகிய வற்றைக்கலந்து குழைத்து ஒரு அருமையான சம்பல் செய்வார். இந்த இடத்தில், அப்புவைப் பார்த்துப் பொறாமையாக இருக்கின்றது. இன்றைய நாட்களில் இத்தனை நிதானத்துடன் ஒவ்வொரு கணத்தையும் அனுபவித்து வாழ எத்தனை-பேரால் சாத்தியமாகின்றது? இந்தத்தொகுதியில் பல்வேறு கதைகளில் அப்பு வந்து போகின்றார். அவற்றிலெல்லாம் அவரது நினைவுகளும், கரிசனைகளும் மனிதர்கள் பற்றியதாகவும், ரசனை பற்றியதாகவும் இருக்கின்றது. கொழும்புத் துறைமுகத்தில் பணியாளர்களாகப் பணிபுரிகின்ற போது அங்கு அதிகாரியாக இருந்தவரின் மோசமான அதிகார துஷ்பிரயோகம் காரணமாக வேலையை விட்டு விலகிவிடுகின்றார் அப்பு. ஆயினும், அப்போதும் கூட அவரது சக ஊழியர்களான முபாரக் அலி நானாவை தனியாக விட்டுவிட்டு வந்துவிட்டோமே என்பதுதான் அவரது கவலையாக இருக்கின்றது. சிறிது காலத்தில் "நீ இல்லாத இடத்தில் எனக்கென்ன வேலை?" என்று சொல்லி முபாரக் அலி நானாவும் வேலையை விட்டு விலகிவிடுகின்றார். அதன் பிறகு அவர்கள் இருவரும் சேர்ந்து "அந்தோணி குரூசை தனியாக விட்டு விட்டுவந்துவிட்டோமே என்று கவலைப்படுகின்றார்கள். பின்னர், சோமபால இருக்கின்றார் என்று தம்மை ஆறுதல்படுத்திக்கொள்ளுகின்றார்கள். அப்பு நவதாராளவாதமும் பூகோளவாதமும் கடைசி மனிதன் வரை பாய்ந்து அவர்களது வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் நிர்ணயிப்பதற்கு முன்னைய காலத்தைச் சேர்ந்த மனிதர். முதலீட்டியத்திடம் நவீன அடிமைகளாக பெரும்பான்மை மனிதர்கள் ஆக்கப்படாத ஒரு காலத்தின் கனவு அப்பு. துரதிஸ்டமாக அந்தக் கனவு கூட சாத்தியமில்லாத காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பது என்பது தான் நிஜம். ஒன்றரை முழம் நீளமும் மூன்று கிலோ எடையும் கொண்ட மீனொன்றினைப் பிடித்த லூர்த்துராசன் அதனைக் கொல்வதற்காக இரும்புத்தடியால் அதன் தலையில் அடித்ததைப் பார்க்கின்றபோது அப்பு கோபம் கொள்ளுகின்றார். "சே என்ன அன்னியப்பட்ட வேலை செய்யிறாயடா மோனே, இப்படியா அடிச்சுக்கொல்லுறது? எங்கட பரம்பரையில கண்டு கேட்டறியம் இப்படியொரு காரியத்த... என்று அப்பு சலிப்படைகின்றார். மீன் பிடித்தலை தொழிலாகக் கொண்டவர்களுக்கு மீனுடனான ஆத்மார்த்தமான பிணைப்பு இங்கே சொல்லப்படுகின்றது. ஏழாற்றுக் கன்னிகள் என்கிற கதையில் எந்த மீனுமே அகப்பட்டிருக்காத வேளையில் கடைசி வலையில் ஒரு சுறா அகப்பட்டிருப்பதைக்கண்ட கதை சொல்லி அதை மகிழ்ச்சியுடன் தோணிக்குள் போட்டிவிடுகின்றான். அது குட்டித் தாச்சியாக இருக்கின்றது என்பதை இனங்கண்ட அப்பு அதனை உடனடியாக திரும்பவும் கடலுக்குள் போடும்படி கேட்டுக் கொள்ளுகின்றார்.

தொள்ளாயிரம் சரிகளும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான காயங்களும் என்கிற கதை முள்ளிவாய்க்கால் போர் உச்சத்தில்

தொடர்தல் 74ம் பக்கம்

யோகசாலை
வளமான சமூதாயத்தை நோக்கி

எங்கள் மையம் அனைத்துலக
சிவானந்தா யோகா மையத்துடன் இணைப்பு

ஒரு சமூக யோகா மையம்

இலவச சமூக யோகா
திங்கள் மற்றும் வெள்ளி மாலை 6 மணி

இலவச இளைஞர் யோகா
வியாழன் மாலை 6 மணி

இலவச குடும்ப யோகா
வெள்ளி மாலை 6 மணி

சிறுவர் யோகா
ஞாயிறு காலை 10.30 மணி

தினம் தினம் யோகா
திங்கள் – வெள்ளி மலை 7 மணி
சனி, ஞாயிறு காலை 9 மணி

உடலை உயிரை
வளர்த்தேன்

Yogasalai
the community
647-760-8156
210 Silver star blvd.,
Unit #850, Toronto, M1V 5J9

N.K.S
Drapery & Blinds Fabric LTD

திறமையான
சேவையால் பல
விருதுகளை பெற்ற
நிறுவனம்

உங்கள் வீட்டுக்குத் தேவையான சகலவித
யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி
வகைகளையும் மிகவும் மலிவான விலையில்
பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

ஏழு கடல்கன்னி...

73ம் பக்கத் தொடர்ச்சி...

இடம்பெற்றிருந்த காலத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. இழப்புக்களும் மரணங்களும் அவலமும் ஓலமும் நிறைந்து கிடந்த ஒரு காலப்பகுதியில் இவற்றையெல்லாம் கிரிக்கெட் ஸ்கோர் சொல்வதுபோல பரபரப்புச் செய்தியாக்கிய பத்திரிகைகள், ஊடகங்கள் ஆகியவற்றின் அறப்பிறழ்வினை இக்கதையூடாக பதிவாக்குகின்றார். போரின் அவலங்களும், இழப்புகளும் ஆவணப்படுத்தப்படவேண்டும் என்பதுவும், அவை அந்த மானுட அவலத்துக்கான சாட்சிகளாக்கப்படல் வேண்டும் என்பதுவும் உண்மை. அந்த விதத்தில் ஒரு போர்க் களத்தில் நியமிக்கப்பட்ட புகைப்படம் எடுப்பவரது வேலை புகைப்படம் எடுப்பது மாத்திரமே. அதேநேரம் துரதிர்ஸ்டமாக அவற்றை நாம் உணர்வு ரீதியான தாக்கத்தை ஏற்படுத்து பரிதாபம் தேடும் கருவியாக மாத்திரம் பயன்படுத்துகின்றோமோ என்ற கேள்வி எனக்கு இருக்கின்றது.

ஈழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்த வரை நடந்த மிக மோசமான மானுட அவலங்களில் ஒன்றான யாழில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை எட்டாம் பிரசங்கம் என்ற கதையூடாக ஆத்மார்த்தமாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது. முபாரக் அலி நானா யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றப்பட்டது அப்புவுக்கு மாத்திரமல்ல, அனைவருக்குமான ஒரு அவலம்தான். நாச்சிக்குடா முபாரக் அலி நானாவின் நிறுத்த வகையற்றுச் சொரிந்த கண்ணீரில் கரைந்து கடலில் கலந்தது. குடாக்கடலின் அலைகள் கொந்தளித்தன. கொண்டல் காற்றெழுந்து உலுப்பியதில் கடலடி நிலம் அலையுண்டு கலங்கிச் சேறானது. முபாரக் அலி நானா வேரோடு அகற்றப்பட்ட நாச்சிக்குடாவின் மேற்றிசைச் சூரியன் வெட்கத்தோடும் துக்கத்தோடும் இரணைதீவுக்குப் பின்னால் முகம் முறைத்துக்கொண்டான். அப்படி வெளியேற்றப்பட்ட முபாரக் அலி நானா போரின் பின்னர் 2010 ஆடி 15 மீண்டும் உயிரைமட்டும் சுமந்தபடி நாச்சிக்குடா வந்த போது மண்ணில் ஒரு பிடி நிலம் கூட அவருக்கானதாக இருக்கவில்லை. இன்று போரில் கையகப்படுத்தப்பட்ட மக்களின் நிலம்பற்றிக் கதைக்கின்ற போது இந்த மக்களின் நிலங்கள் பற்றி பேசவும், அவை பறிக்கப்பட்ட விதம் பற்றி வெட்கவும் வேண்டியது எமது கடமையாகும்.

இத்தொகுதியில் முக்கியமானதாக நான் கருதுகின்ற இன்னொரு அம்சம், நூலெங்கும் நிலவியலும், வாழ்வியலும் பதிவுசெய்யப்பட்டுள்ள விதமாகும். நானறிந்த வரை ஈழத்தின் கரையோர, மீன்பிடித்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களின் வாழ்வியலை பதிவாக்கியுள்ள நூல்களில் இது முக்கியமானது. குறிப்பாக மீன்பிடித்தொழில் சார்ந்த எத்தனையோ சொற்கள் சரளமாக ஒவ்வொரு பக்கத்திலும் நிரவியிருக்கின்றன. உதாரணமாக, தானையடி,அடியனடித்தல்,கும்பா,மண்டா... என்று - இவற்றை எல்லாம் தனியாகப் பட்டியலிட்டு, இன்னமும் சேகரித்து முழுமையாக்கும் வேலைகளில் அகராதித் துறை சார்ந்து இயங்குபவர்கள் முன்வர வேண்டும். அதுபோல உணவு தயாரிக்கும் முறைகள், உதாரணமாக நண்டுச் சம்பல், இறால்-முட்டைப் பொரியல், மீன் ஆணம் என்று, இந்த உணவுத் தயாரிப்புகளை அறிந்தவர்கள் மிக சிலராகவே இருப்பர். சில காலங்களுக்கு முன்னர் ஈழத்தவர்களது உணவுத்தயாரிப்பு முறைகள் பற்றிய ஆவணப்படுத்தல் ஒன்றினைச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தேன். பின்னர் சில நடைமுறைக் காரணங்களால் அது சாத்தியமாகவில்லை. அதன் தேவையை இந்நூல் மீள வலியுறுத்துகின்றது. அது போல திருமண நிகழ்வுகளில் மாட்டுக்கறி சமைப்பது என்பது ஒரு சடங்காகவே இருந்தது என்பது தற்போது பலருக்கும் ஆச்சர்யமாகத்தான் இருக்கும். அதுபோல கடலிலிருந்து வலையைத் தோணிக்கு இழுக்கும் போதும், தோணியில் பிடித்துப் போட்ட மீன்களுடனும் மீன்பிடிக்கும்போது பிடித்த மீன்களுடன் பேசும்விதம் இன்னொரு கவனிக்க வேண்டிய பதிவு. மீன் மற்றும் கடலுணவுகளைக் கொண்டுசெல்லப் பயன்படுத்தப்படுகின்ற பறிகளை எத்தனை பேருக்கு நினைவிருக்கும் என்று தெரியவில்லை. நோர்வேயில் கதைசொல்லி மீன் பிடிக்கின்றபோது தோட்டுப்பறி இல்லையா என்று கேட்கின்றார் அப்பு. பறி இழைப்பதில் விண்ணனான அப்பு பற்றித்தொடர்ந்து வரும்போது இறால் பறி, களங்கண்டிப் பறி, வழிவலைப் பறி, திருக்கைவலைப் பறி என்கிறதாக பறிகளின் வகைகள் பட்டியலிடப்படுகின்றன. கிட்டத்தட்ட இந்தத் தொழிற்கலைகள் எல்லாம் அழிந்து போய்விட்டன என்றே சொல்லக்கூடிய ஒரு காலப்பகுதியில் அவற்றை கலைகளினூடாகப் பதிவுசெய்கின்ற இந்தப் போக்கு எனக்கு முக்கியமானதாகப்படுகின்றது.

எட்டாம் பிரசங்கம் என்கிற கதையில் விநாயகமூர்த்தி என்பவர் ஊடாக போருக்குப்பிற்பட்ட காலங்களில் நிலத்தடி நீர் எப்படி பண்டமாக விற்பனையாகி எதிர் காலத்தில் சூழலியல் சார்ந்த பிரச்சனைகளை தீவிரப்படுத்த இருக்கின்றது என்பது கவனப்படுத்தப்படுகின்றது. எமது சமகால நெருக்கடிகள் பற்றிப் பேசுகின்ற போது சூழலியல் சார்ந்த கரிசனைகளுடனான பார்வைகளை மிகக் குறைவாகவே அவதானிக்கமுடிகின்றது. அந்த வகையில் மக்களுக்கு நீர்விநியோகம் செய்வதாகக் கூறிக்கொண்டு வயல்வெளிகளில் உள்ள கிணறுகளில் இயந்திரங்களை வைத்து நீரை ஒட்ட உறிஞ்சி எடுப்பதனால் அவற்றின் நன்னீர் வளம் வற்றி உவர் நீராக மாறுகின்ற அபாய எச்சரிக்கையும் விடுக்கப்படுகின்றது. அதுபோல பெரும்படகுகளில் வந்து நவீன முறைகளில் மீன்கள் பிடிக்கப்படுகின்றபோது சமநிலை குலைந்து எப்படி கடல்வளம் குன்றுகின்றது என்பதும் கவனப்படுத்தப்படுகின்றது. இவையெல்லாம் பண்பாட்டு ஆய்வுகளிலும் ஆவணப்படுத்தலிலும் அக்கறைகொண்டவன் என்றவகையில் எனது கவனத்தையீர்த்த அம்சங்கள். அந்த வகையில் தமயந்தி இன்னும் நிறைய எழுதவேண்டும் அது அவரது திருப்திக்காக மாத்திரமல்ல, ஏழு கன்னிகள் போன்ற பதிவுகள் சம காலத்தில் அதிகம் தேவைப்படுகின்ற ஒரு செயற்பாடுமாகும்

arunmozhivarman@thaiveedu.com

உங்களுக்கு தேவையான தமிழ், ஆங்கிலம்
Typesetting, Graphic designs,
Logos, Hand outs and
Photo editing ஆகியன
செய்து கொடுக்கப்படும்.
அழைக்க வேண்டிய தொலைபேசி
416-347-5006

வீடு வாங்க விற்க...

10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

வாங்கப் போகிறீர்களா?

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

விற்கப் போகிறீர்களா?

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

For Sellers

Free Home Inspection!
Free Market Evaluation!
Free Home staging Consultation!

For Buyers

Free 1 Year Home Warranty!
* Cashback incentives!

★ Cash incentive for referrals

www.vela4homes.com

All Brand new Homes

Please Call for more details

Stouffeville
Custom Build
Luxury homes
3200 sft.
4+1BR, 6WR

Ajax
Free hold Town Homes
1500-2500 sft.
3BR- 4BR, 3-4WR

Scarborough
Detached Home
3500-5000 sft.
4+1BR, 4WR, 2GR

Scarborough
Detached home
2869 sft.
4+1BR, 4WR, 2GR

Top 5% Sales Rep. in Canada

Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8

தாய்வீடு

சீரிய சிந்தனையாள்

குறமகள் வள்ளிநாயகி இராமலிங்கம்

தமிழுலகின் குறிப்பிடத்தக்க ஆளுமையொன்று ஓய்ந்துவிட்டது. தமிழ்ச் சமூகம் பற்றியும் சமூகத்தின் முக்கிய அங்கமான பெண்ணியம் பற்றியும் தீவிரமாகச் சிந்தித்தவரும் சிந்தனையைச் செயலிலும் காட்டியவருமான குறமகள் எனும் திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் இன்று நம்மிடையே இல்லை.

ஒரு பெண்ணாக ஐம்பது ஆண்டு காலத்துக்கு மேலாக இலக்கியவாதியாகவும் சமூகச் செயற்பாட்டாளராகவும் பயணிப்பது எமது சமூகக் கட்டமைப்பில் இலகு வானதல்ல. தளராத உறுதியுடன் போராட்டங்களை எதிர்கொண்டபடியே தன் பணி களைத் தொடர்ந்தவர் குறமகள் அம்மா.

அனைத்துலக மகளிர் நாளை முன்னிட்டு, தாய்வீடு சிறப்பிதழை உருவாக்க முற் பட்டவேளை, அதற்கான சிறப்புச் செவ்வியை ஒரு பெண்ணிடமிருந்தே பெறுவது எனத் தீர்மானித்தோம். அவ்வேளை எம் ஒருமித்த தெரிவாக இருந்தவர் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்கள்.

குறமகள் அந்த நீண்ட செவ்வியில் தன்னுடைய அனைத்துப் பரிமாணங்களை யும் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

பலரரலும் பாராட்டப்பட்ட, பல சிந்தனைக்குரிய கருத்துகளை வெளிப்படுத்திய செவ்வியாக அது அமைந்தது. தாய்வீடு இதழோடு தொடர்புகொண்ட பலர் இச் செவ்வி குறித்துச் சிலாகித்தனர்.

தாய்வீடு இதழ்கள் தமிழகத்துக்கும் அனுப்பப் படுவது வழக்கம். அவ்வேளை அவ்விதழைப் பார்வையிட்ட திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி அவர்கள் குற மகள் அம்மா வழங்கிய அந்தச் செவ்வியால் பெரிதும் கவரப்பட்டார். குறமகள் அம்மாவுடன் பேச விரும்பினார். தாய்வீடு அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இருவரும் பேசினார்கள்.

இந்நிகழ்வு, குறமகள் அம்மாவுக்குப் பெரும் நிறைவைக் கொடுத்தது என்றே கூறவேண்டும்.

மறைவதற்குச் சில வாரங்களுக்கு முன்பாக அவர் தாய்வீடு இதழுக்கு ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதுவே அவர் எழுதிய இறுதிக் கட்டுரையாகவும் இருக் கலாம்.

புதியதொரு புலத்தில் தொடக்கக் குடியேறிகளாக இருந்த தமிழ்ச்சமூகத்துக்கு, குறிப்பாகப் பெண்களுக்குப் பேராதரவாகத் திகழ்ந்தவர் குறமகள் அம்மா. அவரால் வழிகாட்டப்பட்டு நல்வாழ்வை அமைத்துக் கொண்ட பெண்கள் இங்கு ஏராளம் உள்ளனர்.

கால் நூற்றாண்டுக்கு மேலாகக் கனடியச் சமூகத்துக்கு இவர் ஆற்றிய பணிகள் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை தொடர்ச்சியாகச் சமூகத்துக்கு வழிகாட்ட வல்லவை.

திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களின் மறைவு இழப்பும் துயரமும் கொண்டது. எனினும் இயற்கையின் நியதிகளோடு எவரும் முரண்பட முடியாது.

தாய்வீடு இவருடைய சமூகம் சார்ந்த சிந்தனை-களைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வ தில் உறுதி பூணுகிறது.

- தாய்வீடு

மறைந்தும் மறையாத மாமகள்-குறமகள்

- உமை பற்குணரஞ்சன் -

எழுத்து என்பது மானுடத்தைச் செப்பனிடும் ஒரு மகத்தான கருவி. அந்த கருவியை அழகாகவும் காலத்தின் தேவையறிந்தும் கையாளத் தெரிந்தோரே எழுத்தாளராகின்றனர்.

தொன்று தொட்டு, பெண்களைப் 'பெண்' என்ற காரணத்திற்காகவே சமூகம் பெண் களுக்கான சில விதிமுறைகளை வகுத்து வைத்திருக்கிறது. அவற்றின்படிதான் நடக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறது. அவை பெண்மைக்கும், பெண்களின் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக இருக்கின்றன. காலங் காலமாக, கலாச்சாரச் சிறைகளுக்குள்ளும் அடக்குமுறையினுக்குள்ளும், சாதியக் கொடுமைகளுக்குள்ளும் சிக்குண்டிருந்த காலத்தில் பெண்கள் எழுத வந்ததே மாபெ ரும் வெற்றி.

எத்தனையோ பெண்கள் எழுதிக் கொண் டிருந்தாலும் எழுத வந்த அனைவருமே படைப்புலகத்தில் புரட்சியை விதைத்துச் செல்வதில்லை. தாம் வாழும் காலத்தின் உட்கிடக்கைகளை உறுதியாகப் பிரதிப லிக்கும் படைப்பாளிகளே காலத்தைக் கடந்து நிற்கும் ஆற்றலைப் பெறுகின்றனர். இவ்வகையான சமூக ஆளுமைகள் தமது எண்ணங்கள் எழுத்தாற்றலால் தாம் சார்ந்த சமூகத்தின் வளர்ச்சிக்கு விசைகொடுத்து தகுந்த பங்களிப்பையும் வழங்கிச் செல் கின்றனர். இந்த வகையில் நாவலாசிரியை, நாடகக் கலைஞர், மேடைப் பேச்சாளர். சமூக சீர்திருத்தவாதி என்று பன்முகத்தி- றமைகள் வாய்ந்த பெருமைக்குரியவர் குறமகள் என்கின்ற பெரு மகள்.

ஈழத்துப் படைப்பிலக்கிய வரலாற்றில் பெண்ணியவாதத்தை முன்வைத்த எழுத் தாளுமைகளுள் வள்ளிநாயகி இராமலிங் கம் குறிப்பிடத்தக்கவர். குறமகள் என்ற புனைபெயரில் எழுதி வந்த மூத்த பெண் எழுத்தாளர். ஈழத்துச் சிறுகதைத் துறை யில் தனக்கென ஓரிடத்தைப் பெற்றவர். பெண்கல்வியின் அவசியம், சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறை, குழந்தைமணக் கொடுமை, பாலியல் பலாத்காரம், பிள்ளைப்பேறும் அறியாமை யும் பெண்களை அடிமைப்படுத்தும் இயற் கைக்காரணிகள் போன்ற பெண்ணியம் சார்ந்த எழுத்துகளை மிக அழகாகவும் தெளிவாகவும் உறுதியாகவும் உறுத்தாத நடையழகில் எழுதிய பெருமை இவருக் குண்டு. இவை தவிரவும் தேசவிடுதலை சாதிய ஒழிப்பு, சமத்துவ சமூகம் தொடர் பான கருத்துகள் அவரது எழுத்துகள் எங்கும் உறுதியாகவே ஒலிக்கின்றன.

இலங்கையின் வடபுலத்தில் காங்கேசன் துறையில் 1933ம் ஆண்டு ஒரு மத்திய- தரக் குடும்பத்தில் பிறந்தவர் வள்ளிநா யகி. அப்போது அங்கு அவரைச் சூழ இருந்த சமூக அமைப்பே அவரை ஒரு படைப்பாளியாக்கியிருக்கிறது எனலாம்.

காங்கேசன்துறை நடேசுவராக் கல்லூரியி லும். இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்திலும் கல்வி கற்ற இவர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் பயிற்றப் பட்ட ஆசிரியராகப் பணிபுரிந்தார். அத் தோடு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நாடகவியலிலும் கல்வியியலிலும் டிப் ளோமா பட்டம் பெற்றார்.

சிறுகதை எழுத்தாளர், கவிஞர், மேடைப் பேச்சாளர், விமர்சகர், இனப்பற்றாளர், சமூகசேவையாளர் எனப் பல்வேறுபட்ட தளங்களில் வாழ்ந்த முற்போக்கு சிந்தனை கொண்ட குறமகள் அவர்கள், இலங்கை யில் 27 வருடங்கள் பாடசாலை ஆசிரியரா கவும் எட்டு வருடங்கள் ஆசிரியப் பயிற் சிக் கலாசாலை விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்

தந்தையாரும் அவருக்குப் பின் அவர் கணவரான இராமலிங்கமும் குறமகள் அவர் களின் எழுத்தாளுமைக்கு வலுவூட்டியவர் கள் என்கிறார் குறமகள். சிறுவயதில் இருந்தே காந்தி, சரோஜினி நாயுடு, இந் திரா காந்தியின் தாய் கமலா நேரு போன்ற இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தலை வர்களைப் பற்றி நிறைய செய்திகள் தேடி வாசிக்கும் ஆர்வம் இருந்ததாகவும் மீனாட்சி சுந்தரனாரின் தமிழ் நிறையப் பிடிக்கும் எனவும் அத்தோடு மு.வரதராசனின் நூல் களும் தன் சிந்தனையில் பாதிப்பை ஏற் படுத்தியதாகவும் நேர்காணல் ஒன்றில் நினைவு கூர்கிறார்.

ஒரு படைப்பாளியின் படைப்பாக்கத்திற்கு அவர்களது சொந்த வாழ்க்கையில் நிகழ்ந் தேறியவைகள் மற்றும் அப்படைப்பாளி யைச் சூழ உள்ள சமுதாயத்தின் பாதிப் புக்கள் காரணமாகின்றன. இவ்வாறான காரணிகள் வெவ்வேறான நிறங்களிலும் தொனிகளிலும் படைப்பிற்குள் பயின்றுவ ரும். ஏனெனில் அவை தேடிச்சென்றோ

தானாகவோ வந்தடைந்தவை அல்ல இவை. விரும்பியோ விரும்பாமலோ அவற்றிற்கு ஆட்பட்ட அனுபவங்களாக அவை படைப் புகளுடன் கலந்துவிடுகின்றன.

குறமகள் அவர்களுக்குச் சிறுவயதில் அவர் கள் வசித்த வீட்டின் அயலில் உள்ள குடும்பத்தில் ஏற்பட்ட, அவரை மிகவும் பாதித்த மனதை உருக்கும் நிகழ்வொன் றின் பிரதிபலிப்பே இவர் தமது 17 வது வயதில் முதல் முதல் எழுதிய 'போலிக் கவுரவம்' எனும் சிறுகதையாகும். இது 1955ல் வடக்கில் வெளிவந்த ஈழகேசரியில் வெளியாகி இருந்தது. சமுதாயச் சீர்கேட் டுக் கொடுமைகளின் வெளிப்பாடுகளில் ஒன்றான கட்டாயச்சீதனத்தின் கொடுமை யின் தாக்கம் இவர் கதையில் வேரோடிக் கிடப்பதை காணலாம்.

இவரது கதைகள் ஈழகேசரி, சுதந்திரன், வீரகேசரி, தினகரன், கலைச்செல்வி, ஆனந்த விகடன் ஆகிய இதழ்களில் வெளிவந்துள் ளன. இவரது 'குறமகள் கதைகள்' 'உள் ளக் கமலமடி' ஆகிய நூல்கள் மித்ர வெளியீடாக வெளிவந்துள்ளன. ஈழத்தில் மட்டுமல்லாது தமிழகத்திலும் ஆனந்த விகடன் போன்ற பிரபலமான சஞ்சிகைக- ளில் பிரசுரமாகிய இவரது சிறுகதைகள் பலராலும் பாராட்டுப்பெற்றன. 'வாழ்வைத் தேடு', 'ஆளுமைகள் அழிகின்றன', 'அவள் கொடுத்த விலை', 'புளியங்கொப்பு', 'சோடி வேட்டி' என்பன குறமகளின் சிறுகதைக ளுள் குறிப்பிடத்தக்கவை

வீரகேசரியில் எஸ்.பொன்னுத்துரை, இ.நாக ராஜன், சு.வேலுப்பிள்ளை மற்றும் கனக செந்திநாதன் போன்ற முன்னணி எழுத் தாளர்களுடன் இணைந்து மத்தாப்பு என்ற நாவலைப் படைத்தார். இக் குறுநாவலில் மஞ்சள் வர்ணத்தை வைத்து ஒரு அத்தி யாயத்தை சிறப்பாக எழுதியுள்ளார். மாணிக்கம் சஞ்சிகையில் பிரபல எழுத் தாளர்கள் சிலருடன் சேர்ந்து 'கடல் தாரகை' என்ற குறுநாவலை எழுதியுள்ளார். 1954ம் ஆண்டிலிருந்து சிறுகதை, கட்டுரை, கவிதை எனத் தொடங்கி எழுத்துலகில் 50 ஆண் டுகளைக் கடந்த சாதனையைத் தன்ன கத்தே கொண்டவர். இலக்கிய பொன்வி ழாக் கண்ட பெண் எழுத்தாளர்.

அனைத்து வடிவமான அடிமைத்தளைக- ளிலும் இருந்தும் பெண்ணை விடுவிப்பது, அவளுடைய உரிமைகளை நிலை நாட் டுவது, சுதந்திரத்தை வலியுறுத்துவதாகப் பொருள் படும் பெண்ணியம் போன்றவை இவரது படைப்புகள் எங்கும் வேர்விட்டுக் காணப்படுகிறன.

இவரது பெண்ணிய அணுகுமுறை இன்றைய பெண்ணிய அணுகு முறையில் இருந்து வித்தியாசப்படுகின்றது. பெண்ணானவள் தன் அறிவையும் ஆற்றலையும் முற்போக்கு சிந்தனையையும் பெருக்கி, அதன்வழி குடும்ப சேவைக்கோ நாட்டு சேவைக்கோ தங்களை அற்பணித்தலே சிறப்பு என்றும் பெண்களை தனித்து, பெண்களுக்கான உலகம் என்கிறதான பார்வையினைக் கடந்து பெண்களும் ஆண்களும் இணைந்தே பெண்விடுதலையை சாத்தி யப்படுத்தலாம் என்பதுவும் அவரது அபிப் பிராயமாக இருந்தது. குடும்பம் என்ற அமைப்பு உடைபடக் கூடாது என்ற கவ னத்தை இவரது எழுத்துக்களில் காணலாம். பெண்ணின் மீதான ஒடுக்குமுறை, வர்க்க ஒடுக்க முறையோடு தொடர்புடையது என்ற வரலாற்று வளர்ச்சிப் போக்கை சரியாகப் புரிந்து கொள்ளாமல், ஆண்தான் பெண் ணுக்கு எதிரி என்கிற நிலை எடுப்பது தவறு என்கிற 'ஏங்கல்ஸின்' கூற்றை வலியுறுத்தும் கருத்துக்களை அவர் எழுத்துக்களில் காணலாம்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் வழி காட்டலின் கீழ் தனது முதுமானிப் பட்டப் படிப்பிற்காக தான் மேற்கொண்ட ஆய்வுக் காக 'கூமப் பெண் கல்வி' என்னும் ஆய் வுப் பொருளை எடுத்து அவ் ஆய்வு தொடர்பாக இவரால் வெளியிடப்பட்ட கட்டுரைகள் பலராலும் பேசப்பட்டவை. சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இவரது ஆய்வு முழுமையாக நிறைவு பெற முடியாவிட் டாலும் அவர் எழுதிய மூன்று கட்டுரைக- ளுமே இலக்கிய ஆளுமைகள் பலராலும் பாராட்டப்பட்டவை.

இவருடைய ஆய்வுப் புலமையை 'யாழ்ப் பாணச் சமூகத்தில் பெண் கல்வி' என்ற ஆய்வு நூல் பறைசாற்றி நிற்பதைக் காண லாம். இந்நூலில் அந்த மூன்று கட்டுரை களும் தொகுக்கப்பட்டுள்ளன.

பெண்கல்வி என்று பார்க்கும் போது யாழ்ப் பாணத்துப் பாரம்பரியத்தில் நிலவிய பெண் கள் பற்றிய கருத்தாக்கம் பால்நிலை சார்ந்தவை என்பதை வள்ளிநாயகி துல் லியமாக எடுத்துக் காட்டுகின்றார். வள்ளி நாயகி இந்த நூலின் முகவுரையில் நாவ லர் மேல் வைத்திருந்த மதிப்பு அவருடைய நாலாவது பாலபாடத்தை வாசித்ததும் தனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதாகக் கூறுகின்றார். நாவலர் பெண்களைத் தீட் டுக்குரியவர்களாகக் கருதி அவர்களுக் கான உயர்வு பற்றிச் சிந்திக்கவில்லை எனவும் அத்தோடு அவருடைய சமய நூல்களில் பெண்கள் எவை எல்லாம் எல் லாம் செய்யக் கூடாது என்பது பற்றியும் எழுதியுள்ளதாக மிகத்துணிச்சலாகச் சாடி யுள்ளார். நாவலர் சாதியத்துக்கு ஆதர வாகவும், பெண்களுக்கு எதிராகவும் செயற் பட்டார் எனக் குறமகள் அவர்கள் தன் ஆய்வு நூலில் விமர்சிக்கிறார்.

1950ம் ஆண்டில் இலங்கையில் வெளி வந்த 'தமிழ் மகள்' பெண்கள் சஞ்சிகையின் துணிச்சல் மிக்க ஆசிரியரான மங்கம்மாள் என்பவரைப் பற்றிய ஆய்வுக் கட்டுரையை குறமகள் எழுதியுள்ளார். இலங்கையில் பெண்கள் அமைப்புக்கள் எதுவும் இச்

தொடர்தல் 78ம் பக்கம்

திராவிடர் கழகம்

தலைமை நிலையம்: பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-600 007.
தமிழ்நாடு, இந்தியா. • தொலைபேசி : 91-44-26616161/62/63 • தொலைப்பகிவி 91-44-26615858
• மின் அஞ்சல்: dkhqcdquarters@gmail.com • இணையதளம் : www.dravidarkazhagam.org

நிறுவனத் தலைவர்
தந்தை பெரியார்

தலைவர்
கி.வீரமணி, எம்.ஏ.,பி.எல்.,

நாள் :
3-10-2016

அன்புடையீர்!

கனடா வாழ், தமிழ் எழுப் பெண் எழுத்தாளர் குறமகள் அண்மையில் மறைவுற்ற செய்தி அறிந்து ஆழ்ந்த வருத்தமுற்றோம். புலம் பெயர்ந்து வாழ்ந்து வந்த நிலையிலும், புலம் பெயர்ந்த தமிழ்ச் சமுதாயத்தில் நிலவி வரும் ஜாதிய வேறுபாட்டை தமது எழுத்துகளில் சாடியவர் அவர். தந்தை பெரியார்தம் பெண் விடுதலை மற்றும் சமூகப் புரட்சிக்கான கருத்துகளை, புலம் பெயர்ந்த பின்னர்தான் தெரிந்துகொள்ள நேர்ந்த நிலையிலும், பெண்ணிய அதிகாரத்துவ மயத்தை தமது எழுத்துகளில் பதிவு செய்த சிந்தனைச்சார் எழுத்தாளரின் மறைவு உலகம் முழுவதும் பரவிஇருக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கு பேரிழப்பாகும்.

எழுத்தாளர் குறமகள் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தார், உறவினர்களும் மற்றும் எழுத்து வட்ட நண்பர் குழாம் அனைவருக்கும் எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். எழுத்தாளர் குறமகளின் எழுத்துப் பங்களிப்பினை நினைவு கூர்ந்து ஆறுதல் பெறுகோம்.

அன்புடன்,

(கி. வீரமணி)
தலைவர், திராவிடர் கழகம்

பேராசிரியர் முனைவர்
மு.பி.பாலகப்பிரமணியன், எம்.ஏ., பி.எச்.டி
முன்னாள் முதல்வர், பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரம்
நிறுவனர், திராவிட இயக்கத் தமிழாய்வு மையம்
சிறப்பாசிரியர், தமிழாலயம், இலக்கிய இதழ்

Mobile : 0091-9444921661
Phone : 044-26161661
"THAMIZHALAYAM"
124/3, Bharathi Colony, Anna Nagar,
Chennai – 600 040. Tamilnadu

4.10.2016

இலக்கியச்சுடர் குறமகளுக்கு ஆழ்ந்த இரங்கல்

எழுத்துக் காய்கேசன் துறையில் பிறந்த "குறமகள்" என்னும் புனை பெயர் கொண்ட திருமதி.வள்ளிநாயகி இராமலிங்கம், அண்மையில் கனடா ரொரான்ரோவில் இயற்கை எய்திய செய்தி அறிந்து சிந்தை நொந்தோன்.

இலக்கிய ஆளுமையும் பெண்ணியவிடுதலைச் சிந்தனையும் கொண்டு சமூக விழிப்புணர்வுக்கு ஓயாது பாடுபட்ட அந்த உயர்ந்த உள்ளம், ஓய்வு கொண்டு விட்டது. திரு திலீப்குமார், "தாய்வீடு" இதழில் வெளியிட்டிருந்த குறமகள் அவர்களின் நேர்காணல், என் நெஞ்சைத் தொட்டது. "ஒழுக்க மதிப்பீடுகள் பெண்ணுக்கு மாத்திரம் இருக்க முடியாது" என்ற குறமகளின் கருத்து, அன்னாரை அடையாளங்காட்டுவதாகவே எனக்குப்பட்டது.

அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தார்க்கும் தாய்வீடு அன்பர்களுக்கும் ஈழத்து உறவுகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அன்புள்ள

4.10.2016

(மு.பி.பாலகப்பிரமணியன்)

மறைந்தும்...

77ம் பக்கத் தொடர்ச்சி...

சஞ்சிகையைப் பற்றியோ அதன் ஆசிரியரைப் பற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ் ஆய்வானது பெண்களின் ஆரம்ப நிலை பற்றி பல விடயங்களை மிகவும் துல்லியமாக வெளிப்படுத்தியதாக கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்கள் தன் கருத்தில் தெரிவித்துள்ளார்.

துணிச்சல் மிகுந்த போராட்ட குணம் கொண்ட புதுமைப் பெண்ணாக வாழ்ந்தவர் குறமகள் அவர்கள். ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு தன்னுயிரை ஈந்த மாவீராங்கனை ரோசாவின் தாயார் என்ற பெருமைக்குரியவர். பெண்விடுதலை, சாதியொழிப்பு, சுயமரியாதை போன்ற தந்தை பெரியாரின் சிந்தனைகளை தன்னகத்தே கொண்டவர். யாழ்ப்பாணத்தில் நிலவிய 'கந்தபுராணக் கலாசார' காலகட்டத்தில் பெண்ணியவாதத்தை முன்வைத்த சமூக சீர்திருத்தவாதி 'குறமகள்' என்றால், அதன் தொடர்ச்சியான வரலாறு 'கந்தக கலாசாரத்துக்கு' நகர்ந்து ஈழவிடுதலைப் போராட்டமாக முனைப்பு பெற்று மாவீராங்கனை 'ரோசா' போன்றவர்களால் இன்னொரு பரிணாமம் பெற்று உயர்ந்தது எனக் கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

தனது சீரிய எழுத்துகளின் ஊடாகவும் சிந்திக்க வைக்கும் பேச்சாற்றலாலும் புலத்தில் தான்வாழ்ந்த சமூகத்திற்குத்தொடர்ந்து அயராது பங்களிப்பு அளித்து வந்தவர். சமையலும் குடும்பமும் மட்டுமே பெண்களின் உலகமாக இருந்த காலத்தில் குடும்ப வன்முறைகளையும் சமூக அவலங்களையும் பெண்களின் சமூக விடுதலைக்கான கருத்துக்களையும் துணிச்சலுடன் தன் எழுத்துகளில் காவியவர். அன்றாட வாழ்வில் தான் சந்தித்த நிதர்சனங்களை அழகாகவும் அழுத்தமாகவும் எழுத்தில் சொன்னவர். புலம்பெயர்ந்து கனடா வந்தபின்பும் புலம்பெயர்மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடுகளைத் தன் எழுத்துகளாலும் செயற்பாடுகளாலும் பிரதிபலித்துக் கொண்டிருந்தவர். சமூகத்தில் பெண்களின் வளர்ச்சிற்கு அவர் புரிந்த அளப்பரிய சேவைக்காக அஃகேனம் விருதளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டவர்.

அகவை எண்பதைத் தாண்டிய பின்னரும் தனது இலக்கிய பணியின் மீது கொண்ட அகலாத விருப்பாலும் அதீத அர்ப்பணிப்பாலும் இயலாத நிலையிலும் பல இலக்கியக் கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் உயிர் வாயு சுவாச துணையுடன் (ஒக்சிசன் சிலிண்டருடன்) வந்து உடல் உபாதையையும் பொருட்படுத்தாது பிரசன்னமாகி இருப்பவர். 'கனடாவின் பெரியார்' என கி. வீரமணி அவர்களால் விளிக்கப்பட்ட அந்த வீரமும் விடுதலை உணர்வும் இனப் பற்றும் மிக்க துணிச்சல் மிகுந்த பெண் இன்று எம் மத்தியில் இல்லை.

"பயந்தாங்கொள்ளிகளாக வீட்டில் முடங்கிக் கல்வியறிவற்று, உலக அனுபவ மின்றி வாழ்ந்த பெண்கள் ஒரு நூற்றாண்டு காலத்துள் எப்படி மாறினார்கள், இவர்களின் விலங்கொடித்தவர்கள் யார்?, கல்வியறிவூட்டியவர்கள் யார்?, தன்னம்பிக்கையை வளர்த்தவர்கள் யார்? இவ் வினாக்களுக்கு விடைதேடும் முயற்சியே....' எனத் தனது நூலொன்றில் முன்னுரை எழுதி வைத்த குறமகள் அவர்களின் இலக்கியப் பயணத்திற்கு முடிவுரை எழுதிவிட்டது காலம். தமிழ் பேசும் நல்லுலகம் தலைசிறந்த துணிச்சல் மிக்க இலக்கிய ஆளுமையை இழந்து விட்டது. அன்னார் மறைந்தாலும், அவரின் இலக்கியச்சேவை தமிழ் உள்ளளவும் வாழ்ந்து
கொண்டேயிருக்கும்.

umai.p@thaiveedu.com

Foundation of Your Financial Freedom!

If you worry about your family's security...

WE CAN HELP YOU

Talk to us about Life Insurance
that fits in your lifestyle...

- Disability Insurance
- Critical Illness Insurance
- Travel Insurance
- Non-Medical Insurance
- Life Insurance
- Mortgage Insurance
- RESP - Education Saving Plan
- Dental & Drug Insurance
- RRSP's & Investments
- Final Expense Products (Through Funeral Homes)

Mega Financial Group

416 666 1120 • 416 293 5559
PH28 4168 Finch Ave. E. Scarborough, ON

Industrial Alliance · Manulife Financial · UL Wurzel · Assumption Life · Equitable Life of Canada · Canada Life · La Capitale · Empire Life · RBC Insurance · Sun Life Financial · Desjardins

தாய்வீடு பத்திரிகையின் அரங்கியல் விழா - 2016

தாய்வீடு பத்திரிகையின் அரங்கியல் விழா ஒக்ரோபர் மாதம் 2ம் திகதி மார்க்கம் தியேட்டர் அரங்கிலே, மதியம் 1:30 மணிக்கும், மாலை 6:30 மணிக்கும் இரு காட்சிக-ளாக நடந்தது. ஒவ்வொரு காட்சியிலும் நாட்டிய நாடகம், நாடகம், கூத்து என முன்று நிகழ்வுகள் நடந்தன. ஆடலகம் ஆசிரியையும் நிறுவனருமான அனோஜினி குமரதாசனின் நெறியாள்கையில் 'மெய்யோடு மெய்யாகி' என்ற நாட்டிய நாடகமும், பொன்னையா விவேகானந்தனின் நெறியாள்கையில் 'அகவெளிப் பொய்கள்' என்ற நாடகமும், செல்வம் அருளானந்தத்தின் நெறியாள்கையில் 'இன்று போய் நாளை வா' என்ற கூத்தும் இடம்பெற்றன. நிகழ்விலிருந்து சில நிழற்படங்கள்.

படங்கள்: சர்வேசன்



நம்பிக்கைக்குரியதோர் எழுச்சி தோன்றியிருக்கிறது

- யோ. யோண்சன் ராஜ்குமார்

நேர்காணல்: சேகர் தம்பிராஜாவுடன்
துஷி ஞானப்பிரகாசம்

படங்கள்: கருணா

1990ம் ஆண்டு சிலுவை உலா என்ற திருப்பாடுகளின் காட்சியில் ஒரு பாத்திரத்தில் நடிப்பதற்காக அவரது உறவினரும் புகழ் பூத்த ஈழத்து நாடகருமான ஃபிரான்சிஸ் ஜெனம் அவர்களால் திருமறைக் கலாமன்றத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டவர் யோ. யோண்சன் ராஜ்குமார். அப்போது யோண்சன் ராஜ்குமாருக்கு வயது 22. திருமறைக் கலாமன்றத்திற்கு வயது 25. 26 வருடங்களின்பின், திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குனராகவும் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத் தில் ஆசிரியராகவும் பணியாற்றும் அவர், ஈழத்தமிழரின் கலைச்சொத்தான கூத்தை புதுப்பிப்பதிலும் அடுத்த தலை முறைக்குக் கடத்துவதிலும் அளப்பரிய பணிகளை ஆற்றி வருகிறார். அவர் எழுதிய பல நவீன நாடகங்களும் கூத்துருவ நாடகங்களும் கனடா உட்பட்ட உலக நாடுகளிலே மேடையேற்றப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தை தளமாகக்கொண்டு இயங்கிவரும் அவர் இலங்கையின் பல பாகங்களுக்கும், ஐரோப்பாவிற்கும், அமெரிக்காவிற்கும் கலைப் பயணங்களை மேற்கொண்டிருக்கிறார். அண்மையில் கனடாவிற்கு தனது முதலாவது கலைப் பயணத்தை மேற்கொண்டிருந்த அவருடன் தாய்வீடு உரையாடியது

▸ ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆடப்பட்டுவரும் வெவ்வேறு கூத் துக்களின் கூறுகளை உள்வாங்கி ஒரு தேசிய கூத்து வடிவத்தை உருவாக்கும் முயற்சிகளை திரு மறைக்கலாமன்றம் சார்ந்து நீங் கள் முனைப்புடன் முன்னெடுத்து வருகிறீர்கள். அண்மையில் கனடா திருமறைக் கலாமன்றத்திற்காக நீங்கள் மேடையேற்றிய 'அற்றைத் திங்கள்' கூத்தும், தாய் வீடு அரங்கியல் விழாவில் நீங்கள் உருவாக்கி செல்வம் அருளானந் தத்தின் நெறியாள்கையில் மேடை யேற்றப்பட்ட 'இன்று போய் நாளை வா' கூத்தும் இதற்கு சிறந்த உதாரணங்கள் என்பதோடு அவை மக்களின் பெருத்த வரவேற்பை யும் பெற்றிருந்தன. அந்த வகை யில், உங்களின் இந்த தேசிய கலைவடிவத்தைத்தேடும் முயற்சி வெற்றி பெற்று விட்டதாக நீங்கள் கருதுகிறீர்களா?

நிச்சயமாக இல்லை. அதை நோக்கிய ஒரு தேடல்தான் இடம்பெற்றுக் கொண்டி ருக்கிறது. ஏனென்றால் அதற்கு பல எதிர்ப் புகளும் இருக்கின்றன. இந்த முயற்சியால் வெவ்வேறு கூத்து வடிவங்களின் தனித் துவம் அழிக்கப்பட்டுவிடும் என்ற பலமான எதிர்ப்பும் இருப்பதால், அதை இப்போ தும் ஒரு பரீட்சார்த்த முயற்சியாகத்தான் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் இதற் கான முயற்சிகள் எழுபதுகளிலேயே தொடங் கப்பட்டு விட்டது. ஏனென்றால் தாசீசி யஸ் நடிகர் ஒன்றியத்திற்காக கொழும்பிலே மேடையேற்றவென கந்தன் கருணையை தயாரித்தார். கந்தன் கருணை ஏற்கனவே நெல்லியடி அம்பலத்தாடிகள் குழுவின ரால் யாழ்ப்பாணத்திலே மேடையேற்றப் பட்டபோது தனித்து சிந்துநடைக் கூத்து வடிவத்திலேயே மேடையேற்றப்பட்டது. ஆனால் தாசீசியஸ் தயாரித்த போது அதிலே அவர் எல்லாவகையான கூத்து மரபுகளையும் கொணர்ந்து இணைத்தார். வடமோடி, காத்தவராயன் கூத்து, யாழ்ப் பாணத் தென்மோடி, மன்னார் பாங்கு, கண்டிய நடனம் போன்றவற்றை இணைத்த ஒரு வடிவமாகத்தான் கந்தன் கருணை நடிகர் ஒன்றியத்தால் எழுபதுகளிலே மேடை யேற்றப்பட்டது. ஒருவகையிலே இதுதான் தொடக்கம். 2003ம் ஆண்டு தாசீசியஸ் இலங்கைக்கு வந்திருந்தபோது தாங்கள் ஆரம்பித்த வேலையை தொடர்ந்திருந் தால் இப்போது எமக்கு ஒரு தேசிய வடி வம் இருந்திருக்கலாம் என்ற கருத்தை அவர் மிகவும் வலுவாகச் சொல்லியிருந் தார். எங்களுக்கு அதுவும் ஒரு தூண்டுதல். ஒரு வகையில் எனக்கு இந்த எண்ணம் தோன்றுவதற்குக் காரணம். நான் நவீன நாடகங்களுடன்தான் பெரும்பாலும் ஈடு பட்டிருந்தேன். கூத்து எனது பரம்பரையில் இருந்தது. எனது தந்தையார் ஒரு அண் ணாவி. எனது அம்மம்மாவிற்கும் கூத்தில் மிகுந்த ஈடுபாடும் தேர்ச்சியும் இருந்தது. அதனால் எனக்கு தென்மோடிக்கூத்து மர போடு பரீட்சயம் இருந்தது. திருமறைக் கலாமன்றத்திற்குள் வந்த பிறகுதான் பட் டறைகள் ஊடாகவும், நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் இருந்த மன்றக் கிளைகளி னூடாகவும் வெவ்வேறு கூத்து மரபுகளை அறியக்கூடியதாக இருந்தது. இந்தக்கூத் துகளின் வடிவம் பல வழிகளிலே எல் லைப்படுத்தப்பட்டதாகவும் இருந்தது. அதை வளர்த்துக்கொண்டு போகவேண் டும் என்பதைவிட அது ஒரு மரபு, அதை உடைத்துவிடாது பேணவேண்டும் என்ற ஆவல்தான் பரவலாக இருக்கிறது. ஆகவே அதை மீறக்கூடாது என்ற உணர்வு என் னுள் இருந்தது. இருந்தாலும், இவற்றில் இருந்து இன்னொன்றை உருவாக்கவேண்

தொடர்தல் 83ம் பக்கம்

82ம் பக்கத் தொடர்ச்சி...

டும் என்ற எண்ணமும் தோன்றியது. கத களி உருவான முறைமை, பரதநாட்டியம் உருவான முறைமை போன்றவற்றை வாசிக்கும்போது இப்படியான மரபுகளில் இருந்து தோற்றம் பெற்றுத்தான் புதிய வடிவங்கள் உருவாகியிருக்கிறன என்ற எண்ணம் எழுந்தது. அத்தோடு பேராசிரியர் மௌனகுரு அவர்கள் 2003ல் நாங்கள் நடத்திய ஒரு நாட்டுக்கூத்து விழாவிற்கு வந்து கருத்துத் தெரிவிக்கும் போதும் இத்தகையதொரு கருத்தை முன்வைத்தார். இவையெல்லாம் சேர்ந்துதான் என்னை இந்த முயற்சிக்குத் தூண்டியது. அதன் பயனாய் முதலாவதாக 2004இலே கொல் லீனும் கொற்றம் தயாரிக்கப்பட்டு அது மேடையேற்றப்பட்ட இடங்களில் எல்லாம் சிறுவர்கள் இளைஞர்கள் உட்பட அனை வரின் வரவேற்பையும் பெற்றது. அதேநே ரம் மரபுவழியான அண்ணாவிமார் சிலபேர் அதற்கு எதிர்ப்பும் தெரிவித்தார்கள். கொல் லீனும் கொற்றம் நூலுருவில் அந்த விமர் சனங்களையும் இணைத்திருக்கிறோம். இந்த முயற்சிகளோடு திருமறைக் கலா மன்றம் மரபுவழியான கூத்தைப் பேணு வதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்ப தையும் இந்த வேளையிலே சுட்டிக்காட்ட வேண்டும். பேக்மன் ஜெயராஜா, பாலதாஸ் போன்ற எமது அண்ணாவிமார் இந்த முயற்சிகளிலே தீவிரமாக இருக்கிறார்கள். அகவே இந்தமரபு சார்ந்த விடயங்களுக் கும் நாங்கள் உதவுகிறோம். இன்னொரு வகையிலே இந்த வடிவங்களிலே இருந்து ஏன் நாங்கள் எங்களுக்கான ஒரு கூத்து வடிவத்தை பரீட்சார்த்தமாக படைப்பாக் கத்திறனுடன் உருவாக்கக்கூடாது என்ற தேடலைத்தான் நாங்கள் மேற்கொண்டி ருக்கிறோம். கணிசமான அளவுக்கு ஆரோக் கியமான கருத்துகள்தான் இந்த முயற்சி பற்றி எமக்குக் கிடைக்கிறது. ஆனால் மரபுசார்ந்து பேசுகின்றவர்களின் விமர்ச னங்களும் ஒரு புறம் இருக்கத்தான் செய் கிறது.

▸ கூத்துக்கள் இப்போதும் சமகால சமூகத்தை பிரதிபலிக்காது சம கால சிக்கல்களை பேசாது புராண இதிகாசங்களுக்குள் சுழன்று கொண்டிருப்பதயே காணக்கூடி யதாக உள்ளது. கூத்து வடிவிலே சமகால மக்களின் கதைகளைக் கூறுவதிலே உள்ள சவால்கள் என்ன?

எமது பரீட்சார்த்த முயற்சியின் நீட்சியா கத்தான் நாங்கள் சமகால பிரச்சினைகளை பேசக்கூடிய ஒரு கூத்து வடிவத்தைக் கண்டுபிடிக்கவேண்டும். அடிப்படையிலேயே கூத்தினுடைய ஒரு பிரச்சினை அது புராண இதிகாசக் கதைகளை பேசும்போது அதற் குரிய ஆகாரியாவிநயம் எனப்படுகின்ற வேட உடை ஒப்பனைகள் எல்லாம் அமை யும்போதுதான் அந்த வடிவத்தினுடைய அழகியல் பெறுமானம் நிறைவுபெறுகிறது. அப்படிப் பார்க்கும்பொழுது நாங்கள் சம கால கருப்பொருளை அந்த வடிவத்தில் சொல்வதிலே கொஞ்சம் சவால் இருக்கி றது. இதைவிட எங்களுக்கு நிலவும் காலத் தாலும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அதாவது சமகால பிரச்சினைகளை நேர டியாகப் பேசுவதற்கு இலங்கையிலே எமக்குப் பல சிக்கல்கள் வந்தன. உதார ணமாக அற்றைத் திங்கள் கூத்தைக்கூட யுத்தம் முடிந்தவுடன் நாங்கள் செய்தோம். யுத்தத்தின் பின் எல்லோர் மனங்களிலும் இருந்த வெறுமை, எதையும் பேசமுடியாது என்றிருந்த சூழலில் எங்களுக்கு பாரிக் கூடாக அதைப் பேசுவதற்கான முனைப் பைத் தந்தது. நாங்கள் புராணம் என்று அதை எடுத்துக்கொண்டாலும், அதற்குள் ளால் எங்கள் வாழ்க்கையைத்தான் நாங் கள் பேசினோம். அப்படி ஐதீகங்கள் அல் லது புராணங்கள் ஊடாக சமகாலப் பிரச் சனைகளை பேசுகின்ற விடயத்தை நாங் கள் நீண்டகாலமாகச் செய்துவருகிறோம். அந்த வகையிலே இந்த வடிவத்தை சிறப் பாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். அதிலே பிரச்சினையில்லை. ஆனால் நேரடியாகப் பயன்படுத்துவதில்தான் சிக்கல் இருக்கி றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் கரும்புலிகள் தினத்தை ஒட்டி சமகாலக் கதைகளைக் கொண்ட தென் மோடிக் கூத்துப் போட்டிகள் வைத்தார்கள். உதாரணமாக அந்தப்போட்டிக்காக மில் லருடையே வரலாறு தென்மோடிக்கூத்தா கப் போடப்பட்டது. அதை நான் பார்த் திருக்கிறேன். ஆனால் சமகாலக் கதை- யொன்றை அதற்குரிய வேட உடை ஒப் பனைகளுடன் செய்யும்போது அது ஏதோ ஒருவகையில் முழுமையான உணர்வைத் தராததை பலரும் குறிப்பிட்டார்கள். ஆகவே அதிலே ஒரு வெற்றிடம் இருக்கிறது. அதை எப்படி நிறைவு செய்யலாம் என்பது ஆராய்ச்சிக்குரிய விடயம். ஆனால் இந் தத் துறையில் நாங்கள் தொடர்ந்து பணி யாற்றிக் கொண்டிருந்தால் நிச்சயமாக நாங்கள் அதைக் கண்டுபிடிக்கலாம். செய் யலாம். செய்யமுடியாத விடயமல்ல என்று தான் நினைக்கிறேன். அந்த முயற்சி தொடரவேண்டும். இது ஆரம்பம் தான். இதற்கான வேலை நிறையவே இருக்கிறது. நான் மட்டுமல்ல. இன்னும் பல ஆளுமை உள்ளவர்களின் கை இதிலே கூடும்போது

இந்த விடயத்தை நாங்கள் கண்டுகொள் ளக்கூடியதாக இருக்கும்.

▸ கூத்தின் மரபுகளைப் பேணுவ தைப்பற்றி பேசினீர்கள். இந்த மரபுகளிலே கூத்தை ஆடுவதற் கான களரி முக்கியமானதொன் றாக பார்க்கப்படுகிறது. ஆனால் சமகால கூத்துக்களை - குறிப் பாக புலம்பெயர்ந்த நாடுகளிலே - படச்சட்ட மேடையிலேயே அரங் கேற்ற வேண்டியதொரு நிர்ப்பந் தம் இருக்கிறது. இதுபோன்ற நவீனங்களை கூத்து மரபுக்குள்ளே உள்வாங்குவது சவாலான விட யம் என கருதுகிறீர்களா?

நவீனத்துவம் சவால் மட்டுமல்ல. சிலவே ளைகளில் அது உதவுவதாகக்கூட இருக் கும் என நான் கருதுகிறேன். களரிபற்றிய விடயம் நாங்கள் முரண்படுகின்ற ஒரு விடயம்தான். வட்டக்களரியைவிட்டு கூத்தை வெளியே கொண்டுவரக்கூடாது. பேராசிரி யர் வித்தியானந்தன்கூட கூத்தை படச் சட்ட மேடைக்குக் கொண்டுவந்து அதன் தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்தி விட் டார் என்ற பாரிய விமர்சனங்கள் இருக்கி றது. ஆனால் அது காலத்தின் தேவை. புதிய களரிக்கு கூத்தைக் கொண்டுவந்த போது இயல்பாகவே சில மாற்றங்கள் ஏற்பட்டதென்பது உண்மைதான். ஆனால், இது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரைக் கும் ஏற்கனவே நடந்துவிட்ட ஒரு விடயம். குறிப்பாக யாழ்ப்பாணத்திலே தென்மோ டிக் கூத்துகள் கிறீஸ்தவர்களால் ஆடப் பட்ட காலத்திலேயே படச்சட்ட மேடைக்கு அது வந்துவிட்டது. போர்த்துக்கேயருடைய காலகட்டத்தில் அவர்கள் சமய நாடகங் களைப் போட்ட போது மூன்று பக்கம் திறந்த, ஒருபக்கம் அடைக்கப்பட்ட மேடை களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இது துருத்து அரங்கு என்று அழைக்கப்படும். இவை மத்திய காலத்திலே ஐரோப்பா வில் பயன்படுத்தப்பட்டதன்போன்ற வடி விலான திறந்த மேடைகள். ஆகவே அவர் கள் கத்தோலிக்க சமய கூத்துக்களை எழுதி இங்கே மேடையேற்றிய காலத்தி- லேயே யாழ்ப்பாணத்திலே சம்மனசு வானத் தில் இருந்து வருவது போன்ற தோற் றத்தை ஏற்படுத்த பனைகளிலே கப்பிக் கூடாக கம்பிகள் கயிறுகள் கொண்டு இறக்குவது போன்ற படச்சட்டமேடைக்கு உகந்ததான மாற்றங்கள் வந்துவிட்டன. இது பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முன் னமே ஏற்பட்ட மாற்றங்கள். பின்னர் இசை நாடகங்கள் வந்தபோதுதான் பாசிய மர புக்கூடாக படச்சட்டமேடை முழுமையாக இங்கே வந்து சேர்ந்தது. ஆகவே யாழ்ப் பாணத்திலே தென்மோடிக் கூத்தென்று ஆடப்படுகின்ற கத்தோலிக்க மரபிலே வந்த கூத்துக்கள் எல்லாம் ஏற்கனவே இந்த படச்சட்டமேடையை பின்பற்றிய வடி வங்களாகத்தான் இருக்கின்றன. மட்டக் களப்பு போன்ற இடங்களிலே மட்டும் தான் இன்றும் அவர்கள் பூர்வீகமான வட்டக் களரியிலே ஆடிவருகிறார்கள். அது பெரிய விடயம். யாழ்ப்பாணத்திலே வட்டுக்கோட் டைப் பிரதேசத்தில் கணிசமான அளவு வட்டக்களரியை பேணுகிறார்கள். தேவை ஏற்படின் அவர்கள் படச்சட்டமேடையிலே யும் ஆடுவார்கள். ஆனால் தமது கிரா மங்களில் வட்டக்களரியிலேயே ஆடுகி- றார்கள்.

கூத்துக்குரிய பூர்வீகமான களரி வட்டக் களரிதான் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. ஆனால் இன்று நாங் கள் நவீன தொழில்நுட்பங்களை இலகு வாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏது வான அரங்காக படச்சட்டமேடைதான் இருக் கிறது. உதாரணமாக ஒளியமைப்பாக இருக் கலாம், அல்லது காட்சிப் புலங்களுக்கான படிமங்களைத் தோற்றுவிப்பதாக இருக் கலாம். இவற்றுக்கெல்லாம் படச்சட்டமேடை உதவுவதாக இருக்கிறது. எனவே நவீன தொழில்நுட்பங்கள் சவாலாக இருப்பது நாங்கள் களரியை பேண முற்படும்போது தான். இப்போது மட்டக்களப்பிலே மர பைப்பேணும் ஒரு கடும் முயற்சியில் இப் போதும் வட்டக்களரியிலேயே கூத்தை ஆடுகிறார்கள். ஆனால் அங்கேகூட, முன் னர் பந்தங்கள் பயன்படுத்தியதற்குப்பதி லாக ஒளிவிளக்குகளைப் பயன்படுத்து வது போன்ற மாற்றங்கள் வந்து விட்டது. ஆனால் நவீன தொழில் நுட்பங்களின் உச்சப்பயன்பாட்டை படச்சட்டமேடையி- லேதான் பெறலாம் என்றே நான் கருதுகி- றேன்.

அதேநேரம் கூத்துக்குள் நவீனத்துவத்தைப் புகுத்தும் பல பரீட்சார்த்த முயற்சிகள் நடந்தவண்ணம் இருக்கின்றன. ஆனால் அவற்றில் பல வெற்றியளிக்கவில்லை. உதாரணமாக எமது இயக்குனர் மரிய சவரி அடிகள் தொண்ணூறுகளிலே செந் தூது என்று ஒரு கூத்தை மேடையேற்றி னார். அதிலே முன்கதை முழுவதும் ஒளி யெறிகருவி மூலம் ஒரு படமாக காட்டப் பட்டது. திரையிலே அந்தக்கதை முடிய கூத்து ஆரம்பமாகும். ஆனால் அது ஒட் டவில்லை என எங்கள் எல்லோருக்கும் தெரிந்தது. அவரும் அதை விளங்கிக் கொண்டார். அப்படியான சில முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நான் அண்மைக்காலமாக கூத்தை ஆடும்போ தான கால் அடவுகளை மேடையிலே திரையில் விழுத்திக்காட்டலாம் என சிந் தித்து வருகிறேன். ஆனால் இன்னும் அதை முயற்சிக்கவில்லை. ஆனால் இப்படியான நுட்பங்களை நிச்சயம் பயன்படுத்த இட மிருக்கிறது. இந்த மாற்றங்கள் தேவையின் கட்டாயத்தாலும் புகுத்தப்படுகிறது. உதா ரணமாக நாங்கள் கனடாவிலே கூத்தை மேடையேற்றியபோது ஆர்மோனியம் இருக் கவில்லை. யாழ்ப்பாணத்திலே ஆர்மோ னியம் இல்லாமல் ஒருபோதும் நாங்கள் கூத்தை மேடையேற்றியதில்லை. ஆனால் கனடாவிலே ஆர்மோனியம் வாசிப்பவர் கிடைப்பதற்கான சிக்கலிலே ஒருவர் நான் ஓர்கணிலே வாசிக்கிறேன் என முன் வந் தார். ஓர்கணிலே ஆர்மோனியத்திற்குரிய தொனியை ஏற்படுத்தி வாசிக்கச்செய்தோம். அது முதலில் எமக்கு கடினமாக இருந் தாலும் மேடையேற்றம் சிறப்பாக அமைந் தது. அதேபோல மன்னாரிலே அண்மை யிலே ஒரு இரவு வாசாப்பு நடைபெற்றது. அதைப் பார்க்கப்போயிருந்தேன். அங்கே தாளத்திற்கு டொல்கிதான் பயன்படுத்து வார்கள். நான் பார்த்துக்கொண்டிருக்கும் போது டொல்கி ஒலி சரியாகக் கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இடைவேளை- யின்போது நான் மேடைக்குப் பின்புறம் சென்றபோது அவர்கள் டொல்கி பயன்ப டுத்தவில்லை, ஒக்டோபாட்தான் பயன்ப டுத்தினார்கள் என கண்டுகொண்டேன். இவ்வாறாக இசைக் கருவிகள் முதல் கொண்டு நவீன தொழில்நுட்பங்கள் இன்று பரவலாக பயன்படுத்தப்படுகின்றன. இதை நாம் தொடர்ந்து செய்யும்போது இன்னும் நேர்த்தி கூடும். இன்னுமொரு விடயம் ஒலிவாங்கி. முன்பொருகாலத்திலே நீண்ட தொலைவுக்கு கூத்தர்களின் குரல் ஒலி வாங்கி இல்லாமலே கேட்கும் என்று சொல்லுவார்கள். ஆனால் இன்றைக்கு அப்படிப் பாடுவதற்கான தலைமுறையே இல்லை. ஏனென்றால் குரல் பாவிக்கப்ப டாமல் விட்டுவிட்டதாலோ என்னவோ குரல் வற்றிவிட்டது. முந்திய பரம்பரைபோல உச்சத்தொனியிலே பாடக்கூடியவர்கள் இன்று மிகக் குறைவு. எனவே இன்று நாங்கள் பயன்படுத்துகின்ற ஒலிவாங்கி உத்திகள் மிகவும் உதவியாக இருக்கி றது. ஆடிக்களைக்கும் ஒரு கூத்தர் உச் சத்தொனியில் பாடவும் வேண்டியிருந்த நிலையை மாற்றி ஒலிவாங்கி இலகுவாக் கியிருக்கிறது. இதுபோன்ற பல விடயங் களில் தொழில்நுட்பம் உதவியாக இருக் கிறது என்றுதான் நான் நினைக்கிறேன்.

▸ பாசிய நாடக மரபின் வரவு தமிழ் நாடகப்பரப்பில் ஏற்படுத்திய தாக் கத்தைப் பற்றிக் கூறினீர்கள். இந்த இசை நாடக மரபு தமிழ்ப் பரப்பில் அருகிவருகின்றதா?

ஆம் ஒருவகையில் அப்படித்தான் இருக் கிறது. ஏனென்றால் அது தொழில்முறைக் கலையாக இருந்தது. வைரமுத்து போன் றவர்கள் தொழில்முறைக் கலையாக நல்ல தொரு குழுமுயற்சியாக இதை முன்னெ டுத்துக் கொண்டு வந்தார்கள். ஆனால் யுத்தத்திற்குப் பிறகு அந்த நிலை இங்கே இல்லை. வைரமுத்து அவர்களின் வீழ்ச்சி, அத்தோடு கலைஞர்கள் சிதறுப்பட்டுப் போனதுவும் ஒரு காரணமாக இருக்கிறது.

தொடர்தல் 84ம் பக்கம்

83ம் பக்கத் தொடர்ச்சி...

இன்றைக்கு ஓரளவுக்கு அது வாழ்கிறது என்று சொன்னால், தமிழ் தினப் போட்டிகளிலே இசை நாடகத்தை ஒரு போட்டியாக சேர்த்திருக்கிறார்கள். அதனால் பாடசாலைப் போட்டிகளிலே அரைமணி நேர இசை நாடகங்கள் போட்டிக்கு மேடையேற்றப்படுகிறது. அது ஒரு ஆரோக்கிய மான விடயம். மற்றது, வைரமுத்துவிற்குப் பிறகு எமது திருமறைக் கலாமன்றம் மற்றும் நாட்டாரியல் கழகம் போன்ற அமைப்புகள் ஓரளவுக்கு ஒரு சில இசை நாடகங்களை அடிக்கடி செய்கிறார்கள். ஆனால் நாங்கள் பார்த்த அந்த பழைய நாடகங்களின் நேர்த்தியையும் போக்கையும் இன்றைக்கு காண இயலாமல்தான் இருக்கிறது. அதற்குக் காரணம் எங்கள் சூழலில் ஏற்பட்ட மாற்றமும், தொழில்முறை சார்ந்து அதைக் கொண்டுசெல்ல முடியாதிருக்கின்ற தன்மையும்தான் என நான் நினைக்கிறேன். ஆனால் பாடசாலை மட்டத்தில் அது ஒரு போட்டியாக இருப்பது நல்லது. ஏதோவொரு வகையில் இந்த மரபு நீட்சி பெறுவதறக்கு அது உதவுகிறது.

▸ யாழ்ப்பாணத்திலே அண்மைக் காலமாக காத்திரமானதொரு நாடகச்சூழல் உருவாகி வருவது போல் தெரிகிறது. அண்மையிலே பராக்கிரம நிரியல்ல வின் மக்கள் களரி அமைப்பு நடத்திய நாடக விழா, மற்றும் திரைப்பட விழாகூட இந்தச்சூழலுக்கு வலுச் சேர்ப்பதாக தோன்றுகிறது. உங்கள் பார்வையிலே அந்தச்சூழல் எப்படி இருக்கிறது?

அண்மைக்காலமாக இங்கே நாடகச் சூழல் பற்றிச் சொல்லப்பட்டதொரு விமர்சனம் என்னவென்றால், நாடகமும் அரங்கியலும் பாடமாக இருக்கிறது. ஆறாம் வகுப்பு முதல் பல்கலைகழகம் வரை நாடகமும் அரங்கியலும் கற்கலாம். ஆகவே நாடகமும் அரங்கியலும் பாடம் இருக்கிறது ஆனால் நாடகம் இல்லை என்ற கடுமையான விமர்சனம் இருந்தது. ஆனால் இப்போது ஒரு மறுமலர்ச்சி இருக்கிறது. ஏனென்றால் சின்னச்சின்ன குழுக்கள் உருவாகியிருக்கின்றன. நீண்ட காலமாக திருமறைக் கலாமன்றம் மற்றது நாடக அரங்கக் கல்லூரி அல்லது பல்கலைக் கழகம் போன்றனதான் நாடகங்களைப் போடுகின்ற அமைப்பாக இருந்தன. ஆனால் இன்றைக்கு யாழ்ப்பாணத்திற்குள் மட்டுமே சமூக மாற்றக் குழு, புத்தாக்க அரங்கக் குழு, அரங்காலயா என்றெல்லாம் சின்னச்சின்ன குழுக்கள் உருவாகிருக்கின்றன. அது சரியோ பிழையோ, ஒரு அமைப்பாக உருவாகி அவர்கள் செயற்படமுற்படும்போது அங்கே காத்திரமான அரங்கச்செயற்பாடுகள் முனைப்புப்பெறுவதற்கான களமாக அது மாறுகிறது. மற்றது, மக்கள் களரியின் நாடகங்களும் இங்கே நல்லதொரு எழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் தொழில்முறைக் கலைஞர்கள். அவர் தமிழ் சிங்களக்கலைஞர்களை இணைத்து பரீட்சார்த்தமாக அதைச் செய்துகொண்டு வருகிறார். அத்தோடு அவர்கள் நிவ் அரீனா என்று சொல்லப்படுகின்ற எங்கள் வட்டக்களரிக்கு நிகரான ஒரு களரியை அவர்கள் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள். சுற்றிவரப் பார்வையாளர்கள் இருக்கத்தக்கதாக ஸ்ரேடியம் போல நான்கு பக்கமும் உயர்ந்திருக்கும் ஒரு சதுர அமைப்பிலான வெளியில் நாடகம் நடக்கும். இதையெல்லாம் மூடிய ஒரு கூடார அரங்காக அந்த அரங்கைப் பாவிக்கிறார்கள். தமிழிலே அதை நகரும் அரங்கு என்று அழைக்கிறார்கள். ஐநூறு அறுநூறு பேர் அமர்ந்து நாடகம் பார்க்கக்கூடியதான ஒரு சூழல். இது பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிதான். ஆனால் யாழ்ப்பாணத்திலே பத்து நாட்கள் அவர்கள் நாடகம் போட்டபோது நிறைந்த சனம். சில நாட்களில் உள்ளே இடமின்றி ஆட்கள் வெளியே நின்றதையும் காணக்கூடியதாக இருந்தது. பார்வையாளர்களைத்தான் நாங்

கள் ஆச்சரியத்துடன் பார்க்கிறோம். ஏனென்றால் முன்னர் நாடகங்களுக்கு வருகின்ற பார்வையாளர்களின் தொகை வீழ்ச்சியைக் கண்டிருந்தது. ஆனால் அந்த நிலமை மாறிக்கொண்டு வருவதுபோல உணரக்கூடியதாக இருக்கிறது. அதேபோல தேவானந் அவர்களின் செயற்திறன் அரங்கு நல்லூர் திருவிழாவை ஒட்டிய தாக நாடகவிழாவொன்றை செய்து வருகிறார்கள். அதற்கும் கணிசமான பார்வையாளர்களை பார்க்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே அண்மைக்காலத்திலே நம்பிக்கைக்குரியதொரு எழுச்சி யாழ்ப்பாணத்திலே தோன்றியிருக்கிறது.

▸ ஈழத்தின் மற்றய பகுதிகளிலும் இத்தகைய எழுச்சியை காணக் கூடியதாக இருக்கிறதா?

அது பற்றி முழுமையாகக் கருத்துக்கூறும் அளவுக்கு என்னிடம் தகவல் இல்லை. ஆனால் மட்டக்களப்பிலே கூத்திலே ஒரு பாரிய எழுச்சி இருப்பதை சொல்ல முடியும். கிழக்குப் பல்கலைக் கழகத்தின் விபுலானந்தர் நுண்கலைப் பீடத்தினர் - முக்கியமாக கலாநிதி ஜெயசங்கர் அவர்கள் - கிராமங்களிலே கூத்து மீளவும் உயிர்ப்புப் பெறவேண்டும் என்பதற்காக தீவிரமாக வேலை செய்கிறார்கள். அதனால் கடந்த சில மாதங்களிலேயே அங்கே பலகூத்துகள் பலகிராமங்களிலும் கோயில்களிலும் மேடையேற்றியதை நாங்கள் அறியக்கூடியதாக இருக்கிறது. ஆகவே நவீன நாடகங்களைவிட கூத்து மட்டக்களப்பிலே நல்லதொரு எழுச்சியை அடைந்து வருகிறது என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது. இந்த வருடம் நாங்கள் திருமறைக் கலாமன்றத்தால் இரண்டு நாட்கள் ஒரு நாட்டுக்கூத்து விழாவை நடத்தினோம். மரபுவழியான வட்டக்களரியை அமைத்தே அதை நடத்தினோம். யாழ்ப்பாணத்திலே நீண்டகாலமாக இல்லாமல் போய்விட்ட தொரு களரி முறை அது. அதற்கு மட்டக்களப்பிலே இருந்து அலங்காரரூபன் கூத்தை எடுப்பித்திருந்தோம். வன்னியில் இருந்து கோவலன் கூத்து என பல கூத்து மரபுகளையும் வட்டக்களரியிலேயே மேடையேற்றினோம். அது இங்கே வித்தியாசமானதொரு விடயமாக பார்க்கப்பட்டது. ஆனால் மட்டக்களப்பைப் பொறுத்த வரையிலே, யுத்தத்தால் அது நெடுங்காலமாக அடைக்கப்பட்டிருந்த நிலமைமாறி அண்மைக்காலமாக நிறையக் கூத்துக்கள் அங்கே தயாரிக்கப்படுகின்றதொரு எழுச்சியான நிலமை தோன்றியிருக்கிறது.

இதைவிட கிழக்குப் பல்கலைக் கழகத்தின் விபுலானந்தர் நுண்கலைப் பீடம் யாழ்ப்பாணத்தை விடவும் நவீன நாடகத்திற்கானதொரு பாரிய களத்தை உருவாக்கியிருக்கிறது. ஏனென்றால் அவர்களின் நாடகமும் அரங்கியலும் துறையில் பயில்கின்ற மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாடகத்தைத் தயாரிக்க வேண்டும் என்பதை அவர்கள் பாடவிதானத்திலே வைத்திருக்கிறார்கள். இந்த வருடம் கிட்டத்தட்ட 48 நாடகங்கள் அந்த மாணவர்களால் மேடையேற்றப்பட்டிருக்கிறது. அதனாலே பல்கலைக் கழகத்திலே நாடகம் பாடமாக இருப்பதால் அதற்கான பயில்வு தொடர்ச்சியாக அங்கே இருக்கிறது. ஆனால் அங்கே சமூகத்திற்குள்ளே கூத்தைத்தான் பெரும்பாலும் பார்க்கமுடியும் என்றே நினைக்கிறேன்.

வன்னிப்பிரதேசத்திலும் காத்தவராயன் கூத்து தொடர்பான பெரியதொரு போட்டி வைத்திருந்தார்கள். ஆகவே கூத்துத் தொடர்பான விழிப்புணர்ச்சி பொதுவாக எங்கும் இருக்கிறது. நவீன நாடகங்கள் சார்ந்த கவனிப்பு கொஞ்சம் குறைவு என்றாலும் அது யாழ்ப்பாணத்திலே அண்மைக்காலமாக எழுச்சி பெற்றிருப்பதாக நான் நினைக்கிறேன்.

▸ கடந்த ஆண்டு திருமறைக்கலாமன்றத்தின் பொன்விழா ஆண்டு. இந்த 51 வருடங்களில் திருமறைக்கலாமன்றத்தின் சாதனைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

திருமறைக் கலாமன்றத்தின் சாதனைகள் எவை என நோக்கும்போது அதன் வரலாற்றைக் கூறவேண்டியுள்ளது. அறுபதுகளிலே எமது இயக்குனர் மரிய சவரி அடிகளாரால் திருப்பாடுகளின் காட்சியை

தொடர்தல் 85ம் பக்கம்

84ம் பக்கத் தொடர்ச்சி...

மேடையேற்றுவதற்காகத்தான் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. அவர் திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்ற நினைத்ததற்குக் காரணம்கூட அவர் பங்குக்குருவாக இருந்த இடங்களிலே நிலவிய பிரச்சினைகளுக்கு அரங்கை ஒரு தீர்வாகக் கையாளவேண்டும் என்பது தான். உதாரணமான அவர் உதவிப் பங்குக்குருவாக நாரந்தனையில் இருந்த நாட்களிலே அங்கே கடுமையான சாதிப் பிரச்சினை நிலவியது. அப்போது அவர் இளைஞர்களையெல்லாம் ஒன்றுசேர்த்துக் கொண்டு புங்குடுதீவுக்குப்போய் பயிற்சிகளை நடாத்தி எதிரெதிராக இருந்தவர்கள் ஒரே மேடையிலே திருப்பாடுகளின் காட்சியை நடித்தார்கள் ஒன்றாக உணவருந்தினார்கள் என்ற நிலமையை ஏற்படுத்தினார். அப்படியான மாற்றங்களை அந்தக் காலத்திலே அவரால் இந்த நாடகத்தின் ஊடாகச் செய்யக்கூடியதாக இருந்தது. அதனால்தான் அவர் அந்தக் காலத்தில் நாடகம் என்ற வடிவத்தைத் தெரிந்தெடுத்து அதன் நீட்சியாக திருமறைக் கலாமன்றம் என்ற பெயரோடு அதை நகர்த்தினார். பின்னர் உரும்பிராய் பங்கில் அவர் இருந்தபோதுதான் திருமறைக் கலாமன்றம் என்ற பெயர் இடப்பட்டது.வானொலியிலும் கத்தோலிக்கசேவைக்கு அவர் பொறுப்பாக இருந்ததால் வானொலி நாடகங்களை தயாரிப்பதிலும் அவர் ஈடுபட்டார். அது படிப்படியாக வளர்ந்து 71ம் ஆண்டு, திருப்பாடுகளின் காட்சி பெரிய தொரு தயாரிப்பாக கோட்டைப் பெருவெளியிலே யாழ் கோட்டையின் மதில்களை அரங்காக்கி ஒரு சூழல் அரங்கின் தன்மையிலே பிரமாண்டமானதொரு வடிவத்திலே மேடையேற்றப்பட்டது. இப்படியாக சமயநாடகங்களோடேயே பெருமளவுக்குப் பயணித்த திருமறைக் கலாமன்றம் எழுபதுகளிலே ஒரு சில இலக்கிய நாடகங்களையும் மரபு வழிக் கூத்துக்களையும் மேடையேற்றும் அளவுக்கு ஓரளவு வளர்ந்தது. இந்தக் காலகட்டத்திலே மரிய சவரி அடிகள் அவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக வெளிநாடுகளிலே இருந்த சூழலிலே இங்கிருந்தவர்களே இயங்கினார்கள். அவர் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு 89ம் ஆண்டு இலங்கை திரும்பியதன் பின் திருமறைக் கலாமன்றத்தின் பணியை அவர் சமயத்துக்குள் இருந்து விலக்கி அதன் பணிகளை சமூகத்திற்கான பணியாக, அதை ஒரு கலாச்சார மையமாக மாற்றிக் கொண்டார். அதனால்தான் ஆங்கிலத்திலே Centre for Performing Arts என்று ஒரு பெயரைவைத்து பதிவு செய்யப்பட்டது. தமிழிலே திருமறைக் கலாமன்றம் என்பது பாரம்பரியப் பெயராக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதால், நாங்கள் அதையே பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால் எங்கள் பதிவு Centre for Performing Arts (நிகழ்த்து கலைகளுக்கான மையம்) என்றுதான் இருக்கிறது. 89ம் ஆண்டுக்குப் பின் திருமறைக் கலாமன்றத்தின் ஒரு பணியாக திருப்பாடுகளின் காட்சியை ஒவ்வொரு வருடமும் மேடையேற்றுவார்கள். அதைவிட மரபுவழிக் கூத்துக்கென்றொரு களத்தை உருவாக்கி அண்ணாவிமாரை வைத்துக் கொண்டு கூத்து முயற்சிகள், இசை நாடகங்கள், நவீன நாடகங்கள் என அரங்கேற்றி வருகிறது. நாடகப் பயிலகம் என்றொரு பிரிவை ஏற்படுத்தி ஒவ்வொரு வருடமும் 11 மாதங்கள் பயிற்சிகள் வழங்கி அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. 89ம் ஆண்டு நாடக அரங்கக் கல்லூரியுடன் இணைந்து செயற்பட்டு பட்டறைகளை நடத்தினோம். அதைவிட சைவ சித்தாந்தத்தை அடிகளார் தனது கலாநிதிப் பட்டத்திற்கானதொரு பாடமாகக் கற்றிருந்ததால், அது பற்றியதொரு விழிப்புணர்வு யாழ்ப்பாணத்தில் இல்லாதிருப்பதைக்கண்டு சைவ சித்தாந்த ஆய்வு வட்டம் ஒன்று உருவாக்கப்பட்டமை, கலை முகம் என்ற கலை இலக்கிய சஞ்சிகையின் வெளியீடு, இப்படியாக பலவகையிலாக திருமறைக்கலாமன்றம் தனது செயற்பாடுகளை 89ம் ஆண்டின்பின் விரிவாக்கியது.

இப்படியாக நாங்கள் செயற்பட்டுவந்த போது யுத்தம் ஒரு முக்கியமான பிரச்சினையாக இருந்து வந்த சூழலிலே, இரவு நேர ஊரடங்குச் சட்டங்களால் கூத்துக்கள் கிராமங்களிலே போடப்படுவதேயில்லை என்றிருந்த சூழலிலேதான் கூத்துக்களுக்கு திருமறைக் கலாமன்றம் அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுத்துவந்தது. அண்ணாவிமாரைக்கொண்டு பயிற்சி வழங்கி கூத்துக்களை பகல்வேளைகளிலே மேடையேற்றியிருக்கிறோம். கூத்து விழாக்களையும், கூத்துப் போட்டிகளையும் நடாத்தியிருக்கிறோம். அதே நேரத்திலே யுத்தம் நடைபெற்ற காலத்திலே இங்கே பிரச்சாரப் பாங்கான அரங்குதான் தீவிரமாக இருந்தது. ஆனால் எங்கள் பிரச்சினைகளை யாழ்ப்பாணக் குடாநாட்டைத்தாண்டிப் பேசமுடியாதிருந்த ஒரு சூழலிலே தான் மரிய சவரி அடிகள் கொழும்பிலே எங்களுக்கான ஒரு அலுவலகத்தைத் திறந்துவைத்து தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு நாங்கள் கொழும்பிலேபோய் சில நாடகங்களைப் போட்டுக்கொண்டு

வந்தோம். நாங்கள் புராண ஐதீகங்களின் ஊடாக பிரச்சினைகளைப் பேசுகின்ற முனைப்புக்கு அது ஒரு காரணம். இதற்காக அவர் தெரிந்தெடுத்த வடிவம்தான் வார்த்தைகளற்ற நாடகம். எந்த மொழியும் இருக்காது. முழுக்கமுழுக்க நாங்கள் உடல்மொழி, இசை, அபிநயங்களுக்குள்ளால் மட்டும் கதையை நகர்த்துவது. இந்த வகையிலே முதன்முதலாக அசோகா நாடகம் கொழும்பிலே மேடையேற்றப்பட்டது. இங்கே எங்களுக்கு ஹெலிச்சூடு குண்டு வீச்சுக்கள் எல்லாம் நடந்துகொண்டிருந்த காலத்திலே யுத்தத்தின் கோரத்தைக்காட்டுவதற்கு அது இலகுவானதாக இருந்தது. அசோகன் எப்படி யுத்தத்தை வெறிகொண்டு நடாத்தினான் முடிவில் அவனின் மனமாற்றம் எப்படி ஏற்பட்டது என்பதையே நாங்கள் கருவாகக் கையாண்டோம். அதற்குப்பெரிய வரவேற்புக் கிடைத்தது. இன்னொரு பக்கம் அதனால் எமக்கு சில ஆபத்துகளும் ஏற்பட்டன. அதேபோல எல்லாளன் துட்டகைமுனுவுடைய வரலாற்றை வார்த்தைகளற்ற நாடகமாக தர்ஷனா என்ற பெயரில் மேடையேற்றினோம். அப்போது இங்கிருந்து தமிழர்கள் கொழும்புக்குப்போய் நாடகம் போடுவதென்பது மிகவும் கடினமான வியடம். அது வேறு விதமாகவும் பார்க்கப்பட்டது. அந்தச்சூழலிலே நாங்கள் எம்மையொரு சமய நிறுவனம்போல காட்டிக்கொண்டு அதனூடாக இவ்வாறான செய்திகளை எங்களுக்குச் சொல்லக்கூடியதாக இருந்தது. அதேபோல ஈழத்திலும் மின்சாரம் இல்லாத சூழலிலே, நாடகங்களே இல்லை, அதை போடுவதற்கு ஆட்கள் இல்லை என்ற சூழலிலே திருமறைக் கலாமன்றம் கணிசமான அளவுக்கு மேடையேற்றங்களைச் செய்துவந்தது. திருப்பாடுகளின் காட்சிகளையும் விடவில்லை. கூத்துக்கள், இசை நாடகங்களையும் விடவில்லை. ஆகவே யுத்தக் காலத்தில் எமது கலை மரபுகளை அழிந்துபோகாத வகையிலே அதற்கான நெருப்பைக் கட்டிக்காத்துக்கொண்டிருந்தது ஒருவகையில் திருமறைக் கலாமன்றந்தான். அதை பொதுவாக எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்றே நினைக்கிறேன்.

அதேநேரம் கலைத்தூது அழகியல் கல்லூரி என்றொரு கல்லூரியை நடத்துகிறாம். அதிலே நடனம், இசை, ஓவியம் போன்றவற்றிற்கான பயிற்சியை தொண்ணூறுகளிலேயே ஆரம்பித்தோம். அங்கே பயின்ற பலமாணவர்கள் இன்று அழகியல் கலை ஞர்களாக இருக்கிறார்கள். இவ்வாறாக பல்வகைப்பட்ட செயற்பாடுகளை அந்தந்தக் காலகட்டத்தின் தேவை கருதி திருமறைக் கலாமன்றம் தொடர்ச்சியாகச் செய்து கொண்டு வந்திருக்கிறது. அதனால்தான் இவ்வளவு காலமாக அது வளர்ச்சி பெற்று வரக்கூடியதாக இருந்திருக்கிறது. அதனால்தான் யுத்தகாலத்திலே விடுதலைப் புலிகளும் எங்களை தடைசெய்யவில்லை. இராணுவத்தினரும் சில வேளைகளிலே எம்மை சந்தேகப் பார்வை பார்த்தாலும் பாரிய அளவில் எங்களுடைய செயற்பாடுகளை தடைசெய்ய வில்லை. ஏனெனில் நாங்கள் அரசியல் சார்ந்ததாக நேரடியாக எதையும் செய்ய வில்லை. புராண இதிகாசங்கள் ஊடாகவே பெரும்பாலும் எங்கள் பிரச்சினையைச் சொல்லமுற்பட்டோம். அந்த வகையில்தான் எங்களின் தொடர்ச்சியை எங்களால் பேணக்கூடியதாக இருந்தது. ஏனென்றால் பல நிறுவனங்கள் இங்கே இயங்க முடியாது போயிருந்தது. யுத்தத்தின்பின் நாங்கள் அற்றைத் திங்கள் கூத்தைப் போட்டபொழுது இங்கே சிஐடிமார் பல பேர் சுற்றிக்கொண்டிருந்த காலம். பல பேர் வந்து எப்படி துணிந்து போட்டீர்கள் என்று கேட்டார்கள். ஆனால் நாங்கள் போடக்கூடியதாக இருந்ததற்குக் காரணம் அது பாரியின் கதை என்பதுதான். இதையே நாங்கள் நீண்டகாலமாக செய்து வந்திருக்கிறோம்.

மற்றது மரிய சவரி அடிகளாரிடம் இருந்த தொரு முக்கியமான எண்ணக்கரு என்னவென்றால் எமது நாட்டின் இனப்பிரச்சினைக்குரிய அடிப்படைக் காரணம் அரசியல்வாதிகளின் தூண்டுதல்தான் என்பது. சிங்கள மக்களுக்கு எங்களின் பிரச்சினைகளைச் சொல்லி அவர்களுடன் எங்களின் உறவைப் பலப்படுத்திக்கொண்டு போகும்போது அதற்கான பலன் நிச்சயம் கிடைக்கும் என்பதிலே அவர் உறுதியாக இருந்தார். அதனால்தான் நாங்கள் எமது மன்றத்தின் பத்துக் கிளைகளை சிங்கள இடங்களிலே ஆரம்பித்தோம். அது ஆரம்பத்திலே பெரிய வரவேற்பைப்பெற்றது. இன்றைக்கு எல்லாம் இயங்குவதில்லை என்றாலும் பாணந்துறை, அவிசாவளை போன்ற இடங்களிலேயுள்ள மையங்கள் அர்ப்பணிப்புடன் இயங்குகிறார்கள். அந்த நேரத்திலே எமது பல செயற்பாடுகளிலே அவர்களையும் இணைத்துக்கொண்டு செயற்படக் கூடியதாக இருந்தது. அந்த நேரத்திலே நாங்கள் அப்படிச் செயற்பட்டதை பலர் பிழையாகத்தான் கருதினார்கள். ஆனால் இன்று அந்த முயற்சியை பலநிறுவனங்கள் செய்கின்றன. அரச சார்பற்ற நிறுவனங்கள் பல இன ஒற்றுமைக்கான முயற்சியிலே இவ்வாறான வேலைகளையே செய்கிறார்கள். ஆனால் திருமறைக் கலாமன்றம் ஆரம்பத்திலேயே இந்த வேலைகளை கணிசமான அளவு செய்திருக்கிறது என்று சொல்லலாம். ஆகவே ஐம்பது வருடங்களான பல்வேறுபட்ட சவால்களின் மத்தியிலே சமூகத்தினோடு ஒட்டியதான ஒரு நீண்ட பயணத்தை மேற்கொண்டு வந்திருக்கிறோம். இந்த சவால்களுக்குள்ளும் நாங்கள் வெளிநாடுகளிலே மன்றங்களை உருவாக்கி அவர்களின் பலத்தோடு வெளிநாட்டு பயணங்களை தொடர்ந்து மேற்கொண்டு வந்திருக்கிறோம். 97ம் ஆண்டு நாங்கள் ஐரோப்பாவிற்கு வடலிக் கூத்தர் கலைப்பயணம் மேற்கொண்ட நேரம் கடிதங்கள்கூட இங்கு வரமுடியாத சூழல் நிலவியது. ஈழத் தமிழரின் அவலம் வெளியுலகுக்குத் தெரியாதிருந்த கால கட்டத்திலே நாங்கள் கூத்துக்கள், இசை நாடகங்கள் மட்டுமல்ல சாகாத மனிதம், ஜீவப் பிரயத்தனம் போன்ற நவீன நாடகங்களையும் கொண்டுபோய் எங்களுடைய பிரச்சினைகளை அங்கு பேசினோம். அதற்கு அந்த மக்கள் தந்த ஆதரவை சொல்லித்தீராது. அந்த அளவுக்கு அவர்கள் எங்கள் பிரச்சினைகளை எங்கள் கலை வடிவங்களுக்கூடாக உணர்ந்து கொண்டு எங்களோடு பேசினார்கள். இப்படியாக ஐம்பது வருடம் என்பது சாதாரணமான விடயமல்ல. கடினமான பிரயத்தனங்களின் ஊடாகத்தான் இது வளர்ந்து வருகிறது.

▸ இனிவரும் ஆண்டுகளிலே திருமறைக்கலாமன்றம் ஆற்றவேண்டிய பணிகளாக நீங்கள் எவற்றை பார்க்கிறீர்கள்?

கடந்த காலம் போன்றே காலத்தோடும் சமூகத்தோடும் ஒட்டியதாக எமது பணி தொடரும். அதேநேரம் இப்போது நான் சவாலாகப் பார்ப்பது எதையென்றால், எமது பாரம்பரியக் கலைகள் தொடர்பாக நான் கனடாவிலே பார்த்த விருப்பையும் ஆர்வத்தையும் கூட இங்கே காண முடியாத சூழலொன்று படிப்படியாக உருவாகி வருவதாக உணர்கிறேன். தொழில் நுட்பம்சார்ந்த ஊடகங்களினூடான வருகைகளையும் நாங்கள் பார்க்கிறோம். ஆகவே அதற்கு எதிராக தொடர்ந்து செயற்படவேண்டிய தேவை இங்கே இருக்கிறது. இரண்டாவது காலாச்சார சீரழிவுகளால் இரண்டுங்கெட்ட ஒரு சமூகம் உருவாகும் நிலையும் இருக்கிறது. ஒரு காலத்திலே போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மத்தியிலே இருந்த பற்றுணர்வுகளையெல்லாம் இன்றைய இளைஞர்கள் மத்தியிலே காணமுடியவில்லை. நாட்டுப்பற்றே இல்லாத ஒரு இளைஞர் சமூகம் இங்கே உருவாகிறதோ என்று சந்தேகமாக இருக்கிறது. நான் ஒரு ஆசிரியர் என்ற வகையிலே நாங்கள் மாணவர்கள் மத்தியிலே முன்னர் பார்த்த ஒழுக்கம், நல்ல பண்புகள் இன்று நலிந்து வருவதைக் காண்கிறோம். அதேநேரம் கல்வியில்கூட பாரிய வளர்ச்சிநிலை இப்போது இல்லை. கல்வி வீழ்ச்சியடைவதாகத்தான் எமக்கு விபரங்கள் தெரியவருகிறது. இப்படியானதொரு யுத்தத்திற்குப் பிறகான ஒரு தேக்கநிலையில் இன்று சமூகம் இருக்கிறது. அதை நோக்கி வேலை செய்ய வேண்டிய தேவை எங்களால் உணரப்படுகிறது. ஆகவே அதை நோக்கிப் பயணிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அதேபோல அழகியல் துறையிலும், இசை பயில விரும்புகின்ற பிள்ளைகளின், நடனம் பயில விரும்புகின்ற பிள்ளைகளின் தொகை மிகவும் குறைவு. அதற்கு ஒரு காரணம் இங்கே கல்வி முறையிலே ஏற்பட்டுள்ள மாற்றம். தொழில் நுட்பக் கல்வியில்தான் கல்விச்செயற்பாடுகள் எல்லாம் முனைப்புக்காட்டுகின்றன. அழகியல் கல்வியால் என்ன நன்மை என்றது போன்ற தொரு மனநிலை தோன்றுவதால் பிள்ளைகள் இங்கே அழகியலைக் கற்காத சூழல் உருவாகிக்கொண்டு வருகிறது. அதையும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டிய தேவை இங்கே இருக்கிறது. அதை நோக்கியும் நாங்கள் பயணிக்க நினைக்கிறோம்.

அதேநேரம் வேறு சவால்களும் இருக்கிறது. நீண்ட காலமாக உள்ள பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினை. ஒரு கால கட்டத்திலே மரிய சவரி அடிகள் ஐரோப்பாவில் இருந்த காலகட்டத்தில் அவரின் நண்பர்களின் பண உதவிகள் கிடைத்தது. பின்னர் அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலைத்திட்டங்களை நாங்கள் எடுத்துச் செய்ததால் அதனூடான பண ஆதரவு இருந்தது. இப்பொழுது அவையெல்லாம் இல்லாது போயுள்ள நிலையில் சொந்தக் காலில் நிண்டுகொண்டு பயணிக்க வேண்டிய தேவையும் எமக்கு இருக்கிறது.

dushy.gnanapragasam@thaiveedu.com
sekar.thambyrajah@thaiveedu.com

சர்வதேச கலைப்பாலம் 2016

1965ம் ஆண்டு உருவாக்கப்பட்ட திருமறைக் கலாமன்றம், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையிலும், உலகின் பல நாடுகளிலும், அளப்பரிய கலைப்பணிகளைப் புரிந்து வருகிறது.

25வது ஆண்டில் காலடி பதிக்கும் கனடா திருமறைக் கலாமன்றம், இம்முறை பல பாடகர் குழாம் மற்றும் நடனக் கல்லூரிகளை இணைத்து, பல்சுவை நிகழ்வுகளை ஒன்றிணைக்கும் இந்த சர்வதேச விழாவொன்றை கனடாவில் மேடையேற்றி சாதனை படைத்துள்ளது.

ரொறன்ரோ நகரில் 100 ற்குமதிகமான கலைஞர்களுடன் மேடையேறி சாதனை படைத்த பலிக்களத்தைத் தொடர்ந்து, வருடாவருடம் பல பாரிய கலைப் படைப்புக்களை உருவாக்கி, கனடிய கலையுலகை உயிரோட்டமுள்ளதாகத் தக்கவைப்பதில், கனடா திருமறைக் கலாமன்றம் தனது பங்களிப்பையும் வழங்கி வருகிறது.

ஈழத்திலிருந்து அற்புதமான ஐந்து கலைஞர்கள் கனடாவிற்கு வருகை தந்தார்கள். நாடகம், நாட்டுக்கூத்து, சங்கீதம், இசை மற்றும் பாரம்பரியக் கலைகளில் ஒப்பரிய ஆற்றல்பெற்ற இந்த ஐந்து கலைஞர்களும், கனடாவின் ரொறன்ரோ மண்ணில் கலைப்படைப்புக்களை வழங்கி ரசிகர்களை அதிசயிக்க வைத்தனர்.

தங்களை அர்ப்பணித்த படைப்பாளர்கள். கலைநிகழ்வுகள், ஆற்றுப்படுத்தல்கள், அரங்கப் பட்டறைகள், சமூக மேம்பாட்டை முன்நிலைப்படுத்திய அரங்கப் படைப்புக்கள் என்று, எமது தமிழ் சமூகத்திற்கு கலைமூலம் நிறையவே வழங்கி சாதனை படைத்திருக்கும் கலைஞர்கள், கனடாவிலும் கலைச்சாதனை படைத்தார்கள்.

இதன் இயக்குனர் அருட்கலாநிதி மரியசேவியர் தனது வாழ்வையே கலைக்காகத் தியாகம் செய்திருக்கிறார். அவரது கண்டுபிடிப்புக்களாக, கலையைவிட, அரிய கலைஞர்கள் எமது சமூகத்திற்குக் கிடைத்திருக்கிறார்கள். ஈழத்தில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்து, அவர்களது அமைதி வாழ்விற்காக, நாட்டின் சமாதானத்திற்காக கலைமூலம் பணியாற்றிய ஒரேயொரு கலை நிறுவன-மாகவும் திருமறைக் கலாமன்றம் இருக்கிறது.

அதற்கு உதாரணமாக ஒரு சில கலைஞர்கள், ஈழத்திலிருந்து பயணித்து கனடாவில் கலைச்சாதனை படைக்க இருக்கிறார்கள்.

ஜோண்சன் ராஜ்குமார், ஜஸ்ரின் தைரியநாதன், இ.ஜெயகாந்தன், திருமதி.வைதேகி எமில், கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன் ஆகியோர் இங்கே வருகை தந்தனர். கனடா திருமறைக் கலாமன்றம் இந்த நிகழ்வை ஒக்ரோபர் 15ம் திகதி, ஜேசிஸ் மண்டபத்தில் ஒழுங்கு செய்திருந்தனர். மண்டபம் நிறைந்த பார்வையாளர் மத்தியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அரை நூற்றாண்டுகால கலைப்பயணம். கலைதான் முலதனம். கலைக்காகத்

அரங்கியல் விழா - 2016

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

தமிழர்தம் நிகழ்கலைகளின் முக்கிய கூறுகளாக நாட்டியம், நாடகம், கூத்து என்பவற்றைச் சொல்லலாம். இவை தவிர கோயில்கள் சார்ந்த காவடி, தீ மிதித்தல் போன்ற நிகழ்கலைகளும் சடங்குகளாகச் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் எதனை எமது பாரம்பரியக் கலைவடிவமாகக் கொள்ளலாம் என்பதில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஆயினும் தாயகத்தில் கூத்துக்கலையை தமிழரில் கலைவடிவமாக ஏற்கின்ற முனைப்பு காணப்படுகிறது. கூத்துக்கலையை ஆற்றுப்படுத்துகிற மக்களின் பின்னனியை வைத்து இந்த முடிவு முன் வைக்கப்படுகிறதா என்று தெரியவில்லை ஆயினும் ஆட்டமும் பாட்டும் இசையும் கூடிய கூத்து வடிவம் பார்வையாளர்களை இலகுவில் ஈர்த்துக்கொள்கிற, ஓர் இறுக்கமான, நுட்பங்கள் நிறைந்த, விதிமுறைகளுக்கு உட்பட்ட கலைவடிவம் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு கூத்தும் நாடகமும் நாட்டியமும் நிறைந்த ஒரு முழு நிகழ்வாக 'தாய்வீடு' நடத்திய 'அரங்கியல் விழா' கடந்த ஒக்டோபர் 2ம் திகதி மார்க்கம் கலையரங்கில் இரு காட்சிகளாக பெருமளவிளான பார்வையாளர்கள் முன்னிலையில் நடந்தேறியது. இவ்விழாவின் மகிழ்ச்சியான தருணங்களையும் மனதில் கிளர்ந்த சில விடயங்களையும் இங்கு பதிவு செய்கிறேன்.

நாடக விழாக்கள் என்றாலே பொதுவாகக் கனடா மண்ணில் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் முன்பாக நீண்டதொரு விளக்கத்தை அறிவிப்பாளர் சொல்வது வழக்கமாகி விட்டது. அரங்கியல் விழாவும் இதற்கு விதிவிலக்கல்ல. அதுவும் தமிழைப் பிழிஞ் செடுத்து நடக்கப்போகும் நிகழ்வு ஏதோ பெரியதொரு தத்துவத்தைச் சொல்லப் போகிறது என்ற தோற்றப்பாட்டை உருவாக்கிப் பார்வையாளர்களின் எதிர்பார்ப்பை உச்சத்தில் வைத்துவிடுகிறது அந்த அறிவிப்பு. என்னைப் பொறுத்தவரை நிகழ்த்தப்படும் கலையினூடாகக் கதையும் கருத்துக்களும் சொல்லப்பட வேண்டும். வசனங்களோ பாடல்களோ இல்லாது இசையை மட்டும் பின்னணியாகக் கொண்ட நாட்டியம், குறியீட்டு அல்லது சைகை நாடகங்கள் போன்றவற்றுக்கு இந்த அறிவிப்பு மிக முக்கியம்.

இத்தகைய ஒரு விளக்கத்தோடு தான் விழாவின் முதல் நிகழ்வான 'மெய்யோடு மெய்யாகி' என்ற நாட்டியம் அரங்கேறியது. முற்றிலும் இசையை மட்டும் தொகுத்து, அதற்கு நடனம் அமைத்து, அதனூடாக உணர்வின் பல்வேறு பரிமானங்களை நாட்டியம் சொல்லியது. இந்நடனம் அறிவிப்பில் சொல்லப்பட்டது போல் மனித உடலில் தோன்றக்கூடிய நகைத்தல், வியத்தல், அழுதல், அச்சமடைதல், இளிவரல், சினத்தல், பெருமிதம், மகிழ்ச்சி என்ற 8 வகையான மேம்பாடுகளையும் அவை ஒவ்வொன்றையும் 4 வகையாக நுட்பமாக பகுத்துக் கூறுகிறது 3000 ஆண்டுகளுக்கு முன்னார் எழுதப்பட்ட தொல்காப்பியம். உதாரணமாக மகிழ்ச்சியை செல்வம், புலன் இன்பம், உறவு, விளையாட்டு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பிரிக்கப்பட்ட மொத்தம் 32 உணர்வகைளை மேடையில் நிகழ்த்திக் காட்டுவதற்கு அசாத்தியமான அனுபவம் தேவை. அதிலும் இசையை மட்டும் வைத்துக் கொண்டு இவற்றை வெளிக்கொணர நிறையப் புலமை வேண்டும். இதனை ஆடலகம் ஆசிரியை நாட்டியக் கலைமணி அனோஜினி குமாரதாசன் மிகவும் சிறப்பாகச் செய்திருந்தார்.

ஒவ்வொரு உணர்வுகளையும் வெளிப்படுத்த பொருத்தமான கதைகளை அல்லது சம்பவங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்குப் பொருந்தி வருகிற இசையை எண்ணற்ற இசைக்கலைஞர்களின் இசைச் சங்கமங்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதற்கு நடனம் அமைத்ததில் ஆசிரியை வெற்றி பெற்றிருக்கிறார். மீண்டும் மீண்டும் பாரதக் கதைகளைக் களமாக்காமல், பயின்ற நடனத்தில் மூலம் வேறொரு பரிமாணத்தைத் தொட்டதற்காக ஆசிரியையைப் பாராட்டலாம்.

இதில் பங்கு கொண்ட சிறுமியர் மிகவும் சிறப்பாக ஆடியிருந்தாலும் இத்தகைய சீரிய விடயத்தைக் கொஞ்சம் பெரியவாக்ளோடு நிகழ்த்தியிருந்தால் காத்திரமானதாக இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. மேடையில் ஆங்காங்கே

தொடர்ந்து காணப்பட்ட அங்க வஸ்திரங்கள், அணிகலன்கள் போன்றவை கண்ணுக்கு உறுத்தலாக இருந்தன. தவிர்த்திருக்கலாம்.

கலவி இன்பத்தைக் காட்டுகிற அந்தக் கடைசிக் காட்சியில் ஆண் ஒரு கணம் ஆடையை உயர்த்திப் பார்ப்பதும் முடிவில் பெண் காலைத் தூக்கிப் படரச் செய்ததும் நடனத்தின் உச்சம். எந்தவித விரசமும் இல்லாமல் அதனை மேடையில் நிகழ்த்துவதற்கு அசாத்தியத் துணிச்சல் வேண்டும். பாராட்டுக்கள்.

அரங்கியல் நிகழ்வில் அடுத்ததாக பொன்னையா விவேகானந்தனின் ஆக்கத்தில் உருவான 'அகவெளிப் பொய்கள்' என்ற நாடகம் மேடையேறியது எல்லா மனிதர்களில் அகமும் புறமுமாக நிகழ்கின்ற தேடல்களில் பெரும்பாலும் மெய்மைக்குப் பொய்மைக்கும் இடையேயான முரண்களே மிஞ்சுகின்றன என்ற கருத்தாக்கத்தை முன்வைத்து இந்நாடகம் மேடையேற்றப் பட்டது. இந்நாடகம் குறித்த எனது தேடலில் மிஞ்சிய முரண்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

இந்நாடகத்தில் ஒன்றோடொன்று தொடர்பு இல்லாத மூன்று அங்கங்கள் இருந்தன. முதலாவது அங்கத்தில் பெற்றோர் சிற்பம் ஒன்றைச் செதுக்குவது போல் தமது பிள்ளையை வளர்த்தெடுக்கிறார்கள். பெற்றோரின் கட்டுக்கோப்பை மீறி இறுதியாக அந்தப் பிள்ளை ''என் சிறகுகளை வெட்டாதீர்கள். என்னைப் பறக்க விடுங்கள்'' என்றவாறு செல்வதோடு முதல் அரங்கம் முடிவுக்கு வருகிறது. இங்கு 90 களில் மேடையேற்றப்பட்ட 'சொல்லாத சேதிகள்' இலிருந்து சொல்லப்பட்டு வரும் பழைய செய்தி தான்.

அடுத்த அங்கம் ஒருவர் இங்கிருந்து ஊருக்குப் போகிறார். தான் அனுப்பிய பணத்தை அவரது சகோதரர்கள் ஏப்பம் விட்டு சொகுசு வாழ்க்கை வாழ்வதைப் பார்க்கிறார். தான் வளர்ந்த இடம் முற்றிலும் மாறிவிட்டதை உணர்ந்து மனம் நோகிறார். ''அந்த மரத்துக்குக் கீழ ஒரு பாயைப் போடு நித்திரை வருகுதா எண்டு பார்ப்பம்'' என்று சொல்வதோடு இரண்டாவது அங்கம் இருளைக் கவ்வியது.

இந்த அங்கத்தில் கூறப்பட்ட அல்லது தோற்றுவிக்கப்பட்ட கருத்துக்களோடு எனக்கு உடன்பாடில்லை. பரவலாக விருந்து வைபவங்களில் புலம் பெயர் குடிமக்கள் சொல்கின்ற விஷயம் ''எங்கட காசிலை அவையல் சொகுசா இருக்கினம்'' என்பது. இவர்கள் காசு அனுப்புகிற அக்கா, தங்கை, உறவினர் குறித்த கூற்றாயின் இது சரியானதே. அதிலும் காசை அனுப்பிவிட்டு இப்படிக் கேட்பது சரியில்லை. மற்றும்படி இது ஒரு பொதுவான கூற்றல்ல. புலம் பெயர் உறவுகள் இல்லாத, ஆதரவு இல்லாத இலட்சனக் கணக்கான குடும்பங்கள் கிளிநொச்சி, மன்னார், கிழக்கு மாவட்டங்கள் போன்ற இடங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதை இன்றும் பார்க்கலாம்.

மேலும் வளர்ச்சி என்பது கால மாற்றத்தோடு மாறுகின்றதொன்று. நாம் சைக்கிளில் திரிந்தோம் என்பதற்காக அவர்கள் மோட்டார் சைக்கிளில் செல்கிறார்கள் என்று விசனப்படுவதோ அல்லது நாம் கூடிக் கூடிக் கதைத்தோம் அவர்கள் தொலைபேசியுடன் அலைகிறார்கள் என்று எரிச்சல் படுவதோ சரியானதல்ல.

மிக முக்கியமான விஷயமும் இருக்கிறது. புலம் பெயர் மண்ணிலிருந்து அனுப்பப்பட்ட பெரும்தொகையான பணத்தால் நடத்தப்பட்ட போரின் வலியையும் இழப்புக்களையும் சந்தித்தவர்கள் என்ற முறையில் அவர்களது மீள்கட்டுமான வாழ்வுக்கு உதவி செய்வது எமது கடமை அல்லவா? முகம் தெரியாதவர்களுக்குத் தொடர்ந்து உதவிகளைச் செய்து வரும் அன்பு நெஞ்சங்களும் அமைப்புகளும் என்னைப் பொறுத்தருளுக.

மீண்டும் நாடகத்துக்கு வருவோம். மூன்றாவது அங்கத்தில் ஒரு மனிதன் தன் சுயத்தைத் தேடுவது போல் காட்டப்பட்டது. சுயம் என்பது அகம் சார்ந்த விஷயம். ஆனால் நாடகத்தில் 'உனக்கு முந்தி குடும்பி இருந்தது'. 'பிறகு மொட்டை அடித்தாய்'. 'தாடி வைச்சிருந்தாய்'. 'இப்ப குறுந்தாடி'. 'ஒரு மசிரை வைச்சு இவ்வளவு ஆட்டம் போட்டாய், இப்ப உன்னைத் தெரியாது என்கிறாய்' என்றெல்லாம் வசனம் வருகிறது. மயிர் புறம் சார்ந்த விஷயம், இவ்வாறு வசனங்கள் நாடகத்தில் முரண் பாடாக இருந்தன.

இந்த மூன்று அங்கங்களிலும் ஒருவரே முதன்மைப் பாத்திரத்தில் நடித்திருந்ததால் இவை ஒருவரது கதையே என்று பார்வையாளர்கள் எண்ணிக்கொண்டிருக்க, இந்த மூன்று அங்கங்களையும் எப்படிக் கொண்டுவந்து இணைக்கப் போகிறார்கள் என்று அடுத்த அங்கத்தை எதிர்பார்த்து தலையைப் பிய்த்துக் கொண்டிருக்க, ''நடை-பெற்றது அகவெளிப்பொய்கள் நாடகம்'' என்ற அறிவிப்பு பெரும்பாலான பார்வையாளர்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கியது.

நல்லதொரு கருப்பொருளைக் கையிலெடுத்த நாடகாசிரியர் அதனைப் பிரதியாகக் கொண்டுவருவதில் சிரமப்பட்டிருக்கிறார். சுயத்தைத் தேடல் என்ற இந்தக் கருப்பொருளுக்கு எடுத்துக்கொண்ட விடயங்களும் தேர்ந்தெடுத்த நாடக வடிவமும் பொருந்தி வரவில்லை. இவ்வாறான கருப்பொருள் குடும்பங்களில் நிகழும் சம்பவங்கள், உரையாடல்கள், மெல்லிய உணர்வுகள் மூலமாக தமிழில் இந்திரா பார்த்தசாரதி, அம்பை ஆகியவர்களும் பிறமொழிகளில் இப்சன், டென்னசி வில்லியம்ஸ், முகேஷ் ராக்கேஷ் போன்றவர்களும் பல நாடகங்களை எழுதியுள்ளதை நினைவு கொள்ளலாம். டிலிப்குமார், அ. கந்தசாமி, கந்தசாமி கங்காதரன் போன்ற அறியப்பட்ட நல்ல கலைஞர்கள் இந்நாடகத்தில் பங்குகொண்ட போதிலும் அவர்களது ஆற்றலை வெளிப்படுத்துகிற விதமாக நாடகப்பிரதி அமைந்திருக்கவில்லை.

அரங்கியல் விழாவில் நிறைவாக நிறைவுடன் மேடையேறியது 'இன்று போய் நாளை வா' என்ற கூத்து. இலங்கேஸ்வரனினதும் அவனது தம்பி கும்பகர்ணனினதும் கதையைக் கூத்தாக ஆடியிருந்தனர். யாழ். திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த ஜோண்சன் ராஜ்குமார் அவர்களது மூலப் பிரதியை மீள்பிரதியாக்கம் செய்து நெறியாள்கை செய்திருந்தார் செல்வம் அருளானந்தம்.

திருமறைக் கலாமன்றம் கலைகள் ஊடாக

தொடர்தல் 91ம் பக்கம்

போதும் மன்னா போதுமே மன்னா...!

தாய்வீடு - அரங்கியல் விழாவில் 'இன்று போய் நாளை வா' கூத்துப் பற்றிய பார்வை

தமயந்தி

தமயந்தி ஒரு கவிஞர், எழுத்தாளர், கூத்துக் கலைஞர், புகைப்படக்கலைஞர். கூத்துப் பின்னணி சார்ந்த குடும்பமொன்றிலிருந்து வந்தவர். நீண்ட காலமாக அரங்காற்றுகைகள் பற்றிய தன்னுடைய விமர்சனங்களை வெளிப்படுத்திவருபவர். ஏகலைவன் உட்பட பல கூத்துக்களை எழுதியும், இயக்கியும் ஐரோப்பிய அரங்குகள் பலவற்றில் மேடையேற்றியவர். ஈழத்தமிழர் மத்தியில் நிழற்படத்துறையின் ஒரு அடையாளமாகத் திகழ்பவர். அண்மையில் அவரது 'ஏழு கடல் கன்னிகள்' சிறுகதைத் தொகுப்பு வெளியீடும் புகைப்படக் கண்காட்சியும் ரொறன்ரோவில் நடைபெற்றது. 'இன்று போய் நாளை வா' கூத்து பற்றிய அவரது பார்வை....

ஒக்டோபர் 02, 2016 அன்று Flato Markham Theatreல் நிகழ்ந்த 'தாய்வீடு - அரங்கியல் விழா 2016' அரங்கில் நான் பார்த்து இனிந்த 'இன்று போய் நாளை வா' கூத்துப் பற்றி நாலு வரியேனும் குறித்துத்தான் ஆக வேண்டும். இல்லையெனில் நமது கூத்துக்கலையின் பொருட்டு குற்றமிழைத்தவனாவேன்.

ஒக்டோபர் 10ம் திகதிதான் நான் கனடாவுக்குப் பயணிப்பதாகத் திட்டமிருந்தது. அதற்கான ஒருவார விடுப்பும் பணியிடத்தில் பெற்றுக்கொண்டிருந்தவேளை, 2ம் திகதி, அதாவது நான் பயணிப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு கனடாவில் கூத்து நிகழவிருப்பதாக நண்பர்கள் சொன்னார்கள். கனடாவில் கூத்துக்கள் நிகழ்வதென்பது ஒன்றும் புதினம் அல்லவே. ஏனெனில் அங்குதான் நமது நிறைய கூத்துக்கலைஞர்களும், பல அரங்காடல்களை நிகழ்த்திய அண்ணாவிகளும் இருக்கிறார்கள். தவிரவும் 'பண்டாரவன்னியன்', 'கண்ணகி' ஆகிய இரண்டு கூத்துப் பிரதிகளை எமது உயிர்மெய் பதிப்பகத்தினூடாக வெளிக் கொணர்ந்த அண்ணாவி ச.மிக்கேல்தாஸ் அவர்களும் இருக்கிறார்கள். எனவே கனடாவில் கூத்துக்கள் அரங்காடல் நிகழ்வதென்பது ஒன்றும் புதினமல்ல என பேசாமல் இருந்துவிட்டேன். பின்புதான் 'தாய்வீடு - அரங்கியல் விழா 2016' பற்றிய அறிவித்தலை ஊடகங்களில் பார்க்க நேர்ந்தது. மூலப்பிரதி: ஜோன்சன் ராஜ்குமார். மீள்பிரதியாக்கம், நெறியாள்கை: செல்வம் அருளானந்தம் என்பதை அறிந்துகொண்டேன்.

இந்த இடத்தில் கொஞ்சம் முன்னுக்கிருந்து சொல்லித்தான் ஆக வேண்டியுள்ளது.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஈழத்து அரங்கியலின்பால் நிறையத் தேடல்களையும், பரிசோதனை முயற்சிகளையும் செய்து வருகிறார் சுவாமியார் மரியசேவியர் (சவிரிமுத்து) அவர்கள்.

எழுபதுகளில் பாஸ்க்கா அரங்கினை 'பலிக்களம்', 'களங்கம்', 'காட்டிக் கொடுத்தவன்' ... எனப் பல்வேறு தலைப்புக்களில் பலவேறு பரிணாமங்களில் தயாரித்து அரங்கேற்றங்கள் செய்தவர். இந்த அரங்காற்றுகைகளுக்காக வடபுலத்தின் பல்வேறு கிராம, கரையோரப் பகுதிகளிலும் தேடுதல் நடத்தி, பல கூத்துக் கலைஞர்களையும், நாடகக் கலைஞர்களையும், இசைக் கலைஞர்களையும் கண்டடைந்து, அவர்களை ஒருங்கிணைத்து பலவேறு பகுதிகளிலும் அரங்காற்றுகை செய்தவர். இந்த அரங்காற்றுகைகளின் தொடர்ச்சியாக 70களிலேயே முழுநீள தொலைக்காட்சி ஆற்றுகையாக 'பலிக்களம்' என்ற பாஸ்க்கா அரங்கை வெகு சிறப்பாகவும், பிரமாண்டமாகவும் தயாரித்து வெளியிட்டார்.

பாரம்பரியக் கூத்து வடிவங்களைத் தேடியெடுத்து அவற்றை வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என பாகுபாடு இல்லாமல், பாரம்பரிய தமிழ்க் கலைவடிவங்களின் ஒருங்கிணைந்த அரங்காடல்களாக நல்ல விதைகளையும், நற்கனி கொடுக்கும் மரங்களையும் நமது நிலத்தில் மட்டுமல்லாது கடல்கடந்த தேசங்கள் பலதிலும் பயிரிட்டு வருபவர் சுவாமியார் மரியசேவியர் (சவிரிமுத்து) அவர்கள். அவரது பாசறையூடாக புடம் போடப்பட்ட ஒரு ஆளுமையுள்ள கலைஞராகவே நண்பர் ஜோன்சன் ராஜ் குமார் அவர்களை நான் காண்கிறேன். கடந்த காலங்களில் அவரது அரங்காடல்களை ஒளிப்பதிவுகளாகத்தான் பார்க்க முடிந்தது.

இப்போ கனடாவில் அவரது பிரதி அரங்கேறுகிறதென்றால்...?,அதிலும் திரு. செல்வம் அருளானந்தம் அவர்கள் நெறியாள்கை செய்கிறார் என்றால்...? மண்மணம் சற்றும் பிசகாது என்ற நம்பிக்கை எழுந்தது. ஆமாம், ஒரு வாரத்துக்கு முன்பே கடலை கச்சான் வறுத்துக் கொண்டு ரொறொன்ரோவில்

இன்று போய் நாளை வா கூத்தில் இராவணனாக ரெஜி மனுவேல்பிள்ளையும் கும்பகர்ணனாக ஆசோக் மைக்கல்ராஜாவும் தோன்றும் ஒரு காட்சி

குதித்துவிட்டேன்.

நம்பிக்கை வீண்போகவில்லை. இன்னும் சொல்லப்போனால் பன்மடங்கு மகிழ்ச்சி.

'அடர் கொண்ட படர் சேனை அதிரவே
- முத்து
அணியிட்ட ரதம் மீதில் வருகிறார்...'

என்ற கொலுவருகை கூறல் பாடலுடன் கட்டியரின் வரவு தரு பார்வையாளரின் ஒருமித்த புலன்களை சடுதியாக அரங்கின் பக்கம் இழுத்துக் கொண்டது. ஒரு அரங்காற்றின் தொடக்கம் இந்த வகையில் தான் அமையவேண்டும்.

கட்டியக்காரர்களாகத் தோன்றிய களப்பூரான் தங்கா, சுதர்சன் சவரிமுத்து இருவருமே கொலுவருகை கூறல் மூலமாகவே கூத்து சிறப்பாக அமையப்போவதற்கான கட்டியத்தைக் கூறிவிட்டார்கள். இருவரது ஆட்ட அசைவுகளும் வெவ்வேறானவையாக இருந்தபோதும் வித்தியாசமானதாகவும், சலிப்பற்ற இரசனைக்குரியதாகவும் இருந்தது. இருவருக்குமே சிறந்த குரல் வளம் இருப்பதோடு, இருவரது குரல்களுமே மிக அருகருகான கண்டங்களைக் கொண்டுள்ளது மட்டுமல்ல, சுருதி பிசகாமல் பாடினார்கள்.

'மங்காப் புகழ் தங்கிய மண்ணிலே
ஆரியப்படை எதிர்த்து வருவதோ...'

இலங்காபுரி மன்னனான இலங்கேஸ்வரன் இராவணன் ரெஜி மனுவேல்பிள்ளை. உடல்வாகும், பராக்கிரமம் கொண்ட பாத்திரப் பொருத்தமும் மிகக் கச்சிதமாய் அமைந்திருந்தது. பாடல் வரிகளுக்குரிய சரியான அர்த்தங்களை உள்ளெடுத்துக் கொண்ட தால் ரெஜியால் பொருத்தமான முகபாவங்களை வெளிப்படுத்த முடிந்தது. மிக நேர்த்தியான நடிப்பு. தென்மோடிக் கூத்துப் பாரம்பரியத்திலிருந்து வந்ததால் ராக, தாள, லாவண்யம் இயல்பாகவே ரெஜியிடம் உண்டு.

கும்பகர்ணன் - அசோக் மைக்கல்ராஜா.

'அண்டமது கலங்க மண்டலமே நடுங்க
கண்டோர் அலறியஞ்சி ஓடி யொதுங்கிவிட...'

கதைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளதுபோல கனத்த உடல்வாகும், புயபல பராக்கிரமம் என அகண்ட தோள்களும், அதற்கேற்றாற்போல கனமான குரல்வளமும் ஒரு வீர மாமல்லனை அரங்கில் காணக் கிடைத்தது. அசோக் மைக்கல்ராஜாவின் குரலும், நடிப்பும் அரங்கம் பூராவும் வியாபித்திருந்தது. அசோக்கின் தந்தையார் மறைந்த மைக்கல்ராஜா அவர்கள் மிகப்பெரும் கூத்துக் கலைஞர். அதுபோல் அசோக்கின் சகோதரர்களும். ஆனால், அவர்கள் யாவருக்குமே மிக மென்மையானதும், உச்ச ஸ்தாயியிலான குரல்களும். அவர்களுக்கில்லாத தடித்த குரல்வளம் அசோக்கிற்கு. அரச பாத்திரங்களுக்கேற்ற கொலுவும், குரலும் அசோக்கிற்கு உண்டு. கூத்துக்களின்பால் அக்கறையோடு பயிற்சியெடுத்தால் சிறந்த கலைஞனாக மிளிரமுடியும் என்பதில் ஐமிச்சமேயில்லை.

மண்டோதரி - பாவனி சிவகுமரன்.

'போதும் மன்னா போதுமே மன்னா
போர் வேண்டாம் மன்னா
போதும் மன்னா போதுமே மன்னா'

அற்புதமான நடிப்பும், இனிமையான குரலும். எந்தவொரு இடத்திலும் சுருதி பிசகாமல் பாடியது மிகப் பெரும் பாராட்டுக்குரியது. தனக்குரிய கட்டங்களை மிகச் சிறப்பாகச் செய்தார். துணிச்சல்க்காரி. பாராட்டுக்கள்.

ராமன் - அன்ரன் சந்தியாப்பிள்ளை.

வரவுதருவின் போதே இவருக்கு தென்மோடிக் கூத்தில் மிக நெருங்கிய பரிட்சயம் உள்ளதென்பது புலனாகியது. உடலசைவுகளும், கைகளின் லாவகமும் தென்மோடிக் கூத்தின் அனுபவத்தை வெளிப்படுத்தின. மென்மையான குரல்வளம் கொண்ட அன்ரன் சந்தியாப்பிள்ளை அவர்கள் தாளக்கட்டுக்களுக்கேற்ப தனது உடலசைவுகளை கையகம் வைத்திருந்தார்.

கிருபா கந்தையா, வேந்தன் பேரின்பநாதன், சுதர்சன் சவரிமுத்து, களப்பூரான் தங்கா ஆகியோர் இரண்டு, மூன்று, நான்கு என பாத்திரங்களை ஏற்று நடித்தார்கள் என்பது மிகப் பெரும் ஆச்சரியம். மிகக் குறைந்த காட்சிகளைக் கொண்ட அரங்கில், குறுகிய நேரத்துக்குள் நிகழ்ந்த அரங்கில் 2, 3, 4 என வெவ்வேறு பாத்திரங்களை ஏற்று நடித்தது மட்டுமல்லாது, பாத்திர வேறுபாடுகளை மிகக் கவனமாகச் செய்தார்கள். இது லேசுப்பட்ட கருமமல்ல. இந்தத் துணிச்சலுக்காகவே இந்த நால் வரையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

மேடையில் தோன்றி பாடி நடித்த கலைஞர்களுக்கு பெரும் பக்கபலமாகவும், அனுசரணையாகவும் இயங்கிய பின்னணிக் கலைஞர்களைக் குறிப்பிடாமல் நாம் கடந்து போக முடியாது.

பக்கப்பாட்டு: நோயல் றொனால்ட் தேவதாசன், துரை அன்ரனி - (கைத்தாளம்). கலைஞர்களின் சுருதிக்குள்ளேயே நின்று பாடியது மட்டுமல்லாது, இருவரும் இறுதிவரை தமக்குள் ஒரு சீர்மையை கடைப்பிடித்தார்கள். கலைஞர்களை விடவும் அதி உச்சமாக கத்திப் பாடாமல் கூத்தர்களுக்கு அடியெடுத்துக் கொடுத்ததில் இருவரின் பங்கும் பிரதானமானது. கைத்தாளம் அதன் ஒலியளவு பாடல்களை விட மேலோங்கி ஒலிக்காமல் கனகச்சிதமான சத்தத்துடன் வாசிக்கப்பட்டது.

மிருதங்கம்: ரிதுஸ்கரன் இரமணீகரன். கூத்துக்காக வாசிக்கப்படும் மத்தளமும், தோலக் மேளமும் மிக விசேடமானதும், உச்ச அதிர்வுகளைக் கொண்ட கட்டுக்களை உடையவையுமாகும். இவற்றின் நாதம் மிருதங்கத்திலிருந்து வேறுபட்டவை. மிருதங்க பாடமும், மத்தள பாடமும் வெவ்வேறு வகைகளைக் கொண்டவை. அப்படியிருந்தும்கூட, மத்தளமும், தோலக் மேளம்

தொடர்தல் 89ம் பக்கம்

88ம் பக்கத் தொடர்ச்சி...

இல்லை என்ற குறை இம்மியளவும் தெரியாமல் ஒற்றை மிருதங்கத்தில் கூத்து முழுவதையும் கொண்டு செலுத்தி ஒப்பேற்றினாரென்றால் உண்மையில் ஒப்பற்ற இசைக் கலைஞன்தான் ரிதுஸ்கரன் இரமணீகரன்.

ஆர்மோனியம்: சண்முகநாதன் இரமணீகரன். இந்தக் கூத்தில் ஆர்மோனியத்தின் பங்கு மிகப் பெரியது. சில இடங்களில் கலைஞர்கள் சுருதி பிசகுவதுபோன்ற நிலைக்கும் போகும்போதெல்லாம் மிக லாவகமாக அவர்கள் வழிக்கே போய் சரியான கட்டைக்கு அழைத்து வந்தது மிகப் பெரும் வித்தகம்தான்.

ஒலியமைப்பு, ஒளியமைப்பு: பன்முகக்கலைஞர் கருணா. கூத்தின் தண்டையல் இவரென்றுதான் சொல்வேன். கப்பலில் எத்தனை வல்லமை படைத்த கப்பித்தான்கள் இருந்தாலும் தண்டையலின் கைங்கரியத்தில்தான் கப்பல் சரியான திசையில் சென்று, சேர வேண்டிய கரையை அடையும். அப்படியொரு பணிதான் அன்றைய அரங்கில் கருணாவினுடையது.

கலைஞர்களின் பாடல்கள் ஒருதுளி பிசுறுகூட இல்லாமல் மிகத் துல்லியமாக பார்வையாளரிடம் கொண்டுவந்து சேர்த்தது ஒலியமைப்பு. இரண்டாம் காட்சிவரை எனக்கொரு சந்தேகம் இருந்தது. "பாட்டுகளை முன்னமே றெக்கோட் பண்ணிப் போடுறாங்களோ?" என பக்கத்தில் அமர்ந்திருந்த ஜீவாவிடம் கேட்டேன். அப்படி இருக்குமோ என்று ஜீவாவுக்கும் சந்தேகம் வந்துவிட்டது. மூன்றாம் காட்சியை மிக உன்னிப்பாக கலைஞர்களின் வாயசைப்பைக் கவனித்த பின்புதான் முடிவுக்கு வந்தேன் நேரடி ஒலியமைப்பு என்று. ஒலிப்பதிவு கூடத்தில் ஒழுங்கமைக்கப்பட்டதுபோல் அத்தனை தெளிவு. பல ஐரோப்பிய நாடக அரங்குகளைப் பார்த்திருக்கிறேன். இப்படித் துல்லியமான ஒலியமைப்பை எந்த அரங்கிலும் நான் கேட்டதில்லை என்பதைப் சொல்லித்தானாக வேண்டும். அதுபோலவே ஒளியமைப்பும். பார்வையாளர்களுக்கு இந்த அரங்காற்றுகையை "அதோ பார், இதோ பார்" என கைகளுக்குள் பொத்தி வைத்திருந்த சுடர்விளக்கால் சுட்டிக் காட்டியது.

இவை தவிர்ந்த கருணாவின் பங்காற்றுகை கூத்தின் ஆரம்பத்திலேயே இடம் பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. கதைச்சுருக்கம் சொன்ன விவரணக் குரலும் கருணாவுடையது. மருதுவின் ஓவியங்களை அரங்கத் திரையில் விழுத்தி, அதன் பின்னணி விபரணத்தைக் கருணா மிகக் கலைத்துவத்தோடு செய்திருந்தார். அற்புதம் கருணா.

ஒளி நிர்வாகம் - அருண்மொழிவர்மன். நினைவூட்டுகை - முருகதாஸ். மற்றும், இந்தக் கூட்டு முயற்சிக்கு இன்னும் பலர் பக்கபலமாக இருந்திருக்கலாம் அவர்கள் எல்லோரையும் எனக்குத் தெரியாது போனாலும்கூட அவர்களுக்கும் கூத்து ரசிகனான எனது பாராட்டுக்கள்.

கதைப்பிராக்கில முக்கியமான ஆளை மறக்கப்படாது. இயக்குநர் 'காலம்' செல்வம் அருளானந்தம்.
வாழ்த்துக்கள் அண்ணே.

இறுதியாகச் சில குறிப்புக்கள்:

தென்மோடியையும், வடமோடியையும் கலக்கக்கூடாது என்ற பொருட்பட சில கருத்துக்கள் உலாவின. இந்தக் கருத்து மெத்தத் தவறு. எமது தொன்மைக் கலை வடிவங்களை ஒன்றோடு ஒன்று பொருத்தம் கண்டு புதிய அரங்க வடிவங்களைப் பரீட்சிப்பதும், உருவாக்குவதும், அரங்காற்றுவதும் மிகத் தேவையான ஒன்று. இப்படிக் கலப்பதனால் தென்மோடி அழிந்து விடும் என்றோ வடமோடி கரைந்து விடும் என்றோ எண்ண வேண்டியதில்லை. அவை அவைகளாகவேதான் இருக்கும். அவற்றிலிருந்து புதுப் புது வடிவங்கள் எமக்குக் கிடைப்பதில் என்ன கெடுதல் நேர்ந்துவிடப்போகிறது. இன்னும் சொல்லப்போனால் எனக்குத் தெரிந்தவரை தென்மோடிக் கூத்தில் ஏற்கனவே காலத்துக்குக் காலம் மாற்றங்கள் நடந்திருக்கின்றன. புதிய இராகங்கள் இணைக்கப்பட்டுள்ளன. உதாரணத்துக்குப் பல கூத்துக்களைச் சொல்ல முடியும். காவலூர் ஞா.ம. செல்வராசா அவர்கள் எழுதிய 'ஞானசவுந்தரி' கூத்தில் சில புதிய இராகங்களைப் புகுத்தியுள்ளார். அவற்றிலொன்று, 'மரகதம்' என்ற படத்தில் வரும் 'புன்னகை தவழும் மதிமுகமோ' என்ற பாடலையும், இராகத்தையும் தழுவி 'ஆகா இவள் சந்திர பிம்பமோ' என புலேந்திரன் பாடுவதாக உள்ளது. மற்றும் நாரந்தனை அண்ணாவி இராயப்பு எழுதிய 'அன்னை வேளாங் கண்ணி', 'கண்ணொளி கொடுத்த காரிகை' ஆகிய கூத்துக்களில் பல புதிய இராகங்கள் பாடப்பட்டுள்ளன. தவிரவும், யாழ்ப்பாண நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை தென்மோடிக் கூத்துக்களில் கர்நாடக சங்கீதச் சாயல் எப்போதோ கலந்து விட்டது. வடபகுதியில் ஒருசில கரையோரக் கிராமங்களில் மட்டுமே கலப்பற்ற தென்மோடிக் கூத்துக்கள் உள்ளன என்பதை

அறுதியிட்டுக் கூறமுடியும்.

ஆக, எமது தொன்மைக் கலைகளிலிருந்து தேர்ந்தெடுத்த கூறுகளைக் கொண்டு புதிய அரங்காற்றுகைகள் உருவாகட்டும் விடுங்கள் தோழர்களே. இவ்வகை முயற்சிகள் எமது கலைத் தளங்களுக்குச் சாதகமே தவிர எவ்வித பாதகங்களும் இல்லை. அதேவேளை இன்னொரு ஆபத்தையிட்டு நாம் கவனமாக இருக்க வேண்டியுள்ளது. எமது கல்லூரிகளிலும், வளாகங்களிலும் பாரம்பரிய கூத்துக்களை கற்கை நெறியாக்கும் முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. நல்லதுதான். வரவேற்க வேண்டியதும்கூட. ஆனால் பரதநாட்டியத்தை எப்படி ஒரு அதிகாரக்கூட்டம் கையகப்படுத்தி தமது என்று சொந்தம் சொல்வதுபோல் எமது கூத்துக் கலையும் ஆகிவிடக்கூடாது.

பன்நெடுங்காலமாக உழைக்கும் மக்கள் கட்டிக் காத்துவந்த கலையை அதிகாரத்திலும், ஆதிக்கத்திலும் இருக்கும் கூட்டத்தார் கற்கைநெறி ஆக்குகிறோம் என்ற பெயரால் அபத்தநாடகங்கள் ஆடுவார்கள்.

'அக்கடமிக்கல் பியுப்பிள்' தாங்கள் சொல்வதுதான் சரியென்றும், தாங்கள் போடுவதுதான் திறமான தாளமென்றும், தாங்கள் கொட்டுவதே அற்புத மேளம் என்றும் வியாக்கியானம் கற்பிக்கத் தொடங்குவார்கள். பட்டங்களையும் விருதுகளையும் முதன்மையாகக் கொண்டு, சமூக அந்தஸ்தாகக் கட்டியமைக்கப்பட்ட யாழ்ப்பாணத்துக் கல்விச் சமூக முறைமையானது ஏட்டறிவு எட்டாத பாமரரையும், தொன்மைமிகு தமிழ்ப் பாரம்பரியக்கலைகளைக் காலகாலமாகக் கட்டிக் காபந்து பண்ணிவந்த உழைக்கும் மக்களையும் மிக இலகுவாகவே தூக்கி எறியும் என்பதில் எந்தச் சந்தேகமுமே படத்தேவையில்லை. ஏட்டறிவு துளியளவும் எட்டாத பாமர உழைக்கும் மக்கள் தமது வாழ்வனுபவத்தினூடாக எடுத்துச் சொல்லும் உண்மைகளை யாழ்ப்பாணத்துக் கல்விச் சமூகம் நிராகரித்தும், மறுத்தும் வந்ததுதான் கடந்தகால, நிகழ்கால அனுபவங்கள்.

பாடுபட்டு வாழும் அனுபவங்களினூடாகக் கண்டடையும் உண்மைகளை எடுத்துச் சொல்வதற்கும் கலாநிதிப் பட்டம் இருந்தால்தான் செல்லுபடியாகும் என்று சொல்வது சுத்த அபத்தம் மட்டுமல்ல, அயோக்கியத் தனமானதும்தான். இந்த இடத்தில் தான் தாம் கட்டிக் காத்து வளர்த்து வந்த தொன்மையான பாரம்பரிய தமிழ்க் கலைகளின் பொருட்டு உழைக்கும் மக்கள் உசாராயிருக்க வேண்டும்.

●

வடமோடிக் கூத்துக்களைப்போல் தென்மோடிக் கூத்துக்களுக்கும் ஆட்டம் இருந்தது, இடையிட்டு இல்லாமற் போயிற்று என்று சொல்வோரின் பொருட்டு நான் முரண்படுகின்றேன். இந்தக்கருத்தை முற்றுமுழுதாகவே நிராகரிக்கின்றேன். நிராகரிப்பதற்கு ஏதுவான காரணங்கள் உண்டு.

முந்தைய காலத்துத் தென்மோடிக் கூத்துக்கள் மிக நீண்டதாக, இரண்டு இரவுகள் அரங்காடல் செய்யும் படியாகவே இருந்திருக்கின்றன. அதாவது 20, 22 மணித்தியாலக் கூத்துக்கள். ஒவ்வொரு பாத்திரத்தையும் இருவர் அல்லது மூவர் பிரித்துச் செய்திருக்கிறார்கள். முன் அரசன், நடு அரசன், பின் அரசன் என இந்தப் பிரிப்புக்கள் இருக்கும். வடமோடிக் கூத்தின் முறைமை அண்ணாவியும், பக்கப் பாட்டுக்காரருமே அதிகம் பாடல்களைப்பாடுவார்கள். கூத்தர்கள் கணிசமான அளவில் பாடுவார்கள். இது ஆட்டத்தை முதன்மைப் படுத்தியதாகும். ஆனால் இதற்கு முற்றிலும் மாறாக தென்மோடிக் கூத்தில் கூத்தர்களே மிக அதிகளவில் பாடுவார்கள். இவை தவிர, தென்மோடிப் பாடல்கள் அதிகளவிலாவை மிக வேகமான தாளக் கட்டுக்களையும், அடைசொற்களையும், தாமே தம்மை தன்மொழிவு முறைமையால் சபையோர்க்கு முழுவதுமாக ஒப்புவிக்கும் வகையிலும் அமைந்ததாகும். ஒரு பாத்திரம் ஒரு காட்சியில் தோன்றும்போது ஒவ்வொரு தருவிலும் பல்லவி ஆறு சரணங்கள் இடம்பெறும். பக்கப்பாட்டுக் காரர்களுக்கு ஒவ்வொரு சரணத்தின் கடைசி வரி மட்டுமே தரப்படும். ஏனைய முழுப்பாடல்களையும் கூத்தர்களே பாடவேண்டும். இப்படி நிறையப் பாடல்களைப்பாடும் தென்மோடிப் பாத்திரமானது வடமோடி ஆட்டங்களைப்போல் கடுமையான ஆட்டங்களை ஆடிக்கொண்டே பாடுவதற்கான சாத்தியமே இல்லை. அதேவேளை தென்மோடிக்கூத்துப் பாடல்களின் தாளக் கட்டுக்களுக்கமைய உடலசைவுகளும், தாளநகர்வுகளும், நளினங்களும், முகபாவங்களுமே முக்கியத்துவமுடையன. பாட்டின் இடையில் இடைவாளை உருவுவது எந்த இடத்தில் நிகழ்த்த வேண்டும், கொலுவில் வீற்றிருக்கும் அரசன் மந்திராலோசனை நடத்தும்போது பாடப்படும் தருவின் இடையில் செங்கோலைக் கை மாற்றும்போது எந்த இடத்தில் மாற்ற வேண்டும் என்றும், சிம்மாசனத்தில் அரசன் சென்று அமர்வது எந்தச்சந்தர்ப்பத்தில், எப்படி அமர வேண்டும் என்றும்.... இப்படி நிறைய உள்ளன.

வடமோடி போன்ற கடுமையான ஆட்டங்கள் தென்மோடியில் இருந்திருக்க முடியாது என்பதற்கு இவை போன்ற இன்னும் நிறையக் காரணங்களைச் சொல்ல முடியும்.

இந்த இடத்தில் கத்தோலிக்கக் கூத்துக்கள் என்று சொல்பவர்களிடமும் நான் முற்றுமுழுதாக முரண்படுகின்றேன். அப்படியென்று ஒன்றுமே இருந்ததில்லை. ஏற்கனவே எம்மிடம் காலகாலமாக இருந்து வந்த கூத்துக்களை இடையிட்டு நாட்டுக்குள் புகுந்த கத்தோலிக்கம் தனது பிரச்சாரக் கதைகளைச் சொல்வதற்காகப் பயன்படுத்தியது. கத்தோலிக்கம் தேசத்துக்குள் வரும்போது எந்தக் கூத்துக்களையும் தன் கூடவே எடுத்து வந்து நமக்குத் தரவில்லை. எம்மிடமிருந்த கூத்துக்களின் பாடுபொருட்களை மாற்றியது அவ்வளவுதான். பாடுபொருளை மாற்றியதற்காக எமது தொன்மையான கலையை அந்நியக் கலையாகக் கதை கட்டிவிடுவது மிக மோசமான அபத்தம்.

பரதநாட்டியத்திலும், கர்நாடக சங்கீதத்திலும் வயலினை நீங்கள் உபயோகப்படுத்துவதால் பரதநாட்டியத்தையும், கர்நாடக சங்கீதத்தையும் வயலினை உருவாக்கிய ஸ்ட்ராடிவேரியஸ் (Stradivarius) இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர் ஆதலால் இத்தோல்நாட்டியம், இத்தோல்சங்கீதம் என்று சொல்கிறீர்களா என்ன?

●

'இன்று போய் நாளை வா' கூத்துப் பிரதியின் அண்ணாவியார் ஜோண்சன் ராஜ்குமார் அவர்களுக்கு!

புராணங்களும், இதிகாசங்களும், பழைய - புதிய ஏற்பாடுகளும் காலகாலமாக சொல்லித்தந்த கதைகளை நாமும் அந்தப்படிக்கே மீளமீளச் சொல்லவேண்டுமென்பதில்லை. அதைச் சொல்லத்தான் நிறையப் பேர் இருக்கிறார்களே, நாம் எதற்கு. அவர்கள் சொல்லித் தந்த, எழுதி வைத்த கதைகளை நாம் மறுவாசிப்புச் செய்ய வேண்டும். மாற்றுப் பிரதிகள் உருவாக்க வேண்டும். சமூக மாற்றத்துக்கான, இன்றைய தேவைக்கான புதிய பிரதிகளைப் படைப்போம்.

இலங்கேஸ்வரன் அறத்துக்குப் புறம்பாகப் போர் நடத்தினான் என்பதை சொல்லிச் சென்றவர்கள் உண்மை வரலாற்றைத்தான் சொல்லித் தந்தார்களா? ராமாயணத்தையே கம்பரும் வால்மீகியும் வெவ்வேறாகத்தானே சொல்கிறார்கள்?

ஒரு தேசத்தையும் மக்களையும் காட்டு மிருகங்களை வைத்துக் கொழுத்திச் சாம்பராக்கியது மட்டுமல்லாமல், அத்துமீறித் தேசத்தினுள் நுழைந்து ஆக்கிரமிப்புச் செய்த ராமனுக்கு அவனது தம்பி லெட்சுமணன் நீதி போதிப்பதாக ஏன் கதை சொல்ல முடியாமல் போகிறது நமக்கு?

யார் யாரோ தமது அக்கிரமங்களை நியாயப்படுத்தத் திரித்துச் சொன்ன கதைகளையே நமது பாடுபொருளாகச் சொல்லவேண்டிய தேவை நமக்கு இல்லை ஜோண்சன். நமது மக்களிடமிருந்து கற்றுக்கொண்ட அவர்களது படாத பாட்டு வாழ்வியலையே பாடுபொருளாக்கி அவர்களுக்கே கலையாகச் சொல்வோம் தோழா.

அதிகாரத்திலிருந்தோர் எழுதி வைத்த வரலாற்று மோசடிகளை விசாரணைகள் செய்வோம்.

புராண இதிகாச பழைய புதிய ஏற்பாட்டுக் கதைகளை மீள்வாசிப்புக்கு உட்படுத்துவோம்.

■ ■ ■

தாய்வீடு

‘அரங்கியல் விழா’
சில பார்வைகள்

அரங்கியல் விழா

அரங்கில் இருந்தபடியே பொன் விவேகானந்தன், பொன். பாலராஜன், செ. அருளானந்தம் அ. கந்தசாமி, க. கங்காதரன்... ஆகியோரைப் பாராட்டிக் குறுமடல் அனுப்பினேன். இது சற்று விரிந்த மடல்:

‘மெய்யோடு மெய்யாகி’ நாட்டிய நாடகம் நாற்பது நிமிடங்கள் நீண்டு உள்ளத்தை உறுத்தியது. எனினும் மூன்று நிகழ்ச்சிகளும் மூன்று மணித்தியாலங்களுக்குள் நிறைவேறி நெஞ்சுக்கு நிம்மதி தந்தன.

நாடக வழமைக்கு மாறாக ‘அகவெளிப் பொய்களில்’ நிகழ்வைவிட உரையாடல் அதிகம். மிகவும் கனைதிவாய்ந்த உரையாடல் அது. ‘சுயம்’, ‘மனச்சாட்சி’ ஆகிய சொற்கள் இரண்டும் திரும்பத் திரும்பக் காதில் விழுந்தன. மனச்சாட்சியை இழந்தோர் தமது சுயத்தையும் இழந்தோரே என்பது இடித்துரைக்கப்பட்டது. சுயத்துக்கும் மனச்சாட்சிக்கும் விரோதமான அகவியல்பே போலிப் புறவாழ்வின் தோற்றுவாய் என்பதும் உணர்த்தப்பட்டது. ஊர்திரும்பிய பாத்திரம் அதை உணரும் தறுவாயில், அதாவது தனது மனச்சாட்சிக்கு அமைந்து சுயம் எய்தும் தறுவாயில் நாடகம் முடிவடைகிறது. தமது சுயத்தை எய்திய பெற்றோரால் பிள்ளைகளின் சுயத்தைப்புரிந்து கொள்ள முடிகிறது. மகளின் சுயத்தை அவளுக்கு ஈய மறுத்தபடியால் அதை நாடி அவள் அன்று பறந்து சென்றதை தகப்பனால் இன்று புரிந்துகொள்ள முடிகிறது. அதையே தனது ‘தனித்துவம்’ என்று அவள் குறிப்பிட்டது அவருக்கு இப்பொழுது நினைவுக்கு வருகிறது. கதையோடு கதையாக, தமது சுயத்தையும் மனச்சாட்சியையும் தொலைத்துவிட்டு, ஒட்டுண்ணிப் பிழைப்பு நடத்தும் உடன்பிறப்புகளையும் பொன் விவேகானந்தன் சாடத் தவறவில்லை. மொத்தத்தில் ‘அகவெளிப் பொய்களை’ ஒரு வழமையான நாடகம் என்று கொள்வதை விட, ஓர் உரைநாடகம் என்று கொள்வதே சாலவும் பொருந்தும்.

இராவணனைத் தடுத்தாட்கொள்ள எத்தனித்தோர்: மனைவி மண்டோதரி, தம்பி கும்பகர்ணன், தம்பி விபீடணன், மகன் இந்திரசித்து. விபீடணனைத் தவிர வேறெவரும் இராவணனை விட்டுப்பிரியவில்லை. இராவணன் ஓம்பிய தமது உடலையும், அதனோடு கூடிய உயிரையும் அவனுக்கே ஈந்தவர்கள் அவர்கள். அவர்களுள் கும்பகர்ணனுக்கு முதன்மை கொடுத்து நிகழ்த்தப்பட்ட கூத்து: ‘இன்று போய் நாளை வா.’ சீதையை விடுதலைசெய்து அறங்காக்கும்படி தமையன் தாள்பணிந்து மன்றாடுகிறான் தம்பி. அது கேட்டு வெகுண்டெழும் தமையனுக்காகப் போராடி உயிர் துறக்கும் கும்பகர்ணன் ஓர் உருக்கமான பாத்திரம். செ. அருளானந்தத்தின் நெறியாள்கையை அணிசெய்யும் அம்சங்களாக இவற்றைக் குறிப்பிடலாம்: பாத்திரங்களின் உடுப்பும் மிடுக்கும் பக்கப்பாட்டும் பக்க வாத்தியமும் வி. கருணாவின் பின்திரைக் காட்சி, குறிப்பாக மேடையும் பின்திரையும் இரண்டறக் கலந்த போர்க்களக் காட்சி. கூத்து அதன் உச்சத்தைத் தொட்டது போர்க்களக் காட்சியில் என்பதற்கு உடனிருந்த நண்பர்கள் கண்கண்ட சாட்சி.

- மணி வேலுப்பிள்ளை

•

அரங்கியல் விழா 2016

புலம் பெயர் தேசங்களில் தமிழ் மேடை நாடகங்களுக்கான களமும் அதற்கான சுவைஞர்களும் அதிகமாக இருக்கும் இடமுமாக கனடா அமைந்திருப்பது மிக்க மகிழ்வை தருகின்றது. அமைப்பு ரீதியாக அளிக்கை செய்யப்பட்டாலும் சரி பாட சாலை பழைய மாணவர் சங்கங்களில் அளிக்கை செய்யப்பட்டாலும் சரி இலக்கிய அமைப்புகள், பொது அமைப்புகள் ஊடகங்களில் நிகழ்வுகளில் அளிக்கை செய்யப்பட்டாலும் சரி மேடை நாடகத்துக்கு என ஒரு தனி வரவேற்பு இருப்பது என்பது பொதுவான உண்மையே.

தாய்வீடு பத்திரிகையின் ‘அரங்கியல் விழா - 2016’ இந்த மாத ஆரம்ப வார இறுதி நாட்களில் விழா கண்டது மிக்க மகிழ்வை தருகின்றது. தொடர்ந்து மூன்றாவது வருடமாக இந்த நிகழ்வை தாய் வீடு நடத்தி வருவது ஒரு நல்ல சமிக்கையை காட்டுகிறது. முன்னைய இரு நிகழ்வுகளுடன் பார்க்கும் பொழுது இந்த முறை அரங்கியல் விழா இன்னும் மெருகேறி இருப்பது தெரிகின்றது. அந்த வகையில் இந்த முயற்சி வெற்றி பெற உழைத்த அத்தனை கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள். அவர்கள் செலவழித்த நேரம் மற்றும் பொருள் என்பதற்கு நல்ல பிரதி பலன் கிடைத்தது என்பது அரங்கில் அவர்களுக்கு இருந்த வரவேற்பை பார்க்கும் பொழுது தெரிந்தது.

மொத்தத்தில் மூன்று நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன. நடனம், நாடகம், கூத்து என இசையுடன் கலந்த இயல்களின் வெளிப்பாடாக அமைந்தது பார்வையாளர்களை அவற்றுடன் ஒன்றிக்க வைத்தது.

கனடா மேடைகளில் நன்கு அறியப் பெற்ற சிறந்த நடிகரும் நாடக நெறியாளருமாகிய துஷி ஞானப்பிரகாசம் அவர்களது கணீரென்ற குரலுடன் ஆரம்பமான நிகழ்வுகள் மார்க்கம் நரகசபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் சுருக்கமான வாழ்த்து செய்தியுடன் அளிக்கைகள் ஆரம்பமானது.

முதலில் ஆடலகம் நாட்டிய பள்ளியின் நடன மாணவர்களது ‘மெய்யோடு மெய்யாகி’ எனும் நடனம் அமைந்திருந்தது. தொல்காப்பியத்தில் வருகின்ற எட்டு மெய்ப்பாடுகள் வெளிப்பாடாக அந்த நடனம் அமைந்திருந்தது. அந்த எட்டு மெய்ப்பாடுகளுக்குள்ளும் நான்கு வெளிப்பாடுகள் என மொத்தத்தில் 32 வகையான வெளிப்பாடுகளை ஏறத்தாழ முக்கால் மணி நேரத்தினுள் நடன மாந்தர்கள் வெளிப்படுத்தி காட்டினார். சிறு வயது தொடக்கம் பெரிய வயதினை உடைய நடன மாந்தர்கள் இவற்றில் பங்கெடுத்து மிகத் திறமையாக தங்களது அசைவுகள், முகபாவங்கள், ஆடையலங்காரங்கள், சிறு பொருட்கள் மூலமாக அளிக்கை செய்திருந்தனர். இந்த நிகழ்வில் பங்கு கொண்ட அத்தனை பேரும் பாராட்டுக்குரியவர்கள். குறிப்பாக அதன் இயக்குனர் அனோஜினி குமாரதாசன் அவர்கள் சிறப்பான பாராட்டுக்குரியவர். இருப்பினும் அவர்களது அளிக்கையினை நெறியாளும் பொழுது கூடுதல் கவனம் செலுத்தியிருக்க வேண்டும் போன்று உள்ளது. மேடைப் பாவனை, ஆடைத் தெரிவு, பொருட்களை கையாளுதல் என்பவற்றில் கூடுதல் கவனம் செலுத்தி இருந்தல் வேண்டும்.

அடுத்து பொன்னையா விவேகானந்தன் அவர்கள் பிரதியாக்கம் செய்து நெறியாள்கை செய்த ‘அகவெளிப் பொய்கள்’ எனும் நாடகம் மேடையேறியது. எமது சமூகத்திடம் புரையோடிப்போய் கிடக்கும் சில பிரச்சினைகளை முன்வைத்து மூன்று பிரிவுகளாக இந்த நாடகம் அமைந்திருந்தது. மூன்று பிரிவுகளாக இருந்தாலும் அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாக அமைத்திருந்தது ஒரு சிறந்த உத்தியாகப் பார்க்கலாம். ரொறன்ரோ மேடைகளில் நன்கு அறிமுகமான கலைஞர்களுடன் புதிய கலைஞர்களையும் சேர்த்து ஒரு சோர்வில்லாமல் நகர்ந்தது இந்த நாடகம். மிகை வெளிப்பாடு என்பது சில இடங்களில் அளவுக்கு அதிகமாகவும் சில இடங்களில் தேவையின் பொருட்டு அவை செய்து காட்டப்பட வேண்டியும் உள்ளது. இங்கே சில இடங்களில் அந்த தேவை இருப்பதனை இயக்குனராக அவர் கண்டு கொள்ளவில்லை போலிருந்தது. இப்படியான சில சிறிய விடயங்களையும் கவனத்தில் கொண்டிருந்திருந்தால் நாடகம் இன்னும் கொஞ்சம் மெருகேறி இருந்திருக்கக் கூடும்.

இடைவேளையின் பின்னர் காலம் செல்வம் அவர்களின் நெறியாள்கையில் ‘இன்று போய் நாளை வா’ எனும் கூத்து மேடையேற்றப்பட்டது. கூத்துக் கலை அழிந்து வருகின்றது என பரவலாகப் பேசப்பட்டாலும் அதனை மீளவும் தூக்கி நிறுத்துவதற்கான வேலைகள் பல தரப்பிலும் முனைப்புடன் செய்யப்பட்டு வருகின்ற பொழுதிலும் கூத்துக்கான வரவேற்பு என்பது பார்வையாளர்களிடம் இன்றும் மேலும் பெருகி வருவதை அன்று காணக்கூடியதாக இருந்தது. வடமோடி தென்மோடி கலந்த ஒரு கூத்தாக இந்த முயற்சி அமைந்தது இன்னும் பாராட்டப்பட வேண்டியதொன்று. கனடாவில் இருக்கக்கூடிய மிகச் சிறந்த கூத்து கலைஞர்களையும் கூத்து கலையில் ஆர்வம் கொண்ட புதியவர்களையும் இணைத்து ஒரு மிகச் சிறந்த அளிக்கையாக அமைந்தது. கூத்து ஆரம்பமாவதற்கு முன்னர் இலங்கை மன்னன், கும்பகர்ணன் போன்றவர்களது ஓவியங்களைப் பாவித்து கூத்துக்கான அறிமுகத்தினை ஏற்படுத்தியது ஒரு புதிய உத்தியாகப் பார்க்கலாம். கூடவே கதை நகரும் களங்களை பின் திரையில் ஓவியங்களாகவும் ஒளிப்படங்களாகவும் காண்பித்தமை பார்வையாளர்களாகிய எங்களது ரசனையை இன்னொரு தளத்துக்கு கொண்டு சென்றது. பாடல், இசை, பிற்பாட்டு கலைஞர்கள் அனைவரும் தங்களது பங்களிப்பை மிக நேர்த்தியுடன் வெளிப்படுத்தியிருந்தார்கள். தேவையான இடங்களுக்கு தேவையான அளவு ஒளியமைப்பும், பிசிறல்கள் இல்லாத ஒலி நேர்த்தியும் திரையில் விழுத்திக் காட்டிய விம்பங்களும் மிகவும் செம்மையாக இருந்தது பாராட்டத்தக்கது.

முன்னைய அரங்கியல் நிகழ்வுகளை விடவும் இந்த முறை ‘அரங்கியல் விழா’ ஓர் உயர்வுத் தரத்தை எட்டியிருக்கின்றது. மேலும் மேலும் சிறப்புடன் வரட்டும் அடுத்த அரங்கியல் விழாக்கள்.

- சண் திருநாவுக்கரசு

•

தாய்வீடு பத்திரிகையின் அரங்கியல் விழா - 2016, ஒரு நோக்கு

கனடாவில் வெளிவரும் தாய்வீடு மாதாந்த பத்திரிகை, மெய்யோடு மெய்யாகி, அக வெளிப்பொய்கள், இன்றுபோய் நாளை வா ஆகிய மூன்று கலை வடிவங்களை அரங்கியல் விழாவாக 02. 10 2016 அன்று மார்க்கம் கலை அரங்கில் மேடையேற்றியிருந்தது. அதனைப் பார்த்து ரசிக்கும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியிருந்தது.

தொடர்தல் 91ம் பக்கம்

90ம் பக்கத் தொடர்ச்சி...

மூன்று நாடகங்களின் பெயர்களுமே சற்று வித்தியாசமாகவும் புதுமையாகவும் இருந்தன.

முதலில் வந்த மெய்யோடு மெய்யாகி:

முதலில் மேடையேறிய நாடகமான மெய்யோடு மெய்யாகி நாடகத்தை பதினொரு இளம் பெண்களும் சிறுமியரும் உயிரூட்டியிருந்தனர். நாம் இன்று கூறும் நவரச பாவங்களை ஏற்கனவே தொல்காப்பியத்தில் குறிப்பிட்ட நகை, வியப்பு, அழுதல், அச்சம், இளிவரல், சினம், பெருமிதம், மகிழ்ச்சி ஆகிய எட்டு மனித உணர்ச்சிகளையும் உடல்மொழிமூலமும் முகபாவ மூலமும் வெளிப்படுத்தலாம் என்பதனை மேடையில் வெளிப்படுத்திய விதம்; இதை விட மேலாக இனி எப்படி இதைக்கூற முடியும் எனும்படி அபாரமாக அமைந்திருந்தது. நாம்கூட இவ்வாறு உணர்ச்சிகளுக்கு உள்ளாகும்போது இப்படித்தானே எம் உடல்மொழியும் வெளிப்படுகின்றது என எம்மையே ஒருமுறை திரும்பிப் பார்த்துக் கொண்டோம். என்ன.. சில இடங்களில் அவர்கள் என்ன விடயத்தை சொல்ல வருகிறார்கள் என்பதை விளங்குவது கொஞ்சம் கஸ்டமாக இருந்ததால் கதை மாந்த ருடன் பயணிக்க முடியவில்லை என்றுதான் கூறவேண்டும். வேண்டியபோது கதைப் பின்புலத்தை அறிவித்திருந்தால் இலகுவாக விளங்கக்கூடியதாக இருந்திருக்கும் முயற்சியின் விளைச்சலும் சற்றுக் கூடியிருக்கும்.

அடுத்ததாக வந்தது அகவெளிப் பொய்கள்:

நாம் தினமும் தீவிரமாக இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றோம். எமது முயற்சிகள், செய்கைகள் சரியானவையாய், பிரயோசனமானவையாய் எமக்கும் எம் சார்ந்தவர்களுக்கும் நல்ல பலன் தரும் என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் அவற்றின் பலாபலன்கள் எதிர்மாறாய் அமைந்துவிடும்போது அசந்துவிடுகின்றோம், உடைந்துவிடுகின்றோம். எம்மையே எம்மால் புரிந்துகொள்ள முடிவதில்லை. குழப்பம் ஒரே குழப்பம். புலம் பெயர் தேசத்தில் இரவுபகல் பாராது பனி குளிர் பாராது கஸ்டப்பட்டு உளைத்த பணத்தை அங்கத்தைய உறவுகள் அனுபவிக்கும் விதம்; வலி இவர்களுக்கு, வசதி அவர்களுக்கு. அங்கு சென்று அவர் அதிர்ந்து விடுகிறார். குழம்பி நிற்கும் அவரை அவரின் நண்பர் குழப்பம் தீர்க்க வருகிறார். குழப்பம் தீர்ந்ததா இன்னமும் குழப்பி விட்டாரா என்பதே கேள்வி. மெய்யான உழைப்பைப் பொய்யாக்கும் மாந்தர்கள். சிந்திக்கவைக்கும் சம்பாசனை, யதார்த்தத்தின் வெளிப்பாடு.

இறுதி நாடகம் இன்றுபோய் நாளை வா:

இராம காவியத்தின் கடைக்கூறு. இராம இராவண யுத்தக் காட்சிகள். மேடையேற்றப்பட்டன. பங்குபற்றியோரின் மிடுக்கான நடை, துடிப்பான நடிப்பு. இதிகாச நாடகத்துக்கு அழகு சேர்த்தன. இராவணனும் கும்பகர்ணனும் மேடையில் கம்பீரமாய்க் காட்சியளித்தனர் பங்குபற்றிய கலைஞர்களும் உடை அலங்காரம் பக்கப்பாட்டு பக்கவாத்தியம் இயக்கம் அனைத்துமே சிறப்பாக-அப்போதைய எம் நாட்டுக்கூத்தினைக் கண்முன் கொண்டுவந்தன. இன்றைய நிலையைக் கருத்தில் கொண்டு குறுகிய நேரத்தில் நாடகம் முடிவுறுத்தப்பட்டது.

என்ன நாடகம் முடியுமுன்னமே நாடகத்தை முடித்துவிட்டார்களே என சிலர் பேசிக் கொண்டதும் காதில் விழத்தான் செய்தது. நாடகம் இன்றுபோய் நாளை வா என்பதேயன்றி இராவணனின் மரணம் என்று இல்லையே என்று பார்த்தால் முடிவு சரி தான்.

சரித்திர இதிகாச நாடகங்களை மறந்து வரும் இன்றைய நாளில் இப்படி ஒரு நாடகத்தை மேடையேற்றியதே பெரிய விடயம்தான்.

தாய்நாட்டிலல்ல, தாய்வீட்டிலும் அன்றைய மாலைப்பொழுதில் பார்வையாளர் அனைவருக்கும் வழங்கப்பட்டது, வடை பாயாசத்துடன் ஒரு நாடகச் சாப்பாடு.

- பொன். கந்தவேல்

•

தாய் வீடு நடத்திய அரங்கியல் விழா

இலத்திரனியல் சாதனமும் அதன் தாக்கத்தால் விரல் நுனியில் எல்லாமுமே என்று வாழும் இந்த நவநாகரிக வாழ்வியலில் புதைந்து, மீளெழ முடியாமல் வாழ்கின்ற சூழ்நிலையில், அவற்றைப் புறந்தள்ளி, இரண்டரை மணி நேரம் எவ்வாறு போயிற்று? என்று தெரியாமலே அசராது இருக்க வைத்தது கடந்த ஒக்டோபர் 2இல் தாய்வீடு நடத்திய அரங்கியல் விழா.

எங்களது பாரம்பரிய கலைகளாகிய நாட்டியம், நாடகம், நாட்டுக்கூத்து என்று முப்பெரும் படையல்களைப் படைப்புக்களாகத் தந்த தாய்வீடு இதழ் குழுமத்தையும் அதன் ஆசிரியரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இரண்டு அமர்வுகளாக நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் மாலை அமர்வுக்குச் சென்றிருந்தேன். போகும் வழியில் மிகக் கடுமையாக மழை. ஆனால் நிகழ்வு நடைபெறும் மார்க்கம் தியேட்டர் அருகே மழை சிறு தூறலாகவே காணப்பட்டது.

குறிப்பிட்டது போல் சரியாக 6.40 மணியளவில் அரங்கினுள் சென்றபோது மார்க்கம் மாநகரசபை உறுப்பினர் திரு. லோகன் கணபதி சிறப்புரையாற்றிக் கொண்டிருந்தார். அவர் தன் உரையில், மார்க்கம் அபிவிருத்தி பற்றியும் தமிழர் கலை, பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றைக் கனடிய மண்ணில் பேணப்பட தன்னால் செய்யப்படுகின்ற பணிகள் பற்றியும் தெளிவாகவும் அதேவேளை சுருக்கமாகவும் எடுத்துரைத்தார்.

அதன் பின் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

முதலில் நடன நிகழ்வு இடம்பெற்றது. இது பற்றி எழுதுவதற்கு முன்பு அருட்திரு கிபாருபானந்த வாரியார் பற்றி இரு வரிகள் எழுதித் தொடர்கின்றேன். அவர் தமிழ், இலக்கியம், ஆன்மீகம் போன்ற தலைப்புகளில் ஆற்றிய சொற்பொழிவுகள் ஏராளம். படித்தவர் முதல் பாமரர் வரை மிக எளிமையாகவும் நகைச்சுவையாகவும் அவற்றைக் கொன்டு சென்றமை அவரது தனித்தன்மை ஆகும். அதாவது எந்த விடயமும் மக்கள் புரியும் வண்ணம் கொண்டு சென்றாலே அது வெற்றிபெறும்.

இனி நடன நிகழ்வுக்கு வருகிறேன். மிக நேர்த்தியாகத் தயார் செய்யப்பட்டு பல இளம் நடனமணிகளால் இந்த நடனம் நிகழ்த்தப்பட்டது.

தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள மனித உடலில் தோன்றக்கூடிய 8 வகையான மெய்ப்பாடுகளையும் ஒவ்வொன்றையும் 4 வகையாகப் பகுத்து, மொத்தம் 32 நுண்மையான வெளிப்பாடுகளாகக் கதைக களோடு கூடிய காட்சிகளாக இந்த நடனம் அமைந்திருந்தது.

நிகழ்வு தொடங்கும் முன்னரே இது பற்றிய முன்னுரை இடம் பெற்றதால் அரங்கம் ஆவலாகக் காத்திருந்தது. மிகப்பிரமாண்டமாக ஆயத்தப்படுத்தி நடந்தேறிய இந்த நிகழ்வு சிலரால் மட்டுமே விளங்கி ரசிக்க முடிந்தது என்பது ஒரு குறையே.

32 வகையான வெளிப்பாடுகளையும் உய்த்தறிந்து விளங்க முடியாதிருந்தமையும் எல்லாமுமே ஏறத்தாழ ஒரே மாதிரியாக இருந்தமையும் நேரம் சற்று நீண்டு விட்டதைப் போன்று இருந்தமையும் இக் குறைபாட்டுக்குக் காரணம் எனலாம்.

அரங்கினுள் வேற்றினத்துப் பார்வையாளர்களும் நிறைந்திருந்தமையால் தமிழுடன் ஆங்கிலத்திலும் முன்னுரையைத் தந்து ஒவ்வொரு வெளிப்பாடுகள் அரங்கில் தோன்றும் போதும் திரையில் ஆங்கிலத்திலும் தமிழிலும் விளக்கங்கள் இடம்பெற்றிருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும்.

அதிகமான பிள்ளைகளை இணைத்து நீண்ட நிகழ்வாக இது அமைவதற்கு கடும் உழைப்பு அவசியமானது. இவ்வகையில் இதை ஆடலாக உருவாக்கிய நடன ஆசிரியை அனோஜினி குமரதாசனையும் எழுத்துருவாக்கம் செய்த பொன்னையா விவேகானந்தனையும் பாராட்டலாம்.

அடுத்த நிகழ்வாக அகவெளிப் பொய்கள் என்ற நாடக நிகழ்வு நடைபெற்றது. இதனை எழுதி இயக்கியிருந்தார் பொன்னையா விவேகானந்தன்.

'மனிதனின் அகம் புறமாக நிகழ்கின்ற தேடல்கள்' என்ற முன்னுரையுடன் இந்த நிகழ்வு அரங்கேறியது. இது பல முகங்களை வெளிப்படுத்தியது. இதில் மனதில் நின்றவர்கள் இருவர். ஒருவர் டிலிப்குமார். பல மேடைகள் கண்டவர். இவரது நடிப்பு மரபுக் கவிதை போன்றது. நடிப்பைப் பிழிந்து அதிகம் உணர்ச்சியை வெளிப்படுத்துகிற நடிப்பாகவும் இது இருந்தது. மற்றவர் கந்தசாமி கங்காதரன். முதல் தடவையாக அவரது நடிப்பை பார்த்து ரசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. மிகவும் இயல்பாக அனாயாசமாக நடித்திருந்தார். அதாவது புதுக்கவிதை மாதிரி. ஏனையோரும் நன்றாகவே நடித்திருந்தார்கள்.

மூன்றாவதாக 'இன்று போய் நாளை வா' என்கின்ற கூத்து நடைபெற்றது. இது அரங்கியல் விழாவுக்கே முத்தாய்ப்பாக அமைந்தது எனலாம். இதில் நடித்தவர்கள் எல்லோரும் தங்கள் பாத்திரங்களுக்கு உயிர் கொடுத்திருந்தாலும் கும்பகர்ணனே மனதில் நின்று நிலைக்கிறார். அவரது உருவமும் நடிப்பும் எங்கள் மனதில் உள்ள கும்பகர்ணனை அரங்கில் கொண்டு வந்தது. அவர் மேடையில் தோன்றும் போது சபையில் தோன்றிய கரவொலி இதற்குச் சான்று பகர்ந்தது. இதில் தோன்றிய கலைஞர்களில் கிருபா கந்தையாவை மட்டுமே எனக்குத் தெரியும். அவரும் மிகச் சிறந்த நடிகன். ஆனால் இதில் அவரைச் சரியாகப் பயன்படுத்தாமல், என் போன்ற அவரது ரசிகர்களை ஏமாற்றி விட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது.

மொத்தத்தில் அரங்கியல் விழா அரங்கு நிறைந்த பார்வையாளர்களை அசையாமல் உட்காவைத்த விழா, தாய்வீட்டுக்கே உரிய தனித்துவமான விழா எனக் கூறலாம்.

- ரவி சுப்பிரமணியம்

■ ■ ■

அரங்கியல் விழா-2016...

87ம் பக்கத் தொடர்ச்சி...

சமூகத்தில் நல்விழுமியங்கள் பற்றிய விழிப்புணர்வை ஊட்டுகிற, பேரவலங்களால் பாதிக்கப்பட்ட மக்களை கலைகள் ஊடாக ஆற்றுப்படுத்துகிற பணிகளைச் செய்து வருகிறது. அந்த வகையில் மக்களின் விருப்பத்துக்கு மாறாக, சுயநலத்துக்காக ஆட்சியாளர்கள் போரை நடத்துவதை இக்கூத்து கேள்விக்குள்ளாக்கி உள்ளது.

பொதுவாக நாடகம் ஒன்று சரியில்லை என்றால் 'என்னடா கூத்தாடுகின்றாங்கள்' என்று சொல்வதுண்டு. இவ்வாறு கூத்து என்பது இழிவானதொரு சொல்லாக, கேலியாகப் பேசப்பட்ட ஒரு காலம் இருந்தது. அதிலிருந்து மீட்டெடுத்து கூத்துக்கலையை ஈழத்தில் வளர்த்தெடுத்ததில் கரையோரக் கிராமத்து மக்களுக்கு குறிப்பாக கத்தோலிக்க மதத்தவர்களுக்கும் பெரும் பங்குண்டு.

மேலோட்டமாகப் பார்த்தால் ஏதோ பாட்டும் ஆட்டமும் உள்ள ஒரு சாதாரண கலை வடிவம் போல் கூத்துத் தோன்றும். ஆனால், எப்போது கட்டியச் சிந்து பாட வேண்டும், எப்போது எட்டுப் போட வேண்டும், சுழன்றாட வேண்டும் என்றெல்லாம் கூத்தில் விதிமுறைகள் உள்ளன. மேலும் வடமோடி, தென்மோடி, அத்துடன் வெவ்வேறு பிராந்தியங்களில் நிகழும் ஆட்டங்கள் என்று பல்வேறு ஆட்டங்கள் உள்ளன. ஒரு காட்சியில் பாடலுக்குரிய சரியான ராகத்தைத் தேர்ந்தெடுத்து அதற்குப் பொருந்திவரும் ஆட்டத்தை நிகழ்த்தும் போது கூத்துக் கலை தனது நேர்த்தியையும் அழகையும் பெறுகிறது.

இவ்வாறு தான் 'இன்று போய் நாளை வா' என்ற கூத்து சிறப்பாகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் மேடையில் நிகழ்த்தப் பட்டது. கூத்து பற்றிய பின்புலம் இல்லாது, புலம்பெயர் மண்ணில் இருந்த வாறு, கூத்தின் வித்துவங்களைக் கற்றறிந்து அதனைத் தொடர்ந்து மேடையேற்றி வரும் கலைஞன் 'காலம்' செல்வம் அவர்களை எப்படிப் பாராட்டினாலும் தகும்.

இலங்கேஸ்வரனாகத் தோன்றிய ரெஜி மனுவேல்பிள்ளை, கும்பகர்ணனாக வேடமேற்ற அசோக் மைக்கல்ராஜ், மண்டோதரியாக வந்த பாவனி சிவகுமரன் மற்றும் பல்வேறு வேடங்கள் ஏற்ற கிருபா கந்தையா, களப்பூரான் தங்கா, வேந்தன் பேரின்பநாதன், சுதர்சன் சவரிமுத்து, அன்ரன் சந்தியாப்பிள்ளை எல்லோரும் எந்தவித பிசிறும் இல்லாமல் பாடல்களைப் பாடியும் சிறப்பாக ஆடியும் நிகழ்வுக்குப் பெருமை சேர்த்தனர்.

இலங்கேஸ்வரன் கோபத்தில் மண்டோதரியைச் சுற்றி ஆடியதும், சுழன்றவாறு ஆடியபடி உள்ளே சென்றதும், 'போதும் மன்னா போதுமே மன்னா போர் வேண்டாம் மன்னா' என்ற பாடலை சுற்றி நின்று வீரர்கள் பாட, நடுவில் நின்ற நிலையில் குதிக்காலை உயர்த்திய அவரது மெல்லிய அசைவும் இன்றும் கண்முன் நிற்கிறது. இலங்கேஸ்வரன் கும்பகர்ணனுடன் இணைந்து ஆடியதும் முடிவில் போருக்குச் செல்லும் காட்சியும் இக்கூத்தினை வேறொரு தளத்துக்குக் கொண்டு சென்று விட்டது.

மருதுவின் ஒவியங்கள் மூலமாக காட்சிகளை வடிவமைப்பு செய்து மெருகூட்டிய கருணா, பக்கப்பாட்டு பாடிய நோயல் றொனால்ட் தேவதாசன், துரை அன்ரனி, மிருதங்கம் வாசித்த ரிதுஸ்கரன் இரமணீகரன், ஆர்மோனியம் இசைத்த சண்முகநாதன் இரமணீகரன் ஒளி நிர்வாகம் செய்த அருண்மொழிவர்மன் எல்லோருக்கும் இக் கூத்தின் வெற்றியில் பங்குண்டு.

இக்கூத்தைப் பார்த்து மண்டபத்தைவிட்டு வெளியேறிய போது ஊரில் மண்ணில் குந்தியிருந்து கூத்துப் பார்த்த பேரானந்த நினைவு நிறைந்து மனதைக் கிளர்த்திவிட்டிருந்தது.

sriskandan@thaiveedu.com

எழுத்தாளர் இணையம் நடத்திய நாடக விழா

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய நாடக விழா:

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் ஒக்ரோபர் 16ம் நாள் ஸ்கார்பரோ பெரிய சிவன் கலாச்சார மண்டபத்தில் பேராசிரியர் இ. பாலசுந்தரம் தலைமையில் 'வேரும் விழுதுகளும்' என்ற பெயரில் நாடக விழா ஒன்றினை நடத்தியது. கடந்த 23 ஆண்டுகளாக இயங்கிவரும் எழுத்தாளர் இணையம் முதன் முறையாக நாடகவிழா நடத்தியமை குறிப்பிடத்தக்கது. இந்நாடக விழாவில் ஈழத் தமிழரது தேசியக் கலைவடிவம் எனப் போற்றப்படும் நாட்டுக் கூத்தும், ஒரு நாட்டிய நாடகமும் இடம்பெற்றன. முதியோருக்கான நியூ ஹொறைசன் திட்டத்தின் நிதியுதவியுடன், அதன் வரையறைக்கு அமைவாகத் தமிழர் சமூகத்தில் முதியோர் எதிர்கொள்ளும் துன்பங்கள், துயரங்கள், பிரச்சினைகள் ஆகியவற்றை உயர்கல்விப் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பயிலும் மாணவர் மூலமாகத் திரட்டப்பட்டு, அத்தகவல்களில் முதன்மையானதும், உடனடிக் கவனத்திற்குமுரியதுமான 'முதியோரைத் துன்புறுத்தல்' என்ற விடயத்தைக் கருவாகக்கொண்டு நாட்டுக் கூத்தும், நாட்டிய நாடகமும் மிக்க நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டு அளிக்கை செய்யப்பட்டன.

எமது பாரம்பரியக் கலையான கூத்து மூத்தோரால் பேணப்பட்டுவந்ததாகும். அந்நிலையை மாற்றி, 'வீட்டுக்கு வீடு வாசற்படி' என்ற நாட்டுக்கூத்தை அண்ணாவியார் மதிபாஸ்கரன் இளையோருக்குப் பயிற்றுவித்து, அதனை மேடையேற்றியபோது, சபையோர் மிக்க ஆர்வத்துடன் அக்கூத்தைப் பார்த்து மகிழ்ந்தனர். அத்துடன் முதியோர் பிரச்சினைகளை இளையோரும் உணரத்தக்கவகையில் இக் கூத்தும் பரத நாட்டியமும் ஆக்கம் பெற்றிருந்தமை பாராட்டுக்குரியது. கூத்துக்கலையை இளையோருக்குப் பயிற்றுவித்து மேடை ஏற்றிய அண்ணாவியார் மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை அவர்களின் முயற்சி மிகவும் மெச்சத்தக்கது. வடமோடி மரபில் அமைந்த இந்த நாட்டுக்கூத்தைப் பார்த்து ரசித்த அனைவரும் அதில் பங்கு பற்றிய மாணவர்களின் அபாரத் திறமையைப் பாராட்டிப் பேசியதைக் கேட்கக் கூடியதாக இருந்தது.

அடுத்து இடம்பெற்ற 'பணமும் பாசமும்' என்ற நாட்டிய நாடகத்தை அண்ணாமலை கனடா வளாக நுண்கலை மாணவர்கள் மிகச் சிறப்பாக நிகழ்த்தினர். இதனை அவ்வளாகத்தின் நடன ஆசிரியை திருமதி சூரியகலா ஜீவானந்தம் தயாரித்து வழங்கியிருந்தார்.

இவ்விரு கலை வடிவங்களையும் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் தயாரித்தளித்தமை இவ்விணையத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியைக் குறிக்கின்றது எனலாம்.

புதிய அணுகுமுறையுடன் சமூகப் பிரச்சினைகளை நாடக வடிவங்களாகப் படைத்து அவற்றை மேடை ஏற்றியமை புதிய சமூக நோக்குடன் இந்த இணையம் செயற்படத் தொடங்கியுள்ளதைக் காட்டுகின்றது.

'தாய் வீடு' பத்திரிகையும் இந்நாடக விழாவின் சமூக முக்கியத்துவத்தையும் அதன் வெற்றியையும் பாராட்டுவதில் மகிழ்ச்சி யடைகின்றது.

உலகத்தமிழ் நாடகவிழா

- க. வாசுதேவன் -

பொதுவாகவே புலம்பெயர்ந்து வாழும் சமூகங்கள் தங்களது கலை கலாச்சாரங்களை பேணுவதில் முனைப்புடையவர்களாகக் காணப்படுகிறார்கள். ஒரு வகையில் அதுவே அவர்களது அடையாளங்களைப் பேணும் வழியாகவும் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

அடையாளப் பேணலுக்கான கலைவடிவங்கள் ஒருபுறமிருக்க, சமூக அரசியல் விழிப்புணர்வு மற்றும் போராட்டங்களுக்காகவும் கலை வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அண்ணளவாகக் கடந்த முப்பதாண்டுகளாகப் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளிலும் தங்கள் கலைவடிவங்களைப் பேணி மேடையேற்றி வருகிறார்கள். அடக்குமுறைக்குள் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையாகவும், விடுதலைப் போரொன்றை முன்னெடுத்த மக்களாகவும் இலங்கைத்தமிழர்களின் கலை வடிவங்கள் போரட்டக் குணாம்சங்களையும் கொண்டிருந்தன.

கடந்த செப்டம்பர் மாதம் 24, 25ம் திகதிகளில் பிரான்சில் ஒழுங்கமைக்கப்பட்ட 'உலகத்தமிழ் நாடகவிழா' எனத் தலைப்பிடப்பட்ட நாடக விழா பல எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்திருந்தது. நீண்டகாலக் கலையீடுபாடுகளைக் கொண்டவர்கள் முன்னின்று ஒழுங்கு செய்யப்பட்ட விழாவென்பதால் எதிர்பார்ப்பும் சற்று அதிகமாகவே காணப்பட்டது. முதல் முறையாக பிரான்சில் உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் தமிழ்க் கலைஞர்கள் தத்தமது படைப்புகளுடன் வரவிருப்பது கலையார்வலர்கள் மத்தியில் உற்சாகத்தையும் பிறப்பித்திருந்தது.

இந்நாடக விழாவினை அறிவித்த பாரிய சுவரொட்டிகளில் 'சமூக விடுதலைக்கு வலிமை மிக்க ஊடகமான நாடகக் கலையை இளம் தலைமுறையினரிடம் கையளிப்போம்' என்ற வரிகள் வாசிக்க மகிழ்வளித்தன.

ஆனால், நாடகக்கலையின் உயர்பீடங்களில் ஒன்றான பிரான்சில் 'உலகத் தமிழ் நாடக விழா' என அறிவித்து, பின்னர் நடத்தி முடித்த விடயம் தலையங்கத்தில் இருந்து வெகுவாக விலகியிருந்தது எனும் விடயம் மிகுந்த மனவேதனையையும், ஏமாற்றத்தையுமே அளித்தது என்ற உண்மையை உரக்கக் கூறித்தான் ஆகவேண்டும்.

சர்வதேசப் புகழ் பெற்ற, வருடாவருடம் நடைபெறும் 'அவிஞ்ஞோன் நாகட விழாவின்' காரணகர்த்தாவான யோன் விலார் அவர்களின் பெயரால் அமைக்கப்பட்டிருந்த, ஆர்ஜென்ரெய் எனும் நகரின் முனிசிப்பல் நிர்வாகத்தால் இலவசமாக வழங்கப்பட்டிருந்த அரங்கில் 'உலகத் தமிழ் நாடக விழா' ஆரம்பமாகியது.

சனிக்கிழமையான முதல் நாள் மேடையேற்றப்பட்ட நாடகமும், கூத்துகளும் பார்வையாளர்கள் பலரை ஏமாற்றத்துள் தள்ளிவிட்டிருந்தது. இவ்வளவு நேரத்தை வீணாக்கிக்கொண்டோமே எனும் கருத்தைக் கூடச் சிலர் வெளியிட்டிருந்தார்கள்.

தமிழ்மொழியில் ஒரு சொல்கூட அறியாத வேற்று மொழியினரும் பார்வையாளர்களாக வந்திருந்தார்கள். அவர்கள் இந்த 'உலகத் தமிழ் நாடக விழாவை' வெறும் 'சிறுபிள்ளை வேளாண்மையாகக்' கண்டிருப்பார்களோ என்ற விமர்சனத்தையும் பார்வையாளர்கள் சிலர் முன்வைக்கத் தவறவில்லை.

நடைபெற்ற நாடகமும், கூத்துகளும் கலைஞர்களின் பயிற்சிப்போதாமையை பறைசாற்றி நின்றன. சமூக விடுதலைக்கான வலிமைமிக்க ஊடகமாக ஒழுங்கமைக்கப்பட்டவர்களால் வர்ணிக்கப்பட்ட கலைவெளிப்பாடுகள் எந்தவொரு வலிமையான கருத்துகளையும் கொண்டிருக்கவில்லை. இதுபற்றி நிறையவே சொல்ல வேண்டியுள்ளது.

பிரான்சில் ஒரு சாதாரண நாடக அரங்கில் சென்று நாடகம் பார்த்தவர்களுக்குச் சில அடிப்படை விடயங்கள் தெரியும். அவற்றில் மிக முக்கியமாக விடயம் நாடகம் நடைபெறும்போது நாடகத்தில் ஆர்வமில்லாதவர்கள் பார்வையாளர்கள் மத்தியில் இருக்கமாட்டார்கள். நடிகர்கள் அங்கு உற்றார், உறவினர் எனப்பரிவாரங்களுடன் வருவதில்லை. அப்படி வரக்கூடாதென்பதல்ல நான் சொல்ல வரும் கருத்து. ஒரு நாடகம் மேடையேறுகையில் பார்வையாளர்கள் இருளில் இருப்பார்கள், அவர்கள் தம் கவனத்தை மேடைக்காட்சியில் செறிவாகக் குவிக்கும் விதத்தில் பார்வையாளர்கள் பக்கத்திலிருந்து எந்தச் சத்தமும் வராதிருக்கும்.

பிரான்ஸ் 'உலகத் தமிழ் நாடக விழா'வில் கனடியக் கலைஞர்கள் ஜயகரன், தங்கா, சத்யா

பொதுவாகவே (பிரான்சில்) தமிழ் நாடகங்கள் மேடையேற்றுப்படுகையில் இந்நிலை தோற்றுவிக்கப்படுவதில்லை. நாடகத்தில் எவ்வித ஆர்வமும் காட்டாத சிறுவர், சிறுமியர்களின் சத்தம் பார்வையாளர்களைத் தொந்தரவு செய்து கொண்டேயிருக்கும். அது மாத்திரமல்ல ஒலிபெருக்கிகள் செவிப்பறைகளைத் துன்புறுத்தும் வகையில் அதிக சத்தத்தைக் காறி உமிழும். இதற்கான தொழில்நுட்பம் பாரிய வளர்ச்சியடைந்தபோதும் அதைக் கையாளுவதில் தமிழ் அரங்குகள் தோல்வியடைந்தே வந்துள்ளன. துரதிஸ்ரவசமாக 'உலகத்தமிழ் நாடக விழா'விலும் இதுவே நடைபெற்றது.

பார்வையாளர் இருக்கைகளுக்குப் பின் புறமாக அமைக்கப்பட்டிருந்த சிற்றுண்டி-தேனீர் விற்பனை மையப்பகுதியிலிருந்தும் சத்தம் தாராளமாகப் பார்வையாளர்களை வந்தடைந்தது. உண்மையான நாடக ஆர்வலர்கள் தம் கவனத்தை மேடையில் குவிப்பதற்கான பெரும் தடையை இந்நிலை உருவாக்கியது.

ஒலிபரப்பியில் பிறப்பித்த இசைக்கு மூடப்பட்ட மேடையின் முன்விளிம்பில் நின்று ஆடும் கூத்தை கவனிப்பதற்குச் சத்தம் இருந்தாலென்ன சத்தம் இல்லாவிட்டாலென்ன என்று கூறுவதற்குமிடமுண்டு.

●

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை, வெளிநாடுகளில் இருந்து வந்த கலைஞர்களும் அவர்களின் நாடகங்களும் நாடக விழாவை ஓரளவு காப்பாற்றின என்றுதான் கூறவேண்டும். குறிப்பாக இங்கிலாந்து, கனடா மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து வந்த கலைஞர்களால் காண்பிக்கப்பட்ட நாடகங்கள் சற்று ஆறுதலையும் நம்பிக்கையையும் தந்தன.

திரு. பாலேந்திரா அவர்களின் இயக்கத்தில் மேடையேற்றப்பட்ட, இயோனெஸ்கோவின் நாடகத்தை அடிப்படையாக கொண்ட 'பாடம்' நாடகம் இளைய சந்ததித் தமிழ்க் கலைஞர்களால் நடிக்கப்பட்டது. ஒரு நல்ல நாடகத்தைப் பார்த்த திருப்தியை இந்தநாடகம் வழங்கியது. அபத்த நாடக உலகம் பொதுத் தமிழ் மனத்திற்கு பொருத்தமானதா? அதை உள்வாங்கும் நிலைக்குத் தமிழ் மனம் தயாராகிவிட்டதா? எனும் கேள்விகள் எழாமலும் இல்லை.

பத்தண்ணாவின் படைப்புகளில், மேடையேற்றலில் முதுமையும், முழுமையும் பொங்கி நின்றது.

அடுத்து கனடிய நாடகக் குழுவினர், திரு. ஜயகரன் அவர்களின் நெறிப்படுத்தலில் அரங்கேறிய 'நல்வரவாகுக' நாடகம் நாடகவியலின் பூரணத்துவத்தைத் தொட்டு நின்றதை யாரும் கவனிக்கத் தவறவில்லை. அரங்கு தானாகவே அமைதியடைந்தது. நாடகம் கடத்தும் விடயம் பாராதூரமாதென்பது என்பதை பார்வையாளர்களின் சலனமின்மை வெளிப்படுத்தியது. முகங்கள் இறுகி, சிந்தனைவயப்பட்டவர்களாக பார்வையாளர்கள் காணப்பட்டார்கள்.

இன்றைய உலகின் சிக்கலானதும், தீர்க்க முடியாதும், பாரிய துன்பங்களுக்குக்காரணமானதுமான 'அகதிகள்', அவர்களின் இடப்பெயர்வுகள், அதற்கான காரணங்கள், அதன் பின்னணி நோக்கங்கள் என்பன தெள்ளத் தெளிவாக பார்வையாளர்களின் மனத்தில் படியும் வண்ணம் நாடகம் வடிவமைக்கப்பட்டிருந்தது. நடிகர்கள் மூவரும் ஒருவருக்கு ஒருவர் சளைக்காது தங்கள் பாத்திரங்களை திறம்பட நடித்திருந்தார்கள். நாடகம் என்பதை ஒரு பொழுது போக்காகவோ அல்லது கலாச்சார வடிவமாகவோ மட்டும் காணது, நாடகத்தை அறிவியல் திசையில் கொண்டு செல்வதில் திரு. ஜயகரன் வெற்றி கொண்டுள்ளார் என்பதைக் கூறவேண்டும்.

நாடகம் முடிவடைந்த பின்னரும் நடிகர்களின் அசைவுகள் மனதில் நீண்ட நேரம் நிழலாடியது. இது நாடகத்தின் வெற்றியின் அறிகுறி. இந்த நாடகத்தை பிரதம விருந்தினராக வந்திருந்த நடிகர் நாசர் அவர்கள் பார்க்காததையிட்டுப் பலர் கவலையடைந்தார்கள். அந்த நேரமாகப்பார்த்து அவர் வெளியே அழைத்துச் செல்லப்பட்ட விடயம் மனதுள் செரிபாடடையாது கிடக்கிறது. நாடக விழாவை ஒழுங்கு செய்தவர்கள் இழைத்த பாரிய தவறாக இதைக் கருதமுடியும்.

ஆகமொத்தத்தில், 'உலகத் தமிழ் நாடக விழாவை' பிரான்சில் ஒழுங்கமைத்தவர்கள், பிரான்சிலிருந்து ஒரு உருப்படியான நாடகத்தையேனும் வழங்கவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

பரிஸில் அண்ணளவாக நூற்றுநாற்பதுக்கும் மேற்பட்ட அரங்குகள் இருக்கின்றன. இங்கு மொத்தமாக முப்பத்தையாயிரம் பார்வையாளர்களை கொள்ளக்கூடிய இருக்கைகள் இருக்கின்றன. பரிஸ் நாடகக் கலையின் உயர்பீடம். இவ்வாறான ஒரு நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு நாடக விழா எந்தளவுக்கு எதிர்பார்புகளைக் கொடுத்திருந்ததோ அந்தளவிற்கு ஏமாற்றத்தையும் கொடுத்தது.

பிரான்சில் நாடகத்துறையில் மிளிர்பவர்கள் சிலருக்கு அவர்களின் திறமையை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படாமை இவ்விழாவினை ஒழுங்கமைத்தவர்களின் நோக்கத்தையே சந்தேகம் கொள்ளவைத்துள்ளது.

கொடுப்பதற்கு எம்மிடம் எதுவும் இல்லையோ எனும் சந்தேகம் எழுகிறது. 'சமூக விடுதலைக்கு வலிமை மிக்க ஊடகமான நாடகக் கலையை இளம் தலைமுறையினரிடம் கையளிப்போம்' எனும் கோசம் வெற்றுக் கோசம் என்பதை நாம் முதலில் ஏற்றுக்கொண்டு அடுத்த கட்டத்திற்குச் செல்லவேண்டும். புதிய உலகின், புதிய பரிமாணங்களைத் தமிழ் அரங்கியல் உள்வாங்கிச் செல்லா நிலையில் அது வெறும் 'சிறுபிள்ளை வேளாண்மையாகவே' அமையும் என்பதைக் கட்டியம் கூறலாம்.

vasudevan@thaiveedu.com

"அழிந்துவரும் பனை வளத்தையும் வளர்ந்து வரும் மாணவர்களையும் பாதுகாக்கும் எதிர்காலத்தை நோக்கிய பயணம் இது"

நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா வழங்கும்
'தமிழர் வாழ்வில் பனையியல்'

ஆவணப் படக்காட்சி

நவம்பர் 19

சனிக்கிழமை

2.00 மணிமுதல் - 5.00 மணிவரை

இடம்:- Scarborough Civic Center,
150 Borough Dr, Scarborough

(அரங்கத்துக்கான அனுமதி நேரம் குறுகியது. படக்காட்சி குறித்த நேரத்தில் ஆரம்பிக்கப்படும்)

தமிழரின் வாழ்வோடு ஒன்றிப் பிணைந்த ஒரு வகைத் தாவரம் பனைமரம். அதன் இன்றை நிலை என்ன?
அதுவே இவ் ஆவணப்படத்தின் ஒரு சிறு பார்வையாக அமைகின்றது

நெடுந்தீவில் நீங்கள் படித்த பாடசாலைகள், கோவில்கள், நடந்து சென்ற வீதிகள், ஊரின் பாரம்பரிய விழையாட்டுக்கள், மக்களின் நேர்காணல்கள் எனப் பல்வேறு காட்சிப் பதிவுகள் விபரணமாக விரிகின்றது.

பனை நடுகைத் திட்டத்தை பூரணப்படுத்துவதற்கு மாணவர்களுக்கு உதவ வேண்டியுள்ளதால் உங்கள் சிறு பங்களிப்பு இத் திட்டத்தை தொடர வழி அமைக்கும்.

தொடர்புகளுக்கு:- கு.தேவராசன் 416-357-2744 தா.குகனேஸ்வரன் 416-454-1157 சி.பரராசசிங்கம் 647-341-4140
சு.கோவிந்தசாமி 416-670-6260 ஆ.பேரின்பநாதன் 416-554-8290

CUSTOM BUILD HOME

Build Your Personalized Dream Home

Footing, Foundation, Framing & Building Envelope
By Experienced Fine Italian Craftsmen & Tradesmen $110/sq ft
(Interior Finishes, Fixtures, Appliances and Painting Extra)

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு
அனுபவம் நிறைந்த, நாணயமான,
தரமான கட்டிட நிபுணர்கள்

Industrial & Commercial Buildings from $75 / sq ft

TAMB CANADA (647) 877-8262 (TAMB)

Purchase of the Lot, Building Design, Municipal Fees, and Site Preparation are Not Included in Our Price

தாமரைத் தடாகத்துத் தேனீ திரு. தங்கராசா சிவபாலு

- வி. கந்தவனம் -

இலக்கிய உறவுகள் - 70

பின்னணி:

சிவபாலு என்ற பெயர் முருகப்பெருமானையும் குறிக்கும். முருகப்பெருமான் சரவணப் பொய்கையில் வளர்ந்தவர். சிவபாலு தாமரைக் குளங்கள் மிகுந்த குமுளமுனையிற் பிறந்தவர். குமுளமுனை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளது.

குமுளமுனை என்னும் எழில் மிகு கிராமத்தில் இவர், சின்னத்தம்பி தங்கராசா, வீரகத்தி சின்னப்பிள்ளை தம்பதியினரின் இரண்டாவது மகனாக 1945 மார்கழி 15ம் நாள் பிறந்தவர். இவருக்கு நான்கு ஆண் சகோதரர்களும் 5 பெண்சகோதரிகளும் உள்ளனர்.

முன்னைநாள் யாழ் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரும் தற்போது கனடாவில் சமூகசேவை நிறுவனத்தில் உளநலம் சார் மையத்தில் முகாமையாளராகக் கடமையாற்றி வருபவருமாகிய கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்களின் மூத்த சகோதரன் இவர் என்பதுவும் குறிப்பிடத் தக்கது.

சிவபாலு குமுளமுனை அரசினர் பாடசாலை. நெல்லியடி மத்தியகல்லூரி. வித்தியானந்தக் கல்லூரி ஆகியவற்றில் கல்வியை மேற்கொண்ட பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விமாணி பட்டத்தைப் பெற்றுக்கொண்டதோடு. யாழ் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையம் பெற்றுக்கொண்டார்.

கொத்தணி அதிபர்:

நான் அதிபராகக் கடமையாற்றிய யோகபுரம் மகாவித்தியாலயத்தில் இவரும் அதிபராக இருந்தவர்(1979-1982). இருந்த காலத்தில் பாடசாலைக்கு முன்புறமாக விளையாட்டு மைதானத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த 4 ஏக்கர் நிலத்தை ஊரவர்களினதும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினதும் உதவியுடன் திருத்தி ஒரு விளையாட்டு மைதானத்தை அமைத்ததோடு உதைபந்தாட்டம், கரபந்தாட்டப் போட்டிகளை நடத்தியவர். அத்தோடு விளையாட்டுத்துறை அதிகாரிகளையும் அழைத்து மாணவர்களுக்கு பயிற்சிகளையும் அளித்துவந்தவர்.

மல்லாவி மகாவித்தியாலயத்தின் அதிபராக 1983 தொடக்கம் 1989வரை கடமையாற்றியவேளை கொத்தணி அதிபராக நியமனம் பெற்று அப்பாடசாலைக்காக ஒதுக்கப்பட்டிருந்த 20 ஏக்கர் காடு மண்டிக்கிடந்த இடத்தை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் அப்போது வவுனிக்குளம் பிரதம பொறியியலாளராக இருந்த பளையைச் சார்ந்த பொன்னுத்துரை அவர்களின் உதவியோடு நிலத்தைத் திருத்தி 6ஏக்கர் நிலத்தில் விளையாட்டு மைதானத்தையும், மீதியை பயிர்ச்செய்கைக்கும் உட்படுத்தி பாடசாலைக்குப் பெருந்தொகையான வருமானத்தை ஈட்டிக் கொடுத்த தோடு தளபாடங்களைச் செய்து பிள்ளைகளின் கல்வி வசதியையும் மேம்பாடடையச் செய்தவர்.

தொண்டைமான் அவர்கள் அமைச்சராக இருந்தபோது பாடசாலைகளில் மந்தை வளரப்புத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டதை அறிந்து பெருமுயற்சி எடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவிப் பாடசாலையில் 10,000 ரூபாயைப் பெற்று 1983ல் மாட்டு வளர்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

1988ம் ஆண்டு பாடசாலைக்கு மின்வலுவைப் பெற்று ஆசிரியர்கள் குடியிருப்புக்களுக்கும் ஒளியிணைப்பை ஏற்படுத்தியதோடு மாணவர்கள் இரவில் வந்து சேர்ந்து படிக்கும் வாய்ப்பையும் உருவாக்கினார்.

வர்த்தகத்துறை, விஞ்ஞானத்துறையில் பல கலைக்கழகப் புகுமுக வகுப்புக்களை ஆரம்பித்ததோடு அதற்கான ஆசிரியர்களையும் பெற்றுத் தந்து பாடசாலையின் கல்வித் தரத்தை உயர்வடையச் செய்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று அரசாங்க அதிபராகக் கடமையாற்றும வேதநாதன் அவர்



கள் ஆசிரியராக முதன் முதல் நியமனம் இப்பாடசாலையில் இவரின் காலத்திலேயே பெற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அதிபர் அவர்கள் வன்னிப்பிரதேசப் பாடசாலை அபிவிருத்தியிலும் சமூகப் பணிகளிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு பெருமகன்.

கண்டி. கட்டுகாஸ்தோட்டை புனித அந்தோனியார் பாடசாலையிலும் பின்னர் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகவும் முல்லைத்தீவு கல்வி மாவட்டத்தில் யோகபுரம் ம.வி., மல்லாவி மத்திய கல்லூரி ஆகியவற்றின் அதிபராகவும். யோகபுரம் கொத்தணிப்பாடசாலைகளின் கொத்தணி அதிபராகவும் 1978 தொடக்கம் 1990 வரையும் பணியாற்றியவர். மண்டைதீவு பகுதிப் பாடசாலைகளின் கொத்தணி அதிபராக 1990ல் கடமையாற்றியுள்ளார்.

கலைவளர் எழுத்தாளர்:

சிவபாலு அவர்கள் கலைத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர். குமுளன், கலாரசிகன், வன்னிமைந்தன், தங்கபாலு என்னும் பெயர்களில் கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள் மற்றும் திறனாய்வு, விவரணக் கட்டுரைகள் என்பன வற்றையும் எழுதி வருபவர். அண்மையில் மூன்று நூல்களை வெளியீடு செய்து சாதனையும் படைத்தவர்.

- கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொதுச் செயலாளராகவும் தலைவராகவும் பணியாற்றியவர். தற்பொழுது எழுத்தாளர் இணைத்தின் 'சங்கப்பொழில் இதழின் பதிப்பாசிரிய ராகவும் வன்னித் தமிழ்க் கலாச்சார மன்றத்தின் காப்பாளராகவும் பணிபுரிந்து வருகின்றார்.
- ரொறன்ரோ கல்விச் சபையிலும் யோக் கல்விச்சபையிலும் தமிழைக் கற்பித்து வருவதோடு, வளர்ந்தோருக்கு ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகவும் கற்பித்துவருகின்றார்.
- பாடசாலையோடு தொடர்புகொள்ளுதல், பிள்ளைகளும் பெற்றோரும் போன்ற தொடர் கட்டுரைகளை உதயன் பத்திரிகையிலும், இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் 'வடலி' என்னும் பத்திரிகையிலும், 'தாய்வீடு' பத்திரிகையிலும் சங்க இலக்கியம் பற்றி விளம்பரம் பத்திரிகையிலும் கட்டுரைகளை எழுதி வருகின்றார்.
- யேர்மனியில் வெளியாகும் வெற்றிமணியில் கிராமிய இசைகள் பற்றிய தொடர் கட்டுரையையும் எழுதிவருகின்றார்.
- பரதநாட்டியம், மிருதங்கம், கர்நாடக இசைப்பிரியரான இவர் இக்கலைகள் பற்றிய கட்டுரைகளை எழுதிவருவதோடு, இத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அவைபற்றிய விமர்சனக் கருத்துக்களையும் தந்துவருகின்றார்.
- இசைக் கலைஞர்களையும், ஆர்வலர்களையும் இளந்தலைமுறையினரையும் உற்சாகப்படுத்துவதில் முன்னிற்பவர் திரு. தங்கராசா சிவபாலு அவர்கள்.

வெளிவந்துள்ள நூல்கள்:

- உலகுக்கு உழைப்போம் - கவிதைத் தொகுப்பு 2003, (200 பக்கங்கள்) மணிமேகலைப் பிரசுரம்
- பாடசாலை மாணவர்களின் தகாத செயல்கள் காரணங்களும் தீர்வுகளும் - 2010 (180 பக்கங்கள்) - மணிமேகலைப் பிரசுரம்
- திருமணமுறிவுகளைத் தவிர்க்கும் வழிமுறைகள் 2010 (பக்கங்கள் 100) மணிமேகலைப் பிரசுரம்,
- மாணவர்களின் தகாதசெயல்கள் - காணங்களும் தீர்வுகளும் - இரண்டாம் பதிப்பு 2014 (211 பக்கங்கள்)
- தமிழ் கற்போம் பயிற்சி நூல் 1
- தமிழ் கற்போம் பயிற்சி நூல் 2
- தமிழ் கற்போம் பயிற்சி நூல் 3

சங்கப்பொழில், கம்பன்விழாமலர், வித்துவரத்தினம், கதிர் உலா, ஈழத்துத் தபோதனர்கள், அ.பொ. செல்லையா வாழ்வும் வழியும் போன்றவற்றைப் பதிப்பித்தும் உள்ளார்.

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் செயலாளராகவும் தலைவராகவும் பதவி வகித்ததோடு தொடர்ந்தும் சங்கப்பொழில் இதழின் ஆசிரியராகவும் பணியாற்றிவருகின்றார். உலகத் தொல்காப்பிய மன்றத்தின் கனடாக் கிளையின் தலைவராகவும் உள்ளார்.

போற்றத் தகுந்த பணி:

இவரது பன்முகப் பணிகளில் போற்றத் தகுந்தது தமிழ்க் கல்விப்பணி எனலாம். தமிழ்க் கல்வியைக் கனடாவில் வளர்த்து வருபவர்களில் இவரும் ஒருவர். 1993ம் ஆண்டு நண்பர்கள் எனக்கு மேற்கனடாக் கல்லூரியில் மணிவிழா எடுத்தார்கள். அந்த விழாவில் எனது பதில் உரையில் கனடாவில் தமிழ்க் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினேன். அதனை வரவேற்று நடைமுறைப்படுத்தியவர் நண்பர் திரு. பொ.கனகசபாபதி அவர்கள். அவர் வழி இன்னமும் தமிழ்க் கல்வியை வளர்த்துவருவதில் முழுமூச்சாக உழைத்துவருபவர் சிவபாலு அவர்கள்.

பேச்சு வன்மை:

அதிபர் சிவபாலு அவர்கள் ஆற்றல்மிக்க ஒரு பேச்சாளருமாவர். கல்வி, இலக்கியம், சமயம் மற்றும் மாணவர் நடத்தைகள் பற்றி எடுப்பாகப் பேசவல்லவர், பேசி வருபவர். நான் தலைவராக இருந்துவரும் இந்து சமயப் பேரவைக் கூட்டங்களில் எப்பொழுதுமே இவரும் ஒரு பேச்சாளராக இருப்பர். பொதுசனத்துக்கு ஏற்றவகையில் எளிமையாகமட்டுமன்றி இனிமையாகவும் பேசவல்லவர் இவர்.

பிறர் கருத்துக்கள்:

சிவபாலு அவர்கள் எனக்குத் தம்பி போன்றவர். தம்பி தம்பி என்றே இவரை எப்பொழுதும் கூப்பிடுவேன். எனவே அண்ணன் தம்பியைப் பற்றிச் சொல்வதிலும் மற்றையவர் தம்பியைப்பற்றி என்ன கருதுகிறார்கள் என்று அறிவதிலும் அதனைப் பிறருக்கு அறிய வைப்பதிலும் அண்ணனுக்கு ஒரு தனி மகிழ்ச்சி முகிழவேசெய்யும். அந்த மகிழ்ச்சியில் இப்பொழுது அமிழ விழைகின்றேன்:

நண்பர் சிவபாலுவின் தமிழ் ஆர்வம், சமயக்கிரியைகள் பற்றிய ஆழமான - எதார்த்தமான அறிவு, எமது சமூக நடவடிக்கைகளை அவதானித்ததன் விளைவாக எழுந்த ஆதங்கம் எம் இனத்தின் சமூக முன்னேற்றத்துக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற உந்துதல் என்னை மிகவும் கவர்ந்தது.

- பொ. கனகசபாபதி
முன்னாள் அதிபர்

வைதீக மற்றும் தமிழர் திருமண முறைகள் என்ற நூலில் சிவபாலு அவர்கள் பலபக்கப் பரிமாணங்களையும் தொட்டு எழுதும் சிறந்த ஆற்றல்கொண்ட படைப்பாளியாகவும் பேச்சாளராகவும் விளங்குகின்றார். தமிழ்ப்பணியே தன்பணியெனத் தமிழ்ப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்து வருகின்ற ஒரு பணியாளராக விளங்குகின்றார்.

- 'உதயன்' லோகேந்திரலிங்கம்
(திருமண முறிவுகளைத் தவிர்க்கும் வழிமுறைகள் என்ற நூலில்)

பழகுவதற்கு இனியவர். பம்பரம் போலச் சுழன்று பணியாற்றுவார்.

- துறையூரான்
(பள்ளிமாணவர்களின் தகாத செயல்கள் - காரணங்களும் தீர்வுகளும் என்ற நூலில்.)

திரு.சிவபாலு அவர்கள் தமிழுக்குத் தேவை. தமிழ் மக்களுக்குத் தேவை. இவரது தமிழ்ப்பணிகளும் சமூகத் தொண்டுகளும் இனிதே தொடர
வாழ்த்துவோமாக!

kandavanam.v@thaiveedu.com

லியோ ரோல்ஸ்ரோய் 1828-1910. ரஷியப் பிரபுக்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவர். நாவல், குறுநாவல், சிறுகதை, நாடகம், கட்டுரை என்று பல்லாயிரம் பக்கங்கள் எழுதியவர். அவருடைய மிகப் பெரும் நாவல்களான போரும் சமாதானமும், அன்னா கரீனினா ஆகியவை உலகப் புகழ் பெற்றவை. அதேபோல, அவரின் ஹாஜி முராட், த டெத் ஒஃவ் இவான் இலிவிச் என்ற குறுநாவல்களும். அவரின் எழுத்துக்கள் யதார்த்தப் பண்புள்ளவை. அவருடைய வாழ்வும் ஆளுமையும் சிக்கலானவை. இறுதிக் காலங்களில் அவர் அறச் செயற்பாட்டாளராகவும், சமூகச் சீர்திருத்தவாதியாகவும் வாழ்ந்தார். கிறிஸ்தவ நம்பிக்கைகளிலும் குறிப்பாக, கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்திலும் 'ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் கொடு' என்ற கோட்பாட்டிலும் நம்பிக்கை கொண்டார். ஒரு துறவியைப் போல வாழ்ந்தார். தன்னிடமிருந்த பெரும் சொத்துக்கள் அனைத்தையும் ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்தார். பல பாடசாலைகளை உருவாக்கினார். சொத்துக்கள் தனியுடைமையாக இருக்கக்கூடாது என்றார். 'தேவனின் இராச்சியம் உனக்குள்ளேயே இருக்கிறது' என்ற நூலை எழுதினார். ஜேர்மன் மொழியில் கிடைத்த திருக்குறளை வாசித்த பின் அகிம்சையிலும், சாத்வீகத்திலும் நம்பிக்கை கொண்டார். காந்தி அவருடன் ஒரு வருடமாக - ரோல்ஸ்ரோய் இறக்கும்வரை கடிதத் தொடர்பு வைத்திருந்தார். 'ஓர் இந்துவுக்கு எழுதிய கடிதம்' என்பதாக அது வெளிவந்துள்ளது. காந்தி, மார்டின் லூதர் கிங் யூனியர் ஆகியவர்களின் ஆதர்ச புருஷராக அவர் இருந்திருக்கிறார். வேர்ஜினியா வுஃல்ப் அவரை 'நாவலாசிரியர்களிலே மிகச் சிறந்தவர்' என்றும், டோஸ்ராவெஸ்கி, செக்காவ், தோமஸ் மான், புறஃவ்ஸ்ற், ஃபோக்னர், நபக்கோவ் போன்ற பெரும் பெரும் எழுத்தாளர்கள் இவரைப் பற்றிப் புகழ்ந்தே சொல்லியுள்ளனர். 'ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற வேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களை மட்டும் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைப்பதில்லை.' 'கடவுளின் பெயரால் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், உங்கள் வேலைகள் எல்லாற்றையும் ஒரு கணம் நிறுத்தி விட்டு, ஒருமுறை உங்களைச் சுற்றிப் பாருங்கள்.' இவை அவரின் பல நூறு பொன்மொழிகளில் இரண்டு!

ஒரு கோழி முட்டை அளவுள்ளதொரு தானியம்

- லியோ ரோல்ஸ்ரோய் -

மொழியாக்கம்: என்.கே. மகாலிங்கம்

ஒருநாள் சில சிறுவர்கள் கோதுமைத் தானியத்தைப் போன்ற உருவத்தில் உள்ள ஒரு பொருளை மலை இடுக்கிலுள்ள தொரு பள்ளத்தில் கண்டெடுத்தார்கள். கோழி முட்டை போல பெரிதாக இருந்த அத்தானியத்தின் மத்தியில் வரித்தடம் ஒன்றும் ஓடியது. அந்த வழியால் சென்ற பயணி ஒருத்தர் அதைப் பார்த்து அந்தச் சிறுவர்களிடம் ஒரு நாணயத்தைக் கொடுத்து அதை வாங்கிக்கொண்டார். அதை நகரத்திற்கு எடுத்துச் சென்று ஓர் ஆர்வப் பொருளாக அரசனுக்கு விற்றார். அரசன் தன் அரசவை அறிவாளிகளை அழைத்து அப்பொருள் என்ன என்பதைக் கண்டுபிடிக்கச் சொன்னார். அறிவாளிகள் பலநாட்கள் ஆழ்ந்து சிந்தித்தார்கள். இருந்தும் அதுவென்ன என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருநாள் அந்தப் பொருள் ஜன்னலில் கிடந்ததைக் கண்ட கோழியொன்று பறந்து வந்து அதில் ஒரு துவாரம் வரும்வரை அதைக் கொத்திப்பார்த்தது. அதன் பிறகே அந்த அறிவாளிகளுக்கு அதுவொரு சோள விதை என்று தெரிந்தது. அவர்கள் அரசனிடம் சென்று,

'அதுவொரு சோள விதை,' என்று சொன்னார்கள்.

அதைக்கேட்டு அரசன் மிகவும் ஆச்சரியமடைந்தார். அந்த விதை எப்போது எங்கே விளைந்தது என்று அந்த அறிஞர்களைக் கண்டுபிடிக்கச் சொன்னார். அந்த அறிஞர்கள் திரும்பவும் சிந்திக்கத் தொடங்கினார்கள். நூல்களில் துருவித் துருவித் தேடினார்கள். ஆனால் அவர்களால் எதையும் கண்டுபிடிக்க இயலவில்லை. திரும்பவும் அரசனிடம் வந்து சொன்னார்கள்:

'எங்களால் ஒரு பதிலையும் உங்களுக்குக் கூற இயலவில்லை. நாங்கள் தேடிய நூல்கள் ஒன்றிலும் இதைப் பற்றி ஒன்றுமே இல்லை. நீங்கள் இதைப் பற்றி விவசாயிகளிடம் தான் கேட்க வேண்டும். இந்தளவு பருமனாக எங்கே எப்போது வளர்ந்தது என்று அந்த விவசாயிகள் தங்கள் தந்தையரிடமிருந்து அவர்கள் அறிந்திருக்கலாம்.'

அதைக் கேட்ட அரசன் வயதில் முதிர்ந்த சில விவசாயிகளை தன்னிடம் அழைத்து வரும்படி ஆணையிட்டார். அவரின் பணியாளர்கள் அப்படியான ஒருவரைக் கண்டுபிடித்து அழைத்து வந்தனர். அவர் வயதில் முதிர்ந்து கூனிப்போயிருந்தார். உடல் வெளிறிச் சாம்பல் நிறமாகி இருந்தது. பற்கள் இல்லை. அரசன் முன்னிலைக்கு வந்து தளர்ந்து தள்ளாடி ஊன்றுகோல்களில் சமாளித்து நின்று கொண்டிருந்தார்.

அரசன் அவரிடம் தானியத்தைக் காட்டினார். முதியவரின் கண்களுக்கு அது நன்றாகத் தெரியவில்லை. கைகளில் வாங்கி தடவிப் பார்த்தார்.

அரசன் கேட்டார்: 'முதியவரே, இப்படியான தானியம் எங்கே விளைகிறது என்று எங்களுக்குச் சொல்ல முடியுமா? இப்படியான தானியத்தை நீங்கள் எங்கேயாவது வாங்கியிருக்கிறீர்களா? அல்லது உங்கள் வயல்களில் விளைவித்திருக்கிறீர்களா?'

காது கேளாத அந்த முதியவருக்கு அரசர் கேட்டது அவ்வளவாக விளங்க வில்லை. மிகவும் சிரமப்பட்டுச் சிறிது புரிந்துகொண்டார்.

'இல்லை,' என்றார் கடைசியாக. 'என் வயலில் இப்படியான தானியத்தை விதைக்கவோ அறுவடை செய்யவோ இல்லை. இப்படியான ஒன்றை நான் ஒருபோதும் வாங்கவும் இல்லை. நாங்கள் சோளம் வாங்கும்போது இப்பொழுது கிடைக்கிறது போல மிகவும் சிறியவைதான் இருந்தன. நீங்கள் என் தந்தையிடம் கேட்டுப் பாருங்கள். அவர் சிலவேளை இது எங்கே வளர்ந்தது என்று சொல்லக் கூடும்,' என்றார்.

அரசன் இந்த முதியவரின் தந்தையை அழைத்து வரும்படி சொன்னார். அவரை அவர்கள் கண்டுபிடித்து அரசனிடம் அழைத்து வந்தார்கள். அவர் ஒரு ஊன்று கோலை மட்டும் ஊன்றிக் கொண்டு நடந்து வந்தார். அரசன் அந்தத் தானியத்தை அவரிடம் காட்டினார். இன்னும் பார்வை அதிகம் மங்காத அந்த முதிய விவசாயி அதை உன்னிப்பாக ஊன்றிப் பார்த்தார். அரசர் அவரிடம் கேட்டார்:

'முதியவரே, இப்படிப்பட்ட சோளம் எங்கே விளைகிறது என்று எங்களுக்குச் சொல்ல முடியுமா? இப்படிப்பட்டதொன்றை நீங்கள் வாங்கியோ அல்லது உங்கள் வயல்களில் விளைவித்தோ இருக்கிறீர்களா?'

அந்த முதிவருக்கு காது அதிகம் கேட்க முடியாததாக இருந்தாலும் அவருடைய மகனுக்குக் கேட்டதிலும் பார்க்க அதிகம் கேட்டது.

'இல்லை. என்னுடைய வயல்களில் இது போன்ற ஒரு தானியத்தை ஒருபோதுமே விதைக்கவோ அறுவடை செய்யவோ இல்லை. அப்படி ஒன்றையும் நான் வாங்கியதும் இல்லை. காரணம், என் காலத்தில் பணம் இன்னும் புழக்கத்துக்கு வரவில்லை. ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான சோளத்தை தாமே உண்டாக்கினார்கள். யாருக்காவது தேவையாக இருந்தால் நாங்கள் எமக்குள் பகிர்ந்துகொள்வோம். இப்படியானதொரு சோளம் எங்கே வளர்கிறதென்று எனக்குத் தெரியாது. எங்களுடைய சோளம் இதிலும் பார்க்கப் பெரியது, அத்துடன் இன்றைக்கு விளையும் தானியத்திலும் பார்க்க அதிக மாவைத் தருவது. ஆனால் இதைப் போன்றதொன்றை நான் காணவே இல்லை. ஆனால் என்னுடைய அப்பா தனது காலத்தில் எங்கள் காலத்து தானியத்திலும் பெரிய, இன்னும் அதிக அளவு மாவைத் தரும் தானியம் இருந்ததென்று சொல்லியதைக் கேட்டிருக்கிறேன். அவரைக் கேட்டுப் பாருங்கள்,' என்றார்.

ஆகவே அரசன் அவரை அழைத்து வரும்படி ஆட்களை அனுப்பினார். அவரைக் கண்டுபிடித்து அரசரின் முன்னிலையில் நிறுத்தினர், சேவகர்கள். அவர் பொல் எதுவும் ஊன்றாமல் எளிதாக நடந்து உள்ளே வந்தார். தெளிந்த கண் பார்வையுடன் இருந்தார். கேட்கும் சக்தியும் நன்றாக இருந்தது. அத்துடன் தெளிவாகவும் பேசினார். அரசன் அவரிடம் தானியத்தைக் காட்டினார். முதியவர் உற்றுப் பார்த்தார். கைகளில் உருட்டிப் பார்த்தார்.

'நான் இதுபோன்ற நல்ல தானியத்தைப் பார்த்து பல காலமாகி விட்டது,' என்று சொல்லி அதில் ஒரு துண்டைக் கடித்து ருசித்துப் பார்த்தார்.

'அதே வகையைச் சேர்ந்ததே இதுவும்,' என்றார்.

தொடர்தல் 97ம் பக்கம்

Diploma Programs
New batch starts every month

- Automation Technology
  PLC - HMI - Drive - TCP/IP - DeviceNet
- CAD/CAM Technology
  CNC-AutoCAD-SolidWorks-MasterCAM
- Computerized Accounting
- Food Service Worker
- Office Administration
- Accounting and Payroll

Certificate Programs

Electrical Exam Prep Course
(309A Construction & Maintenance and 442A Industrial Electrician)

Computer Technology
- PC Technician (A+)
- Programming
  - C/C++, VB.NET, Java
- SQL Database
- Web Development (HTML, CSS, JAVA Script)
- LINUX systems
- CISCO
- Android App Development

Accounting Softwares
- QuickBooks
- Simply Accounting
- Accpac

Microsoft Office Apps
- Word
- Excel
- PowerPoint
- Outlook

Multi-Media
- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress
- 3D Animation

- Canadian Securities Course
- Bank Teller
- Cashier Course
- Income Tax Course
- Food Handler Certificate

University and High Schools students are welcome for Special Classes

Second Career Funding
Covers tuition, living, transportation expenses upto $28,000 for those who qualify

EI or Laid off

வேலைவாய்ப்பு ஆலோசனை மற்றும் உதவிகள் வழங்கப்படுகின்றது

beta College
of Business & Technology

Visit us:
www.betacollege.ca
Location:
Bellamy & Ellesmere

416-449-2382
info@betacollege.ca
1085 Bellamy Road #208
Toronto ON

(All Certificate Courses are taught individually and each courses are less than 40hrs)

ஒரு கோழி முட்டை...

96ம் பக்கத் தொடர்ச்சி...

‘சொல்லுங்கள் பாட்டனே, எப்பொழுது எங்கே இந்த வகைத்தானியங்கள் விளை விக்கப்பட்டன? நீங்கள் எப்போதாவது இப்படியானதை வாங்கியிருக்கிறீர்களா? அல்லது விதைத்திருக்கிறீர்களா?’ என்று அரசர் கேட்டார்.

முதியவர் சொன்னார்:

‘இதைப் போன்ற சோளம் என் காலத்தில் எல்லா இடமும் விளைந்தன. என் இள மைக் காலத்தில் இப்படியான சோளத் தைச் சாப்பிட்டுத்தான் நான் வளர்ந்தேன். இதையே மற்றவர்களும் சாப்பிட்டார்கள். இந்தத் தானியத்தையே நாங்களே விதைத் தோம், அறுவடை செய்து கதிரடித்தோம்.’

அரசர் மேலும் கேட்டார்:

‘பாட்டனே, வேறெங்காவது இதை வாங் கினீர்களா? அல்லது நீங்களே விதைத்தீர் களா?’

முதியவர் முறுவலித்தார்.

‘என் காலத்தில் தானியங்களை வாங்குவது அல்லது றொட்டிகளை வாங்குவது போன்ற பாவங்களை ஒருவரும் செய்ய நினைத் ததே இல்லை. எங்களுக்குப் பணத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான அளவு சோளம் அவனிடம் இருந்தது.’

‘அப்படியென்றால் பாட்டனே, உங்கள் வயல்கள் எங்கே இருந்தன, இப்படியான சோளத்தை எங்கே விதைத்தீர்கள் என்று எனக்குச் சொல்லுங்கள்.’

பாட்டன் சொன்னார்:

‘என் வயல் கடவுளின் நிலம். எங்கே நான் உழுதேனோ அதுவே என் வயல். நிலம் இலவசம். நிலத்தை எவரும் தன்னுடை யது என்று கூறுவதில்லை. உழைப்பை மட்டும்தான் எவரும் தன்னுடையது என்று கூறுவார்கள்.’

‘இன்னும் இரண்டு கேள்விகளுக்கு விடை சொல்லுங்கள். முதலாவது, பூமி ஏன் ஒரு காலத்தில் இப்படியான தானியங்களை விளைவித்தது? இப்பொழுது ஏன் அவற்றை விளைவிக்காமல் விட்டது? இரண்டாவது, ஏன் உங்கள் பேரன் இரண்டு பொல்லு களை ஊன்றிக் கொண்டு நடக்கிறான், உங்கள் மகன் ஒரு பொல்லை ஊன்றிக் கொண்டு நடக்கிறான், நீங்கள் பொல் எதையும் ஊன்றாமலே நடக்கிறீர்கள்? உங்கள் கண் பார்வை பிரகாசமாக இருக் கின்றது, உங்கள் பற்கள் நன்றாக இருக் கின்றன, உங்கள் பேச்சு தெளிவாகவும் கேட்பதற்கு இனிமையாகவும் இருக்கின்றது. அவை எப்படி நிகழ்ந்தன? என்ன கார ணம்?’

முதியவர் சொன்னார்:

‘அவை அப்படி நடப்பதற்கு மனிதர்கள் தாம் உழைத்து உண்ணுவதைக் கைவிட்டு விட்டார்கள். மற்றவர்களின் உழைப்பில் தங்கி வாழ வெளிக்கிட்டு விட்டார்கள். முந்திய காலத்தில் மனிதர்கள் கடவுளின் சட்டப்படி நடந்தார்கள். அவர்களிடம் தமக்கு வேண்டியவை இருந்தன. மற்றவர் கள் விளைவிப்பதை அவர்கள் இச்சிக்க வில்லை.’

mahalingam.k@thaiveedu.com

தமிழும் தமிழரும்

- பொன்னையா விவேகானந்தன் -

உலகெங்கும் நூற்றுக்கணக்கான மனித இனங்கள் வாழ்கின்றன. இவ்வினங்களைச் சார்ந்த எல்லோருமே மனிதர் எனப் பொதுவாக அழைக்கப்பட்டபோதும் ஒவ்வோர் இனத்தைச் சார்ந்தோரும் இனத்தின் பெயராலேயே அடையாளப்படுத்தப்படுகின்றனர். சீனா என்னும் நாட்டில் வாழ்வோர் சீனர் என அழைக்கப்பட்டாலும் அவர்களுக்குள்ளேயே பண்பாட்டாலும் மொழியாலும் வேறு பட்ட பல இனங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு இனங்களையும் வேறுபடுத்திக் காட்டவல்ல அடையாளங்களாகக் கருதப்படுவன:

- மொழி,
- பண்பாடு,
- பழக்கவழக்கங்கள்,
- நம்பிக்கைகள்,
- வழிபாடு,
- கலைகள்

என்பனவாகும்.

“தனக்கென நீண்டகால வரலாற்றினையும் தனித்துவமான மொழி, பண்பாட்டு நடத்தைகளையும் கொண்டு குறிப்பிட்ட நிலத்தில் நீண்டகாலமாக, நிலையாக வாழும் ஒரு மனிதக் குழுமம் ‘இனம்’ என அழைக்கப்படும் தகுதியைக் கொண்டது” என, ஐக்கிய நாடுகள் சபையின் இனம் பற்றிய வரையறை தெரிவிக்கின்றது.

தமிழினம் என்றழைக்கப்படுகின்ற எம்மினமும் இந்த வரையறைக்கேற்ப மிக நீண்ட வரலாறு கொண்ட இனமாகும். இன்று உலகத்தில் பேசப்படும் மொழிகளில் மிகப் பழைய மொழி தமிழ் என்பதை உலகத்தார் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதுவே எம் இனத்தின் பழமைக்குச் சான்றாகும்.

இனவமைப்பினை நாம் மூன்று வகைகளாகப் பகுக்கலாம்.

- நாடு சார்ந்த இனவமைப்பு
- மதம் சார்ந்த இனவமைப்பு
- மொழி சார்ந்த இனவமைப்பு

ஓரினம் தவிர்ந்த பிற இனத்தோர் பெரியளவில் இல்லாத நாடுகள் பலவுண்டு. அவ்வினங்கள் நாட்டின் பெயராலேயே அழைக்கப்படுகின்றன. அவர்கள் பேசும் மொழியாலேயே அந்நாடும் அமைகின்றது. எடுத்துக்காட்டாக ஜப்பான், ஸ்பெயின் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இஸ்லாமியர், யூதர் போன்றோர் மதஞ் சார்ந்த இனக்கட்டமைப்பைக் கொண்டோர் ஆவர். எந்த நாடுகளில் அவர்கள் வாழ்ந்தாலும் மதத்தின் பெயராலேயே தம்மைக் குறிப்பிட்டுக் கொள்வர்.

நாடு, மதம் இரண்டுக்கும் அப்பால் மொழியையே தமது அடையாளமாகக் கொண்டு வாழும் இனங்கள் உலகில் பலவுண்டு. தமிழர், தெலுங்கர், பஞ்சாபியர் மலையாளிகள் போன்றோர் இவ்வகையினர். இவ் வினத்தோர் வாழும் நாடு பலவினங்களையும் பல மதங்களையும் கொண்டதாகவிருக்கும். இவ்வினங்கள் தமது மொழியையும், மொழி வழியே தொடர்கின்ற தனித்துவமான பண்பாட்டையுமே தமது அடையாளங்களாகக் கொண்டிருப்பனவாகும்.

தமக்கெனவொரு தன்னாட்சியற்ற நிலையில் குறித்தவொரு நாட்டார் என அடையாளப்படுத்தப்படுத்த முடியாத தமிழர், தாய்மொழியாகிய தமிழையே தமது முதன்மை அடையாளமாகக் கொண்டுள்ளனர். 15ம் நூற்றாண்டோடு ஆளுமைமிக்க தன்னாட்சியை இழந்த தமிழர் 19ம் நூற்றாண்டுவரை சில சிற்றரசுகளைக் கொண்டிருந்தனர். பிரித்தானியாரால் அவையும் பறிக்கப்பட, இன்றுவரை மாநில ஆட்சியளவில் இந்தியாவின் தென் பகுதியிலும் இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

> **“தமிழர் காலங்காலமாக மொழிவழியாகவே பேணப்பட்டு இணைக்கப்பட்டிருக்கும் இனமாவர். தமிழரது வரலாறு, பண்பாடு, மரபுவழித் தொடர்ச்சிகள் எல்லாமே மொழி வழியாகவே ஒவ்வொரு தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. இவை போன்ற இனவடையாளங்கள் அனைத்தையும் பேணிப் பாதுகாக்கும் பெட்டகமாகவும் மொழியே திகழ்கின்றது.”**

பிரித்தானியரால் வேலைக்கழைத்துச் செல்லப்பட்ட தமிழர் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் நிரந்தரமாகத் தங்கிவிட்டனர். போர்க்சூழல் காரணமாகப் புலம்பெயர்ந்த தமிழர் பலர், ஐரோப்பிய வட அமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளில் குடியேறி அங்கேயே வாழத் தலைப்பட்டு விட்டனர். இன்று உலகெங்கும் ஏறக்குறைய பத்துக் கோடி (100 மில்லியன்) தமிழர் வாழ்ந்து வருகின்றனர்.

பல நாடுகளில் வாழ்ந்துவரும் தமிழர் சைவம், வைணவம் கிறிஸ்தவம், பௌத்தம் உட்படப் பல மதங்களைத் தழுவி வாழ்கின்றனர். எனினும் தமிழ் என்ற மொழித் தொடர்பால் ஓரினமாகப் பிணைக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் காலங்காலமாக மொழிவழியாகவே பேணப்பட்டு இணைக்கப்பட்டிருக்கும் இனமாவர். தமிழரது வரலாறு, பண்பாடு, நடத்தைகள், மரபுவழித் தொடர்ச்சிகள் எல்லாமே மொழி வழியாகவே ஒவ்வொரு தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. இவை போன்ற இனவடையாளங்கள் அனைத்தையும் பேணிப் பாதுகாக்கும் பெட்டகமாகவும் மொழியே திகழ்கின்றது.

‘இனத்தை அழிக்க வேண்டுமாயின் முதலில் அவ்வினத்தின் மொழியை அழிக்க வேண்டும்’ என்பதே இனவழிப்பாளரின் கோட்பாடு. இவ்வாறு பலவினங்கள் அழிக்கப்பட்டுமுள்ளன.

எமது இனத்தினது அடையாளங்களான பண்பாடு, கலைகள், நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் என்பவற்றோடு பல்வகைப்பட்ட வரலாறுகளையும் நாம் மொழி வழியாகவே பேணி வருகின்றோம். மொழியே ஒவ்வொரு தலைமுறைக்கும் இவற்றைக் காவிச் செல்கின்றது. தமிழில் எழுதப்பட்ட பக்தி இலக்கியங்களைத் தவிர, எமது இன அடையாளங்கள் எதுவும் மதங்களில் இல்லை. மொழியே எல்லாவற்றையும் தாங்கி நிற்கின்றது.

அசுர வேகத்தில் வளர்ந்து வரும் தகவற் தொழில்நுட்ப மேலாண்மையும் உலகத்தை ஒரு குடையின் கீழ் கொண்டுவர முயலும் பெருநிறுவன வணிக மேலாண்மையும் உலகெங்கும் ஆளுமை செலுத்துகின்றன. இவற்றினூடாக வளர்ந்து வருகின்ற, வறுமையுற்ற நாடுகளை வளர்ச்சி பெற்ற நாடுகள் வசப்படுத்த முயல்கின்றன. வசப்படும் நாடுகளும் இனங்களும் தமது தனித்துவமான அடையாளங்களைச் சிறிது சிறிதாக இழக்கத் தொடங்குகின்றன. இன்னும் ஐம்பது ஆண்டுகளில் பலவினங்கள் தமது அடையாளங்களை இழந்து அழிந்துவிடப் போகின்றன என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது. அழிந்துவிடக்கூடிய இனங்கள் என ஐக்கிய நாடுகள் சபை பட்டியலிட்ட வற்றுள் தமிழினமும் உள்ளடக்கம்.

நீண்ட வரலாற்றைக் கொண்டதும் ஒன்பது, பத்தாம் நூற்றாண்டில் உலகில் பெருநிலப் பரப்பை ஆண்டதுமான தமிழனம் இன்னும் ஐம்பது ஆண்டுகளில் தன்னடையாளத்தை இழந்துவிடும் என ஐக்கியநாடுகள் சபை கருதுவதற்குக் காரணம் யாது?

வளர்ச்சியடையாத, தன்னாட்சியற்ற நாடுகளில் வாழும் இனமாக நாம் இருப்பதுவும் நம் வழிபாட்டுக்குரிய மதங்கள் யாவும் பிற மொழிகளைத் தளமாகக் கொண்டிருப்பதுவுமே முதன்மைக் காரணங்களாகும். அத்தோடு பலரும் வளர்ச்சியடைந்த நாடுகளை நோக்கித் தொடர்ச்சியாகப் படையெடுத்துச் செல்வதுவும் காரணமாகக் கூறப்படுகின்றது.

உலகில் தமிழின் தாய்நிலங்களாகக் கருதப்படுகின்ற தமிழகமும் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளுமே ஐக்கிய நாடுகள் சபையினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட காரணங்களோடு வேறுபல காரணங்களையும் அது அடையாளம் கண்டது.

இனத்தின் முதன்மை அடையாளம் எனப்பட்ட தாய்மொழி, தமிழ்க்கல்வி என்ற அளவில் பின்தங்கியிருப்பது கண்டறியப்பட்டது. கடந்த பல பத்தாண்டுகளாக உயர்நிலைக் கல்வியில் தமிழைக் கற்போர் தொகை வீழ்ச்சியடைந்து வருகின்றது. பெரும்பாலான பாடசாலைகளில் தமிழில் பட்டம் பெற்றோர் அல்லது தமிழை நன்கு கற்றறிந்தோர் ஆசிரியராக இல்லை. பத்தாம் வகுப்புவரை தமிழைக் கற்றோரே பல பாடசாலைகளில் தமிழைக் கற்பிக்கின்றனர். பெருகிவரும் மாணவர் தொகைக்கேற்ப தமிழ் கற்பித்தலில் ஆற்றல் மிக்க ஆசிரியர்கள் தமிழகத்திலும் இல்லை, இலங்கையிலும் இல்லை. மொழி தொடர்பான விழிப்புணர்வும் அக்கறையும் கூடப் பெருமளவில் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்விரு நாடுகளிலும் ஊடகங்களில் பயன்படுத்தப்படும் தமிழ்மொழி நடை இதற்குச் சான்றாகும்.

தொல்காப்பியம் தொட்டு இன்றுவரை பல்லாயிரம் நூல்கள் தமிழில் எழுதப்பட்டுவிட்டன. தொல்காப்பியர் முதல் புதுவை இரத்தினதுரை வரை ஆயிரக்கணக்கானோர் தமிழிலேயே வாழ்வையும் வரலாற்றையும் பதிவு செய்துள்ளனர். தமிழகத்திலும் இலங்கையின் வட,கிழக்கிலும் உள்ள நூலகங்கள் இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களைக் கொண்டுள்ளன. இவை எல்லாவற்றையும் வாசித்துப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் மொழியறிவு அவசியமல்லவா. இனத்தின் தொடர்ச்சியைத் தமிழினமாகக் கொண்டு செல்லவல்ல மொழிக் கல்வியைப் பேணிச்செல்வதில் உலகெங்கும் வாழும் தமிழர் அனைவரும் பின்நிற்கின்றோம் என்பதே உண்மை.

நூலகங்களில் ஆயிரக்கணக்கில் நூல்களைச் சேகரித்து வைப்பதைவிட முக்கியமானது வளரும் தலைமுறையினருக்கு மொழிக்கல்வியை ஊட்டுதல். பல பத்தாண்டுகளாகப் பின்னடைவுற்றிருக்கும் இத்துறையில் சமூகமாக இணைவுற்று அனைவரும் பங்காற்றுதல் வேண்டும். தவறுமோயின் ஐக்கிய நாடுகள் சபையின் கூற்று மெய்யாகிவிடும்.

vivekanandan.p@thaiveedu.com

கணினிவகுப்புக்கள் மற்றும் கணினிசார் சேவைகள்

வயதில் முதியவர்கள், உடற்குறைபடுடையவர்கள், பார்வையற்றவர்கள் மற்றும் பார்வை குறைபாடு உடையவர்கள் ஆகியோரின் நாளந்த பாவனைக்குரிய அனைத்து கணினி தொடர்பான விடயங்களும் கற்பிக்கப்படும்.

- Searching information
- online banking
- online shopping
- online booking (wheel-trans/air ticket)
- Email
- Face book and Twitter
- File management
- Audio downloading
- CD burning
- Home video editing
- DVD movie making
- Microsoft office applications (word and Excel)

உங்கள் கணினியில் ஏற்படும் அனைத்து பழுதுகளும் தரமாக உத்தரவாதத்துடன் திருத்தி தரப்படும்.

Access Care Technology
416-821-1211
www.accesscaretechnology.ca

முதல் தடவை வீடு வாங்குபவர்களுக்கும் சிறு குடும்பத்திற்கும் உகந்த வீடு

#3 42 Pinery Tr, Scarborough

Markham and McLevan

416.556.4881

RAVEENDRAN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE
416.556.4881

HOMELIFE

Trusted Realtor between you and your home

*Independently owned & operated

HomeLife/Champions Realty Inc, Brokerage*
Office :416-281-8090
E-mail: raveenvi@gmail.com

Congratulations!

Inforce Life proudly recognizes our
Agents of the month
for their hard work and dedication.

Agents of the Month
October 2016

Central

Nilani Chelliah

Western

Anil Patel

Bus: 416 321 6000
www.inforcelife.com
career@inforcelife.com

Insurance Solutions for LIFE | HEALTH | GROUP | INVESTMENTS
Central:
10 Milner Business Court, Suite 707, Scarborough ON M1B 3C6
Western:
2355 Derry Road East, Unit 15, Mississauga, ON L5S 1V6

iNFORCE LIFe
Financial Services Inc.
Delivering Promises. Building Trust.

printfast.ca

Join Our Dynamic Team

LOW LOW FLIGHT RATES

BRITISH AIRWAYS

TORONTO → LONDON → CHENNAI **$1220*** Taxes included

QATAR AIRWAYS

TORONTO → BOSTON → DOHA → COLOMBO **$1315*** Taxes included

*Seasonality restrictions apply. Price subject to availability

Dream Vacation Packages

INDIA

Incredible India

India's history goes back at least five thousand years making it oldest culture in the world. Its checquered fortune is reflected in the infinite verities of its monuments - Forts, Palaces and Temples.

In this tour we will take you some of the classical and best-known sites of India including the Capital City -Delhi where every crumbling wall has a story to tell. The city has lived through wars and resurrection, repeatedly rising from the ashes. The city of Royal Splendor -Jaipur with its magnificent fort - Amber Fort and Hawa Mahal - The landmark of this beautiful Pink city.

Agra - City of love and home to one of the seven wonders of the world -the Taj Mahal.

The temples of Khajuraho, where Life, in every form and mood, has been captured in stone. Varanasi - Oldest city in the world, the city of Nirvana and Ghats where people still are having their daily prayers and rituals and temples and centuries old culture. The mix of all these attractions makes a perfect blend of Classical Journey.

Day1: Delhi
Day2: Delhi /Jaipur
Day3: Jaipur
Day4: Jaipur /Agra
Day5 : Agra / Khajuraho
Day6 : Khajuraho
Day7: Khajuraho/Varanasi
Day8: Delhi

THAILAND

amazing THAILAND

Thailand is often referred to as a golden land, not because there is precious metal buried underground but because the country gives off a certain lustre, be it the fertile rice fields of the central plains, white sandy beaches or the warm hospitality of its citizenry. Thailand's cool season runs from November until the end of February. With its low humidity, relatively low temperatures and clear skies, the cool season is the best time to visit, though regular days of high 20s and low 30s might leave you wondering just who came up with the term 'cool'. It is also the peak tourist season, so expect lots of new friends at the more popular spots like the islands and major towns.

Day 1: Arrive in Saigon
Day 2: Saigon / Phnom Penh
Day 3: Phnom Penh
Day 4: Phnom Penh / Siem Reap
Day 5: Angkor Wat
Day 6: Angkor Wat
Day 7: Siem Reap
Day 8:Bangkok
Day 9:Bangkok/Pataya
Day 10: Depart from Bangkok

SERANDIB TRAVEL
Your Satisfaction is Our Success
உங்கள் மனநிறைவே எங்கள் வெற்றியின் இரகசியம்

7 Eastvale Dr, Suite 101
Markham, ON. L3S 4N8
Tel: 905.472.7500/416.750.0009
Toll Free: 1.888 .207.0902
www.serandibtravel.com
info@serandibtravel.com

SriLankan Airlines · Air India · Emirates · Etihad · Air Canada · Qatar · Jet Airways · Gulf Air · Kuwait Airways · IATA · tico.ca R 50012691

வீடு என்பது தொடுவானம் அல்ல கலங்கரை விளக்கு...

HomeLife Landmark Realty Inc.
Brokerage
Higher Standard Agents.
Higher Results!

Thana Yoganathan

Sales Representative

தனா யோகநாதன்

416.418.5749

thanaever@gmail.com

CHAIRMAN AWARD 2012 - 2015

TOP 10 SALES PERSON/ RESALE 2012 - 2015

TOP 5%

PLEASE CALL

Rossland / Audley AJAX
Detached
Br: 5 | Wr: 4

STARTER SPECIAL

Midland/Danforth Rd
Condo
Br: 2+1 | Wr: 2

135 Village Green Sq

Kennedy & Hwy 401
Detached
Br: 2 + 1 | Wr: 2

COMING SOON

Mccowan/Ellesmere
Detached
Br: 1 + 1 | Wr: 1

COMING SOON

Morningside / Finch
Detached
Br: 4 + 2 | Wr: 4

POWER OF SALE

Brock And Major Oaks
Detached
Br: 4| Wr: 4

$489,900

Ravencroft And Westney
Detached
Br: 3 | Wr: 3

$494,900

Harwood/Rossland
Detached
Br: 3 | Wr: 3

$499,000

Weston Rd/Kingston Rd
Detached
Br: 3 | Wr: 3

$499,900

Audley And Rossland
Att/Row/Twnhouse
Br: 3 | Wr:3

$499,900

Audley / Rossland
Detached
Br: 3 | Wr: 3

$499,900

Ravenscroft/Rossland
Semi-Detached
Br: 3 + 1 | Wr: 3

$499,900

Westney
Detached
Br: 3 | Wr: 3

$549,900

Harwood/Emperor
Detached
Br: 4 | Wr: 2

$529,000

Harwood & Taunton
Att/Row/Twnhouse
Br: 3 | Wr: 3

$ 535,000

Harwood & Hwy #2
Detached
Br: 2+1 | Wr: 3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE

Thana Yoganathan
Mortgage Agent - Lic# M09000424

416.418.5749
thanaever@gmail.com

வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க..

கனடியத் தமிழர் சமூகத்தில் நம்பிக்கையான ஒரு முகவர்

அடமான (Mortgage) ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

2015 Rookie of the Year

2015 Platinum Club Award

கமல் நவரட்ணம்

Kamal Navaratnam
Sales Representative
Direct: **416-671-4815**
E mail:kamalhomesale@gmail.com

HomeLife/Future Realty Inc.
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated

Trust and reliable services

இலக்கியத் திறனாய்வியலின் இயங்கு நிலை

- நா. சுப்பிரமணியன் -

திருக்குறள் பற்றிய பார்வையிலே அதனைச் சமணத்துக்கு மிக அருகில் இட்டுச்செல்வதற்குத் துணைபுரியக் கூடிய சான்றுகளை கடந்த கட்டுரையிறுதியில் நோக்கினோம். அதே போல் பௌத்தம் மற்றும் வேதமரபு ஆகியவற்றுக்கு மிக நெருக்கமாக இட்டுச் செல்லத் துணைநிற் கக்கூடிய சான்றுகளை இனி நோக்கலாம். திருக்குறளைப் பௌத்தத்துடன் இணைத்துச் சிந்திப்பதற்கு ஆதாரமாகவுள்ள முக்கிய அம்சம் அதன் சிந்தனைகள் சிலவற்றுக்கும் தம்மபதம் என்ற பௌத்த அறநூலின் சிந்தனைகள் சிலவற்றுக்குமுள்ள பொதுத்தன்மை ஆகும். தம்மபதம் என்பது பௌத்த முதனூல்களில் ஒன்றான சுத்தபிடகத்தின் ஒருபகுதியாகும். கௌதம புத்தரின் போதனைகளைச் சார்ந்து அவரது மாணவமரபினரால் தொகுக்கப்பட்ட மூன்று முதனூல்கள் திரிபிடகம் என வழங்கப்பட்டுவருகின்றன என்பதறிவோம். அவற்றுளொன்றே இச்சுத்தபிடகம். (ஏனைய இரண்டு: விநயபிடகம் மற்றும் அபிதம்ம பிடகம்). சுத்தபிடகமானது புத்தர் பரிநிர் வாணம் எனப்படும் நிறைநிலை எய்தியபின் ஏழு ஆண்டுகள் கழிந்த பின்னர் (கி.மு. 477ல்) 'ராஜகிருகம்' என்னும் வடஇந்திய நகரில் ஒன்றுகூடிய அவருடைய மாணவர்களால் தொகுக்கப்பட்டது என்பது வரலாறு. அதன் ஒருபகுதியான தம்மபதம் என்பது அறவழி எனப் பொருள்தருவது. வாழ்வியலில் மாந்தர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கநெறிகள் மற்றும் பேணிக்கொள்ள வேண்டிய அறவியல் ஆகியவற்றை எடுத்துரைக்கும் ஆக்கம், இது. பாளி மொழியிலமைந்த இந்நூலிலே பதிவாகியுள்ள சிந்தனைகள் பலவற்றுடன் திருக்குறளின் சிந்தனைகள்

பகுதி: 36

ஒத்தனவாக உள்ளன. சில குறள்கள் தம்மபதப் போதனைகளின் நேரடி மொழிபெயர்ப்புகள் அல்லது தழுவல்கள் என்பனவாகக் கருதத்தக்க வகையிலும் உள்ளன. அவ்வகையிலான சான்றுகள் சில ஆய்வாளர்களால் ஏற்கெனவே எடுத்துக்காட்டப்பட்டு வந்துள்ளன.

பகை பாவம் அச்சம் பழி என நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.

- குறள்: 146

பிறன் மனையாளை நோக்குபவனுக்குப் பின்வரும் நான்கு தீவினைகள் விளைகின்றன.

பாவம், உறங்காமை, பழிச்சொல், துன்பம்.

- தம்ம பதம்: 436

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற் பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

- குறள்: 436

முதலில் ஒருவர் தம்மை நல்வழியில் நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும். பிறகுதான் மற்றையவர்க்கு எடுத்துரைக்க வேண்டும். இத்தகையவர் பழித்துக்கூறப்பட மாட்டார்.'

- தம்மபதம்: 158

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

- குறள்: 446

செய்யத் தக்கதைக் கைவிட்டும் செய்யத் தகாததைச் செய்தும் கட்டுக்கடங்காதுள்ள மதங்கொண்டவர்க்குக் குற்றங்கள் வளர்கின்றன.

- தம்ம பதம்: 292

தம்மபதத்துக்கும் திருக்குறளுக்கும் சிந்தனை நிலையிலே புலப்படும் பொது வான ஒப்புமைகள்

சிலவற்றை மேலே நோக்கினோம். இவ்வாறான பொதுமைகளைக் கருத்துட் கொண்ட ஆய்வாளர்கள் சிலர் 'திருக்குறளும் தம்மபதமும்' என்ற தலைப்பிலே கட்டுரைகள் எழுதிவந்துள்ளனர். இவ்வகையிலே இரு கட்டுரைகள் சார்ந்த தகவல்கள் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கன. இவற்றுள் ஒன்று காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் சுப.மாணிக்கனாரால் 1984ல் எழுதப்பட்டது. (இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் 16வது கருத்தரங்க ஆய்வுக்கோவை-1984). இன்னொன்று, ஆய்வாளர் ராஜேஸ்வரி கோதண்டம் என்ற ஆய்வாளரால் 2015ல் எழுதப்பட்டதாகும். *(உங்கள் நூலகம் - செப். 2015)*

ராஜேஸ்வரியவர்கள் சில குறள்களின் பொருண்மைகளுடன் தம்மபதத்தின் பாளி மொழி சுலோகங்கள் சிலவற்றின் பொருண்மைகள் சில அம்சங்களில் ஒத்தமைந்துள்ளமையை அடையாளங் காட்டியதுடன் அவை தொடர்பிலான சில சிந்தனைகளையும் முன்வைத்துள்ளார். அவ்வகையில் முக்கியமான சில ஒப்புமைகளை இங்கு நோக்கலாம்.

அ. திருக்குறளின் அடக்கமுடைமை என்ற அதிகாரத்தில் இடம்பெறுவதான,

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல்
- ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.'

- குறள்: 126

என்ற குறளானது புலனடக்கம் பற்றிப்பேசுவது. 'ஒருவர், குறித்த ஒரு பிறவியிலே தனது கண், காது, மூக்கு, நா மற்றும் உடல் என்பன சார்ந்த சுவையநுபவங்களைக் கட்டுப்படுத்தும் வல்லமையைப் பெற்றுவிட்டாராயின் அவ்வாற்றலானது அவருக்கு ஏழு பிறவியிலும் பாதுகாப்புத் தருவதாக அமையும்' என்பது இக்குறளின் தெளிபொருள். இப்பொருண்மையானது தம்மபதத்தின் பிக்கு வர்க்கம் என்ற பகுதியின் முதலாம் பாடலுடன் ஒப்புநோக்கத் தக்கதாகவுள்ளது. அப்பாடல்:

சக்கு நா சங்ரோ ஸாது ஸங்கு ஸோதேன
- ஸங்வரோ
காணேன ஷங்வரோ ஸாது ஸாது ஜிவ் காய
- ஸஸ்வரோ

இதன் பொருள்: 'கண்ணை அடக்குவது நல்லது. காதை அடக்குவது நல்லது. மூக்கை அடக்குவது நல்லது என்றும் உடம்பை அடக்குவது நல்லது. வாக்கை அடக்குவது நல்லது. எல்லாவற்றிலும் அடக்கமாக இருக்கிற பிக்குவானவர் எல்லாத் துன்பங்களிலிருந்தும் நீங்குகிறார்.'

மேற்படி இரு சான்றுகளும் புலனடக்கம் என்ற பண்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பன என்பது வெளிப்படை. மேற்படி குறளிலே அவ்வம்சமானது துறவுநிலை சார்ந்த ஒரு அறவியலாளனுக்கு அமைந்திருக்க வேண்டியதாக எடுத்துரைக்கப்பட்டுளது. தம்மபதத்தின் இச்சுலோகமானது பௌத்த பிக்கு ஒருவருக்கு இருக்க வேண்டிய முக்கிய பண்பாக அதனை எடுத்துரைத்துள்ளது. இதுவே வேறுபாடு.

ஆ. திருக்குறளின் 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தின் இறுதிக்குறள் அந்தணர் எனப்படுவோரின் பண்பை எடுத்துரைப்பது.

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்
- வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

- குறள்: 30

என்பது அக்குறள். அறவுணர்வும் உயிர்களிடத்து இரக்கமும் உடையவர்களே அந்தணர் என்ற கணிப்புக்குரியவர் என்பது இதன் தெளிபொருள். திருக்குறளின் 'கூடாவொழுக்கம்' என்ற அதிகாரத்தின் இறுதிக்குறளானது, 'அகத்தூய்மையைப் பேணாது புறத்தோற்ற நிலையில் மட்டும் வேஷங்கள் பூண்போர் மீதான விமர்சனம்' ஆகும். அக்குறள் வருமாறு:

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த(து) ஒழித்து விடின்.

- குறள்: 280

ஒருவர், 'உலகத்தால் பழிக்கப்படும் செயற்பாடுகளைத் தவிர்த்து வாழ முடிந்தாலே போதும். மாறாக, அவர் தமது நிலைப்பாட்டை உணர்த்துவதற்காகத் தலையை மொட்டையடிப்பதற்கோ அல்லது அதில் சிகையை நீளமாக வளர்ப்பதற்கோ அவசியமில்லை' என்பதே இக்குறளின் பொருளாகும். அதாவது 'புறவேடங்கள் முக்கியமல்ல' என்பதும் மாறாக, 'அகநிலை உணர்வின் தூய்மையே முக்கியம்' என்பதையுமே இக்குறள் உணர்த்தி நிற்கிறது.

மேற்படி இரு குறள்களின் தொனிப்பொருள்களையும் இணைத்துப் பேசுவது போல அமைந்த ஒரு சுலோகம் தம்மபதத்திலுள்ளது என்பதை ராஜேஸ்வரியவர்கள் மேற்படி கட்டுரையில் எடுத்துக் காட்டியுள்ளார். தம்மபதத்தின் 'பிராமண வர்க்கம்' என்ற உட்பிரிவின் 11ம் பாடலே, அது. அப்பாடல் வருமாறு:

'ந ஜடாஹி ந கொத்தேன ந ஜச்சா ஹோதி ப்ராஹ்மணோ
யம்ஹி ஹச்சஞ்ச தம்மோச லோஸு சீ ஸோ சப்ராஸ்மணோ'

'மயிரைச் சடையாக வளர்த்திருப்பதினாலோ, பிறப்பினாலோ கோத்திரத்தினாலோ ஒருவர் பிராமணர் ஆகமாட்டார். யாரிடத்தில் உண்மையும் தர்மமும் இருக்கிறதோ அவரே தூய்மையானவர். அவரே பிராமணர்.'

> **சமணம் அல்லது பௌத்தம் சார்ந்த சான்றோர் ஒருவர் திருக்குறளின் இல்லறவியலில் கூறப்படுவது போன்ற வாழ்வியல் நடைமுறைகளையும் அந்நூலின் காமத்துப்பால் புலபடுத்தும் காதலுணர்வுசார் அம்சங்களையும் அநுபவபூர்வமாக எடுத்துரைக்க முற்பட்டிருப்பார் எனச் சிந்திப்பதற்கே இடமில்லை.**

மேற்படி சுலோகத்தின் பொருள், இதுவே. இதிலே சிகையை வளர்த்தல் என்பதான புறத்தோற்ற நிலை விமர்சனத்துக்குள்ளாகிறது. அகநிலையான உண்மைச்சார்பும் அறவுணர்வின் முக்கியத்துவமும் இங்கு வலியுறுத்தப்படுகிறது.இச்சுலோகப்பொருண்மையைத் தழுவியனவாகவே மேலே நாம் நோக்கிய இரு குறள்களின் தொனிப்பொருண்மைகள் உள்ளமை தெளிவு.

பேராசிரியர் டாக்டர் சுப. மாணிக்கனார் அவர்கள் 'திருக்குறளும் தம்மபதமும்' என்ற தலைப்பிலான தமது ஆய்வுக் கட்டுரையில் அறக்கருத்துகளை எடுத்துரைப்பதில் இருநூல்களுக்குமிடையில் புலப்படும் பொதுப்பண்பொன்றை எடுத்துக்காட்டியுள்ளார். குறித்த ஒரு அறவியல் அம்சத்தை வலியுறுத்துவதற்கு உடன்பாடு மற்றும் எதிர்மறை ஆகிய இருவகை உத்திகளைக கையாளும் முறைமையே, அப்பொதுப்பண்பாகும். (திருக்குறளில் இவ்வுத்தி முறைகள் பயின்றுள்ளமை தொடர்பான சான்றுகளை நாம் முன்னரே நோக்கியுள்ளோம்.)

மேலே ஆய்வாளர் ராஜேஸ்வரி கோதண்டம் மற்றும் பேராசிரியர் டாக்டர் சுப. மாணிக்கனார் ஆகியோர் ஒப்பியல்நோக்கில் முன்வைத்துள்ள விடயங்கள் 'திருக்குறளின் உருவாக்கத்தில் தம்மபத சிந்தனைகள் - அதாவது பௌத்த மரபுசார் அற-ஒழுக்க நெறிமுறைகள் - ஆழமான செல்வாக்குச் செலுத்தியிருக்க வேண்டுமென்ற ஊகத்துக்கு இடமளிப்பன என்பது வெளிப்படை. இவ்வாறான ஊகமானது திருக்குறளைப் பௌத்த சார்பான நூலாகவே கணிக்கவும் தூண்டிநிற்பனவாகும். மேற்படி ஒப்புமைகளை நோக்கிய ஆய்வாளர்களுள் ஒருசாரார் திருக்குறளைப் பௌத்த நூலாகவே கருதவும் முற்பட்டுள்ளனர். குறிப்பாக, கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் வாழ்ந்த சிந்தனையாளர்களுள் ஒருவரான பண்டிதர் அயோத்திதாசர் (1845-1914) என்பார் இதனை ஒரு பௌத்த மத ஆக்கமாகவே கணித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய செய்தியாகும். அயோத்திதாசருடைய இக் கணிப்பு தொடர்பில் எழுத்தாளர் திரு. ஜெயமோகன் அவர்கள் முன்வைத்துள்ள ஆய்வுக்குறிப்பொன்றை இங்கு சுட்ட விழைகிறேன்.

'திருக்குறள் ஒருபௌத்த நூல் என்றே அயோத்திதாச பண்டிதர் வாதிடுகிறார். திரிக்குறள் என்பதே உண்மையில் அதன் பெயர் என்று சொல்லும் பண்டிதர் அது திரிபிடகம் போன்ற ஒரு பௌத்தப் பெயரே என்றும் சொல்கிறார். அதனால்தான் அது முப்பால் என்று அழைக்கப்பட்டது. பௌத்தமதத்தின் கருத்துக்கள் நேரடியாகவே குறளில் உள்ளன என்பது அவரது வாதம்.' *('இந்தியச் சிந்தனைமரபில் குறள்' - jeyamohan. in Feb.4-2009).*

இதுவரை, 'திருக்குறளின் ஊற்றுக்கண்களாகத் திகழ்ந்திருக்கக் கூடிய சிந்தனை மரபுகள்' என்ற பார்வையிலே தமிழகத்தின் பண்டைய அறமரபுகள், வடஇந்திய மண்ணிலிருந்து தமிழகத்துக்கு அறிமுகமான சமணம் மற்றும் பௌத்தம் ஆகிய சமயதத்துவ சிந்தனைகள் என்பன கவனத்துட் கொள்ளப்பட்டன. குறிப்பாக, சமணம் மற்றும் பௌத்தம்சார் சிந்தனைகளுடன் நெருக்கமான தொடர்புகொண்டதாகத்திருக்குறள் அடையாளங் காணப்பட்டுள்ளமை பற்றிய செய்திகளும் மேலே நோக்கப்பட்டன.

தொடர்தல் 104ம் பக்கம்

இலக்கியத் திறனாய்...

83ம் பக்கத் தொடர்ச்சி...

அடுத்து, 'வட இந்திய மண்ணிலிருந்து தமிழகத்துக்கு அறிமுகமான மற்றொரு சிந்தனைத் தொகுப்பான வேதமரபுக்கும் திருக்குறளுக்குமுள்ள உறவு எத்தகையது?' என்பது கவனத்துட் கொள்ளப்படவுள்ளது. அதனை நோக்குமுன் மேலே நோக்கிய சமணம் மற்றும் பௌத்தம் ஆகியவற்றுக்கு மிக நெருக்கமாகத் திருக்குறளை இட்டுச் செல்வதில் உள்ள பிரச்சினை அம்சமொன்றை இங்கு எடுத்துக்காட்டி விமர்சிக்கவேண்டியது அவசியமாகிறது. அந்த அம்சம், 'ஒரு நூலின் சிந்தனை மூலங்களை இனங்காண்பதில் கவனத்தில் எடுக்க வேண்டிய அணுகுமுறை' பற்றியதாகும். இது பற்றிய விளக்கம் வருமாறு:

குறித்த ஒரு நூலாக்கத்திற் செல்வாக்குச் செலுத்தியுள்ள சிந்தனைகள் பற்றிய தேடலை மேற்கொள்ள முற்படுமிடத்து அணுகுமுறை சார்ந்த இரு முக்கியவிடயங்களை நாம் கவனத்திற்கொள்ளவேண்டும். ஒன்று, அந்நூலின் ஒட்டுமொத்த அடித்தள அம்சமான வாழ்வியல் நோக்கு என்பதை அடிப்படையாகக்கொண்டு அத்தேடலை மேற்கொள்வது. இன்னொன்று, அதன் உள்ளார்ந்த கூறுகள் பலவற்றிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ள சிந்தனைகளை இனங்காண முற்படுவதாகும். இவற்றுள் முதல்வகைப் பார்வைகள் முழுமை சார்ந்தவை. பின்னைய வகைப் பார்வைகள் முழுமைசாராதவை. அவை தனித்தனிக் கூறுகள் அல்லது பகுதிகள் சார்ந்தவை என்றே கொள்ளத்தக்கனவாகும்.

மேற்குறித்த அடிப்படையிலே நோக்கும் போது திருக்குறளைச் சமணம் மற்றும் பௌத்தத்துடன் தொடர்புறுத்தும் வகையிலமைந்த பார்வைகள் 'தனித்தனிப் பகுதிகள் சார்ந்த பார்வைகள்' என்றே கொள்ளப்படவேண்டியன. அதாவது திருக்குறளின் சொல்லாட்சிகள் மற்றும் குறித்த சில அறம்சார் அம்சங்கள் முதலியவற்றைத் தனிநிலைகளில் நோக்கும் பார்வைகளாகவே அவை அமைந்தன என்பது தெளிவாகவே தெரிகிறது.

திருக்குறளின் சமணச்சார்புக்கான முக்கியசான்றுகளாகக் காட்டப்பட்டவற்றுள் ஒரு வகைச் சான்றுகள் அதிற் பயின்ற ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், பொறிவாயில் ஐந்தவித்தான், அறவாழி அந்தணன் முதலான சொற்களும் தொடர்களுமாகும். அவை சமணத்தின் தீர்த்தங்கரர்களை மட்டுமே குறிப்பன எனக்கருதப்பட்டன என்பதை முன்னைய கட்டுரையிலே கண்டோம். சமணச் சார்புநிலையில் காட்டப்பட்ட மற்றொரு சான்று, நீத்தார் பெருமை மற்றும் அறன்வலியுறுத்தல் ஆகிய அதிகாரங்களின் கூறப்பட்ட அறநெறிகள் சமணம் சார்ந்தவை என்பதாகும். இதனையும் முன்னைய கட்டுரையில் நோக்கியுள்ளோம். இக்கட்டுரையிலே மேலே பௌத்த சார்புக்குச் சான்றுகளாகக் காட்டப்பட்டவை, 'குறித்தசில அறக்கருத்துகளும் உத்திமுறைகளுமே' என்பது வெளிப்படை.

இவ்வாறாக தனித்தனிக் கூறுகளை மையப்படுத்தி நோக்கும் நிலையில் பௌத்தம் மற்றும் சமணம் ஆகியவற்றின் சார்புடையதொன்றாக திருக்குறள் காட்சிதருகின்றதென்பது உண்மையே. ஆனால் அந்நூலை முழுநிலையில் நோக்கும்போது – அதாவது திருக்குறளின் வாழ்வியல் நோக்கு என்ற அம்சத்தை மையப்படுத்தி நோக்கும்போது இதற்கு நேர்மாறான முடிவுக்கே நாம் வரவேண்டியிருக்கும். அதாவது, 'மேற்படி இரு சமயங்களையும் சாராத ஒரு நூலாகவே அது திகழ்கிறது' என்பதான உண்மையை நாம் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கும் என்பதே இங்கு நமது கவனத்துக்குரிய செய்தியாகும். இத்தொடர்பிலான விளக்கம் வருமாறு:

வாழ்வியல் நோக்கு என்ற சொல்லானது வாழ்வியல் பற்றியும் அதற்கமைந்த சூழல் பற்றியும் ஒருவர் - அல்லது ஒருபடைப்பு - கொண்டிருக்கும் நோக்குநிலைகளைச் தொகுத்துச் சுட்டுவதாகும். அதாவது வாழ்க்கையும் அதற்கமைந்த சூழலும் அவரால் அல்லது அப்படைப்பால் எவ்வாறு தரிசிக்கப்படுகின்றன என்பதே இங்கு கவனத்துக்குரியதாகிறது. அவ்வகையில், 'திருவள்ளுவரின் - அதாவது திருக்குறள் என்ற படைப்பின் வாழ்வியல் நோக்கு யாது?' என்ற வினா இங்கு எழுகின்றது. இதற்கான விடை, அந்நூல் இந்த உலக வாழ்வை முழுமையாக ஏற்றுக்கொள்கிறது என்பதாகும். அதாவது குடும்பம், சமூகம், சமயம் உணர்வு, அறம், அரசு, சட்டம் மற்றும் கலை - பண்பாட்டுக்கூறுகள் முதலான அனைத்து வாழ்வியற் கூறுகளும் ஒருங்கிணைந்ததான ஒரு நிறைவான வாழ்வியலையே அது பேசுகிறது என்பதே இதன் விளக்கமாகும்.

அதன் இல்லறவியலில் பேசப்படும் விடயங்கள் ஒருவருடைய குடும்பவாழ்வுசார் பன்முக இயங்குநிலைகளையும் அவை தொடர்பில் அவர் பேணிக்கொள்ளவேண்டிய உணர்வம்சங்களையும் மையப்படுத்தியவையாகும். அதன் காமத்துப்பால் என்ற பெரும் பிரிவானது முழுமையாகவே 'குடும்பவாழ்வியலின் 'ஆண்பெண் உறவு' சார் அநுபவங்களைப் பேசுவது என்பதும் வெளிப்படை. பொருட்பால் என்ற பெரும் பிரிவானது, ஆட்சிநடத்துவோரின் தலைமைத்தகுதிகள் மற்றும் அவர்களின் நிர்வாகத்திறன், சட்டத்தின் வழியிலான ஆட்சிமுறை மற்றும் நாட்டின் பொருளியல் வளம், பாதுகாப்பு முதலான சிந்தனை அம்சங்களை உள்ளடக்கியதாகும். (திருக்குறளின் உள்ளடக்கப் பரப்புப் பற்றிய இவ்வாறானசெய்திகள் பல ஏற்கெனவே இத்தொடரின் 33வது கட்டுரையிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளமையால் இங்கு இவை பற்றிய விரிவு தவிர்க்கப்படுகின்றது.)

மேற்சுட்டியவற்றுள் ஆட்சிமுறையுடன் தொடர்புடைய சிந்தனைகள் சமூக வாழ்வியல் சார்ந்தவை என்பது வெளிப்படை. இங்கே சமூகம் என்பது கணவன் - மனைவி பிள்ளைகள் மற்றும் உறவினர் ஆகியோரை உள்ளடக்கிய குடும்பங்கள் பலவற்றின் தொகுநிலையையே சுட்டிநிற்கின்றது என்பது தெளிவு. இவ்வாறான குடும்பங்களின் இணைப்பான சமூகங்கள் பலவற்றின் பொருளியல் இயங்குநிலைகள் மற்றும் நீதிமுறை முதலியவற்றை ஒரு ஒழுங்கு நெறிக்குட்படுத்தி மேற்பார்வையிடுவதற்கான அதிகாரங்கொண்ட அமைப்புகளாகவே அரசு, அமைச்சு முதலான ஆட்சிமுறை சார்ந்த நிறுவனங்கள் உருவாக்கம் பெற்றன என்பது வரலாறு. இவையனைத்தையும் பற்றி விரிவாகப் பேசியுள்ளதன் மூலம் இந்நூல் 'உலகியல்சார் வாழ்வை முழுநிலையில் ஏற்றுக்கொண்டு வாழமுற்படுகிறவர்களுக்குரிய ஒரு அறநூ'லாகவே தன்னை இனங்காட்டியுள்ளமை தெளிவாகவே தெரிகின்றது. சுருங்கக் கூறுவதானால் வள்ளுவரே சுட்டியதுபோல, 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' வழிகாட்டும் நூல் அது.

மேற்படி வாழ்வாங்கு வாழும் முயற்சியிலே எதிர்கொள்ள நேரும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் நாடுவதற்கான வழிமுறைகள் என்ற வகையிலேயே அந்நூல் அன்பு, அறம் மற்றும் அறிவு ஆகியன சாரந்த அணுகுமுறைகளை விரித்துப் பேசிநிற்கிறது.

மேற்கண்டவாறாகத் திருக்குறள் புலப்படுத்திநிற்கும் வாழ்வியல் நோக்கானது சமணம் மற்றும் பௌத்தம் ஆகியவற்றின் வாழ்வியல் நோக்குகளிலிருந்து தெளிவாகவே வேறுபட்டதாகும். காரணம் அவ்விரு சமயங்களும் இந்த உலகியல் சார்ந்த வாழ்வியலை முழுநிலையில் ஒப்புக்கொண்டவையன்று என்பதேயாகும். அதாவது, மாந்தரின் 'குடும்பவாழ்வு', 'சமூக-பொருளியல் வாழ்வு' மற்றும் ஆட்சியியல் முதலான பல்வேறு பரிமாணங்களையும் கொண்டதான வாழ்வியலை அவை முழுநிலையில் தரிசிக்கமுற்பட்டவையல்ல. மாறாக, அவை வாழ்க்கைச் சூழலிற் காணப்படும் துன்பங்களுக்கு - அதாவது மாந்தருள் பெரும்பாலோரும் பல்வேறு உயிரினங்களும் அநுபவிக்கும் துன்ப துயர அநுபவங்களுக்கு விடைகாண முற்பட்ட சிந்தனைகளேயாகும்.

அவ்வகையில் அவை முறையே, அஹிம்சை (இன்னாசெய்யாமை) மற்றும் சீவகாருண்ணியம் (உயிர்களின் மீதான இரக்கம்) முதலான கருத்தாக்கங்களை முன்னிறுத்தி அறம்பேச முற்பட்டவையாகும். துன்ப துயரங்களுக்கு விடை காண்பது என்ற வகையில், வாழ்க்கையைத் துறப்பது அல்லது வாழ்வியல் சார் பற்றுகளிலிருந்து விலகிநிற்பது ஆகிய செயன்முறைகளை மையப்படுத்தியே அவை தமது சிந்தனைகளை முன்வைத்தன. இவ்வாறான அவற்றின் சிந்தனைப் போக்குகளுக்கான முக்கிய காரணம், அவை வாழ்க்கையைத் 'துன்பமயமானதாகவும் நிலையற்றதாகவும் கருதிநின்றமை' யேயாகும்.

இவ்வாறான அவற்றின் துன்பியல்சார் நோக்குநிலைகளைத் தெளிவுறுத்தும் வகையில் அவற்றின் நிலையாமையுணர்வு சார்ந்த இரு இலக்கியநிலைச் சான்றுகள் இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படுகின்றன.

முல்லை முகைமுறுவல் முத்தென்றிவை
- பிதற்றும்
கல்லாப் புன்மாக்கள் கவற்ற விடுவனோ
எல்லாருங்காணப் புறங்காட்டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகுவேன்.

- நாலடியார்: 45

வினையின் வந்தது வினைக்கு விளைவா யது
புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது
மூப்பு விளிவுடையது தீப்பிணி இருக்கை
... .
மக்கள் யாக்கை இது...

- மணிமேகலை: 4 : 113,14,15,20

இவ்விரு பாடற்பகுதிகளும் உலகியல் வாழ்க்கைக்குக் களமான உடலை வெறுத்து ஒதுக்குவன என்பது வெளிப்படை. இவற்றில் முதலாவது பாடல் சமண சார்பான அறநூலான நாலடியாரில் இடம்பெறுவது. மற்றது, பௌத்தமதப் பேரிலக்கியமான மணிமேகலையில் இடம்பெறுவது.

இவ்வாறாகத்'துன்பியல் நோக்'கில் உடலை வெறுக்கும் சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களில் ஒன்றின தளத்திலே, 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்பதான அடிப்படைக்குறிக்கோளுடன் அமைந்ததான திருக்குறள் உருவாகியிருக்கும்' எனக்கருதுவது ஆய்வு நோக்கில் பொருத்தமானதாகத் தெரியவில்லை. குறிப்பாக, சமணம் அல்லது பௌத்தம் சார்ந்த சான்றோர் ஒருவர் திருக்குறளின் இல்லறவியலில் கூறப்படுவது போன்ற வாழ்வியல் நடைமுறைகளையும் அந்நூலின் காமத்துப்பால் புலப்படுத்தும் காதலுணர்வுசார் அம்சங்களையும் அநுபவபூர்வமாக எடுத்துரைக்க முற்பட்டிருப்பார் எனச் சிந்திப்பதற்கே இடமில்லை.

அப்படியானால், 'திருக்குறளின் அறக்கருத்துக்கள் பலவற்றிலும் மற்றும் சொல்லாட்சிகள் மற்றும் எடுத்துரைப்பு முறைகள் ஆகியவற்றிலும் மேற்படி இரு சமயங்களின் செல்வாக்குக் காணப்படுவதை எவ்வாறு புரிந்துகொள்வது? என்றவினா எழுவது இயல்பு.

தொடரும்...

subramanian.n@thaiveedu.com



Protection For You & Your Family

Our services

Life Insurance «
Critical Illness Protection «
Mortgage Protection «
Travel/Super Visa Insurance «
Dental & Medical Benefits «
Disability Benefits «
Long Term Care «
Employee Benefits «
RESP, RRSP & TFSA «

Are You Getting Million Dollar Advice?

Life100
INSURANCE & INVESTMENTS INC.

416-918-9771 | 416-321-2500

info@life100.ca www.life100.ca

10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6

Sritharan Thurairajah CLU, CHS

Simple Solution in a Critical Situation

www.raghalhaya.com

ராகாலயா நுண்கலைகூடம்

ஒன்ராரியோ கனடா

பெருமையுடன் வழங்கும்

15 ஆவது ஆண்டு நிறைவு

இன்னிசை மாலை

" சங்கீத கலாவித்தகர் ", "இன்னிசைவாணி"

ஸ்ரீமதி லசந்தி ராஜ்குமார்

அவர்களின் வழிகாட்டலில்

மாணவ, மாணவிகளின் பண்ணிசை,
வாய்ப்பாட்டு, வயலின், வீணை நிகழ்ச்சிகள்
இடம் பெறும்.

அனுமதி இலவசம்

தொடர்புகளிற்கு :
905-943-9047 | 647-224-3546

காலம்: November 19, 2016
நேரம்: மாலை 4:00 மணிக்கு
இடம்:
Sir John A. MacDonald collegiate Institute
2300 Pharmacy Avenue, Scarborough.
மின்னஞ்சல்:
raghalhayafinearts@gmail.com

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கறுப்பு உயிர்களும் உயிர்களே!

- க. நவம் -

மெல்ல அவல் தேடும் மேற்குலக ஊடகங்களின் வாய்களுக்குள் அகப்பட்டு, அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறது, வெர்மான்ற் (Vermont) பல்கலைக்கழகம்! அமெரிக்காவின் வடகிழக்கே, இயற்கையழகு கொஞ்சும் வெர்மான்ற் மாநிலத்துப் பல்கலைக்கழக வளாகத்தின் மத்தியில் பறந்து கொண்டிருந்த கொடி ஒன்று, செப்ரெம்பர் மாத இறுதியில் (செப். 24-25) களவாடப் பட்டமையே அதற்கான காரணம். அது 'Black lives Matter' என அழைக்கப்படும் 'கறுப்பு உயிர்களும் உயிர்களே' இயக்கத்தின் கொடி. கடந்த வாரம் சார்லெற் (Charlotte) நகரிலும், அதற்கு முன்னர்

வேறுபல நகர்களிலும் கறுப்பு இனத்தவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதன் எதிரொலியாக ஏற்றப்பட்ட கொடி. ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம், நீதியின் தேடல், வன்முறைக்கெதிரான போராட்டம் போன்ற இலட்சியங்களின் அடையாளச் சின்னமாகப் பறக்கவிடப்பட்ட கொடி. பல்கலைக் கழக நிர்வாகத்தின் பூரண அங்கீகாரத்துடன், தேசியக் கொடியுடனும் மாநிலக் கொடியுடனும் சம உயரத்தில், சமாந்தரமாகப் பறக்கவிடப்பட்ட கொடி. இனவாதிகள் அதனை இரவோடிரவாகக் களவாடியமை, எரிகின்ற இனவெறுப்புச் சூளையினுள் எண்ணெயை ஊற்றிவிட்டிருக்கின்றது!

அமெரிக்கக் காவற்துறையினரின் கடும் போக்கும், அதன் விளைவாக இனவுறவில் ஏற்பட்டுவரும் விரிசல்களும் சமூகத்தில் ஆழ ஊடுருவியுள்ள இத்தருணத்தில் இடம் பெற்றுள்ள, வெர்மான்ற் பல்கலைகழகக் கொடியகற்றற் சம்பவம், 'கறுப்பு உயிர்களும் உயிர்களே' இயக்கம் குறித்த புதிய சர்ச்சைகளுக்கும், வாதப்பிரதிவாதங்களுக்கும் வழிதிறந்துள்ளது. நல்ல நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட ஒரு இயக்கத்தின் அடிப் படைக் கொள்கைகளை, வெவ்வேறானோர் வெவ்வேறு விதங்களில் அர்த்தங்கொள்ள வகைசெய்துள்ளது.

'கறுப்பு உயிர்களும் உயிர்களே' இயக்கம்(BLM) வன்முறையை ஊக்குவிப்பதாகவும், அதுவே ஒரு இனவெறுப்பு இயக்கமென்றும், வெர்மான்ற் பல்கலைகழக நிர்வாகம் இவ்வியக்கத்தின் கெடுபிடிகளுக்கு அடிபணிந்துவிட்டதாகவும், பண்பாட்டு மோதலொன்றின்போது பல்கலைகழகம் பக்கச்சார்புநிலை எடுத்துவிட்டதாகவும், இனிவருங் காலங்களில் தீவிரவாதக்குழுவொன்றின் கொடியையும் ஏற்றிவைக்கப் பல்கலைகழக நிர்வாகம் சம்மதிக்கக் கூடும் என்பதாகவும் வெள்ளையின அடிப்படை வாதிகளும் பழமைவாதிகளும் குற்றம் சாட்டத் துவங்கியுள்ளனர்.

2012 பெப்ரவரி 26ம் திகதி ஃப்ளோரிடாவில் Trayvon Martin என்ற பெயருடைய 17 வயது ஆபிரிக்க-அமெரிக்க வாலிபனை George Zimmerman எனும் வெள்ளைய ரான சுற்றுப்புறக் காவற்பணித் தன்னார்வ ஊழியர் ஒருவர் சுட்டுக் கொலை செய்திருந்தார். வழக்கு விசாரணையின் பின்னர், ஜூலை 2013ல் அவர் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம்தான் 'கறுப்பு உயிர்களும் உயிர்களே' எனும் இயக்கம் கருக்கட்டக் காரணமாயிற்று. தொடர்ந்து, 2014ல், Michael Brown, Eric Garner எனும் இரு கறுப்பின இளைஞர்கள் காவற்துறையினரால் கொல்லப்பட்டதனைத் தொடர்ந்தே, இவ்வியக்கம் அமெரிக்காவெங்கும் பரவி, ஒரு தேசிய இயக்கமாக வடிவெடுத்தது. சிறுபான்மையினர் பெருந்தொகையில் சிறைவைக்கப்படுதல், சிறுபான்மையினருக்கு எதிராகக் காவற்துறையினர் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நிறுவனமயப்படுத்தப்பட்ட இனத்துவேஷத்தைக் கடைப்பிடித்தல் போன்ற கெடுபிடிகள் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளுடன் இவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்டது. காவல் துறையினர் தொடர்ந்து நிகழ்த்திவரும் துப்பாக்கிச் சூட்டுக் கொலைகளும், அவர்களது கொடூர நடவடிக்கைகளும் அமெரிக்காவில் மட்டுமன்றி, அண்டை நாடான கனடாவிலும் BLM இயக்கத்தின் பரம்பலுக்கு வழிகோலியது. இவ்விரு நாடுகளிலும் சுமார் 30 கிளைகளைக் கொண்ட ஒரு இயக்கமாக இது வியாபித்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக, BLM தனது வலையமைப்பை விரிவாக்கி, ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தி வருகின்ற அதே சமயம், ஆயுதம் தரிக்காத அப்பாவிக் கறுப்பின மக்களுக்கெதிரான

காவற்துறையினரின் அட்டகாசங்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன. கடந்த ஜூலை மாதம் டிற்றோயிற் நகரில் BLM இயக்கத்தை விமர்சித்தமைக்காக காவற் துறை அதிகாரி ஒருவர் பதவியிறக்கம் செய்யப்பட்டார். அதேமாதம் ஒஹையோவில் BLM அடையாளச் சின்னத்தைச் சட்டையில் குத்திக்கொண்டு நீதிமன்றம் சென்ற சட்டத்தரணி ஒருவருக்கு, நீதிபதி 5 மணித்தியாலச் சிறைத்தண்டனை வழங்கினார். காவற்துறை அதிகாரிகள் பலர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேலும் பல ஆபிரிக்க-அமெரிக்கர்களைத் துப்பாக்கிக்கு இரையாக்கி உள்ளனர். பதிலாக 6 காவற் துறையினர் டலஸ் நகரில் சுட்டுக்கொல்லப்பட்டனர். இம்மாதம் சார்லெற் நகரில் Keith Lamon என்பவரும் ருல்ஸாவில் Terence Crutcher என்பவரும் காவற் துறையினரால் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறாக, பழிக்குப் பழி, இரத்தத்திற்கு இரத்தம் என்ற பரமவைரி மனோபாவத்துடனான மல்லுக் கட்டல்களினால் நாடு கொதிநிலை அடைந்துள்ளது!

இவற்றின் பக்க விளைவுகளாக, வெள்ளை இனத்தவர் மத்தியில் 'வெள்ளை உயிர்களும் உயிர்களே' என்றும், 'நீல உயிர்களும் உயிர்களே' என்றும், 'எல்லா உயிர்களும் உயிர்களே' என்றும் புதுப்புது இயக்கங்கள் புற்றீசல்கள் போலக் கிளம்பியுள்ளன. இவை அனைத்தும் BLM இயக்கத்திற்கு எதிரான இயக்கங்களாகத் தம்மை இனங் காட்டியுள்ளன. பெருந்தொகையில் வந்து சேரும் மூன்றாமுலக நாட்டுப் புதிய குடிவரவாளர்களையும், இனங்களுக்கிடையிலான பலவந்தமான ஒருங்கிணைப்பையும், 24/7 இனக்கலப்புப் பிரசாரத்தையும் இப்புதிய இயக்கங்கள் மூர்க்கமாக எதிர்க்கின்றன. இன, நிற வேறுபாடுகளைக் கண்ணாற் காணக்கூடாத 'நிறக்குருடுகளாக' வாழுமாறு தாம் நிர்ப்பந்திக்கப்படுவதாக வெள்ளை இனத்தவரது இவ்வியக்கங்கள் கூறுகின்றன. BLM இயக்கத்திற்கு எதிராகப் போர்க் கொடிகளும் பதாகைகளும் தாங்கியவாறு ஆர்ப்பாட்டம் செய்யவென இவை வீதிகளில் இறங்கியுள்ளன.

இவ்வாறு வெளிக்கிளம்பியுள்ள புதுப்புது இயக்கங்களை மிகுந்த துயரத்தோடும் எமாற்றத்தோடும் BLM இயக்கத்தின் பெரும்பாலானோர் உற்று நோக்குகின்றனர். உண்மையில் இப்புதிய இயக்கங்கள் மேலாண்மைக்கெனப் போராடுவதாகவும், தாம் சமத்துவத்துக்கெனப் போராடுவதாகவும் இவர்கள் கூறுகின்றனர். இதேவேளை, புதிதாக முளைத்த வெள்ளையர் இயக்கத்தினரை 'போர்வைக்குள் படுத்துறங்கும் பன்றிக் குட்டிகள்' என்றும், 'பொரித்த பன்றி இறைச்சித் துண்டுகள்' என்றும், 'பன்றி இறைச்சித் துண்டுகளைப்பொரிப் பதுபோல இவர்களைப் பொரித்துத் தள்ளுங்கள்' என்றும் BLM இயக்கத்தின் ஒருசில தீவிரப் போக்குடையோர் அவதூறு செய்கின்றனர்.

கனடாவுக்குள் ஏற்கனவே ஆழக் கால்பதித்துவிட்ட BLM, பிரித்தானியா, ஜேர்மனி, நெதர்லாந்து, தென்னாபிரிக்கா, பலஸ்தீனம், இஸ்ரேல் (எத்தியோப்பிய இஸ்ரேலியர்கள்) போன்ற நாடுகளுக்குள்ளும் மெல்ல, மெல்ல ஊடுருவி வருகின்றது. தீண்டாமைக் கொடுமைகளுக்குப் பன்னெடுங்காலமாக இரையாகிவரும் இந்திய தலித்துக்களின் அனுதாபத்தையும் பெற்றுவருகின்றது. எங்கெல்லாம் கறுப்பு இனத்தவர் மீதும், ஒடுக்கப்பட்டவர்கள் மீதும் காவற்துறை தனது கைப்பிடியை நெரித்துப் பிடித்து நிஷ்டூரம் செய்துவருகின்றதோ, அங்கெல்லாம் BLM காட்டுத் தீயாகப் பரவி வருகின்றது. இனவெறுப்பை மறுதலிக்கும் மக்கள் குறிப்பாகக் கறுப்பின மக்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். ஆபிரிக்க-அமெரிக்கக் கறுப்பின மக்களுக்கு ஆதரவாக பிரித்தானியர்கள் "I do this for My Brother" என்றும், "No Racist Police" என்றும் சுலோகங்களைச் சுமந்தபடி தெருவிலிறங்கி ஊர்வலம் செல்கின்றனர். அமெரிக்காவில் சூல்கொண்ட BLM இயக்கம், இப்போது கடல் கடந்து, கண்டம் கடந்து உலகின் பலதிக்கும் பல்கிப்பெருகி வருகின்றது. இக்கொந்தளிப்பின் விளைவாக, ஆபிரிக்க வம்சாவழியினர் பற்றிய தமது ஆய்வினை ஐ.நா. நிபுணர்குழு ஒன்று அண்மையில் துரிதப் படுத்திக்கொண்டது. ஆபிரிக்க வம்சாவழியினர்க்கு அமெரிக்கா இழப்புத்தொகை வழங்க வேண்டும் என்றும், அதற்கான ஆதாரங்களை அடிமை வரலாறு கோடிட்டுக் காட்டுகின்றது என்றும், அமெரிக்க வரலாற்றின் இருளடைந்த அத்தியாயங்களுக்கும், இன்று அங்கு நிலவிவரும் இனத்துவ அநீதிகளுக்கும் தொடர்புண்டு என்றும் அந்த நிபுணர் குழு அண்மையில் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நிலமை கட்டுக்கடங்க வேண்டுமாயின், அமெரிக்காவிலும் ஏனைய பல நாடுகளிலும் இனத்துவேஷம் பல சமயங்களில் புலப்படா வகையிலும், சில சமயங்களில் பூதாகாரமாகவும் உயிர் வாழ்ந்துவருவதை வெள்ளையினத்தவர் ஒப்புக்கொள்ள வேண்டும். கறுப்பினத்தவர்களுடன் கூடி வாழ்ந்து, அவர்களது குறைகளை நேரில் கண்டறிய முன்வரவேண்டும். கறுப்பினத் தவர்களிடத்துக் காட்டப்பட்டுவரும் பாரபட்சத்திற்கு எதிராக ஒவ்வொருவரும் மனமறிய உழைக்க முன்வர வேண்டும். அமைப்பு முறையிலான நிறவாதத்தை _ நிறுவனமயப்படுத்தப்பட்ட நிறவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். ஒருவரது இனம் அல்லது மதம் போன்ற அடையாளங்களை, அவர் குற்றம் செய்தார் எனச் சந்தேகிப்பதற்கான ஆதாரங்களாகக் கொள்ளும், இனவாதம் சார்ந்து மக்களை அடையாளமிடல் (Racial Profiling) எனும் சமூகக் கொடுமை நிறுத்தப்படவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, கறுப்பு இனத்தவர்கள் மீது காவற்துறையினர் காண்பித்துவரும் வன்மம் கைவிடப்பட வேண்டும்.

அமெரிக்காவில் காவற்துறையினரால் வெள்ளையர்கள் கொல்லப்படுவதைவிட, 2.5 மடங்கு அதிகமான கறுப்பினத்தவர்கள் கொல்லப்படுகின்றனர் எனக் கணக்கெடுப்பு ஒன்று கூறுகின்றது. சுமார் ஒரு வருடத்துக்கு மேலாகச் சூடுபிடித்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் ஆர வாரங்களை, BLM இயக்கத்தின் ஆர்ப்பாட்டங்கள் ஓரங்கட்டிவிட்டதாகச் செய்தி ஒன்று கூறுகின்றது. 1989ம் ஆண்டு சீனத் தலைநகரான ப்பீஜிங்கில் உள்ள ரியனன்மென் சதுக்கத்தில், பீரங்கித் தாங்கி முன்னால் தனித்து நெஞ்சு நிமிர்த்தி நின்ற போராளி ஒருவனின் வீரியத்துடன் BLM இயக்கத்தினரது தீரத்தை ஒப்பிட்டு இன்னொரு தகவற் தளம் தலையங்கம் தீட்டியிருக்கின்றது. 'BLM is a Cry for Help' என்பதுதான் உண்மையே தவிர, வெறுப்பை விதைக்கும் ஒரு வன்முறை இயக்கமல்ல என்று சமூக ஊடகங்கள் வழியாக BLM மீண்டும் மீண்டும் வலியுறுத்திவருகின்றது.

மனித உரிமை இயக்கத்தின் தந்தையான மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் மறைந்து 40 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அவர் உயிரோடிருந்து சமவுரிமைப் போராட்டத்தை முன்னெடுத்தபோது பெரும்பான்மையான வெள்ளை இனத்தவர்கள் அவரை வெறுத்தனர். அவரது போராட்டத்தை எதிர்த்தனர். அவர் மறைந்த பின்னர், வரலாற்றின் சரியான பக்கத்தில் நிற்கத் தவறிவிட்டோம் என அதே வெள்ளை இனத்தவர்கள் வெட்கித் தலை குனிந்தனர். ஆனால் இன்றோ அவரைப் போற்றிப் புகழ்கின்றனர். இந்நிலையில், மார்ட்டின் லூதர் கிங் அன்று முன்னெடுத்த மனித உரிமைகள் இயக்கத்தின் இன்னொரு வடிவமான 'கறுப்பு உயிர்களும் உயிர்களே' இயக்கத்தை ஏற்க மறுத்து, அதே வரலாற்றுத் தவறினை மீண்டும் செய்யத்தான் வேண்டுமா? என்பதை ஒவ்வொரு வெள்ளை இனத்தவரும் சிந்தித்து முடிவெடுக்கவேண்டிய காலம் வீணே கரைந்துகொண்டிருக்கின்றது!

உசாத்துணை:

- *Derek Hawkins, The Washington Post, 'This is what happens when a Black Lives...' - Sept 26, 2016*
- *Katie Mettler, The Washington Post, 'Why SPLC says White Lives Matter is...'- Aug. 31, 2016*
- *John Halstead, The Huffington Post, 'The Real Reason White People Say...'- Jul 28, 2016*

navam.k@thaiveedu.com

மாயத் தரைவண்மை

புகழ்பெற்ற ஓவிய மேதைகளின் ஓவியக் கண்காட்சி - ரொறன்ரோவில்

- கருணா -

பிரான்சின் ஆர்லே (Arles) நகரம். ரோன் (Rhone) நதி அமைதியாக ஓடிக்கொண் டிருக்கிறது. நதிக்கரையில் அமர்ந்து ஒரு வர் இரவு வானத்தையும், நட்சத்திரங்க ளையும், நீரில் பிரதிபலிக்கும் வீதி விளக்கு வெளிச்சங்களையும், ஓரத்திலே காதலோடு இருக்கும் ஒரு ஜோடியையும் வரைந்துகொண்டிருக்கிறார். இது நடந்தது 1888இல். வறுமையுடனும் துயரங்களுட னும் ஒரு மனநோயாளி போன்று வாழ்ந்து நாற்பது வயதுக்கு முன்னரே தற்கொலை செய்துகொண்ட அந்த ஓவியன் தன் வாழ் நாளில் எந்த ஓவியத்தையும் விற்பனை செய்ததில்லை. அந்தக்காலத்தில் அவ னுடைய ஓவியங்களை யாரும் பெரிதா கக் கணக்கெடுக்கவுமில்லை. அந்த ஓவி யருடைய பெயர் வின்சென்ற் வான் கோ.

அன்று ரோன் நதிக்கரையில் அவர் வரைந்த நட்சத்திர வானம் என்ற ஓவியம் இன்று பின் மனப்பதிவுவாதம் (Post-Impressionism) எனப்படுகின்ற ஓவியப் போக்கின் அடையாளமாகக் கொண்டா டப்படுகின்றது. அவர் அன்று வரைந்த நதிக்கரையை இரவில் சென்று பார்ப்பதே இன்று பெரும் பேறாகக் கருதப்படு கிறது.

வான் கோவின் நட்சத்திர இரவு ஓவியம் உட்பட ஓவியப்போக்கின் திசையை மாற்றியமைத்த பல ஓவிய மேதைகளின் ஓவியங்கள் 'மாயத் தரைவண்மை' (Mystical Landscapes) என்ற பெயரில் ஒன்ரா றியோ ஓவியச்சாலையிலே (Art Gallery of Ontario) ஒக்ரோபர் 22ம் திகதி முதல் 2017 ஜனவரி 29ம் திகதி வரை காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

உலகெங்கிலும் உள்ள பல ஓவியக் காட்சியகங்களிலிருந்து கொண்டுவரப்பட் டிருக்கும் இந்த ஓவியங்களை ஒன்றாகப் பார்ப்பது மிக முக்கியமானது. நவீன ஓவி யத்தின் முக்கிய போக்குகளான மனப் பதிவுவாதம் (Impressionism), பின் மனப் பதிவுவாதம் (Post Impressionism), வெளிப் பாட்டுவாதம் (Expressionism), குறியீட்டு வாதம்(Symbolism) போன்றவை நிலவரைக் காட்சிகளூடாக எவ்வாறு பதியப்படுகின் றன என்பதையும் இங்கு பார்க்க முடியும்.

இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள வான் கோவின் இன்னுமொரு புகழ்பெற்ற ஓவியம் 'ஒலிவ மரங்கள்' (Olive Trees). அவர் ஒலிவ மரங்கள் என்ற தலைப்பில் சென்.ரெமியில் பல ஓவியங்களை வரைந் திருந்தாலும் இதுவே மிக முக்கியமான தாகக் கருதப்படுகிறது. வான் கோவின் சிறப்பே துருத்திக் கொண்டு தெரியும் அவரது தூரிகைத் தீட்டல்களாகும். அவற் றைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக் கும் ஒருவருக்கு காற்று மெதுவாக வீசு வதும் மரங்கள் அசைவதும் புலப்படும்.

இங்கு வந்துள்ள இன்னுமொரு பிரபல மான ஓவியம் பிரசங்கத்துக்குப் பின் னான காட்சி (Vision after the Sermon). ஓவியர் போல் கோகான் (Paul Gauguin) வரைந்த இந்த ஓவியம் குறியீட்டுவாதம் என்ற ஓவியப்போக்கின் மிக முக்கிய ஓவியமாகக் கருதப்படுகிறது.

பைபிளில் யாக்கோபுவும் தேவதூதரும் சண்டையிடுவாதாக ஒரு கதை வரும். இங்கு கோகான் பிரான்ஸ் நிலவரைப் பின்னணியில் ஒரு குருவானவர் இந்தக் கதையைப் பிரசங்கம் செய்வதாக ஓவி யத்தை வரைகிறார். பிரசங்கம் கேட்பவர் களுக்கும் குருவுக்கும் இந்தக்காட்சி முன்னே நடப்பது போல ஓவியம் அமைக் கப்பட்டுள்ளது. இவை உட்பட க்ளூட்

Olive Trees, Van Gogh

The Starry Night over the Rhone, Van Gogh



Vision after the Sermon, Paul Gauguin

மோனே, எட்வேர்ட் மொங்க், இயூஜின் ஜான்சன், ஜோர்ஜியா ஓகீவ், கனடியர்க ளான எமிலி கார், லோரன் ஹரிஸ், பிரடரிக் வார்லி போன்ற பல ஓவியர்க ளின் ஓவியங்களும் காட்சிக்கு வந்துள் ளன. இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள். ஒன்ராரியோ ஓவியக் காட்சி யகம் - Art Gallery of Ontario, 317 Dundas Street West, Toronto, ON, M5T 1G4 என்ற இடத்தில் அமைந்துள்ளது.

இணைய முகவரி: www.ago.net

■

ஊழியம் செய்ய காப்டன் முதற்கொண்டு கடைநிலை ஊழியர்வரை இருபத்தி ஏழு கடலோடிகள் தேவைப்படுகிறார்கள் என்றும்... மறுநாள் வியாழக் கிழமை நேர்முகத்தேர்வு நடக்க இருப்பதாகவும்... ஊதியம் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம் என்றும் சாதகமான ஒரு தெம்பூட்டும் செய்தி கிடைத்தது.

ஓவியம்: கே.கே. ராஜா

கப்பலில் ஏறிய கதை

இரண்டு வாரங்களாகிவிட்டது. பம்பாயின் வெய்யிலிலும், புழுதியிலும் அலைந்து திரிந்ததில் நாட்கள் வேகமாக நகர்ந்ததை உணர்ந்துகொள்ள இயலவில்லை. பைகுல்லாவில் இருந்து விக்டோரியா டெர்மினல்... வி.டி ஸ்டேஷனில் இருந்து 'ப்ரின்ஸ் ஒஃவ் வேல்ஸ் ஸீமென்ஸ் க்ளப்' அங்கிருந்து நரீமன் பாயின்ட்... மீண்டும் மாலையானதும் புனிதர் பிரான்ஸிஸ் அஸிஸியாரின் தேவாலயம்... வை.எம்.சீ.ஏ. யுத் ஹாஸ்டல்... இப்படியே சென்னையிலிருந்து பாம்பே வரும் வழியில் கோலாப்பூர் நிறுத்தத்தில் வாங்கிக் கொண்ட செருப்புகள் தேய்ந்து கொண்டிருந்தன... எங்களது நம்பிக்கைகளைப் போல.

ராபின் கந்தப்பாவை சந்தித்து... கள்ளக் கடலோடிகள் பதிவேடு செய்து தரச்சொல்லிவிட்டு ஸீமென்ஸ் க்ளப்பை விட்டுத் திரும்பிய மறுநாள் காலை பத்து மணிக்கு... அந்த வேளையிலேயே மண்டையைப் பிளக்கும் வெயிலில் பம்பாய் நகரத்தின் சாலைப் போக்குவரத்து நெரிசல்களுக் குள்ளால் நகர்ந்து... நடைபாதை வழியாக ஊர்ந்துகொண்டிருந்த ஜன சமுத்திரத்தின் அலைகளால் தாலாட்டப்பட்ட சிறு படகுகளாய்... நாங்கள் பெரும் படகுகளில் தொழில்வாய்ப்பு தேடிக்கொள்ள எங்களை அழைத்துக்கொண்டு நரீமன் பாயின்ட் வாணிபக் கப்பல் தரகர்களிடம் போனான் ராபின்.

பம்பாயின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் வர்த்தக நிறுவனங்கள் நிறைந்து கிடந்த அந்தப் பகுதியின் நெடிய தெருவொன்றில் இரு புறமும் அழகிய தொடர் மாடிக் கட்டிடங்கள்... நுழைவாயிலில் பளபளப்பான உலோகத் தகடுகளில் பொறிக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகைகளை உன்னிப்பாகப் படித்துக்கொண்டே... கையில் தாளொன்றில் எழுதி வைத்திருந்த முகவரிகளை சரிபார்த்துக் கொண்டு சில அலுவலகங்களில் எங்களை வெளியே நிற்கச் சொல்லிவிட்டு ராபின் உள்ளே போவதும்... வருவதுமாகச் சில பொழுது நகர்ந்தது. மேலும் சில விலாசங்களில் எங்களை உள்ளே போய் கப்பல் வேலைக்கு ஆட்கள் தேவையா என்று கேட்டு வரும்படியும் சொன்னான்.

அப்படிப்போன சில ஏஜென்ஸிகளில் எமது திருட்டுக் கடலோடிகள் பதிவேடுகளைப் பார்த்துவிட்டு விண்ணப்பப் பத்திரங்கள் தந்து நிரப்பித் தரும்படி சொன்னார்கள். தினசரி காலையில் தங்களை வந்து சந்தித்துப் போகும்படியும்... பம்பாய் துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்களில் வேலை வாய்ப்புகளிருப்பின் உடனேயே சேர்ந்துகொள்ளத் தயாராக வரும்படியும் கூறினார்கள்.

"நான் நேற்றுச் சொன்னத இப்ப நேரில பாக்கிறீங்க... இல்லையா? ஊரில காசத் தூக்கிக் குடுத்துப்போட்டு 'வண் வே' டிக்கட்டில மெட்ராஸுக்கு வந்து... ட்ரெய்ன்ல பொம்பேக்கு வந்திறங்கி நாங்கள் வருவ மெண்டு பாத்துக் கொண்டிருந்த கப்பல் எங்கள விட்டிட்டுப் போக... நாங்களே இன்னொரு கப்பல் தேடுற தலையெழுத்த எங்க அண்ணை போய் முட்டுறது...?" பொருமினான் ஜெயக்குமார். விஜயன் அவனைப் பார்த்துவிட்டு ஒன்றும் பேசாமல் தலையைத் தொங்கப் போட்டான்.

"விஜி... நான் அண்ணையவைக்கு எல்லாத்தையும் சொல்லிப்போட்டன்... சொல்லாமலுக்கு விட்டிருந்தா இண்டைக்கு எல்லாம் அவைக்கு மணத்திருக்கும்... நாங்களும் வெறும் பொய்யராய்ப் போயிருப்பம்... இல்லையா?" விஜயன் ஒன்றும் பேசவில்லை. அன்று பகல் ராபின் கடைசியாக ஒரு முகவரியைத் தந்து கேட்டு வரும்படி சொன்ன... பன்னிரண்டாம் மாடியிலிருந்த ஏஜென்ஸியிலிருந்து... எலவேட்டர் இயங்காததால் படிகட்டுகள் வழியாக இறங்கி வரும்போதில்...

"அண்ணையவை... நான் மெற்றாஸிலையே உதச்சொல்லேல்லை எண்டு குறை நினைக் காதையுங்கோ... நம்பிக்கொண்டு வந்த உங்கள சோந்துபோகவிடக்கூடாது எண்டு தான் சொல்லேல்ல. அப்பிடியே சொல்லியிருந்தாலும் நீங்கள் என்னதான் செய்திருப்பீங்கள்? திரும்பிப் போகிறதுக்கும் டிக்கட் இல்லை. அக்கா அட்ரஸில்லாமப் போட்டா... எப்பிடியும் ஒரு கப்பல் தேடி ஏறுறதுதான்... உவனக்கொண்டுதான்... உங்களுக்கு இந்தச் சுத்துமாத்துத் தெரிஞ் சமாதிரிக் காட்டிக்கொள்ளாதேங்கோ... நாங்கள் உவனிட்டக் குடுத்த காசில இஞ்ச தங்கிக்கொண்டே ஒரு கப்பல் தேடி ஏறுவம்... உவன அறுத்துப்போட்டுத்தான் போறது..." விஜயன் இப்போது பொருமினான். வெளியே வந்து பார்த்தால் ராபின் காணாமல் போய்விட்டிருந்தான்.

"தண்ணி அடிச்சுக்கொண்டும்...'பூல் டேபிள்' விளையாடிக் கொண்டும் 'ஸீமென்ஸ் க்ளப் பில' இருப்பான்... பொறுக்கி... வாங்கோ இன்னும் ரண்டு மூண்டு கொம்பனி அட்ரஸ் இருக்கு... அப்ளிக்கேசன் குடுத்துப் போட்டுச் சாப்பிடப்போவம்..." சொல்லிக் கொண்டே மற்றுமொரு நெடிய மாடிக் கட்டிடத்தினுள் நுழைந்த விஜயனோடு நாங்களும் இழுபட்டோம். மூன்று கப்பல் முகவர்களிடம் விண்ணப்பப் பத்திரங்களை நிரப்பிக் கொடுத்துவிட்டு 'கேற் வே ஒஃவ் இந்தியா' நோக்கி நடந்தோம். சிறிது நேரம் இந்தியாவின் நுழைவாயிலில் அமர்ந்து அரபிக் கடலின் குளிர்ந்த காற்றில் உச்சி வெயிலின் உஷ்ணம் தணித்துக்கொண்டும்...கண்ணுக்கெட்டிய தூரத்தில் மிதந்து கொண்டிருந்த கப்பல்களில் வேலை கிட்டி விட்டதான கனவுகளில் மிதந்தபடியும் பொழுதை ஓட்டிவிட்டு "போய்ச் சாப்பிடு வோம்" என்ற விஜயனின் அழைப்பின் பேரில் எழுந்து நடந்தோம்.

அந்தப் பளபளப்பும், படாடோபங்களும் நிறைந்து கிடந்த வாணிபத் தெருக்கள்... பிரித்தானிய வரலாற்றின் பெருமைகளைப் பறை சாற்றிக்கொண்டிருந்த கட்டிடங்கள்... பம்பாயின் இருதயத்து நாடிகளாகப் பொருளாதாரக் குருதியோடிக் கொண்டிருக்க... கிழிந்த...ஒட்டுப்போடப்பட்டிருந்த 'ப்ளாஸ்டிக்' கூரைகளின் கீழே 'காட் போர்ட்' தடுப்புகளால் சிறு குடிசைகளாக அமைந்திருந்த சேரிக் குடியிருப்புகள்... தெருக் குழாய்களில் தண்ணீர் நிரப்பிக்கொள்ள அழுக்குப் பாத்திரங்களோடு முண்டியடித் துக்கொள்ளும் பரட்டைத் தலைக் குழந்தைகள்... அருகே கல்லடுப்புகளில் பெரிய பெரிய பாத்திரங்களில் தாய்மார்களின் நெற்றி வியர்வை கசிந்து விழக் குர்மாவையும், சோற்றையும் கிளறிவிட்டுக் கொண்டிருக்கும் தாய்மார்கள்... உணவுத் தயாரிப்பை உமிழ் நீர் ஊற்றெடுக்க அலுமீனியத் தட்டுக்களோடு உற்று நோக்கிக் கொண்டிருக்கும் தொழிலாளர் திலகங்கள்...பம்பாயின் நாளங்களாக அழுக்குப்படிந்த குருதியை அதன் மனசாட்சிக்கு மீட்டுத் தந்து கொண்டிருந்தன. எதிர்காலப் பாட்டாளிகளாக நாங்களும் அந்தப் புனித வேள்வியில் கலந்து... கையேந்தி... எங்கள் மதிய உணவை முடித்துக்கொண்டோம். அருள்ஜோதியை நினைத்துத்தான் உள்ளூர நான் பயந்துகொண்டிருந்தேன்.

இவ்வாறாக இரண்டு வாரங்கள் கழிந்தன. அந்த ஒரு ஞாயிற்றுக் கிழமை பம்பாயின் புகழ் வாய்ந்த மஹாலக்ஷ்மி கோயிலுக்குப் போனோம். அருள்ஜோதியும் கூட வந்தான். ஆச்சர்யமாக இருந்தது. கையெடுத்துக் கும்பிட்டானா என்பது இன்றுவரை ஞாபகத்தில் இல்லை. மூன்றாவது வாரம் ஆரம்பத்தில் இரண்டு நாட்கள் இவ்வாறாகவே அலைக்கழிந்தன. விண்ணப்பித் திருந்த கப்பல் ஏஜென்ஸிகளில் தினசரி காலையில் சென்று விசாரித்த பின்னரே வேறு முகவர்களிடம் செல்வதென்பது ஒரு நியமமாகவே ஆகிப்போனது. மூன்றாவது நாள் காலையிலும் அவ்வாறே சென்று ஒரு கம்பெனியில் விசாரித்த போதில் 'க்றீஸ்' நாட்டில் ஒரு கிரேக்கக் கப்பல் கம்பெனிக்குச் சொந்தமான கப்பலொன்றில் எங்கள் நால்வருக்கும் உள்ளூர ஒரு சிறு துளி நம்பிக்கை சுரந்தாலும் சம்பளங்கள் சரிவருமா... அடமானம் வைத்த நகைகளை மீட்டெடுப்பது மட்டுமல்ல... நாலு காசு கையிலும் மிதக்குமா... ஒரு சிறு கப்பல் பணக்காரனாய் ஊர் திரும்ப இயலுமா... அல்லது பட்ட கடன் தீர்ப்பதற்காக மட்டுமே மாய்வதா... நம்பகத் தன்மை இல்லாத கிரேக்கத்துக் கம்பெனிகளின் கப்பலில் வேலைக்குச் சேர்ந்து நடுவில் ஏதாவது ஆகிப்போய்த் திருப்பியனுப்பிவிட்டால்... திரும்பவும் பம்பாய்க்கு வந்து அலுமீனியத் தட்டைக் கையில் ஏந்துவதா... அல்லது ஊருக்குத் திரும்பிப் போய் சிறைக் கம்பிகளில் நஷ்டக் கணக்கை எண்ணிக்கொண்டிருப்பதா... என்றவறெல்லாம் வாதப்பிரதி வாதங்களில் இந்தியாவின் நுழைவாயிலில் கடலைப் பார்த்த படிக்கு பொழுது படும் வரை ஈடுபட்டுக்கொண்

தொடர்தல் 110ம் பக்கம்

கப்பலில் ஏறிய...

109ம் பக்கத் தொடர்ச்சி...

டிருந்துவிட்டு 'எதற்கும் நாளைக்குப் பார்ப்போம்' என்ற முடிவோடு அவரவர் தங்குமடங்களுக்குத் திரும்பினோம்.

அன்றிரவு அருள்ஜோதி இரண்டு மூன்று தடவைகள் படுக்கையை விட்டெழுந்து குளியலறைக்குப் போயும் வந்தும் கொண்டிருந்தான். என்ன செய்கிறது என்று நான் கேட்டதற்கு "வாந்தி வாறமாதிரி இருக்கு மச்சான்... ஆனா வாறதில்லை... வயித்தப் பிரட்டிக்கொண்டிருக்கு..." என்றான். நான் பயந்தமாதிரியே ஏதாவதாகித் தொலைக்குமோ... என்று குழம்பிக்கொள்கையில் அவன் படுக்கையை விட்டெழுந்து நான் காவது தடவையாகக் குளியலறைக்குப் போகையில் நானும் கூடப் போனேன். இந்த முறை பகலில் சாப்பிட்ட உணவு அரைகுறையாய் சமீபாடடைந்த நிலையில் வெளியே வந்துவிட்டது. "சரியாய்ச் செமிக்கேல்லப்போல... எனக்கும் நாலஞ்சு நாளா வயித்தப் பிரட்டிறதும்...கக்கூஸுக்கு வராமலும் அடச்சுக் கொண்டுதான் இருந்தது மச்சான்... உனக்கு இப்ப எல்லாம் வந்திட்டுது வெளிய... அது சரியாயிரும்... நாளைக்குப் பாரேன்..." என்ற ஒரு பச்சைப் பொய்யைச் சொல்லி அவனைத் திரும்பவும் படுக்கைக்குக் கூட்டி வந்தேன். அன்றிரவு முழுவதும் நான் தூங்கவேயில்லை. வாந்தி எடுத்த பலஹீனத்தில் மறுநாள் காலையில் நான் எழுப்பும் வரை அவன் நித்திரையாயிருந்தான்.

வியாழக்கிழமை காலையில் நாங்கள் நால்வரும் ஸீமென்ஸ் க்ளப்பில் சந்தித்துக் கொண்டு நரீமன் பாய்ன்டை நோக்கி நடந்தோம். அருள்ஜோதி சோர்ந்து போய்க் களைத்திருந்தான். எப்படியும் ஒரு கப்பலில் வேலை கிடைத்துவிடும் என்கிற நம்பிக்கைகளை நான் வாய்விட்டுப் பேசிக் கொண்டே நடந்ததில் தெம்பு அவன் உடலைச் சுமந்துகொண்டு பம்பாய்த் தெருக்களினூடே ஊர்ந்தது. "ஜெய்ராம் ஷிப்பிங் ஏஜென்ஸி" என்று பளபளப்பாகப் பித்தளைத் தகட்டில் எழுதப்பட்டிருந்த கதவைத் திறந்து உள்ளே நுழைந்தால் அந்த வரவேற்பறை பலரால் ஏற்கெனவே நிறைந்திருந்தது. 'இவ்வளவு பேர்களுக்கு மத்தியில் எமது பொய்களுக்கு வேலை கிடைத்துவிடுமா... ' என்ற பயம் மனதைச் சற்றே தளரவைத்தது. ஆயினும் எழில்கள் ஒன்று கூடித் திரண்டிருந்த... பிறை நுதலில் சிகை அலட்சியமாகத் தவழ... குருதி நிறத்தில் உதட்டுச் சாயம் பூசியிருந்த 'ரிஸப்ஷனிஸ்ட்' ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்து மற்றுமொரு அறைக் குள்ளே அனுப்பிக் கொண்டிருந்த இங்கிதத்தில்... இதோ... நம்ம பெயரையும் இன்னும் சில பொழுதில் உச்சரிக்கப் போகிறாள்...என்ற எதிர்பார்ப்பு உற்சாகத்தைத் தந்தது.

அந்தப் போதும் வந்தது. அவள் இதழ் பிரித்து அழைத்த ராசியோ என்னவோ... எங்கள் நால்வருக்கும் வேலை கிடைத்து விட்டது. ஜெயக்குமார் 'மெஸ்பாய்' ஆனான். விஜயன் 'ஆய்லர்' ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அருள்ஜோதியும், நானும் 'ஏபிள் பாடீட் ஸீமென்' ஆக ஏற்கப்பட்டுவிட்டோம். ஆக மொத்தம் எங்களது பொய்கள் அங்கீகரிக்கப் பட்டுவிட்டது. இந்தப் பாவங்களின் விலையை நாம் ஏற்பதா... விடுவதா என்பது தான் இப்போது எமக்கு முன்னால் இருக்கும் வினாக்குறி. ஊரில் முப்பதினாயிரம் ரூபாய்களை அக்காவிடம் கொடுத்த போது உறுதியளிக்கப் பட்ட சம்பளத்தில் பாதிக்கும் குறைவாகவே பேரம் பேசப் பட்டது. உடன்பட்டால் மறுநாள் காலை மீண்டும் இங்கே வந்து ஒப்பந்தப் பத்திரத்தில் கைச்சாத்திட வேண்டும். முரண் பட்டால் கையில் அலுமீனியத் தட்டைத் தொடர்ந்தும் ஏந்த வேண்டும். ஒத்துக்கொண்டால் ஒரு வாரத்தில் ஏதென்ஸ் நகருக்கு விமானப் பயணம் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது நேர்முகத் தேர்வில். திரிசங்கு சொர்க்கத்தில் நாங்கள் திளைத்தோம்!!

மீளவும் எங்களுக்காகிய முருங்கையான 'கேட் வே ஒஃவ் இந்தியா' வந்து அரபிக் கடலைப் பார்த்தபடி சாதக பாதகங்களை விவாதித்தோம். அருள்ஜோதி அடியோடு மறுத்துவிட்டான். எப்படியாவது யாழ்ப்பாணத்துச் சுண்டிக்குளிக்குப் போய் பணத்தை வாங்கத்தான் வாங்குவேன்... என்கிற பிடிவாதத்தில் இருந்தான்.

"உதெல்லாம் நடக்கப்போற விசயமில்லை அண்ணை..." என்று சொல்லிக்கொண்ட விஜயனோடு நானும், ஜெயக்குமாரும் "நாளைக்குக் கொன்றாக்ட் சைன் பண்ணி விடுவோம்..." என்று முடிவெடுத்தோம். "மச்சான் அருள்... நீ திரும்பிப் போய் அவளிட்டக் காசத் திருப்பி எடுத்திடுவாய் எண்டதுக்கு ஏதொரு உத்தரவாதமும் இல்லடா... சரி... அப்பிடியே போறதெண்டாலும்... நாங்கள் வந்தது 'வண் வேடிக்கட்டில'தானே? காசு கையில இருக்காடா... ?" என்றேன். அதற்கு அவன் "இருக்கிற காசோட சென்னைக்குப் போய் அங்க இருந்து ராமேஸ்வரம் போய்... பிறகு கப்பலில மன்னாருக்குப் போய்... யாழ்ப்பாணம் போவன்டா..." என்றான். "அலையத்தான் போறன்... எண்டுறியள்... எப்பிடியோ ஒரு கப்பலில ஏறத்தான் ஏறுவன் எண்டு நிக்கிறியள்...இல்லையா அண்ணை?" என்று சிரித்தபடியே சொன்ன விஜயனை ஒரு முறை முறைத்தான் அருள்ஜோதி.

காலக்கிழவன் போடும் புதிர்களை அவிழ்க்க முடியாத நாங்கள் அவரவர் மடங்களுக்குத் திரும்பினோம். அன்றிரவு அருள்ஜோதிக்குக் கடுமையான வயிற்றுப் போக்கு. நான் பயந்தது போலவே ஊரில் அவனுக்கு அவ்வப்போதில் நேரும் 'அமீப யலிஸ்' இப்போதும். அந்த நள்ளிரவில் எங்கே போய் என்ன செய்வதென்றே தெரியவில்லை. மறுநாள் காலையில் அவன் தூக்கத்திலிருக்க நான் கீழே போய் 'யுத் ஹாஸ்டல்' அலுவலகத்திலிருந்த பணியாளரிடம் விஷயத்தைச் சொல்லி என்ன செய்யலாம் என்று வினவ அவர் சில மாத்திரைகளைத் தந்தார். மேலே போய் அருள்ஜோதியை எழுப்பி போட்டுக்கொள்ளும்படி கொடுத்துவிட்டு வெளியேறி விஜயன், ஜெயக்குமார் ஆகியோருடன் "ஜெய்ராம் ஷிப்பிங் ஏஜென்ஸி" சென்று ஒப்பந்தப் பத்திரங்களில் கையெழுத்துப்போட்டு விட்டு விஜயனிடம் அருள்ஜோதியின் நிலைமையைச் சொன்னேன். "வாங்கோ அண்ணை... போய்ப் பாப்பம்... அங்கினேக்க ஒரு தர்ம ஆஸ்பத்திரி ஒண்டு இருக்கு... சரிவராட்டிக் கொண்டேக் காட்டுவம்..." என்று பரபரப்போடு உடன் வந்தான்.

வை.எம்.சி.ஏ யுத் ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்தபோது துவண்டு போய் அந்த நார்க் கட்டிலின் நார்களிலொன்றாக இழைந்திருந்தான் அருள்ஜோதி. துடித்துப் போன நாங்கள் ஒருவாறு அவனை எழுப்பி உடுத்தி மெதுவாக கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு அருகிலேயே இருந்த விஜயன் சொன்ன தர்மாஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம். ஒரு பெண் மருத்துவர் அவனைப் பரிசோதித்துவிட்டு தொடர்ச்சியான வயிற்றுப்போக்கால் சக்தி குன்றியிருக்கிறார் என்றும் குணமாகும் வரை மருத்துவமனையிலேயே தங்கவேண்டியிருக்கும் என்றும் சொல்லி சில மாத்திரைகளையும், 'டாணிக்கையும்' வாங்கிவரும்படி எழுதித் தந்தார். அருள்ஜோதியை அங்கே அனுமதித்து... ஜெயக்குமாரை உடனிருத்திவிட்டு நானும், விஜயனுமாக வெளியே போய் சற்றுத் தொலைவிலிருந்த மருந்துக் கடையில் அவைகளை வாங்கிக்கொண்டு திரும்பி வந்தோம். விஜயன்தான் பணம் கொடுத்தான். கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தோம். மாத்திரைகளின் வேகத்தாலோ என்னவோ அவன் சிறிதுநேரத்தில் நன்கு தூங்கிப் போனான். தர்மாஸ்பத்திரியை விட்டு நாங்கள் மூவரும் வெளியே வந்து பைகுல்லா நகரத்துச் சாலைகளில் இலக்கில்லாது நடந்தோம். சிறிது நேரம் யாரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. அந்த மௌனத்தை விஜயன்தான் கலைத்தான்.

"அருளண்ணைக்கு வந்த இடத்தில உப்பிடியொரு வருத்தம் வந்திட்டுது... முந்தியும் ஊரில அடிக்கடி வந்ததெண்டுறியள். உதோட கப்பல்ல வேலை செய்யிறது கஷ்டம்... அதிலயும் ஏ.பீ. சீமெனாகக்கப் பலேறினால்... நடுவில உப்பிடி வந்திட்டுதெண்டால் திருப்பியனுப்பிப் போடுவாங்கள். கடலில சும்மாவே சத்தி வரும். ஊரில நான் நயினாதீவுக்கு லோஞ்ச்சில போகேக்கயே சத்தி சத்தியா எடுத்திருக்கிறன்... அருளண்ணையின்ர உடம்பில இப்ப இருக்கிற 'எனேர்சி'யோட ராமேஸ்வரம் போய்... மன்னார் போய்... சுண்டிக்குளிவரைக்கும் போய்ச்சேர மாட்டார். அண்ணை... நான் சொல்லுறதக் கேளுங்கோ... யாழ்ப்பாணத்தில வேல செய்யிற உங்கட பிறென்ட் தானே உங்கள அந்தச் சுண்டிக்குளி வேசையிட்டக் கூட்டிக்கொண்டு போனவர். அருளண்ணையும் அவருமாச் சேந்து அந்தக் கடைக்காரன் கொஞ்சம் வெருட்டிக்கிருட்டி காசத் திருப்பி எடுக்கிற வழியப்பாருங்கோ... நான் உந்தத் தண்ணிக்கேஸ் றொபின் கந்தப்பனிட்ட அடிச்ச காசு கொஞ்சம் இருக்கு... அதில பொம்பேயில இருந்து கொழும்புக்குப் போறமாதிரி ஒரு டிக்கட் போட்டு அண்ணையப் பிளேனில ஊருக்கு அனுப்புவம்... அந்தத் தோறை எங்களப் போல கனபேரைப் பேயராக்கி இஞ்ச கொண்டுவந்துவிட்டவள்... அதில பாதிப் பேயர் எங்களைப்போல உந்தப் பிச்சைச் சம்பளத்தில கப்பலேறிப்போட்டினம்... மிச்சப் பேயர் 'ஊரில போய் இயக்கக்காரப் பெடியளவச்சு அவள என்னெய்யிறனெண்டு பாருங்கோவன்...' எண்டு முறுகிக்கொண்டு போனவை... அவையின்ர 'ரிஸல்ஸ்' என்னெண்டு தெரியேல்ல... இப்ப கிடைச்ச கப்பலில ஏறுவம்...கொஞ்சக்காலம் வேலை பழகிப்போட்டு நல்ல ஒரு பொருத்தமான 'போர்ட்' வரேக்குள்ள அங்க பாஞ்சிருவம்... பிறகு 'ஓவர்லான்ட்டாக' எங்கயாவது போய் ஒதுங்குவம்... எங்களுக்கு இன்னும் ஒரு கிழமை இருக்கு... அருளண்ணைக்கு ஓரளவு சுகமான பிறகு அவரைக் கொண்டு போய் பிளேனேத்தி விட்டிடுவம்... எனக்குத் தெரிஞ்ச ஒரு ரவல் ஏயன்ஸி இருக்கு... நாளைக்கே போய் விசாரிப்பம்... சரியா அண்ணை?"

இதனைத்தான் உலக வரைபடங்களை தாண்டி உய்ய விளையும் மனித நேயமென்பதா? எங்கோ பிறந்து எங்கேயோ வளர்ந்து பூமிப்பந்தின் ஏதோவொரு புறத்தே சந்தித்து... துன்பங்களைப் பகிர்ந்து... அகத்தின் உள்ளார்ந்தே கிடக்கின்ற அன்பின் ஊற்றைச் சுரக்கப்பண்ணி... எனக்குப் பேசவரவில்லை. அந்தக் கணத்தில் விஜயன் எனக்குத் தெய்வமாய்த் தெரிந்தான். ஒவ்வொரு ஜீவனிலும் ஆண்டவன் தரித்தே இருக்கிறான் என்று அன்று புரிந்தது. ஆஸ்திகனோ, நாஸ்திகனோ எல்லோரிலும் ஆத்மா குடியேறித்தான் இருக்கிறது. புனிதர் பிரான்ஸிஸ் அஸிஸியாருக்கு மானஸீகமாக நன்றி சொல்லிக்கொண்டேன்.

அதன் பிறகு எல்லாமே மள... மளவென்று நடந்தேறிவிட்டது. மூன்று நட்களின் பின்னர் அருள்ஜோதி உடல்நிலை தேறினான். ஒரு வெள்ளிக்கிழமை மதியம் பம்பாய் சாந்தாக்ரூஸ் விமானநிலையத்திற்கு மின்சார ரயிலில் நால்வரும் சென்றோம். அருள்ஜோதி சிறிது நேரம் விஜயனைக் கட்டிக் கொண்டிருந்தான். வாயிலிருந்து வார்த்தைகள் எதுவும் வந்ததாக ஞாபகமில்லை. எங்கள் நால்வரின் கண்களும் நீர்த்துக் கிடந்தன. அதுதான் நான் எனது நண்பனைக் கடைசித் தடவையாகப் பார்த்தது. ஒரு சிறிய அவகாசத்தில் விமானம் கிளம்பி மேகக் கூட்டங்களை ஊடுருவித்தொலைந்தது. நாங்களும் அதனூடே தொலைய நான்கு நாட்கள் இருந்தன.

'யுத் ஹாஸ்டலில்' அருள்ஜோதி தூங்கிய படுக்கையில் புதிதாக பெங்களூரைச் சேர்ந்த லக்ஷ்மன் என்ற இளைஞர் அமர்ந்திருந்தார். ஒரு இசைப்பிரியர். பிறகென்ன... சினேகமாகிவிட்டார். மத்திய கிழக்கில் வேலை வாய்ப்புத்தேடி வந்தாராம். அவருடன் ஊர் சுற்றினோம். பம்பாய் மினர்வா திரையரங்கில் 'சங்கராபரணம்' பார்த்தோம். நான்கு நாட்களும் நான்கே மணி நேரமாகி மறைந்தன. மீண்டும் சாந்தாக்ரூஸ் விமான நிலையத்திற்கு மின்சார ரயிலில் லக்ஷ்மனோடு நால்வராகிச் சென்றோம். நான்கே நாள் பழக்கத்தில் அந்த மனிதரின் கண்களும் கலங்கியிருந்தன. எதிர்காலம் சிறக்கப் பரஸ்பரம் வாழ்த்திக் கொண்டோம்... . விடை பெற்றோம். விமானத்தில் தொலைந்தோம்.

இதோ...நடுக்கடலில் கப்பலின் மேற்தளத்தில் நின்று நிலவு பூத்த மேகங்களில்லாத வானத்தையும், தெளிந்த கடலின் நீர்ப்பரப்பையும் முன்னூற்றிஅறுபது பாகையிலும் சுற்றிப் பார்க்கும் போதில் ஒருசமயம் முழுவதுமே கடற்கோளமாக இருப்பது போலவும் இன்னொரு சமயம் அனைத்துமே வானத்தின் கோளமாக இருப்பது போலவும் இரண்டு பூதங்களுமே சித்து விளையாட்டுக்கள் காட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து வியந்துகொண்டிருக்கிறேன் ஔரோறா என்ற கப்பலின் பெயருக்கேற்ப வைகறை விண்ணொளியெழும் வரை.

anandprasad@thaiveedu.com

தமிழ்வலை - 13

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

போட்டியாளர்

பெயர்:

முகவரி:

தொலைபேசி எண்:

மின்னஞ்சல்வரி:



தமிழ்வலை-13 வினா

இடமிருந்து வலம்

1 பாதை எங்கும்
6 இலங்கையில் ஓர் இடம்
7 குழி
9 நடனமாது
10 பயனற்ற
11 கூட்டாளி
12 தன்னெண்ணப் போக்கு
14 செயல்
17 ஒன்றுக்கு மேற்பட்ட
19 மன ஆரோக்கியம் சம்பந்தமான
20 ஒரு கறிச்சரக்கு
21 கைவிடு
22 பிரதியுபகாரம்

மேலிருந்து கீழ்

1 இயற்கொடைப் புலவர்
2 'பிரஞ்சுப் புரட்சியின் குழந்தை'
3 அம்பு
4 புத்தரின் இயற்பெயர்
5 தானியக் குவை
8 தேடிப்பார்த்து தெரிந்துகொள்ளல்
12 படை
13 நண்பி
14 மறுமொழி
15 இலாபம் ஈட்டு
16 துப்புத் துலக்கித் தெரிந்துகொள்
17 வெவ்வேறு
18 கிங்கிணி
20 அஞ்சு

தமிழ்வலை போட்டிக்கான விடையை
இமமாதம் 25-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.

பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய
அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

விடைகளை அனுப்பவேண்டிய மினன்னஞ்சல் முகவரி
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: 416 849 0594

விடைகளை அனுப்பவேண்டிய அஞ்சல் முகவரி

Thaiveedu
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

தமிழ்வலை - 12க்கான விடைகள்



தமிழ்வலை-12 பெறுபேறுகள்

முன்னணிப் போட்டியாளர்கள்

சண்முகவடிவேல். ச., ஸ்காபறோ
சிவா தில்லைநாதன், மார்க்கம்
துளசி சுதர்சன், பிரம்டன்
நாகமுத்து சிவஞானம், ஸ்காபறோ
பவானி சந்திரன், மார்க்கம்

பரிசுபெறும் போட்டியாளர்

நாகமுத்து சிவஞானம்

ஸ்காபறோ

thamilvalai@thaiveedu.com

■ ■ ■

மானிடத்தின் விரிசலிலே சிக்கித் தவிக்கும் தாயக மாணவரின் நலன் காக்கும்" மருதம்

வளரும் இளங்கலைஞர்களின் வண்ணமிர்தமாய் திக்திக்க முத்தமிழ் கலை மாலைப் பொழுது – தியாகத்தின் வெளிப்பாடு

வளரும் இளங்கலைஞர்களின் கலை மாலைப்பொழுது "மருதம் - 2016" கடந்த செப்டம்பர் மாதம் பதினோராம் திகதி சனிக்கிழமை மார்க்கம், ரப்ஸ்கொட் வீதியில் அமைந்துள்ள ஒன்ராறியோ தமிழ் இசைக்கலாமன்ற மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது. "மருதம்" என்றமதைத்துடன் 2013ம் ஆண்டு முதன் முதலில் கலை மாலைப்பொழுது இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

"தாயக மக்களின் மாணவர்களின் கல்விக்கு கைகொடுப்போம்" என்ற தொனிப்பொருளுடன் ஆரம்பிக்கப்பட்ட மருதம் இம்முறை நான்காவது ஆண்டாக நடைபெற்றிருக்கிறது சம்பிரதாய பூர்வமான அம்சங்களை அடுத்து டெல்ராஜ் கனடா தமிழ்க்கலை கல்விச் கலை தமிழ் திறமைச் சித்தி மாணவன் ஹரிசன் உமாஷங்கரின் வரவேற்புரையுடன் வளரும் இளங்கலைஞர்களின் கலைமாலைப் பொழுது ஆரம்பமாகியது.

தியாகேஸ்வரி மகேந்திரனின் தன்நலம் அற்ற சேவைகளுக்கு தொடர்ச்சியாக ஆதாரவு அளித்துவரும் எஸ்தாபரோ ரொஜர்ஸ் தொகுதி சமஷ்டி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் "மருதம் - 2016" நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூகமளித்திருந்தார்கள். அவர் தமது உரையில் போரினால் பாதிக்கப்பட்டு இன்னமும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாமல் அல்லற்படும் தாயக மக்களின் நிலைமையினை உணர்ந்து அவர்களுக்கு பல்வேறு உதவிகளை புலம் பெயர்ந்த மக்கள் வழங்க வேண்டிய தேவையினை வலியுறுத்தினார்கள் கனடா தமிழ்க்கலை கல்விச்சாலையில் இணைந்து கற்பிக்கும் கனேடிய முன்னணி நுண்கலை ஆசிரியர்களும், கலைஞர்களும், மாணவர்களும் சேர்ந்து முத்தமிழ்க் கலை விழாவான மருதத்தை வண்ணமிர்தமாக்கினர்.

"சகா கிரியேசனில்" கலைக் கூட நிர்வாக அதிபர் "நாட்டிய

வேத" கவேதா ஆனந்தின் மாணவிகள் வரவேற்பு நடனமாக "புஷ்பாஞ்சலி" பரதநாட்டிய உருப்படியினை வழங்கினர் "பைரவி நுண்கலைக் கூடம்" இன்னிசை ஆசிரியர் ஜெயச்சந்திரன் தியாகராஜாவின் மாணவர்கள் தமிழ் உணர்வுக் கீதங்களையும் பாடல்களையும் இனரஞ்சகமான பாடல்களையும் இசைத்து மண்டபம் நிரைந்திருந்த சபையோர்களை தம்வசப்படுத்தினர். பிருத்தகானாலயா நிர்வாக அதிபர் இசைக் கலா வித்தகர் ஹம்சத்வனி சிங்கராசாவின் மாணவிகள் பாட்டும், வயலின், வீணை வாத்திய இசையும் வழங்கினர் ஹம்சத்வனி சிங்கராசாவின் பயிற்சித்திறன் மாணவிகளின் பயிற்சித்திறன் தனி ஆற்றலில் வெகுவாகப் புலப்படுத்தப்பட்டது சபையோர்களின் இரசனைக்கு அவை பெருவிருத்தாகின

சிலம்பொலி நாட்டியக் கலைக்கூட நிர்வாக அதிபர் "சதங்கை நிர்த்தகி" ஜெனனி குமாரின் மாணவிகள். இத்தோ ___ கனடா டான்ஸ் அக்கடமி நர்வாக அதிபர் "நர்த்தன வித்தகி" ஜெயத்மினி ஆனத், "கலையருவி நுண்க்கலைக்கூடம்" நிர்வாக அதிபர் ரேணுகா விக்னேஸ்வரன், கலைக்கோவில் அக்கடமி துண்தலைக் கூடம்" நிர்வாக அதிபர் "நாட்டிய கலா சுவாநிதி" வனிதா ஞகேந்திரன் ஆகிய முன்னனி ஆசிரியர்கள் தமது மாணவிகளின் பங்குபற்றுதலுடன் தங்கள் நடன உருப்படிகளை தொடர்ச்சியாக வழங்கி சபையோரின் பாராட்டுதல்களை பெற்றுக் கொண்டனர்.

தமிழ்க்கலை கல்விச் சாலையின் மாணவர்கள் மாவீரன் வீரபாண்டிய கட்ட பொம்மனின் வாழ்க்கையின் இருதிக் கட்டத்தை நாடகமாக நடித்துக் காண்பித்தனர். ஆசிரியர் சுகந்தி சங்கரின் நெறியாள்கையின் தனிமுத்திரை பளிச்சிட்டது.

மருதம் - 2016 விழாவின் போது "நாட்டியக் கலைமணி" ஜெயந்தி சண்முகலிங்கம் அவர்களின் மாணவிகளில் செல்வி கிருஷ்ணி சோமசேதனுக்கு "நிருத்திய சாதனா" என்ற பட்டம் அளித்து கௌரவம் வழங்கப்பட்டது. கிருஷ்ணி சோமசேகரன் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட நடனப் தேர்வில் தரம் ஏழில் ஆசிரியர் தரத்தில் முதன்மைச் சித்தி பெற்றவர். நடன

ஆசிரியர்களான ஜெயத்மினி ஆனத், ஜெனனி குமார், ரஜனி சந்திரபன், ரேணுகா விக்னேஸ்வரன், ஜெயந்தி சண்முகலிங்கம்இ இசை ஆசிரியர் வர்ண இராமேஸ்வரன் ஆகியோர் கூட்டாக மேடையில் தோன்றி பட்டத்தை வழங்கினர் "நிருத்திய சாதனா" கிருஷ்ணி சோமசேகரன் அடுத்த வருடம் பரதநாட்டிய அரங்கேற்றம் காணவிருப்பவர்.

இதே ஆசிரியர்கள் கின்னர இசையில் தரம் ஏழில் ஆசிரியர் தரத்தில் திறமைச் சித்தி பெற்ற மாணவர்கள் தசா குகன்இ பல்மிசா புஸ்பராசாஇ கஜோத் சசிதரன்இ கௌசிகா செல்வராசா ஆகியோருக்கும் இசைமணி என்ற பட்டம் அளித்து கௌரவம் வழங்கினர்.

கனடா தமிழ்க்கலை கல்விச் சாலையில் இளமுலை முதல் தரம் எட்டு வரை ஆற்றலும், பட்டறிவும் மிக்க ஆசிரியர்கள் தமிழ் போதித்து வருகின்றனர். கனடா தமிழ்க்கலை கல்விச்சாலையில் தற்பாதுகாப்புக் கலை, நுண்கலை, பின்னணி கல்வி மேம்பாட்டுத்துறை பயிற்சிநெறிகள் இடம் பெற்று வருகின்றன. கணித ஆங்கில திறன் தேர்வும், நுண்கலைத் தேர்வும் நடத்தப்பட்டு வருகின்றன. கணித ஆங்கில திறன் தேர்வில் சித்தி பெற்ற நாற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு நற்சான்றுப் பத்திரங்கள், கேடயங்கள், பதக்கங்கள் பிரமுகர்களினால் வழங்கப்பட்டன.

தாய் நிலத்தின் எதிர்காலமே கேள்விக்குரியாய் நிற்கும் தாயக மாணவர்களின் இருண்டுபோன கல்விக் கண்களுக்கு ஒளியேற்ற வேண்டும் என்னும் உன்னத நோக்குடன் தொடங்கப்பட்ட மருதம் முத்தமிழ்க் கலை மாலைப்பொழுது நல்ல பயனளித்துவருகிறது ஒரு உதாரணம் ஜெயந்தி நகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச்சிறுவர் இல்லத்தில் உள்ள மாணவர்களில் ஏழுபேரின்பட்டப்படிப்பின் கல்விச்செலவையும் பொறுப்பேற்று அது மட்டுமல்ல கய நிதி உளத்தை பெருக்குவதற்காக அதனி விவசாய, கால் நடை வளர்ப்பு போன்றவற்றிற்கும் கிராமாக நிதி உதவி வழங்கப்பட்டவருகின்று. சம்பூரில் பயனாளிக் குடும்பம் ஒன்றிற்கு வீடு ஒன்று கடந்த வருடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

சமூக பணிபாட்டு உதவாட்டுடனும் அர்ப்பணிப்புடனும்

இயங்கிவருவது கனடா தமிழ்க் கலைக் கல்விச்சாலையாகும். தாயக மாணவர்களின் கல்விக் கண்களை திறக்க வேண்டும் என்ற உன்னத நோக்குடன் நடத்தப்பட்டு வரும் மருதம் - முத்தமிழ் கலை மாலைப்பொழுதுக்கு வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அளித்துவரும் நிதி ஆதரவு மிகுந்த பயன் அளித்துவருகிறது. மருதம் முத்தமிழ் கலை மாலைப்பொழுது மூலம் கிடைக்கின்ற நிதி தாயக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கென அன்பளிப்புச் செய்யப்பட்டு வருவதை அறிந்து கொள்வோர் மேலும் மேலும் அவரது கரத்தை பலப்படுத்த முன்வருதல் பாராட்டுக்குரியதாகும் வரவேற்கத்தக்கதாகும்.

மானுடத்தின் விரிசலிலே விழிபிதுங்க விளைத்து நிற்கும் நாதியற்ற, நலிவுற்ற உள்ளங்களை நிமிர்த்தினைக்கும் நற்பணியை தன்னலம் எதுமற்றது மருதம் கல்வி வசதியற்ற கல்விக்காய் தவமிருக்கும் குழந்தைகளின் ஏக்கத்தை ஓரளவுக்கேனும் நிறைவு செய்ய அது சங்கற்பம் செய்துள்ளது. இன்னொருவர் நலன் காக்கும் தியாகமும், சீலமும் எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை அப்படியாக வாய்த்தவர்களில் ஒருவராக தியாகேஸ்வரி மகேந்திரன் விழங்குகிறார் என்பது உண்மை

தமிழர் படைப்பாளிகள் கழகத் தலைவர் நக்கீரன் தமது நன்றியுரையில் புலம் பெயர்ந்த நாடுகளில் கனடாவில் தான் தமிழர்கள் அதிகமாக வாழுகின்றார்கள் எனவே மொழி கலை பண்பாட்டை கட்டிக்காத்து வளர்ப்பதில் எமக்கு பெரிய பங்கு உண்டு என வலியுறித்திச் சொன்னார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் முல்லைத்தீவில் பிறந்த திருமதி. தியாகேஸ்வரி மகேந்திரன் கல்வி கல்பித்தலை ஒரு தொண்டாக நினைத்து தமிழ்ப்பிள்ளைகளுக்கு தமிழ் மொழியையும், நுண்கலைகளையும் படிப்பித்து வருவது வரவேற்கத்தக்கது என்றும் சொன்னார்.

கனடா தமிழ்கலை கல்விச்சாலை ஆசிரியர்களுக்கும் நக்கீரன் நன்றி கூறத் தவறவில்லை.

மருதம் - 2016 வெற்றிகரமாக நிரைவேற பிருத்தரகானாலய நிரவாக அதிபர் இசைக்கலாவித்தகர் ஹம்சத்தவனி சிங்கராஜா, கணிணித்துறை ஆசிரிகள் பரணிதரன் ஆகியோர் அளித்த பக்கபலம் பற்றி குறிப்பிட்டாக வேண்டும்.

மருதம் என்ற மழலை மாது என்ற பருவம் எய்தி தாயக மாந்தருக்கு தன் மணிக்கரம் நீட்டி உதவுவான் அவளை பரிபக்குவமாக வளர்த்தெடுக்க புலம் பெயர்பெர்த்து வாழும் எம்மவரே உணர்ச்சியுடன் எழுச்சி பெறுங்கள்

□

நினைவுகளின் நிழல்கள் - 16

- உதயணன் -

தமிழ் இதழ்களில் நகைச்சுவை

ஒரு சில வாரங்கள் கழிந்தன. பாலாவுக்கு மன்னார் பகுதியில் செட்டிகுளத்தில் வேலை கிடைத்தது. அவர் அங்கே போய்விட்டார். அதன் பின்னர் அவருடைய தொடர்புகள் குறைந்துகொண்டே வந்தன. எப்பொழுதாவது கொழும்புக்குத் தமக்கையாரிடம் வந்தால் என்னையும் வந்து சந்திப்பார். யாழ்ப்பாணம் செல்லும் சந்தர்ப்பங்களில் சிற்பியைச் சந்திப்பார். கலைச்செல்வி வெளியீட்டிலோ நிர்வாகத்திலோ அவர் தலையிடுவதில்லை. செட்டிகுளத்தில் வாழ்ந்த தமிழ் மக்களை ஒன்றுசேர்த்துச் சில தமிழ்ப் பணிகளை செய்வதாகக் கேள்விப்பட்டேன். அவ்வப்போது என்னுடனான தொடர்பையும் பேணிவந்தார்.

அங்கே யாழ்ப்பாணத்தில் சிற்பி கலைச்செல்விக்காகக் கடுமையாக உழைத்து வந்தார். அதே நேரத்தில் என்னுடனான தொடர்பையும் நெருக்கமாக வைத்திருந்தார். என்னுடைய தொடர்கதை கலைச்செல்வியில் வந்துகொண்டிருந்ததால் ஒவ்வொரு மாதமும் தபால் மூலம் அனுப்பப்படும் அந்த மாத அத்தியாயம் கிடைத்ததும், அதுபற்றிய தனது கருத்தை எழுதுவார். நான் விடுமுறையில் யாழ்ப்பாணம் சென்றால். போய்ச் சேர்ந்த நாளும் மீண்டும் கொழும்புக்குத் திரும்பும் நாளும் தவிர, மற்ற எல்லா நாட்களும் சந்தித்துப் பேசுவோம். எத்தனை நாட்கள், எத்த மணி நேரம் பேசினாலும் பேசும் பொருள் 'கலைச்செல்வி'யாகவே இருக்கும். நாளாக நாளாக எங்கள் நட்பு நெருக்கமானது. எங்கள் குடும்ப விடயங்களைக் கூடப் பரிமாறி ஆலோசிக்கும் அளவுக்கு எங்கள் உறவு இறுக்கமானது.

நாங்கள் எப்பொழுது சந்தித்துப் பேசினாலும், கடிதங்கள் மூலம் பேசிக்கொண்டாலும், கலைச்செல்வியை எப்படி மக்கள் விரும்பி வாங்கிப் படிக்கும் இதழாகக் கொண்டுவரலாம், அதனை எப்படி ஒரு ஜனரஞ்சக இதழாக மாற்றலாம். அதில் வேறென்ன புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தலாம் என்பதுவே முக்கிய பொருளாக இருக்கும்.

அந்த நாட்களிலும் 'ஆனந்த விகடன்' மிகவும் விரும்பிப் படிக்கப்பட்ட இதழாக இருந்தது. எஸ்.எஸ். வாசன் அவர்கள் ஒரு கஷ்ட நிலையில் இருந்த தமிழ் நகைச்சுவை இதழை 1928ல் இருநூறு ரூபாவுக்கு விலைக்கு வாங்கி, அதனை ஆனந்த விகடனாக வளர்த்தெடுத்தார். அப்போதிருந்து ஆனந்த விகடனின் வளர்ச்சிக்குச் சிறப்பான ஆதாரமாக இருந்தவை நகைச்சுவையே. நகைச்சுவையாக எழுதுவதற்குச் சில வடிவங்களும் உத்திகளும் உண்டு. பொதுவாகத் தமிழ் இதழ்களில் பிரசுரமாகும் இருவருக்கிடையே நிகழும் நகைச்சுவையான உரையாடல்களைத்துணுக்குகள் என்பார்கள். சிறு உரையாடல்களை வாசகர்கள் பெரிதும் ரசிப்பதுண்டு. இன்னும், கடிஜோக், நையாண்டி, மிகைப்படுத்துதல், விடுகதைகள், வேறொருவரின் குரலில் பேசுதல், இரட்டை அர்த்தம், அறுவை, சீசன் நகைச்சுவை, அனுபவ நகைச்சுவை என்று பலவகை நகைச்சுவை வழக்கில் உண்டு. 1980களில் ஆனந்த விகடன் அட்டையில் வெளியான ஒரு அரசியல் நகைச்சுவைத் துணுக்குப் பெரும் பிரச்சினையை கிளப்ப ஆனந்த விகடன் ஆசிரியருக்குத் தமிழக அரசு சிறைத் தண்டனை விதித்தது. இந்த நகைச்சுவை வெளியான சமயம் எம். ஜி ஆர், முதலமைச்சராகவும், பி ஹெச் பாண்டியன் சபாநாயகராகவும் இருந்தார்கள். ஆனந்த விகடன் ஆசிரியர் சிறையில் அடைக்கப்பட்டு, பத்திரிகையாளர்களின் பெரும் போராட்டத்தின் காரணமாகப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். ஆனந்த விகடன் ஆசிரியருக்குச் சிறைத் தண்டனை விதிக்கக் காரணமாக இருந்த நகைச்சுவைத் துணுக்கு இதுதான்:

மேடையில் அமர்ந்திருக்கும் அரசியல்வாதிகளைப் பற்றி கீழே அமர்ந்திருக்கும் மக்களில் இருவர் பேசிக்கொள்வதாக அந்தத் துணுக்கு இருந்தது.

ஒருவன்: "இங்கே மேடையிலே இருக்கிற வர்களில் யார் எம் எல் ஏ? யார் மந்திரி?"

இரண்டாமவன்: "அதோ பிக்பாக்கெட்காரன் மாதிரி இருக்காரே அவர்தான் எம்.எல்.ஏ. முகமூடிக் கொள்ளைக்காரன் மாதிரி இருக்கிறவர்தான் மந்திரி."

ஆனந்த விகடன், நகைச்சுவைக்கு அப்பால் கல்கி கிருஷ்ணமூர்த்தி, தேவன், சுஜாதா, மதன், நாடோடி போன்ற எழுத்தாளர்களுக்கும், மாயா, மாலி, சிறீதர், சில்பி, தனு, கோபுலு போன்ற ஓவியர்களுக்கும் தடம் அமைத்துக் கொடுத்திருக்கிறது.

பத்திரிகைகளில் நகைச்சுவைக் கதைகள், கேலிச் சித்திரங்கள். சிரிப்புத் துணுக்குகள் என்று பலவிதமான படைப்புகள் வரும். அவற்றுள் பல பெண்களை, கஞ்சத்தனமான முதலாளிகளை, படிப்பறிவு இல்லாத மூடர்களை, கிராமத்தவரைக் கேலி செய்வது போல அமையும். ஒரு எடுத்துக்காட்டாக, ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஒரு நாள் அந்தப் பெண் கணவனைப் பார்த்து, "அன்பே, பூமியில் நாங்கள் இவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்கிறோம். நாங்கள் இறந்த பின்னர் சொர்க்கத்திலும் இவ்வளவு சந்தோஷமாக வாழ்வோமா?" என்று கேட்டாள்.

"இல்லைக் கண்ணே," என்றான் கணவன். "சொர்க்கத்தில் நீ எங்கேயோ நான் எங்கேயோ அறிமுகம் அடையாளம் எதுவுமில்லாமல் தனித்தனியாக நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருப்போம். அதனால் தான் அதற்குச் 'சொர்க்கம்' என்று பெயர் வைத்தார்கள்."

இன்னும் எத்தனை பேர் 'தண்ணி'யைப் போட்டுவிட்டு, 'இடுங்கண் வருங்கால் நகுக' என்ற குறளுக்குப் பொருள் சொல்லியிருப்பார்கள்.

பின்னர் நகைச்சுவை இதழ்கள் சில தோன்றின் நகைச்சுவை எழுத்தாளர்கள் என்று சிலர் தோன்றிப் பிரபலமானார்கள். நகைச்சுவையான சொற்பொழிவுக்குக் கிருபானந்தவாரியாரையும், சிலேடை நகைச்சுவைக்கு கி.வா.ஜகன்னாதனையும் குறிப்பிடுவது உண்டு. கல்கி கிருஷ்ணமூர்த்தி போன்ற அந்த நாளைய பிரபல எழுத்தாளர்களின் நெடுங்கதைகளிலும் ஆங்காங்கு நகைச்சுவை நடை நளினமாக வந்து செல்லும். பின்னர் மாத வார சஞ்சிகைகளில் 'கேள்வி _ பதில்' என்ற பகுதி ஆரம்பமானது. தமிழ்நாட்டில் 'கல்கண்டு' இதழில் தமிழ்வாணனின் பதில்களையும் கொழும்பில் 'சுதந்திரனி'ல் 'குயுக்தியாரின்' பதில்களையும் வாசகர்கள் ரசித்து வரவேற்றார்கள். அந்தப் பதில்கள் கேலியாய் கிண்டலாய் வாசகரைக் கவரும் வகையில் அமைந்திருக்கும். சிலர் சுதந்திரனை வாங்கினால், முதலில் கேள்வி _ பதில் பகுதியைத்தான் படிப்பார்கள். குயுக்தியார் என்ற புனைபெயரில் பதில்களை எழுதி வந்தவர் சுதந்திரன் ஆசிரியரான திரு எஸ். டி. சிவநாயகம் அவர்கள்.

நகைச்சுவையான படைப்புகளாலேயே சில இதழ்களின் விற்பனை அதிகரித்தன. நகைச்சுவைத் துணுக்குகள் இதழ்களின் வளர்ச்சிக்கு ஏணிப்படியாக விளங்கின. எட்டு வகையான மெய்ப்பாடுகளில் முதன்மையானதாகக் கருதப்படுவது நகைச்சுவை என்பார்கள். அதனைப் பொதுவாக எல்லோரும் விரும்புவர். உள்ளத்திற்கும் உடம்புக்கும் உரம் அளிப்பதோடு, சிந்திக்கவும் தூண்டுவதாக அமைவது இதன் சிறப்பு ஆகும். இதழ்களை வாங்கியவுடன் முதலில் நகைச்சுவைத் துணுக்குகளைப் படிப்பவர்களும் உண்டு. பொழுதுபோக்காகவும் இவை அமைவதுண்டு. நகைச்சுவைத் துணுக்குகளை அரசியல் சார்ந்த துணுக்குகள், பொதுவான பிற துணுக்குகள் என்று இரண்டு வகையாகக் காணலாம்.

அந்த நாட்களில் வீரகேசரி, சுதந்திரன் பத்திரிகைகளில் வெவ்வேறு புனைபெயர்களில் சில நகைச்சுவைக் கட்டுரைகளையும் எழுதிக் கொண்டிருந்தேன். அதனைப் பார்த்த சிற்பி கலைச்செல்வியிலும் அவ்வப்போது ஏதாவது நகைச்சுவை அம்சங்களைச் சேர்க்க வேண்டும் என்று விருப்பப்பட்டார். ஒருமுறை நான் அவரைச் சந்தித்தபோது, "தமிழ்நாட்டிலிருந்து வரும் இதழ்களை இலங்கை வாசகர்கள் விழுந்தடித்துப் படிக்கிறார்கள். ஏன், ஒரு தமிழ் நாட்டு வார இதழும் ஒரு இலங்கை இதழும் ஒன்றாகக் கையில் கிடைத்தால் நானே முதலில் தமிழ்நாட்டு இதழைத்தான் புரட்டிப் பார்ப்பேன். ஏனென்றால் அவர்கள் வளர்ந்துவிட்டார்கள். அவர்களுக்கு நவீன அச்சக வசதிகளுண்டு பத்திரிகை அனுபவம் உள்ள திறமையான ஓவியர்கள் இருக்கிறார்கள். அனுபவம் நிறைந்த எழுத்தாளர்களும் பலர் இருக்கிறார்கள். அதற்கேற்ப விடயங்களைப் பிரசுரித்து எங்களை ஈர்த்துவிட்டார்கள். நாங்களும் கலைச்செல்வியில் ஏதாவது புதிய அம்சங்களைப் பிரசுரித்து வாசகர்களைக் கவர வேண்டும்," என்பார்.

இப்படியே பல தடவைகள் நாங்கள் சந்தித்துப் பேசிய பின்னர், 'கலைச்செல்வி நகைச்சுவைக் கட்டுரைப் போட்டி' ஒன்றை நடத்துவது என்று தீர்மானித்து அதற்கான அறிவித்தலும் கலைச்செல்வியில் வெளியானது. நாங்கள் அறிந்தவரையில், அது வரையில் வேறெந்தப் பத்திரிகையும் 'நகைச்சுவைக் கட்டுரைப்போட்டி' ஒன்றை நடத்தியதில்லை. அதனால் மிகுந்த உற்சாகத்துடன் முடிவு திகதிவரை காத்திருந்தோம். முடிவில் ஏழெட்டுக் கட்டுரைகள் வந்தன. (சரியான எண்ணிக்கை ஞாபகம் இல்லை. எப்படியும் பத்துக்குக் குறைவாகத்தான் இருக்கும்.)

கட்டுரைகளைச் சிற்பியும் ஆசிரியர் பொன்னம்பலமும் நானும் படித்துப் பார்த்தோம். சில நகைச்சுவைக் கட்டுரைகளைப்படித்துப் பார்க்கக் கவலையாக இருந்தது. நாங்கள் மூவரும் ஏகமனதாக மட்டுநகரைச் சேர்ந்த ரீ.பாக்கியநாயகம் என்பவருக்கு முதலாம் பரிசை வழங்கினோம். காலம் சென்ற திரு ரீ.பாக்கியநாயகம் (04.02.1931 _ 03.10.1994) மட்டுநகரைச் சேர்ந்த மூத்த எழுத்தாளர் பல நகைச்சுவைக் கட்டுரைகளை எழுதிப் பிரபலமானவர். ஒரு கட்டத்தில் மட்டக்களப்பின் எழுத்தாளர் சங்கத்தின் பெரும் தூணாக விளங்கியவர். இவர் 1969ல் எழுதிய 'சந்திரனுக்கு ஒரு டிக்கட்

தொடர்தல் 114ம் பக்கம்

தமிழ் இதழ்களில்...

113ம் பக்கத் தொடர்ச்சி...

ப்ளீஸ்' என்ற நகைச்சுவைக் கட்டுரை பெரிதும் பேசப்பட்டது. தமிழ் சாகித்திய விழா _ 1992ல் 'தமிழ்மணி' பட்டம் பெற்றவர்.

கலைச்செல்வி நகைச்சுவைக் கட்டுரைப் போட்டிக்கு வந்த ஏனைய சில தரமான கட்டுரைகள் அடுத்தடுத்த கலைச்செல்வி இதழ்களில் பிரசுரமாகின. இந்தக் கட்டுரைகள் பிரசுரமாகிக் கொண்டிருந்த வேளையில், நான் ஒரு தடவை யாழ்ப்பாணம் போய் சிற்பியைச் சந்தித்தபோது, "இந்தக் கட்டுரைகள் பிரசுரமாகி முடிவதற்குள் வேறு ஏதாவது ஒரு நகைச்சுவைப் பகுதியை ஆரம்பிக்க வேண்டும். நீங்களும் யோசியுங்கள். நானும் யோசிக்கிறேன். அடுத்த சந்திப்பில் ஒரு முடிவை எடுப்போம்," என்றார் சிற்பி.

சிலபல சந்திப்புகளின் பின்னர், 'நாங்களும் கலைச்செல்வியில் ஒரு கேள்வி - பதில் பகுதியைத் தொடங்கலாம்,' என்று முடிவு செய்தோம். சில நாட்கள் அதைப் பற்றியே பேசி ஒரு முடிவுக்கு வந்தோம். ஆசிரியர் என்ற வகையில் சிற்பிதான் பதில் அளிக்கப்போகிறார். ஆனால் எந்தப்புனைபெயரில் பதில்கள் வெளிவரும் என்று தலையைக் குடைந்து குடைந்து யோசித்தோம். கடைசியில் 1950களில் வெளிவந்த 'பராசக்தி' படப் பாடலில் வரும் 'தாண்டவக்கோன்' என்ற, வார்த்தை அப்பொழுது பிரபலமாய் இருந்ததால், அந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தோம். கலைச்செல்வியில் கேள்வி _ பதில் பகுதி வெளிவரத் தொடங்கியது கிண்டல், கேலி, நகைச்சுவை என்பனவே இந்தப்பகுதியின் சிறப்பாக இருக்க வேண்டும் என்று விரும்பினோம். பல வாசகர்கள் இந்தக் கேள்வி - பதில் பகுதியை ஆரம்பத்தில் ஒரு நகைச்சுவைப் பகுதியாகப் புரிந்துகொள்ளவில்லை. கம்பராமாயாணம் பற்றியும் கந்தப்புராணம் பற்றியும் கேள்விகள் வந்தன. இராமர் வாலியை மறைந்து நின்று அம்பெய்தது சரிதானா என்பன போன்ற கேள்விகளும் வந்தன. "சிலப்பதிகாரத்தில் கண்ணகி மதுரையை எரித்தது நியாயமா?" என்றும் சிற்பியைக் கோபித்துக் கொண்ட வர்களும் உண்டு.

தமிழ் மொழி, இலக்கணம், இலக்கியம் தொடர்பான அறிவார்ந்த கேள்விகளைக் கேட்கவும் பதில் எழுதவும் பலர் இருந்தார்கள். ஆனால் நகைச்சுவை மனித இனத்திற்கு மட்டும் கிடைத்த மிகப் பெரிய அருள்வளம். அதனை அனுபவிக்கத் தெரியாதவன் மனித உணர்வுகளில் எதையோ இழந்தவன் ஆகிறான். உயிரினத்தில் மனிதன் மட்டும்தான் சிரித்து மகிழ்கிறான். எனவே, சிரிக்கத் தெரியாதவன், சிரிக்க முடியாதவன், சிரிக்கும் உணர்வு இல்லாதவன் மனித இனத்தில் ஒரு 'மாற்று'க் குறைந்தவன் ஆகிறான். எனவே, சிற்பியும் நானும் பல தடவைகள் சந்தித்து ஒரு திட்டம் வகுத்தோம். சினிமா, கூத்து, நாடகம், உள்ளூர் அரசியல், நாட்டு நடப்புப் போன்ற தலைப்புகளில் நாங்களே சில நகைச்சுவைக் கேள்விகளைத் தயாரித்தோம். வேறுவிதமாகச் சொல்லப் போனால், நல்ல நகைச்சுவையான பதில்களைக் கையில் வைத்துக் கொண்டு, அவற்றிற்குக் கேள்விகளைத் தயாரித்தோம். சிற்பி எழுதிய சில கேள்விகளுக்கு நான் பதில் அளித்தேன். நான் எழுதிய பதில்களுக்கு அவர் கேள்விகளை எழுதினார். இவற்றைத் தபாலில் வந்த கேள்விகளுடன் கலந்து கட்டி வெவ்வேறு பெயர்களில் பிரசுரித்தோம். 'தாண்டவக்கோன்' அளித்த 'பட் _ பட்' கேள்வி பதில்கள் ரசித்துப் படித்த தோடு அறிவார்ந்த மற்றும் பொது அறிவு, நகைச்சுவைக் கேள்விகளும் வரத்தொடங்கின. அப்படி ரசித்துப் படிக்கப்பட்ட ஒரு கேள்வியும் பதிலும் இன்னமும் நினைவில் இருக்கின்றது. அந்த நாட்களில் பெண்கள் தலை அலங்காரத்திற்குப் பெரிய கொண்டைகள் போடுவது ஒரு ஸ்டைலாக இருந்தது. நாடகங்கள் சினிமாக்களில் இதனை மிகவும் மிகைப்படுத்திக் காட்டினார்கள். 1959ல் 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' திரைப்படம் வெளிவந்து, சினிமா உலகத்தையே புரட்டிப் போட்டது. கொழும்பிலும் மற்றும் பெரிய நகரங்களிலும் பட விளம்பரத்திற்காகப் பெரிய பெரிய போஸ்டர்களும் கட்-அவுட்டுகளும் வைத்தார்கள். கட்டப்பொம்மனாக நடித்த சிவாஜி கணேசன், மற்றும் கட்டப்பொம்மனின் மனைவி வீரசக்கம்மாளாக நடித்த எஸ். வரலட்சுமியின் மிகப் பெரிய, ஒருவர் பின் ஒருவர் நிற்பது போன்ற பிரமாண்டமான மார்பளவு வர்ண ஓவியங்களை பல இடங்களில் வைத்திருந்தர்கள். அந்த நேரம் கலைச்செல்வியில் பிரசுரமான ஒரு கேள்வி பதில் இது: "வீரபாண்டிய கட்டப்பொம்மனின் மனைவி வீரசக்கம்மாளுக்கு இரண்டு தலைகளா?" இதற்குக் கலைச்செல்வியில் தாண்டவக்கோன் அளித்த பதில் இது: "இல்லை. தலை ஒன்றுதான். விளம்பரங்களில் தலையிலும் பெரிதாகத் தலைக்குப் பின்னால் இருப்பது அவருடைய கொண்டை".

காலம் ஓடிற்று. கலைச்செல்விக்கு ஓராண்டு நெருங்கியது. முதலாவது ஆண்டு மலரைச் சிறப்பாக வெளியிட விரும்பினோம் இன்னார் இன்னாரின் படைப்புகளை மலரில் சேர்ப்பது என்று முன்கூட்டியே திட்டமிட்டோம். அதன்படி வரதர், எஸ்.டி.சிவநாயகம், பித்தன், சம்பந்தன், உதயணன், மு.தளையசிங்கம், சகிதேவி ஆகியோரின் சிறுகதைகளும், பண்டிதமணி, அகிலன், சி.வைத்திலிங்கம், கனக செந்திநாதன், ஈழத்துச் சோமு, கொழும்புச் சிவம் ஆகியோரின் கட்டுரைகளும், மஹாகவி, பரமஹம்சதாசன், நீலாவணன், தான் தோன்றிக் கவிராயர், முருகையன் ஆகியோரின் கவிதைகளுடன் இன்னும் பல கட்டுரைகள், கேள்வி பதில் ஆகியவற்றுடன் பல சுவாரஸ்யமான படைப்புகளுடன் முதலாவது ஆண்டுமலரை வழக்கத்திற்கு மாறான பெரிய 'சைசில்' வெளியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த மலரில் எனது 'செல்லாக்காசு' என்ற

தொடர்தல் 117ம் பக்கம்

HOMELIFE

HomeLife Today
Realty Ltd., Brokerage
Independently Owned and operated

BEFORE YOU LIST YOUR PROPERTY JUST CALL US & PLEASE LET US EXPLAIN OUR SERVICES !

Homelife Home Warranty Program
Flexible Commission |
Free Market Evaluation

WE HAVE SERIOUS BUYERS LOOKING FOR HOUSE

MORTGAGE CAN BE ARRANGED IN MAJOR BANKS

Olive/Harmony
3 Bed Room, 1 Washrooms
Ottawa Prime Area, 3 Bedroom Bungalow, Updated Kitchen Cabinets, Pot Lights, Close To 401, Schools And Shopping.

Kennedy/Sheppard
2+1 Bed Room, 2 Washrooms
Luxury Tridel Condo Building, Convenient Location, Steps To Ttc, Schools, Shops, Restaurants, Hospital, Medical Centre, Etc, Minutes To Hwy 401 & 404

Ellesmere Rd/ Conlins Rd
3+1 Bed Room, 2 Washrooms
Can Be Rented Out Or Whole House., Close To University Of Toronto, Ttc And Much More. Finish Basement And Separate Entrance

Winston Churchill & Eglinton
4+1 Bed Room, 4 Washrooms
9Ft Ceiling On Main Floor And 16 Ft High Ceiling In Foyer. Gleaming Dark Hard Maple Flooring Throughout Main And Second Floor. Granite Counters, Suites-Plush.

Don Mills/Eglinton
4 Bed Room, 2 Washrooms
Newly Painted Entire House And Exterior Bricks Two, New Staircase, New Front Door, Open Balcony To View, Amenities Are Schools, Daycare, Ttc, Clinic, Pharmacy, Place Of Worship, Shopping, Plaza, etc..

Mccowan/Hwy 401
1 Bed Room, 1 Washrooms
Upgrades Including Laminate Flooring Throughout And Kitchen With Stainless Steel Appliances And Granite Counter Top. Indoor Pool, Guest Suites, Party Room, Exercise Room.

Lawrence Ave E/ Morning Dew
4+2 Bed Room, 4 Washrooms
Gorgeous Modern Kitchen With 36 Inch Cabinets, Granite Counter Tops, Glass Mosaic Back Splash. Double Garage, 2 Parking Spaces, And Sep Entrance To Bsmt. Swimming Pool

Sheppard/Rouge River
4 Bed Room, 3 Washrooms
Less Than A Minute Walking To School, Bus, Pot&Biking. Pot Lights In Living And Family Room, Entrance To Garage Door, Closed Porch, New Grass And Lot More..

Morningside & Morningview Tr
4 Bed Room, 3 Washrooms
All Brick Luxurious, Well Kept Home, Tiled Garage. High Efficiency Furnace, Air Conditioning Home Is Rated: ENERGY STAR. All Toilets Are Water Saver

Stains/Morningside
5+2 Bed Room, 4 Washrooms
Hardwood Floor Thru Out, Kitchen Granite Counter Tops. Basement Has Two Bedrooms, Washroom, Sauna, Kitchen, Washer And Dryer, Close To Ttc, Schools, Park And Much More.

2011 - 2012 PLATINUM CLUB Member
2013 DIAMOND CLUB Member
2014 DIAMOND CLUB Member
2015 DIAMOND CLUB Member

Hariharan
Nadarajah
Sales Representative
Cell: 416-856-4276
harisells@gmail.com

2013 & 2014
Top 5% GROSS
SALES COMMISSION

Nima
Hariharan
Sales Representative
Cell: 647-866-2642
nimah02@hotmail.com

Not intended to solicit buyers or sellers under contract.

Office: 416.298.3200

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS

PICKERING $754,000

FINCH/DIXIE
4 Bedrooms, 3 Washrooms

OSHAWA $799,900

COLDSTREAM/WILSON
5+1 Bedrooms, 5 Washrooms
Basement Finished

PICKERING $799,000

FAIRPORT/STROUDS
3+1 Bedrooms, 4 Washrooms
Basement Finished

CLARINGTON $649,900

PRESTONVALE ROAD/BLOOR STREET
4 Bedrooms, 3 Washrooms

OSHAWA $619,900

TAUNTON/CLEARBROOK
4 Bedrooms, 3 Washrooms

PICKERING $639,900

BROCK/ROSSLAND
3+1 Bedrooms, 3 Washrooms

OSHAWA $1,288,000

SIMCOE ST /COATES RD
3+1 Bedrooms, 4 Washrooms
Basement Finished

WHITBY $698,000

GARRARD/TAUNTON
4 Bedrooms, 3 Washrooms

WHITBY $739,900

DRYDEN/GARDEN
4 Bedrooms, 4 Washrooms
Basement Finished

CLARINGTON $589,000

PRESTONVALE/SOUTHFIELD
5 Bedrooms, 4 Washrooms

OSHAWA $649,900

WILSON/TAUTON
4 Bedrooms, 3 Washrooms

WHITBY $579,000

TWIN STREAMS RD/COUNTRY LN
3 Bedrooms, 3 Washrooms

CLARINGTON $769,900

PORT OF NEWCASTLE/CATHERWOOD
4 Bedrooms, 4 Washrooms

OSHAWA $729,900

WAVERLY/ROSSLAND
4 Bedrooms, 4 Washrooms

WHITBY $799,800

TAUNTON/COUNTRY LANE
4 edrooms, 4 Washrooms
Basement Finished

OSHAWA $599,900

ORMOND/COLDSTREAM
4 Bedrooms, 3 Washrooms

WHITBY $699,900

TWIN STREAMS/COCHRANE
4 Bedrooms, 3 Washrooms
Basement Finished

OSHAWA $775,000

CONLIN/RITSON
4+1 Bedrooms, 3 Washrooms

PICKERING $759,000

ROSEBANK/STROUDS
4+4 Bedrooms, 4 Washrooms
Basement Finished

PICKERING $679,000

BROCK ROAD/ROSSLAND
4+1 Bedrooms, 3 Washrooms

HOMELIFE/FUTURE REALTY INC., BROKERAGE
#205-7 EASTVALE DRIVE, MARKHAM, ON L3S 4N8
BUS : 905 201 9977 / FAX: 905 201 9229
Independently Owned and Operated. **Broker * Sales Representative

Uthayan Sivarajah** 416 301 5555 | Sugan Sivarajah* 905 201 0066 | Raj Sivarajah* 416 843 3333 | SivaKumar Sivarajah* 416 453 7777

தமிழ் இதழ்களில்...

113ம் பக்கத் தொடர்ச்சி...

சிறுகதை இடம் பெற்றது. மலர் தயாராகிக் கொண்டிருந்த வேளையில், மலருக்கு என்னை ஒரு நகைச்சுவைக் கட்டுரையையும் எழுதித் தரும்படி சிற்பி கேட்டார்.

“மலரில் எனது சிறுகதை ஒன்று இடம் பெறுகிறது. நானே அதே மலரில் இன்னொரு கட்டுரையையும் எழுதுவது பொருத்தமாகத் தெரியவில்லை. அந்தப் பக்கங்களில் இன்னொரு எழுத்தாளரின் இன்னொரு படைப்புக்கு இடம் கொடுக்கலாம்,” என்றேன்.

சிற்பி, “இந்த மலர் பெரிய அளவில் அதிக பக்கங்களில் வெளிவரப் போகிறது. ஆனால் இதில் தாண்டவக்கோனின் கேள்வி பதில் தவிர, நகைச்சுவைப் பகுதி வேறெதுவும் இல்லை. நீங்கள் ஒரு நகைச்சுவைக் கட்டுரையை எழுதுங்கள். அதனை இன்னொரு புனைபெயரில் வெளியிடலாம்,” என்றார்.

இதற்காக நான் எழுதிய நகைச்சுவைக் கட்டுரையின் தலைப்பு ‘தேவர் உலகில் பேனாமன்னர்கள்’. இந்தக் கட்டுரையை எழுதியவர் ‘கொழும்பு சிவம்’ என்று மலரில் பிரசுரமானது.

அந்த நாட்களில் நாலு எழுத்தாளர்கள் சேர்ந்தால் ஒரு சங்கம் அமைப்பதும் பத்து எழுத்தாளர்கள் கூடினால் ஒரு பத்திரிகை நடத்துவதும் ஒரு ‘பாஷனா’க இருந்தது. புராணங்கள், தொன்மக் கதைகள், கற்பனைக் கதைகள், பாதாள உலகக் கதைகள் போன்றவற்றில் வரும் பாத்திரங்கள் தேவருலகில் ஒன்றுகூடி ஒரு மகாநாடு நடத்தினால் எப்படி இருக்கும் என்ற கற்பனைதான் இந்தக் கட்டுரை. கட்டுரை முழுவதும் எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் கட்டுரையின் கடைசிப் பகுதியில் கொண்டுவரப்பட்ட ஒரு பிரேரணை ஒரு சின்னப் பிரச்சினையை உருவாக்கியது. கூட்டத்தில் ஒரு உறுப்பினர் பின்வரும் பிரேரணையைச் சபையில் சமர்ப்பித்தார்:

“பூலோகத்தில் மானிடர்கள் நாகரிகம் அடைந்து வருகிறார்கள். இப்பொழுது அவர்கள் யாரையும் ‘அவன்’ ‘இவன்’ என்று அழைப்பது அருகி வருகின்றது. இப்பொழுது ‘அவர்’, ‘இவர்’ என்றே மதிப்பாக அழைக்கிறார்கள். அதனால் நாங்களும் இனிமேல் சிவபெருமானைச் ‘சிவன்’ என்று அழைக்காமல் ‘சிவர்’ என்றே அழைக்க வேண்டும்.”

மலர் வெளியானதும், மேற்படி பிரேரணையச் சிலர் கண்டித்து எழுதினார்கள். ‘கட்டுரையாளர் மன்னிப்புக் கேட்க வேண்டும்,’ என்றும் கேட்டார்கள். நான் சிற்பியைச் சந்தித்துப் பேசினேன்.

சிற்பி கடிதங்களை எனக்குப் படிக்கத் தந்தார். பின்னர், “தி.மு.க. தலைவர்கள், கட்சியின் ஆரம்ப காலத்தில் இந்துமத பழக்க வழக்கங்களையும் சடங்குகள் சம்பிரதாயங்களையும் மேடைகளில் கிழிகிழியென்று கிழித்தார்கள். சி.என்.அண்ணாதுரை எழுதிய ‘பரமசிவனுக்குப் பகிரங்கக் கடிதம்’ என்ற நூலை விழுந்தடித்துப் படித்து ரசித்தார்கள். இப்பொழுது கலைச் செல்வியில் நகைச்சுவைக்காக ஒரு கட்டுரை வந்தால், அதனைத் தெய்வ நிந்தனை என்கிறார்கள்,” என்றார்.

“சரி,” என்றேன் நான். “இப்பொழுது இந்தக் கடிதங்களுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?” என்று கேட்டேன்.

“என்ன நடவடிக்கை எடுப்பது? இதே ‘கொழும்பு சிவம்’ என்ற புனைபெயரில், இதே மாதிரிச் சில நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதி அனுப்புங்கள். நான் பிரசுரிக்கிறேன்,” என்றார்.

கடந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட வருடங்களாகப் பல்வேறு சஞ்சிகைகள், பத்திரிகைகளில் படித்து ரசித்த நகைச்சுவைத்துணுக்குகள் அவ்வப்போது நினைவுக்கு வரும். சில மனிதர்களைக் காணும்போதும் அந்தந்தத் துணுக்குகளில் வாழ்ந்த மனிதர்களைப் போல நினைவில் சிரிப்பை உண்டாக்குவார்கள். இதோ, இக்கணம் மனதில் ஓடும் ஒரு சில துணுக்குகள் வருமாறு:

மகன்: அப்பா, வீட்டிலே காகம் கத்தினால் உறவுக்காரர் வருவார்களா?

அப்பா: ஓமோம்!

மகன்: அவர்கள் எப்போ திரும்பிப்போவார்கள்?

அப்பா: உங்க அம்மா கத்தினால் போய் விடுவார்கள்

•

என்னப்பா காபியில ‘ஈ’ செத்துக்கிடக்குது...?

ஸ்பெஷல் காபியிலதான் சார் ‘ஈ’ உயிரோட இருக்கும்

•

இந்த மிச்சர் பாக்கெட் என்ன விலை?

பத்து ரூபா.

லூசுன்னா எவ்வளவு?

எல்லாருக்கும் ஒரே விலை தான்யா!

•

ஆங்கில டீச்சர்: ‘அவள் அழகாக நடந்து செல்கிறாள்’. இந்த வாக்கியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயருங்கள்.

ஒரு மாணவனின் மொழிபெயர்ப்பு: ‘டேய் மச்சான், super figure டா!

•

டாக்டர்! என் கணவருக்கு திடீர்னு மூச்சு திணறுது!

ஏன் என்னாச்சு?

அது ஒண்ணுமில்லை டாக்டர், என் கூந்தலில் இயற்கையாகவே மணம் இருக்கா இல்லையான்னு மணந்து பார்த்தார்!

•

மின்சாரம் தாக்கிய அனுபவம் உங்களுக்கு உண்டா?

அதெல்லாம் ஒண்ணுமில்லே... சம்சாரம் தாக்கிய அனுபவம் மட்டும் உண்டு!

•

கடவுள்: மனிதா, உனக்கு என்ன வரம் வேண்டும்?

மனிதன்: எனது வீட்டிலிருந்து அமெரிக்காவுக்கு றோட்டுப் போட்டுத் தர வேண்டும்.

கடவுள்: அது கஷ்டமாச்சே! சமுத்திரங்களின் மேலே ரோட்டுப் போட முடியாது. வேறு ஏதாவது கேள்.

மனிதன்: அப்படியானால் என் மனைவி பேச்சைக் குறைக்கவேணும். நான் சொல்லுறதை மட்டும் தான் அவள் கேட்க வேணும். என்னை எதிர்த்துப் பேசக்கூடாது. திட்டக் கூடாது. என்னை அடிக்கக் கூடாது. அந்த வரத்தையாவது தாருங்கள், சுவாமி!”

கடவுள்: உனக்கு அமெரிக்காவுக்குச் சிங்கிள் றோட்டுப் போதுமா? டபிள் றோட்டு வேணுமா?

வளரும்...

உசாத்துணை:

- *http://noolaham.net/project/09/838/838.pdf*
- *https://zh-hk.facebook.com/Pakkianayaga m/?fref=nf*
- *https://ta.wikipedia.org/wiki*
- *http://tamilcomedies.weebly.com/comedies-2.html*
- *http://www.tamilvu.org/courses/degree/p204/p2043/html/p2043513.htm*

uthayanan@thaiveedu.com

DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS

Elankeeran .T

Certified Insolvency Counsellor

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.

  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.

  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca



அந்தகாரம் பரவிய ஆழ்கடல்

இயற்கை பூமியில் உயிர்களைப் படைக்க எண்ணிய போது, அதற்கு உகந்த இடமாக இருந்தது தண்ணீர் தான். நிலம் ஒரு சபிக்கப்பட்ட இடமாக, வெறும் பாறைகளாகத் தான் அப்போது இருந்தது.

பிற்பாடு தான் நிலத்தில் உயிர்கள் வந்து, வளர்ந்து, பரிணமித்து, இன்று நிலவுக்கு அப்பாலும் போய் வந்த போதும், இயற்கை முதன் முதலில் தேர்ந்தெடுத்த தண்ணீர் தான் இன்றும் வாழ்வுக்கு உன்னதமான இடம்.

நிலத்தை விட நீரில் அப்படி என்ன தான் இருக்கிறது? என்ற நினைப்பை மாற்ற வேண்டிய நேரம் இது.

உலகின் மொத்த உயிரினங்களில் 94 வீத மானவை நீரில் தான் நீந்துகின்றன. நிலத்தில் இருப்பவை, மனிதர் உட்பட வெறும் ஆறு வீதம் தான்.

நீரில் இருக்கும் உயிர்களுக்கு எங்களைப் பார்த்தால் சிரிப்புத் தான் வரும். நிலத்தில் அரைந்தபடி திரியும் அற்ப ஜந்துக்களாகத் தான் நாங்கள் தெரிவோம். எங்களுக்கு உயரம் போக விமானம் தேவை, எல்லை கடக்க விசா தேவை, இன்னோரிடம் போக வீதிகள் தேவை. கடல் கடக்கக் கப்பல் தேவை. வாழ்க்கையா இது!

ஆழ்கடல்களில் இந்த அலுத்துப் போகும் வாழ்க்கை முறை அறவே கிடையாது.

நீரின் உயிர்களுக்கு வாழ்வு முற்றிலும் முப்பரிமாணம் தான். நினைத்தால் மேலே நீந்துவார்கள், தேவையானால் கீழே முங்கிப் போவார்கள். பக்கவாட்டில் எல்லைகளே கிடையாத, எல்லா சமுத்திரங்களும் இணைந்த பெரிய தேசம் அவர்களது.

எதிர்காலத்தில் நிலத்தில் வளம் எல்லாம் அழிந்து போய், மீண்டும் நாங்கள் நீருக்குள் வாழ்க்கை நடாத்த வேண்டிய தேவையும் வந்து போகலாம் என சில ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

அலைகடல்கள் பார்ப்பதற்கு அற்புதமாக, அழகாக இருந்தாலும், உள்ளே போகப் போக நிறையவே சவால்களை சந்திக்க வேண்டி வரும்.

சூரியனின் வெளிச்சம் நீருக்குள் அதிக தூரம் போக முடியாது. முதல் இருநூறு மீற்றர் தான் வெளிச்சம் இருக்கும். அதன் பிறகு இருட்டத் தொடங்கி விடும்.

சூரியக் கதிர்களில் நீல நிறம் தான் நீண்ட தூரம் போகக்கூடியது. மற்றைய நிறங்களை கடல் இலகுவாய் உறிஞ்சிக் கொள்ளும். இதனால் தான் கடல் நீல வண்ணமாய் ஜொலிக்கிறது.

இந்த நீல நிறம் கூட இன்னும் கொஞ்சம் ஆழம் வரை தான் அதிகாரம் செலுத்தலாம்.

ஆயிரம் மீற்றருக்கு அப்புறமான பெரும் பிரதேசத்தை எந்த ஒளிக்கதிரும் எட்டிப் பார்க்கக் கூட முடியாது. அதன் பிறகு அடர்ந்த இருட்டுத் தான். பயங்கரமான இந்தப் பகுதியில் தான் கோடிக்கணக்கான உயிர்கள் குடித்தனம் செய்கின்றன.

கடலின் ஆழத்திலுள்ள கும்மிருட்டு தான் அதன் மர்மங்களை அறிவதற்கு மிகப் பெரிய தடை. எந்தப் பெரிய விளக்கைப் போட்டாலும் கொஞ்சத் தூரம் தான் தெளிவாகத் தெரியும்.

அதை விட மிகப் பயங்கரமான இன்னுமோர் இடைஞ்சலும் கூடவே உண்டு. கடலின் கீழே போகப் போக, மேலே இருக்கும் தண்ணீரின் சுமை கூடிக் கொண்டே போகும். கூடவே பக்கவாட்டிலும் தண்ணீர் நெருக்கும். சில நூறு அடி ஆழத்திலேயே இந்த அமுக்கம் போகிறவர்களை நசுக்கி கொன்று விடும்.

இதனால் தான், நாலு இலட்சம் கிலோ மீற்றர் தொலைவில் இருந்த சந்திரனிலேயே வெற்றிக் கொடி நாட்டிய மனிதன், வெறும் பத்து கிலோ மீற்றர் சமுத்திர ஆழத்தை ஜெயிக்க முடியாமல் திண்டாடுகிறான்.

ஆழ்கடலை பற்றி நாங்கள் அறிந்தது இன்னும் ஐந்து வீதம் கூட கிடையாது. இதைவிட எங்களுக்கு செவ்வாய் கிரகத்தின் அமைப்பு இன்னும் அதிகமாகத் தெரியும். இந்த சிற்றறிவு தான் சிறிது காலத்திற்கு முதல் மாயமான மலேசியன் விமானத்தை கண்டுபிடிக்க முடியாமல் திணறப் பண்ணியது.

ஆழ்கடலின் ஆகக்கூடிய ஆழத்தில் இருப்பது, பசுபிக் கடலில் இருக்கும் மரியானா அகழியிலுள்ள Challenger Deep எனும் பிரதேசம். கடல் மட்டத்தில் இருந்து இதன் ஆழம் முப்பத்து ஆறாயிரம் அடிகள். இமய மலையைத் தூக்கி இதற்குள் வைத்தால், எவரெஸ்ட் சிகரத்தையும் தாண்டி இன்னும் ஒரு மைல் உயரத்திற்கு தண்ணீர் இருக்கும். அவ்வளவு ஆழம்.

உலகில் மிகப்பெரும் மலைத் தொடர் கூட தண்ணீருக்குள் தான் இருக்கிறது. Mid-Oceanic Ridge என அழைக்கப்படும், நாற்பதினாயிரம் மைல்கள் நீளமான இந்த மலைத் தொடர் அற்லான்ரிக், பசுபிக் சமுத்திரங்களுக்கு ஊடாக, மிகப் பெரும் அனகொண்டா பாம்பு மாதிரி நீண்டு, வளைந்து செல்கிறது.

ஆழியின் நடுவே நிறைய நீரோட்டங்களும் உண்டு. தண்ணீர் தேசத்தின் இலவச போக்குவரத்து சேவை இது தான். உயிரினங்களையும், உணவுகளையும் இடத்துக்கு இடம் காவிச் செல்வது இவைகள் தான்.

மலைகள், ஆறுகள் மட்டுமல்ல, எரிமலைகளும் கடலின் கீழே நிறையவே உண்டு. உண்மையைச் சொல்லப் போனால் உலகின் தொண்ணூறு வீதமான எரிமலைகள் தண்ணீருக்குள்ளே தான் இருக்கின்றன.

எரிமலைகள் வெடித்துச் சிதறும் போது, சுற்ற இருக்கும் தண்ணீர் படு பயங்கரச் சூடாக இருக்கும். உலோகங்களை உருக்கும் அந்த வெப்பத்தில் கூட உயிர் வாழும் கடல் உயிரினங்கள் பல இருக்கின்றன. ஜெலி மீன்கள் படு சாவதானமாக, இந்த வெப்ப நீரை உணவாக்கிக் கொண்டு வாழ்க்கையை ஓட்டும்.

சில வகை ஜெலி மீன்கள் யமனுக்கு தண்ணி காட்டியவை. முதுமையடைந்து, உடல் தளர்வடையும் போது, பட்டென்று மூன்று நாட்கள் தவத்தில் அமர்ந்து விடும். இவை வேண்டும் வரம் தான் சற்று விசித்திரமானது. தாங்கள் மீண்டும் குழந்தையாகி விட யாசிக்கும். அப்படியே ஆகியும் விடும். மீண்டும் வளரத் தொடங்கும். இந்த வகை ஜெலி மீன்கள் எப்போதும் இறக்காத சாகாவரம் பெற்றவை.

மூளை இல்லை, இதயம் இல்லை, இரத்தம் இல்லை, அப்படியிருந்தும் இந்த ஜெலி மீன்கள் இறக்காமல் தொடர்ந்து உயிர் வாழ்ந்து கொண்டே இருக்கும். அறுநூறு மில்லியன் வருடங்களாக இதே கதை தான். (மனித வரலாறு தொடங்கி வெறும் ஒரு மில்லியன் வருடங்கள் தான்).

நாங்கள் இதுவரை அறிந்து வைத்திருக்கும் கடல் பிராணிகளில் அறிவு கூடியன, டொல்பின்களும், ஒக்டோபஸ்களும் தான். டொல்பின்கள் தங்களுக்குள் கதைக்கக் கூடியவை. உணர்ச்சிவசப்படக்கூடியவை. கண்ணாடியில் தங்களை அடையாளம் கண்டுபிடிக்கும் அளவுக்கு அவைகளுக்கு அறிவுண்டு. ஒக்டோபஸ்கள் போத்தல்களைத் திறக்கும் திறன் கொண்டவை. அடைத்து வைத்தால் சமயோசிதமாக தப்பக் கூடியவை.

சில மீன்கள் படு வேகமாக நீந்தக் கூடியவை. மர்லின் என்ற மீன்கள் மணித்தியாலத்திற்கு 130 கிலோ மீற்றர் வேகத்தில் விரைவாக நீந்தும். Tuna மீன்கள் கூட அதிவேகமாக பாய்ந்து செல்லக் கூடியவை.

தங்கள் பாலினத்தையே மாற்றக் கூடிய அதிசய மீன்களும் கடலின் ஆழத்தில் இருக்கின்றன. Clown மீன்கள் ஆண்களாகவே பிறக்கும். ஆண்கள் நிறைந்த கூட்டத்திற்கு ஒரு பெண் மீன் தான் தலைமை தாங்கும். பெண் இறந்து போனால், கூட்டத்தில் வலிமை கொண்ட ஆண் மீன், சடாரென்று பெண்ணாகி மாறி தலைமை தாங்கத் தொடங்கும்.

Parrot Fish என்பது இன்னொரு வகை மீன்கள். இவைகளின் உடம்பில் ஆண், பெண் இரண்டு உறுப்புகளும் உண்டு. தேவைக்கேற்ப ஆணாகவோ, பெண்ணாகவோ மாறிக்கொண்டு வாழ்க்கையை சந்தோசமாக கொண்டு போகும். (பெண்ணுரிமை இயக்கங்கள் எல்லாம் அங்கே கிடையாது.)

கடல்களின் பெரும் பிரதேசங்களில் மறைவதற்கு இடமேயிருக்காது. ஒரே திறந்த வெளி தான். இரை பிடிக்க, அல்லது இரை கொல்லியிடமிருந்து தப்பிப் போக வசதியாக இயற்கை நிறைய உயிரினங்களுக்கு தங்கள் நிறங்களை மாற்றிக் கொள்ளும் திறமையை கொடுத்திருக்கிறது.

அதிலும் சில வகை கணவாய்கள் மிகவும் தந்திரம் கொண்டவை. பெண் மீது காதல் கொண்டு, காமம் கூடி, கலவிக்கு அழைக்கும் போது அதன் உடல் மண் நிறத்திற்கு மாறும். அந்த நேரம் வேறு யாரும் குறுக்கே வந்தால் அதன் உடல் கோபத்தில் வெள்ளையாக மாறும். இதில் ஒரு சுவாரசியம், பெண் கணவாய் பார்க்கும் பக்கத்தை தொடர்ந்தும் மண் நிறமாகவே, தான் கூலாக இருப்பதாக காட்டிக் கொண்டு, எதிரிக்கு மட்டுமே தன் கோபத்தை, வெள்ளை நிறத்தைக் காட்டும். அப்பப்பா! என்ன டெக்னிக்.

கடலின் ஆழத்தின் இருட்டுக்குள் இருக்கும் பல உயிரினங்களுக்கு வெளிச்சம் வீசும் உறுப்புக்கள் இருக்கும். அந்த வெளிச்சத்தில் தான் அவை இரை தேடும்.

Angular Fish எனும் ஒரு வகை மீன்கள் பார்க்க மிகப் பயங்கரமானவை. அவைகளின் தலையிலுள்ள நீண்ட உறுப்பின் முடிவில் ஒளி வீசும் சக்தி இருக்கிறது. வெளிச்சத்தைக் கண்டு விடுப்பு பார்க்க வரும் மற்ற மீன்களை லபக்கென்று விழுங்கி ஏப்பம் விட்டுவிடும்.

ஆழ்கடலின் அதிசயங்களில் இவை ஒரு துளி தான். இன்னும் அறியவே முடியாத ஏராளமான மர்மங்களும், அதிசயங்களும், ஆழ்கடலின் அடர்ந்த இருட்டுக்குள் அமைதியாய் புதையுண்டு கிடக்கின்றன. இன்னும் நிறைய காலத்திற்கு அவை அப்படியே தான் இருக்கப் போகின்றன.

nimal.nagaraj@thaiveedu.com

மிகக் குறைந்த கட்டணத்தில் முற்றிலும் புதிய காப்புறுதித் திட்டங்கள்

1. மருத்துவ பரிசோதனை எதுவுமில்லாது $800,000 வரை காப்புறுதி
2. இறுதித் தேவைகளுக்கான காப்புறுதித் திட்டம்
3. மருத்துவ பரிசோதனைகளெதுவுமின்றி கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டம்
4. 15 வருடங்களில் கட்டிமுடிக்கக்கூடிய ஆயுள் காப்புறுதித் திட்டம் (கட்டிய பணம் முழுவதையும் ஆயுட்காப்புறுதித் தொகையுடன் பெற்றுக்கொள்ள முடியும்)
5. குழந்தைகளுக்கான முதலீட்டுடன் கூடிய காப்புறுதித் திட்டம். (15 அல்லது 20 வருடங்களில் கட்டிமுடிக்கலாம்)

$100 per month pay for 20 years at 75 insurance coverage **$1,000,000.00**

MEDICAL INUSRANCE FOR SUPER VISA

100% REFUND IF VISA DENIED

Sritharan Thurairajah

Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: **416.918.9771**

Business: **416.321.2500**

MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6

Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale | iA Financial Group | Assumption Life

Are you getting Million Dollar advice

- digi Media -

Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available

Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation

Call me more details...

வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்

வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்

கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்

KAPITAL CARE MORTGAGE INC. Unit 1623

Rambo Tharmalingam

Mortgage Agent Licence # M08D0479

5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5

647-290-3416 / 416-543-1111

ALL-RISKS INSURANCE
BROKERS LIMITED
AUTO • HOME • LIFE • COMMERCIAL • TRAVEL • UBER INSURANCE

Suren Navaratnarajah
Managing Partner
Tel: 416.548.8804
Cell: 416.520.6916
snavaratnarajah@all-risks.com
www.all-risks.com
5514 lawrence Ave.,
Scarborough, ON M1C 3B2

Mega Financial Group

உங்கள் அனைத்து விதமான
காப்புறுதித் தேவைகளுக்கும்.

Call Now
Raj Nadarajah
416-666-1120

ஒரு நம்பிக்கையான முகவர்

Karuna Gopalapillai
RealEstate Broker | CEO
Dir: 416.830.8520
HOMELIFE GALAXY REAL ESTATE LTD. BROKERAGE
111 Grangeway Avenue, Suite #301
Toronto ON, M1H 3E9
Tel: 416.284.5555
karuna@homelifegataxy.ca

Puzzle Solver for your
Real Estate needs....

Ramanan
Ramachandran
Broker of Record
Direct: 416-670-6467

HomeLife Today Realty Ltd. Brokerage
Independently Owned and Operated
Office: 416-298-3200
100% Proven Results visit www.agentram.com

COMING SOON

SEMI DETACHED HOME AT
MARKAM AND DENISON

3 BEDROOM
3 FULL WASHROOMS
FINISHED BASEMENT
FULLY HARDWOOD
WALK TO SCHOOL, BUS
MINS. DRIVE TO 401 AND 407
CLEAN HOME.

CALL FOR PRICE

நூலகம்

இணையத்தில் ஒரு நூல் உலகம்

www.noolaham.org

Best investment on
earth is earth

Jey Rukmanykanthan B.Sc
(Sales Representative)
Home Life GTA Realty Inc.
Cell: 416 845 5629
email: jey@realtorjey.com

Photography, as a powerful
medium of expression and
communications, offers an
infinite variety of perception,
interpretation and execution.
- Ansel Adams

DIGI MEDIA CREATIONS
Phone: 416.467.4952
www.digimedias.com

கடன்தொல்லை?

Sri V
Certified Insolvency Counsellor
CSC Credit Solution Centre
80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com
www.creditsolutioncanada.com

Elilan Panchadcharam
Sales Representative
Dir: 416-554-9909
elilanc21@gmail.com

Hari Nallarethnam
Sales Representative
Dir: 416-839-0066
nijanth@hotmail.com

வீடு வாங்க விற்க அழையுங்கள்

Century 21
Innovative Realty Inc., Brokerage*
Each office is independently owned and operated.
2250 Markham Rd #3, Scarborough, ON M1B 2W4
Off: 416-298-8383 Fax: 416-298-8303
Honesty is Guaranteed

Siva Shanmuganathan
Broker
416-545-7482

Joy Selvanayagam
Broker
416-358-6928

Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team

HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated

NOW HIRING JOIN OUR DYNAMIC TEAM

CHANDRAN
RASALINGAM CHS
President & CEO

iNFORCE LIFe
Financial Services Inc.
QUALITY ADVICE YOU CAN TRUST

10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com

YOUR PARTNER IN
MORTGAGES

Dirresh Krishna WBA, CMA, AMP
Mortgage Specialist (Lic #M08007687)
Tel: 416.819.4373
accent@rogers.com

Raga Ram AMP
Mortgage Specialist (Lic #M13000685)
Tel: 416.579.7533
raga_ram@yahoo.com